மலேசியத் தமிழரும் தமிழும்

முரசு நெடுமாறன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மலேசியத் தமிழரும் தமிழும்

முனைவர் முரசு. நெடுமாறன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Maleciyat tamilarum tamilum**
Author	:	Dr. Murasu Nedumaran (Former Visiting Professor, International Institute of Tamil Studies) 41, Jalan Melikai, Kambung Raja Uda Sel, D.E., 42000 Port Klang, Malaysia Ph: 006-012-9117855
Publisher & Copyright	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Taramani, Chennai 600 113 Ph: 22542992
Publication No.	:	586
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	2007
Paper used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 points
No. of Pages	:	x + 342
No. of Copies	:	1200
Price	:	Rs.100/- (Rupees One hundred only)
Lazer	:	Andril Oli Achu Bells Road, Triplicane Chennai - 600 005
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Chennai - 600 004
Subject	:	Tamil and Tamils of Malaysia

முனைவர் ம. இராசேந்திரன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

முகவுரை

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்றார்கள்.

தமிழர்கள் திரவியம் தேடச் சென்றார்கள் என்பதோடு தேடித் தரவும் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அழைத்துச் சென்றவர்களுக்குத் தேடித் தந்ததோடு சென்ற இடத்தின் வளர்ச்சியிலும், மேன்மையிலும் தங்களின் வாழ் காலத்தைச் சேமித்தும் வருகின்றனர்.

பறவைகளைப் போல் தேவைக்குப் புலம்பெயர்வதில் மன நெருக்கடிகள் எழுவதில்லை. வரலாற்று விபத்துகளின் கட்டாயம் பதியெழு வறியாப் பழங்குடி மக்களின் பண்பாட்டு வேர்களைப் புதிய மண்ணில் பதிக்கிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் மனநிலை தமிழர்களுக்குச் சங்க காலத்திலேயே கிடைத்த பெருங்கொடையாகும்.

பன்மொழி, இனச்சூழலில் இணக்கமாக வாழ்கிற முறையை உலகிற்குக் காட்டும் வாய்ப்பினை அயலகத் தமிழர்கள் பெற்றிருக்கிறார்கள்.

தென்கிழக்காசிய நாடுகளில் அதிகமான மலைகளையும் பள்ளத் தாக்குகளையும் கொண்டிருக்கும் மலேசியாவிற்குத் தமிழ்ச் சொல்லாகிய மலை என்பதே வேர்ச்சொல் என்று மொழியியலார் குறிப்பிடுகின்றனர்.

மலேசியாவின் தண்டாயுதபாணி முருகன் கோயிலும் அகத்தியர் சிலையும் குறிஞ்சியையும், குறிப்பாகப் பொதிகை மலையையும் போற்றும் பாங்காக உள்ளன.

மலாய் மொழியும் தமிழும் கொண்டும் கொடுத்தும் வளம் பெற்றுள்ளன. மலாய் மொழிக்கு மாப்பிள்ளையைத் தந்திருக்கிறது

தமிழ். முதல் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, தாயகத் தமிழர்களுக்கும் முன்னோடிகளாக விளங்கிவருகிறார்கள் மலேசியத் தமிழர்கள்.

இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்ட மலேசிய இளவரசனை வளர்த்தெடுத்து மகளையும் திருமணம் செய்துகொடுத்து மலேசிய நாட்டிற்கு இந்தியா அனுப்பி வைத்ததாகவும், மலேசிய மக்கள் அந்த இளவரசனுக்கு முடிசூட்டினர் என்றும் நாட்டுப்புறக் கதை ஒன்று இப்போதும் மலேசியாவில் வழங்கி வருகிறதாம்.

இந்திய மலேசிய நட்புறவும் பண்பாட்டுறவும் வேர் பதித்திருக்கும் தகவலை நாட்டுப்புறவியல் இவ்வாறு வெளிப்படுத்துகிறது.

இந்தியத் தமிழர்கள், உடன் வாழும் மற்றவர்கள் வியக்கும் வகையில் உழைத்துத் தாம் வாழும் நாட்டையும் தம்மையும் வளர்த்துக் கொண்ட வரலாற்றையும் வாழ்கிற இடத்தில் வளமான நிலையிலும் முன்னோர் வாழ்ந்த இடத்தை மறக்காமல் நினைத்துப் பார்க்கும் தன்மையையும் இந்நூலில் காணமுடிகிறது.

ஒரு நூற்றாண்டுக்கு மேலான மலேசியத் தமிழர்களின் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு, சமயம், கல்வி, ஊடகம் என்பவை இந்நூலில் ஆராயப்படுகின்றன.

அரிதின் முயன்று ஆதாரங்களையும் புள்ளி விவரங்களையும் தொகுத்து முறையான இலக்கிய வரலாறு போலவும், வரலாற்று நூல் போலவும், தமிழ்க் கல்வி வளர்ச்சி போலவும் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது.

உலகத் தமிழாராய்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்குமான மலேசியத் தமிழ்த் தொடர்பை அறிந்து கொள்வதற்கு முரசு நெடுமாறன் அவர்களின் இந்நூல் உதவும்.

தமிழ் வளர்ச்சித் துறை வழி வழங்கப்பெறும் சிறந்த நூல் பரிசுகளுக்கு அயலகத் தமிழர்களின் நூல்களுக்கென்று தனி வகைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மலேசியா உட்பட அயலகத் தமிழர்களின் படைப்புகளையும் உள்ளடக்கி உலகத் தமிழ் இலக்கிய வரலாறு இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் வருகைதரு பேராசிரியர்கள் பலர் அயலகத் தமிழர்களிட மிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அயலகத் தமிழர்களின் தமிழ்ப்பணியும் தாய்த் தமிழகத்தில் உரிய நிலையில் போற்றப்படும் என்பதன் வெளிப்பாடாக முரசு. நெடுமாறன் அவர்களுக்குப் பாவேந்தர் விருதும் பேராசிரியர் முனைவர் கா. சிவத்தம்பி அவர்களுக்குத் திரு.வி.க. விருதும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

ஒல்லும் வகையெல்லாம் தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டு செய்து இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைத் தமிழுலகம் நன்றியுடன் போற்றும்.

நிறுவனப் பணிகளுக்கு உரிய வகையில் அறிவுரை வழங்கி ஆற்றுப்படுத்தி வரும் தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கும், நிறுவனச் செயல் பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு கோ. சந்தானம் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்துப் பணிகளையும் செய்த நிறுவனப் பணியாளர்களுக்கும், மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதனுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் முன்னுரை

மலேசியாவில் நடந்த முதலாம் உலகத் தமிழ் மாநாட்டை (1966) அடுத்து, தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா 2ஆம் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டினார். 1968இல் நடைபெற்ற இம்மாநாட்டிற்கு அப்போதைய மலேசிய நாட்டு அரசியல் பெருந்தலைவரும் மூத்த (பொதுப்பணி) அமைச்சருமான கூட்டுறவுத் தந்தை துன் சம்பந்தனார் என்னையும் பேராளர்களுள் ஒருவனாகத் தெரிவு செய்து அனுப்பி வைத்தார். என் முதல் தமிழகச் செலவு அதுவே. அதனைத் தொடர்ந்து பலமுறை தமிழகம் போந்துள்ளேன். உலகத் தமிழ் மாநாட்டுக் கருப்பொருளை உருவாக்கிப் பேரறிஞர் அண்ணாவால் திட்டமிடப்பெற்று, உலகத் தமிழினத் தலைவர் மாண்புமிகு கலைஞரால் உருவாக்கப்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குப் பலமுறை சென்றுள்ளேன். அதன் மேனாள் இயக்குநர் பேரா. அ.ந. பெருமாள் தலைமையில் மலேசியத் தமிழிலக்கியம் பற்றி உரையாற்றியுள்ளேன். முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் அந்நிறுவன இயக்குநராய்ப் பணியாற்றிய காலை, மலேசிய இலக்கியங்களைத் தொகுப்பது குறித்துக் கருத்துகள் திரட்ட அவரைப் பலமுறை கண்டு பேசியுள்ளேன். நிறுவனத்தில் நடந்த பல கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளேன். என் முனைவர் பட்ட ஆய்விற்கும் கருத்தரங்கக் க்ட்டுரைகளுக்காகக் குறிப்புகள் திரட்டவும் நிறுவன நூலகத்தைப் பயன்படுத்தியுள்ளேன்.

யான் தலைமையேற்றுத் தொகுத்து, அரிதின் முயன்று, மலேசியத் தமிழர் வரலாற்றையும் எழுதிச் சேர்த்து உருவாக்கிய ‘மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்’ வெளிவந்தபின், அப் பணியை மதித்துத் தமிழக அரசின் உயரிய விருதான ‘பாவேந்தர் விருதை’, அப்பொழுதும் முதல்வராய்க் கோலோச்சிய முத்தமிழறிஞர், மாண்புமிகு கலைஞர் எனக்கு வழங்கினார் (1998). அவ் விருதினைப் பெற்ற முதல் அயலகத் தமிழ்மகன் ஆதலால், தமிழ்கூறு நல்லுலகின் பார்வை என்மேல் அழுத்தமாய் விழுந்தது. அதன் பயனாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியராக அமர்த்தப்பெறும் பேறு கிட்டிற்று. அதன் வாயிலாய் ‘மலேசியத்

தமிழரும் தமிழும்' என்னும் தலைப்பிலான இந் நூலை எழுதும் வாய்ப்பு கனிந்தது. இப் பேற்றினை எனக்களித்த நிறுவன முன்னாள் இயக்குநர் முதுமுனைவர் இராமர் இளங்கோ மற்றும் பேரா. வா. செ.குழந்தைசாமி, பேரா. பொற்கோ, (பொன். கோதண்டராமன்) ஆகிய பெருமக்களுக்கு என் உள்ளார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலேசியத் தமிழர் வரலாறு விரிந்தது. ஆனால், இதுநாள்வரை அதனை எவரும் முறைப்படுத்தித் தொகுத்தெழுதவில்லை. ஆங்கிலத்தில் ஓரளவு எழுதப் பெற்றுள்ளது. ஆய்வுக் கட்டுரைகளாக மலாய் மொழியிலும் சில செய்திகள் எழுதப்பெற்றுள்ளன. யான் தொகுத்து வெளியிட்ட மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தில் வரலாறு ஓரளவு எழுதப்பெற்றுள்ளது.

வரலாறாகவே வாழ்ந்தவர் பலர்; அவரோடு மறைந்தவை பல; வாழ்ந்து கொண்டிருப்பவர் சிலர். அவர்தம் உளப்பதிவுகளைத் திரட்டியும் ஆங்காங்கே குறிப்புகளாகக் கிடைப்பவற்றையும் வேறு மொழிகளில் உள்ளவற்றையும் செவிவழிச் செய்திகளை ஆய்ந்தும் தொகுத்து எழுதப் புகுந்தால் அஃது ஆயிரம் பக்கங்களைத் தாண்டிவிடும். நூல் எழுதுவதுபற்றிக் கருத்து கேட்டபொழுது முனைவர் வா.செ.கு. அவர்கள் முழுமையான வரலாற்றைப் பின்னர் எழுதலாம்; தற்போதைக்கு 250 பக்க அளவில் சுருக்கமாக எழுதுங்கள் என்றார். பேராசிரியர்கள் பொற்கோ, க.ப. அறவாணன், ச. சிங்காரவேலு, தமிழறிஞர் இராம. சுப்பிரமணியன், ஆ. சோதிநாதன் போன்ற பெருமக்களும் பயனுடைய கருத்துகளைக் கூறினர். அப்போதைய இயக்குநர் இராமர் இளங்கோ நூலை விரைந்து முடித்துத் தருமாறு தூண்டிக்கொண்டேயிருந்தார்.

சான்றுகளுடன் கூடிய செய்திகளைப்பெறப் பல்லாற்றானும் தேட முயன்றதில் காலம் ஓடிற்று. வேறுபல நெருக்கடிகளும் காலம் ஓடக் காரணங்கள் ஆயின. தொடங்கியதை முடித்துவிட வேண்டுமென்ற கடமை உணர்வு தணியாமல் கனன்றுகொண்டே இருந்ததால் நூல் உருவாகி வடிவம் பெற்றது.

இந்நூலில் 2005 திசம்பர் 31 வரையிலான வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன. தமிழ்க்கல்வி வளர்ச்சியைக் காட்ட 2006 ஆண்டின் இரு குறிப்புகள் மட்டும் சேர்க்கப் பெற்றுள்ளன.

அரிதின் முயன்று பெற்ற சான்றுகளைக்கொண்டு எழுதத் திட்டமிட்டபொழுது பல குறிப்புகள் விரிவுபெறத் துடித்தன. நூல் விரிந்து விடக்கூடாது என்ற திட்டம் கட்டுப்படுத்திக்கொண்டே இருந்ததெனினும், சுருக்கமாகச் சொல்லப்புகும் அதேவேளையில் சமுதாய அமைப்பை ஓரளவேனும் எடுத்துக்காட்ட வேண்டுமென்ற துடிப்பும் தொடர்ந்துகொண்டே இருந்தது. அதனால், நூல் முந்நூற்றுக்குமதிகமான பக்கங்களைத் தொட்டு விட்டது. எடுத்துக்கொண்ட தலைப்பிற்கேற்ப நூல் இருபகுதிகளால் அமைந்ததாலும், ஒரு பகுதியில் சொல்லப்பெற்ற பொருள் குறித்து மறு பகுதியிலும் விளக்கவேண்டிய இன்றியமையாமையாலும் கூறியது கூறல் போன்று சில இடங்களில் தோன்றலாம். இடத்திற்கேற்ப விளக்க வேண்டிய தேவை கருதியும் வலியுறுத்தலை எண்ணியுமே சில அங்ஙனம் வந்து அமைந்தன. நூலாக்கத்திற்காகச் சான்றுகளைத் தேடி அலைந்தபோது அன்புடன் உதவிய நெஞ்சினர் பலர். அவர்களுள் முதன்மையர் சிலரையாவது இங்குக் குறிப்பிடாவிட்டால் அது நன்றிக்குரிய செயலாகாது என்பதால், சிலர் ஈண்டுக் குறிக்கப்பெறுகின்றனர்.

கல்வித்துறை தொடர்பான குறிப்புகளைத் தந்துதவியவர்கள் கல்வியாளர் திரு. ஆ.சோதிநாதன், இணைப் பேராசிரியர் என்.எஸ். இராசேந்திரன், ஆசிரியர் மாமணி திரு. ஏ. சகாதேவன், சமுதாய ஆர்வலர்களான திருவாளர்கள் க. ஆறுமுகம், ம. இளந்தமிழ் ஆகியோர் ஆவர். சமுதாயம்பற்றிய விரிவான கருத்துகளைப் பேரா.த. மாரிமுத்து, திரு. நாகராசன் போன்றோர் வழங்கினர். தமிழர் புலப்பெயர்ச்சி பற்றிய முதன்மையான வரலாற்றுச் செய்திகளைத் திரட்டித் தந்தார் வழக்கறிஞர் திரு. வ. முனியன். பொருளாதார நிலையை டத்தோ கு. பத்மநாபன், இரா. கிருஷ்ணன் போன்றோர் விளக்கினர்; ஊடகங்கள் பற்றிய பயனுடைய குறிப்புகளை அத்துறை வல்லுநர்களான திருவாளர்கள் இரா. பாலகிருஷ்ணன், எம். துரைராஜ், ஆதி இராஜகுமாரன் ஆகியோர் தந்துதவினர். கலைத்துறை பற்றிய செய்திகளைச் செவ்விசைச் சித்தர் ரெ. சண்முகம், திரு. பி.கே. சாமி ஆகியோரும் தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்து டத்தோ ஜி. சங்கரன், திரு. நவமுகுந்தன் ஆகியோரும் விளக்கமளித்தனர். சமயம் பற்றிய செய்திகளை டத்தோ அ. வைத்திலிங்கம், முனைவர் ஆறு. நாகப்பன், திருவாளர்கள் திருவாசகம், அருணாசலம் ஆகியோர் தந்தனர். மலேசிய

இந்தியர் - தமிழர், தாய் அரசியல் கட்சியான மலேசிய இந்தியர் காங்கிரசு குறித்த அறிக்கைகளை அளித்தார் திரு. இரமணி. அதன் சமூக அறவாரியத்தினரும் பயனுடைய குறிப்புகள் தந்துதவினர். இப் பெருமக்கள் அனைவர்க்கும் நன்றி.

என் கட்டுரைகளை அழகிய கையெழுத்தில் படியெடுத்துத் தந்தார் திரு. மனோமோகன். கையெழுத்துப்படிகளை அன்றில் பதிப்பகத்தில் அச்சேற்றினார் செல்வி இரா. தமிழ். அச்சுப்படிகளை மேற்பார்த்துச் செப்பம் செய்து தந்தார் புலவரடல் அ. நக்கீரஅடிகள். மெய்ப்புத் திருத்த உதவினார் கவிஞர் செம்பை சேவியர். இறுதி மெய்ப்புத் திருத்தி உதவினார் முனைவர் ஆ. தசரதன் அவர்கள். அச்சேற்றித்தரும் பொறுப்பேற்று எனக்கும் நிறுவனத்திற்கும் இடையே பாலமாக நின்று முழுமைப்படுத்தித் தந்தார் நண்பர் பா. இறையெழிலன்.

தமிழகத்திலும் மலேசியாவிலும் இந்நூலை எழுதியகாலை உதவியோர் பலர். அவர்களுள் திரு. ப. அன்பழகன், பேராசிரியர்கள் சி.இ.மறைமலை, அறிவுநம்பி, இளமதி சானகிராமன் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர். திரு. சீ அருணாசலம், திருமதி சுமதி ரமேஷ், திருமதி சிவகாமி நாகராஜா ஆகியோர் குறிப்புகளைத் திரட்ட உதவினர். இப்பெருமக்களுக்கும் பல்வேறு வகைகளில் உதவிய திரு. ப.கு. சண்முகம், புலவர் ப.மு. அன்வர், அரு. சு. ஜீவானந்தன் போன்ற நல்லுள்ளத்தினருக்கும் நன்றி கூறுகிறேன்.

நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி, தற்போதைய இயக்குநர் (பொறுப்பு) முனைவர் ம. இராசேந்திரன் ஆகியோருக்கும் உள்ளார்ந்த நன்றி. நிறுவனத்தில் ஆய்வுப் பணி மேற்கொண்டிருந்த காலை பல்லாற்றானும் உதவிய அலுவலர், உதவியாளர் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றி. எனக்கு இவ் வாய்ப்பளித்த நிறுவனத்திற்கு என்றென்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். உலகெங்கும் வாழும் தமிழினத்தின் முழுமையான வரலாறு உருவாக, இம் முயற்சி தூண்டுகோலாய் அமையுமென்று நம்புகிறேன். நிறுவனத்தின் முயற்சிகள் தொடரட்டும். உலகோர்க்குத் தமிழினத்தின் முழுமையான வரலாறு கிட்டும் காலம் மலரட்டும்.

முரசு. நெடுமாறன்

பொருளடக்கம்

1. மலேசியத் தமிழரும் தமிழும் முதற்பகுதி 1-103

2. மலேசியத் தமிழரும் தமிழும் இரண்டாம் பகுதி

1. வாய்மொழித் தமிழ் 104

2. கல்வித்துறையில் தமிழ் 128

3. உயர்நிலைகளில் தமிழ் 157

4. கலைத் திட்டங்களில் தமிழ் 168

5. ஆசிரியர் தகுதி 172

6. தடைகளைத் தாண்டி வந்த தமிழ்ப்பள்ளிகள் 177

7. வாழ்வும் தாய்மொழியும் 185

8. வளர்ச்சியை நோக்கித் தமிழ்ப்பள்ளிகள் 192

9. ஊடகங்களில் தமிழ் 204

10. வானொலியில் தமிழ் 234

11. தொலைக்காட்சியில் தமிழ் 246

12. கணினியில் தமிழ் 250

13. பொது இயக்கங்களில் தமிழ் 265

14. சமயங்களில் தமிழ் 293

15. சமய இயக்கங்கள் 298

16. கலைத்துறையில் தமிழ் 307

17. இலக்கியத்துறையில் தமிழ் 316

18. உரைநடை இலக்கியம் 323

19. புதின வளர்ச்சி 326

20. கட்டுரை 329

21. எதிர்காலத்தை நோக்கி... 335

22. புதிய அடையாளங்கள் 339

மலேசியத் தமிழரும் தமிழும்

முதற்பகுதி

தமிழர், தமிழ்மொழி என்னும் தொடர்களின் விரிபொருள் இன்று உலகளவில் பரந்ததாய் விளங்குகிறது.

> "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
> தமிழ்கூறு நல்லுல கத்து...."[1]

என்பதெல்லாம் பழங்கதை. இன்று தமிழர் 50-க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்கின்றனர்; ஆங்காங்கே உரிமைக்குடிகளாய் நிலைத்துவிட்டனர். அப்படி வாழ்வோரின் தொகை ஒரு கோடியை எட்டுகிறது. இத் தொகையை விட்டுவிட்டுத் தமிழ்நாட்டில் வாழும் ஆறேகால் கோடித் தமிழர் வாழ்வைமட்டும் தொல்பழங் காலம்தொட்டு இக்காலம் வரை எழுதிவிட்டால் அஃது ஒரு முழுமையான தமிழின வரலாறாக முடியாது. இன வரலாறு எழுதினாலும், சமுதாய வரலாறு எழுதினாலும், கலை இலக்கிய வரலாறு, திறனாய்வு எழுதினாலும் அயலகங்களில் வாழும் தமிழரை, அவர் படைத்த உருவாக்கங்களை இணைக்காது விட்டால் அது குறையுடைய வரலாறாகவே அமையும்.

"தமிழர் இனத்தால் ஒருவர்; நாட்டால் பலர்; எல்லா நாடுகளிலும் சிறுபான்மையர்."[2] ஒரு காலத்தில் தமிழகம், ஈழம் ஆகிய இரு நாடுகளுக்கும் முழு உரிமை கொண்டவராய்க் கோலோச்சியவர் இன்று தனியுரிமை கொண்ட ஒரு நாட்டிற்குச் சொந்தக்காரரர் அல்லர். எனினும் அவர்கள் மூத்த பேரினத்தின் மதிப்பு மிக்க மரபின் வழித்தோன்றல்கள்; ஈடு இணையற்ற - இன்னும் இளமை குன்றாத ஒரு வளமான மொழிக்கு, நாகரிகத்திற்கு, பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்கள். அண்மையில் தமிழ்மொழியை இந்திய நடுவணரசு செவ்வியல்மொழியாய் அறிவித்திருப்பது இதற்கு ஒரு மதிப்புமிக்க சான்றாகும்.

முறையான வரலாறு எழுதப் பெறாததால், மானுட இனத்திற்குத் தமிழர் அளித்த கொடைகளை உலகிற்கு உணர்த்தாததால் அவர்கள் மற்றவர்களால் மதிப்போடு எண்ணப்படவில்லை. இத் தாழ்வுநிலை நீங்கத் தமிழினத்தின் முழுமையான வரலாற்றை உலகிற்குத் தந்தாக வேண்டும்.

அயலகங்களில் வாழும் தமிழர் வரலாறு அவ்வந் நாட்டுத் தமிழர்களால் எழுதப்பெற்று முழுமையாகத் தொகுக்கப்பெற்றால், உலகத் தமிழர் வரலாறு கிடைத்துவிடும். அவ் வரலாறு ஆங்கிலத்திலும், அவ்வந் நாட்டுத் தேசிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற வேண்டும். அப்பொழுதுதான் தமிழரைப்பற்றி உலகம் அறியும் நிலை மலரும். அதற்குத் துணைபுரியும் நோக்கத்திலேயே இந் நூல் எழுதப்பெறுகின்றது. இஃது ஓர் அறிமுக நூலே. முழுமையான மலேசியத் தமிழர் வரலாற்று நூல் எழுதும் நோக்கமும் கருக்கொண்டிருக்கிறது.

பெயர் விளக்கம்

இன்று மலேசியா என்று வழங்கப்படும் நாடு 1963ஆம் ஆண்டிற்கு முன் 'மலாயா' என்றே வழங்கி வந்தது. மலாயா விடுதலை பெற்ற 1957ஆம் ஆண்டுவரை சிங்கப்பூரும் மலாயாவும் இணைந்தே இருந்த நிலப்பகுதிகள் ஆகும். 1963-ல் மலாயாவின் 11 மாநிலங்களுடன் சிங்கப்பூர், சரவா, சபா ஆகிய பகுதிகள் இணைந்து 'மலேசியா' உருவானது. 1965-ல் சிங்கப்பூர் பிரிந்து தனிக் குடியரசாயிற்று. பின் 13 மாநிலங்களுடன் விளங்கிய மலேசியா பின்னர்த் தலைநகர் கோலாலம்பூர், புத்ரா ஜெயா, லாபுவான் ஆகிய மூன்று பகுதிகளையும் கொண்ட ஒரு கூட்டரசு வளாகத்தை (டெரிட்டரி) அமைத்துக்கொண்டது.

நில அமைப்பு

மலேசியா இரு பிரிவுகளைக் கொண்டது. வடக்கே தாய்லாந்து, தெற்கே சிங்கப்பூர், மேற்கே மலாக்கா நீரிணை, கிழக்கே தென் சீனக் கடல் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட பகுதி மேற்கு மலேசியா (பழைய பெயர் மலாயா) என்றும், இந்தோனேசியாவின் வடபுலத்தில் அமைந்துள்ள சரவா, சபா பகுதிகள் கிழக்கு மலேசியா என்றும் வழங்கப் படுகின்றன. (நிலப்படம் - 1 காண்க).

மலேசியா நிலநடுக்கோட்டிற்கு $23\frac{1}{2}^0$ வடக்கில் உள்ளது. மேற்கு மலேசியாவின் வடக்கு முதல் தெற்குவரை நீண்ட மைய மலைத்தொடர் ஒன்று உள்ளது. மிகுதியாக மக்கள் வாழும் பகுதிகளாகப் பினாங்கு, கிந்தாப் பள்ளத்தாக்கு, கிள்ளான் பள்ளத்தாக்கு, மலாக்கா, ஜோகூர், கோத்தா கினாபாலு ஆகிய பகுதிகள் விளங்குகின்றன.

மலேசிய மாநிலங்கள்



சான்று : மலேசியத் தமிழ்க் கவிதைக்களஞ்சியம், பக். 56

நிலப்படம் - 1

இனவாரியாக மக்கள்தொகை

மலாய்க்காரர்	16.25	மில்லியன்	65%
சீனர்	6.25	மில்லியன்	25%
இந்தியர்	1.90	மில்லியன்	07.6%
பிறர்	0.60	மில்லியன்	02.4%

சமயவாரியாக மக்கள்தொகை

மக்கள்தொகை 25 மில்லியன்கள்

முஸ்லிம்கள்	15.1	மில்லியன்	60.4%
புத்த மதத்தினர்	04.8	மில்லியன்	19.2%
கிறித்தவர்	02.3	மில்லியன்	09.1%
இந்துக்கள்	06.3	மில்லியன்	06.3%
பிற மதத்தினர்	00.63	மில்லியன்	02.6%[3]

மேற்கு மலேசியா

கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளைக்கொண்ட மலேசியாவில், மேற்குப் பகுதியில்தான் தமிழர் மிகுதியாக வாழ்கின்றனர். தமிழர் புலம்பெயர்ந்து வந்து வாழத் தொடங்கியதும் இங்குதான்; இப்பொழுது நிலைத்திருப்பதும் இப் பகுதியில்தான்.

உலக வரைபடத்தில் ஒரு முதலை போன்ற தோற்றத்தில் அமைந்திருக்கும் மேற்கு மலேசியா, 'தென்கிழக்கு ஆசியப்பகுதியின் பொன் வீடு' என்றும், 'பொன் விளையும் நில'மென்றும் முற்காலத்தில் அழைக்கப்பெற்றது. இது வடமொழியில் ஸ்வர்ண கூட்டியகம் (ஸ்வர்ணம் - பொன்; கூட்டியகம் - வீடு) என்றும், ஸ்வர்ணபூமி (ஸ்வர்ணம் - பொன்; பூமி - நிலம்) என்றும் வழங்கப்பெற்றது.

இங்கு தங்கம், பொன், மணப்பொருள்கள் நிரம்பக் கிடைத்ததால் இப் பெயர்கள் இம் மண்ணுக்குச் சூட்டப்பெற்றன.[4]

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" (குறள்-737)

என்னும் திருக்குறளுக்கு ஒப்ப இந் நாடு அன்றுமுதல் இன்றுவரை நீர்வளமும், நிலவளமும், மலைவளமும், கடல்வளமும், காட்டுவளமும் கொண்ட நாடாகத் திகழ்ந்து வருகிறது.

பழந்தமிழரும் தென்கிழக்கு ஆசியாவும்

பழந்தமிழருக்குத் தென்கிழக்கு ஆசியப் பகுதியுடன் 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்பு இருந்துவந்துள்ளதாக வரலாற்றாசிரியர் அரசரத்தினம் குறிப்பிடுகிறார்.[5] மற்றோர் ஆய்வாளரும் இதனை மறு உறுதி செய்கிறார்.[6] பழந்தமிழர் தொடக்கத்தில் இங்குக் கொண்டிருந்தது வணிகத் தொடர்பே. பின் அது பண்பாட்டுத் தொடர்பாய், அரசியல் தொடர்பாய் மாறிற்று. இதற்கு வரலாற்று நூல்கள், கல்வெட்டுகள், புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த பொருள்கள் சான்று கூறுகின்றன. இது குறித்துச் சத்தியானந்தா குறிப்பிடும்போது, "இங்குப் பல நாடுகளைச் சேர்ந்த சிறுமணிகள், புராதன ஆராய்ச்சிக்காரர்களால் அகழ்ந்தெடுக்கப்பட்டிருகின்றன. அவை கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்கு உரியவை"[7] எனவும் கூறுகிறார். அம் மணிகளுள் பல இந்தியாவைச் சேர்ந்தவை என்பது இவண் நோக்கத்தக்கது.

தென்கிழக்காசிய நாடுகளுடன் தென்னாடு (South India) கொண்டிருந்த தொடர்பு, வரலாற்று நூல்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள்,

புதைபொருள்கள், ஆய்வில் கிடைத்த பொருள்கள் போன்ற சான்றுகளுடன் நின்றுவிடவில்லை. இப் பகுதி மக்கள் மொழியோடும், பழக்கவழக்கங் களோடும், பண்பாட்டோடும், சடங்குகளோடும் பின்னிப் பிணைந்துள்ளன. குறிப்பாக மலாய்மொழியில் நிரம்பத் தமிழ்ச் சொற்களும், தமிழின் வாயிலாக வடசொற்களும் கலந்துள்ளன. எடுத்துக்காட்டாகக் கப்பல் (Kapal), கடை (Kedai), கிடங்கு (Kitanku / gudang), போன்ற வணிகச் சொற்களும், அம்மா (emak), அப்பா(bapa), ஐயா (ayah) போன்ற உறவுச் சொற்களும், கட்டில் (Katil), பெட்டி (Peti), கெண்டி (Kendi) போன்ற வீட்டுப்பொருள் களைக் குறிக்கும் சொற்களும், கொண்டை(Kontai), மாலை (Malai), மாணிக்கம் (Manikam) போன்ற ஒப்பனை - அலங்காரப் பொருள்களைக் குறிக்கும் சொற்களும், ஆகமம் (agama), பக்தி (bakti), மந்திரம் (mantra) போன்ற சமயத் தொடர்புடைய சொற்களும், அரசன் (இராஜா-Raja), மந்திரி (Menteri), நகர் (Negeri - மாநிலம்) போன்ற ஆட்சிச் சொற்கள் போன்ற வையும் இதனை மெய்ப்பிக்கின்றன.[8]

வணிகத் தொடர்பு

தென்கிழக்காசியாவுடன் - குறிப்பாக மேற்கு மலேசியாவுடன் பழந்தமிழர் கொண்டிருந்த வாணிகத் தொடர்பே மற்றத் தொடர்புகளுக்குக் காரணமாதலால் அதுகுறித்து ஈண்டுச் சில சொல்லப்பெறுகின்றன.

"சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் வணிகர்கள் அலக்ஸாண்டிரியா, ரோமாபுரி, கிரேக்கம் முதலிய நாடுகளுக்கிடையே வியாபாரத்தை நடத்தி வந்தனர்[9] என்னும் வரலாற்றாசிரியர்கள் "இந்திய நாட்டின் வாசனைப் பொருள்கள், துணிமணிகள், முத்து, வைரம், தேக்கு, அரிசி, மயில்தோகை, யானைத் தந்தம் போன்ற பொருள்களை எல்லா நாடுகளுக்கும் கொண்டு சென்றனர் என்கின்றனர்."[10] மேலும், "சீனாவின் ஏற்றுமதிப் பொருள்களான பட்டு, கொப்பரை, மருந்து வகைகள், ஆமை ஓடு, தேயிலை போன்றவற்றைத் தமிழ் வர்த்தகர்களே வாங்கி மேல் நாடுகளுக்கு ஏற்றிச் சென்றனர்"[11] என்ற செய்தியாலும் இந் நாட்டில் தமிழர் நடத்திய வணிகம்பற்றி அறியமுடிகிறது.

தமிழரிடமிருந்து மலாய்க்காரர் கற்றவை

தென்னாட்டவர் தொடர்பால் மலாய்க்காரர்கள் பெற்ற பயன்கள் மிகுதி. பயிரிடுதல், பாசனஞ்செய்தல், ஏர் உழுதல் போன்றவற்றை மலாயர் இந்தியர்களிடமிருந்து (திராவிடர்) கற்றுக்கொண்டனர். வியாபார முறைகள், நாணயத்தின் உபயோகம், இரும்பு ஆயுதங்கள் செய்தல், பொன், வெள்ளி இவற்றால் ஆபரணங்கள் செய்தல்,வீடு கட்டுதல், மருத்துவக்

கலை ஆகியனவும் இந்தியர்களாலேயே மலாயருக்குக் கற்பிக்கப்பட்டன. இந்தியர்களே பருத்தி, பட்டு ஆடைகளும் நெசவு செய்து அணியக் கற்பித்தனர்.[12] இவைமட்டுமன்றி மலாய்க்காரர்களின் கலைகளில் குறிப்பாக இசை, நடனங்களில் தென்னாட்டுக் கூறுகள் ஒளிர்வதைக் காண முடியும்.[13]

பண்பாட்டு அலைகள்

தமிழர் வரவினால் மலாய்க்காரர் எல்லாத் துறைகளிலும் மாறுதலடைந்தனர். பண்பாட்டுத் துறையில் அவர்கள் அடைந்த மாறுதல்கள் இன்றுவரை வாழ்வோடு ஒன்றிவிட்டன. இதுபற்றி வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும்போது,

1. சங்க காலப் பண்பாட்டலைகள்
2. பல்லவர் காலப் பண்பாட்டலைகள்
3. சோழப்பெருவேந்தர் காலப் பண்பாட்டலைகள்

என மூன்றுவகைப் பண்பாட்டலைகள் இப் பகுதியில் வீசியுள்ளன என்கின்றனர்.[14]

சமய அலைகள்

தமிழர் தொடர்பால் மலாய்க்காரர்கள் சமயத் துறையிலும் மாறுதலடைந்தனர். 7, 8ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து சைவர்கள் திரள்திரளாகக் கடாரத்திற்கு (Kedah) வந்தனர். சுங்கை (Sungai - ஆறு) பூசாங் நதிதீரத்தில் சில ஆலயங்களைக் கட்டினர். அக்காலத்தில் சைவ (இந்து) மதத்தோடு பௌத்தமும் இங்குப் பரவியது.[15] 14ஆம் நூற்றாண்டில் மலாய்க்காரர்கள் இசுலாம் சமயத்தைத் தழுவினர். எனினும் அவர்கள் திருமணம், மன்னர் முடிசூட்டு விழாப் போன்ற சடங்குகளில் பழைய பண்பாட்டுக் கூறுகள் தொடர்ந்து இடம்பெற்றே வருகின்றன.

இப் பகுதியில் பரவிய பண்பாட்டு, சமய அலைகள் தமிழர்களால் புகுத்தப்பட்டவையோ வலிந்து நுழைக்கப்பட்டவையோ அல்ல. அவை அப்பகுதி மக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பெற்றவை என்பது ஈண்டு அடிக்கோடிட்டுக் குறிப்பிடத்தக்கன. இது குறித்துச் ச. சிங்காரவேலு, "இந்தியப் பண்பாடு, நாகரிகம் ஆகிய கூறுகளில் பலவற்றைத் தென்கிழக்காசிய நாடுகளின் அரசரும், அரசவையினரும், ஏனையோரும் விரும்பியேற்றுத் தம் பண்பாட்டுக் கூறுகளுடன் கலந்து தமக்கே உரிய பண்பாட்டையும், நாகரிகத்தையும் உருவாக்கிக் கொண்டனர்"[16] என்கிறார். தமிழர் யார்மீதும் மேலாண்மை ஆதிக்கம் செலுத்தும் போக்கினர் அல்லர் என்பது இதன்மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

அரசியல் அலைகள்

வாணிகத் தொடர்பாலும், பண்பாட்டுக் கலை இலக்கியத் தொடர்பாலும், சமயத் தொடர்பாலும் இங்குக் காலூன்றிய தமிழர் அரசியல் தொடர்பும் அழுத்தமானதாய் அமைந்தது. இந்தியர்கள் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சுமத்திராவில் பல இராச்சியங்களை ஸ்தாபித்தனர்[17] என்று வரலாற்றாசிரியர்கள் சொன்னாலும் பல்லவர் காலத்திற்குப் பின்னரே இங்கு அவர்களின் அரசியல் செல்வாக்கு வேரூன்றியதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. "கி.பி.7, 8ஆம் நூற்றாண்டுகளில் பல்லவ அரசர்கள் முழு வலிமையுடன் அரசு புரிந்தனர். இந்த அரசர்கள் மலாய் உலகில் அநேக இராச்சியங்களை நிறுவினர். மலேசியாவில் இப்போது ஆங்காங்கே தோண்டி எடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் வர்மன் என்னும் பட்டத்தையுடைய அரசர் பெயர்கள் காணப்படுவதால் பல்லவர்கள் இங்கு ஆண்டுவந்தார்கள் என்பது தெரியவருகிறது.[18] ஆனால், இப் பகுதியில் பிற்காலச் சோழர்களின் நடவடிக்கைகள் குறித்த கல்வெட்டுச் சான்றுகள்போல் விரிவாய்க் கிடைக்க வில்லை.

பிற்காலச் சோழர்கள் (கி.பி. 846 - 1279)

பிற்காலச் சோழர் காலத்தில் இந் நாட்டுடன் அரசியல் தொடர்பு மிக நெருங்கியிருந்தது. இந் நாட்டு மன்னர்களுடன் அவர்கள் நட்புரிமை பூண்டு பழகினர். வணிகப் போட்டிகளும் ஏற்பட்டுள்ளன. முதலாம் இராசேந்திரன் (கி.பி 1012 - 69) காலத்தில் இங்குப் படையெடுக்கும் சூழலும் ஏற்பட்டது. ஈடு இணையற்ற கடற்படையைக் கொண்டிருந்த அவன் தென்கிழக்காசி யாவில் ஸ்ரீஜெயம், பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்கோசம், பப்பாளம், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரிதேசம், நக்கவாரம் (நிக்கோபார் தீவுகள்) போன்ற பல நாடுகளை வென்றான் (நிலப்படம்-2 காண்க). அவற்றுள் முதன்மையானது கடாரமாகும்.[19] கடாரம் இன்று மேற்கு மலேசியாவின் வடபகுதியில் உள்ள கெடா (Kedah) என்னும் மாநிலமாகும். இராசேந்திர சோழன் காலத்தில் கைப்பற்றப்பட்ட இடங்களில் அவன் தன் ஆட்சியை நிறுவவில்லை; மீண்டும் உரியவர்களுக்கே தந்தான்.

சோழர் காலத்து இத் தொடர்பு கிருஷ்ணதேவராயர் காலம் வரை (1509-29) நீடித்திருந்ததற்கு வரலாற்றுச்சான்று உள்ளது. இந் நாட்டின் தேசிய வீரனாகப் போற்றப்படும் படைத்தளபதி அங்துவா (Laksamana Hang Tuah) அவரைச் சந்தித்ததையும், அவரிடம் சரளமாகத் தமிழ் பேசியதையும் வரலாற்று நூல் எடுத்து வைக்கிறது.[20] இச் செய்தி அக் காலத்தில் இங்குத் தமிழ் புழங்கியதையும் ஆட்சித்துறையில் அது பெற்றிருந்த செல்வாக்கையும் நன்கு எடுத்துக்காட்டுகிறது.

முதலாம் இராசேந்திர சோழன் கடாரப் படையெடுப்பில் வென்ற இடங்கள்



நிலப்படம் - 2 - சான்று : பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி - 1.

இதற்குப்பின் தமிழர் குறித்த பெருமைப்படத்தக்க செய்தி ஏதும் வரலாற்றில் காணப்பெறவில்லை. இவ் வட்டாரத்தில் பழந்தமிழர் தொடர்பு இதனுடன் ஒரு முடிவுக்கு வந்ததாகவே தெரிகிறது. சான்றுகள் பல அழிந்து விட்டன. 'பூஜாங் பள்ளத்தாக்கு' என்னும் இடத்தில் சிற்சில அடையாளங்கள் உள்ளன. அவையும் படிப்படியாய் அழிந்துவருகின்றன. தென்கிழக்காசியப் பகுதிகளில் முன்னோர்கள் விட்டுச்சென்ற வரலாற்றுப் படிவங்கள் முற்றாக அழிவதற்குள், இந்திய அரசின் தமிழகக் கல்வெட்டுத்துறை இப் பகுதிக்கு வந்து ஆராய்ந்தால் பயனுடைய செய்திகள் கிட்டும்; வரலாற்றுச் சான்றுகள் பதிவுபெற்று நிலைக்கும்.

தற்போதைய மலேசியத் தமிழர்

தமிழகத்திற்கும் மலேசியாவிற்கும் நீண்ட நெடுந்தொடர்பு இருந்துவந்ததை வரலாறு உணர்த்துகிறது; அரசியல் தொடர்பு மிக மிக வலுவாக இருந்தது எனினும் இந்த மண்ணை அடிமை கொள்ளும் எண்ணம் அவர்களுக்கு இல்லாத காரணத்தால் இங்கு அவர்கள் நிலைத்த குடிகளாய் வேரூன்றவில்லை. அதனால் அந்தப் பழைய தொடர்ச்சி அறுபட்டுப் போயிற்று.

இப்போது இங்கு வாழும் தமிழர்கள் 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிக்குப்பின் குடியேறியவர்களின் கால்வழியினர்; ஓர் அடிமை நாட்டிலிருந்து மற்றோர் அடிமை நாட்டிற்கு ஆட்சி புரிந்தோரால் கொண்டு வரப்பட்டோரின் தலைமுறையினர் ஆவர்.

இந்தியா, இலங்கை, மலாயா நாடுகளைத் தங்கள் கைகளில் வைத்திருந்த வெள்ளைக்காரர் 1786-ல் பினாங்கையும், 1914ஆம் ஆண்டிற்குள் மலாயா முழுமையையும், 1819-ல் சிங்கப்பூரையும் தங்கள் பிடிக்குள் கொண்டுவந்தனர். மலாயாவில் மலைகள், காடுகள், வளமான ஆறுகள் நிறைந்தமையைக் கண்டதும் இதனை வளப்படுத்திச் செல்வம் குவிக்கத் தொடங்கினர். அதற்காக உழைக்கும் உரம் கொண்ட மக்களைத்தேடினர். பல்வேறு ஆய்வுகளுக்குப்பின் இந்தியாவின் தென்பகுதியைச் சேர்ந்த - அதிலும் குறிப்பாகக் கல்லாத அப்பாவிகளான ஏழைத்தமிழரே அதற்குப் பொருத்தமானவர் என்று கண்டனர். கூலி மிகுதியாகக் கேட்காமல் இடும் வேலைகளை மறுக்காமல், உரிமை கோராமல் வஞ்சகமின்றி உழைக்கும் ஓர் இனம் தமிழ் இனமே என்று முடிவு செய்தனர். அவர்களைக் கொண்டு வரத் திட்டம் தீட்டினர்.

குடியேற்ற வரலாறு

குடியேற்ற வரலாறு என்பது மிகவும் துன்பம் நிறைந்ததாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இங்குத் தொழிலாளர்



நிலப்படம் 3 : மலாயா, வடசுமத்திராத் தமிழர்களின் பயண வழி சான்று : வடசுமத்திராவில் தமிழர்கள், முனைவர் அ. வீரமணி

குடியேற்றம் (போர்சவில்) தொடங்கிவிட்டது (பயணவழி நிலப்படம் - 3 காண்க.). இப்புலப்பெயர்ச்சி ஓர் அடிமை நாட்டிலிருந்து மற்றோர் அடிமை நாட்டிற்கு ஆள்வோரால் வலிந்து கொண்டுவரப்பட்டவர் என்ற நிலையைத் தாண்டி, வசப்படுத்திக் கொண்டு வரப்பட்டவர் என்பது பொருத்தமாகும். அதற்கேற்பக் குடியேறியவர் சூழலும் அமைந்தது :

1. இந்தியாவில் தென்மாநிலங்களில் ஏற்பட்டிருந்த கடுமை யான வறுமை.
2. சென்னை மாநிலத்தில் ஏற்பட்ட நிலப்பற்றாக்குறை; குன்றிப் போயிருந்த தொழில்துறை; மிகுந்து பெருகிய மக்கள்தொகை.
3. அவர்களை மேலும் ஏழைகளாக்கிய பிரிட்டிஷ் ஆட்சி.
4. மலாயா, சிலோன், இந்தியா ஆகிய மூன்று நாடுகளில் இருந்த பிரிட்டிஷாரின் ஆதிக்கம். சிலோனில் இந்தியத் தொழிலாளர்களை அடிபணிய வைத்து வேலை வாங்கிய அனுபவம், அதனால் இந்தியாவி லுள்ள 'அடிமட்ட ஜாதி'யைச் சேர்ந்த இந்தியத் தொழிலாளர்கள் இங்கு வர ஊக்குவிப்பு.
5. மலாய்க்காரர் வேளாண்மையிலும், சீனர்கள் வாணிகத்திலும் ஈடுபாடு காட்டியதால் வளர்ந்து கொண்டிருந்த தோட்டங்களில் வேலை செய்வதற்குத் தொழிலாளர்கள் பற்றாக்குறை.
6. தென்கிழக்காசியாவில் தழைத்தோங்கி வளர்ந்து கொண் டிருந்த பிரிட்டிஷ் ஆதிக்கம், தொழிலாளர்களைத் தேவைப்பட்ட இடங்களுக்குத் கொண்டுசெல்லச் சாதகமாயிருந்த நிலை.
7. இந்தியர்களிடையே நிலவிய சாதிக் கோளாற்றின் காரணமாகத் தன்மானம், ஊக்கம் ஆகியவற்றை இழந்த அடிமட்ட வர்க்கமாக இவர்கள் இருந்தமை. இவர்களுக்கு உடலுழைப்புத் தொழிலைத் தவிர்த்து வேறு வேலைகள் தெரியாமை. சீனர்களைவிடக் குறைந்த ஊதியத்திற்கு வேலைசெய்யத் தயாராய் இருந்தமை.
8. சென்னையைச் சேர்ந்தவர்கள் தோட்டத்தொழிலுக்கு ஏற்றவர்கள் என்ற நம்பிக்கை. மேலும், அவர்கள் பிரிட்டிஷார் ஆட்சியை உணர்ந்தவர்கள். அதனால் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது சுலபம் என்னும் எண்ணம். சாதாரண வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்டதால் அதிகமாகப் பிரச்சினை தரமாட்டார் கள் என்ற நம்பிக்கை.
9. தென்னிந்தியாவிலும், மலாயாவிலும் நிலவிய ஏறக்குறைய ஒரே மாதிரியான சீதோஷ்ண தட்ப வெப்பநிலை.

10. மிக அதிக அளவில் குடியேறிவிட்ட சீனர்களைச் சமநிலைப்படுத்த வேறோர் இனத்தவரின் தேவை.

ஆகிய பத்துக் காரணங்களைத் தருகிறார் எஸ். இராமச்சந்திரன்.[21]

பொதுவாக, பிரிட்டிஷ் மன்னரின் ஆட்சிக்குக் கேடு ஏற்படுத்தாத வகையில் எந்த வகையிலும் மருட்டலாக இல்லாத அடிமட்ட இந்தியத் தொழிலாளர்களைக் கொண்டுவரப் பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கங்கள் ஊக்குவித்ததோடு மட்டுமல்லாமல் வெளிப்படையாக ஆதரவும் காட்டின.

மேற்படி காரணங்களின் முதற்பகுதியை ஆராயும்போது பல உண்மை கள் புலப்படுகின்றன. வெள்ளையர் இந்திய மண்ணை அடிமைப்படுத்தினர்; பல்வேறு அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர் என்பது ஒருபுற மிருக்கச் சமுதாயத்தின் மிகப் பலரான ஏழைகளை - தாழ்த்தப்பட்டோர் என ஒதுக்கி வைக்கப்பட்டவரை மேட்டுக்குடியினர் நடத்திய கொடுமைகள், அடிமை கொண்ட ஆளவந்தார் விளைத்த கொடுமைகளைவிடக் கடுமை யாய் இருந்தன.

இந்தியா ஒரு வேளாண்மை நாடு. இயற்கையின் கொடை பொய்க்குமே யானால் இன்னல்தான் மிஞ்சும். சில வேளைகளில் புயல், வெள்ளப் பெருக்குப் போன்ற விளைவுகளால் பயிர்கள் பாழ்பட்டு மக்கள் கடும் நெருக்கடிகளுக்கு ஆளாவதுண்டு.

இயற்கைச் சீற்றத்துக்கு ஆளாகிப் பயிர்கள் பாழ்பட்டாலும் ஏழைகள் குத்தகை கொடுப்பதை நிறுத்த முடியாது. அதுபோன்ற நேரங்களில் படும் கடன்களை அடைக்க வழியில்லாதபோது கொத்தடிமைகளாகிக் கூலிக்கு மாரடித்தனர். சாதிக் கொடுமை ஓர் அளவின்றிப் போயிற்று. தாழ்த்தப் பட்டவர் எனச் செயற்கைக் காரணம் கூறி அவர்களை விலங்குகளைவிடக் கீழ்த்தரமாக நடத்திய கொடுமைகளும் அளவின்றிப் போயின.

குத்தகை பெறுவதில் வெள்ளைக்காரர்களின் முகவர்களாய்ச் செயல்பட்ட நிலக்கிழார்கள் ஏற்படுத்திய கொடுமைகள் கொஞ்ச நஞ்ச மல்ல. குருதி உறிஞ்சும் அட்டைகளைவிடக் கொடியவர்களாய்ச் செயல் பட்டுத் தங்களைக் கொழுக்க வைத்துக்கொண்டு ஏழைகளை உருக்குலைய வைத்தனர்.

இதுகுறித்துக் கூறும் முனைவர் சு.இராசாராம் " தமிழர்களின் குடிப் பெயர்வுக்கு நிலப்பிரபுக்கள் மற்றும் வட்டிக் கடைக்காரர்களின் பொருளாதாரச் சுரண்டலும் முக்கியக் காரணமாக இருந்தது"[22] என்கிறார். மேலும் கூறுகையில்,

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலக் கிழக் கிந்தியக் கம்பெனியார் விவசாயிகளிடமிருந்து குத்தகை வசூலிக்கும்

பொறுப்பை நிலப்பிரபுக்களிடம் ஒப்படைத்தனர். இந் நிலப்பிரபுக்கள் கம்பெனியாருக்கும் தமக்கும் சேரவேண்டிய குத்தகைக்கு மேலாக அதிக அளவு குத்தகை வசூலிப்பதிலேயே குறியாய் இருந்தனர். கம்பெனியாருக்கும் விவசாயிகளுக்கும் இடையே நேரடித் தொடர்பு இல்லாமையைப் பயன் படுத்திக் குத்தகையின் பொருட்டு விவசாயிகளை அளவுக்கு மீறித் துன்புறுத்தினர்"[23] என்கிறார்.

ஆளவந்தாரின் முகவர்களாகிக் குட்டிச் சர்வாதிகாரிகள் போல் செயல்பட்ட நிலக்கிழார்களும், குருதி உறிஞ்சும் முறையில் நடந்த வட்டிக் கடைக்காரர்களின் கொடிய மனப்போக்குமே ஏழைகள் மனம் உடைந்து தாயகத்தை விட்டுப் பிழைப்பு நாடிப் பறந்தோட மூலகாரணம் என்று வரலாற்றுக் குறிப்புகள் சொல்கின்றன.

புலம்பெயர்ந்தோர் தாங்கள் சென்றடைந்த நாடுகளில் தொடக் கத்தில் பட்ட துன்பங்களை எண்ணி உண்மை உணரும்போது எப்பேர்ப்பட்ட மனமும் கண்ணீர் சிந்தவே செய்யும். எண்ணிப் பார்க்க இயலாத துன்பங் களை எதிர்கொண்டு வென்று இன்று 50-க்கும் மேற்பட்ட நாடுகளில் நிலைத்த உரிமைக்குடிகளாய் வாழும் தமிழர் எண்ணிக்கை ஒரு கோடியாகும்.

ஆங்கிலேயர் ஆட்சி அக்காலத்தில் தமிழர்களைப் புலம்பெயரச் செய்திராவிடில் என்ன நேர்ந்திருக்கும் என்பதனை 'மொரீசியஸ் தமிழரும் தமிழும்' என்ற நூலில் சு.இராசாராம் இப்படிக் கூறுகிறார்.

"எந்தவோர் இனக் குடிப்பெயர்வுக்கும் சில இடித்தல் அல்லது ஈர்த்தல் காரணிகள் உண்டு. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து தமிழர் குடிபெயர்ந்ததற்கும் அயல்நாடுகளில் குறிப்பாக ஆங்கிலக் குடியேற்ற நாடுகளில் குடியேறியதற்கும் இத்தகைய காரணிகள் இருந்தன. இக் காரணிகள் எவ்வளவுதாம் இருந்தாலும் ஒப்பந்தக் கூலிமுறையில் இந்தியத் தொழிலாளர்களை ஆங்கிலக் குடியேற்ற நாடுகளில் குடியேற்றுவது என்ற திட்டமும் சட்டமும் வாராதிருக்குமேயானால் இத்தகைய குடிப்பெயர்வுகள் தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவின் எந்தப் பகுதியிலும் நடந்திருக்க முடியாது. இந்தியர்கள் குடிபெயர்ந்த காலத்து இந்தியாவின் பொருளாதாரச் சீர்குலைவைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது வறுமையாலும், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தாலும், சமூகக் கட்டுப்பாடுகளாலும், அரசின் கொடுமைகளாலும் கொதித்திருந்த ஒரு மனித சமுதாயம் ஒரு யுகப் புரட்சிக்கு வித்திட இருந்த ஓர் அபாயநிலை, இவ் வொப்பந்தக் கூலி முறையால் தவிர்க்கப்பட்டு விட்டது என்று கூடக் கூறலாம். அக்காலக் குடியானவர் மற்றும் தாழ்த்தப் பட்டோரின் உணர்வுக் கொந்தளிப்பிற்கு உலகம் தழுவிய ஆங்கிலேயரின்

இக் கூலிமுறை வடிகாலாக அமைந்தது. தமிழர் தமிழர்மீதே வெறுப்புற்று நெடுந்தொலைவுக்கு ஓடிவிட்டனர் என்றாலும் தகும்."[24]

சு. இராசாராம் கூறும் இக் கருத்து ஆழ்ந்து எண்ணிப்பார்க்கத் தக்கதாகும். வெள்ளையர் அவர்களைப் புலம்பெயரச் செய்யாமலிருந்து ஒரு மாபெரும் ஊழிப் (யுகம்) புரட்சி வெடித்திருக்குமானால் இன்றும் தொடரும் சில இழிவுகள் இல்லாதொழிந்திருக்கு மென்றுகூட எண்ணத்தோன்றுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், ஏராளமான தென்னிந்தியத் தொழிலாளர்கள் இலங்கை, இந்தோனேஷியா, மொரீஷியஸ் போன்ற நாடுகளுக்குக் கொண்டு செல்லப் பட்டதுபோல் இங்கும் கொண்டுவரப்பட்டனர். முதலில் இவர்கள் கரும்பு, காப்பித் தோட்டங்களில் வேலை செய்வதற்கும் அதன் பின்னர் இரப்பர்த் தோட்டங்களில் உழைப்பதற்கும் கொண்டுவரப்பட்டனர்.[25]

இங்குப் புலம்பெயர்ந்தோர் மூன்று வகைகளில் அடங்குகின்றனர் (பட்டியல்-1 காண்க)

1. ஒப்பந்தக் கூலிமுறை (Indentured Labour)
2. கண்காணி முறை (Kangany Recruited Labour)
3. உதவிபெற்ற குடியேற்ற முறை (Assisted Independent Labour Immigration)

1. ஒப்பந்தக் கூலிமுறை (Indentured Labour)

அடிமைத் தொழிலாளர்முறை பிரிட்டிஷ் ஆட்சியில் முற்றாக ஒழிக்கப்பட்டதால் (1833) வளர்ச்சியடைந்த தோட்டத் தொழிலுக்குக் குறைந்த கூலியில் உழைக்கும் தொழிலாளர்கள் மிகுதியாகத் தேவைப் பட்டனர். இதன் காரணமாக ஒப்பந்தக் கூலிமுறை 19ஆம் நூற்றாண்டின் மையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொழிலாளர்கள் தேவைப்பட்ட முதலாளிகள், முகவர்கள் மூலம் நேரடியாக வரவழைத்தனர். இதற்குரிய நிறுவனங்கள் தென்னகத்தின் சென்னை, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் இருந்தன.

இம் முறையில் மலாயாவுக்குப் புலம்பெயர விரும்பும் தொழிலாளர் களுக்குப் கப்பல் கட்டணம், உணவுச் செலவு போன்றவற்றை முதலாளிகளே ஏற்றுக்கொண்டனர். ஆனால், செலவை நேர்செய்யும் முறையில் மூன்றுமுதல் ஐந்தாண்டுக் காலம் தொழிலாளி வேலை செய்ய வேண்டும் அல்லது பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தும் வரையில் வேறு முதலாளியிடம் இவர் வேலைக்குச் செல்லும் உரிமை கிடையாது. இதனுள் பல குழப்பங்கள் நேர்ந்ததால் 1884-ல் தொழிலாளர்களைத் திரட்டும் நடவடிக்கை மலா யாவின் நடைமுறைச் சட்டதிட்டங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

இந்தியர்கள் மலாயாவுக்குக் கொண்டு வரப்பட்ட முறை

ஆங்கிலேயர் உதவியால் வந்தோர்

(1844 - 1941)



மொத்தம் 70.1%

மீதமுள்ள 29.9% - தாங்களாகவே மலாயா வந்தவர்கள். இவர்கள் ஆங்கிலேயரால் எந்த உதவியும் பெறாமல், வியாபாரம் முதலாய காரணங்களுக்காக வந்தவர்கள். வந்தவர் மொத்த எண்ணிக்கை 27,25,917.

சான்று : SANDHU, K.S., Indians in Malaya : Immigration and settlement 1786 - 1957. University of Cambridge, 1969, p.97.

பட்டியல் - 1

2. கண்காணிமுறை (Kangany & Recruited Labour)

இதனை அடுத்து மற்றொரு திட்டம் கண்காணிமுறைத் திட்டமாகும்.

இம் முறை 1860ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒப்பந்தக் கூலிமுறையும் இதுவும் ஒரே காலகட்டத்தில் நடைமுறைக்கு வந்தன. கண்காணி என்னும் சொல் தமிழ்ச்சொல் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதன் பொருள் மேற்பார்வையாளர் என்பதாகும். தொழிலாளரிடையே இச் சொல் கங்காணி என்றே வழங்கப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒப்பந்தக் கூலிமுறை தடைசெய்யப்பட்டபோது இது அதனுடைய இடத்தைப் பிடித்துக்கொண்டது.

தோட்டத்தில் வேலைபார்க்கும் கண்காணி ஒருவர் தமிழ்நாட்டுக்குச் சென்று சிற்றூர்களில் உள்ளவர்களிடம் ஆசைமூட்டி, பொய்யான உறுதி மொழிகளைத் தந்து, தொழிலாளர்களை அழைத்து வருவார். தொழிலாளர் களைத் திரட்டிவரச் செல்லும் கண்காணி எந்த முதலாளிக்காகத் தொழிலாளர்களைத் திரட்டிவரச் செல்கிறாரோ அவருடைய தோட்டத்தில் தொழிலாளியாக இருக்க வேண்டும். இதற்கு உரிமம் (லைசென்ஸ்) வழங்கப் பட்டது. கண்காணியின் போக்குவரத்துச் செலவு முதலானவை முதலாளியால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், திரட்டிவரும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் 5 உருவா முதல் 10 உருவாவரை (Rupee) தரகும் தரப்பட்டது.

கண்காணி ஆள்திரட்டிக்கொண்டு வந்ததுடன் அவர் பணி முடிந்துவிடவில்லை. அவர் தாம் கொண்டுவந்த ஆள்களுக்கெல்லாம் தலைவ ராகச் செயல்பட்டார்; தொழிலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையே இணைப்புப் பாலமாக விளங்கினார்; செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார்.

எல்லா வகையிலும் தொழிலாளர்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த கண்காணி, அவர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்துப் பொருள் ஈட்டினார். இவ்வாறு கடன்பட்டவர்கள் அதனை அடைக்க முடியாமல் தொடர்கடனாளியாகவே இருந்து துன்புற்றனர். ஆண்டான் அடிமைநிலைக்குக் கொண்டுசெல்ல இம் முறை வழிவகுத்தது.[26]

இம் முறையில் வந்தவர்கள் அடைந்த கொடுமைகளுக்கு உள்ளக் குமுறல்களாய் அவர்கள் பாடிய நாட்டுப்புறப் பாடல்கள் நன்கு எடுத்துரைக் கின்றன. பொய் சொல்லி, ஆசைமொழி கூறி அவர்களை ஏமாற்றிய கண்காணிகளை இங்ஙனம் சாடுகின்றனர் தொழிலாளர்கள்:

> "சீனிக்குக் காக்காய் ஓட்ட கூட்டினு வந்த
> கறுப்புச் சட்டைக் கதிர்வேலு கங்காணி
> லாலான் முள்ளு டிங்குன்னுதே - இங்கு
> லப்பர் கொட்டை டப்புன்னுதே"[27]

லாலான் - ஒருவகைப் புல் (3 அடி உயரம் வரை வளரும் அதன் வேர்ப்பகுதியில் உள்ள முள் நச்சுத்தன்மை கொண்டது)

லப்பர் கொட்டை - பால் மர வித்து. அது வெடித்துச் சிதறும் போது எழும் ஒலியைப் பாடல் குறிக்கிறது. எண்ணி வந்த கனவுகள் சிதைந்து போனமையை விளக்கும் குறியீடுகள் அவை.

கண்காணிகள் தொழிலாளரை எப்படியெல்லாம் பொய்கூறி ஏமாற்றினர் என்பதை மற்றொரு பாடல் இப்படிக் கூறுகிறது.

"பகடியான வார்த்தையிலே
பால்மரத்தில் பணம் காய்க்கும்
ஆவடியில் முந்திக்கிட்டா
அதிர்ஸ்டமும் தானேவரும்
இப்படியும் ஜாலாக்கு
எப்படியும் போட்டாங்க"[28]

"பொய்சொல்லிக் கப்பலேத்திப்
பொழப்பெல்லாம் போச்சுங்க
கருங்கடல் தாண்டிவந்து
கைகட்டி நின்னோமுங்க
கல்பமும் உண்டின்னு
கையேந்தி ஊமையானோம்"[29]

கண்காணி ஆள்திரட்டும் முறையிலும் குளறுபடிகள் நேர்ந்த தால் 1920-ல் இம் முறை கடுமையான குறை கூறல்களுக்கு உள்ளானது. மலாயா மத்திய இந்தியர் சங்கமும் (IAM) இந்திய விடுதலைத் தலைவர்களும் இம் முறையில் காணப்பட்ட குறைகளைக் கடுமையாகச் சாடினர். அதனால் இம் முறை 1938-ல் தடைசெய்யப்பட்டது.[30]

எனினும் இம் முறை பல்லாயிரக்கணக்கான தென்னிந்தியத் தொழிலாளர்களை மலாயா இரப்பர்த் தோட்டங்களுக்குக் கொண்டு வரப் பேரளவில் உதவியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரப்பர்த்துறை வளர்ச்சிபெறத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பன்மடங்கு பெருகிற்று. இவ்வாறு வந்தவர்களில் பலர் இந்தியாவுக்குத் திரும்பிப் போகவே இல்லை. இந் நாட்டிலேயே நிலையான குடிகளாய்த் தங்கிவிட்டனர்.[31] (பட்டியல் எண்கள் 2,3,4 காண்க)!

மலாயாவுக்கு வந்தவர்களும் திரும்பிச் சென்றவர்களும்

ஆண்டு	மலாயாவுக்கு வந்த இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை	மலாயாவிலிருந்து திரும்பிய இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை	ஐக்கிய மலாய் நாடுகளில் இருந்த தோராயமான இந்தியர் எண்ணிக்கை
1905	39,539	19,754	75,000
1906	52,041	21,878	95,000
1907	60,542	30,522	1,15,000
1908	54,522	30,921	1,23,000
1909	49,817	31,374	1,33,000
1910	83,723	39,080	1,40,000
1911	1,08,471	48,103	1,90,000
1912	1,06,928	63,885	2,10,000
1913	1,18,583	70,090	2,20,000

குறிப்பு : ஐக்கிய மலாய் நாடுகளாவன (Federated Malay States): (பேரா, சிலாங்கூர், நெகிரி செம்பிலான், பகாங் ஆகிய மாநிலங்கள்)

சான்று : Indians in Malaysia and Singapore, Arasaratnam

பட்டியல் - 2

1921ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரையிலான இந்திய மக்கள்தொகை

	1921	1931	1947	1957
தமிழர்	3,87,509	5,14,778	4,60,985	6,34,681
மலையாளி	17,190	34,898	44,339	72,971
தெலுங்கர்	39,986	32,536	24,093	27,670
மற்றவர்	–	–	–	–
வடஇந்தியர்	25,495	39,635	54,231	84,934
மொத்தம்	4,70,180	6,21,847	5,99,616	8,20,256

சான்று : Indians in Malaysia and Singapore, Arasaratnam, p.48

பட்டியல் - 3

3. உதவிபெற்ற சுயேச்சைத் தொழிலாளர் குடியேற்றம்: (Assisted Independant Labour Immigration)

கண்காணி முறை நடைமுறையில் இருந்தபோதே 1900-ல் இரப்பர் உற்பத்தி வேகமாக வளர்ச்சியடைந்ததால் தொழிலாளர் தேவையை அதனால் நிறைவுசெய்ய இயலவில்லை. அதனால் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டது. பின்னர் ஒப்பந்தக் கூலிமுறையும், கண்காணி முறையும் தடை செய்யப்பட்டதால் நிலைமை கடுமையானது. இதனைச் சமாளிக்கத் தோட்ட முதலாளிகள் தொழிலாளர்களை வளைத்துப் பிடிக்கும் நேர்வழியற்ற முறைகளிலும் ஈடுபட்டனர். மிகுதியாக ஊதியம் தருவதாக ஆசைகாட்டி மற்றத் தோட்டங்களிலிருந்து தொழிலாளர்களைக் கடத்திச் சென்றனர். இக் கடத்தலைத் தவிர்க்கும் முயற்சி பயனளிக்கவில்லை. காரணம் இரப்பர்த் தொழிலின் மிகவேக வளர்ச்சியே ஆகும். மேலும் தொழிலாளர் ஒரு தோட்டத்திலிருந்து இன்னொரு தோட்டத்திற்குச் சென்றுவிடுவது ஒரு சிக்கலாகவே இல்லை. தோட்ட முதலாளிகளுக்கும், தோட்டத் தொழிலாளர் களுக்குமிடையே எந்தவித ஒப்பந்தமும் இல்லாததால் தங்களை இந்தியாவி லிருந்து தருவித்த தோட்ட முதலாளிகளுக்குப் பணச் செலவைக்கூடத் தராமல் வேறு தோட்டங்களுக்கு மாறிவிடுவது எளிதாக இருந்தது. தொழில்

தோட்டங்களில் அமர்த்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை

	1967			1975			1980			1982		
தோட்ட வகைகள்	ஆண்	பெண்	சிறுவர்	ஆண்	பெண்	சிறுவர்	ஆண்	பெண்	சிறுவர்	ஆண்	பெண்	சிறுவர்
ரப்பர்	114770	108590	8840	88670	9540	3160	72820	92730	1660	63702	83713	880
தென்னை	2710	1900	120	1850	1510	90	1920	1770	20	2210	2150	18
செம்பனை	16630	9940	1180	42820	21070	3390	51460	24370	2020	55410	36740	300
தேயிலை	2210	2240	370	1460	1770	240	1140	1580	60	836	1091	24
அன்னாசி	2030	1180	160	660	340	—	780	820	30	683	688	5

சான்று : மலேசியத் தொழிலாளர் மனிதவள அமைப்பின் அறிக்கை 1981/82

பட்டியல் - 4

பாதுகாப்பாளரின் (Protector of Labour) ஒப்பந்தக் கூலி முறையில் குடியேறாத தொழிலாளர்கள் ஒருமாத அறிக்கை (நோட்டீஸ்) கொடுத்து விட்டுத் தோட்டத்தைவிட்டு வெளியேறலாம் என்னும் அறிவிப்பும், தோட்ட முதலாளிகளுக்கு அவர்கள் பட்டுள்ள கடன்களை நீதிமன்றங்கள் மூலமே பெறமுடியும் என்பதும், அதற்காக அவர்களைத் தோட்டத்தில் தடுத்து வைக்கமுடியாது என்ற அறிக்கையும் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருந்தன. ஒப்பந்தக்கூலி முறையும் கண்காணிமுறையும் அவற்றின் கடுமை யான அமலாக்கத்தினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டன.

இவை யாவும் தொழிலாளர்களைக் கொண்டுவருவதில் நேரடியாகத் தலையிடவும் சுயேச்சைத் தொழிலாளர்களைக் கொண்டுவர ஒரு புதிய முறையை உருவாக்கவும் அரசிற்குப் பெரிதும் உதவின. இப் புதியமுறை ஒப்பந்தக்கூலி முறையிலும் கண்காணி முறையிலும் காணப்பட்ட முறை கேடுகளை ஒழிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது. இதற்காக 1907-ல் இந்திய அரசு இந்தியக் குடிநுழைவுக் கமிட்டி என்ற ஒன்றை அமைத்துத் தொழிலாளர்கள் தம் விருப்பமுறையில் குடியேறுபவரை ஆராயும்படிக் கேட்டுக் கொண்டது. இந்தக் கமிட்டி மலாயாத் தோட்ட முதலாளிமார் சங்கத்துடன் (Planters Association of Malaya) இம் முறையை அமல்படுத்தினால் இரப்பர்த் தொழிலுக்கு வேண்டிய தொழிலாளர் பற்றாக்குறையைத் தீர்ப்பதுடன் ஒப்பந்தக் கூலிமுறையிலும், கண்காணி முறையிலும் உள்ள முறைகேடுகளைத் தவிர்க்கலாம் என்று பரிந்துரைத்தது.[32]

இத் திட்டத்தைச் செயல்படுத்தத் தோட்ட முதலாளிமார்கள் கண்டிப் பாக நிதி ஒன்றனைத் தொடங்கி அதற்குத் தங்களுடைய பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றும், இந்த நிதியைத் தொழிலாளர்களை இந்தியாவி லிருந்து தருவிக்கவும், அவர்களைத் திரும்ப இந்தியாவிற்கு அனுப்பவும் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆலோசனை நல்கியது. அஃதாவது இந்த முறையினால் தொழிலாளர்களைக் கொண்டுவரும் செலவை அவர்களைப் பயன்படுத்தும் தோட்ட முதலாளிமார் பகிர்ந்துகொள்ள இது வழிவகுத்தது. இந்தக் கமிட்டியின் அறிக்கை காரணமாக 1908-ல் தமிழர் குடியேற்ற நிதிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதுவே பின்னர் 1910-ல் இந்தியர் குடியேற்ற நிதி (Indian Immigration Fund) என்று பெயர் மாற்றம் பெற்றது. பின்னர்த் தென்னிந்தியத் தொழிலாளர் நிதி ஆனது. இது ஒரு நீண்ட வரலாற்றை உள்ளடக்கியது. ஈண்டுச் சுருக்கமாகத் தரப்படுகிறது.

இந் நிதி தொடக்க காலத்தில் தொழிலாளர்களின் உள்ளூர்ப் போக்குவரத்துச் செலவு, உணவு, மருத்துவச் செலவுகள், கப்பல் கட்டணம்,

துறைமுகங்களிலிருந்து வேலை செய்யவுள்ள தோட்டங்களுக்குச் செல்லும் பயணச் செலவு, அவர்கள் இந்தியா திரும்புவதற்கான செலவு போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது.

இந்த உதவி பெற்ற சுயேச்சைத் தொழிலாளர் குடியேற்ற முறைக்கான இந்த நிதியினால் காலனித்துவ அரசாங்கத்தின் தேவையை நிறைவு செய்வது எளிதாக இருந்தது. தொழிலாளர் வருகையை முறைப்படுத்தவும், முதலாளிமார்களின் தேவைக்கேற்பத் தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்கும் இம் முறை பெரிதும் உதவியாக இருந்தது. இதன் சிறப்பு என்னவென்றால் இந்த முறையினால் இருவகையான தொழிலாளர் குடியேற்ற முறைகள் உருவாயின. ஒன்று உதவிபெற்ற சுயேச்சைத் தொழிலாளர் குடியேற்றம்; மற்றொன்று சுயேச்சைத் தொழிலாளர் குடியேற்றம்.

முதலில் குறிக்கப்பெற்ற உதவிபெற்ற தொழிலாளர் குடியேற்றம் கண்காணிமுறை போன்றது. இஃது உண்மையில் கண்காணிகளின் உதவி யுடன் நடைபெற்றது. இம் முறையில் கண்காணிகளுக்கு அவர்களுடைய சொந்தக் கிராமங்களில் தொழிலாளர்களைத் திரட்டுவதற்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. இதற்கும் பழைய கண்காணி முறைக்கும் உள்ள வேறுபாடு ஒன்றே ஒன்றுதான். புதிய முறையில் தொழிலாளர்களின் மலாயா வருகைக்காக எல்லாச் செலவுகளும் இந்தியக் குடியேற்ற நிதியிலிருந்து கொடுக்கப்பட்டன. இதனால் தொழிலாளர்கள் கடன்சுமை இல்லாதவர் களாக இங்கு வந்துசேர்ந்தனர்.

தென்னிந்தியத் தொழிலாளர் நிதி : மேலும், சில விளக்கங்கள்

தென்னிந்தியத் தொழிலாளர் நிதியின் நோக்கப்படி தாயகம் திரும்ப எண்ணியோருக்கும் அது பயன்பட்டது. 1931-ல் நிகழ்ந்த வாணிக மந்த நிலை காரணமாக, பெரும் அளவில் தென்னிந்தியத் தொழிலாளர் தாயகம் திரும்ப நேரிட்டது. பல ஆண்டுகள் இங்குக் கடுமையாக வியர்வை சிந்தி உழைத்தும், திரும்பிச் செல்லக் கப்பல் கட்டணம் செலுத்தக்கூட இயலாத ஏழைமையில் தவித்தனர். அவர்களுக்கு இந் நிதியிலிருந்து பாதித் தொகையும் அவர்கள் வேலை செய்த நிறுவனங்கள் முதலாயவற்றிடமிருந்து பாதித் தொகையும் பெற்றுத் தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பெற்றனர்.

தாயகம் திரும்ப எண்ணிய அத்தனை பேருக்கும் கட்டுப்பாடற்ற முறையில் இந் நிதி வழங்கப்பெறவில்லை. அதனைப் பெறுவதற்கும் சில நெறிமுறைகள் வகுக்கப்பட்டன.

இது குறித்துத் திரு. மு. வரதராசு எழுதிய எரிந்துகொண்டிருக்கும் தமிழினம் என்ற நூலின் 84-87ஆம் பக்கங்களில் இடம் பெற்றுள்ள ஒரு பகுதி ஈண்டு அப்படியே தரப்பெறுகிறது.

(அ) மலாயாவிற்குச் சென்றுவிட்டு இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கு ஆகும் முழுச் செலவினங் களையும் இந்தியக் குடியேற்ற நிதியம் செலுத்த வேண்டும்.

(ஆ) மலாயா சென்றுவிட்டு உடல் நலக்குறைவு காரணமாக வேலை செய்ய முடியாமல் இரண்டு ஆண்டுகளுக்குள் தாய்நாடு திரும்பு வோர்களுக்கு ஆகும் செலவில் பாதியை இந்தியக் குடியேற்ற நிதியமும் மற்றப் பாதிச் செலவினைத் தாய்நாட்டுக்குத் திரும்பும் தொழிலாளர்களில் எத்தனை தொழிலாளர்களைப் பல்வேறு மலாயா நிறுவனங்கள் பெற்றிருந்தனவோ அதன் விகிதாச்சாரத்திற்கேற்ப ஏற்றுக்கொண்டது.

(இ) தகுதியற்ற தொழிலாளர்களைத் தாய்நாட்டிற்கு அனுப்பப் பாதிச் செலவை அரசும், மாநகராட்சியும் மீதிப் பாதியை இந்தியக் குடியேற்ற நிதியமும் செலுத்தவேண்டும்.

(ஈ) அரசு துறையில் தொழிலாளர்களாகப் பணிபுரிந்தவர்கள், உடல் நலக்குறைவு காரணமாக அல்லது 50 வயதினைக் கடந்து விட்டதால் ஓய்வு பெறுகிறவர்கள் பெறும் பணிக்கொடைத் தொகை யுடன் அவர்களைத் தாய்நாடு அனுப்ப ஆகும் முழுச் செலவினங் களையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். பணிக்கொடைத் தொகை $ 500-லிருந்து $ 1000-க்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

(உ) ஓர் ஆண்டிற்கு மேலாகத் தங்கியிருந்த தொழிலாளர்கள், தொழு நோய், ஆஸ்துமா மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டு இருப்பாரே யானால் அவர்களைத் தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்ப ஆகும் செலவினை மலாயா அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தென்னிந்தியத் தொழிலாளர்களைத் தாய்நாட்டிற்குத் திரும்ப அனுப்புவது 1948ஆம் ஆண்டின் இறுதிவரை தொடர்ந்தது. 1949ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அரசினாலோ, நகராட்சி அமைப்புகளினாலோ, தோட்டத் திலோ வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் எவராக இருந்தாலும் அவர்களின் இயலாமைத் தன்மை மற்றும் பணிக்கொடை சம்பந்தப்பட்டவை களைக் கருத்தில் கொள்ளாது தகுதியற்ற இந்தியத் தொழிலாளர்களைத் தாய்நாட்டிற்குத் திரும்ப அனுப்புவதற்கான செலவினங்களை ஒதுக்கீடு செய்வதில் ஒருமித்த கருத்தை மேற்கொள்வது நியாயமானதாக இருக்கக் கூடும் என்று இந்தியர் குடியேற்ற நிதியம் கருதியது.

தொழிலாளர்களுக்குச் செலுத்தக்கூடிய ஓய்வூதியத் தொகை அவர்களின் இயலாமையின் தன்மை எதுவாயினும் சரி, அவற்றைக் கருத்தில்

கொண்டு அந்தத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியவர்கள் எந்தப் பிரதேசத்தோடு சார்ந்துள்ளனரோ அந்தக் கூட்டரசும், சிங்கப்பூர் அரசும் தாய்நாட்டுக்குத் திரும்ப அனுப்ப ஆகும் செலவுத் தொகையினை இந்தியக் குடியேற்ற நிதியம் வழங்கும் பங்குக்குச் சமமான அளவில் அளிக்க வேண்டும் என்று 1949ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிவெடுக்கப்பட்டது.

1958ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி அன்று அமைக்கப்பட்ட தென் இந்தியத் தொழிலாளர் நிதி வாரியத்தால் தென்னிந்தியத் தொழிலாளர் களை அவர்களுடைய தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பும் பணி தொடர்ந்து நடைபெற்றது.

தாய்நாட்டிற்குத் திரும்பும் பொருட்டு விண்ணப்பித்த விண்ணப்ப தாரர்களின் விண்ணப்பங்கள் தென்னிந்தியத் தொழிலாளர் நிதி வாரியத்தின் அப்போதைய கொள்கையின்படி பரிசீலிக்கப்பட்டன.

(அ) விண்ணப்பதாரர் மதிப்பிடத் தகுந்த தொழிலாளர் பிரிவைச் சார்ந்திருக்க வேண்டும் (எவருடைய மதிப்பீடு 1938 வரை செலுத்தக்கூடியதாக உள்ளதோ அவர்கள்)

(ஆ) விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 55 வயதுடையவராக இருத்தல் வேண்டும் (அ) பதிவு செய்யப்பட்ட மருத்துவ நிபுணரின் பரிந்துரைப்படி அவர் வேலை செய்யத் தகுதியற்றவர் என்று சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் கூட்டரசின் குடிமகனாக இருக்கக்கூடாது.

(ஈ) விண்ணப்பதாரர் இந்தியாவில் தம்மை வரவேற்கவும் பாதுகாத்துக் கொள்ளவும் விருப்பமுடைய ஒருவரைப் பெற்றிருக்க வேண்டும்.

(உ) பெண் விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்பட்ட மருத்துவ நிபுணரால் வேலைக்குத் தகுதியற்றவர் என்று சான்று பெற வேண்டும் (அ) கருணை அடிப்படையில் அவர்கள் தாய்நாடு திரும்பத் தகுதியானவர்கள். மேலும் அவர்களுக்குத் தாய்நாடு திரும்ப அந்த அளவுக்கு வயது வரம்பு தடையானதாக இல்லை என்பது தெளிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ஊ) குழந்தையுள்ள (அ) இல்லாத விதவை என்ற பட்சத்தில், விண்ணப்ப தாரர் தம்மை வரவேற்கவும், பாதுகாத்துக் கொள்ளவும் உறவினர் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று உறவினர்களிடமிருந்து பெற்ற உண்மைப் படியைத் தகுந்த தொழிலாளர் அலுவலகத்தின் உயர்பொறுப்பினை ஏற்றுள்ள அலுவலரிடம் அளிக்கவேண்டும்.

(எ) மேலே சொன்ன நிபந்தனைகளின்படி கடிதம் அளிக்கப்படாத பட்சத்தில் கோலாலம்பூரில் உள்ள இந்திய உயர்நிலை ஆணையரின் அலுவலகத்தின் மூலம் அந்த விண்ணப்பதாரரை வரவேற்கவும் ஆதரவு அளிக்கவும் இந்தியாவிலுள்ள அவருடைய சொந்தக் கிராமத்தில் உள்ளவரா என்பதை நிரூபணம் செய்யும் பொருட்டு விசாரணைகள் செய்ய உத்தரவிடப்படுகிறது.

(ஏ) நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பதாரரையும் கருணை அடிப்படையில் தாய்நாட்டுக்குத் திரும்ப அனுப்பும் உரிமை, தொழிலாளர் ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஐ) 1938-க்குப் பிறகு தம்முடைய சொந்தத் தனிப்பட்ட விருப்பத்தில் மலாயாவிற்கு வந்து நீண்டகாலம் மலாயாவில் வேலையிலிருந்த விண்ணப்பதாரர் (தொழிலாளர்) கருணை அடிப்படையில்கூடத் தென் இந்தியத் தொழிலாளர் நிதி வாரியத்தின் செலவில் தாய்நாட்டிற்கு (தன் சொந்த நாட்டிற்கு)த் திரும்பும் உரிமை யுடையவரல்லர்.

(ஒ) மலாயாவிற்கு வந்த மதிப்பிடப்பட்ட தொழிலாளருடன் வேலை செய்துகொண்டு இல்லாமல் சார்ந்திருப்பவர்கள் மனுதாரராக இருக்கிறார் என்கிற பட்சத்தில் - மேலும் இப்போது சார்ந்திருக்க வில்லை என்றிருந்தும், உண்மையில் அவர் மதிப்பிடப்பட்ட தொழிலாளரைச் சார்ந்திருந்தார் என்ற உண்மையின் அடிப்படையில் இயல்பான நிபந்தனையின்கீழ் இலவசமாக இந்தியாவிற்குத் திரும்ப அவருக்கு உரிமையளிக்கப்படுகிறது.

மேற்படி நிதியில் மீதமிருந்த தொகை பின்னாளில் தென்னிந்தியத் தொழிலாளர் நிதி என்ற பெயரில் தமிழர் சொத்தாக ஆனது. தொடக் கத்தில் தென்னியத் தொழிலாளர் இங்கு வரவும் திரும்பிச் செல்லவும் பயன்படுத்தப்பட்ட இந் நிதி பின்னர்த் தேவைக்கேற்ப மாறுதல் அடைந்தது. தீபகற்ப மலேசியத் தொழிலாளர் தலைமை இயக்குநரைத் தலைவராய்க் கொண்ட இவ் வாரியத்தில் அரசாங்கம், தோட்ட நிருவாகம், இந்தியச் சமுதாயம், தொழிலாளர், தென்னிந்தியத் தொழிலாளர் நிதி வாரியம் போன்றவற்றின் நிகராளிகள் உறுப்பியம் பெற்றிருந்தனர்.[33] இவ் வாரியம் சரியாக நிருவகிக்கப்படவில்லை. அரசு அதனைத் திருத்தி நிலைப்படுத்தாமல் அந் நிதி அமைப்பைக் கலைத்தது (1999); அப்போதைய அதன் மதிப்பு 26 இலக்கம் மலேசிய வெள்ளியும், 15 ஏக்கர் நிலமும் ஆகும்.[34] தொழிலாளர்

அமைச்சுக்கு அது போய்ச் சேர்ந்தது. சமுதாயம் பேரெதிர்ப்புக் காட்டியது; இதழ்கள் உரிமைக்குரல் கொடுத்தன. அந் நிதி அதே பெயரில் பாரம்பரியச் சொத்தாக நிலைக்க வேண்டுமென்று பரவலாகக் குரல் எழுந்தது. அவ்வுணர்வுகளுக்கு மதிப்பளித்து அப்போதைய மனித ஆற்றல் அமைச்சர் லிம் ஆலெக் அந் நிதியொடு அரசு நல்கையையும் சேர்த்து 2 கோடியே 20 இலட்சம் வெள்ளியில் ஒரு நவீனத் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரி எழுப்பப்படும் என்றார். அது என்.டி.எஸ். ஆறுமுகம் பிள்ளை பெயரில் அமையு மென்று முடிவானது; கால்கோள் விழாவும் நடந்தது (24.11.99). அதனைத் தாம் கவனித்து உரியன செய்வதாகப் பொதுப்பணித்துறை அமைச்சரும் மலேசிய இந்தியர் காங்கிரசு தலைவருமான (டத்தோஸ்ரீ) ச. சாமிவேலு உறுதியளித்தார்.

ஐந்தாண்டுகள் கடந்தபின் 2005-ல் கல்லூரி கட்டப்பட்ட செய்தி நாளிதழ்களில் வெளிவந்தது. தொழில்நுட்பம் பயில விரும்புவோர் விண்ணப்பம் அனுப்பலாம் என்ற அறிக்கையும் வெளியானது. ஆனால், இந்திய மாணவர் யாரும் விண்ணப்பம் அனுப்பவில்லை. இது சமுதாயத்திற்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. பல முயற்சிகளுக்குப் பின் சிலர் சேர்ந்தனர். தமிழ்-இந்திய மாணவர்கள் அக் கல்லூரியை நன்கு பயன்படுத்திக்கொள்ள முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

கைவிட்டுப் போனது

வரலாற்றுக் (குருதிக்) கொடையான அப் பெருஞ்சொத்தைப் பொறுப்பிலிருந்தோர் சரியாக நிருவகித்திருந்தால் இன்று ஒரு வரலாற்று அடையாளமாக நிலைத்திருக்கும். தென்னக மாணவர் உயர்கல்வி பெற உதவிச் சம்பளம், கல்விக்கடன் தரும் ஓர் ஆற்றல் வாய்ந்த நிறுவனமாய் அது விளங்கியிருக்கும். பல்கலைக் கல்விபெறப் பணமில்லாமல் தவிக்கும் இந்திய மாணவர்க்கு, அவர்தம் முன்னோரின் குருதிக் கொடையாய் நிலைத்திருந்த தென்னிந்தியத் தொழிலாளர் நிதி ஓர் எய்ப்பில் வைப்பாய் நிலைத்திருக்கும். ஆனால், இன்று அடையாளம் தெரியாமல் உரியவர்க்கு உரிமையில்லாமல் பொதுவான ஓர் அரசு கல்லூரியாகிவிட்டது. சமுதாயம் எழுப்பிய குரல் மதிக்கப்பட்டது போன்று தோன்றி மாற்று வடிவெடுத்து மறைந்துவிட்டது. புதியன புனைய முயலாவிடினும் உள்ளதையாவது இழக்காத விழிப்புப் பெறல் என்றோ என்று சமுதாய நலன் நாடுவோர் மனம் குமுறுவதை இங்குப் பதிவு செய்யாமல் விடமுடியவில்லை. இவ்வகை யில் சொந்த அடையாளங்களைக் காத்துக்கொள்வதில் சீனர்க்குள்ள உரிமை உணர்வு தமிழர்க்கு இல்லை என்பதும் இங்குச் சுட்டிக்காட்ட வேண்டிய ஒன்றாகும்.

நாட்டு உருவாக்கத்தில் தமிழர் பங்கு

புலப்பெயர்ச்சி என்பது இங்கே தென்னிந்தியாவிலிருந்து மட்டுமன்று; இலங்கை (ஸ்ரீலங்கா)யிலிருந்தும் வெள்ளையர் தமிழர்களைக் கொண்டுவந்து குடியேற்றினர். தென்னகத்திலிருந்து தமிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்னடர் வந்தனர். இலங்கையிலிருந்து (யாழ்ப்பாணத்) தமிழர் வந்தனர்.

தென்னாட்டவர்களுள் தமிழர், தெலுங்கர், கன்னடியர் (மிகச் சிறுபான்மை) ஆகியோரை உடல் உழைப்புக்கும், மலையாளிகளைத் தோட்ட நிருவாகப் பணிகளுக்கும் அமர்த்தினர். இலங்கைத் தமிழர்களை அரசு அலுவலகப்பதவிகளில் அமர்த்தினர். வெள்ளையர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு. இங்கு இந்தியர் என்னும்போது 85 விழுக்காட்டினர் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடக்க காலத்தில் வெள்ளையர் வீடுகளில் வேலை செய்யச் சிலர் கொண்டுவரப்பட்டனர். பின் கரும்பு, கோக்கோ, மிளகுதோட்டங்கள் போடவும், தென்னந்தோப்புகள் உருவாக்கவும் குறைந்த அளவினரே கொண்டுவரப்பட்டனர். 1790களில் மிளகுதோட்டங்கள் போடவும், 1830 களில் கரும்புத் தோட்டங்கள் உருவாக்கவும், 1870களில் காப்பித் தோட்டங்கள் ஏற்படுத்தவும் கொண்டுவரப்பட்டனர்.[35] இவர்களுடன் இரப்பர்த் தோட்டங்களை உருவாக்கக் கொண்டுவரப்பட்டவரே மிகுந்த எண்ணிக்கையினர் ஆவர். இங்ஙனம் 1786-ல் தொடங்கி 1938 வரை இங்குக் கொண்டுவரப்பட்டோர் மிகப் பெருந்தொகையினர் ஆவர்.[36]

மலைகளும் காடுகளும் நிறைந்து கிடந்த நாட்டை வளமானதாக உருவாக்கும் பணிக்குக் கொண்டுவரப்பட்ட மக்கள் இங்கு வந்ததும் கண்டதென்ன?

“காடுமலை மேடுபள்ளம்
கண்டகண்ட இடங்களிலெல்லாம்
மாடுபோல உழைக்கணும்
மலையேறிப் பாடுபட்டு
ஊடுருவிப் போவுதய்யா இதநினைக்க
ஓடிவர்றார் பூட்ஸ்காலால் உதைக்க
ஊடுருவிப் போகுதய்யா இதநினைக்க
அப்பப்பா பசிக் கொடுமை . . .”[37]

மேற்படி நாட்டுப்புறப்பாடல் அதனை உணர்த்துகிறது.

உலகில் தமிழர் மட்டுமல்லர்; மற்ற இனத்தவரும் புலம் பெயர்ந்தனர். ஆப்பிரிக்கக் கறுப்பர் அடிமைகளாக விலைக்கு வாங்கப்பட்டு அமெரிக்காவிற்குக் கொண்டுவரப்பட்டனர். அதனால்,

மலாயாவுக்கு வந்தவர்களும் திரும்பிச் சென்றவர்களும்

ஆண்டு	மலாயாவுக்கு வந்த இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை	மலாயாவிலிருந்து திரும்பிய இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை	ஐக்கிய மலாய் நாடுகளில் இருந்த தோராயமான இந்தியர் எண்ணிக்கை
1905	39,539	19,754	75,000
1906	52,041	21,878	95,000
1907	60,542	30,522	1,15,000
1908	54,522	30,921	1,23,000
1909	49,817	31,374	1,33,000
1910	83,723	39,080	1,40,000
1911	1,08,471	48,103	1,90,000
1912	1,06,928	63,885	2,10,000
1913	1,18,583	70,090	2,20,000

குறிப்பு : ஐக்கிய மலாய் நாடுகளாவன (Redarated Malay States): (பேரா, சிலாங்கூர், நெகிரி செம்பிலான், பகாங் ஆகிய மாநிலங்கள்)
சான்று : Indians in Malaysia and Singapore, Arasaratnam
பட்டியல் - 5

1921ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரையிலான இந்திய மக்கள்தொகை

	1921	1931	1947	1957
தமிழர்	3,87,509	5,14,778	4,60,985	6,34,681
மலையாளி	17,190	34,898	44,339	72,971
தெலுங்கர்	39,986	32,536	24,093	27,670
மற்றவர்	-	-	15,968	-
வட இந்தியர்	25,495	39,635	54,231	84,934
மொத்தம்	4,70,180	6,21,847	5,99,616	8,20,256

சான்று : Indians in Malaysia and Singapore, Arasaratnam. p.48
பட்டியல் - 6.

தோட்டங்களில் அமர்த்தப்பட்டிருந்த தொழிலாளர் எண்ணிக்கை

	1967			1975			1980			1982		
தோட்ட வகை	ஆண்	பெண்	சிறுவர்	ஆண்	பெண்	சிறுவர்	ஆண்	பெண்	சிறுவர்	ஆண்	பெண்	சிறுவர்
ரப்பர்	114770	108590	8840	8870	95420	3160	72820	92730	1660	63702	83713	880
தென்னை	2710	1900	120	1850	1510	90	1920	1770	20	2210	2150	18
செம்பனை	16630	9940	1180	42820	21070	3390	51460	24370	2020	55410	36740	300
தேயிலை	2210	2240	370	1460	1770	240	1140	1580	60	836	1091	24
அன்னாசி	2030	1180	160	660	340	-	780	820	30	683	688	5

சான்று : மலேசியத் தொழிலாளர் மனிதவள அமைச்சின் அறிக்கை 1981-82

பட்டியல் -7

இரப்பர்த் தோட்டங்களில் 1973 / 1982-ல் கொடுக்கப்பட்ட சம்பளங்கள் சராசரி வருமானங்கள்

ஆண்டு	கண்காணிகள் (கொபாலா) (ஆண்கள்)	பால்வெட்டு (ஆண்,பெண்)	புல்வெட்டு (ஆண்,பெண்)	களைகொல்லி தெளிப்பவர் (ஆண்,பெண்)	ஆலைத் தொழிலாளர்கள் (ஆண்,பெண்)	தொழிலாளர்களின் எண்ணிக்கை
1973	165	149	77	411	113	191760
1974	201	145	100	121	136	193160
1975	191	139	92	121	132	187250
1976	230	212	126	160	178	178930
1977	201	197	120	164	161	174900
1978	243	220	127	154	179	177270
1979	261	254	146	145	207	170670
1980	300	259	169	224	225	167210
1981	331	266	171	224	234	164620
1982	340	267	188	253	302	148294

சான்று : மலேசியத் தொழிலாளர் அமைச்சு.

பட்டியல் - 8

"ஆயிரக்கணக்கானோர் இறந்துகொண் டிருக்கிறார்கள்
அப்படி ஒரு நிலை எனக்கு வரும்போது
என்னை வேலை செய்யச் சொல்லி
எந்த முதலாளியும் கூறமுடியாது
கூலியாய்க் கொடுக்கும் சோளமும் எனக்குக் கிடைக்காது
தினமும் நூறு கசையடிகள் வாங்கும்
அவலநிலையும் எனக்கு ஏற்படாது
காரணம் நான் மாண்டு விடுவதால்"[38]

என்று கல்லாத அம் மக்கள் நாட்டுப்புறப் பாடல்வழித் தம் குமுறலைக் கொட்டினர்.

ஆஸ்திரேலியா மண்ணைச் சொந்தமாக்கிக் கொள்ளச் சென்றவர் உணர்வு வேறொரு வகையானதாகும். அவர்கள் கண்ணில் பட்ட நாட்டின் தோற்றம் இது.

"இந்த நாடு மரங்கள் அடர்ந்தது
மங்கிய பச்சைச் சாம்பல் நிறமுடையது
மரங்களும் ஒரு வறண்ட தன்மையை
உணர்த்துகின்றன.
அம்மரங்களைத் தாங்கியுள்ள மலைகளும்
கருமையாகக் காட்சியளிக்கின்றன
எங்கும் ஒரே மங்கிய நிலை
எது எப்படி இருப்பினும்
இது பல வல்லவர்களை
உருவாக்கவல்ல நாடு."[39]

பாடலின் கடைசியில் உள்ள "இது பல வல்லவர்களை உருவாக்க வல்ல நாடு" என்ற நம்பிக்கை ஒளி அமெரிக்கக் கறுப்பர்களுக்கோ மலாயாத் தமிழர்களுக்கோ ஏற்பட்டிருக்க வழியில்லை. ஏனென்றால் அவர்கள் நாடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ளச் செல்லவில்லை.

மலேசியத் தமிழர், அமெரிக்கக் கறுப்பர் உற்ற வன்கொடுமைகளை அனுபவிக்கவில்லை; ஆஸ்திரேலியர் உற்ற எதிர்கால நம்பிக்கையையும் கொள்ளவில்லை. எனினும் கடுமையான துன்பங்களுக்கு ஆளாயினர் என்பதை மறந்துவிடமுடியாது.

"சாலையிலே ரெண்டு மரம்
சர்க்காரு வெச்ச மரம்
ஓங்கி வளர்ந்த மரம்

என் தங்க ரத்தினமே
அது எனக்குத் தூக்குமரம்"[40]

என்பதுபோன்று தற்கொலையை நாடும் அளவுக்கு உளத்தாலும் உடலாலும் துன்புற்றிருக்கின்றனர்.

தமிழர்போலவே சீனரும் வாழ்வுநாடிப் புலம்பெயர்ந்து இங்கு வந்தனர் எனினும் அவர்கள் விடுதலை உணர்வோடு வந்தனர்; நிமிர்ந்த நிலையோடு கடுமையாக உழைத்துச் சொத்துடைமையைத் தேடிக்கொண்டனர். மரம் வெட்டவோ, ஒடி கொளுத்தவோ, சாலை போடவோ, தோட்டம் அமைக்கவோ அவர்கள் உடன்படவில்லை. அதனால் அவர்கள் கவிதைகளில் அமெரிக்கக் கறுப்பர் கவிதைகளில் வடியும் செந்நீரையோ, தமிழர் பாடல்களில் கசியும் கண்ணீரையோ காணமுடியவில்லை. சீனர், ஒருவர் அன்று இந் நாட்டைப்பற்றி உற்ற உணர்வை இங்ஙனம் வெளிப்படுத்துகிறார்:

"யாரும் ஏறிட்டுப் பார்க்காத பகுதி
அங்குக் குடிகொண்டிருப்பது வறுமையே!
வெள்ளம் தொற்று நோயெல்லாம்
இயற்கை வழங்கும் பரிசுகள்!
தண்ணீர் அங்கு வருவதில்லை!
மினுக்கும் மெழுகுவர்த்தி!
அதுவே விளக்கு!
இதுதான் எம் சிற்றூர்"[41]

தமிழர் கறுப்பரைப் போல் சங்கிலிகளால் பிணைத்து இழுத்துச் செல்லப்படவில்லை எனினும் ஆங்கிலேயரைப் போல் (ஆஸ்திரேலியாவுக்கு) மண்ணாசை கொண்டு செல்லவில்லை எனினும், "வறுமை, அடிமைத்தன்மை போன்ற கொடுமைகளிலிருந்து விடுபட்டு, உழைத்து வயிறார உண்டு நாலுகாசு சேர்க்கலாம்" என்ற எண்ணத்துடனேயே வந்தனர். மேலும் "மலாயா சொர்க்கபூமி" என்று கூறியோர் பொய்யை மெய்யென்று நம்பியும் வந்த மக்கள் பட்ட துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. யானை, புலி, கரடி போன்ற கொடிய விலங்குகள், குருதி உறிஞ்சும் அட்டைகள், கொடிய நோயை ஏற்படுத்தும் மலேரியாக் கொசுக்கள் நிறைந்திருந்த இருள் அடர்ந்த காடுகளே அவர்கள் கண்ட காட்சிகள்.

அப்பேர்ப்பட்ட மண்ணை வளமான நாடாக்க வேண்டிய கடமையை நினைத்தபோது அவர்கள் உடலும் மனமும் நடுங்கின. எனினும் வேறு வழியில்லை. புதிய மின்சாரக் கருவிகளற்ற அக்காலத்தில் உடல் உழைப்பாலேயே அனைத்தும் செய்யவேண்டியதாயிற்று. அந்நிலையிலும் வஞ்சகமற்ற நெடிய உழைப்பால் நாட்டை வளமாக்கினர்.

சீனர் நிலை

சீன இனத்தவரும் இங்குப் பிழைப்பு நாடிப் புலம்பெயர்ந்து வந்தவர்களே எனினும், அவர்கள் நிலை வேறு; அவர்கள் கடுமையாக உழைக்கக் கூடியவர்களே என்றாலும் பிறருக்காகத் தங்களை அழித்துக் கொள்ள இசையாதவர்கள்; சொந்தக்காலில் நிற்கவேண்டுமென்று எண்ணுபவர்கள். அவர்கள் பெரும்பாலும் ஈயம் அலசும் தொழிலிலும் வணிகத்திலும் மிகுதியாக ஈடுபட்டனர். காடழித்து நிலத்தைப் பண்படுத்தி நாட்டை வளப்படுத்திய பெருமை தமிழரையே சாரும்.

நேர வரம்பற்ற வேலை, குறைந்த ஊதியம், போதிய உணவு உடை இன்மை, தேவையான ஓய்வு உறக்கமின்மை போன்றவற்றோடு அடக்கு முறையும் சேர்ந்து அன்றைய தமிழர் வாழ்வைச் சீர்குலைத்தன.

கள்ளங்கபடமற்ற உழைப்பைக் கொட்டிய அந்த வணக்கத்திற் குரிய மக்கள் குடியிருப்பதற்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்த குடிசை களும் வாழ்வதற்குத் தகுதியற்றதாய் இருந்தன. சுற்றுப்புறச் சூழலும், புல்புதர் மழைநீர்த் தேக்கம் நிறைந்து கொசுக்களும், நச்சு உயிர்களும் சூழ்ந்திருந்த அவலநிலையில் இருந்தது. இக் கொடிய சூழலில் ஓர் உயர்ந்த சமுதாய மலர்ச்சிக்கு வழியில்லாதிருந்தது.

இத்தகைய இரங்கத்தக்க கொடிய சூழலில் தொடங்கிய தமிழர் வாழ்வு இங்கு மூன்று கட்டங்களாகப் பிரித்து நோக்கப்பெறுகிறது.

1. போருக்கு (1941) முந்திய, போர்நடந்த காலம் (1945 வரை)
2. போருக்குப் பிந்திய காலம் (1946-56)
3. விடுதலைக்குப் பிந்திய காலம் (1957-க்குப்பின்)

மலேசியத் தமிழர் வாழ்வில் குடியேறிய காலம் முதல் உலகப் போர்க்காலம் வரை மிகக் கடுமையான காலமாகும். இக் காலகட்டத்தின் பெரும்பகுதி நாட்டுச் சீரமைப்பிற்கே செலவாயிற்று. இரப்பர்த் தோட்டங் களும், தென்னந்தோப்புகளும், தேயிலைத்தோட்டங்களும், செம்பனைத் தோட்டங்களும் உருவாயின. அப்பொழுது முழுக்க முழுக்க அனைத்தும் வேளாண்மையையே மையமாகக் கொண்டு விளங்கின. அக்காலச் சமுதா யத்தில் எழுச்சியற்ற அடிமை மனப்பான்மையே நிறைந்திருந்தது. எல்லாம் 'விதி' என்று நொந்துகொள்ளும் மூடநம்பிக்கை தலைதூக்கி நின்றது. வஞ்சகமற்ற உழைப்பை வழங்கவும் தயாராயிருந்த தமிழர் தோட்டப்புறத்தை விட்டு அப்பால் சென்று பிழைக்கும் வாய்ப்பற்றிருந்தனர். சமுதாயத்திற்கு வழிகாட்ட நல்ல தலைமை அன்றில்லை. அரசியல் தொடர்போ, சமுக அமைப்போ, தொழிற்சங்க அமைப்போ துளிர்விடவில்லை. ஓய்வு ஒழிச்ச

லின்றிக் காலை முதல் மாலை வரை மாடுபோல் உழைக்கவும், இரவில் சிறிது உறங்கவுமே அன்று பொழுது சரியாக இருந்தது. எதனைப்பற்றியும் சிந்திக்கவோ புதியன புனையவோ சூழல் இடந்தரவில்லை.

வெள்ளைக்கார முதலாளிகளின் அடக்குமுறை, அவர்கள் முகவர்கள் போல் செயற்பட்ட 'கிராணிமார்' (கணக்கர்), அவர்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றக் காத்திருந்த கண்காணிமார்களுமே தோட்டப்புற மக்களை ஆட்டிப் படைத்தனர்.

அப்போதைய பொருளியல் நிலையை எண்ணும்போது துன்பமே மிகும். தோட்ட நிருவாகங்களுக்குச் சொந்தமான குடியிருப்பில் வாழ்க்கை. அங்கே அவர்கள் தோட்டங்களில் வேலை, சம்பளம் என்ற பெயரில் பெற்ற சிறுதொகை. அது அரைவயிற்றுக் கஞ்சிக்கும் போதாமல் கண்காணிமாரிடம் கடன் வாங்கும் அவலம், தங்களுக்குச் சொத்து என்று சொல்லத்தக்கது உழைக்கும் திறன்கொண்ட தங்கள் உடல்கள் மட்டுமே என்றிருந்த அன்றைய பொருளியல் நிலை, சொல்லும் தரமன்று.

தோட்ட நிருவாகம் குடியிருப்பு வழங்கியதென்றாலும் ஒரு குடும்பத்துக்கு ஒரு சிறிய அறை என்ற அளவிலேயே குடும்ப உறுப்பினர் அனைவரும் தங்கவேண்டும். இச் சூழல் உயர்வான ஒரு சமுதாய அமைப்புக்கு இடந்தரவில்லை.

எதிர்காலத் தலைமுறைக்குக் கல்வி என்று பார்க்கும்போது அங்குப் பாலை நிலத்தில் எங்கோ கசியும் சின்னஞ்சிறு நீரூற்றாகவே இருந்தது. முறையான பள்ளிகள் அமையவில்லை. ஓரளவு படித்தவர்கள் ஆசிரியராகிக் கல்வி என்ற முறையில் எதனையோ சொல்லி வைத்தனர். பெற்றோர்க்கு உதவ, வேலை இடங்களுக்குச் செல்லும் பிள்ளைகளைத் தவிர்த்துச் சிலர் அங்கு ஏதோ படித்தனர்.

அன்றைய தோட்டப்புறங்களில் கோயில்களைச் சிறிய அளவிலாவது நிறுவத் தோட்ட நிருவாகம் தவறவில்லை. ஆனால், அங்கே சமய முறையிலான வழிபாடு நடைபெறவில்லை. தோட்டப்புறங்களில் அம்மன் கோவில்களும், சிறுபான்மை முனியாண்டி, மதுரைவீரன் கோயில்களும் அமைந்திருந்தன; ஆண்டாண்டிற்குத் திருவிழா நடைபெறவும் தவறவில்லை. பட்டணப்புறங்களில் அமைந்ததுபோல் தோட்டப்புறங்களில் முருகன், சிவன், பெருமாள் கோயில்கள் பரவலாய் அமையவில்லை. எனினும் முருகவழிபாடு வீட்டளவில் இருந்துவந்தது.

மலாயாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழர் சமுதாய, சமய வாழ்வு போன்றே அக்காலத்தில் மலாயாவின் அண்டை நாடான வட சுமத்திராவில் குடி

யேறியோர் வாழ்வும் அமைந்திருந்தது. இதுகுறித்து அ.வீரமணி இங்ஙனம் கூறுகின்றார்:

"தோட்டப்புறத் தமிழர்கள் ஒப்பந்தக் கூலிகளாய் வாழ்ந்தாலும் தங்கள் மொழியையும், கலாசாரத்தையும் கைவிட்டுவிடவில்லை; தோட்டந்தோறும் மாரியம்மனுக்கும், முருகனுக்கும், முனீஸ்வரனுக்கும், காளியம்மனுக்கும் நிலைத்திருக்கும் சின்னங்களை எழுப்பினர். அன்றாடப் பொருளியல் வாழ்வு அவர்கள் பாரம்பரியத்திற்குப் பெருமை தராவிட்டாலும், அவர்கள் எழுப்பிய கோயில்கள், பின்பற்றிய கலாசாரக் கோட்பாடுகள் முதலியவை இதர இனத்தவர் அவர்களை மதிக்கச்செய்தன. தஞ்சாவூர்க் கிராமங்களின் மறுபிறப்போ என வியக்கும் வகையில் திருவிழாக்களைக் கொண்டாடினர்".[42]

மேற்படி நிலைக்கு மாறுபடாத வகையிலேயே மலாயாத் தமிழர் வாழ்வும் அமைந்திருந்தது. தமிழகக் கிராமம் ஒன்றனைப் பெயர்த்து வந்து வைத்தது போலவே இங்குத் தமிழர் வாழ்வுமுறை அமைந்திருந்தது என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். காலப்போக்கில் நிலை சற்றே மாறுபடினும் இன்னும் பல தோட்டங்களில் அந் நிலையைப் பேரளவு காணலாம். ஆனால், வடசுமத்திராத் தமிழர் வாழ்வு முற்றும் மாறுபட்டு விட்டது. அவர்கள் தாய்மொழியை இழந்துவிட்டனர்; பண்பாட்டிலும் மாறுபட்டுவருகின்றனர்.

மலேசியத் தமிழரின் பண்பாட்டு, பழக்கவழக்கம் என்று நோக்கும் போது தம் தாயகத்தில் கடைப்பிடித்த பழக்கவழக்கங்களையும் பண்பாட்டு முறைகளையும் பின்பற்றி வந்தனர். பிறப்பு, இறப்புச் சடங்குகள், பூப் பெய்திய பெண்களுக்கு உரிய சடங்குகள், திருமணச் சடங்குகள் எல்லாம் எவ்வகை மாற்றமுமின்றி அவ்வாறே நடைபெற்றன. மண்பானை வனைவோர், இறப்புச் செய்தி சொல்வோர், இடுகாட்டில் பிணங்களை அடக்கம் செய்யும் வெட்டியான் என அனைத்து வகையினரும் ஒரே தோட்டத்தில் இருந்தனர். அதே நேரத்தில் தொழிலாளர்களைத் தலைநிமிரச் செய்ய விடாதிருக்க, கள்ளுக்கடைகளை ஏற்படுத்தத் தோட்ட நிருவாகம் தவறவில்லை. ஓயாது உழைத்து வீடு திரும்பியதும் மது அருந்தி மயங்கிக் கிடந்தால் வேறு சிந்தனை, முற்போக்கு எண்ணம் போன்றவை எழா என்னும் நோக்கிலேயே கள்ளுக்கடைகள் ஏற்படுத்தப்பட்டன. சேமிக்க வழியில்லாது செய்யவும் கள்ளுக்கடைகள் துணைபோயின.

காலம் ஆங்கில முதலாளிகளுக்குத் துணையாகவே சென்று கொண்டிருந்தது. தோட்டப்புறச் சமுதாயத்தின் ஏதிலிகள் (அநாதை) போல் விடப்பட்டிருந்தனர். சமுதாயத்தில் எழுச்சியோ உரிமை கோரும் கிளர்ச்சியோ தோன்றவில்லை. தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக அன்று

எந்த ஓர் அமைப்பும் உருவாகவில்லை. நம்பிக்கை ஊட்டும் குரல்களும் எழவே இல்லை. பொழுதை மகிழ்ச்சியோடு கழிக்கவும், அன்றைய தோட்டப் புறத்தில் வாய்ப்பில்லை. ஆண்டுக்கொருமுறை திருவிழா நேரத்தில் தெருக்கூத்து, ஒயில்கும்மி, கரகாட்டம் போன்ற நாட்டுப்புறக் கலைகள் தலைகாட்டும் செவ்வியல் கலைகள் அங்குச் செல்லவே இல்லை. மிகைநேர வேலை, வாரத்தில் ஏழுநாளும் பணி. இச் சூழலில் கலை, இலக்கியம்பற்றி எண்ண முடியுமா? ஓரளவு படித்தவர்களுக்குப் புத்தகமோ, இதழ்களோ கிடைக்காத வறுமை அங்குத் தாண்டவமாடியது.

இச் சூழல் கொண்ட சமுதாய அமைப்பு எங்ஙனம் இருந்திருக்கு மென்று கற்பனை செய்து பார்த்தால், நிலவில்லாத இரவு வானமாகவே தெரிகிறது. மலாயாவை ஆண்ட அரசு வெள்ளையர் அரசு என்பதாலும், மூலத்தாயகமான இந்தியாவை ஆண்டவர்களும் அவர்களே ஆனதாலும் அங்கிருந்தும் ஆதரவு கிட்ட வழியில்லை. அதனால் தொழிலாளர் வாழ்வில் சூழ்ந்த இருள் அகலாமலேயே தொடர்ந்தது.

இங்கு இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். காடழிக்கும்போது கொடிய விலங்குகளால் எத்தனையோ பேர் மாய்ந்துள்ளனர்; இடருக் குள்ளாகி இறந்துள்ளனர்; மலேரியாக் காய்ச்சல் போன்ற கொடிய நோய்களால் மாண்டுள்ளனர். தொழிலாளர்களுக்கு ஏற்படும் பேரிடருக்குரிய இழப்பீடு வழங்கும் திட்டமும் அன்றி இந் நிலையைக் கவிஞர் வீரமான் பாடலொன்று விளக்குகிறது:

“வாய்பிளந்த மலைப்பாம்பு
வளைபெயர்ந்த கருநாகம்
பேய் உலவும் வெளிக்காடு
பீதியன்று முடிந்ததுண்டோ?
புதர் அடர்ந்த மேடுபள்ளம்
புலி உலவக் கூடுபயம்
உதற வைக்கும் பனியிருட்டு
.... ”![43]

இவை மட்டுமா? தொழிலாளர் நோயில் விழும்போது நோய்களைக் குணப்படுத்த முறையான மருத்துவமனை, மருத்துவர் இல்லை. இந்த அவலங்களால் நாட்டு உருவாக்கத்தில் உயிரிழந்த தமிழர் - இந்தியர் எண்ணிக்கை 12 இலட்சம் பேர்![44] என்று எண்ணும்போது மனம் அடையும் துன்பத்திற்கு அளவில்லை.

எதற்கும் ஒரு முடிவு உண்டு அன்றோ? 1900 வரை இங்ஙனமே நடந்துகொண்டிருந்த தோட்டப்புறத் தமிழர் வாழ்வில் காலப்போக்கில்

எழுச்சி உணர்வுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் தலைகாட்டத் தொடங்கின. 1910, 1920களில் தொழிற்சங்கங்கள் அமைக்கும் முயற்சிகள் தோன்றின. சில இடங்களில் வேலை நிறுத்தங்களும் நடந்தன. அவை கடுமையான நடவடிக்கைகளால் ஒடுக்கப்பட்டன.

1920-ல் சீனர்கள் தங்களுக்குள் சிறுசிறு அமைப்புகளைத் தோற்று வித்துக் கொண்டனர். இந்தியர்களுக்கு இல்லாத ஒரு பாதுகாப்புநிலை சீனர்களுக்கு இருந்துவந்தது. அவர் தாயகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் அவர்களுக்கு ஊக்கம் நல்கியது. அதனால் மலாயாப் பொது வுடைமைக் கட்சி (M.C.P) உருவாயிற்று. மலாயாவிலிருந்த சீனத் தொழிலாளர்கள் இக் கட்சியின் (கம்யூனிஸ்ட்) செல்வாக்கிற்கு உட் பட்டனர்.[45] ஆங்காங்கே போராட்டங்கள் முளைத்தன. அதனால் அச்சமும் சினமும் அடைந்த ஆங்கிலேயர் அவற்றை நசுக்கினர்.

1926 வரை தோட்டங்களில் இருந்த கொடிய நிலை சற்றே தளர்ந்தது. குடியிருப்புப் போன்ற வசதிகளைச் சீர்ப்படுத்துவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் தரமான ஒரு நிலை ஏற்பட்டதென்று சொல்ல முடியாது.

1930-ல் இந்திய - தமிழ்த் தொழிலாளர்களிடையே ஓர் எழுச்சி பீறிட்டது. அதனால் மலாயா மத்திய இந்திய சங்கம் (Central Indian Association of Malaya -C.I.A.M) உருவாயிற்று. பொதுவாக இஃது இந்தியர் சங்கம் எனினும் தொழிலாளர் பிரச்சினையில் தலையிட்டது. இதனை ஆர்.எச். நாதன் முன்னின்று இயக்கினார். இவ்வியக்கம் அனைத்திந்தியத் தொழிலாளர் சங்கத்தோடு தொடர்புகொண்டு இங்குள்ள நிலைமைகளை எடுத்துக்கூறிப் பரிகாரம் காண முயன்றது. அங்கிருந்து ஒரு தூதுக்குழுவி னரையும் வரவழைத்து இங்கிருந்த நிலைமைகளைக் கண்டறிய ஏற்பாடு செய்தது. அந்த முயற்சியாலும் இங்குத் தொழிலாளர் உற்ற துயரங்கள் குறையவில்லை.

மிகக் குறைந்த சம்பளம் பெற்றுவந்த இந்தியத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு வேண்டும் என்று அச் சங்கத் தலைமை கோரிக்கை விடுத்தது (பட்டியல் 9 காண்க). அதனால் இந் நாட்டுத் தொழிலாளர்களின் நிலைமைகளைக் கண்டறியப் பிரிட்டிசு அரசு ஒரு பேராளரை அனுப்பியது (1936 திசம்பர்).

தோட்டத் தொழிலாளர்க்கு வழங்கப்பட்ட சம்பளம்

திகதி	இடம்	நாள் சம்பளம் காசுகள்	
		ஆண்	பெண்
9.2.1924	கோலசிலாங்கூர்	35	27
10.8.1924	கோலசிலாங்கூர், கிள்ளான், கோலலங்காட்	40	30
5.10.1924	கோலசிலாங்கூர், கிள்ளான் கோலலங்காட்	40	30
9.3.1927	கோலசிலாங்கூர், கிள்ளான் கோலலங்காட்	50	40
9.5.1927	லிப்பிங், ரவூப், பெந்தோங், தெமாமலோ	58	46
29.10.1928	உலுகிளந்தான்	58	46
20.2.1929	கோலசிலாங்கூர், கிள்ளான் கோலலாங்காட்	50	40
16.7.1930	கோலசிலாங்கூர், கிள்ளான் கோலாலங்காட்	40	32
31.7.1930	லிப்பிங், ரவூப், பெந்தோங், தெமாமலோ	47	37

பட்டியல் - 9

பிரிட்டிசு இந்திய சர்க்கார் பிரதிநிதியாய்ச் சீனிவாச சாஸ்திரி மலாயாவிற்கு வந்தார்; ஐரோப்பிய முதலாளிகள் வீட்டில் விருந்துண்டார்; “மலாயாவில் நாளொன்றுக்கு ஆணுக்கு 50 காசும், பெண்ணுக்கு 40 காசும் சம்பள விகிதம் சரியாய் இருக்கும்” என்று சொல்லிச் சென்று விட்டார். அஃது இந்தியருக்குப் பெரும் வயிற்றெரிச்சலை உண்டு பண்ணிற்று. இந்தியர்களின் இதரப் பிரச்சினைகள்பற்றிச் சாஸ்திரியார் கவனிக்கவே இல்லை.

சீனிவாச சாஸ்திரி வஞ்சக அறிக்கையால் (Report on the Condition of Indian Labour in Malaya) இந் நாட்டுத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு அளவே இல்லை. இரப்பர் விலை ஏறிய நேரத்தில் தொழிலாளர் சம்பளம் இருந்ததைவிட ஆணுக்கு 40 காசு, பெண்ணுக்கு 32 காசுகளாய்க் குறைந்தது. ஆனால், சீனத்தொழிலாளர் சம்பளம் ஒன்றரை மடங்கு மிகுதியாய் இருந்தது. (பட்டியல் 9 காண்க) அதனால் தொழிலாளர் களிடையே பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது.

சீனிவாச சாஸ்திரிக்குப் பின் முன்னாள் இந்திய விடுதலைப் போராட்டத் தளபதி நேரு வந்தார் (1937 மே). அவர் இந்தியக் குடியேற்றத் தொழிலாளர் நிலையை ஆராய்ந்து ஒரு பரிந்துரை வழங்கினார். அதனாலும் இந்தியத் தொழிலாளர்களுக்கு நன்மை விளையவில்லை. நிலைமை சீரடையாததால் ஆங்காங்கே கிளர்ச்சிகள் முகிழ்த்தன (1940 மார்ச்சு). குறிப்பாகக் கிள்ளான்-அதனையொட்டிய பகுதிகளில் பெரியதொரு போராட்டம் வெடித்தது. "சீனத்தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போலவே தங்களுக்கும் சம்பளம் வழங்க வேண்டும்" என்னும் கோரிக்கையை முதலாய் வைத்துத் தொடர்ந்து தொழிலாளர் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ்வதற்கு ஏதுவான 14 கோரிக்கைகளுக்காகப் போராட்டம் நடந்தது. எனினும், அவற்றை ஒரு பொருட்டாக மதிக்காமல் இகழ்ச்சிப்படுத்திக் கோரிக்கைகளைத் தோட்ட நிருவாகங்களும் ஆங்கில அரசும் புறக்கணித்தன.

இம் முறை தொழிலாளர்கள் பின்வாங்கவில்லை. தோட்ட நிருவாகச் சார்பாய் அரசு எத்தனையோ அடக்குமுறைகளை ஏவிவிட்டது. எனினும் தொழிலாளர் அஞ்சாது எதிர்ப்பட்ட துன்பங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டனர்; வன்முறைக்கு வணங்காது வேலைநிறுத்தத்தில் இறங்கினர். வேலைநிறுத்தப் போராட்டம் 15 நாள்களுக்குமேல் நடந்தது. வெறுங்கையினரான தொழிலாளர்மேல் காவல்துறை பாய்ந்தது; ஆயுதம் ஏந்திய போர்ப்படையும் (இராணுவம்) தன் வலிமையை வெளிப்படுத்தியது; கவச இயங்கிகள், டாங்கிகள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டன. எண்ணற்றோர் சிறைபிடிக்கப்பட்டனர். பலர் இன்னுயிர் விட்டனர்.

இடைவிடாத - பின்வாங்காத தொழிலாளர் போராட்டம் இறுதியில் ஓரளவிற்கு வெற்றியைத் தந்தது. இந்தியத் தொழிலாளர்களுக்கு 5 காசு ஊதிய உயர்வு தர நிருவாகம் முன்வந்தது. ஆனால், பிரிட்டிஷ் அரசோ போராட்டத்தை முன்னின்று நடத்திய தலைவர் ஆர்.எச். நாதனையும், டி. சுப்பையாவையும் கைதுசெய்து நாடுகடத்திற்று.

மலாயாத் தொழிற்சங்க வரலாற்றில் அதற்கு முன்பு இத்தகு போராட்டம் நடந்ததில்லை. ஆர்.எச். நாதனைப் போன்ற ஈக உணர்வும் அஞ்சாநெஞ்சமும், கொள்கைப்பிடிப்பும், ஒப்புக்கொடுக்கும் மனமும் கொண்ட தலைவர் தோன்றியதில்லை. இவர் தமிழ்நேசன் நாளிதழின் முன்னாள் துணையாசிரியர்களுள் ஒருவர் என்பதும் சிறந்த எழுத்தாளர் என்பதும் குறிப்பிடத்தக்கன.

மேற்படி போராட்டத்தில் 5 பேர் மாண்டனர்; 386 பேர் கைதாயினர்; 21 பேர் நாடுகடத்தப்பட்டனர்; 95 பேர் தன்னிச்சையாக இந்தியா திரும்பினர்; 49 பேர் கிள்ளான் வட்டாரத்திலிருந்து வெளியாக்கப்பட்டனர்;[46] இதனைத் தொடர்ந்து பல இடங்களில் போராட்டங்கள் தொடர்ந்தன.

தொழிலாளர் நலனுக்காகப் பல போராட்டங்கள் நடத்திய தியாகி கணபதியைக் கைத்துப்பாக்கியும் 6 சுற்றுத் தோட்டாக்களும் வைத்திருந்தார் (அவற்றைக் காவல் நிலையத்தில் ஒப்படைக்க எடுத்துச் சென்ற போது) என்று குற்றம்சாட்டித் தூக்கில் போட்டது பிரிட்டிஷ் அரசு (4.5.49). அவரைப்போல் வேறு சிலரும் தூக்குக் கயிற்றுக்கு இரையாயினர்.

ஓர் அருஞ்செயல்

இக் காலகட்டத்தில் நடந்து, நிலையான பயனையும், புகழையும் சேர்த்துக்கொண்டிருக்கும் ஓர் அருஞ்செயல்பற்றிக் குறிப்பிடுவது இன்றியமையாததாகும். நெகிரி செம்பிலான் மாநிலத்தில் 1932-ல் இந்தியர் கூட்டுறவுசங்கம் உருவாக்கிய இராமநாதபுரம் என்னும் சிற்றூரே அந்த அருஞ்செயலாகும்.

எத்தனையோ வாய்ப்பு, வசதி, வளம் மிகுந்த இக்காலத்திலேயே பல கூட்டுறவு முயற்சிகள் தோல்வியைத் தழுவும்போது, அக்காலத்திலேயே ஒரு புதிய கிராமத்தை உருவாக்கிய அந்தக் கூட்டுறவு சங்கச் செயலவையினரை எத்துணைப் பாராட்டினாலும் தகும். இது மலேசிய இந்தியர் நிலவுடைமைத்திட்ட வெற்றியின் குறிப்பிடத்தக்க ஒரு தொலைக்கல்லாகும்.

நெகிரி செம்பிலான் மாநிலத்தில் ‘சுவா’ என்னும் காட்டுப்பகுதியில் 243 ஏக்கர் குடியிருப்புக்கு ஏற்ற நிலமாக அடையாளம் காணப்பட்டது. அந் நிலப்பகுதி இங்கே 20 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்து வேலையிழந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்காக அரசு ஒதுக்கித்தந்ததாகும். 69 குடும்பங்கள் இந் நிலத்தில் குடியேறின. 39 குடும்பங்களுக்குத் தலா 3 ஏக்கரும், 14 குடும்பங்களுக்குத் தலா 2 ஏக்கரும் தரப்பட்டன.

தொழிலாளர் குடும்பங்கள் தங்கள் நகைகளையும், கால்நடைகளையும் விற்று நிலத்தைப் பண்படுத்தும் முயற்சியில் இறங்கினர். கூட்டுறவு

அதிகாரிகள் அரசாங்க விவசாய அதிகாரிகளுடன் சுகாதார அதிகாரிகளும் ஒத்துழைப்புத் தந்தனர். நகர்ப்புற இந்தியர்களும் அவர்களுக்கு உணவு முதலியன கொடுத்து உதவினர். கால்வாய், சாலை வசதிகள் முறையாய் அமைந்தன. குடியேறியோர் தங்கள் நிலத்தில் காய்கறி, கரும்பு, தென்னை, பழமரங்கள் பயிரிட்டதோடு ஆதாயம் தரும் பன்றிப்பண்ணையும் வைத்தனர்; செல்வச் சிறப்புப் பெற்றனர். வழிபாட்டுக்குக் கோயில் அமைந்தது. கல்வி கற்க 'முகுந்தன் தமிழ்ப்பள்ளி' அமைந்தது.[47] இன்றும் அஃது உரிமைமிக்க தமிழர் சிற்றூராகத் தலைநிமிர்ந்து நிற்கிறது. இந்த உருவாக்கத்திற்கு ஒத்துழைப்புத் தந்த கூட்டுறவு சங்க அதிகாரிகள், மலாயாவில் இருந்த இந்திய அரசின் முகவர், மாவட்ட அதிகாரி ஆகியோரையும், சமுதாயத்தை வழிநடத்திய தலைவர்களையும் மனம் நன்றியோடு நினைவுகூர்ந்து வணங்குகிறது. அந்த எடுத்துக்காட்டு மற்ற இடங்களிலும்-அந்தக் கூட்டுறவு நிலவுடைமை அலையைப் பரவச் செய்யவில்லையே என்றும் மனம் ஏங்குகிறது.

இரண்டாம் உலகப்போர் (1939 - 45)

போர்க்காலத்திற்குப் பிந்தைய வாழ்வைக் கண்ணோட்டமிடுமுன் போர்மேகங்கள் சூழ்ந்து நாடு இருளடைந்த காலத்தைப்பற்றிச் சிறிது நோக்க வேண்டும். இக் காலம் எக்காலத்தையும்விட அவலங்கள் நிறைந்த காலமாகும். இக் காலத்தில் ஏற்பட்ட பஞ்சமும் பட்டினியும் எக் காலத்திலும் ஏற்பட்டதில்லை. உயிரிழப்பும் இக்காலத்தில் மிகுதி. சமுதாயச் சீரழிவுபற்றிச் சொல்லுதல் அத்துணை எளிதன்று.

இந்த இரண்டாம் உலகப்போருக்கு வாணிகப் போட்டியே காரண மாகும். நேசதேச நாடுகளாக முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரான்சு, ரஷ்யா (போர்க்கால ஒப்பந்த நாடு) போன்ற நாடுகள் ஓர் அணியாகவும், அச்சு நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் நாடுகள் மற்றோர் அணியாகவும் இருந்து நடத்திய மிகக் கொடிய போர் அது; உலகில் அளவற்ற பேரழிவை ஏற்படுத்திய போரும் அதுவே ஆகும்.

அதன் தொடர்ச்சியில் இங்கு நடந்த போர் பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றித் தன்னாட்சியை நிறுவச் சப்பான் மேற்கொண்ட போராகும். மேலும் ஆசியாவை ஆசியர்களே ஆளவேண்டும் என்னும் நோக்கமும் இந்தப் போருக்கு அடிப்படையாய் இருந்தது என்பதனை வரலாற்றுக் குறிப்புகள் காட்டுகின்றன. சிங்கப்பூரில் சப்பானியர் பார்வை (Singapore - The Japanese Version) என்ற நூலில் கர்னல் மாசானோபு சூஜி (Masanobu Tsuji) என்ற இராணுவத் தளபதி தம் அனுபவத்தை விளக்கும் போது இதனை வெளிப்படுத்துகிறார்:

"எண்ணெய் இல்லாமல் விமானங்கள், போர்க்கப்பல்கள், வாகனங்கள் இயங்கமுடியாமல் பிரிட்டனும், அமெரிக்காவும் உலகின் பெரும்பகுதி நாடுகளில் உள்ள எண்ணெய் வளங்களை ஆக்கிரமித்துக் கொண் டிருப்பதோடு, அதன் பயனைச் சப்பான் அனுபவிப்பதற்குத் தடையாகவும் விளங்குகின்றன. தென்கிழக்கு ஆசிய மண்டலங்களில் இந்த எண்ணெய் வாங்கும் உரிமையையும், சப்பானிடமிருந்து அவை பறித்துக் கொள்கின்றன.

இரப்பரும், ஈயமும் இராணுவப் பயன்பாட்டிற்கு மிகவும் அவசிய மானவை. அவை தென்கிழக்கு ஆசியாவின் வற்றாத செல்வங்கள். இவற்றை முறையான வணிக வழிகளில் அடையத் தடையாக நிற்பவர்கள் ஆங்கிலேயர்கள், ஆங்கிலோ அமெரிக்கர்கள். இந்த இரு நாடுகளின் போக்கே நாம் படையெடுக்கக் காரணமாய் அமைகிறது. ஜப்பான் இந்தப் பகுதிகளை வெற்றிகொள்வதன் மூலம் எண்ணெய்யும், இரும்பும், இரப்பரும் நம் வசப்படுவதோடு அமெரிக்காவின் முக்கியக் கேந்திரப் பகுதிகளை நாம் தாக்கி வெல்லவும் முடியும். இதனை உணர்ந்தே அமெரிக்கா, ஜப்பானின் தென் வட்டார முன்னேற்றத்தைத் தடுக்கிறது.

தூரக் கிழக்கின் அமைதி ஒன்றே சப்பான் அரசின் கொள்கை யாக அமைகிறது. ஆசிய நாட்டை வெள்ளையரிடமிருந்து மீட்டு அதனை ஆசியர் கையில் ஒப்படைப்பது ஒன்றே சப்பானிய அரசின் கொள்கையாக அமைகிறது. ஆசியாவில் நாம் அமைதியை நிலைநாட்டும்போது உலக அமைதி தானே பிறக்கும்"[48] என்பது அவர் வெளியிடும் செய்தியாகும்.

இப் போர் இங்குக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்திற்று; தென்னிந்தியத் தொழிலாளர் வாழ்வு மிகமிகக் கடுமையாகச் சிதைவுற்றது.

தோட்டங்களில் வேலையில்லாததால் ஏற்பட்ட சூழல், வறுமையின் முழுவடிவையும் காட்டிற்று. உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் மக்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. அந் நேரத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலப்பகுதிகள் சிறிது நம்பிக்கையை ஊட்டின. தமிழகத்தில் கற்றிருந்த வேளாண்மைத்திறன் மக்களுக்குக் கைகொடுத்தது. நெல், கேழ்வரகு, சோளம், காய்கறிகள் பயிரிடப்பட்டன; கால்நடைகளும் மக்களுக்குப் பலவகைகளில் உதவின; நீர்வாழ் மீன்களும் உணவாயின.

முதலில் உடனடியாகப் பயன்தரும் மரவள்ளி, சர்க்கரைவள்ளிக் கிழங்குகள் பயிரிடப்பட்டன. சப்பான் காலத்து அமுத ஊற்று என்று மரவள்ளிக் கிழங்கைக் குறிப்பிடலாம். மரவள்ளிக்கிழங்கு பலவகை உணவு உருவாக் கங்களுக்குப் பயன்பட்டது. பல்வகைக் கூலங்கள் (தானியம்) விளைந்து மக்கள் உயிர்களைப் போகவிடாமல் காத்தன. உயிர் வாழ்க்கைக்கு இப்படி

ஏதோ சில வாய்ப்புகளை மக்கள் உருவாக்கிக் கொண்டனர். எனினும் கல்விக்கூடங்கள் மூடப்பட்டதால் சிறார்களின் கண்களில் அறிவொளி பாய வாய்ப்பற்றுப் போயிற்று.

வானூர்திகள் பொழியும் குண்டுமழைக்கிடையே, புகை மூட்டத்திற்கிடையே, பீரங்கி முழக்கத்திற்கிடையே சிறு சிறு குற்றங்களுக்கெல்லாம் தலையைச் சீவும் கொடுமைகளும் நடந்தன. உள்நாட்டில் சீனர்கள் சப்பானியர்களால் பெரிதும் கொடுமைப்படுத்தப்பட்டனர். மலாய்க்காரர்களுக்குச் சப்பானியர் பெரும் துன்பம் ஏதும் தரவில்லை. காந்தியடிகள், சுபாஷ்சந்திரபோஸ் போன்ற பிரிட்டிஷ் எதிர்ப்புத் தலைவர்களின் பின்னணி இருந்ததால் சப்பானியர்கள் இந்தியர்களுக்கு நேரடியாகத் தொல்லையேதும் தரவில்லை. ஆனால் ‘மரணம்’ என்னும் அடையோடு கூறப்படும் ‘மரண இரயில்பாதை’ (Death Railway) அமைப்பில் மூன்று இனத்தவரும் அல்லலுக்கு ஆளாயினர்.

தாய்லாந்தின் காஞ்சனபுரியிலிருந்து தென்பர்மாவின் மோல்மின் வரை (Kanchana - Moulmein) மரண இரயில்பாதை (Death Railway) என்று வரலாற்றாசிரியர்கள் வருணிக்கும் தொடர்வண்டிப்பாதை அமைக்கச் சப்பானியர் தமிழரை வலிய இழுத்துச் சென்றனர். அவர்களில் 75 விழுக்காட்டினர் சாகடிக்கப்பட்டனர் என்று வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றனர்.[49]

வயிரம் பாய்ந்த உடல்கொண்ட இளைஞர்கள் 60 ஆயிரம் பேர் (இஃது ஒரு தோராயமான எண்ணிக்கைதான்) மாண்டனர் எனில் சமுதாயம் உற்ற இழப்பு கொஞ்சமா? பல்லாயிரம் குடும்ப மகளிர் கைம்பெண்டிர் ஆயினர்; பல்லாயிரம் கன்னியர் எதிர்காலக் கணவரை இழந்தனர். சமுதாயத்தின் முதுகெலும்பே உடைந்து போனது போன்ற-இமயம் மீறிய துயரத்தை, இக் காலகட்டம் ஏற்படுத்திற்று.

மேற்கண்ட பேரவலங்கள் நிறைந்த இக் காலகட்டத்தைத் தொடர்ந்து, சமுதாயத்தில் முன்பு எப்போதும் இல்லாத ஒரு பேரெழுச்சி ஏற்பட்டதை மறக்க இயலாது. பின்னர்த் தோன்றிய எழுச்சிகளுக்கெல்லாம் இக் காலத்திய சில நிகழ்வுகள் வித்திட்டன.

இங்கே இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் இந்தியாவில் காந்தியடிகள் தலைமையில் அறப்போர் நடந்துகொண்டிருந்தது. அறப்போர்மூலம் வெள்ளையரை வெளியேற்றுவதை விரும்பாத சுபாஷ் சந்திரபோஸ் சப்பானியர் உதவியோடு வீரப்போர் நடத்தத் திட்டமிட்டார். அதற்காக இங்குப் படைதிரட்டினார். தங்கள் மூதாதையர் வாழும் தாயக விடுதலைக்குத் தங்கள் பங்கை வழங்க ஆயிரக்கணக்கான

இளைஞர்களும், இளமகளிரும் முன்வந்தனர். இது நாடெங்கும் எழுச்சிப் பேரலையை உண்டுபண்ணியது. இங்கு 'ராஸ் விஹாரி போஸ்' தலைமையில் இந்திய விடுதலைக் கழகம் (Indian Independant League) உருவாயிற்று. சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் இந்திய தேசிய ராணுவம் (Indian National Army) உருவாயிற்று. இந்தியத் துணைக்கண்டத்தை வெள்ளையரிடமிருந்து மீட்க அத் துணைக்கண்டத்திற்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது முயற்சி இதுவாகும். முதல் முயற்சி (டாக்டர்) செண்பகராமனால் தொடங்கப் பட்டது. இவர் உருவாக்கித் தந்ததே 'ஜெய்ஹிந்த்' (இந்தியா வெல்க) என்னும் வீரமுழக்கம். இவர் 22.9.1908-ல் ஜெர்மன் உளவாளியாகிய சர் வால்டர் வில்லியம் ஸ்டிக்லேண்ட் (Sir Walter William Sdikland) உடன் சேர்ந்து என்.ஜி.எஸ். யார்க் என்னும் கப்பலில் ஏறி இந்தியாவை விட்டு வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய தேசிய ராணுவம் போர்ப்பயிற்சியையும், கட்டொழுங்கையும், ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறைகளையும், தங்களைத் தயார்ப்படுத்தித் தலைமையேற்கும் முறையையும், தன்மான உணர்வையும் கற்றுக்கொண்டது; சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் இம்பால் போர்முனை வரை சென்றது. அங்கிருந்து இந்தியா செல்வதற்கு முன் அறத்திற்குப் புறம்பாக 1945 ஆகஸ்ட் 6, 9ஆம் நாள்களில் அமெரிக்கர் ஹிரோஷிமா (Hiroshima) நாகசாகி (Nagasaki) நகரங்கள் மீது அணுக்குண்டுகளை வீசினர். இக் கொடிய மனிதத் தன்மையற்ற நடிவடிக்கையால் இரண்டு நகரங்களும் தரைமட்டமாயின. அதனால் சப்பான் வலிமை இழந்தது. வேறு வழியின்றித் தோல்வியை ஒப்புக்கொண்டது (15.8.1945). சுபாஷ் சந்திரபோசும் விமான விபத்தில் மறைந்தார்(18.8.1945).

பஞ்சத்தின் கொடுமையை முழுமையாக உணர்த்தி, துன்பத்தின் எல்லையையும் காட்டிய அதேநேரத்தில், எழுச்சிக்கும் வித்திட்டுப் புதியன எதனையும் மலர்விக்காமல் மீண்டும் வெள்ளையருக்கே வாய்ப்பளித்த இக் காலகட்டம் ஓடி மறைந்தது.

போருக்குப் பிந்திய காலம் (1946 - 1956)

பேரழிவையும், உடன் பேரெழுச்சியையும் ஏற்படுத்திய மேற்படி காலகட்டத்தையடுத்துப் படிப்படியாய்ப் பெரும் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. புதிய நம்பிக்கை மலர்ந்தது. திரும்பி வந்த வெள்ளையர்கள் மனமாறுதல்களோடு செயல்படத்தொடங்கினர். மக்கள் எழுச்சியை இனிக் கட்டுப்படுத்த முடியாது எனப் புரிந்துகொண்ட அவர்கள் மக்கள் உரிமை களுக்கு மதிப்புக் கொடுக்கத் தொடங்கினர்.

இக் காலகட்டம் மலேசியத் தமிழர் வாழ்வில் பெரும் மாறுதலுக்கு வழிகோலுவதாய் அமைந்தது. தொழிலாளர்கள் உரிமைக்குப் போராடத் தொழிற்சங்கங்கள் உருவாயின. சமுதாய வளர்ச்சிக்கும், அரசியல் உரிமைக்கும் இயக்கங்கள் தோன்றின; கல்வி மேம்பாட்டிற்கு வழிபிறந்தது. இதனால் போரில் சின்னாபின்னமாகிச் சிதைந்த தமிழர் வாழ்வு, படிப் படியாகத் துளிர்க்கத் தொடங்கியது. சுபாஷ் சந்திரபோஸ் உருவாக்கிய படையில் இடம் பெற்றிருந்தோர் உயிர்த்தெழுந்து புதிய மாறுதலுக்கு வழிகாண முற்பட்டனர். அன்று உருவான அரசியல் இயக்கத்தில் அவர்கள் பெரும் பொறுப்பு வகித்து வழிநடத்தினர்.

தொழிற்சங்க இயக்கங்கள்

வெள்ளையர் ஆட்சி மீண்டும் ஏற்பட்டதும் தோட்டப்புறத் தொழில்கள் தொடங்கின. எல்லாம் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நேரத்தில் மக்கள் உரிமைக்குரல் எழுப்பத் தலைப்பட்டனர். தொழிற்சங்கங்கள் அமைக்க முனைந்தனர். 1945ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முற்போக்கு எண்ணம் கொண்டோர் சிங்கப்பூரில் ஒன்று கூடிப் 'பொதுத் தொழிலாளர் சங்கம்' என்னும் பெயரில் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்தனர். இந்த அமைப்பில் தமிழர், சீனர், மலாய்க்காரர் அனைவருமே பங்கு கொண்டனர். தமிழர்களில் கணபதி, வீரசேனன், மயில்ராவணன், இந்திரஜித், சமரசன், மேகநாதன், ஜீவானந்தன், டாக்டர் இராசமாணிக்கம், வீரபாகு, குருதேவன், முத்தையா, சற்குணம், இரணியன், வீரசிம்மன், வீரசோழன், ஆர்.வி.இராகவன் போன்ற நூற்றுக்கணக்கான தோழர்கள் கலந்துகொண்டனர்.[50]

பொதுத்தொழிலாளர் சங்கம் நாடு முழுவதும் அமைந்து பலவகைத் தொழில்களைச் சார்ந்தோர் உரிமைக்குப் பாடுபடத் தொடங்கியது. நாடு தழுவிய பல தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்துத் தேசிய அடிப்படையில் 'அகில மலாயாத் தொழிற்சங்க சம்மேளனம்' என்ற பெயரில் ஒருங்கிணைந்த அமைப்பைக் கண்டனர். இதன் தமிழர் தலைவராக ஏ.எஸ்.கணபதி, சீனர் தலைவராக யாப்சீலிப், துணைத்தலைவர்களாக லூக்சிக், யாப், மியாயு, மலாய்க்காரர் தலைவர்களாக அப்துல்லா, சிதி, நூர் முகம்மது ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் என்று அக்காலத்தில்இங்கு வாழ்ந்தவரும் தொழிற்சங்க அமைப்பில் தீவிரமாக இருந்தவரும் பெரியார் பெருந் தொண்டருமான (பிரிட்டிஷ் மலேயா) சக்திமோகன் குறிப்பிடுகிறார்.[51] இவர் 1948-ல் அவசர காலச் சட்டத்தில் சிறைபிடிக்கப்பட்டு 1950-ல் இந்தியாவிற்கு நாடுகடத்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத்தொழிலாளர் பொதுக் கோரிக்கைகள்

1. எட்டு மணிநேர வேலை
2. எட்டு மணிநேர ஓய்வு
3. எட்டு மணிநேர உறக்கம்
4. கூலி என அழைக்காமல் தொழிலாளர்கள் (Labour) என்று அழைத்தல்.
5. மே 1 உலகத் தொழிலாளர் தினமான 'மே தினத்தில்' அரசாங்கம், தனியார் தொழில்மையம் ஒரு நாள் சம்பளத்துடன் விடுமுறை வழங்கவேண்டும்.[52]

என்பன போன்ற கோரிக்கைகளோடு சம்பள உயர்வுக் கோரிக்கையையும் வைத்தனர்; போராடி வெற்றியும் கண்டனர்.

தொழிற்சங்க எழுச்சிக்கும், வெற்றிக்கும் அருந்தொண்டாற்றிய வீரசேனன், மணி, குணசேகரன், பெருமாள், கருப்பையா, ராமசாமி, குப்புசாமி, அ. இராசகோபால், வீரசிம்மன், மயில்ராவணன், புரட்சிப்பித்தன் போன்ற தியாகிகளை வெள்ளையர் அரசு சுட்டுக் கொன்றது; தியாகி கணபதி முதலாய சிலரைத் தூக்கில் போட்டுக் கொன்றது (4-5-1949); தமிழகத்தில் சக்திமோகன் முதலாயோரை நாடு கடத்திற்று. இவரும் இவரைப் போன்று நாடு கடத்தப்பட்ட சிலரும் தமிழகத்தில் வாழ்கின்றனர்.

தலைவர் கணபதி

தொழிற்சங்க உருவாக்கத்தில் அரும்பாடுபட்டுத் தூக்குக் கயிற்றுக்கு இரையான தலைவர் கணபதிபற்றிச் சில செய்திகளை இங்குக் குறிப்பிட்டே ஆகவேண்டும். தொழிலாளர் எழுச்சிக்குப் பாடுபட்ட தலைவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் கணபதி; மலாயாவில் அன்று தொழிலாளர் உரிமைக்குத் தம்மையே ஈகம் செய்த அவர் தொண்டு. நாட்டு அளவில் குறுகிய ஒன்றன்று; ஆசியாவெங்கும் அவர் பணி பரவி, தொழிலாளர் விழிப்புணர்வு பெற ஒளி பாய்ச்சியது.

நாடு முழுவதும் (சிங்கப்பூர் உட்பட) அலைந்து கூட்டங்களும் மாநாடுகளும் நடத்தித் தொழிலாளர் குரலுக்கு வலுச்சேர்த்த கணபதி இந்தியத் தலைநகர் தில்லியில் (Delhi) 1946-ல் ஜவகர்லால் கூட்டிய ஆசிய உறவு மாநாட்டிலும் பங்கு பெற்றார். இம் மாநாட்டில் உலகத் தொழிற்சங்கத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும், நல்லறிஞர்களும் கலந்துகொண்டனர். பின் அவர் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளைக் கண்டுவந்தார். பின்னர் அவர் பணி மேலும் தீவிரமடைந்தது. வெள்ளையரை வெளியேற்றும் நோக்கிலும் அவர்

செயல்படத் தொடங்கினார். இந்திய தேசிய இராணுவத்திலும் (I.N.A.) பங்குகொண்டிருந்தார். கணபதியின் செயல்பாடுகள் வெள்ளையருக்கு ஆத்திரமூட்டின. அதனால் அவர்கள் அவரைச் சிறைபிடித்துத் தூக்குக் கயிற்றுக்கு அனுப்பினர். (பெரியார்) ஈ.வெ. இராமசாமி, (அறிஞர்) அண்ணாதுரை போன்ற பெருந்தலைவர்கள் இதழ்களில் எழுதியும் பிரிட்டிஷ் அரசு காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டது[53]. கணபதி தூக்கிலிடப்பட்ட காலம்! நெருக்கடிநிலை நடைமுறையில் இருந்த காலமாகும். பொதுவுடைமையாளரை (கம்யூனிஸ்ட்) ஒடுக்க 20.6.1948-ல் பிறப்பிக்கப்பட்ட நெருக்கடி நிலைச் (Emergency) சட்டத்தால் பல முன்னோடித் தொழிற்சங்கவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்; சிறையில் தள்ளப்பட்டனர். நாட்டு விடுதலைக்குப் பின்னரும் நெருக்கடிநிலை 1960 வரையில் நீடித்தது.

கணபதி போன்ற செம்மல்கள் பலரின் தியாகத்தால் இங்குத் தொழிலாளர்களுக்கு - குறிப்பாகத் தமிழ்த் தொழிலாளர்களுக்குப் புதுவாழ்வு கிட்டியது. காலப்போக்கில் பல தொழிற்சங்கங்கள் உருவாயின. போராட்ட உணர்வு கொண்ட தொழிற்சங்கங்கள் உருவாகத் தோட்ட நிருவாகங்களோ காலனி அரசோ விரும்பவில்லை. போராட்ட உணர்வற்ற, இணக்கப் போக்குடைய தொழிற்சங்கங்களையே அவை வரவேற்றன. அப் போக்குடைய தொழிற்சங்கங்கள் பல தோன்றின. தொழிற்சங்கம் அமைப்பதில் இந்தியரே முன்னோடிகளாய் விளங்கினர். பின் அவை ஒருங்கிணைந்து (1954) தேசியத் தோட்டத் தொழிற்சங்கமாய் (National Union of Plantation Workers - N.U.P.W.) மாறிற்று. இது கடுமையான போராட்ட உணர்வில்லாத மிதவாத அமைப்பே என்பதை பி. இராமசாமி எடுத்துரைப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒருங்கிணைக்கப்பட்ட மேற்படி சங்கத்தில் பி.பி.நாராயணன் பொதுச் செயலாளரானார் (1993வரை). ஏ.வேணுகோபால் அமைப்புத் தலைவரானார். தொடர்ந்து எஸ்.பி.எஸ். நாதன் தலைவராய்த் தேர்வு பெற்றார் (1972 வரை). வேறு சில சங்கங்களும் நாட்டில் இயங்கத் தொடங்கின. வி. டேவிட்டைத் தலைவராகக் கொண்டிருந்த போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் முதலாயன குறிப்பிடத்தக்கன.

தொழிற்சங்கங்களும் சமுதாயமும்

மலேசியத் தமிழர்களில் - இந்தியர்களில் 85 விழுக்காட்டினர் தோட்டப் புறங்களிலேயே வாழ்ந்தனர். அதனால் மற்ற இயக்கங்களுக்கு இல்லாத சமுதாயப் பொறுப்புணர்ச்சி தொழிற்சங்கங்களுக்கு இருந்தது. ஆனால், சமுதாயத்தின் போக்கை மாற்றுவதிலோ, பண்பாட்டுணர்வைப் பரப்புவதிலோ,

பொருளாதாரத்தில் மேம்பாடுகாணச் செய்வதிலோ அவை கருத்துச் செலுத்தவில்லை.

நேரடியாகத் தோட்டத் தொழிலாளர்களின் அரணாக இருந்த தேசியத் தோட்டத் தொழிற்சங்கத்தால்,

* தொழிலாளர் குடியிருப்புகள் மாற்றம் கண்டன.
* ஓரளவு சம்பள உயர்வு கிடைத்தது.
* தொழிலாளரிடையே நம்பிக்கை மனப்பான்மையுடன் ஒற்றுமையும் ஏற்பட்டது.

பி.பி. நாராயணன் அனைத்துலகச் சுதந்திரத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவரானார் (1975-89). எஸ்.பி.எஸ்.நாதன் தொழிலாளர் பேராளராய் நாடாளுமன்ற மேலவை (செனட்டர்) உறுப்பினரானார் (1962-67). இவை மலேசியத் தொழிலாளர் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்தன.

இந்தப் பெருமைகளால் தொழிலாளர் வாழ்வு விடுதலைபெற்று மேலோங்கி விடவில்லை. எனினும் ஓரளவிற்கு மூச்சுவிடத் தொடங்கியது. தொழிலாளரைச் சீரழிக்கும் வஞ்சகச் செயல்பாடுகள் முற்றாக ஒழிந்து விடவில்லை. எனினும் முன்னைய நிலையைவிடப் பல்வேறு மாறுதல்களைச் சமுதாயம் பெற்றது. தொழிற்சங்கம் தொழிலாளர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திற்று. தங்களுக்கு ஒரு காவல் அரண் உண்டு என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஆறுதல் சேர்த்தது. எனினும் வளம்பெற்ற சமுதாயம் என்னும் நிலையை அஃது எட்டவில்லை. 75 விழுக்காடு உடல் உழைப்புத் தொழி லாளரைக் கொண்ட அச் சமுதாயநிலைகுறித்து இன்சான் (INSAN - Institute for Social Analysis) என்னும் நிறுவனம், 1989-ல் உறிஞ்சப் பட்ட ஆரஞ்சுப் பழங்கள் (Sucked Oranges, 1984, p.4) என்னும் வெளி யீட்டில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் உண்மைநிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

"தரமற்ற குடியிருப்புகள், சத்துணவு உண்ண வருவாய் போதாமை, குழந்தைகள் கற்பதற்கேற்ற சூழ்நிலை அமையாமை போன்றவை சமுதாயத்தை உயரவிடாமல் அழுத்தி வைத்துள்ளன"[54]என்பதனை ஆய்வாளர் எடுத்துரைக்கின்றனர்.

தோட்டப்புறத் தொழிலாளர் வாழ்வில் தொழிற்சங்கங்கள் சில மாறுதல்களை ஏற்படுத்திக்கொண்டிருந்த நிலையில் பட்டணப் பகுதியில்

பல இயக்கங்கள் சமுதாய, கலை, பண்பாட்டு வளர்ச்சியை நோக்கமாய்க் கொண்டு அமைந்தன. அரசியல் இயக்கம் ஒன்றும் அமைந்தது.

முன்னோடியாய் இருந்த சமுதாய இயக்கங்களில் முத்ததாகக் கருதப்படுவது நாடு தழுவிய நிலையில் கிளைகளைக் கொண்டு செயல்பட்ட 'அகில மலாயாத் தமிழர் சங்கம்' ஆகும். இது பெரியார் மலேசியாவிற்கு முதன் முறையாக வருகைதந்தபோது (1929) அவரால் தொடங்கி வைக்கப்பட்டதாகும். ஆனால், இது வலிமையோடு செயற்படவில்லை.

(தமிழவேள்) கோ.சாரங்கபாணி தம் அரிய முயற்சியால் இதே பெயரில் சிங்கப்பூரில் ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார் (1941). அமெரிக்கா செல்லும் வழியில் சிங்கப்பூர் வந்திருந்த (சர்) ர.க. (R.K). சண்முகம் செட்டியார் அதனைத் தொடக்கிவைத்தார். இரண்டாம் உலகப் போரோடு அதுவும் மறைந்தது.

1954-ல் சி. சுப்பையாவின் அரிய முயற்சியால் 'அ.ம.த.ச' (அகில மலாயாத் தமிழர் சங்கம்) ஈப்போவில் அமைந்தது. இதன் முயற்சியால் மலாயாத் தமிழர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. இதற்கு நாடெங்கும் 74 கிளைகள் அமைந்தன. தமிழரிடையே பேரெழுச்சியைத் தூண்டிச் சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுபட வழிவகுத்த தமிழர் திருநாளை நாடெங்கும் கொண்டாடுவதிலும், தமிழர் திருமணங்களை நடத்துவதிலும், பயனுடைய சமுதாயப் பணிகளை ஆற்றுவதிலும், இந்த `அ.ம.த.ச.' முன்னின்று பாடுபட்டது. இயக்கத்தை வழிநடத்தும் கடமையைக் கொண்டிருந்த தலைமைப் பொறுப்பாளர்களின் கவனிப்பின்மையால் 1963-ல் முந்தைய இரு அ.ம.த. சங்கங்களுக்கு ஏற்பட்ட நிலையே இதற்கும் ஏற்பட்டது.

தமிழர் சீர்திருத்த சங்கம்

சிங்கப்பூர், மலாயாத் தமிழர்களுக்கு வழிகாட்டி ஊக்கப்படுத்திய இயக்கங்களுள் சிங்கப்பூரில் அமைந்த தமிழர் சீர்திருத்த சங்கம் முதன்மையாகக் குறிப்பிட வேண்டிய அமைப்பாகும். அதன் அமைப்புக்கு 1930ஆம் ஆண்டே கால்கோளிடப்பட்டது. 1932-ல்தான் பணிகளைத் தொடங்கப் பதிவதிகாரியின் இசைவைப் பெற்றதெனினும் 1948-ல் தான் முறையான பதிவைப் பெற்றது. இதன் பணி மிக விரித்துக் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். உ. இராமசாமி (நாடார்), து.த.பா. கோவிந்தசாமி (செட்டியார்), அ.அதிரசம், கோ.சாரங்கபாணி போன்ற பெருமக்கள் அடிநாள் தொண்டர்களாகச் செயல்பட்டனர் எனினும் கோ.சாரங்கபாணி தலைவரான பின்னரே அதன் பணி விரிவாகிச் சமுதாய மாற்றத்திற்கு உதவியது. கோ.சாரங்கபாணி பல இயக்கங்களை ஒன்றிணைத்துத் தமிழர் பிரதிநிதித்துவ சபையை

உருவாக்கினார். அதன்மூலம் சாதி, மதங் கடந்து தமிழின் வாயிலாகத் தமிழர் ஒன்றுபடத் 'தமிழர் திருநாள்' என்ற விழாவை நடத்த வழிவகுத்தார்.

பேரெழுச்சியை ஏற்படுத்திய தமிழர் திருநாள்

1952-ல் தொடங்கிய தமிழர் திருநாள் சிங்கப்பூர், மலாயா (மலேசியா) தமிழர்களைத் தாய்மொழி, கலை, பண்பாட்டு உணர்வோடு எழுந்து நிற்கச் செய்த விழாவாகும். ஒருமைப்பாட்டுக்கு வழிவகுத்த இவ் வெழுச்சித் திருநாள் ஆண்டுதோறும் சிங்கப்பூர் மலாயாவெங்கும் பரவலாகக் கொண்டாடப் பட்டது, தமிழரைப் பலதுறைகளிலும் சிந்திக்க வைத்துப் புதுவழிக்குத் திருப்பியது.

விழாவில் உரை நிகழ்த்த ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து வரவழைக்கப் பெற்ற இரு பேராசிரியர்கள் நாடெங்கும் தமிழ் முழக்கம் செய்து புதிய விடியலை ஏற்படுத்தினர். இந் நாட்டுத் தமிழர் வாழ்வில் அவ் விழாவிற்கு முன்பு அப்படி ஓர் எழுச்சியைத் தமிழர் இங்குப் பெற்றதில்லை. தன்னம்பிக்கை, தாய்மொழிப்பற்று, கலை, பண்பாட்டு உணர்வு, பொருளாதாரச் சிந்தனை, வாழ்வளிக்கும் நாட்டைத் தாயகமாக ஏற்கும் மனப்பான்மை போன்ற புதிய சிந்தனை ஊற்றைச் சமுதாயத்தில் நிறைத்த ஒரு பயனுடைய செயல்பாடு மிக்க விழா அதுவாகும். இடைக்காலத்தில் கோ.சாரங்கபாணி மறைவிற்குப் பின் (16.3.1974) அவ் விழா அத்துணைப் பரவலாகக் கொண்டாடப்படுவதில்லை. எனினும், மீண்டும் அதன்மூலம் சமுதாயப் புத்துணர்வு பெற, பழைய முறையில் நாடெங்கும் கொண்டாட வேண்டு மென்ற எண்ணம்கொண்டு சமுதாய ஆர்வலர்கள் ஆங்காங்கே செயல்பட்டு வருகின்றனர். அவ் விழா, சமுதாய உணர்வைத் தூண்டிப் பல மாறுதல்களுக்கு வழிவகுத்ததைப் போலவே கலை, இலக்கியத் துறைகளிலும் புதிய ஏற்றத்தை ஏற்படுத்திற்று. புதிய எழுத்தாளர் படையை இவ்விழா மூலம் 'தமிழ்முரசு' நாளிதழ் தோற்றுவித்தது. நாடு விடுதலைக்கு ஆயத்தமானபோது, அதற்குத் தமிழர்களையும் ஆயத்தப்படுத்த இவ் விழாப்பேருதவி புரிந்தது.

இங்கே 'தமிழவேள்' எனப் போற்றப்படும் கோ. சாரங்கபாணி பற்றிச் சிலவாவது சொல்லாவிடில் அது நன்றிமறந்த செயல் ஆகும். 1935-ல் தொடங்கிய 'தமிழ்முரசு' மூலம் அவர் ஆற்றிய சமுதாயப்பணி அளப்பரிய தாகும். இன ஒற்றுமைக்கும், எழுச்சிக்கும், தாய்மொழி உணர்விற்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், மாணவர், இளைஞர் உயர்விற்கும், அவர் ஆற்றிய தொண்டு இன்றும்கூட ஓர் உந்துதலைச் சமுதாயத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அவரைப் போன்றவொரு சமுதாயப் பெருந்தலைவர் அவருக்கு முன்போ, பின்போ தோன்றவில்லை என்பது மிகையன்று.

மலேசியத் திராவிடர் கழகம்

போருக்குப்பின் முறையாகப் பதிவு பெற்ற முதல் சமுதாய இயக்கம் 'மலேசியத் திராவிடர் கழக'மாகும். பெரியார் 1929-ல் முதன் முறையாக இங்கு வந்தபோது ஏற்பட்ட சீர்திருத்த உணர்வு பல்கிப்பெருகி 1946-ல் இவ் வியக்கமாக உருக்கொண்டது. தொடக்கத்தில் 'மலாயாத் திராவிடர் கழகம்' என்றிருந்த இது மலேசியா அமைந்தவுடன் (1963) மலேசியத் திராவிடர் கழகமானது.

இதன் தொடக்ககால நடவடிக்கைகள் புரட்சிகரமானவை. சீர்திருத்தத் திருமணங்களை இது வலியுறுத்தியது. "தீபாவளி தமிழர்க்குத் திருநாள் அன்று; அதனைக் கொண்டாட வேண்டா" என்று பரப்பியம் செய்தது; சாதிக் கொடுமைகளைச் சாடியது; தோட்டப்புறங்களிலும் ஊடுருவி இளைஞர்களை ஈர்த்தது; தொடக்கத்தில் இறைமறுப்புக் கொள்கையை வலியுறுத்தியது; பல்லினங்கள் கொண்ட நாட்டின் இன இணக்கம், நாட்டுப் பற்று, கடமை உணர்வு, கட்டொழுங்கு போன்றவற்றை உணர்ந்து செயல்பட அரசு வகுத்த நாட்டின் ஐந்து முதன்மைக் கோட்பாடுகளில் முதல் கோட்பாடான "இறைவன்மேல் நம்பிக்கை வைத்தல்" என்னும் நெறிக்கிணங்க, இறைமறுப்புப்பற்றிய தீவிர எண்ணத்தைக் கைவிட்டது.

இவ் வியக்கம் செய்த ஓர் அருஞ்செயலை ஈண்டுச் சுட்டுவது முதன்மையாகும். தாழ்த்தப்பட்டோர் பிரிவைச் சார்ந்த கலியன் இறந்தபோது, அப் பிணத்தை மேல்சாதிக்காரர்க்குரிய இடுகாட்டில் புதைத்துவிட்டார்கள் என்று காரணம் காட்டிப் பிணத்தைத் தோண்டி வேறு இடத்தில் புதைத்தபோது அதனை எதிர்த்து வழக்காடி வெற்றி பெற்றது. வழக்கை நடத்திய நடுவர், இழிசெயல் புரிந்தாரை மன்னிப்புக் கோரச் செய்து, 3000 வெள்ளி இழப்பீடு வழங்கத் தீர்ப்பளித்தார். இதன் தேசியத் தலைவராய் ஏறத்தாழ 25 ஆண்டுகள் (10.1.1965 - 22.7.1989) பொறுப்பேற்றிருந்த கே.ஆர்.இராமசாமி காலத்தில் அவர் முயற்சியால் தொடங்கப்பட்ட வழக்கு இஃது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் வழக்கு நடந்த காலத்தில் சமுதாயத்தில் சாதிக் கொடுமை பற்றிய சிந்தனை பரவியது. இழிசெயல் செய்தோரை ஒட்டுமொத்தச் சமுதாயமும் சாடியது. வேற்று இனத்தவர் இதனைக் கண்டு நகைக்கும் நிலை ஏற்பட்டது.

இவ் வியக்கத்திற்குரிய சட்ட விதிகளை வரைந்தவர் ஒ.ரா.அய்யாறு. இதன் முதல் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டவர் நா. பள்ளிகொண்டான். கட்டடக்குழுத் தலைவராயிருந்து கழகத்திற்குச் சொந்தமனை வாங்க உழைத்தவர் அ. மருதமுத்து. இப்போதைய தேசியத் தலைவர் ரெ.சு.முத்தையா.[55]

மலேசிய இந்தியர் காங்கிரசு

1920களில் இந்தியர்கள் அரசியல் அமைப்புகள் ஒரு சிலவே இருந்தன. இவை தொழிலாளர்கள்பால் சிறிய நாட்டமே செலுத்தின. அப்படியிருந்த அமைப்புகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று ஆங்கிலம் கற்றறிந்த இந்தியர் காங்கிரசு கட்சியினர்; மற்றொன்று தமிழ் கற்றறிந்தவரிடையே ஊடுருவியிருந்த திராவிடர் கழகமாகும்[56] என்கிறார் பி. இராமசாமி. ஆனால் இப்போது செயல்படும் மலேசிய இந்தியர் காங்கிரசும், திராவிடர் கழகமும் வேறுவேறானவை. இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட உணர்வுகளை இங்கெழுப்பிப் போருக்குப் படைதிரட்டிய இந்திய விடுதலைக் கழகம் (I.I.L), இந்திய தேசிய இராணுவம் (INA) ஆகிய போர் நோக்க அமைப்புகளில் உறுப்பியம் பெற்றுப் போர்க்களத்திலும் இறங்கியோர் போரில் கண்ட தோல்வியால் குன்றியிருந்தனர். அவர்கள் தங்கள் ஆற்றலை வேறு பயனுடைய திசையில் திருப்ப ஓர் இயக்கம் காணவேண்டியது காலத்தின் கட்டாயமாய் இருந்தது. அந்த உணர்வு ஓர் அரசியல் இயக்கத்தை உருவாக்க அடிகோலியது. அதன் விளைவுதான் 1946-ல் உருவான 'மலேசிய இந்தியர் காங்கிரசு' என்னும் அரசியல் அமைப்பு (4.8.1946). இந்த இயக்கத்தின் முதன்மைக் குறிக்கோளே நாட்டு விடுதலையாகத்தான் இருந்தது.

* சுதந்திர மலாயாவை நிருமாணிப்பதில் மற்றச் சமூகங்களோடு ம.இ.கா. ஒத்துழைக்கக் காத்திருக்கிறது.

* தன் தாய்நாடு விடுதலை அடைய நடைபெறும் போராட்டத்தில் தன் சக்திக்கியன்ற வகையில் எல்லா உதவிகளையும் இக் காங்கிரஸ் செய்யும்.

* மலாயா இந்திய மக்கள் தம் தேசத்தின்மீது அதிகப் பொறுப்புணர்ச்சி கொள்ளவும் தீவிர அரசியல், கல்வி, சமூகச் சீர்திருத்தத்தை அபிவிருத்தி செய்யவும் தக்க கொள்கைகளை ம.இ.கா. வகுக்கும்.[57]

என்பன போன்ற நோக்கங்களே அதன் குறிக்கோளை உணர்த்தப் போதுமானவையாகும். இந் நாட்டின் மூத்த அரசியல் இயக்கமான இதன் முதல் தலைவர் சுபாஷ் சந்திர போசுடன் துணைத் தலைவராய் இருந்து செயல்பட்டவர் ஜான் ஏ.திவி (1946-47). பின்னர் சர்தார் பூத்சிங் (1947-51), குண்டன்லால் தேவாசர் (1951-55), வீ.தி. சம்பந்தன் (1955-73), வெ.மாணிக்க வாசகம் (1973-79) ஆகியோர். இன்றுவரையில் தலைவராய் விளங்குபவர் ச.சாமிவேலு.

ம.இ.கா.அமைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு விடுதலையை முதன்மை நோக்கமாய்க்கொண்டு டத்தோ ஒன்பின் ஜபாரைத் தலைவராய்க் கொண்டு 'ஐக்கிய மலாய்க்காரர் தேசிய இயக்கம்' (UMNO - United Malay National Organization) அமைந்தது. ம.இ.கா. அமைந்ததன்பின் டத்தோ டான் செங்லொக் தலைமையில் மலாயாச் சீனர் சங்கமும் (MCA - Malayan Chinese Association) அமைந்தது.

விடுதலைக்குப் பின் ம.இ.கா.

விடுதலைக்கு முந்திய ம.இ.கா.வின் நிலை வேறு; அதன் பின் அதன் நடைமுறை வேறு. 1955-ல் (துன்) வீ.திருஞானசம்பந்தன் தலைவரான பின் அவ் வியக்கத்தின் வடிவம் மாறிற்று. அதுவரை ஆங்கிலம் கற்ற மேட்டுக்குடியினரே பொறுப்பிலிருந்த நிலை மாறி, தமிழ் முதன்மை பெறவும், பொதுமக்களும் அதனில் நிரம்ப உறுப்பியம் பெறவுமான நிலை உருவாயிற்று. விடுதலைக்குமுன் 1955-ல் பொதுத்தேர்தல் வந்தது. அத் தேர்தலில் நாடாளு மன்றத்திற்குப் போட்டியிட்டு வென்று 'துங்கு அப்துல் ரகுமான்' அமைச்ச ரவையில் முதல் தொழிலாளர் அமைச்சரானார். 'சஞ்சிக் கூலி'களாய் வந்து நீண்ட நெடுங்காலம் தோட்டப்புறத்தில் நலிந்த வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் அமைச்சரானது, அப்பிரிவி னருக்கு ஓர் உந்துதலையும், ஒரு பெரிய நம்பிக்கையையும் தோற்றுவித்தது.

மலேசிய இந்தியர் காங்கிரசு கட்சிக்குப் புதிய தெம்பும் வலிமையும் சேர்ந்தன. விடுதலையை நோக்கி நாடு நடந்து கொண்டிருந்த வேளையில் இந்திய - தமிழ் இனத்திற்கு இப்படியொரு சிறப்புக் கிட்டியது ஒரு மாபெரும் வரலாற்றுத் திருப்பமாகும். பட்டக் கல்வித்தகுதியும், நிருவாக ஆற்றலும், நன்மனமும், இறைநம்பிக்கையும் கொண்ட வீ.தி. சம்பந்தன், அமைச்சை மிகச் சிறப்பாக இயக்கிப் பெருஞ்சிறப்புப் பெற்றார். ம.இ.கா.வின் அருஞ்செயல்களெல்லாம் அடுத்த காலகாட்டத்திலேதான் தொடங்கின.

மலேசிய வானொலி

தோட்டப்புற மக்களுக்குப் பொழுதை இனிமையாகக் கழிக்க எந்த வாய்ப்பும் இல்லாத காலமது. தாயம், சதுரங்கம், சீட்டாட்டம் போன்ற ஆட்டங்களில் சிலர் ஈடுபடுவர். கலைவிருந்து என்று எதுவுமே கிடையாது. ஆண்டுக்கு ஒரு முறை திருவிழாக் காலங்களில் தெருக்கூத்து முதலாய நாட்டுப்புறக் கலைப் படையல்கள் இடம்பெறும். நாடோடிக் கலைஞர்கள் எப்போதாவது வந்து பொய்க்கால் குதிரையாட்டம், வில்லுப்பாட்டு, கர காட்டம், மாயாசால நிகழ்வுகள் நடத்துவதுண்டு. இளைஞர்கள் சடுகுடு (கபடி), கிளித்தட்டு, கிட்டிப்புள், சில், தாயம் போன்ற விளையாட்டு

களில் ஈடுபடுவர். மற்றபடி எல்லாம் வெறுமையே. அக்காலத்தில் வானொலி நிகழ்ச்சிகள் இல்லை; தொலைக்காட்சி நடப்புக்கு வராத காலமது.

அப்போது சப்பானியர்தம் ஆட்சிக்காலத்தில் 'JMBK' என்னும் பெயரால் இந் நாட்டில் ஒலிபரப்பு நடத்தினர். அதன் இந்தியப் பகுதிப் பொறுப்பாளராய் இருந்தவர் தி.சு.சண்முகம். சப்பானியர் சரணடைந்த பின் (1945) ஆங்கிலேய அரசு தகவல் துறையுடன் இணைத்து மலாயா வானொலி ஒலிபரப்பை விரிவுபடுத்தியது. அப்போது இந்தியப் பகுதியின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் தஞ்சை எஸ்.தாமஸ். பின் டி.டி.நாயிடு தலைவரானார்.

இங்ஙனம் திறமை வாய்ந்த கலைஞர்கள் நல்ல நிகழ்ச்சிகளைப் படைத்தனர். எனினும் அவை தோட்டப்புற மக்களைச் சென்றடையவில்லை. ஏனெனில் வானொலிப் பெட்டி வாங்கும் வளமுடையயோர் அங்கில்லை. எங்கோ ஒரு கடையில், சற்றுச் செல்வம் படைத்தவர் வீட்டில் இருக்கலாம். அங்குச் சிலர் கூடிக் கேட்பதுண்டு. பெரிய தோட்டங்களில் மக்கள் பணம் திரட்டி ஒரு வானொலிப் பெட்டி வாங்கிப் பொது இடத்தில் வைத்துக் கேட்பதுண்டு. எங்கோ ஒருவர் கிராமபோன் வைத்திருப்பார். காலப் போக்கில் இந் நிலை சற்றே மாறுதல் அடைந்தது எனினும் விடுதலைக்குப் பின்னரே நிறைவான ஒரு நிலை மலரத் தொடங்கிற்று.

காரிருள் சூழ்ந்த காலம்

ஓய்வு, ஒழிவற்ற கடும் உழைப்பாலும், உரிமைகளுக்கான வாய்ப்பும் சூழலும் அமையாமையாலும், பொருளியல் அடிப்படை இல்லாமையாலும், அடக்குமுறையாலும், சிந்திக்கவே முடியாத கொத்தடிமைத் தன்மையாலும், கல்வி ஒளியே கண்ணில் படமுடியாத இருளினாலும் தோட்டப்புற மக்கள் வாழ்வில் போருக்கு முந்திய காலமும் காரிருள் சூழ்ந்த காலமாகவே கழிந்தது.

போர்முகில் சூழ்ந்த காலம்

உண்ண உணவும், உடுக்க உடையும் அற்றதொடு, போர் முழக்கச் சூழலாலும், எந்த நேரத்தில் என்ன நேருமோ என்ற நடுக்கத்தாலும், அளவிட முடியாத பொருள் இழப்பாலும், போர்க் கோலமன்றி வேறெதுவும் கண்ணில் காணாத வறட்சியாலும், எண்ணற்ற உயிர்களின் வீழ்வாலும், அக்காலம் (1941-45) சமுதாயத்தை எளிதில் மீண்டெழ முடியாதபடி ஒரு அழுத்து அழுத்திவிட்டுப் போயிற்று.

வெள்ளையர் மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுதலை வரையிலான 10 ஆண்டுக்காலம் மிகவும் முதன்மை வாய்ந்த காலமாகும். ஓர் உறுதியான ஆற்றலோடு புதியன புனையப் புத்தெழுச்சி பெறமுயன்ற காலமாகவும் அஃது அமைந்தது. வெள்ளையரும் தம் கெடுபிடிகளைக் குறைத்துக் கொண்டு

உரிமைக் குரலுக்குச் செவிசாய்த்ததாலும் மக்களின் விடுதலை உணர்வு உயிரோட்டம் பெற்றது. அரசியல் உரிமை குறித்துப் பேச ஒவ்வோர் இனத்திற்கும் தனிக்கட்சி அமைந்தது. மலாய்க்காரருக்கு 'ஐக்கிய மலாயா தேசிய இயக்கம்' (UMNO), சீனர்களுக்கு 'மலாயாச் சீனர் சங்கம்' (MCA), இந்தியர் தமிழருக்கு 'மலாயா இந்தியர் காங்கிரசு' (MIC) ஆகிய மூன்று கட்சிகளும் தனித்தனியே விடுதலை முழக்கம் செய்தன.

ஆனால், நாட்டுக்கு விடுதலை கோரும் முழக்கங்கள் தோட்டப் புறங்களுக்கு அவ்வளவாக எட்டவில்லை. எனினும் ஓரளவு படித்த இளைஞர்கள் இதழ்கள்வழி அதுபற்றி அறிந்தே இருந்தனர். அப்போது தோட்டப்புறப் பள்ளிகளும் ஓரளவு சீர்திருந்திப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு இயங்கியதால் கல்வி ஒளி இலேசாகப் பரவத் தொடங்கியிருந்தது. இங்கேயே கல்வி கற்றவர்கள் தமிழாசிரியர்களாய் வரும் வாய்ப்பும் ஏற்பட்டது. இதழ்களில் இலக்கிய மலர்ச்சிக்கான பாதையும் திறந்தது. தமிழ்நேசன், தமிழ்முரசு போன்ற நாளிதழ்களொடு வேறுசில ஏடுகளும் இலக்கிய வளர்ச்சியில் நாட்டத்தை ஏற்படுத்தின. நாடக வளர்ச்சியிலும் சமுதாயம் கருத்துச் செலுத்தியது. வானொலி நல்ல நிகழ்ச்சிகளால் மக்களை நிறைவு செய்தது. நாடு மெல்ல மெல்ல விடுதலையை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தது.

இக் காலகட்டத்தில் சமுதாய வாழ்வு, கடந்த காலகட்டங்களை விடச் சற்று மேம்பட்டிருந்தது. உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படை வசதிகள் பரவலாய் வாய்த்தன. தோட்டப்புற இருளும் மெல்ல மெல்ல அகலத் தொடங்கியது. அச்சம் நீங்கி அதிகாரக் கெடுபிடி குறைந்து வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது. பழைமைப் போக்கொடு சீர்திருத்தச் சிந்தனைகளும் பரவத் தொடங்கின.

தோட்டப்புறத்தில் சாதிகளுக்கேற்ப வீட்டுத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், சண்டை சச்சரவுகளுக்கு இடம் இருந்ததில்லை. தாழ்த்தி வைக்கப்பட்டிருந்தவர்களின் உரிமை கோரல், வாள்முனையில் கொக்கரிக்கவில்லை. மேட்டுக்குடியினரும் அதனை ஒடுக்கத் துப்பாக்கி ஏந்தவில்லை. சாதியை விட்டுக்கொடுக்காத போக்கும் தொடர்ந்தது என்பதனையும் இங்குக் குறிப்பிட்டே ஆகவேண்டும். எத்தனையோ காதலர்கள் இதனால் தற்கொலை செய்துகொண்டதும் உண்டு என்பதனையும், கலப்புமணம் புரிந்தோர் குடும்பத்திலிருந்து தள்ளி வைக்கப்பட்டமையையும் இங்குக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

சமுதாயச் சீர்கேடு என்று பார்க்கும்போது கொலை, கொள்ளை, கற்பழிப்புப் போன்ற வன்முறைகளில் சமுதாயம் ஈடுபடவில்லை. குடிகாரக்

கணவன் மனைவியைத் துன்புறுத்துவது, உறவினர்களிடையே சிறுசிறு கைகலப்புப் போன்றவையே நிலவின. தமிழரால் நாட்டுக்கோ மற்றச் சமுதாயத்தினருக்கோ எவ்வகை ஊறும் விளையவில்லை என்ற மதிப்பே நிலவி வந்தது. வாழத் தெரியாதவர்கள் என்ற இரக்கமொழிக்கே சொந்தக் காரர்களாய்த் தமிழர் விளங்கிவந்தனர். அக்காலத்தில் புறம்போக்கு நிலப்பகுதிகளில் குடிசைகட்டிக் கொண்டோரும் குறைவே. தோட்டப்புறமே எல்லாம் என்ற நிலையிலேயே 85 விழுக்காட்டுத் தமிழர் சமுதாயம் நடைபோட்டது. அங்கு கட்டுக்குலையாத ஒரு சமுதாய அமைப்பு இருந்தது என்பதனைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

மருத்துவர், பொறியாளர், வணிகர், கணக்காயர், அரசு ஊழியர், நகர மன்றப் பணியாளர், பொதுப்பணித்துறைத் தொழிலாளர் போன்றோர் பட்டணப் பகுதிகளில் மதிப்புடன் வாழ்ந்தனர்.

நாட்டின் அன்றைய சமுதாய நிலையைப் பொதுவாக நோக்கும்போது தமிழர்கள் பொருளாதார வளம் குறைந்திருந்தனர். பெரும் பகுதியினர் தோட்டப்புறத்தில் வாழ்ந்தனர்; சொந்தத் தொழிலில் நாட்டம் குறைந்திருந்தனர்; கல்வி வளர்ச்சிபற்றி எண்ணாதிருந்தனர்; சொந்த வீடு, சொத்துப் போன்ற சிந்தனையில்லாதவர்கள் என்ற நிலையிலிருந்தனர். மலாய்க்காரர்கள் சிற்றூர்களில் (Kampung) எளிய வாழ்வை மேற்கொண் டிருந்தனர். சீனர் வணிகத்தில் மிகுந்த கருத்துச் செலுத்தினர்; சொந்தச் சொத்துடைமையைக் குறிக்கோளாய்க் கொண்டு வாழ்ந்தனர்; சமுதாய ஒற்றுமை அவர்களிடம் இருந்தது; தாய்மொழியை முன்னிறுத்தி நடை போட்டனர்; வாழ்வுக்குத் தேவையான அனைத்தும் தங்கள் சமுதாயத் தினரிடமே உண்டு என்ற மேனிலையை எய்தியிருந்தனர்; கல்வியில் மிகுந்த நாட்டம் செலுத்தினர். பொருளாதார வளம் அவர்களிடம் புரண்டது. எதனையும் விலைபேசும் தகுதிநிலைக்கு உயர்ந்துகொண்டிருந்தனர்.

தமிழரின் மறுபக்கம்

தமிழர் சமுதாயத்தின் ஒட்டுமொத்த மதிப்புத் தோட்டப்புறம்தான். அவர்கள் பொருளாதார வளம் அற்றவர்கள், அப்பாவிகள், உழைக்க மட்டுமே தெரிந்தவர்கள் என்றிருந்தாலும் செட்டியார்கள் சிலர் நிலக்கிழார்களாகவும், வட்டிக் கடைக்காரர்களாகவும் விளங்கினர். சீனர்கள் அவர்களிடம் கடன் பெற்றனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

புத்தகம், எழுதுபொருள், காலணிகள் போன்றவற்றை மொத்தமாக விற்பனை செய்வதிலும் இந்தியர் தரம் மிக்க வணிகர்களாய் விளங்கினர். ஆனால், தொழிலைப் பலவகையாகப் பெருக்கவில்லை. வட்டித்தொழில்

செய்தவர்கள் அதிலேயே நின்றனர். மனைவி மக்கள் தமிழகத்தில் இருந்ததால் அவர்களால் இங்குக் காலூன்ற முடியவில்லை. இங்கு மேற்படி உயர்ந்த நிலையில் இருந்தவர்கள் தொடர்ந்து நிலைக்க முடியாமல் போனதற்குப் பர்மா நாட்டுத் தமிழர்களுக்கு ஏற்பட்ட நிலையும் காரணம் என்கிறார் நேர்காணலில் த.மாரிமுத்து (25.4.2001).[58] எல்லாவற்றையும் விட்டுக் கட்டிய துணியோடு வெளியேற வேண்டிய கொடுமை இங்கும் ஏற்படுமோ என்று அஞ்சி, சொத்துகளை மிகக் குறைந்த விலைக்குத் தள்ளிவிட்டுச் சென்றனர் தமிழர்கள். அச் சொத்துகளைச் சீனர்கள் வாங்கித் தங்களை வளப்படுத்திக் கொண்டனர். இதுபோன்ற ஒரு நிலை இரண்டாம் உலகப் போருக்கு முன்னரும் நடந்தது.

விடுதலை ஒளி

1786-ல் பினாங்கைக் கைப்பற்றி 1914-ல் மலாயா முழுவதையும் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்திருந்த வெள்ளையர் இடையில் சப்பானியரிடம் மலாயாவை இழந்து (1941-45) மீண்டும் பெற்றனர். அதன்பின் அவர்கள் மண்ணுக்கு உரியவர்களிடம் அதனை ஒப்படைத்துத் திரும்பும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தியாவை அவர்களிடமிருந்து மீட்க அந் நாட்டு மக்கள் 100 ஆண்டுகள் குருதி சிந்திப் போராடவேண்டியிருந்தது. ஆனால், மலையக விடுதலை, இணக்கமான பேச்சு மூலமே வெற்றியை எட்டியது.

"கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது"

என்னும் நாமக்கல் வே. இராமலிங்கம் பாட்டுக்கு இலக்கியமாக விளங்குவது மலாயா விடுதலை எனலாம். இதனை யுத்தம் - போர் என்றுகூடச் சொல்ல முடியாது. இரண்டாம் உலகப் போருக்கு முன்னும் பின்னும் மலாய்க் கவிஞர்கள் கவிதைகள் மூலம் தங்கள் நாட்டு உரிமையைப் பாடி விடுதலை பெறக் குரல் எழுப்பினர்.

"வெள்ளையரைச் சப்பானியர் வென்றதுபோல் சப்பானியரை நாம் வெல்வோம்" என்னும் கருத்துப்படப் பல கவிதைகள் பிறப்பெடுத்தன.

"என் பிறந்த மண்ணே மலாயாவே!
உன்னை நான் நேசிக்கிறேன்!
இவ்வுலகின் சொர்க்கபுரி நீ!

உன்னில்
சீனர் உளர்; மலாயர் உளர்;

இந்தியர் உளர்; ஐரோப்பியர் உளர்;
சக்காயர் உளர்.
அமைதி தழுவும் மண் இது!

ஓ மலாயாவே,
உன்னை நேசிக்கிறேன்!
உன்னில் புதைப்பதற்கு
என்னையே தருகிறேன்!"[59] (சக்காயர் - பழங்குடியினர்)

என்று எல்லா இனங்களையும் ஒன்றிணைத்து மலாய்க்காரர் விடுதலை முழக்கப் பாடல்கள் எழுதினர்.

"இனியும் ஏன் அந்நியருக்கு அடங்கவேண்டும்?

மீண்டும் ஏன் அந்த மண்ணுக்கு அனுப்பவேண்டும்?
கண்ணீராலும் குருதியாலும் வாளாலும் நாம்
தீட்டப்பட்டிருக்கிறோம்.

இனியும் சைத்தான் திரும்பினால்
தயங்கோம்! அஞ்சோம்!
எல்லோரும் பொங்கி எழுங்கள்!
இரும்பு போன்று உறுதி கொள்ளுங்கள்
அவர்களை ஒழிக்க!"[60] (சைத்தான் - வெள்ளையர்)

என்று சீனர்கள் விடுதலை முழக்கம் செய்யத் தொடங்கினர்.

"எங்கள் மலாயா தங்கிடும் இன்பம்
பொங்கிட வேண்டாவா?
இந்திய சீனம லேசியர் யுரேசியர்
என்றுமிந் நாட்டினிலே - ஒன்றாய்
நன்றுடன் வாழ்ந்திடுவோம்!
யாவரும் ஈண்டு மலாயர்கள் என்று
இணையற்ற தோரின மாகவே மாறிச்
சத்தியச் செந்நெறிப் பன்னூல் கொண்டு
சாந்தியும் பெற்றிடுவோம்"[61]

என்று தமிழரும் தங்கள் ஒற்றுமை உணர்வையும், நாட்டுப்பற்றையும், விடுதலை வேட்கையையும் வெளிப்படுத்தினர்.

இங்ஙனம் எழுதுவது கட்டுப்படுத்தப்பட்டது என்பதையும் மறந்து விட முடியாது. ஆனால், இங்கே குருதி சிந்தப்படவில்லை. விடுதலை கேட்ட தலைவரை வெள்ளையர்கள் எவ்வகையிலும் துன்புறுத்தவில்லை.

போரில் தோற்று மீண்டும் நாட்டைக் கைப்பற்றிய வெள்ளையர் பெரிதும் மனமாற்றம் கொண்டிருந்தனர். உலகெங்கும் விடுதலை ஒளி விரைந்து பரவியதால் தொடர்ந்து அடிமைத்தளையில் ஒரு நாட்டை வைத்திருக்க இயலாதென்று உணர்ந்தனர்; மலாயாவுக்கு - மலேசியாவுக்கு விடுதலை தரும் முடிவிற்கு வந்தனர்.

கூட்டணி அமைந்தது

விடுதலை தர எண்ணியவர் தங்களால் குடியேற்றப்பட்ட இந்திய, சீன மக்களை மறந்துவிடவில்லை. மூவினங்களும் இணைந்த ஓர் ஆட்சிப் பேரவையிடமே நாட்டை ஒப்படைக்க விழைந்தனர். அதற்கேற்ப இனக் கட்சிகளிடையே மாறுதல்கள் தோன்றின. ஒன்றிணைந்து நாட்டு விடுதலைக்குப் பாடுபடும் ஒருமைப்பாட்டுணர்வு தோன்றியது.

1951-க்குப் பின் விடுதலை உணர்வு தீவிரமடைந்தது. கட்சிகள் வலுப்பெறத் தொடங்கின. இன அடிப்படையில் அல்லாமல் நாட்டி லுள்ள எல்லாருக்கும் இனப்பாகுபாடின்றிச் சம உரிமைகளும் குடியுரிமையும் அளிக்க வகைசெய்யும் மலாயன் யூனியன் (Malayan Union) என்ற அமைப்பைக் கொண்டுவர ஆங்கிலேயர் முயன்றனர். ஆனால், மலாய்க்காரர் (ஒன்பின் ஜபார் உட்பட) கடுமையாக எதிர்த்தனர். எனினும் அம்னோவில் கதவுகள் மலாய்க்காரர் மட்டுமன்றி அனைத்து இனங்களுக்கும் திறந்து விடப்பட வேண்டுமென்று விரும்பினார். ஆனால், மலாய்க்காரர் ஏற்கவில்லை. தனித்து நிற்கவே விரும்பினர். அதனால், அவர் கட்சியிலிருந்து விலகிக் கொண்டார்; எல்லா இனத்தவரும் பாகுபாடின்றி உறுப்பினராகும் வண்ணம் மலாயா விடுதலை இயக்கத்தை (I.M.P) அமைத்தார்.

ஒன்பின் ஜபாரின் மேற்படி இயக்கத்துக்கு ம.இ.கா. வும் ம.சீ.ச. வும் ஆதரவு தந்தன. ஆனால், 1952-ல் நடந்த கோலாலம்பூர் நகராண்மைக் கழகத் தேர்தலில் அது படுதோல்வி அடைந்தது. அக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட கே.எல்.தேவாசரும், தேவகிருஷ்ணனுமே வெற்றி கண்டனர்.

ஒன்பின் ஜபார் சோர்வு கொள்ளாமல் தேசியக் கட்சி (Party Negara) என்ற பெயரில் மற்றோர் அரசியல் இயக்கத்தைத் தொடங்கினார். அதற்கு இந்தியர் ஆதரவு தந்தனர். அக் கட்சியும் தோல்வியையே தழுவியது.

துங்கு தலைமை ஏற்றார்

ஒன்பின் ஜபார் தலைவராயிருந்த 'அம்னோ' விற்கு, பின்னர் (விடுதலைத் தந்தை) துங்கு அப்துல் ரகுமான் தலைமை ஏற்றார். பரந்த நோக்கும், மாந்தநேயப் பண்பும் நிறைந்த அவர் தலைமை கட்சியை வலுப்படுத்தியது. இனங்களின் அடிப்படையில் இயங்கி வந்த மலேசியச் சீனர் சங்கம், மலேசிய

இந்தியர் காங்கிரசு ஆகிய கட்சிகளை மலாய்க்காரர் தேசிய இயக்கமான அம்னோவுடன் இணைத்துக் கூட்டணி அமைக்க முயன்றார் (1953). தொடக்கத்தில் ம.இ.கா. இணைய மறுத்தது; பின்னர்ச் சேர்ந்துகொண்டது (1954). அந் நேரத்தில் கட்சியை வளப்படுத்திய தேசியத் தலைவர்களில் குண்டன்லால் தேவாசரும் பொதுச் செயலாளர் க.குருபாதமும் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

அரசியல் வானில் தமிழர் தலைவர்

மலாயாவிற்கு 1957-ல் விடுதலை எனக் காலம் குறிக்கப் பெற்றது. அதற்கு ஈராண்டுகளுக்கு முன்பே நாட்டின் பொதுத் தேர்தல் நடந்தது. 98 நாடாளுமன்ற இடங்களில் 52 இடங்களுக்குத் தேர்தல் நடந்தது. மூன்று கட்சிகளும் இணைந்த கூட்டணி 51 இடங்களில் வென்றது. சுயேச்சையாகப் போட்டியிட்ட ஒருவர் வென்றார். 19 பேர் அமர்த்தம் (நியமனம்) பெற்றனர். இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு இடங்களில் ம.இ.கா. தலைவர் வீ.தி.சம்பந்தன், இலங்கைத் தமிழரான செல்வசிங்கம் ஆகியோர் வெற்றி கண்டனர். குண்டன்லால் தேவாசரும், வழக்கறிஞர் குமாரசாமியும் நாடாளு மன்ற உறுப்பினராய் அமர்த்தம் பெற்றனர்.[62]

தமிழர் அமைச்சரானார்

துங்கு அப்துல் ரகுமான் தலைமையில் அமைந்த நாட்டின் முதலாவது அமைச்சரவையில் வீ.தி.சம்பந்தன் தொழிலாளர் அமைச்சரானார். மலேசியத் தமிழர்தம் அரசியல் உரிமையின் சின்னமாய் இப் பதவி இனத்திற்குப் பெருமை சேர்த்தது. சீன இனமும் அமைச்சரவையில் இடம்பெற்று அரசியல் உரிமை பெற்றுப் பூரித்தது.

விடுதலைநாள் நெருங்கநெருங்கப் பல துறைகளிலும் விரை வான மாற்றங்கள் நிகழ்ந்தன. கல்வியமைச்சர் துன் ரசாக் தலைமை யில் விடுதலை நாட்டிற்கேற்ற - எல்லா இனமொழிகளுக்கும் இடமளிக்கும் ஓர் அருமையான கல்விக் கலைத்திட்டம் உருவானது. கோலாலம்பூரில் மலாயாப் பல்கலைக்கழகம் அமைந்தது.

வாய்ப்பை இழந்த தமிழர்

விடுதலை பெறப்போகும் நாட்டின் உரிமை நலத்தை முழுமையாகப் பெறுவதற்குக் குடியுரிமை தேவை. அதுவே அடிப்படை உரிமை. அந்த உரிமையை வாழ்ந்த கால அடிப்படையை மட்டுமே கொண்டு வழங்க அரசு முன்வந்தது. சீனர் இதனை விரைந்து முன்வந்து பெற்றுக்கொண்டனர். தமிழரில் பெரும்பாலோர் அதனில் கருத்துச் செலுத்தவில்லை. அதனால் பின்னாளில் அடைந்த நெருக்கடிகளுக்கு அளவில்லை.

விடுதலையால் பல்வேறு துறைகளில் விளையப்போகும் நன்மைகளை முழுமையாகப் பெறத் தமிழர் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை. வளம் மிக்க சிலர் இங்குக் காலூன்ற எண்ணாததால் விடுதலையை ஒரு பேறாகக் கருதவில்லை. தோட்டப்புறத்தில் வாழ்ந்தோரில் குடியுரிமை பெற்றவரும் அதன் மதிப்பை உணராததால் அஃது ஏதோவொரு சடங்கு என்பது போல நினைத்தனர். தமிழர் இன்னும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை என்பதற்காக விடுதலை காத்திருக்குமா? 1957 ஆகஸ்ட் 31ஆம் நாள் அந்தப் பேரொளி அடிமை இருளை அகற்றித் தகத்தகாயமான வெளிச்சத்தை அள்ளி இறைத்தது.

பிரிட்டிசார் நாட்டைத் தனித்த ஓர் இனத்திற்கு முழுஉரிமை கொண்டதாய் வழங்கிவிடவில்லை. பாரம்பரிய உரிமை கொண்ட மலாய்க்காரர், நாட்டின் உருவாக்கத்திற்கு அளப்பரிய தியாகங்கள் செய்த இந்தியர்-தமிழர், பொருளாதார வளம் பெருக்கிய சீனர் ஆகிய மூவினங்களும் ஒன்றுசேர்ந்த ஓர் ஆட்சிப் பேரவையிடமே அளித்தனர். ஆனால், தொன்றுதொட்டு உரிமைக் குடிகளாய் வாழ்ந்து வந்த மலாய்க்காரர் களுக்குச் சிறப்புச் சலுகைகள் சாசனமாயின. அவர்களுக்குரிய சிறப்புநிலை குறித்து யாரும் கேள்வி எழுப்பமுடியாது. மலாய்மொழி நாட்டின் தேசிய மொழியானது. அதே நேரத்தில் மற்ற இனங்கள் தங்கள் மொழியை வளர்த்துக் கொள்ளவோ, கலைகளை மேம்படுத்திக் கொள்ளவோ தடையில்லை. 'இஸ்லாம்' நாட்டின் தேசிய சமயமெனினும் மற்ற மற்ற இனத்தவர்கள் தங்கள் சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றலாம். இவைபோன்ற இணக்கப் போக்கொடு நாட்டின் விடுதலை மலர்ந்தது. 31.8.1957ஆம் நாளில் பிறந்த நள்ளிரவு பிரிட்டிஷ் கொடி இறங்க, மலேசியக் கொடி வானை நோக்கி வீறுடன் ஏறத் தொடங்கியபோது வானொலியில் விடுதலையை வரவேற்று மகிழ்ந்த மலேசியத் தமிழர் குரலாகக் கா.பெருமாளின் கீழ்க்காணும் பாடல் ஒலித்தது.

"விரிகதிர் எழுந்தான் இம்மலை நாட்டில்
விடிவு பிறந்தது பாரீர்!
உரிமைச் சுதந்திரம் நாமடைந் தோம்இந்த
உலகிடை உயர்ந்தவ ரானோம்!

அரிவை சுதந்திர தேவிய ளித்தநல்
அணியெனப் பறந்திடும் கொடியே!
சிரவணக்கம் செய்தோம் எங்கள் மலை நாட்டின்
சீர்த்தியைப் பாடுவோம் வாரீர்!"[63]

விடுதலைச் சாசனத்தில் இந்திய-தமிழினத்தின் நிகராளி என்னும் முறையில் அப்போது மலேசிய இந்தியர் காங்கிரசின் தலைவராய் இருந்த வீ.தி. சம்பந்தன் கையொப்பமிட்டார். ஓர் அடிமை நாட்டிலிருந்து மற்றோர் அடிமை நாட்டிற்குப் பிழைப்பு நாடிப் புலம்பெயர்ந்து வந்து வாழ்வளிக்க முன்வந்த நாட்டை வளம்கொழிக்கும் நாடாக்குவதில் தங்களை ஒப்புக் கொடுத்தோர் என்னும் நற்பெயர் வரலாற்றில் பதிந்திருப்பதொடு நாட்டு விடுதலைக்கும் பற்றுறுதியோடு பாடுபட்டனர் என்பதற்கு வீ.தி. சம்பந்தன் இட்ட கையொப்பம் சான்றாக விளங்குகிறது.

விடுதலைக்குப் பின்

விடுதலைக்குப் பிந்திய மலேசியத் தமிழர் வாழ்வை ஆராயும் போது அது பல இடையூறுகளைக் கடந்து அண்மையில்தான் மெல்ல மெல்ல எழுச்சியை நோக்கி நடக்கத் தொடங்குவதை அறியமுடிகிறது. விடுதலை பெற்ற சில ஆண்டுகளில் ஏற்பட்ட தோட்டத் துண்டாடல் தமிழர் வாழ்வில் பேரழிவை ஏற்படுத்திற்று. 1969ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டுக் கலகம் ஓர் உலுக்கு உலுக்கியது. நாட்டின் மேம்பாட்டுத்திட்டம் (80கள்) மற்றோர் அடி கொடுத்தது. 2020 தொலைநோக்குத் திட்டம் (90கள்), விரைந்து நடைபோடமுடியாத ஒரு பின்னடைவை ஏற்படுத்திற்று. இத்துணைப் பாடங்களுக்குப்பின் அண்மைக் காலமாகத்தான் ஓர் எழுச்சி தலைதூ க்குவதைச் சமுதாயத்தில் காணமுடிகிறது.

தமிழர், நாட்டு விடுதலைக்கு முன் அந்நியருக்கு உழைத்த அந்த மனப்போக்கை மாற்றிக்கொள்ளாமலேயே நீண்ட காலத்தை ஓட்டினர்.

“மரமிருக்கு உளியிருக்கு
மனமிருக்கு உழைப்பதற்கு
மற்றத் தொழில் நமக்கெதுக்கு வேலப்பா - இதுவே
உற்ற தொழில் இதுநமக்குப் போதுமப்பா”[64]

என்ற எண்ணத்துடனேயே வாழ்வைத் தொடர்ந்தனர். இதுகுறித்து (முன்னாள் தொழிலாளர் துணையமைச்சர்) கு.பத்மநாபனை நேர்கண்டபோது (5.1.2000) “1957-ல் விடுதலை கண்டாலும் அடுத்த பத்தாண்டுவரை தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்ற ஆர்வம் குறைவாகவே இருந்து வந்தது. தோட்டப்புறத்துச் சூழல் எப்போதுமே அவர்களை இழுத்துக் கட்டுப்படுத்தியது” என்றார்.

“விடுதலை தங்களை ஏமாற்றிவிட்டது” என்று மக்களின் நிகராளி யாக நின்று ஐ. இளவழகு இப்படித் தம் உணர்வலைகளை வெளிப்படுத்துகிறார்:

> "சுதந்திரம் என்பதின் முதலெழுத் தெங்கோ
> தொலைந்து போனது; தந்திரம் பிழைத்தது!
> இதம்தரும் என்றே ஏற்ற சுதந்திரம்
> எப்படி எங்களை விட்டுப் பிரிந்தது?"[65]

தோட்டத் துண்டாடல்

தோட்டமே எல்லாம்; அதுவே என்றென்றும் நிலையானது என்று இறுமாந்திருந்த தமிழர் வாழ்வில் விடுதலை எந்தவொரு மாறுதலையும் ஏற்படுத்தாத நிலையில் ஒரு பேரிடியாக வந்தது துண்டாடல். நாடு விடுதலை பெற்றதும் வெள்ளைக்கார முதலாளிகள் தங்கள் பெரிய பெரிய தோட்டங் களைத் துண்டுபோட்டு விற்றுவிட்டுத் தாயகம் திரும்பத் தொடங்கினர். இங்கே இன்னொன்றையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். தோட்டங்களைத் துண்டுபோட்டது வெள்ளைக்கார முதலாளிகள் மட்டுமல்லர்; இந் நாட்டைத் தாயகமாய்க் கொண்ட தமிழின முதலாளிகளில் பலர் கொள்ளை ஆதாயம் கருதித் தோட்டங்களைத் துண்டுபோட்டு விற்றுத் தம் சொந்த இனத் தொழிலாளர்களைத் தவிக்கவிட்டனர் என்பது துன்பத்துள் துன்பம் சேர்க்கும் ஒரு கொடிய வரலாற்று அவலமாகும்.

சீனர்கள் தோட்டங்களைத் துண்டுபோட்டு விற்கவில்லை; துண்டு போடப்பட்ட குறைவான விலையுள்ள நிலப்பகுதிகளை வாங்கினர்; பெரும் நன்மை பெற்றனர். நெருக்கடி நிலையின்போது (1948-க்குப்பின்) சுற்றி வேலி போடப்பட்ட புதுக்கிராமங்களில் (New Villages) குடியேற்றப் பட்ட சீனர்களின் குடும்பங்கள் பெருகப் பெருக அவர்களுக்கு நிலப்பற்றாக் குறை ஏற்பட்டது. அதனால் துண்டாடப்பட்ட தோட்டங்களை விரைந்து வாங்கிச் சொந்தமாக்கிக் கொண்டனர்; வளமான வாழ்வை அமைத்துக் கொண்டனர்; நல்ல விளைநிலப் பகுதிகளைப் பெற்றதால் சொத்துடை மையைப் பெருக்கிக்கொண்டனர்; ஓர் உயர்ந்த வாழ்வைச் சொந்தமாக்கிக் கொண்டனர்; அடுத்த தலைமுறை செழிக்கவும் வழி அமைத்துத் தந்தனர். துண்டாடலால் மலாய்க்காரர் நன்மையோ தீமையோ அடையவில்லை. தமிழர் தீமையையே அடைந்தனர்.

சமுதாயச் சீரழிவு

ஒரு பெரிய தோட்டத்தைப் பல துண்டுகளாக்கிச் சிதைக்கும் போது அங்கு வாழும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வீடு, வாசல், வேலை இழந்து, ஒண்ட இடமின்றித் தெருவுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. பல தோட்டங்கள் இங்ஙனம் சிதையும் போது சமுதா யத்தின் பெரும்பகுதி ஏதிலி ஆக நேர்கிறது. அப்படி ஒரு நிலையில் தள்ளாடியது அன்றைய தோட்டப்புறத் தமிழ்ச் சமுதாயம்.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக இங்கு வாழ்க்கையை ஓட்டிவிட்ட சமுதாயத்தின் உண்மையான நிலை என்ன என்பதனைத் துண்டாடல் உணர்த்திற்று. நாட்டை வளப்படுத்திய தமிழர் தங்களை வளப்படுத்திக் கொள்ளாத அவலம் வெளிப்பட்டது. நல்லவர்கள் என்று பெயரெடுத்த தமிழர்கள் தங்களை வல்லவர்களாக ஆக்கிக் கொள்ளாத ஏமாளித்தனம் புரிந்தது. "பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை" (குறள். 247) என்பது எத்துணை உண்மை என்பதனைச் சமுதாயம் முதன்முதலாக உணர்ந்தது.

தோட்டப்புறத்தில் வாழ்வில்லை என்று விரட்டப்படும்போது, வேறு ஏதாவது ஒரு வழி தேடுவதுதானே இயல்பு? அதற்கொப்பப் பட்டணப் பகுதிகளையொட்டிய புறம்போக்கு நிலங்களில் குடிசை போட்டுக் கொண்டனர். வாழ்விழந்த சமுதாயத்தின் ஒரு பகுதியினர் குடிசைக்கு வந்ததும் அவர்கள் இயல்பு வாழ்க்கை பாழானது. உயர்ந்த நிலையில் மதிப்போடு வாழ்ந்தவர்களும் குடிசைப்பகுதியில் குன்றிப் போயினர்.

அங்குச் சமுதாயக் கட்டமைப்பில்லை; முறையான வாழ்வு நெறி யில்லை; நல்லவொரு தலைமையில்லை; வழிகாட்ட, தகவுரை (ஆலோசனை) கூற ஆள் இல்லை; குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தக்கார் இல்லை. இவை ஒருபுறமிருக்கத் தண்ணீர், மின்சாரம், சாலை, சுற்றுச்சூழல் வசதிகளோ, அருகில் கல்விக் கூடங்களோ இல்லாத நிலை.

எதிர்காலத் தலைமுறை கல்வியில் நன்னெறிகளைக் கற்றுக்கொள்ள வழியில்லை. ஒன்றுகூட, விரும்பியன செய்யப் பொது மண்டபமோ, வழி பாட்டுத் தலங்களோ இல்லை. ஆனால், தோட்டப்புறத்தில் அனைத்தும் அமைந்திருந்தன. ஒரு சமுதாயக் கட்டமைப்பு இருந்தது. ஒரு பாதுகாப்பு நிலை, அச்சமற்ற வாழ்வை ஏற்படுத்தித் தந்திருந்தது. மொத்தத்தில் ஒரு தோட்டம் (Estate) சற்றேறக்குறைய அடிப்படை வாழ்வுக்குத் தேவையான அனைத்தும் கொண்ட ஒரு சிற்றூராகவே-கிராமமாகவே திகழ்ந்தது. ஆனால், புறம்போக்குக் குடிசைப்பகுதிகள் மேற்படி நிலைக்கு முற்றிலும் முரண்பட்டிருந்தன. இன்றைய சமூகச் சீர்கேட்டிற்கு, நெறியற்ற ஒரு கூட்டம் உருவாவதற்கு அன்றே ஊன்றப்பட்ட வித்துதான் இந்த அவலம். அதன் தொடர்ச்சிதான் இன்றும் சீரழிவிற்கே காரணமாய் இருந்து வருகிறது.

துண்டாடல் தடைச் சட்டம்

தோட்டப்புறத்து மக்கள் வாழ்வைச் சின்னாபின்னமாக்கிய துண்டாடலைத் தடுக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங் கத்தால் அதனை உடனடியாகத் தடுக்கமுடியவில்லை. மலேசியர் சொந்த நிலம்

பெறுவதற்குத் துண்டாடல் வாய்ப்பாக உள்ளது என்று ஒரு சிறுபான்மைக் கருத்து இருந்தது. அரசு அக் கருத்தை ஏற்றுக்கொண்டதால் துண்டாடலைத் தடுக்க முன்வரவில்லை. தொழிற்சங்கமும் ஒன்றும் செய்யமுடியாமல் தவித்தது. துண்டாடலைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று (டாக்டர்) வி.டேவிட் முதலாய எதிர்க்கட்சித் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் அரசுக்கு எடுத்துரைத்தனர். பொது இயக்கங்களும் இதனில் கருத்துச் செலுத்தின. இதழ்களும் தொடர்ந்து எழுதின.

இந்தியர்-தமிழர் நிகராளர்களாய் அமைச்சரவையிலிருந்த வீ.தி. சம்பந்தனும், வெ. மாணிக்கவாசகமும் சமுதாய நலனில் கருத்துக்கொண்டு செயலில் இறங்கினர். தமிழர் நலத்தைக் காக்க மாற்று வழிகளை எண்ணிச் செயல்பட முயன்றனர்.

தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கம்

வீ.தி. சம்பந்தன் சமுதாயத்திற்காக அரசாங்கத்திடம் சலுகை பெறுவதில் நாட்டமில்லாதவர்; தலைமை அமைச்சர் துங்குவின் மதிப்பிற்கும், நம்பிக்கைக்கும் உரியவராக விளங்கினார் எனினும், அரசு உதவியை நாடாமல் சமுதாயம் சொந்தக்காலில் நிற்க வழிகாணும் முயற்சிகளிலேயே ஈடுபட்டார். அந்த முயற்சியின் விளைவுதான் பொருளாதார இயக்கமான தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம். சமுதாயத்தின் நிலையறிந்து ஒருவர் மாதம் பத்து வெள்ளி சேமிப்பதன் மூலம் பெருந்தொகை சேமித்துத் துண்டுபடும் தோட்டங்களை வாங்கலாம்; வேறு தொழில்களிலும் ஈடுபடலாம் என்பது அவர் திட்டமாகும். அவர் இத் திட்டத்தில் ஓர் இலட்சம் உறுப்பினர் சேர்வர் என்று எதிர்பார்த்தார். சமுதாயத்திற்கு இதுபோன்ற பொருளா தாரத் திட்டம் இதற்குமுன் உருவாகவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

வீ.தி. சம்பந்தன் திட்டம் அரசு ஆதரவோடு வெற்றியை நோக்கி நடைபோடத் தொடங்கியது. எனினும், தொழிலாளர்களைத் தன்வயம் வைத்திருந்த தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் அதற்கு எதிர்ப்புத் தந்தது. "துன் சம்பந்தனின் கூட்டுறவுச் சங்க முயற்சி (தே.நி.நி.கூ.ச.) தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்காது. துண்டாடலைத் தடுத்து நிறுத்துவது ஒன்றே உரிய வழி" யென்று தோட்டந்தோறும் பரப்பியம் செய்தது. அதனால் கூட்டுறவுச் சங்கத்தில் சேர முன்வந்த எண்ணற்றோர் மனம் மாறினர். தோட்டங்கள் நிலைக்கவேண்டும்; தோட்டத் தொழிலாளர் தங்கள் ஆளுகைக்குட்பட்டவராகவே இருக்க வேண்டுமென்பது தொழிற்சங்கத்தின் குறியாய் இருந்தது. அதனால் பல இடையூறுகளைக் கூட்டுறவுச் சங்கம்

எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வெதிர்ப்பலையால் அது தன் குறியீட்டு எல்லையை அடையமுடியாமல் போனது.

மக்கள் வாழ்விழந்து அலைக்கழிக்கப்படுவதைக் கண்டுருகிய வீ.தி. சம்பந்தன் எதிர்ப்புகளை எதிர்கொண்டார்; ஏச்சுகளையும், பேச்சுகளையும், இழிமொழிகளையும் தாங்கிக்கொண்டார். தம் முயற்சியில் தளராமல் நம்பிக்கையோடு தோட்டந்தொறும் சென்று மக்களைச் சந்தித்தார்; வானொலியில் அன்றாடம் எழுச்சியுரை நிகழ்த்தினார். தடைகளைக் கடந்து தம் திட்டத்தில் ஓரளவு வெற்றிகண்டு 22 தோட்டங்களையும் வாங்கினார். இதனால் துண்டாடலால் ஏற்பட்ட அவலம் முற்றும் தீர்ந்துவிடவில்லை. எனினும், சமுதாயம் மூச்சுவிடத் தொடங்கியது. ஏதுமற்றுக் கிடந்த தமிழர் வாழ்வில் கூட்டுறவு ஒரு புதிய சிந்தனையை, பொருளாதார உணர்வை, நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியதில் வெற்றி கண்டது. கூட்டுறவு சங்கம் தோட்டங்கள் வாங்க அரசு ஒரு கோடி வெள்ளியைக் கடனாகத் தந்துதவி யது. நீண்ட காலத் தவணைகளில் கூட்டுறவு சங்கம் அக் கடனை அடைத்தது. வீ.தி. சம்பந்தன் நினைத்திருந்தால்-அருள் மனத்தவரான துங்குவைக் கேட்டிருந்தால் 10 கோடிகூடக் கிடைத்திருக்கும் என்பது ஒருதலை.

துண்டாடலால் உருக்குலைந்து போகும் நிலையிலிருந்த சமுதாயத்திற்கு நம்பிக்கை ஊட்டி, பொருளாதாரச் சிந்தனையை ஏற்படுத்தி வழிகாட்டிய வீ.தி. சம்பந்தனை வாழ்த்திப் பாடாத கவிஞரே இல்லை எனலாம். சான்றுக்கு ஞானதாசனின் ஒரேயொரு பாடல் மட்டும் இங்கு எடுத்துக் காட்டாகத் தரப்பெறுகின்றது.

"துண்டுவிழும் தோட்டத்தில் துவண்டு கிடந்தவரைக்
கண்டு மனம்வாடிக் கவலையுற்றான் அம்மானை
கண்டு மனம்வாடிக் கவலையுற்ற சம்பந்தன்
பெண்டுபிள்ளை வாழப் படியளந்தான் அம்மானை
படியேறி வந்தார்க்கு மடியானான் அம்மானை"[66]

அரியன செய்து கூட்டுறவுத் தந்தையெனப் போற்றப்பட்ட பெருந்தலைவர் வீ.தி.சம்பந்தனின் மறைவிற்குப் பின்னர் (18.5.1979) கே.ஆர்.சோமசுந்தரம் தலைமைப் பொறுப்பேற்று வழிநடத்தி வருகிறார். பி.சகாதேவனின் நிருவாகத் திறன் அவருக்குக் கைகொடுத்து வருகிறது. இப்போது கூட்டுறவு சங்கம் சிறப்பான பல செயல்களைச் செய்து வருகிறது. தலைநகரில் 28 மாடிகளைக் கொண்ட 'துன் சம்பந்தன் மாளிகை' (Wisma Tun Sambanthan) தமிழர்க்குத் தலைநிமிர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதனுள் அமைந்துள்ள 'சோமா அரங்கம்' (டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம்

அரங்கம்) பல்வேறு சமுதாய நடவடிக்கைகளுக்குக் களமாய் விளங்கி வருகிறது. தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் தன் கடன்களை அடைப்பதற்காக விற்ற தோட்ட மாளிகையையும் விலைக்கு வாங்கிப் பொது நிகழ்ச்சிகள் நடத்த இடமளித்து வருகிறது. கூட்டுறவு சங்கம், உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்குத் துன் சம்பந்தன் பெயரில் கல்விக்கடன் வழங்குகிறது; 70 அகவையைத் தொட்ட முதியோர்க்கு மாதம் 50 வெள்ளி உதவித்தொகை அளித்து வருகிறது. ஆண்டுதோறும் இலக்கியப் போட்டிகள் நடத்திப் படைப்பிலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரிந்து வருகிறது; பல்வேறு சமுதாய நடிவடிக்கைகளுக்கு நிதியளித்து வருகிறது. இன்று இந்தியர் பொருளாதாரம் 1.5 விழுக்காடாவது உள்ளது என்றால் அதற்கு இச் சங்கம் சேர்த்துள்ள சொத்தும் ஒரு காரணமாகும்.

துண்டாடல் கட்டுப்படுத்தப்பட்டது

துண்டுபட்ட தோட்டங்களில் சில தோட்டங்களையே கூட்டுறவுச் சங்கத்தால் வாங்க முடிந்தது. துண்டாடலைத் தடுத்து நிறுத்தாவிடில் ஓர் இனவாழ்வே அழிந்துவிடும் நிலை உருவானது. துண்டாடலைத் தடுக்க அப்போதைய தொழிலாளர் அமைச்சர் வெ. மாணிக்கவாசகம் பெருமுயற்சி மேற்கொண்டார். கு.பத்மநாபன் இதற்குப் பெரும் ஒத்துழைப்புத் தந்தார். இதுகுறித்து அவரை நேர்கண்டபோது அவரே விளக்கமாக எடுத்துரைத்தார்.

"இது துண்டாடலை நேரடியாகத் தடுக்கும் சட்டமன்று. துண்டுபட்ட நிலங்களை, உங்கு அஜிஸ் செய்த ஆய்வை மீண்டும் செய்து, துண்டாடலைத் தடைசெய்வதைவிட நிருவாக முறையில் துண்டுபடும் நிலங்களைப் பதிவு செய்வதற்குத் தடைகொண்டுவருவது நல்லதென்று முடிவு செய்யப்பட்டது. ஒரு தோட்டத்தைத் துண்டுபோட்டுப் பிரிக்க வேண்டுமானால் அதற்கு முன் அரசின் அனுமதி பெறவேண்டுமென்ற நிலை கொண்டுவரப்பட்டது. உங்கு அஜிஸ்[67] கூறியது என்னவெனில் ஸ்ரீலங்காவில் கொண்டு வந்ததைப் போன்று கொண்டு வரவேண்டு" மென்றார்.

அங்குத் தேயிலைத் தோட்டங்களெல்லாம் துண்டாடப்பட்டு, துண்டுபட்ட நிலங்களைப் பதிவுசெய்யப் போகும்போது அதிகாரிகள் மறுத்தனர். மலேசியாவில் (என் முயற்சியால்) ஆய்வு செய்தபோது, இங்குத் துண்டாடப்பட்ட நிலங்களுக்குப் பட்டா கிடைக்க வேண்டுமென்ற அவசிய மில்லை. துண்டாடப்பட்டதற்கான ஆவணங்களை மட்டும் வைத்துக் கொண்டால் போதும். பெரிய தோட்ட வரைபடத்தில் அவர்களுக்குரிய துண்டைப் பிரித்துக்கொண்டார்கள். அதனைப் பதிவு செய்ய வேண்டிய தேவை இல்லாதிருந்தது; ஒப்பந்தம் போதுமானதாய் இருந்தது. ஆக

இதுபோன்ற ஒரு பரிந்துரையைச் செய்தால் இங்கு அது பலிக்காது என்று எனக்குச் சொல்லப்பட்டது. அதனால் அதனில் (Section 119) மாற்றம் செய்யப்பட்டது.

ஒரு தோட்டத்தைப் பிரிக்க வேண்டுமானால் அதற்குமுன் மாநில அரசின் தொழிலாளர் பிரிவு அதனை ஆய்வு செய்து, தொழிலாளர்களுக்கு மாற்று ஏற்பாடு என்ன? துண்டாட வேண்டுமானால் செய்துகொள்; விற்க வேண்டுமானால் விற்றுக்கொள். ஆனால், தொழிலாளர்களுக்குச் செய்யப்பட்ட மாற்று ஏற்பாடு என்ன? மாற்று ஏற்பாடு செய்ய முன்வராத நிலையில் தோட்டங்களைத் துண்டாட முடியாது என்று சட்டம் வந்தது. இதனால் தோட்டங்களைத் துண்டுபோட வழியில்லாமல் போனது. உண்மையொடு ஆய்வு செய்துபார்த்ததில் தீர்வு பிறந்தது"[68] என்கிறார்.

தொடர்ந்து சொன்ன அவர், "இச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் பல இடங்களில் நில ஒதுக்கீடு செய்து, சொந்த வீடுகள் கட்ட வழிவகுக்கப் பட்டது. அல்லது கணிசமான இழப்பீடு தரப்பட்டது" என்றார். இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னரே ஓரளவு அமைதி பிறந்தது.

பல தோட்டங்கள் துண்டாகி ஒரு சமுதாயத்தின் ஒரு பகுதி சீரழிவிற்கு ஆளானபின் தமிழ் அமைச்சர்கள் முயன்று சட்டப் பாதுகாப்புத் தேடுமுன்பே தொழிற்சங்கம் பொறுப்போடு கடுமையாக முயன்றிருந்தால் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளையாவது தொழிலாளர்கள் பெறும் ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கலாம்; எத்தனையோ தமிழ்ப்பள்ளிகளை அழிவிலிருந்து காத்திருக்கலாம். நாட்டு உருவாக்கத்திற்குப் 12 இலக்கம் பேரை இழந்த இனம், 150 ஆண்டுகளுக்குமேல் தோட்டங்களிலேயே தங்களை அடைத்துக்கொண்டு உடல் பொருள் ஆவியனைத்தையும் தோட்ட வளர்ச்சிக்கே ஈந்த இனம் இழப்பீடாக வாழ்ந்த வீட்டையாவது பெறத் தொழிற்சங்கம் உரிமைகோரி அறவழியில் போராடியிருந்தால் அரசும் ஆதரவளித்திருக்கும். காலம் கடந்து செய்ய எண்ணியதை முன்பே செய்திருக்க வேண்டும். காக்கவேண்டிய கை அசையவில்லையானால் இரக்கக் குரல் எங்கிருந்து எழும்?

உலகத் தொழிற்சங்கங்களோடு உறவுடைய தே.தோ.தொ.ச. போராட்டத்தைத் தொடங்கியிருந்தால் உலக அளவில் மலேசியத் தோட்டத் தொழிலாளர் அவலம் வெளிப்பட்டு முன்பே தீர்வு பிறந்திருக்கலாம்.

புதிய துண்டாடல்

தோட்டத் துண்டாடலால் ஏற்பட்ட அவலம் நீங்குவதற்குமுன் அப்போதைய தலைமை அமைச்சர் (துன்) அப்துல் ரசாக்கின் நாட்டு

மேம்பாட்டுத் திட்டங்களுக்காகப் பல தோட்டங்கள் அழிக்கப்பட்டன. மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதற்கொப்பத் தோட்டப்புறத் தமிழர் வாழ்வில் அமைதியே படியாத நிலையே தொடர்கதையானது. நாட்டு மேம்பாட்டிற்கு யாரும் குறுக்கே நிற்க முடியாதுதான்; கூடாதுதான். எனினும் திட்டங்களால் பாதிக்கப்படும் மக்கள் உயிர்வாழ்க்கைக்கு மாற்று ஏற்பாட்டிற்கு வழிவகுக்க வேண்டுவது பொறுப்புள்ளவர் கடமையாகும்; மாந்தநேயப் பண்பும் ஆகும்.

தோட்டப்புறத்துத் தமிழர்களுக்குத் தொடக்க காலத்தில் தாங்கள் வேலை செய்யும் தோட்டங்களைத் தெரியும்; கண்காணி, கிராணி (கணக்கர்), நிருவாகி (வெள்ளைக்காரத் துரை) ஆகியோரைத் தெரியும். தொழிற்சங்கம் உருவானபின் அதன் தலைவர்களைத் தெரியும். வாழ்வளிக்கும் தோட்டத்தைத் தெய்வத்தின் சன்னிதியாகவும், தொழிற்சங்கத் தலைவர்களை வழிபடு தெய்வங்களாகவும் கருதிவாழ்ந்த கள்ளங் கபடமற்ற அப்பாவிகள் அவர்கள்.

அவர்களை வேறு யாரும் நெருங்க முடியாத நிலை இருந்தது. வெளி அமைப்புகள் அங்கே சென்று எதுவும் செய்ய முடியாத கடுமையான சூழல் அங்கிருந்தது. அவர்களுடன் நேரடித் தொடர்புடையோர் தொழிற் சங்கத்தார் மட்டுமே அவர்களின் வாக்கையே வேதவாக்காகத் தோட்டப்புற மக்கள் மதித்தனர்.

தொழிற்சங்கத் தலைவர்களோ தொழிலாளர்களுக்குக் காலத்திற் கேற்ப ஓரளவு சம்பள உயர்வு, தொழில் பாதுகாப்பு, குடியிருப்பு வசதி போன்றவற்றை மட்டுமே கருத்தில்கொண்டு செயல்பட்டனர். இது முன்பே சொல்லப்பட்டதுதான். உலகளாவிய புகழ் படைத்த அவர்கள் நாட்டின் போக்கிற்கு ஏற்பத் தொழிலாளர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தொழில்திறன் (Skills) மிக்கவர்களாக வழிகாட்டியிருக்கலாம்; பொருளாதார வளம்பெற உதவியிருக்கலாம்; தோட்டப்புறத்துப் பள்ளிகளின் மேம்பாட்டிற்காகக் கருத்துச் செலுத்தியிருக்கலாம்; இளைஞர்களை ஊக்கி, வலுமிக்க தலைமுறையினராக்கத் துணை புரிந்திருக்கலாம். "தொழிற் சங்க நோக்கம் அவையன்று; தொழில் பாதுகாப்பு, சம்பள உயர்வு, நல்ல குடியிருப்புகள் அமைதலைக் கண்காணித்தல் போன்றவையே" என்று தொழிற்சங்கம் காரணம் காட்டலாம். இது வளர்ந்த நாடுகளுக்குப் பொருந்தலாம். சொந்தத் தாயகத்தில் முழுஉரிமைக் குடிகளாய் உள்ள தொழிலாளர்களுக்கு ஏற்றதாக இருக்கலாம். புலம்பெயர்ந்து வந்த, வேறு எந்தத் தொடர்பும் இல்லாமல் தோட்டமே எல்லாம், தொழிற்சங்கமே எல்லாவற்றுக்கும் வழிகாட்டி என்று நம்பிக் கிடக்கும் பாமரர்களை வழிநடத்தும் தொழிற்சங்கம், சற்றுக் கூடுதல் பொறுப்போடு அந்த மக்களுக்கு

வழிகாட்டி உதவுதல் இன்றியமையாக் கடமையாகும் என்பதைத் தொண்டு மனமும், அறவழிப் பற்றும் மிக்கார் மறுக்காமல் ஒப்புவர்.

தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம்பற்றிய இக் கருத்துக்கு அரண்சேர்ப்பது போல் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் எம்.ஆர். டீவன்சன் கூறியிருப்பதை மு.வரதராசு தம் நூலில் எடுத்துரைக் கின்றார்:

"தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஒரு திறமையான வேலைநிறுத்தத்தை நடத்தக் கூடிய நிலையில் ஒருபோதும் இருந்ததில்லை. இந்தியத் தொழிலாளர்கள் தோட்டங்கள், ரயில்வே, அல்லது முனிசிபல் மற்றும் பொதுத்துறையிலேயே முடக்கப்பட்டுள்ளனர். உணவு, உடை, குடியிருப்பு ஆகியவற்றில் அவர்கள் ஓரளவு முன்னேற்றம் கண்டபோதிலும் சமூகரீதியான விடுதலையை அவர்கள் இன்னும் பெறவில்லை. அவர்கள் இன்னும் துண்டித்துத் தனிமையாக்கப்பட்டுள்ள சமூகங்களாகக் கம்பெனி அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான குடியிருப்புகளிலேயே வசிக்கி றார்கள். தோட்டங்களில் உள்ள தமிழ்ப்பள்ளிக் கூடங்கள், தொழிலாளர்களின் குழந்தைகளைத் தொழிலாளியாக உருவாக்குவதற்கே செயல்படு கின்றன. தொடர்ந்து கல்வி பெறவோ, முன்னேற்றம் பெறவோ, தொழிலாளர் குழந்தைகளுக்கு வாய்ப்புகளே இல்லை. சாதனைகளைச் செய்துவிட்டதாக உரிமை கொண்டாடியபோதிலும் புதிய தொழில்திறன்களைப் பெறுவதன் மூலம் நவீனத் தொழிலாளர்கள் என்ற நிலைமைக்கு ஒரு கணிசமான இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை உயர்த்தவுமில்லை. உண்மையில் சுதந்திரமான தன்னுணர்வுள்ள தொழில்துறைப் பாட்டாளி வர்க்கமாக அவர்களை உருவாக்கவுமில்லை. தோட்டத் தொழிலாளர்கள் நிலையில் பெரிய மாற்றம் ஏதும் ஏற்படவுமில்லை."[69]

ஆய்வாளர் கூறுவதுபோல் தொழிற்சங்கம் தொழிலாளர் நலனில் கருத்துக்கொண்டு கால வளர்ச்சிக்கேற்ப அவர்களின் திறன் (Skills) வளர்ந்து எந்நிலையிலும் வாழும் ஆற்றலை நம்பிக்கையை ஏற்படுத்தும் வண்ணம் வளர்ந்திருந்தால், துண்டாடல்காலத்திலும், மேம்பாட்டுக் காலத்திலும் அவர்கள் இத்துணைத் துன்பங்களுக்கு ஆளாகியிருக்க வேண்டிய அவலம் ஏற்பட்டிருக்காது.

நாட்டு மேம்பாட்டுக்காகத் தோட்டங்கள் அழியும்போது தொழிற் கூடங்களில் பணியாற்றும் திறனைப் பெற்றிருப்பாராகில், புதிய வாழ்வுப் பாதையைக் கண்டிருக்க முடியும். தோட்டம் என்ற வட்டத்துக்குள்ளேயே வாழவேண்டிய நிலை ஏற்பட்டிராது.

தொழிற்சங்கத்தின் பொருளாதார முயற்சி

தோட்டத் தொழிலாளர்களின் குறிப்பிட்ட சில சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே தன் கடமை எனச் செயல்பட்ட தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தோட்டத் துண்டாடல் தொழிலாளர்களிடையே ஏற்படுத்திய அலைக்கழிப்பால் ஒரு புதிய சிக்கலை எதிர்கொண்டது. எத்துணையோ முயன்றும் துண்டாடலைத் தடுத்து நிறுத்த முடியாத சூழலிலும் அவர்களுக்கு நம்பிக்கையூட்ட ஏதாவது செய்தாக வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது. வீ.தி. சம்பந்தனின் தே.நி.நி.கூ. சங்கத்திற்கு மாற்றாக ஒன்றனைச் செய்யும் எண்ணமும் கொண்டிருக்கலாம். அதுவும் 'கோட்கோ' என்ற சுருக்கப் பெயரிலான "கிரேட் அலோனியர்னர்ஸ் டிரேடிங் கார்ப்பரேசன்" (The Great Alonearners Trading Corporation) என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைத் தொடங்கியது (1967). இது மிகப் பெரிய திட்டமாகும். அரசிடமிருந்து குத்தகைக்கு எடுத்த நிலத்தில் வேளாண்மைக் குடியேற்றம் ஒன்றனை அமைக்கும் திட்டமாகும். ஆனால், இதனில் பங்குபெற விரும்பும் உறுப்பினர் ஒவ்வொருவரும் 7600 வெள்ளி முன்பணமாகச் செலுத்த வேண்டும் என்று வரையறுக்கப்பட்டது. சங்கத்தின்மேல் நம்பிக்கை கொண்டு பலர் முன்பணம் செலுத்தினர். மேலும் வளரும் நாடுகளுக்கு உதவும் நெதர்லாந்து முதலீட்டுக் கழகம், ஐக்கிய ஆசிய வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து ஒரு கோடி அமெரிக்க டாலரை இத் திட்டத்திற்கெனக் கடன் வாங்கியது. முதலில் 200 பேரைக் கொண்ட குடியேற்றச் சங்கம் முயன்றது. ஆனால் அத் திட்டம் முழுமையடையாமல் படுதோல்வியில் முடிந்தது. இதுபற்றிச் சங்கத்தின் நிருவாகச் செயலாளர் திரு. நவமுகுந்தனையும் பொதுச் செயலாளர் ஜி. சங்கரனையும் நேர்கண்டபோது "சங்கம் மிகப் பெரிய ஆசைகொண்டு மாபெரும் திட்டமிட்டதால் பெருந்தோல்வியைச் சந்திக்க வேண்டியதாயிற்று"[70] என்றனர்.

அத் திட்டத்தைத் திறமையோடு நன்கு நிருவகித்திருந்தால் இன்று ஒரு முன்னாள் தொழிலாளர் கிராமத்தைக் கண்டு இறும்பூதெய்தலாம். அதுபோல் வேறு சிலவும் உருவாக்கியிருக்கலாம். சங்கமும், தோட்டங்கள் துண்டுபட்ட காலத்தில் ஓர் அருஞ்செயல் புரிந்து புதுவாழ்வுக்கு வழிவகுத்த பெருமையைப் பெற்றிருக்கலாம்; வரலாறு படைத்திருக்கலாம்.

மாதச் சம்பளம்

தொழிலாளர்களுடைய சம்பள உயர்வுக்குப் போராடுவதை முதன்மை நோக்கமாய்க் கொண்ட சங்கம் மேற்கொண்ட ஒரு நற்செயலையும் இங்குக் குறிப்பிட வேண்டும். நாள்கூலிக்கே மாரடித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க வேண்டுமென்று இது

நீண்டகாலமாகக் கோரிக்கை எழுப்பி வந்தது. அதற்குத் தோட்ட முதலாளியர் சங்கம் (M.A.P.A.) ஒப்புக்கொள்ளவேயில்லை. தொழிற் சங்கத்தின் இடைவிடாத போராட்டம் அண்மையில் வெற்றிகண்டது (1993). இவ் வெற்றிக்கு மலேசிய இந்தியர் காங்கிரசு தலைவரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான ச.சாமிவேலுவின் பங்கு அளப்பரியதாகும். அதற்குரிய சான்று அவர் உரையிலிருந்து தரப்பெறுகின்றது :

"கடந்த 2000ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இந்த விவகாரத்தை நான் அமைச்சரவையில் எழுப்பினேன். 'புதிய யுகத்தை நோக்கித் தோட்டத் தொழிலாளர்கள்' என்னும் ஆய்வு அறிக்கையையும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தேன். இந்த நூற்றாண்டு காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி மனிதவள அமைச்சருக்குப் பிரதமர் உத்தரவிட்டார். பிரதமர் மகாதீர் முகம்மது அவர்களின் நேரடித் தலையீட்டின் பலனாக 22.04.2003-ல் மலாயன் விவசாய உற்பத்தியாளர் சங்கமும் (மாபா), தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் (என்.யு.பி.டபிள்யு) ஒரு புதிய கூட்டு உடன்பாட்டில் கையெழுத்திட்டன. தோட்டத் தொழிலாளர் மாதச் சம்பளப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்ட பிரதமராக (அவையில் வீற்றிருந்தார்) வரலாற்றில் நீங்கள் என்றும் நிலைத்திருப்பீர்கள் என்று கூறுவதைத் தவிர இவ் வேளையில் வேறு நான் என்ன சொல்ல முடியும்?"[71]

மாதச்சம்பளத் திட்டம், உழைக்கும் வர்க்கத்திற்கு வழங்கப்பட்டது ஒரு மாபெரும் சிறப்பாகும். ஆனால் காலச் சூழலுக்குரிய சம்பளமாக அஃது இல்லை என்பது ஆய்வாளர் கணிப்பாகும். காலப்போக்கில் அதனில் மாற்றம் நிகழலாம்.

உள்நாட்டுக் கலகமும் பின்விளைவும்

துண்டாடலால் துவண்ட சமுதாயம் மெல்ல மெல்லத் தலை தூக்கிய வேளையில் மற்றோர் பேரிடி விழுந்தது. 1969ஆம் ஆண்டு (மே 13) இங்கு நடந்த இனக்கலவரத்தால் நாடே அல்லோலகல்லோலப் பட்டது. கலகத்துக்குத் தமிழர் எவ்வகையிலும் காரணமல்லர் எனினும் அவர்களும் பேரிழப்புக்கு ஆளாக நேர்ந்தது.

தேர்தல் முடிந்து நாடாளுமன்றம் கூடுவதற்குமுன் கலகம் நடந்தது. உலகிலேயே தாம் மகிழ்ச்சியான பிரதமர் என்று பூரித்திருந்த விடுதலைத் தந்தை துங்கு அப்துல் ரகுமான் மனமுடைந்தார்; அப்துல் ரசாக் தலைமையில் அமைந்த தேசிய நடிவடிக்கை மன்றத்திடம் (National Operation Council) ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப் பதவி விலகினார்.

தேசிய நடவடிக்கை மன்றம் மிகக் கடுமையான சட்டதிட்டங்களைக் கொண்டுவந்தது. "குடியுரிமை பெற்றவர்க்கே வேலை; மற்றவர்கள் வேலை இணக்கச் சீட்டுப் (Work Permit) பெற வேண்டும்; அதுவும் மூன்று மாதங் களுக்கே செல்லும்" என்பன போன்ற கடும் நடவடிக்கைகள் சமுதாயத்தைப் பெரிதும் பாதித்தன.

நாடு விடுதலை பெறும்முன்பே அரசு வழங்க முன்வந்த குடியுரிமைச் சலுகையை ஏற்காமல் கருத்தற்றிருந்தவர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு ஆளாயினர். வேலை செய்ய வாய்ப்பில்லையென்றால் எப்படிப் பிழைப்பது என்று சோர்ந்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர் மூதாதையர் நாட்டுக்கே திரும்பிவிட்டனர். சென்றவர்கள் எல்லாருமே குடியுரிமை அற்றவர்கள் அல்லர். பலர் குடியுரிமையை ரத்துச் செய்துவிட்டுப் பிற்கால வாழ்வுக்காகச் சேமிப்பில் இருந்த தொழிலாளர் சேமநிதியிலிருந்த (EPF) பணத்தையும் மீட்டுக் கொண்டு சென்றுவிட்டனர்.

தோட்டத் துண்டாடல் சமுதாயத்தைக் கீழே தள்ளியது. உள்நாட்டுக் கலகமோ கால்வைத்து அழுத்தியது. சமுதாயத்திற்கு அடிமேல் அடி. தன்னுணர்வற்ற, எழுச்சி மனப்பான்மையற்ற, விழிப்புணர்வற்ற சமுதாயத்தைத் தலைவர்கள் அவ்வப்போது தங்களால் முடிந்தவரை காத்து வந்தனர்; வழிநடத்தி வந்தனர். இது விடுதலைக்குப்பின் ஏற்பட்ட இரண்டாங்கட்ட அதிர்ச்சியாகும். மூன்றாண்டுகளுக்குப் பின் நாடாளுமன்றம் கூடியபின் நிலைமை சீர்படத் தொடங்கியது. குடியுரிமை இல்லாதவர்களுக்கும் வாழ்வுண்டு என்ற நம்பிக்கை பிறந்தது. வீ.தி. சம்பந்தனும், வெ.மாணிக்க வாசகமும் அமைச்சரவையில் இடம்பெற்றனர். படிப்படியாகச் சமுதாயம் சீர்படத் தொடங்கியது. பொருளாதாரத்தில் மேம்பாடு காணும் முனைப்பும் சமுதாயத்தில் எழுந்தது.

புதிய சிந்தனை மலர்ச்சி

நாட்டுக்குக் கிடைத்த விடுதலையின் மதிப்பைத் தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பகுதியினர் உணராததற்கு முன்பே - அதன் பயனை நுகரத் தொடங்குவதற்கு முன்பே - தோட்டத்துண்டாடலால் மிகப் பெரிய சரிவு ஏற்பட்டது. அடுத்து 1969-ல் சற்றும் எதிர்பாராமல் நடந்த உள்நாட்டுக் கலகம் (மே 13) மற்றொரு முடக்கத்தை ஏற்படுத்தியது. அக் காலகட்டத்தில் (1960களில்) சமுதாயத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் 20 முதல் 25 விழுக்காட்டை எட்டியது. இரப்பர்த் தோட்டங்கள் பல செம்பனைத் (Palm Oil) தோட்டங்களாக்கப்பட்டன. அதனால் ஆட்குறைப்புச் செய்ய நேர்ந்தது. இரப்பரை விடச் செம்பனைத் தொழிலுக்குக் குறைவான ஆள்களே போது

மானதாகும். அடுக்கடுக்காய்ப் பல துன்பங்கள் சேர்ந்தபோது சமுதாயம் திக்குமுக்காடியது. அப்போது சமுதாயப் பிணிகளைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது சிந்தனை மாற்றங்களுக்கு வழிவகுத்த காலகட்டமாகும். நாட்டின் போக்கிற்கேற்ப சமுதாயம் மாறவேண்டுமென்ற புரட்சிகரமான சிந்தனைக்கும் இது வழிவகுத்த காலம் எனலாம். ஆய்வாளர், அரசியல் தலைவர்கள், சமுதாய நலனில் கருத்துக்கொண்ட தொண்டு மனத்தினர், இயக்கங்களின் தலைவர்கள் போன்றோர் பார்வை சமூகத்தின்பால் விழுந்தது. ஊடகங்களும் இச் சிந்தனைக்கு உரமூட்டின. அதனால் சரிந்து கிடந்த சமுதாயத்தை மீட்கப் பல்வேறு முயற்சிகள் அரும்பின. தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கம்போன்று பல அமைப்புகள் தோன்றின. தோட்டம் வாங்குதல், அங்காடிகள் அமைத்தல், வீட்டுடைமை ஏற்படுத்துதல், சிறு தொழில்களில் இளைஞர்களை ஈடுபடுத்துதல் போன்ற துறைகளில் அவை கருத்துச் செலுத்தின.

பொருளாதார மேம்பாட்டு இயக்கங்கள்

வீட்டுடைமையை நோக்கமாய்க் கொண்டு ச.சாமிவேலு தொழிலாளர் மேம்பாட்டுக் கூட்டுறவுக் கழகத்தைக் (KPJ) கண்டார் (1977); சா.ஆ. அன்பானந்தனைத் தலைவராய்க் கொண்ட தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை மாஜு ஜெயா (Maju Jaya) கூட்டுறவுக் கழகத்தை அமைத்தது. சம்பூர்ணா முதலீட்டுக் கழகம் (Sampoorna Holdings) தொழிலாளர் நாணயக் கூட்டுறவு சங்கம் போன்று பல உருவாயின. பல வட்டார அமைப்புகளும் தோன்றின.

நேசா பலநோக்குக் கூட்டுறவு சங்கம்

அக் காலகட்டத்தில் தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கத்திற்கு அடுத்து, நன்கு திட்டமிட்ட பெரிய அமைப்பாகத் தோன்றியது நேசா பலநோக்குக் கூட்டுறவு சங்கமாகும். வீ.தி. சம்பந்தனுக்குப் பின் ம.இ.கா.வின் தேசியத் தலைவராய்ப் பதவியேற்ற (1973-79) வெ. மாணிக்கவாசகம் இதனை உருவாக்கினார். செயலாக்க முறையில் சிந்தித்தவரும், சிறந்த நிருவாகியும், அணுகுமுறையில் சிறந்தவருமான அவர் பல உயர்ந்த நோக்கங்களுடன் இதனை நிறுவினார். இது மற்றக் கூட்டுறவுக் கழகங்களுக்கு மாறுபட்ட நோக்கமுடையதாகும்.

மாணிக்கவாசகத்தின் நோக்கம், செயல்திட்டம் குறித்து கு.பத்மநாபன் கூறியதை இங்கு எழுதுவது பொருத்தமாகும்.

“பெரிய அளவில் கடன்பெற்றுத் தோட்டங்களை வாங்கிச் சிரமப் படுவதைத் தவிர்த்து, சுயகாலில் நிற்கும் சமுதாயத்தைக் காணவேண்டும்;

கல்வி பெறவேண்டும்; பொருளாதார வளம்பெற வேண்டும்; தனித்தனிக் குடும்ப முன்னேற்றங்களுக்கான முயற்சி போன்ற மாறுதல்களைப் பெற்றால்தான் உயர்வு காண முடியுமென்று மாணிக்கவாசகம் சிந்தித்தார். ஒரு நோய்க்குக் கண்ட மருந்து பக்கவிளைவால் பல நோய்களை ஏற்படுத்தி விடாதபடி திட்டம் தீட்டவேண்டுமென்பது அவர் கொள்கையாகும்" என்று கூறிய கு. பத்மநாபன் (K. Padmanabhan) மேலும் தொடர்ந்தபோது,

"60களின் பிற்பகுதிவரை பொருளாதாரச் சிந்தனை சமுதாயத்திற்கு வரவேயில்லை. அச் சிந்தனை உள்ளபடி 70ஆம் ஆண்டுகளில்தான் தோன்றியது; இளைஞர் எழுச்சி ஏற்பட்டது. மாணிக்கவாசகம் தலைவ ரானபின் சமுதாயத்தில் ஒருமித்த குரல் எழுந்தது.

முதன்முதலில் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், மலேசியத் திராவிடர் கழகம், தமிழ் இளைஞர் மணிமன்றம் போன்ற அமைப்புகளின் தலைவர்களை அழைத்து வட்டமேசையில் உட்காரவைத்துச் சமுதாயம்பற்றிச் சிந்திக்க வைத்தவர் அவர். முன்பு ஓர் அமைப்பு மற்ற அமைப்பை ஒப்புக் கொண்டதில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

வெ. மாணிக்கவாசகம் தலைமைத்துவத்தில்தான் சமுதாயத்தைப் பல்வேறு கோணங்களில் முழுமையாக ஆராய்ந்து நீலப்புத்தகம் (கு. பத்மநாபன் தலைமையில்) தயாரிக்கப்பட்டது" என்ற அவர் நேசாவின் செயல்முறைகளை மேலும் விளக்கினார்.

"தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கத்தின் நோக்கு வேறு; நேசா பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் நோக்கு வேறு. அடிப்படையிலேயே இரண்டின் நோக்கங்களும் வேறுவேறானவை.

* தன்காலில் நிற்க வேண்டும்.
* பொருளாதாரச் சிந்தனை கொள்ள வேண்டும்.
* சேமிப்பில் கருத்துச் செலுத்த வேண்டும்.
* தனிச் சொத்துடைமை பெறவேண்டும்.
* கல்வி வளர்ச்சியில் நாட்டம் செலுத்தவேண்டும்

என்பன போன்றவையே நேசாவின் அடிப்படை நோக்கங்களாகும். நேசா கூட்டுறவு சங்கத்தின் நோக்கங்களைச் செயல்படுத்தப் பலகோடி வெள்ளி திரட்டப்பட்டது.

* வீடுகள் கட்டப்பட்டன. (அரசாங்கத்தால் மிகுதியான வீடுகள் கட்டப்படாத காலமது)
* நிலம் வாங்கப்பட்டது (வேளாண்மை நிலங்கள்)

* மீன்வளர்ப்புத் திட்டத்திற்குக் கடன் தரப்பட்டது.
* கால்நடை வளர்ப்புக்குக் கடன் உதவி நல்கப்பட்டது.
* சொந்தச் சொத்துடைமை பெற ஊக்குவிக்கப்பட்டது.
* எம்.பி.ஐ. கட்டடம் (WISMA MBI) 7 மில்லியனுக்கு வாங்கப் பட்டது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு நேசாவையும் உலுக்கியது. நிருவாகக் குறைகள் சிலவற்றையும் ஏடுகள் சுட்டிக்காட்டின. சில இடையூறுகளும் நேர்ந்தன. 7 மில்லியனுக்கு வாங்கப்பட்ட கட்டடத்தை 11 மில்லியனுக்கு விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இப்போது அதன் மதிப்பு 20 மில்லியன் ஆகும். அதனை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டிராவிடில், கூட்டுறவு சங்கத்தின் துன் சம்பந்தன் மாளிகை போலத் தமிழர் சொத்தாக இன்னுமொரு மாளிகை நிலைத்திருக்கும்.

பல இடர்ப்பாடுகளுக்கு ஆளான நேசா எல்லாவற்றையும் எதிர் கொண்டு இன்று சொந்தக் கட்டடத்தில் நன்கு இயங்குகிறது. நேசா அதன் நோக்கப்படி இப்போது கல்விக்கடனும் வழங்கத் தொடங்கி யுள்ளது குறிப்பிடத்தக்கது. சிறந்த மாணவர்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகளையும் நடத்திவருகிறது.

மாணிக்கவாசகத்தின் தொலைநோக்கு

நிலைமைகளை நன்கு ஆராய்ந்து, பின்னடைவுகளை ஏற்படுத்தும் பலவீனங்களைப் போக்கி, பொருளாதார வளத்துடன் கூடிய கட்டமைப்பு மிக்க ஒரு சமுதாயம் காணத் திட்டங்கள் வகுத்துத் திறம்படச் செயல் பட்டார் வெ. மாணிக்கவாசகம். சமுதாயம் கல்விக்கண் பெற்றுக் கால மாற்றத்திற்கேற்பத் திறன்களைப் பெறச் சிரம்பானில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றனை வாங்கினார்; உயர்கல்வி கற்க மாணவர்களுக்குக் கல்விக்கடன் வசதியை ஏற்படுத்தினார். இஃது இவரது தொலைநோக்குச் சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ம.இ.கா. தலைமையகக் கட்டடத்தைக் கட்டியதொடு பல மாநிலங்களில் ம.இ.கா. சொந்தக் கட்டடம் பெறச்செய்தார். கட்சிக்கு ஒரு நிறுவன அமைப்பை ஏற்படுத்தினார். அவர் திட்டங்கள் முழுமையாகச் செயல்வடிவத்திற்கு வருவதற்கு முன்னரே -தலைமையேற்ற குறுகிய காலத்திலேயே - புகழுடம்பெய்தியது பெருந்துன்பத்தை ஏற்படுத்தியது; சமுதாயத்திற்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்து வருத்தியது.

வெ. மாணிக்கவாசகத்திற்குப்பின் அவர் உருவாக்கிய நேசா பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்கு அவரால் வழிகாட்டி வளர்க்கப்

பெற்ற முன்னாள் ம.இ.கா. துணைத் தலைவரும், துணையமைச்சராய் நீளப் பணியாற்றியவருமான சி.சுப்பிரமணியம் தலைமையேற்றுத் திறமுடன் வழிநடத்தி வருகிறார்.

வெ. மாணிக்கவாசகம் கண்ட மற்றொரு பொருளாதார அமைப்பான சிறுதொழில் முதலீட்டுக் கழகம் (Unit Trust) ஆதாயத்துடன் இயங்கவில்லை; பெரும் சரிவையே கண்டு கொண்டிருக்கிறது. நிறுவனமும் புதிய பெயரில் கைமாறி விட்டது. நம்பிப் பணம் போட்டோர்க்கெல்லாம் ஏமாற்றமே வரவாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதன் எதிர்காலம் குறித்தும் எதுவும் தெரியவில்லை.

பேரிழப்புகள்

பொருளாதார வளத்திற்குப் புதிய நோக்கில் செயல்பட்டு வந்த பெருமகன் வெ. மாணிக்கவாசகம் காலத்தில் ம.இ.கா. துணைத்தலைவ ராகவும் நாட்டின் சட்ட அமைச்சராகவும் விளங்கிய பட்டறிவு மிக்கவரான (டான்ஸ்ரீ) ஆதி. நாகப்பன் அமைச்சர் பதவியேற்ற மிகக் குறுகிய காலத்தில் உலக வாழ்வை நீத்தார் (9.5.1976). அடுத்துக் கூட்டுறவுத் தந்தையான முன்னாள் மூத்த அமைச்சர் வீ.தி. சம்பந்தன் புகழுடம்பெய்தினார் (18.5.1979). அதே ஆண்டில் வெ. மாணிக்கவாசகமும் பூதவுடல் நீத்தார் (12.10.1979). குறுகிய காலத்தில் முப்பெருந் தலைவர்கள் மறைவெய்தியது சமுதாயத்தை ஓர் உலுக்கு உலுக்கியது; பெருந்துன்பத்தைச் சேர்த்தது; அனுபவச் செல்வம் மிகுந்த மூத்த தலைவர்கள் மறைவு சமுதாயத்தில் ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்தியது.

இளஞாயிறு எழுந்தது

அரசாங்கத்தில் இந்திய-தமிழ்ச் சமுதாயத்தின் நிகராளியாய் விளங்கிய தலைவர் வெ. மாணிக்கவாசகத்துக்குப்பின் இளமைத்துடிப்பும், சமுதாய உணர்வும், கலைத்திறனும் கொண்ட ச. சாமிவேலு கட்சியின் தலைமைப் பொறுப்பேற்றார் (1979). கட்டடக் கலைத்திறனும், நிருவாக ஆற்றலும் செயல்துடிப்பும் கொண்ட அவர் பொதுப்பணித்துறை அமைச்சராகி, நாட்டின் தோற்றத்தையே மாற்றி உலகப் புகழடைந்தார். நெடுஞ்சாலைகள், ஆசியாவிலேயே மிக நீண்ட பினாங்குப் பாலம், புத்துலக வளர்ச்சிக் கேற்ப அனைத்துலக வானூர்தி நிலையம் போன்ற பலவற்றை உருவாக்கிய துறையின் அமைச்சர் என்ற பெருமை இவரைச் சாரும்.

நாட்டு வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய ச.சாமிவேலு, சமுதாய வளர்ச்சிக்கும் நற்பணிகள் பல புரிந்துள்ளார். இவர் தொடக்க காலத்தில் சமுதாயத்திற்கு ஓர் எடுப்பான தோற்றத்தையும், நிமிர்ந்த நன்னடையோடு

புதிய தலைமுறை எழுச்சிபெற ஊக்கியதையும் மற்றச் சமுகங்களும் மதிக்கும் ஒரு நிலையைத் தோற்றுவித்ததையும் மறக்கவியலாது. மறுமலர்ச்சி எண்ணங் கொண்ட இவர் தலைமை, இளைய தலைமுறையை ஈர்த்தது. இவர் மிகக் கடுமையான போக்குக் கொண்டவர் எனினும் கனிவும் இவரிடம் படிந்தே உள்ளது என்பதனையும் வள்ளன்மைக் குணம் கொண்டவர் என்பதனையும் எவரும் மறுக்கார்.

இவர் பொதுப்பணித்துறைக்கு அமைச்சர் ஆதலால் பள்ளிக் கூடங்களைக் கட்டும் அதிகாரம் இவரிடமிருந்தது. நாட்டின் தேசியவகைப் பள்ளிகளில் ஒன்றான தமிழ்ப்பள்ளிகளின் மிகத் தாழ்வான நிலையை உணர்ந்திருந்தார். மற்றப் பள்ளிகளோடு அவற்றையும் தலைநிமிரச் செய்யும் கடமை உணர்வு இவரை வருத்தியதால் அதனில் தனிக்கருத்துச் செலுத்தினார். அமைச்சர் என்றாலும் இவர் எண்ணியதை எல்லாம் செய்துவிட முடியாதல்லவா? தம் வரம்புக்கு உட்பட்டுப் படிப்படியாகப் பள்ளிக் கூடங்களைச் சீர்ப்படுத்தியும் இணைப்புக் கட்டடங்கள் கட்டியும், பழைய உரிமங்களைக்கொண்ட புதிய பள்ளிக் கட்டடங்களை எழுப்பும் முயற்சிகளை மேற்கொண்டும் தமிழ்ப்பள்ளிகளின் தோற்றத்தை மாற்றி வருகிறார்.

பள்ளிக் கட்டடம் கட்டப் பிரதமரின் நிதியிலிருந்து தொகை பெறப்படுகிறது. நாட்டுத்திட்டத்தில் அது சேர்க்கப்படாதது, விரைந்த முன்னேற்றத்திற்கு வழிவகுக்கவில்லை என்பதையும், தமிழ்ப்பள்ளிகளுக்குப் புதிய கல்விமுறைக்கேற்ற அமைப்புக் கொண்ட கட்டடங்கள் பெருகவில்லை என்பதனையும் இங்குக் குறிப்பிட வேண்டும். அதற்கு எத்தனையோ காரணங்கள் உள்ளன. நாட்டில் உள்ள 523 தமிழ்ப்பள்ளிகளில் 189 பள்ளிகள் மட்டுமே அரசின் முழு உதவிபெறும் பள்ளிகள் என்பதும், மற்றப் பள்ளிகள் அரசின் முழு உதவி பெறாதவை என்பதும் ஒரு முதன்மைக் காரணமாகும். பல பள்ளிகள் சொந்த நிலத்தைப் பெற்றிராததும் மற்றொரு காரணமாகும்.

முழுஉதவி பெறும் தகுதியில்லாத பள்ளிகள் மாற்றாந்தாய் நிலையின வாகும். தன் முழுப்பொறுப்பில் உள்ள பள்ளிகளுக்கு மட்டுமே அரசு அனைத்தும் செய்யும். மற்றவை இரக்க உணர்வோடு செய்யப்படுபவையே. அந்நிலையிலும் (டத்தோஸ்ரீ) ச. சாமிவேலு தளர்ந்துவிடாமல் தொடர்ந்து தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சியில் தனிக்கருத்துச் செலுத்தி வருகிறார். அனைத்துப் பள்ளிகளையும் அரசின் முழு உதவிபெறும் பள்ளிகளாக்க மேற் கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் இன்னும் வெற்றிக்கோட்டை எட்டவில்லை.

ச. சாமிவேலு அரசுபணியோடு, கட்சிப்பணி, கல்விப்பணியிலும், சமுதாயப் பணியிலும் தொடர்ந்து கருத்துச் செலுத்தி வருகிறார்.

அதனொடு பொருளாதார வளர்ச்சிக்குத் தமக்கு முன் யாரும் நினைத்துப் பார்த்திராத மிகப் பெரிய திட்டமொன்றை வகுத்தார். அவர் திட்டங் களைச் செயல்படுத்த அமைந்த அமைப்பு 'மைக்கா முதலீட்டு நிறுவனம்' (Maika Holdings) ஆகும். அது 10 கோடி முதலீட்டை நோக்கமாய்க் கொண்டு அமைந்தது. சமுதாயம் அவர்மேல் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையால் திட்டத்தை அறிவித்த ஒரே மாதத்தில் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே முதலீடு குவிந்தது. அந்தத் திட்டத்தால் ஈர்க்கப்பட்டிருந்த மக்கள் தம்மிடமிருந்த நகைநட்டுகளை அடகுவைத்தும் கால்நடைகளை விற்றும் வங்கியில் கடன் பெற்றும் எதிர்கால மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு நிதியைக் குவித்தனர்.

ஒரே மாதத்தில் பத்துக்கோடிக்குமேல் திரண்டதைக் கண்ட மற்றச் சமுதாயத்தினர் "இந்தியர் ஏழைகளாய் இருந்தாலும் அவர்களால் எப்படிக் குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய தொகையைக் குவிக்க முடியும்?" என்று வினா எழுப்புமளவு நிலை ஆனது.

மாபெரும் குறிக்கோளோடு தொடங்கப்பட்ட இத் திட்டம், தன்னைப் பல வழிகளிலும் உயர்த்துமென்று எண்ணிய சமுதாயத்திற்கு நம்பிக்கை ஊட்டும்வண்ணம் அது நடைபோடவில்லை. நாட்டின் பொருளாதாரச் சரிவும் அதனை நெருக்கியது. மேலும், பல நல்ல வாய்ப்புகளை அது பற்றிக் கொள்ளாமல் கோட்டைவிட்டது என்றும் பொருத்தமானவர்களைக் கொண்டு அது சரியாக நிருவகிக்கப்படவில்லை என்றும் ஆய்வாளர்களின் குறைகூறல்களுக்காளானது; எதிர்ப்புக்குரல்களும் நிரம்ப எழுந்தன.

அந் நிறுவனம் பல்வேறு நோக்கங்களை உள்ளடக்கி ஐந்துகோடி வெள்ளி மதிப்பீட்டில் எழுப்பத் திட்டமிட்ட 27 மாடிக் கட்டடம் கால்கோள் விழாவுடன் நின்று போனது. மாற்றுத் திட்டம்பற்றி எதுவும் இதுவரை தெரியவில்லை. எல்லாவற்றையும் ஒருபக்கம் விடுத்து, மைக்காவின் இன்றைய மதிப்பை நோக்கும்போது அன்று (1991) ஒரு வெள்ளிக்கு (100 காசு) வாங்கப்பட்ட ஒரு பங்கின் இன்றைய விலை பாதி அளவுக்கும் கீழாக (46 காசு) உள்ளது. அதன் எதிர்காலம்பற்றி ஒன்றும் தெரியவில்லை. 66 ஆயிரம் பங்குதாரர்களைக்கொண்ட அந்நிறுவனத்தின் தற்போதைய தலைவர் (டான்ஸ்ரீ மானாப்,); தலைமை நிருவாகியாகச் செயல்படுபவர் ச. வேள்பாரி.

மலேசியாவில் இந்தியர் பொருளாதார நிலையில், சொத்து உடைமைத் துறையில் மிகவும் பின்தங்கியுள்ளதை அரசு ஒப்புக்கொண் டுள்ளது. இது மூன்றாவது தொலைநோக்குத் திட்டத்திலும், எட்டாவது மலேசியத் திட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சமுதாயத்தின் பொருளா

தாரத்தை உயர்த்தும் நோக்கில் பல இயக்கங்கள் அமைந்தும் சொத்துடைமை ஒரு விழுக்காட்டைத் தாண்டவில்லை. மிக அண்மையில் அஃது 1.5 என்ற நிலையை அடைந்தது. அது மூன்று விழுக்காட்டை எட்டவேண்டுமென்று அரசு நல்லெண்ணம் கொண்டுள்ளது.

அரசு தந்த பல வாய்ப்புகளைச் சமுதாயம் பற்றிக் கொள்ளாததால் பின்னடைந்து கிடக்கிறது என்று பழிபோடப்படுகிறது. இதனை "வாழத் தெரியாத சமுதாயம்; முன்னேற எண்ணங்கொள்ளாத பிற்போக்குச் சமுதாயம்" என்று திட்டித் தீர்ப்பதில் பொருளில்லை.

இது தொடக்க காலத்திலிருந்தே அழுத்தப்பட்டுவந்த சமுதாய மாகும். சமுதாயத்தின் 85 விழுக்காடு தோட்டப்புறத்தையே நம்பி வாழ்ந்தது; இன்று ஒரு பகுதி, புறம்போக்கு நிலக் குடிசைகளில் உள்ளது. சமுதாயத் தலைமையோ வழிகாட்டலோ இன்றி அன்று முதல் ஒரு சிறு வட்டத்துக்குள் முடங்கிக்கிடந்தது. தன் சொந்த இல்லம் என்று நம்பி இருந்த குருவியின் கூட்டைக் குரங்கு பிய்த்து எறிந்ததுபோல் தோட்டத் துண்டாடல் கோரத் தாண்டவமாடியதால் சமுதாயத்தின் ஒரு பகுதி வாழ்விழந்தது.

உள்நாட்டுக் கலகத்தையடுத்துத் (1969) தலைதூக்கிய சிக்கல் மேலும் ஓர் அழுத்து அழுத்தியது. தொடர்ந்த மேம்பாட்டுத் திட்டங்கள், தொலை நோக்குத் திட்டம் போன்றவை அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சியை ஏற்படுத்தின என்பதனை வரலாறு சுட்டுகிறது. நடக்கவே இயலாதவனை "ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்; பரிசு கிட்டும்" என்பதுபோலவே மேம்பாட்டுத் திட்ட அமைப்புகள் இருந்தன. அதனால் ஒவ்வொரு நிகழ்வும் சரிவை ஏற்படுத்தியதே அன்றி உயர்வு தருமாறு அமையவில்லை.

மலாய்க்காரச் சமுதாயமும் அடிப்படை அற்றிருந்த சமுதாயம் தான். விடுதலைக்குப்பின் அரசின் தனிச் சலுகைவழிக் காலூன்றி வளர்ந்து வருகிறது. சீனச் சமுதாயம் வலுவான பொருளாதாரம் பெற்றுள்ள சமுதாயம். ஆக, மற்ற இரு சமுதாயங்களுடன் தமிழ்ச் சமுதாயத்தை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது.

இப்போது அரசு வேலைகளும் மிக அரிதாகவே கிடைக்கின்றன. வலிவான தனியார் நிறுவனங்களும் தமிழர்க்கு இல்லை. கூட்டமைப்புகளில் பல நிருவாகத் திறனின்மையால் இழப்புகளையே சந்திக்கின்றன. தம் சொந்தக் காலில் நிற்கும் வலிவும் இல்லை. சமுதாயத்தின் பெரும்பகுதியினர் நிறைவான உழைப்பைக் கொட்டிக் குறைவான கூலி பெற்றும் உடல் உழைப்புத் தொழிலாளர்களாகவே வாழ்கின்றனர். சமுதாயத்தின் நிலைகுறித்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு புள்ளிவிவரம் கூறும் செய்தி இது:

"மலேசியாவின் மக்கள்தொகையில் இந்தியர் 8 விழுக்காடு. மொத்த இந்தியர்களில் 70 விழுக்காடு உழைக்கும் மக்கள்; 20 விழுக்காடு நடுத்தர வர்க்கத்தினர்; 10 விழுக்காடே மருத்துவம், வழக்கறிஞர் போன்ற உத்தியோகஸ்தர்களாகவும் தொழில்களில் ஈடுபடுவோராகவும் உள்ளனர்.

"மலேசிய இந்தியர்களில் 85 விழுக்காட்டினர் தமிழர்கள். இவர்களில் பெரும்பாலானோர் தோட்டப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள பாட்டாளிகள். மொத்த இந்தியக் குடும்பங்களையும் எடுத்துக்கொண்டால் அவற்றில் 63 விழுக்காட்டுக் குடும்பங்கள் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களாகவே உள்ளன. இவற்றில் 15 விழுக்காடு குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்றன. கடன்சுமைகளோ ஏராளம். சேமிப்பு என்பது இக் குடும்பங்களில் மிக அரிது."[72]

மேற்படி நிலையிலுள்ள ஒரு சமுதாயம் விரைந்து முன்னேறவில்லை என்று குறைபட்டுக் கொள்வதை விடுத்து, அதற்குச் சிந்தனைமாற்றம் ஏற்படுத்தும் முயற்சிகளிலும், வழிகாட்டி உதவும் நடவடிக்கைகளிலும் கருத்துச் செலுத்துவதே உரிய சமுதாயத் தொண்டாகும்.

நலிந்த தமிழர் - இந்திய சமுதாயம் இங்கு முற்றாகக் கைவிடப் படவில்லை. நலிவு கண்டுள்ள அதனைத் தலைநிமிர்த்தத் தொடர்ந்து பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றே வருகின்றன என்பது ஆறுதல் தரும் செய்தியாகும்.

சமுதாய இயக்கங்களும் அரசியலும்

சமுதாய இயக்கங்கள் அதனை ஊக்கப்படுத்தலாம்; தகவுரை கூறலாம்; கலை, இலக்கிய, பண்பாட்டு உணர்வுகளை ஊட்டலாம்; தாய்மொழியில் பற்றுக்கொள்ளத் தூண்டலாம். சமய இயக்கங்கள் இறைவழிபாட்டு முறைகளுக்கு ஊறு வராமல் பாதுகாக்கலாம்; ஆன்மிக உணர்வுபெற ஊக்கலாம். ஆனால், சமுதாயத்திற்கு வேண்டியன பெற்றுத்தரும் உரிமையும், கடப்பாடும் அரசியல் கட்சிகளுக்கே உண்டு.

விடுதலைக்கு முன்பும் பின்பும் தோன்றிய இயக்கங்களான திராவிடர் கழகம், தமிழர் சங்கங்கள், தமிழ் இளைஞர் மணிமன்றங்கள், எழுத்தாளர் இயக்கங்கள், கலை இலக்கிய சமய அமைப்புகள், தமிழ்க்கல்வி அறவாரியங்கள், நாடக மன்றங்கள் எல்லாம் தாய்மொழி உணர்வை ஊட்டுவதிலும், கலை இலக்கியப் பண்பாட்டு வளர்ச்சியைத் தூண்டுவதிலும் பேரளவு உழைத்து வெற்றி கண்டுள்ளன; தொடர்ந்து உழைத்தும் வருகின்றன. ஆனால் பொருளாதாரத் துறையில், தொழில்துறைகளில் முன்னேற அவை உதவும் நிலையில் இல்லை.

பொருள்வள மேம்பாட்டை நோக்கமாய்க் கொண்டு நிறுவப்பட்ட இயக்கங்களில் பல அக் குறிக்கோளை அடைவதில் வெற்றிகாணவில்லை.

ம.இ.கா.வே. துணை

மலேசியாவின் அரசியல், மற்றப் பல நாடுகளின் அரசியலை விடவும் பல வகைகளில் மாறுபட்டதாகும். இது முடியாட்சி முத்திரை உடைய நாடு எனினும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற அவையே அனைத்தையும் முடிவு செய்யும் அதிகாரம் கொண்டது.

இங்குத் தனித்த ஓர் இனமோ கட்சியோ ஆட்சி அமைக்கும் வாய்ப்பில்லை. பல்லினங்கள் கொண்ட நாடு என்னும் முறையில் கூட்டமைப்பு ஒன்றே ஆளும் உரிமை பெற இயலும்.

விடுதலைக்குமுன் நடந்த நாட்டின் பொதுத் தேர்தலிலேயே (1955) அம்னோ (UMNO), ம.சீ.ச. (MCA), ம.இ.கா. (MIC) ஆகிய மூன்று கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டணியே (Alliance) வென்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. பின்னர் அது மக்கள் முற்போக்குக் கட்சி, சபா ஐக்கியத் தேசியக் கட்சி போன்ற பல கட்சிகள் இணைந்த தேசிய முன்னணி (National Front) ஆனது. அதுவே தொடர்ந்து பொதுத் தேர்தல்களில் வென்று நாட்டை ஆண்டுவருகிறது.

தேசிய முன்னணியில் ம.இ.கா. இடம்பெற்றுள்ளது; ஆட்சியில் தமிழர் - இந்தியர் நிகராளியாய் விளங்கி வருகிறது. தேசிய முன்னணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளில் தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட மக்கள் முற்போக்குக் கட்சியும் ஒன்று. இதன் தலைவர் கே.வி.எஸ். இவர் பிரதமர் துறையில் துணையமைச்சராய்ப் பதவி வகிக்கிறார். ஆளும் தேசிய முன்னணி யில் உறுப்பியம் பெறாத (அதனை ஆதரிக்கும்) தமிழர்க்குரிய மற்றோர் அரசியல் கட்சி எம்.ஜி. பண்டிதனைத் தலைவராய்க் கொண்ட இந்தியர் முன்னேற்ற முன்னணி (IPF - Indian Progressive Front) ஆகும். வி.கோவிந்தராஜ் அமைத்த ஜனநாயக மலேசிய இந்தியர் கட்சி (ஜ.ம.இ.க. - D.M.I.P - Democratic Malaysian Indian Patry) கலைக்கப்பட்டு ம.இ.கா.வுடன் இணைக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளில் இந்தியர்-தமிழர்

மக்களாட்சியில் வலிமை வாய்ந்த எதிர்க்கட்சிகள் முதன்மை வாய்ந்தவை. ஆளும் கட்சிகள் புரியும் தவறுகளைச் சுட்டவும், மாற்றுக் கருத்துகள் கூறி ஆட்சி செம்மையாக நடக்கவும் துணைபுரியவை எதிர்க் கட்சிகள்.

மலேசிய அரசியலில் ஒரு காலத்தில் வலிமைமிக்க எதிர்க்கட்சித் தலைவர்கள் இருந்தார்கள். அண்மைக் காலமாய் எதிர்க்கட்சிகள் வலிவிழந்து நிற்கின்றன.

முந்தைய காலங்களில் மக்கள் முற்போக்குக் கட்சியிலிருந்த டி.ஆர். சீனிவாசகமும் (15.3.69-ல் மறைவு), எஸ்.பி. சீனவாசகமும் (4.6.74-ல் மறைவு) நாடாளுமன்ற எதிர்முனையிலிருந்து அரிமா முழக்கம் செய்தனர். சனநாயகச் செயல் கட்சியிலிருந்த பட்டுவும் (12.7.95-ல் மறைவு), வி.டேவிட்டும் (1995-ல் அரசியலைத் துறந்தார் 10-7-2005-ல் மறைந்தார்) பின்னடைந்த இந்தியர் - தமிழர் குறித்துத் துணிவோடு வாதிட்டனர். மாநிலச் சட்ட மன்றங்களிலும் எதிர்வரிசையில் இந்தியர் இடம்பெற்றிருந்தனர். இப்போது அந்த இடங்களில் இந்தியர் அருகிவிட்டனர். நாடாளு மன்றத்தில் குலசேகரன், கர்ப்பால் சிங் ஆகியோர் எதிர்வரிசையில் இடம் பெற்றிருக்கின்றனர். கர்ப்பால் சிங் ஓர் இடரில் சிக்கி வலிமை குன்றி விட்டார். குலசேகரன் மட்டுமே இந்தியர்-தமிழர் நலன் குறித்துத் துணி வொடு குரல் கொடுத்து வருகிறார்.

அரணாக நிற்கும் ம.இ.கா.

மலேசியாவில் இயங்கும் அரசியல் கட்சிகளில் சில, தேர்தல் நேரத்தில் இந்தியர் - தமிழர் ஏழைமைபற்றிப் பேசும்; தேர்ந்தெடுக்கப்பட்டால் உரிய இடங்களில் அவ்வப்போது குரல் எழுப்பும். அந்த அளவே அவற்றால் இயலும் செயல்பாடுகள். ஆனால் சமுதாய வாழ்வுரிமையை முழுமையாகக் கண் காணித்துக் கடனாற்றும் பொறுப்பை முழுமையாகக் கொண்ட அரசியல் கட்சி, ம.இ.கா. ஒன்றேயாகும். இது மிகைப்படுத்திச் சொல்லப்படுவதன்று; உள்ள நிலை இதுதான். அஃது ஆளும் கட்சிகளில் ஒன்றாக இருப்பதாலும், 4,640 கிளைகளையும், 5,80,380 உறுப்பினர்களையும் கொண்டிருப்பதாலும் இயல்பாகவே அதற்கு அந்த வாய்ப்பு அமைந்துள்ளது என்பதில் இரு கருத்தில்லை.

ஆட்சியில் ம.இ.கா.

1955-ல் அமைந்த கூட்டணியில் ம.இ.கா. இரு நாடாளு மன்ற இடங்களைப் பெற்றது. ஒருவர் அமைச்சரானார். விடுதலைக்குப் பிந்திய நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்ட நால்வரில் மூவர் வென்றனர். 1964, 69 ஆம் ஆண்டுகளில் நடந்த பொதுத்தேர்தல்களில் மும்மூன்று இடங்களிலும் 74, 78, 82 ஆகிய ஆண்டுகளில் நந்நான்கு இடங்களிலும், 86, 90 ஆகிய ஆண்டுகளில் அவ்வாறு (ஆறு ஆறு) இடங்களிலும், 1995-ல் ஏழு இடங்களிலும் வென்றனர். கடந்த தேர்தலில் நாடாளுமன்ற இடங்கள்

கூடியதால் 9 நாடாளுமன்ற இடங்கள் இந்திய சமுதாயத்திற்கு ஒதுக்கப் பட்டன. போட்டியிட்ட அனைவரும் வென்றனர்.

அமைச்சர் பதவிகள்

விடுதலைக்கு முந்திய அரசில் ஓர் அமைச்சர் பதவியும், விடுதலைக்குப் பின்னர் அமைந்த அரசில் ஓர் (முழு) அமைச்சர் பதவியொடு ஒரு துணையமைச்சர் பதவியும் வழங்கப்பட்டன. பின்னர் நடந்த தேர்தலுக்குப்பின் இருவர் (முழு) அமைச்சர் பதவியில் அமர்ந்தனர். இந் நிலை சட்ட அமைச்சர் பதவி வகித்த ஆதி. நாகப்பன் மறையும்வரை (1976) தொடர்ந்தது. பின்னர் ஓர் அமைச்சர் என்ற நிலையே தொடர்கிறது. ஆனால், துணையமைச்சர்கள், நாடாளுமன்றச் செயலாளர்கள் எனப் பலர் பதவி வகிக்கின்றனர். இப்போது 9 நாடாளுமன்ற உறுப்பினர்களில் அமைச்சராகச் சாமிவேலு பதவி வகிக்கிறார். துணையமைச்சர்களாக ஜி.பழனிவேலு, எஸ்.வீரசிங்கம், எஸ்.சோதிநாதன் ஆகியோர் அமர்த்தம் பெற்றுள்ளனர். நாடாளுமன்றச் செயலாளர்களாகக் கோமளா கிருஷ்ணமூர்த்தி, ச.விக்னேஷ்வரன், எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.

மாநிலச் சட்டமன்றங்களில் 19 பேர் உறுப்பியம் பெற்றுள்ளனர். அவர் களுள் வி.சரவணன் (கெடா), பி.கே. சுப்பையா (பினாங்கு), கோ. இராஜு (பேரா), க.சிவலிங்கம் (சிலாங்கூர்), டி.இராஜகோபாலு (நெகிரி செம்பிலான்), ஆர். இராகவன் (மலாக்கா), கே.எஸ்.பாலகிருஷ்ணன் (ஜோகூர்) ஆகியோர் ஆட்சிப் பேரவை (மாநில அமைச்சர் தகுதி) உறுப்பினர்களாக அமர்த்தப் பெற்றுள்ளனர். ஊராட்சி மன்றங்களிலும் பலர் அமர்த்தம் பெற்றுள்ளனர்.

நாடாளுமன்ற மேலவையில் ஜெயா பார்த்திபன் முதலாய ஏழுபேர் உள்ளனர். மேலவைத் துணைத் தலைவராக எஸ்.ஓ.கே. உபைதுல்லா, தலைவராக ஜி.வடிவேலு ஆகியோர் பதவி வகித்துள்ளனர். நாடாளுமன்றத் துணைத்தலைவராய் டி.பி.விஜயேந்திரன் சிறிது காலம் பதவி வகித்துள்ளார்.

மேற்கண்ட அரசியல் பின்னணி சமுதாயத்தை வழிநடத்தி வருகிறது.

அன்று முதல்

ம.இ.கா. தோற்றம் கண்ட காலத்தின் நிலை முன்பே கூறப்பட்டது. விடுதலைக்குப்பின் வீ.தி. சம்பந்தன், வெ.மாணிக்கவாசகம் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துரைக்கப் பெற்றது. ச.சாமிவேலு கால நடவடிக்கைகளின் தொடர்ச்சி இங்குச் சொல்லப்படு கிறது.

துன் உசேன் ஓன் பிரதமராயிருந்த காலத்தில் ம.இ.கா. தேசியத் தலைவராகவும், முழு அமைச்சராகவும் பொறுப்பேற்றார் ச. சாமிவேலு (1979).

அவர் தலைமையேற்ற காலம் அப்துல் ரசாக் வகுத்த மேம்பாட்டுத் திட்டத்தால் நாடு முன்னேறிக்கொண்டிருந்த நேரம். அந்த நேரமும் தோட்டங்களின் அழிவால் தொழிலாளர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருந்த நேரமெனினும், முன்னைய தலைர்களின் முயற்சியாலும் கூட்டுறவு சங்கங்களின் தோற்றத்தாலும் சமுதாயத்தில் சற்றே சிந்தனை மாற்றம் ஏற்பட்டிருந்த காலமாகும். அதனால்தான் அவர் தொடங்கிய மைக்கா முதலீட்டு நிறுவனத்திற்குக் குறுகிய காலத்தில் பெருந்தொகை சேர்ந்தது.

எதிர்காலத்தில் தோட்டங்கள் பாதுகாப்பானவை அல்ல என்று உணர்ந்த அவர் தோட்டங்களை விட்டு வெளியேறுமாறு அங்கு வாழ்ந்த வர்களுக்கு அறிவுரை கூறினார். இளைஞர்களும் தோட்டத்தைவிட்டு வெளியேறும் எண்ணம் கொண்டனர்.

தோட்டத்தைவிட்டு வெளியே வந்தவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த வாழ்வு அமையவில்லை. தோட்டத் துண்டாடலால் வேறுவழியின்றி வெளியேறியவர்கள், மேம்பாட்டுத் திட்டங்களால், 2020 தொலைநோக்குத் திட்டங்களால் வெளியேறவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானோர், சொந்த விருப்பத்தின்பேரில் தோட்டங்களைவிட்டு வெளியேறியோர் எனப் பெருந்தொகையினர் நகர்ப்புறப் புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் போட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

விடுதலை பெற்றதிலிருந்து நாட்டில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொள்ள இயலாத நிலையிலிருந்த சமுதாயச் சிக்கல்களைத் துன் சம்பந்தன் எதிர்கொண்டதுபோல், மாணிக்கவாசகம் எதிர்கொண்டதுபோல் இவரும் எதிர்கொண்டார்; சிக்கல்களைக் களைய முயற்சி மேற்கொண்டார்.

தொழிலாளர்கள் வாழ்ந்த குடிசைப் பகுதிகளில் வெள்ளம், தீ விபத்து, கலகம் போன்றவை ஏற்பட்டபோதெல்லாம் உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொண்டார்; இளைஞர்களுக்கு எழுச்சி உணர்வை ஏற்படுத்தினார். இவர் பதவிக்காலத்தின் முற்பகுதிப் பணிகள் சமுதாய மாறுதல்களுக்குப் பெருந்துணை துணைபுரிந்தன.

நாட்டு மேம்பாடு

1980களுக்கு முன்பிருந்த நாட்டின் தோற்றம் மிக விரைந்து மாறத் தொடங்கியது. 1990-க்குப் பின் தலைகீழ் மாற்றம் கண்டு, வேளாண்மை பின்னடைந்து தொழில்துறை முன்னணிக்கு வரத்தொடங்கியது. கணினிப் பயன்பாடு மிக்கோங்கியது. புத்ரா ஜெயா, சைபர் ஜெயா என இரு புதிய நகர்கள் உருவாயின. அதற்கேற்பச் சமுதாயத்திலும் விழிப்புத் தோன்றத்

தொடங்கிற்று. பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் நாட்டம் கொள்ளத் தலைப்பட்டனர். இளைஞர்கள் கணினித் துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வந்தனர்.

மாறுதலுக்கேற்ற நடவடிக்கைகள்

நாட்டின் புதிய தோற்றம், மிக விரையும் அறிவியல் வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பத் தாக்கம், கணினியின் மேலாண்மை போன்ற புதிய அறைகூவல்களுக்கு ஈடுகொடுக்கும் சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் மாறவேண்டுவது காலத்தின் கட்டாயமாகியது. எளிதில் விடமுடியாத பழைய எண்ணங்களின் பிடியில் இருந்து அதனை மீட்கவும், புத்துலகை ஏறிட்டுப் பார்க்கும் தெம்பை ஏற்படுத்தவும், அறிவியல் தொழில்நுட்பத் துறையில் துணிவோடு நுழைய ஊக்கப்படுத்தவும், வணிகத்துறையில் நாட்டம் கொள்ளச் செய்யும் ஆர்வத்தை ஏற்படுத்தவும், பல, மிகப் பல செய்ய வேண்டியிருந்தது. இம் மாபெரும் கடமையை ஒரு தனி மாந்தராலோ ஓர் அமைப்பாலோ செய்துவிட இயலாது எனினும், பல்வேறு நிலைகளில் நடக்கும் முயற்சி களுக்கு முன்னோடியாக - தூண்டி வழிகாட்டும் அமைப்பாக, வேண்டிய இன்றியமையாத உதவிகளை அரசிடம் பெற்றுத்தரும் தாய் இயக்கமாக ஒரு மையம் தேவை. அந்த மையமாக விளங்கவேண்டிய கடப்பாடு கொண்ட இயக்கம் ம.இ.கா.வே. அதனை உணர்ந்து அதன் தலைவர் எனும் முறையில் ச. சாமிவேலு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஒரு செயலைச் செய்யத் தொடங்குவதற்குமுன் திட்டமிடுதல் முதன்மையாகும். சரியான திட்டமிடல், செயலின் வெற்றிக்கு 50 விழுக்காடு அடிப்படை போட்டுத்தரும்.

இக் காலகட்டத்தில் சமுதாய நிலைகுறித்துப் பல்வேறு கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்க்கல்வி, உயர்கல்வி, பொருளாதார நிலை, தோட்டப்புற ஏழைமை, தொழில்நிலை, குடியிருப்புச் சூழல், புறம் போக்குப் பகுதி வாழ் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், வன்முறையும் தீர்வுக்கான வழிகளும், மேம்பாட்டுக்குரிய வாய்ப்புகள் என ஆய்வுகள் நடந்தன. தீர்வுகாணப் பல திட்டங்கள் வகுக்கும் முயற்சிகளும் அரும்பின. ஆய்வுகள் திட்டமிடப்பட்ட முயற்சிகள் குறித்தும் ஊடகங்கள் செய்திகளை விரிவாக வெளியிட்டன. இதனால் சமுதாயத்தின் உண்மைநிலையைத் தொண்டார்வலர் உணரமுடிந்தது; தம்மளவில் உதவும் நிலையும் துளிர்த்தது.

ம.இ.கா.வின் திட்டங்களும் செயற்பாடுகளும்

மலேசிய இந்தியர்-தமிழர் அரசியல் உரிமைபேணும் தாய்அமைப்பான ம.இ.கா. காலவேகத்தின் போக்கிற்கேற்பச் சமுதாயம் மாற்றம் கண்டு

முன்னேறப் பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டு வருகிறது. அத் திட்டங் களும் செயற்பாடுகளும் கல்வி வளர்ச்சி, சமுதாய மேம்பாடு ஆகிய இரு பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. நோக்கங்களை எட்டுவதற்காகச் சில அமைப்புகளையும். துணைக் குழுக்களையும் ஏற்படுத்தி யுள்ளது.

மாஜு கல்வி மேம்பாட்டுக் கழகம்

"கல்வி ஒரு நாட்டின், இனத்தின், தனி மனிதனின் மேம் பாட்டிற்கு அடிப்படையாக உள்ளது; ஓர் இனத்தின் அறிவாற்றல் அந்த இனத்தின் வெற்றி தோல்விகளை நிருணயிக்கும் அளவுகோலாகக் கருதப்படுகிறது" என்று உணர்ந்த ம.இ.கா., தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழக நிலைவரை அதனை வளப்படுத்தும் நடவடிக்கைகளில் பெருமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 'ஒரு குடும்பத்திற்கு ஒரு பட்டதாரி' என்னும் அதன் நோக்கிற்குத் துணைபுரியும் வண்ணம் 30 ஆண்டுகளுக்கு முன் உருவான 'மாஜு கல்வி மேம்பாட்டுக்கழகம்' பல நிலைகளில் தன் பணியை விரிவுபடுத்தியுள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மேம்படவும், அடைவுநிலைத் (U.P.S.R) தேர்வுகளில் மாணவர் உயர்ந்த தரநிலையை எட்டவும் அது பெரும்பொருளைச் செலவிட்டு உரியன செய்துவருகிறது. த. மாரிமுத்து தலைமையில் அமைந்துள்ள கல்விக்குழு, சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பல நிலைகளில் தொண்டாற்றி வருகிறது. தேர்வில் சிறப்புநிலை எய்தும் மாணவர்களுக்குப் பரிசும் ஊக்குவிப்புத் தொகையும் வழங்கி வருகிறது; உயர்நிலைக் கல்வி கற்கும் மாணவர் களுக்குப் பயிலரங்குகள் நடத்துவதிலும் கருத்துச் செலுத்தி வருகிறது. தனிப்பாட வகுப்புகள், வழிகாட்டிப் பயிலரங்குகள் மூலம் ஸ்ரீமுருகன் நிலையம் (Sri Murugan Centre) போன்ற தனிப்பாட அமைப்புகளும், நாட்டின் பல இடங்களில் இயங்கும் தொண்டூழிய நிறுவனங்களும் செய்யும் கைம்மாறு கருதாப் பணிகளும் மதித்துப் போற்றத்தக்கவை. இடபிள்யூ.ஆர்.எஃப். (EWRF), சைல்டு (Child) எனப்படும் கல்வி, சமுதாய உயர்வு கருதிச் செயல்படும் நிறுவனங்களும் கல்வி அறவாரியம் போன்ற அமைப்புகளும் பொறுப்போடும் உரிய நோக்கோடும் தொண்டாற்றி வருகின்றன.

கல்விக் கடனுதவி

பொருள் வளமற்றிருக்கும் குடும்பத்துக்கு மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பட்டக்கல்வி கற்க 'மாஜு கல்வி மேம்பாட்டுக் கழகம் (MIED)' கல்விக் கடன் தந்து பேரளவு உதவி வருகிறது. ஆயிரக்

கணக்கானோர் இதன் மூலம் பயன்பெற்றனர்; பெற்றும் வருகின்றனர். ஒவ்வோராண்டும் கடனுதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. 2002-03 ஆம் கல்வியாண்டில் வழங்கப் பட்ட 11,280,930 ரிங்கிட் (மலேசிய வெள்ளி) தொகையுடன் ஒப்பிடுகையில் 2003-04ஆம் கல்வியாண்டில் கூடுதல் ஆகும். அக்கல்வியாண்டில் 861 மாணவர்களுக்கு 12,245,669 ரிங்கிட் கடனுதவி வழங்கப்பட்டது என்று கூறும் ம.இ.கா.வின் 58ஆம் பொதுப் பேரவை அறிக்கை எவ்வெத் துறை மாணவர்களுக்குக் கடனுதவி வழங்கப்பட்டது என்பதனைக் கீழ்க்காணும் பட்டியல் 11-ன் மூலம் விளக்குகிறது.[73]

துறை	மாணவர் எண்ணிக்கை	வழங்கப்பட்ட கடனுதவித் தொகை
கணக்கியல்	39	396,273
விமானப்பொறியியல்	1	14,840
வர்த்தகம்	73	712,082
கல்வி	3	15,791
பொறியியல்	135	16,19,157
ஹோட்டல் நிருவாகம்	19	171,680
தகவல் தொழில்நுட்பம்	143	1,509,361
கட்டடம்	53	847,761
மருத்துவம்	264	5,364,533
மற்றத் துறைகள்	131	1,517,192
மொத்தம்	861	12,245,669

பட்டியல் - 11

இவ்வகையில் கூட்டுறவு (N.L.F.C.S) சங்கத்தின் துன் சம்பந்தன் கல்வி அறக்கட்டளை, டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் கல்வி அறக்கட்டளை, டாக்டர் இராம.சுப்பையா கல்வி அறக்கட்டளை போன்றவையும் பேரளவு துணைபுரிந்து வருகின்றன; அரசும் உதவிச்சம்பளம் தந்து உதவுகிறது.

டேஃப் கல்லூரி (TAFE)

கல்வியிலும் தொழில்நுட்பத்திலும் ஒரு திருப்புமுனையை, புதுமையை, மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் உருவாக்கப்பட்டது இக் கல்லூரி (1980). தொழில்நுட்ப வளர்ச்சி வேகத்திற்கு ஈடுகொடுக்க

முடியாமல் சமுதாயம் பின்தங்கிவிடக்கூடாது என்ற நோக்கில் அமைந்தது இது. இக் கல்லூரி ஆஸ்திரேலியாவோடு யுனைட்டெட் கிங்டம் நாடுகளில் உள்ள உயர்நிலைக் கல்வி மையங்களோடு இணைந்து பயிற்சிகளை வழங்கிவருகிறது. எடுத்துக்காட்டாக ஆஸ்திரேலியாவின் வெஸ்டர்ன் சிட்னி இன்ஸ்டிடியூட் டேஃப், சார்லஸ் டார்வின் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து தகவல் தொழில்நுட்பம், வணிக வாய்ப்பை வழங்கிவருகிறது. மேலும் வேல்ஸ் பல்கலைக்கழகத்தோடு இணைந்து, வணிக நிருவாகத் துறைக் கல்வியினை வழங்கிவருகிறது. இது தரம் வாய்ந்த கல்லூரி எனப் பல சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

இக் கல்லூரி இதுவரை 32,000 பட்டதாரிகளை உருவாக்கி யுள்ளது. பட்டம் பெற்ற மிகப்பலர் வேலைவாய்ப்புகள் பெற்று உயர்நிலையில் உள்ளனர். 1800-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல துறைகளிலும் பயின்று வருகின்றனர். இக் கல்லூரி அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த அனைத்துத் துறைக் கல்வியையும் வழங்கத் தன்னை ஆயத்தப்படுத்தி வருகிறது.

மாணவர்கள் ஏட்டுக்கல்வி கற்ற தொழில்நுட்பப் பொறி என ஆகிவிடாமலிருக்க அவர்தம் மனவளத்தையும் அறிவாற்றலையும் பெருக்கும் பயிற்சிகளும் இங்கு வழங்கப்படுகின்றன. தன்முனைப்புப் பயிற்சிகள், தகவுரைப் பயிற்சிகள், தலைமைத்துவப் பயிற்சிகள், கல்வி வழிகாட்டி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவற்றின்மூலம் மாணவர்கள் நாட்டு நலத்திற்கும், இன நலத்திற்கும் தங்கள் பங்கை ஆற்ற முடியுமென்று கல்லூரி நம்புகிறது. இங்குக் கற்பவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதில் சிக்கலை எதிர் நோக்குவதில்லை என்று அது கூறுகிறது.

இக் கல்லூரியில் கற்றுப் பட்டயம், பட்டம் பெற மாஜு கல்வி மேம்பாட்டுக் கழகம் (M.I.E.D.) பேரளவு உதவிபுரிகிறது. வேறுசில நிறுவனங்களும் கல்விக்கடன் தந்து வருகின்றன.

அறைகூவல் மிகுந்த தகவல் தொழில்நுட்ப உலகில் சமுதாயம் நின்று நிலைக்கத் தொலைநோக்கு எண்ணத்தொடு நிறுவப்பட்ட இக் கல்லூ ரியின் தலைமை நிருவாக இயக்குநராக ஜி.வடிவேலு திறம்படச் செயற்பட்டுவருகிறார்.

தொழிலாளர் தொழில்நுட்பக் கல்லூரி

தொழில்நுட்ப உலகில் தொழிலாளர் பிள்ளைகளும் நுழைய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கில் போக்குவரத்துத் தொழிற்சங்கத் தலைவராய் இருந்த வி.டேவிட்டின் பெரு முயற்சியால் உருவாக்கப் பட்டது, ‘தொழிலாளர் தொழில்நுட்பக் கல்லூரி’ (WIT) இது பல்லின

மாணவர்களைக் கொண்ட கல்லூரி எனினும் இந்திய-தமிழ் மாணவர் களுக்கு நிறைவான வாய்ப்பளித்து வருகிறது. தொழில்நுட்பத் திறனாளர் பலரை உருவாக்கியுள்ளது. இதே நோக்கில் அமைந்த பிற கல்லூரிகளும் இத் துறையில் பாடாற்றி வருகின்றன.

ஏய்ம்ஸ்ட் பல்கலைக்கழகம்

சமுதாய உயர்வு நாடி ம.இ.கா. மேற்கோண்ட மற்றொரு கல்வி நடவடிக்கை பல்கலைக்கழகம் ஒன்றனை நிறுவத் திட்டமிட்டதாகும். ‘அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் (AIMST)’ என்னும் பெயர் கொண்ட இது, மாபெரும் அறைகூவல் நிறைந்த திட்டமுமாகும். ‘பொருள்வள மில்லாத சமுதாயத்தால் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவி நடத்த இயலுமா?’ என்ற ஐயம் எழுந்தது. ‘அகலக் கால் வைக்கும் திட்டம்’ என்றும் சொல்லப்பட்டது. எனினும் ம.இ.கா. இத் திட்டத்தை முனைந்து செயல்படுத்தும் முயற்சிகளில் இறங்கியது.

“இந்திய மாணவர்கள் தங்கள் கல்வியை மேற்கொண்டுள்ள உள் நாட்டுப் பல்கலைக்கழகங்களைத் தவிர்த்து இதரக் கல்லூரிகளை நாடவேண்டி உள்ளது. உயர்கல்வி கற்ற மாணவர்களுக்கு அதிக வாய்ப்பை வழங்கவேண்டும் என்ற நோக்கில் அமைக்கப்பட்டதுதான் ஏய்ம்ஸ்ட் பல்கலைக்கழகம் (AIMST). அதே வேளையில் அறிவாற்றல் நிறைந்த நாடாக விளங்குவதோடு மட்டுமல்லாமல் மலேசியா ஒரு கல்விக்கள மாகவும் திகழவேண்டும் என்பது ம.இ.கா. வின் நம்பிக்கை.”[74]

மேற்கண்ட நோக்கத்தோடு ஏய்ம்ஸ்ட் பல்கலைக்கழகம் அமைக்கப் படுவது வரவேற்கத்தக்கதே. ஏனெனில் உயர்கல்வி நிலையங்களில் இந்திய மாணவர்களுக்கு நிறைவான வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. பல்கலைக் கழகங்களில் நுழையும் மாணவர் எண்ணிக்கை மிகத் தாழ்வுநிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. 2002-03ஆம் கல்வியாண்டில் அரசாங்க உயர் கல்வி நிலையங்களில் இந்திய மாணவர் நுழைவு 8 விழுக்காட்டிலிருந்து 4.7 விழுக்காட்டுக்கு வீழ்ச்சிகண்டு அதிர்ச்சிக்குள்ளாக்கியது. உரிய தகுதி யிருந்தும் மிகப் பலருக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. கவனிக்காமல் வாளா விருந்தால் சமுதாயத்திற்கு உயர்கல்வி வாய்ப்பே அற்றுப்போகுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது. எல்லாருக்கும் கல்வி, வாழ்நாள் முழுதும் கல்வி என்பதெல்லாம் இந்த இனத்திற்குக் கானல்நீர்தானோ என்னும் கவலை நெஞ்சைச் சூழ்ந்து வருத்தி வருகிறது. சொந்தப் பல்கலைக்கழகம் இருந்தால் மீட்சிக்கு ஓரளவேனும் வாய்ப்புண்டு. எல்லாத் தடங்கல்களையும் மீறிப் பல்கலைக்கழகத்தை உருவாக்கும் முயற்சி வெற்றிகண்டு அனைத்து

இனங்களுடனும் தமிழினம் எல்லாத் துறைகளிலும் தலைநிமிர்ந்து நடைபோட வேண்டுமென்பதே நல்லார் எண்ணமாகும்.

ஏய்ம்ஸ்ட் பல்கலைக்கழகம் நிருமாணிப்பதன் மூலம் அறிவார்ந்த பல்திறன் மிக்க இளைய சமுதாயத்தை உருவாக்க முடியும். இதனைக் கருத்திற்கொண்டு ஏய்ம்ஸ்ட் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகம் போன்ற துறைகளில் இந்திய மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர வாய்ப்புகளை வழங்கவிருக்கிறது என்னும் எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் ஆழ்ந்த பொருளுடையதே. மேலும் 'இனம், மொழி, நாடு என்று எந்தவிதப் பேதமுமின்றி அனைவரும் ஒற்றுமையாகக் கல்வி பயிலும் களமாக ஏய்ம்ஸ்ட் திகழும்' என்னும் பரந்த நோக்கையும் அது புலப்படுத்தியுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மேற்படி கனவு நனவாகத் தேவைப்படும் தொகை 400 மில்லியன் மலேசிய வெள்ளி. அரசு பல்கலைக்கழகம் அமைக்க இசைவளித்ததோடு ஐந்து கோடி வெள்ளி ஒதுக்கீடும் வழங்கியுள்ளது. ம.இ.கா. கிளைகள் நிதி திரட்டுவதில் மிகக் கடுமையாக உழைத்து வருகின்றன. செல்வர் முதலாயவரும் மனமுவந்து உதவி வருகின்றனர்.

இயங்கிக்கொண்டிருக்கும் மருத்துவக் கல்லூரி

மருத்துவத்துறையில் வாய்ப்புகள் இழந்துவரும் இந்திய மாணவர் களுக்கு வாய்ப்பளிக்க ஏற்கெனவே ஒரு மருத்துவக் கல்லூரி இயங்கி வருகிறது. முன்னாள் ம.இ.கா. உதவித் தலைவர்களில் ஒருவரும் துணை யமைச்சராய்ப் பணியாற்றியவருமான புகழுடம்பெய்திய கு.பத்மநாபன் முயற்சியால் உருவாக்கப்பட்டதே அக் கல்லூரி ஆகும். இந்தியாவின் மணிப்பால் கல்லூரியோடு இணைந்து இயங்கி இங்கு மருத்துவர்களை உருவாக்கி வருகிறது. மணிப்பால் - மலாக்கா மருத்துவக் கல்லூரி என்னும் பெயரில் இயங்கும் இதனில் கற்ற முதல் தொகுதி மாணவர்கள் பட்டம் பெற்று வெளிவந்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் தொலைநோக்குத் திட்டத்தில் மலேசிய இந்தியர்க்குரிய வாய்ப்புகள்

வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளுள் மலேசியா மிக விரைந்து வளரும் ஒரு நாடாகும். இதனை 2020ஆம் ஆண்டுக்குள் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்ற ஒரு நாடாக்க வேண்டுமென்று 1991-ல் திட்டமிடப்பட்டது. அதற்கேற்பத் தொழில்துறை மிகு வளர்ச்சி கண்டு வருகிறது.

நாட்டு வளர்ச்சி என்பது நாட்டில் வாழும் மக்கள் வாழ்க்கைத் தரத்தையும் உள்ளடக்கியதாகும். உயர்ந்த கட்டடங்களையும், பல்கிப் பெருகும் தொழிற்சாலைகளையும் மட்டும் கொண்டு ஒரு நாட்டின் வளர்ச்சியைக் கணித்துவிட முடியாது.

மலேசியா பல்லினங்களைக் கொண்ட நாடு. முப்பெரும் இனங்களில் ஏதேனும் ஓரினம் வளர்ச்சியில் பின்னடைந்தாலும், அது நிறைவான சமுதாய வளர்ச்சி ஆகாது. உலக அரங்கில் அனைத்து இனங்களும் சமநிலையுடன் வளரவேண்டுவது இன்றியமையாததாகும்.

அரசு எந்த இனத்தின் வளர்ச்சியையும் தடுக்கவில்லை. ஆனால், தமிழினம் வளர்ச்சியின் வேகத்திற்கு ஈடுகொடுக்கமுடியாத சூழலில் சிக்குண்டது. வகுக்கப்பெற்ற எத் திட்டமும் அதனை எட்டமுடியவில்லை. தொலைநோக்குத் திட்டம் நடைமுறைக்கு வந்து 15 ஆண்டுகள் ஆகி விட்டன. இன்னும் 15 ஆண்டுகளில் அது நிறைவெய்தவுள்ளது. ஆனால், சமுதாயத்தின் நிலை குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவு மாறுதல் கண்டதாகத் தெரியவில்லை.

மூன்றாங்கட்டத் தொலைநோக்குத் திட்டதில் அடங்கியுள்ள கூறுகள்

அரசு வகுத்துள்ள மூன்றாங்கட்டத் தொலைநோக்குத் திட்டத்தில் பல கூறுகள் அடங்கியுள்ளன. அவை வருமாறு :

1. மீட்டெழுச்சியுடைய நாட்டை உருவாக்குதல்
2. சமநிலையிலான சமுதாயத்தை முன்னேற்றுதல்
3. பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துதல்
4. உலக அளவிலான போட்டிச்சவால்களை எதிர்கொள்ளுதல்
5. அறிவார்ந்த பொருளாதாரத்தை மேம்படுத்துதல்
6. மனிதவள மேம்பாட்டை வலுப்படுத்துதல்
7. சுற்றுச்சூழலில் நிலையான மேம்பாட்டைத் தொடர்தல்

மேற்கண்ட பொதுவான வளர்ச்சித் திட்டத்தில் இந்தியருக்குச் சில சலுகை வழங்கப்பட்டுள்ளதை ம.இ.கா. தலைமையகம் 4.4.2001-ல் வெளியிட்டுள்ள அறிக்கைவழித் தெளிவுபடுத்தியுள்ளது. அவை வருமாறு :

பூமி புத்ரா (மண்ணின் மைந்தர்) அல்லாதவர்களின் சொத்துடைமையை உறுதி செய்வதன்வழி-குறிப்பாக இந்தியச் சமுதாயத்தின் முதலீட்டு உடைமைக்குப் பொருத்தமான கவனம் செலுத்தப்படும்.

நகர்ப்புற மக்கள்தொகைப் பெருக்கம் புதியதொரு இயல்பான மாற்றத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. அது என்னவெனில், புறம்போக்குக் குடிசைப் பகுதியின் விரிவு மற்றும் நகரையொட்டிய பகுதிகளில் வாழும் பூமிபுத்ரா மற்றும் இந்தியச் சமுகங்களிடையே நிலவும் சூழ்நிலையைச் சார்ந்த வறுமைநிலை.

மூன்றாவது தொலைநோக்குத்திட்ட ஆவணத்தில் மலேசிய இந்தியர்களின் சொத்துடைமை மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் குறித்த இரு மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன.

இந்தியர் சொத்துடைமை மூலப்பகுதி

இந்தியர்களின் மிகக் குறைவான சொத்துடைமை அளவைக் கருத்தில்கொண்டு மூன்றாவது தொலைநோக்குத் திட்டம் (OPPB - Third Outline Perspective Plan) காலகட்டத்தின்போது, இந்தியர்களின் பங்கேற்பை அதிகரிக்கக் கவனம் செலுத்தப்படும். இதற்கொப்ப முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு எதிர்வரும் 2010ஆம் ஆண்டிற்குள் இந்திய சமுதா யத்தின் சொத்துப் பங்குரிமையை 3 விழுக்காடு உயர்த்துதல்.

அதே வேளையில் பொருளாதாரத்துறையில் இந்தியர்கள் பங்கேற்பு நிலையை மறுஆய்வு செய்து பொருத்தமான வியூகங்களையும், திட்டங் களையும் வகுப்பதற்கு ஆய்வொன்று நடத்தப்படும்.[75]

மேற்கண்ட திட்டமன்றிப் பொதுவாக இந்திய சமுதாயம் குறித்த் வேறுசில கூறுகளும் ஆராயப்பெற்றுச் சேர்க்கப்பெற்றுள்ளன. தோட்டத் தொழிலாளர் வாழ்க்கைத்தரம், துண்டாடப்பட்ட தோட்டங்களில் வாழ்ந்த முன்னாள் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் போன்றவையும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. வணிகம், சேமிப்புப் போன்றவற்றில் அவர்களுக்குள்ள வாய்ப்புகளும் குறிக்கப்பெற்றுள்ளன.

7.5 விழுக்காடு மக்கள்தொகையுள்ள சமுதாயத்திற்கு மூன்று விழுக்காடு சொத்துடைமையாவது இருக்கவேண்டு மென்று அரசு விரும்பு கிறது; வழிகளையும் காட்டியுள்ளது. நாளுக்குநாள் உள்ளதும் குறைந்து வருகிறதேயன்றி வளர்ச்சி ஏறு முகத்தைக் காண இயலவில்லை. முன்பு தோட்டத் தொழிலாளர்களுக்காக வகுக்கப்பட்ட வீட்டுடைமைத் திட்டம் போன்றவை காணாமற்போன நிலை இதற்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பது சமுதாய நலம் நாடுவோர் தவிப்பாகும்.

சமுதாய நோய்கள்

வளமான உடலில் ஒரு சிறுபகுதி சிதைவுற்றாலும் அஃது உடலின் முழு இயக்கத்தையுமே தடைப்படுத்திவிடும். அதுபோலச் சமுதாயத்தின் பெரும்பகுதி மேம்பாடடைந்து ஒரு பகுதி சீர்கேடுற்றிருக்குமேயானால் அஃது இனவாழ்வின் மதிப்பைச் சரித்துவிடும்.

இப்போது தமிழ்ச் சமுதாயம் கல்வி, தொழில், பொருளாதாரத் துறைகளில் படிப்படியாக முன்னேறத் தொடங்கியுள்ளதெனினும் ஒரு பகுதி சீர்குலைந்து கிடப்பதால், ஏற்பட்டுள்ள புத்தெழுச்சியின் அடிப்படைக்கு உரிய வலிமை சேரவில்லை; சாண் ஏற முழம் சறுக்கும் நிலையில் சமுதாயம் தவிக்கிறது.

இந்திய-தமிழ்ச் சமுதாயம் முன்பு மிக உயரிய பண்பாடுடைய சமுதாயமாக விளங்கிற்று. பொருள்வறுமையில் துவண்டபோதும் அருள் வறுமை அதனைத் தாக்கியதில்லை. ஒரு காலத்தில் சீனச் சமுதாயத்தில் கடுமையான போக்குகள் நிலவின. அவற்றை இந்தச் சமுதாயம் தத்தெடுத்துக் கொண்டதுபோல் நிலைமை ஆகியுள்ளது. வழிப்பறி, கடத்தல், கடுமையாகத் தாக்குதல், கத்தி, கோடரி கொண்டு வெட்டிச் சாய்த்தல், துப்பாக்கியால் சுடுதல், கொடூரமாகக் கற்பழித்தல், திருமண வீடுகளில் புகுந்து கலகம் விளைவித்தல், கோயில் திருவிழாக்களில்கூடக் கொலை செய்தல், வீடு புகுந்து நொறுக்குதல் போன்ற கொடுமைகள் சமுதாயத்தைத் தலைகுனியச் செய்து கொண்டிருக்கின்றன. குற்றச்செயல் புள்ளிவிவரங்களில் இந்திய இனத்தின் எண்ணிக்கை மிகுந்துள்ளது. பொதுவாக இந்தியர் - தமிழர் என்றாலே வன்முறையாளர் என்று கருதும் ஒரு தாழ்வுநிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. நாட்டை உருவாக்கத் தன்னையே ஒப்புக்கொடுத்த இனம், அது வளர்ந்து உன்னதநிலை எய்தும்போது தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் செயல்களில் ஈடுபடுவது நல்லோர் மனத்தைத் துன்புறுத்திப் பிழிகிறது.

காரணங்கள்

வன்முறைகளால் சமுதாயம் சீர்கெட்டுப் போய்க்கொண்டிருப்பதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆபாசமும் வன்முறையும் நிறைந்த தமிழ்த் திரைப்படங்கள், வரன்முறையற்ற படைப்புகளை வெளியிடும் ஊடகங்கள் போன்றவை மாணவர்களையும் இளைஞர்களையும் பாழ்படுத்திச் சமுதாயத்தில் சீர்கேட்டை விளைவிக்கின்றன என்று சொல்லப்படுகிறது.

திரைப்படங்கள், ஊடகங்கள் என்னும் பொழுது தூண்டுதலுக்கு அவையும் ஒரு காரணமாகலாம். ஆனால், அவை தமிழ்ச் சமுதாயத்திற்கு மட்டும் சொந்தமானவை அல்ல. எல்லாச் சமுதாயங்களையும் அவை தாக்கவே செய்கின்றன. ஆனால், மற்றச் சமுதாயங்களில் இத்துணைக் கொடிய நிலை இல்லையே!

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள்.948)

என்கிறார் திருவள்ளுவர். சமுதாயத்தில் நிலவும் வன்முறைப் போக்கிற்குரிய அடிப்படையை ஆராயாமல் நுனிப்புல் மேய்ந்து ஏதாவது கூறுவதால் உரிய பலன் விளையாது.

சமுதாய ஆய்வாளர், காவல்துறை மேலாளர் போன்றோர் அவ்வப் போது உண்மைநிலையை எடுத்துக் காட்டிக் காரணங்களை உணர்த்தி வருகின்றனர்.

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவமுயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்'

என்பது ஒரு பழம்பாடல். 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்பது இப் பாடல் சொல்லும் கருத்துகளின் சாரமாகும். இதனைவைத்துப் பார்க்கும்போது உயரிய தன்மைகளோடு மிக உயரிய நிலையில் வாழ்ந்த ஓர் இனத்தின் ஒரு பகுதியினர் சீர்குலைவிற்கு வறுமையே அடிப்படைக் காரணம் என்பது தெளிவாகிறது. மற்றச் சமுதாயங்கள் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டு போகும்போது நாம்மட்டும் இப்படிச் சீரழிவதா என்ற தவிப்பும் மன உளைச்சலும்கூட வன்முறையைத் தூண்டிவிடக் காரண மாகும்.

தோட்டத்துண்டாடல் ஏற்படும்வரை இச் சமுதாயம் கட்டுக்குலை யாத ஓர் உயரிய சமுதாயமாகவே நற்பெயருடன் விளங்கியது. குடும்பத்தினர், அண்டை அயலாரை உடன்பிறப்புகள்போல் அன்பு பாராட்டி வாழ்ந்தனர். சிற்றூர், பேரூர் போன்ற ஒரு தோட்டத்தில் (Estate) ஒரு வீட்டு நிகழ் வானாலும், பொது நிகழ்வானாலும் அனைவரும் உறவினர்போல் ஒன்றி ணைந்து நடத்தும் மாந்தநேயப் பண்பெல்லாம் தோட்டங்கள் துண்டுபடுமுன் இச்சமுதாயத்தில் நிலவின. இஃது ஏமாந்த சமூகமாக விளங்கியதே அன்றி, ஏமாற்றும் சமுதாயமாக இருந்ததில்லை. பணிவுடைய சமுதாயமாக

வாழ்ந்ததேயன்றிப் பாழ்படுத்தும் சமுதாயமாக ஆனதில்லை. இஃது உரிமைகோரத் தெரியாத சமுதாயமாக வாழந்ததேயன்றிப் பிறர் உரிமையைப் பறிக்கும் சமுதாயமாக மாறியதில்லை. இது வஞ்சகமற்று உழைக்கும் சமுதாயமாக நடைபோட்டதேயன்றிக் கள்ளங்கபடத்தோடு கடமை தவறியதில்லை; வன்முறையில் இறங்கிக் காட்டுவிலங்கானதில்லை. ஆனால் தமிழர் இயல்பான தன்மையொடு எளிய வாழ்வை நடத்திவர இடமளித்த தோட்டங்கள் துண்டுபடத் துண்டுபடப், புறம்போக்குக் குடிசைகள் பெருகின. குடிசைகள் பெருகப்பெருகக் கட்டுடைந்தது; சீர்மை குன்றியது.

வேலையின்மை, வருவாயின்மை, முறையான கல்வியின்மை, பண்பாடு பேணும் வாய்ப்பின்மை, அயலாரோடு உறவாடும் சூழலின்மை, மன அமைதிக் கான அடிப்படை இன்மை நம்பிக்கை தரும் எதிர்காலமின்மை போன்றவை மன வெறுப்புக்கும், விரக்திக்கும், நம்பிக்கை அற்றுப்போவதற்கும், வன்முறையை நாடும் நிலை ஏற்படுதற்கும் வித்திட்டன. அதிலிருந்து சமுதா யத்தை மீட்டேயாகவேண்டும்.

வெற்று அறிவுரையோ, கூட்டங்கள் கூட்டிச் செய்யும் பரப்பியங்களோ (பிரசாரம்) வன்முறையை முற்றாக ஒழித்துவிடா. பசியால் வாடிய உயிர்களைக் கண்டு உருகி அடுப்பு மூட்டி, அது தொடர்ந்து எரிய வழியும் சமைத்து விட்டுப்போன வள்ளலார் போல் நலிந்தோர்க்கு நல்வாழ்வளிக்கும் உண்மையான உறுதியான திட்டங்களே சீர்மைக்கு வழிவிடும். சமுதாயத்தைப் பற்றியுள்ள இந் நோயை ஒழிக்கப் பல்வேறு முயற்சிகள் நடந்துவருகின்றன. அரசும் இதற்கு உதவ முன்வந்துள்ளது ஆறுதல் அளிக்கிறது.

சமூக வியூக அறவாரியம்

சமூகத்தை வன்முறை அவலத்திலிருந்து மீட்க ம.இ.கா. மிக விரிவான திட்டங்கள் வகுத்துச் செயல்படவும் முயன்று வருகிறது. அதற்காக 1998-ல் அமைக்கப்பெற்ற துணை அமைப்பே 'சமூகவியூக அறவாரியம்' (YSS - Yayasan Strategik Sosial Strategic Foundation) இதன் நோக்கம்பற்றி, ம.இ.கா.வால் நிறுவப்பட்ட ஓர் அமைப்பே சமூக வியூக அறவாரியம். இந்திய சமுதாயத்தின் முன்னேற்றத்துக்குத் தேவையான ஆய்வுகளையும், சமூக நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதிலும் இவ் வாரியம் முன்னோடியாகத் திகழ்கிறது.

ம.இ.கா. தலைமையின் உதவியோடும் மற்ற இந்தியர் சார்ந்த நிறுவனங்களின் ஆதரவோடும் சமூக வியூக அறவாரியம் இந்திய சமுதா யத்தின் தேவைகளையும் கண்காணித்து வருகிறது[76] என்கிறார். தேசியத்

தலைவர் ச.சாமிவேலு. கே.எஸ்.நிஜார் தலைமையிலான இவ் வாரியத்தை டெனிசன் ஜெயசூர்யா இயக்கி வருகிறார். திட்டங்களும் முயற்சிகளும் கடமை என்னும் அளவில் மட்டுமல்லாமல் கனிவுடனும் அருள் மனத் தொடும் பயன்பெருக வேண்டுமென்னும் செயலூக்கத்தோடும் தொடர வேண்டுமென்று வீழ்ச்சியுற்ற சமுதாயம் எதிர்பார்க்கிறது.

ஆய்வுகள்

இந்திய சமுதாயத்தைச் சிதைக்கும் கடுமையான நோயாக உரு வெடுத்துள்ள வன்முறைக்கான காரணங்கள் பல்வேறு வகைகளில் ஆராயப்பட்டன. இந்த ஆய்வுகள் மலேசிய இந்தியர்தம் சமுகவியல், கல்வி, பொருளாதாரம், வாழ்வுநலன் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகும். இவ்வகையில் 39 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சீர்கேடுகளுக்குரிய காரணங்கள் அறியப்பட்டுத் தீர்வுக்கான வழிகளும் காணப்பட்டன. ஐந்தாண்டுக் காலத்திற்கான செயல்திட்டமும் வகுக்கப் பட்டது. அதனைத் தேசியத் தலைவர் அமைச்சரவையில் வழங்கித் (12.10.2001) திட்டங்களைச் செயல்படுத்த 20 மில்லியன் வெள்ளியும் கோரினார்.

இந்திய சமுதாயத்தின் மேம்பாட்டில் நல்லெண்ணம் கொண்ட அமைச்சரவை ஒப்புதல் வழங்கிச் செயலை ஊக்கப்படுத்திற்று. வாயளவில் அவலப்பாட்டுப் பாடிக்கொண்டிராமல், சமுதாயத்தைக் குறைகூறுவதிலேயே காலத்தைச் செலவிடாமல், திட்டமிட்டு உயிர்ப்பான நடவடிக்கைகளில் இறங்கியமை ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திற்று.

ச.வி.அ. வின் செயல்திட்டங்கள்

1998 முதல் சமுக வியூக அறவாரியத்தின் செயல்பாடுகள் மாணவர் நலத்திட்டம், இளைஞர் மேம்பாட்டுத்திட்டம், மகளிர், தனித்து வாழும் தாய்மார்களுக்கான திட்டம், பின்தங்கியுள்ள பகுதிகளில் வாழ்வோருக்கான வளர்ச்சித்திட்டம் எனப் பல துறைகளில் விரிவடைந்துள்ளது. இதுவரை 777 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும், அவற்றில் 64,704 பேர் பயனடைந்துள்ளனர் என்றும் அதன் அறிக்கை கூறுகிறது.[77]

பிற அமைப்புகளுடன் நல்லுறவு

இந்திய சமுதாயத்தின் நலனை நோக்கமாகக்கொண்ட 54 தேசிய, மாநில, உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து ச.வி.அ. பணியாற்றிவருகிறது. மேலும், தேசிய ஒற்றுமைத்துறை, விளையாட்டுத்துறை, சமுகநலத்துறை,

ஊராட்சி மன்றங்கள், ருக்குன் தெத்தாங்கா (ஊர்க்காவல் அமைப்புகள்) போன்ற அரசு துறைகளுடன் அணுக்கமாகத் தொடர்புகொண்டு திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது.

சமுதாயத்தைப் பீடித்துள்ள சீர்கேடுகளைக் களைய முனைவதோடு, எதிர்காலத் தலைமுறையும் அவ்வழியில் கால் பதிக்காதிருக்கச் ச.வி.அ. வாரியம் பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. பள்ளிப் படிப்பைப் பாதியில் கைவிடும் மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சியளித்தல், கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு மாரா இளநிலை அறிவியல் கல்லூரி (MRSM- Maktab Rendah Sains Mara) போன்றவற்றில் வாய்ப்பை ஏற்படுத்தித் தரல், சேமிப்பை ஊக்குவித்தல், குடும்ப அமைப்பை வலுப்படுத்தப் பயிற்சியளித்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ச.வி.அ. ஈடுபட்டு வருகிறது. பொதுவாக வலிமையும், கட்டுக்கோப்பும், மாந்தநேய விரிவும், கல்வி பொருளாதார அடிப்படைகளும் கொண்ட ஒரு புதிய சமுதாயத்தைக் காணும் நோக்கங்களொடு இதன் திட்டங்களும், செயல்பாடுகளும் அமைந்துள்ளன.

சமூகம் காலாண்டிதழ்

ச.வி.அ. வாரியம் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளச் 'சமூகம்' என்னும் பெயரில் ஒரு காலாண்டிதழை நடத்தி வருகிறது. அதன் முதல் இதழில் (ஜூன் 2004) 'தனி மனிதன் முழுமையான வெற்றியை நிருணயிக்கக்கூடிய ஆற்றலைக் குடும்ப அமைப்புக் கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் அவ் வமைப்பை வலுப்படுத்தும் அம்சங்களுக்கு இவ் விதழ் முக்கியத்துவம் வழங்கும். மேலும் ஆரோக்கிய மான வாசிப்பிற்கும், பொது அறிவு வளர்ச்சிக்கும், நேர்மறையான சிந்தனை மாற்றங்களுக்கும் வித்திடக்கூடிய ஓர் இதழாகவும் இது திகழும்' என்கிறார் அதன் ஆசிரியர் கே.ஏ. குணா. மேற்கண்ட கருப்பொருள்களோடு, அரசு வழங்கும் தொழில் திறன் பயிற்சிகள் தொடர்பான விளக்கங்களையும் பொதுமக்களுக்குத் தந்தது இவ் விதழ். இதன் மூலம் ச.வி.அ. வாரியம் மற்றொரு படிநிலை வளர்ச்சியைப் பெற்றுள்ளது. அதன் செயலாக்கங் களுக்கு இவ் விதழும் ஒரு படிக்கல்லாக விளங்கி வருகிறது.

செயலும் விளைவுகளும்

ச.வி.அ. வின் திட்டங்கள் அனைத்தும் செயலுருவம் கொண்டால் சமுதாயம் மேம்பாடடையும்; மேம்பாடடைய வேண்டும் என்பது அனைவரின் எண்ணமாகும். சமுதாயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நம்பிக்கை தருகின்றன. எதிர்கால ஒளி கண்ணில் படுகிறது. சோர்வற்ற நடையும்,

நம்பிக்கையிழக்காத மன உறுதியும், உழைப்பிலும், முயற்சியிலும் இடை வெளியில்லாத பாடாற்றலும் தோல்வியைப் புறந்தள்ளும்; வெற்றியை வரவேற்கும் என்பது உலக வரலாறு காட்டும் உண்மையாகும்.

'மலேசியத் தமிழரும் தமிழும்' என்னும் தலைப்புக்கொண்ட இந்நூ லின் முதற்பகுதியான இதனில் தமிழர் சமுதாய வாழ்வு, பொருள்நிலை, தொழில்நிலை, பொதுவான கல்விநிலை, எதிர்கொண்ட கெடுபிடிகள், சிக்கல்கள், முன்னேற்றத்திற்கு விழுந்த தடைகள், கூட்டுறவு முயற்சிகள், அவற்றின் வெற்றிதோல்விகள், இடையில் தலைதூக்கிய சமூகச் சீர்கேடுகள், அவற்றைக் களைவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள், அண்மைக்கால எழுச்சி, வளர்ச்சிப்படிகள், இறுதிக் குறியிலக்குப் போன்றவை எடுத்துரைக்கப் பெற்றன. இப் பகுதியில் தமிழ்க்கல்வி, பண்பாடு, கலை, இலக்கியம், சமயம் குறித்து விரித்துரைக்கப்படவில்லை. அவை மிகுந்த விரிவும், பயனும் மிக்க பகுதிகள் ஆகையால் அவற்றிற்குத் தனிப்பகுதி வகுக்கப்பட்டுள்ளது. இறுதியில் இரு பகுதிச் செய்திகளையும் இணைத்துச் சுருக்கமான முடிவுரையும் எழுதப்பெற்றுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. பனம்பாரனார், தொல். பாயிரம்
2. குழந்தைசாமி, வா.செ. தமிழ் இணையப் பல்கலைக்கழகத் தொடக்க விழா மலர், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (2001), சென்னை, ப. 3
3. ம.இ.கா.வின் சமூக வியூக அறவாரியம் வழங்கிய குறிப்பு
4. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், மனோன்மணி விலாச புத்தகசாலை, (1957) கோலாலம்பூர்
5. Arasarathnam, S., History of Malay and Singapore (1970) பக். 149, 191
6. Rajantheran, M., Perdagangan awal di antara Alam Melay dengan India, Jurnal Pengajian India. Vol.6, 1996, p.81
7. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், மனோன்மணி விலாச புத்தகசாலை (1957), கோலாலம்பூர், ப. 48
8. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997), கிள்ளான், ப. 45

9. சுவாமி, சத்தியானந்தா, மலாயா சரித்திரம், மனோன்மணி விலாச புத்தகசாலை (1957), கோலாலம்பூர், ப. 38

10. மேலது

11. மேலது, ப. 57

12. மேலது

13. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997), ப.36

14. திருநாவுக்கரசு, க.த., தென்கிழக்காசிய நாடுகளில் தமிழர் பண்பாடு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை, ப.VI

15. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், மனோன்மணி விலாச புத்தகசாலை (1957), கோலாலம்பூர், ப. 47

16. சிங்காரவேலு, ச., தென்கிழக்காசியாவில் இந்து சமயச் செல் வாக்கு, சென்னைப் பல்கலைக்கழகம் (தமிழ்த்துறை) வெளியிடும் தமிழாய்வு (1981), 12 ஆம் தொகுதி

17. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், மனோன்மணி விலாச புத்தகசாலை (1957), கோலாலம்பூர், ப. 66

18. மேலது, ப. 35

19 அப்பாதுரை, கா., தென்னாட்டுப் போர்க்களங்கள் (மூன்றாம் பதிப்பு), அலமேலு நிலையம் (1971), சென்னை, ப.239

20. Kassim Ahamad M.A., Dewan Bahasa dan Pustaka (1968) Kuala Lumpur, Hikayat Hang Tuah (அங்துவா வரலாறு, மலாய் நூல்) p.339

21. Indian Plantation Labour in Malaysia Institute of Social Analysis (INSAN) Percetakan Surya (1994), Kuala Lumpur

22. இராசாராம் சு., மொரீசியசில் தமிழரும் தமிழும், தமிழ்ப் பல்கலைக் கழகம் (1991), தஞ்சாவூர், ப.231

23. மேலது

24. மேலது, ப.229

25. Ramachandran, S., Indian Plantation Labour in Malaysia, Institute of Social Analysis (INSAN), Percetakan Surya (1994), Kuala Lumpur

26. மேலது, ப. 342

27. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997), கிள்ளான், ப.335

28. மேலது, ப.342

29. மேலது

30. Ramachandran, S., Indian Plantation Labour in Malaysia, Institute of Social Analysis (INSAN), Pereetakan Surya (1994), Kuala Lumpur

31. மேலது

32. மேலது

33. மேலது

34. மேலது

35. Sandu, K.S., Indian In Malaya Immigration and Settlement 1786/1957, University of Cambridge (1969), p.50

36. மேலது

37. தண்டாயுதம். இரா. மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள், தமிழ்ப் புத்தகாலயம் (1998) ப.20

38. முரசு. நெடுமாறன் (முனைவர் பட்ட ஆய்வேடு), மலேசியத் தமிழ்க் கவிதைகள் (1960-1995), புதுவைப் பல்கலைக்கழகம் (2001), புதுவை, ப. 282

39. மேலது, ப.276

40. மேலது, ப.283

41. மேலது, ப.277

42. வீரமணி அ., வடசுமத்திராவில் தமிழர்கள், தை நூலகம், (1981) ப.21

43. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997), கிள்ளான், ப.62

44. Sandu. K.S., Indian In Malaya Immigration and Settlement 1786/ 1957, University of Cambridge (1969), p.50

45. வரதராசு. மு., மலேசியத் தோட்டத் தொழிலாளர்கள் வரலாறும் பிரச்சினைகளும், ப.79

46. இராமசாமி. பி., மலேசியத் தோட்டத் தொழிலாளர் வாழ்வும் போராட்டங்களும், செம்பருத்தி வெளியீடு (1999), கோலாலம்பூர், ப.51

47. அறிவானந்தன். மெ. மக்கள் ஓசை (ஞாயிறு பதிப்பு) 7ஆம் தொடர் (பிப்ரவரி 10/2000), ப.4

48. மேலது, மார்ச்சு (16/2000), ப.4

49. Sandu, S.K., Indians in Malaya, pp.310/314

50 பிரிட்டிஷ் மலேயா சக்திமோகன், கடல் கடந்த தமிழன், ராணி செந்தாமரைப் பதிப்பகம் (2001), ப.86

51. மேலது, ப.88

52. மேலது, ப.90

53. மேலது, ப.139

54. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள் மதியம் பதிப்பகம் (1997), ப.71

55. மேலது, ப.890

56. மலேசியத் தோட்டத் தொழிலாளர் வாழ்வும் போராட்டங்களும், செம்பருத்தி வெளியீடு (1999), ப.51

57. சந்திரகாந்தம். ப., மலேசிய இந்தியர்களின் அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள், அஸ்வினி கிரியேசன்ஸ் (1995), கோலாலம்பூர், ப.17

58. நேர்கண்ட நாள் 25.4.2001, இடம் ம.இ.கா. தலைமையகம், கோலாலம்பூர்

59. முரசு நெடுமாறன், முனைவர் (Ph.D.) பட்ட ஆய்வேடு, புதுவைப் பல்கலைக் கழகம் (2001), புதுவை, ப.294

60. மேலது, ப.293

61. மேலது, ப.292, 293
62. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997), ப.81
63. மேலது, ப.634
64. திருமாலன். அ. பு., கனல் (1978), ப.24
65. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997), ப.532
66. மேலது, ப.532
67. (பேரா) உங்கு அஜி, மலாயாப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்த ராக இருந்தவரான இவர் துண்டாடலை விரிவாக ஆராய்ந்து எழுதி மூன்று தொகுதிகள் வெளியிட்டார்
68. துணையமைச்சராய்ப் பணியாற்றிய (டத்தோ) கு. பத்மநாபன் நேர் காணலில் கூறியது (5.1.2000)
69. வரதராசு, மு., மலேசியத் தோட்டத் தொழிலாளர்கள் வரலாறும் பிரச்சினைகளும், ப.99
70. நேர்கண்ட நாள் 31.10இ2000, இடம் சூங்க அலுவலகம், பெட்டாலிங்
71. ம.இ.கா. தேசியத்தலைவர் கொள்கையுரை, (தமிழ்ப்பகுதி) ம.இ.கா. 57 ஆம் பொதுப்பேரவை (10 & 11 மே 2003) கோலாலம்பூர், ப.11
72. Suhaimi Aznan, The Forgotten Ones; Far Eastern Economic Review, June 1990, மு.வரதராசுவின் மலேசியத் தோட்டத் தொழிலாளர்கள் வரலாறும் பிரச்சினைகளும், ப.204
73. ம.இ.கா. ஆண்டறிக்கை, 57ஆம் ஆண்டுப் பொதுப்பேரவை
74. ம.இ.கா. 58ஆம் தேசியப்பேரவை, ஆண்டறிக்கை (2004), ப.26
75. மலேசிய, இந்தியர் காங்கிரசு, மூன்றாவது தொலைநோக்குத் திட்ட வடிவமைப்பும் மலேசிய இந்தியர்களும் (4.4.2001), பக். 3-5
76. ம.இ.கா. 56 ஆம் தேசியப் பொதுப்பேரவைக்கான சிறப்பு அறிக்கை, (2002) கோலாலம்பூர், ப.2
77. ம.இ.கா. தேசியப் பொதுப்பேரவை ஆண்டறிக்கை (2003-04), ப.37

*****

மலேசியத் தமிழரும் தமிழும்

இரண்டாம் பகுதி

1. வாய்மொழித் தமிழ்

ஓர் இனத்தின் மொழியே அதற்கு முதன்மை அடையாளமாகும். கலை வெளிப்பாட்டிற்கும், பண்பாட்டுச் செழுமைக்கும், சமயத் தெளிவிற்கும் அஃது அடித்தளமாக விளங்குகிறது. தாய்மொழியைத் தவறவிடும் சமுதாயம் காலப்போக்கில் தன் அடையாளத்தை இழந்துவிடும்.

மலேசிய நாட்டு மலாக்கா மாநிலத்தின் ஒரு பகுதியில் வாழும் மலாக்காச் செட்டிகளை (பொதுப் பெயர், பல பிரிவினர் உள்ளடங்கியுள்ளனர்) இவ்வகையில் சேர்க்கலாம். அவர்கள் தமிழர்களே; பல வகைகளில் தாய்வழிச் சமயத்தையே பின்பற்றுகின்றனர். எனினும், அவர்கள் தமிழர்களோடு இணைந்து தமிழராக முடியவில்லை; ஏற்றுக்கொண்ட மொழியின் சொந்தக்காரரான மலாய்க்காரருடன் இணைந்து அவ் வினத்துடனும் கலக்க முடியவில்லை. இதே போன்ற நிலை உலகின் பல பாகங்களில் தமிழருக்கு ஏற்பட்டு வருகிறது. மொரீசியசு முதலாய சில நாடுகளில் அண்மைக் காலமாகத் தாய்மொழிப் பற்று அரும்பி, அதனை மீட்கும் உணர்வு ஏற்பட்டு வருகிறது என்பது மகிழ்வை ஏற்படுத்துகிறது. ஆஸ்திரேலியாவில் பொங்கிப் பரவும் தமிழ் உணர்வு, உலகத் தமிழினத்தை நிமிர்ந்து பார்க்க வைக்கிறது. இந் நிலையில் 150 ஆண்டுகளுக்குமுன் மலேசியாவில் குடியேறிவிட்ட தமிழர்தம் தாய்மொழியான தமிழின் நிலை யாது? அது சார்ந்த கலை, இலக்கிய, பண்பாட்டுத் தன்மைகள் யாவை என ஆராய்ந்து கூறுவதே இப் பகுதியின் நோக்கமாகும்.

மொழியின் கூறுகள்

மொழியானது வாய்மொழி, எழுத்துமொழி என இரு கூறுகளாய் இலங்குகிறது. தமிழ் ஓர் இரட்டை வழக்குமொழி. ஆங்கிலம் முதலாய பிறமொழிகளுக்கும் தமிழுக்கும் இவ்வகையில் நிரம்ப வேறுபாடுண்டு. தமிழில் இரு வழக்குகளும் ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபட்டவை. வாய்மொழி வீட்டில், தொழில்நிலைகளில், திருவிழாக்களில், திருமணம் போன்ற நிகழ்வுகளில் புழங்குகிறது. கல்வி, கலை, இலக்கியம் என்று வரும்போது

அங்கு எழுத்துமொழி ஆளுமை கொள்ளுகிறது. ஊடகங்களில் வாய்மொழியும், எழுத்துமொழியும் கலந்து புழங்குகின்றன. மலேசியத் தமிழர் வாழ்வில் காலந் தோறும் வாய்மொழி பெற்றுவரும் மாறுதல்களை இப் பகுதி (கண்ணோட்ட மிட்டு) வெளிப்படுத்துகிறது.

காலம் என்னும்போது இங்கு முதற் பகுதியைப் போலவே, போருக்கு முந்திய காலம் (1945 வரை), போருக்குப் பிந்திய காலம் (1956 வரை), விடுதலைக்குப் பிந்திய காலம் (1957-க்குப் பின்) எனப் பகுக்கப் பெற்றுள்ளது.

சூழலும் மொழியும்

தமிழகத்திலிருந்து இங்குப் புலம்பெயர்ந்து வந்த தமிழர்கள், தொடக்க காலத்தில் தமிழகத்தில் பேசிவந்த அதே மொழியைச் சிறிதும் மாற்றமின்றிப் பேசி வந்தனர். தோட்ட நிருவாகத்தில் பங்கு கொண்டோரும் (பெரும்பாலும் மலையாளிகளும் இலங்கைத் தமிழரும்) தமிழே பேசினர். வெள்ளைக்காரரும் தமிழ் கற்றுக்கொண்டு தமிழரிடம் தமிழிலேயே பேசினர். அவர்கள் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டு மென்பது கட்டாயம். இந் நூலாசிரியர் வெள்ளை யர்க்குத் தமிழ் கற்பித்தவர். அவர்களுக்குக் 'கூலித்தமிழ்' என்ற பெயரில் ஒரு பாடநூலும் (ரோமன் எழுத்து) இருந்தது. அன்றைய தோட்டப்புறம், தமிழ்மயமான தமிழகச் சிற்றூர் போன்ற ஒரு சூழலில் அமைந்திருந்தது.

காடழித்துக் கரும்பு, காப்பி, கொக்கோ, தென்னை, இரப்பர், செம்பனை போன்றவற்றை நட்டு வளர்த்த காலத்தில், தோட்டப்புறத்தில் முழுக்க முழுக்கத் தமிழரே வாழ்ந்தனர். இது தொடக்ககால நிலையாகும்.

மலாய்க்காரர் சிற்றூர்களிலும் (Kampung), சீனர் ஈயவயல் பகுதிகளிலும், பட்டணப் பகுதிகளிலும் வாழ்ந்தனர். அக் காலத்தில் மூன்று இனங்களும் ஒன்றுகூடும் வாய்ப்பு மிகமிக அரிதாகவே இருந்தது. அதனால், தமிழில் பிறமொழிச் சொற்களும், பண்பாட்டுக் கூறுகளும் கலக்க வாய்ப்பேற் படவில்லை. ஒருசில இடப்பெயர்ச் சொற்களும் (கோலாலம்பூர், பினாங்கு), நிருவாகத் தொடர்புடைய சொற்களும் (கிராணி, ஆபீஸ்...), தொழில் தொடர்புடைய சொற்களும் (ரோட்டு வேலை, டிரைவர்கள்) பேச்சில் இடம்பெற்றன.

குடும்பத்தினரின் உரையாடல்கள், குடும்ப நிகழ்வுகள் தொடர் பான கருத்துப் பரிமாற்றங்கள், திருமணம், காதுகுத்து, பூப்புச் சடங்கு, பிறப்பு, இறப்பு நிகழ்வுகள் போன்றவற்றிலெல்லாம் தமிழகத்தில் பயன்படுத்திய அதே மொழியை, கலைச்சொற்களை மாற்றமின்றிப் பயன்படுத்தினர்.

அவர்களின் பேச்சுகள் பதிவு செய்து வைக்கப்பெறவில்லை எனினும், அப்போதைய நாட்டுப்புறப் பாடல்கள்வழி, அன்றைய பேச்சுத் தமிழை ஓரளவு உணர முடிகிறது.

நாட்டுப்புறப் பாடல்கள் இங்குத் தொடக்க காலத்தில் தொகுத்து வைக்கப்படவில்லை. காலங்கடந்து இரா. தண்டாயுதம் இம் முயற்சியில் ஈடுபட்டார். நூறு விழுக்காடு திரட்ட முடியவில்லை. கிடைத்தவற்றுள் சில சிதைந்தும் முழுமையின்றியும் உள்ளன. எனினும் அவற்றுள் அக் காலச் சமுதாயத்தை ஓரளவு காணமுடிகிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் தேவையற்ற கற்பனைகளோ, இயல்புக்கு மாறான (இயற்கை இறந்த) நிகழ்வுகளைக் குறிப்பனவோ இரா. கல்லாத மாந்தர்தம் உணர்வு நலன்கள் அவர்கள் மொழியிலேயே வெளிப்பட்டுப் பாடல் வடிவம் பெறும். அவற்றால் அவர்தம் பேச்சுமொழி எங்ஙனம் இருந்திருக்கு மென்று பேரளவு கணிக்கலாம்.

தோட்டப்புறத் தொழில்துறையில் தமிழ்

தோட்டத்தொழில் தொடர்புடைய ஒரு பாட்டில் அக் கால மொழி இங்ஙனம் வெளிப்படுகின்றது :

"தோட்டத் துரை மார்களே - நான்
ஒரு பாட்டைச் சொல்றேன் கேளுங்க!
என்னைச் சஞ்சியிலே கொண்டுவந்து
காட்டையும் அழிக்கனும்
ரப்பர் மரத்தையும் நடனும்
மரத்தையும் வெட்டனும்
அதுக்குப் புக்காவும் போடனும்
பாலையும் வடிக்கனும்
இஸ்டோரும் கேட்கட்டும்
பாலும் உறைக்கட்டும்
லண்டனுக்கு அனுப்பட்டும்"[1]

மேற்கண்ட பாடலில் 'துரை' என்னும் சொல் வெள்ளைக்கார நிருவாகியைக் குறிக்கின்றது. 'இஸ்டோர்' தொழிற்சாலையாகும். 'புக்கா' (Buka) என்பது மலாய்ச் சொல். ரப்பர்மரம் பால் கொடுக்கும் தகுதியை அடைந்ததும் இடும் அடையாளம் 'புக்கா' எனப்படுகின்றது. உறைக்கட்டும் என்பது உறையட்டும் என்று வரவேண்டும். உறைகட்டுதல் என்பது நீர்மமான பாலைத் தொட்டிகளில் ஊற்றி மருந்திட்டு உறைய வைத்தலைக் குறிக்கும்.

இப் பாடலில் தமிழர் புலம்பெயர்ந்த வரலாறும், காட்டை நாடாக்கிய பணியும், ரப்பர்த் தொழில் முறையும் அவர்கள் மொழியிலேயே விளக்கப் பெறுகின்றன. பாடலில் 'இஸ்டோர்' என்ற ஆங்கிலச்சொல்லொடு 'புக்கா' என்னும் மலாய்ச்சொல்மட்டுமே வந்துள்ளது. 'லண்டன்' இடப்பெயராகும்.

மேற்கண்டது போன்ற உழைப்பு, தொழிலாளர் வாழ்வை மலரவைக்க உதவவில்லை என்பதனை அவர்களே இப்படிக் கூறுகிறார்கள் :

"காண்டா வாளி* தூக்கணும்
கடுமையான (நா)நூறு மரத்தை
நாங்க வெட்டணும்
உழைப்பாளியா நாங்க இருந்து
ஓடாத் தேயணும்
உழைக்கும் மக்கள் நாங்க
வறுமையால் வாடணும்
இட்ட வேலையை நாங்களே
எடுத்துக் கூறிச் செய்யணும்
செய்யாவிட்டால் பின்முதுகில்
பிடரி பிடித்துத் தள்ளுவார்
ஏனென்று கேட்க நாதியில்லே
எடுத்துரைக்கக் கதியும் இல்லே
மாதம் முடிஞ்சு சம்பளத்த
குறையுதுன்னு கேட்டுப் பார்த்தா
கேட்டுவிட்டா போதுமிந்தக்
கிராம மணியாரும் எகிருறாரே" [2]

இப்போதுள்ள தலைமுறை இச் செய்தியைச் சொல்ல முன்வந்தால் பல மலாய் ஆங்கிலச் சொற்கள் கலந்து வேறு நடையில் இஃது அமையும்.

அன்று தோட்டப்புறப் பெண் ஒருத்தி தன் வாக்குமூலமாகக் கூறும் பாடல் ஒன்று, பணிச்சுமையோடு அவளுக்கு நேரும் பாலியல் கொடுமையையும், அவள் மொழிநடையிலேயே எடுத்துரைக்கிறது.

"உள்ளத நாசொல்ல வந்தேன் கேள்!
காலையிலே நாலு மணிக்குக் கேள்
கிழக்குமணி அடிக்கும்போது டிங்கு டிங்குதான்
நா போகாவிட்டால் சோறுமில்ல!
அய்யய்யோ என்ன செய்வேன்?
பெரிய மம்முட்டி* எடுத்துப் புறப்பட்டு நாபோனேன்
சுருக்கா வரலேன்னு அய்யா அடிச்சாரே!

---

* காண்டா = பக்கத்திற்கு ஒரு வாளியாக இரு வாளிகளை மாட்டித் தூக்கிச் செல்ல உதவும் கருவி (காவு தண்டு)

* மம்முட்டி = மண்வெட்டி

அந்தகக்கம்பு எடுத்தில்ல அடிச்சாரு கங்காணி!
அய்யய்யோ! அம்மா! அப்பா அடுக்குமா?
யாருக்குத்தான் பதில்சொல்வேன் துரைமாரே!
சாமக்கோழி கூவுது எழுப்பறான்,
சாமக்காரன் கூப்பிடறான்!
விறுவிறுன்னு தண்ணிபோடு எல்லம்மா!
இடுப்புத்துணி எங்கேடி வச்ச எல்லம்மா!
துறுதுறுன்னு பேசிக்கொண்டு
துரை வர்றாரு!
குசுகுசுன்னு பேசிக்கொண்டு
கிராணி வர்றாரு
ஏட்டைப் புரட்டுறாரு
எல்லம்மாவ கூப்பிடுறாரு
கடுகடுன்னு கூப்பிடுறாரு
காத்தாயிய கூப்பிடுறாரு
விறுவிறுன்னு போறாரு
வீரம்மாவ கூப்பிடுறாரு
ஏழாம் நம்பர் பள்ளத்தில எள்ளுச்செடி
தோட்டத்திலே ஏஞ்சொல்லி
வெட்டும்போது எல்லம்மாள
அந்த வெட்டுப்* பார்க்கும் கங்காணி
விறுவிறுன்னு போயி
தாவணியப் புடிச்சாரு
தங்கக் காப்பு என்று
கையைப் புடிச்சாரு"[3]

ஒரு பெண்ணின் தோட்டப்புறச் சமுதாயத்தின் அவல வாழ்வு இப் பாட்டில் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. பணிச்சுமையோடு பாலியல் கொடுமைகளும் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. பாட்டில் வரும் பெரிய மம்முட்டி என்பது மண்வெட்டி. தமிழ்நாட்டில் மண்வெட்டியின் கணை குட்டையாக இருக்கும். மலேசியாவில் சற்றேறக் குறைய ஒரு மீட்டர் நீளமிருக்கும். இடுப்பொடியக் குனியாமல் நின்றபடியே வேலை செய்ய இது பயன்படும். 'தண்ணிபோடுதல்' என்பதற்குத் தேநீர் கலத்தல் என்று பொருள்.

---

* வெட்டு-நிரை; ஒருவர் சீவ வேண்டிய மரங்களின் வரிசை

தொழில் தொடர்புடைய சொற்களும் அன்று நல்ல தமிழாய் விளங்கின. ஆங்கிலேயன் ரப்பர் மரம் தொடர்பாகச் சொன்ன அத்தனை ஆங்கிலச் சொற்களும் தனித்தமிழ்ச் சொற்களாய் உருவெடுத்தன. 'Rubber tree' பால்மரம் ஆனது. பட்டையைச் செதுக்கினால் (ஆவின் பால்போல்) பால் வடிவதால் ரப்பர்மரம் பால்மரம் ஆனது.

ரப்பர் மரத்துக்குப் பெயர் வைத்ததுபோல் அத் தொழில் தொடர் புடைய சொற்கள் அனைத்தும் தமிழ்ச்சொற்களாகவே வடிவெடுத்தன. 'டேப்பிங்' (taping) என்று ஆங்கிலேயர் சொன்னதைக் சீவுதல்/வெட்டுதல் என்றனர். ரப்பர்மரத்தில் பால்வடிக்கச் சீவும் பகுதி சிறு பள்ளத்தை ஏற்படுத்தும். அடுத்தடுத்து அதனில் தொடர்ந்து சீவிப் பால் வடிப்பர். இப்படி ஏற்படும் பள்ளத்தைக் 'கோடு' என்று அழைத்தனர்.

கோடு என்பதற்குத் தமிழில் பல பொருள்கள் உண்டு. கொடுமை செய் என்பதும் அவற்றுள் ஒரு பொருள். நல்ல மரத்தின் (உடம்பின்) தோல் போன்ற பட்டையைச் சீவி அதன் (குருதியை) பாலை வடித்தெடுப்பது கொடுமையாக நம்மவர்க்குப் பட்டதோ என்னவோ, அதனால் கோடு என்று பெயரிட்டிருக்கலாம். மரத்தில் சீவப்பட்ட இடம் வரிபோலத் தோன்றியதனால் அப் பொருளில் கோடு என்று பெயரிட்டனரோ என்னவோ? கோடு என்ப தற்குக் 'கரை' (எல்லை) என்றும் பொருள் உண்டு. மரத்தில் குறிப்பிட்ட வரையறுத்த எல்லைக்கு மேல் உளி (மரம் சீவும் கருவி) பாயக்கூடாது என்ற கட்டுப்பாட்டை உணர்த்தவும் கோடு என்று பெயரிட்டிருக்கலாம்.

'கோடு' என்ற இச் சொல் பல நிலைகளில் பயன்படுத்தப்பட்டது. கோடுகளுள் மூலமாக விளங்குவது 'நெற்றிக்கோடு'. அதுதான் ஆதாரக்கோடு (பால் வடியும் பகுதி). அதனையொட்டி மரத்தின் ஒருபுறம் மட்டுமோ இருபுறங்களிலுமோ சாய்வான கோடு அமையும். இக் கோடு 'சுற்றுக்கோடு' எனப்படும். நெற்றிக்கோட்டின் இருபுறங்களிலும் சுற்றுக்கோடிருந்தால் அது 'நாமக் கோடு' (நெற்றியில் இடும் நாமம் போன்ற கோடு) எனப்படும். சுற்றுக் கோட்டில் திரண்டுவரும் பால், நெற்றிக்கோடு வழியாகப் 'பீலி'க்குப் போய் (பீலி என்பது நெற்றிக்கோட்டில் செருகப்படும் இலேசாகக் குவிந்த தகரத்தால் ஆன சிறு தகடு) மங்கில் விழும். விளக்கப் படத்தில் காண்க. (வரைபடம் எண்-1)

கோடுகளில் 'பக்கக் கோடு' என்று ஒன்று உண்டு. அது நெற்றிக் கோட்டிலிருந்து புறப்படும் சுற்றுக்கோடு முடியும் இடத்தில் போடப் படும். அதுதான் இறுதி எல்லை. நெற்றிக்கோட்டிற்கும் பக்கக் கோட்டிற்கும் இடைப்பட்ட பகுதியே 'சுற்றுக்கோடு' 'நாமக்கோடு' பால் திரண்டு வரும் பகுதி.

இரப்பர் மரம்

படம் - 1



வடிந்த பாலைத் திரட்டிக்
கொண்டு கவிழ்த்துவைத்தபின்,
கீழே வடிந்து காய்ந்த மண்பால்

படம் - 2

நடுப் பகுதியிலிருந்து மரத்தின் மேல்பகுதியும், கீழ்ப்பகுதியும் (பட்டை) சீவப்பட்டபின் மேற்பகுதிக்கு மேலுள்ள பகுதியில் பட்டை சீவத் தொடங்குவர். அப் பகுதியை ஒருவர் சீவ வேண்டுமானால், ஒரு சிறு ஏணியின்மேல் நின்றே சீவ வேண்டும். மரம் சீவ உதவும் மற்றக் கருவிகளோடு, சிறு ஏணியையும் தூக்கிச் செல்லவேண்டும். இந்த அமைப்புடைய கோட்டை ஏணிக்கோடு என்பர். ஏணியின்மேல் நின்று சீவப்படும் கோடு என்று இதன் பொருள் விரியும்.

மேல்கோடு, கீழ்க்கோடு, ஏணிக்கோடுகளை அடுத்து இன்னொரு கோடும் உள்ளது. அது 'கழுத்துக்கோடு' எனப்படும். மரங்களின் பயன் உறிஞ்சப்பட்டு (30 ஆண்டுகளுக்குப் பின்) அழிக்கப்படும் நிலையில் கிடைத்த வரை பால் கிடைக்கட்டும் என்ற நோக்கில் ஏணிக்கோட்டுக்கும் மேலே போடப்படும் கோடு கழுத்துக்கோடு எனப்படும். மற்றக் கோடுகளில் மேலிருந்து கீழ்நோக்கிச் சீவுவர். கழுத்துக்கோட்டில் கீழிருந்து மேல் நோக்கிச் சீவிக்கொண்டு போவர்.

ரப்பர் மரம் தரும் பாலுக்கும் தன்மைக்குமேற்பப் பெயர்கள் உள. மரத்திலிருந்து வடிந்து நீர்ம நிலையில் உள்ள பால் பொதுவாகப் 'பால்' அஃதாவது தண்(ணீர்ப்)ணிப்பால் எனப்படும். அப் பால் தொழிற்சாலையில் தொட்டிகளில் ஊற்றப்பட்டு மருந்து கலந்து உறைய வைக்கப்படும். தொட்டிகளில் பால் நீர்ம நிலையில் இருக்கும்போதே இடையிடையே தகடுகளைச் செருகிவிடுவர். மறுநாள் பால் உறைந்து சிறுசிறு தகடுகள்போல் ஆகும். அவற்றைப் பொறியில் விட்டு நசுக்கிக் காய வைத்தபின் மெல்லிய சிறுசிறு தகடுகள் போல் ஆகும். இவற்றைச் 'சீட்டி' (Sheet) என்பர். அவையே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும்.

பாலில் வேறு வகைகளும் உள. கோடுகளில் படிந்திருக்கும் பால், கோட்டுப்பால் எனப்படும். ஒருநாள் விட்டு ஒருநாள் சீவச் செல்லும்போது உறைந்திருக்கும் அப் பாலை உரித்து எடுப்பர். மங்கு நிறைந்து கீழே வடியும் பால் மண்பால் எனப்படும். திரட்டிய பின் வடியும், மங்கில் படிந் திருக்கும் பால் மங்குப்பால் / கட்டிப்பால் எனப்படும். இங்ஙனம் ஒரு சொட்டுப் பால்கூட வீணாகாமல் திரட்டிவிடுவர்.

லெட்டெக்ஸ் (latex) என்ற ஆங்கிலச் சொல்லைப் பாலாக்கி அதன் தொடர்புடைய அனைத்துக் கலைச்சொற்களுக்கும் தூய தமிழ்ப்பெயர் சூட்டிய அன்றைய பாமரத் தமிழர்தம் மொழித்திறம் வியந்து பாராட்டத் தக்கதாகும்.

மரத்துக்கும் பொட்டு வைப்பர்

ரப்பர்ப் பட்டையைச் சீவும்போது மிகுதியாக அழுத்திச் சீவக் கூடாது. ஆழமாகவும் உளி பாயக் கூடாது. உளி கூடுதலாக உள்நோக்கி

அழுத்தினால் மரத்தில் 'காயம்' ஏற்பட்டுவிடும். பின் அவ்விடம் முடிச்சுப்போல் ஆகிவிடும். மேலும் பட்டையை மேலோட்டமாகவே சீவ வேண்டும். கூடுதல் பட்டை சீவப்பட்டால் சீவப்படும் பகுதி மிக விரைந்து முடிவெய்திவிடும். அதனால் இழைப்பதுபோல் மிகமிக மென்மையாகச் சீவ வேண்டும். இஃது ஒரு தொழில்நுட்ப மாகும். நன்கு பயிற்சி பெற்றால்தான் திறமையாகத் தொழில்புரிய முடியும். ஒரு மாதத்தில் எந்த அளவு சீவ வேண்டுமென்று கணக்குண்டு. அதனால் மாதம் முடிந்ததும் சுற்றுக்கோட்டில் மூன்று இடங்களில் 'பொட்டு' வைக்க வேண்டும். இதே போல் ஒவ்வொரு மாதமும் செய்ய வேண்டும். இஃது இடைவெளியைக் கண்டுபிடிக்க உதவும். வைக்கப்படும் அடையாளம் நெற்றியில் வைக்கும் பொட்டுப் போன்ற தாகையால் அதற்குப் 'பொட்டு' என்று பெயரிட்டனர். இங்ஙனம் தொழில் தொடர்புடைய அனைத்துச் சொற்களையும் தமிழ்ச்சொற்களாகவே ஆக்கிக்கொண்டனர்.

விலைவீழ்ச்சியும் விளைவும்

ரப்பர் விலை ஒரு காலத்தில் தங்கத்துக்கு நிகராக இருந்தது. முதலாம் உலகப்போர்க்காலப் பகுதியில் அது வீழ்ச்சி கண்டது. அதனால் தோட்டப்புறத் தொழில் முடக்கம் கண்டது. பலர் தாயகம் திரும்ப வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டது. அச் சூழலை ஒரு குரல் எடுத்துரைத்தபோது ரப்பர்த் தொழில் தொடர்புடைய பல கலைச்சொற்கள் அச் செய்தியில் இடம்பெற்றன. தோட்டத் தொழில் தொடர்புடைய புதிய கலைச்சொற்கள் அவர்கள் பேச்சு மொழியில் இயல்பாக எங்ஙனம் கலந்து புழங்கின என்பதனைக் கீழ்க்காணும் பாடல் ஓர் எடுத்துக்காட்டாகும்.

"போய் வாரன் பால்மரமே
போய் வாரன் பால்மரமே
பவுனுக்குப் பவுனு ரப்பர்
பாலு வித்த காலம் போச்சு
சீட்டுப்பால் ஒரு விலையும்
கோட்டுப்பால் ஒரு விலையும்
மங்குப்பால் ஒரு விலையும்
மண்ணுப்பால் ஒரு விலையும்
சிங்கம்போல் விலையை விற்றார்.
பங்கம்போல் நிலைகுலைந்தார்
போய்வாரன் பால்மரமே
போய்வாரன் பால்மரமே

கண்ணாடி துரையும் போனார்
கங்காணியும் வீடு போனார்
பின்னால கிராணி போனார்
தங்காம நானும் போறேன் பால்மரமே

போய்வாரன் பால்மரமே
போய்வாரன் பால்மரமே"[4].

'நூலில் பாய்மரமே' என்று வருகிறது. பாடலில் வரும் 'பாய்மரமே' என்ற சொல் பாடவேறுபாடாகும்; 'பால்மரமே' என்றுதான் வர வேண்டும். மலேசியத் தமிழர் வாழ்வு பால்மரத்தொடு பின்னிப் பிணைந்தது; பாடலில் வரும் செய்தி முழுமையும் பால்மரம் தொடர்புடையதே ஆகும். ரப்பர் (பால்) மரம் தந்த பால், தங்கத்திற்கு நிகராக விற்ற நிலைபோய், மிகவும் சரிந்து தொழிலே முடங்கியபோது, அதனால் வாழ்ந்துகொண்டிருந்த மனத்தின் புலம்பல் இது. அப் புலம்பலை - குமுறலைத் தாயகத்திற்குப் புறப்படுமுன் வாழ்வளித்த மரத்தினிடம் விடைபெறுவதுபோல் இப் பாடல் அமைந்துள்ளது. ஆகவே, 'பால்மரம்' என்பதே சரியான சொல்லாகும்.

பாடலில் சீட்டுப்பால், கோட்டுப்பால், மங்குப்பால், மண்ணுப்பால் போன்ற சொற்கள் வருவதோடு, இந் நாட்டைவிட்டுப் போக வேண்டிய சூழலால் ஏற்பட்ட துயரமும் தொக்கி நிற்கிறது. துரை (வெள்ளைக்கார நிருவாகி), கிராணி (கணக்கர்), கண்காணி ஆகியோரும் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டதை அக்கால மொழி நடையில் பாடல் எடுத்துரைக்கிறது.

அக் காலத் தோட்டப்புறத் தமிழர் நாவில் பிறமொழிச் சொற்கள் அத்துணை எளிதில் நுழையவில்லை. தங்கள் தொழில்சார்ந்த அத்தனை சொற்களையும் தமிழாகவே ஆக்கிக்கொண்டனர். தொழிலுக்குரிய கருவிகளின் பெயர்களும் தமிழாகவே இருந்தன. ரப்பர் மரப் பட்டையைச் சீவ இருவகைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஒன்று ஏத்(ற்று)துளி அல்லது குத்துளி. இது முன்னோக்கிச் சீவும் உளி. மற்றொன்று இழுப்புளி. இது பின் நோக்கி இழுப்பதாகும். பாலைத் திரட்ட வாளியைப் பயன்படுத்தினர். கோட்டுப்பாலையும் கட்டிப்பாலையும் போட்டு வைத்துக்கொள்ள சிறுகோணி - அதனைக் `குட்டிச் சாக்கு` என்றனர். அதனை இடுப்பில் கட்டிக்கொள்வர்.

வேலை செய்துகொண்டிருக்கும்போது மழை வந்து விட்டால், வடியும் பாலில் மழைநீர் கலந்து பால் வீணாகும். அதுபோன்ற நாள்களில் பாதிச் சம்பளமே கிட்டும். அதனை `அரைப்பேர்` என்றனர். அடுத்தடுத்த நாள்களில் அதனை நிறைவு செய்ய வேண்டும். அன்று ஒன்றரைப்பேர் கிட்டும். விடு முறையைத் `திட்டி` என்றனர். cuti என்பது (விடுமுறை) மலாய்ச்சொல்.

இச் சொல்லுக்குத் தமிழ் அகராதிகளில் விடுமுறை என்ற பொருள் தரப் படவில்லை. ஆங்கிலத்தில் ஃபீல்டுவொர்க் (Field work) என்பதனைத் தமிழில் `வெளிக்காட்டு வேலை` என்றனர். இவை மட்டுமன்றி இன்னும் பல தமிழ்ச்சொற்கள் அக் காலத் தோட்டப்புறச் சமுதாயத்தில் புழக்கத்தில் இருந்தன.

குடும்ப நிகழ்வுகளில் தமிழ்

தோட்டத்தொழில் துறையிலேயே நல்ல தமிழ்ச்சொற்கள் புழங்கியிருந்தனவெனில், வீட்டு நிகழ்வுகள் பற்றிக் கூறத் தேவையில்லை. தமிழகத்திலிருந்து பிழைப்பு நாடிப் புறப்பட்டபோது எப்பேர்ப்பட்ட சூழலில் வாழ்ந்தார்களோ அதேபோன்ற சூழலே புலம்பெயர்ந்து வந்து குடியேறிய மண்ணிலும் தொடக்க காலத்தில் அமைந்ததால் பேச்சுமொழி மாறுபடாமல் நீண்டகாலம் அதே போக்கில் தொடர்ந்தது. பொதுவான பண்பாடு, குடும்பச் சடங்குகள் அவற்றிற்குரிய கலைச்சொற்கள் கலப்பின்றியே இக்காலகட்டத்தில் வழங்கின.

பெண் பார்த்தல், மாப்பிள்ளை வீடு பார்த்தல், வெற்றிலை பாக்கு மாற்றுதல், திருமண உறுதிப்பாடு (நிச்சயதார்த்தம்), பரிசம், நலுங்கு வைத்தல், திருமணம் (கலியாணம்) மறுவீடழைப்புப் போன்ற சடங்குகள் குறைவின்றி நடந்தன.

சடங்குகளில் வட்டார வழக்குகளும் பின்பற்றப்பட்டன. பூப்பெய்திய பெண்ணுக்குச் சடங்கு செய்தல், குழந்தைக்கு முடியிறக்குதல், காது குத்துதல், நிறைசூல் கொண்டோர்க்கு வளைகாப்புச் சடங்கு நடத்துதல் போன்றவை அன்றைய தமிழகச் சிற்றூர்களில் நடந்த முறையிலேயே நடந்தன.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்

இரண்டாம் உலகப்போருக்குப் பின் தொடங்கி, நாடு விடுதலை பெற்றது வரையிலான காலம், கலப்பு நிகழத் தொடங்கிய காலம் எனலாம். இரண்டாம் உலகப்போர் ஏற்படுத்திய நிகழ்வுகளுள் விடுதலை உணர்வு முதன்மையானதாகும். போருக்கு முந்திய காலத்தில் இந்தியர்-தமிழர் உணர்வுகள் அவர்கள் மூலத் தாயக விடுதலையில் இருந்தது; சீனர்களின் உணர்வுகளும் அவர்கள் தாயகம் பற்றியதாகவே இருந்தது. மலாய்க்காரர் மாலாயா விடுதலை பெறவேண்டுமென்ற வேட்கை கொண்டிருந்தனர்.

சப்பானியரிடமிருந்து வெள்ளையர் மீண்டும் நாட்டைக் கைப்பற்றியதும் அவர்களிடமிருந்து நாட்டை மீட்க மூன்று இனங்களும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயமானது. இயல்பாகவே அந்த ஒற்றுமை உணர்வு பிறந்தது. உருவான தொழிற்சங்கங்களில் மூவினத்தவரும் இணைந்தனர். அரசியல் கட்சிகள் தனித்தனியாக இயங்கின. எனினும், நாட்டு உணர்வில் ஒன்றிச் செயற்பட்டன. அதனால் ஆங்கிலம், மலாய் மொழிகளை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டது.

பட்டணங்களில் மட்டுமன்றித் தோட்டப்புறங்களிலும் தமிழர்களுடன் மலாய்க்காரரும், சீனரும் சேர்ந்து பணிபுரியத் தொடங்கினர் (சிறுபான்மையே). சீனர்கள் பெரும்பாலும் சொந்தக் குடியிருப்புகளிலிருந்து வந்து ஒப்பந்த முறையில் தொழில் புரிந்தனர்.

தோட்டப்புறங்களில் ஏற்பட்ட இந்த மாறுதல் தமிழர்தம் பேச்சு மொழியைப் பேரளவு மாற்றவில்லை எனினும், சில மலாய், ஆங்கிலச் சொற்கள் கலக்கத் தொடங்கின. போர்க்காலத்தின்போது சில சப்பானியச் சொற்களையும் பயன்படுத்த வேண்டுவதாயிற்று. கீழ்க்காணும் பாடல் அதற்குச் சான்று பகர்கிறது:

“சீயாமுக்கு இந்தியர்கள் போனதினாலே
கண்கலங்கி வாடுகிறோம்
தாயில்லாப் பிள்ளை போலே! - அய்யா
தாயில்லாப் பிள்ளை போலே!
பேயா மழையில்
பெருத்த வெயிலில்
வேலை செய்தோமே! - அவன்
‘குர்ரா கூரா’ என்று சொல்லி
உதையும் பட்டோமே! - அய்யா
உதையும் பட்டோமே!
காலராவில் மாண்ட ஜனம்
கோடானு கோடி! - அங்குக்
கணக்கெடுத்துப் பார்க்கப் போனா
இல்லையேடி நாடி!
பம்பூனிலிருந்து பர்மா வரையில்
ரோட்டப் போட்டோமே
ரோட்டப் போட்டோமே
ரோட்டப் போட்டு முடித்தவுடன்
ரெஜிமெண்டு ஏறினாரே!- அய்யா
ரெஜிமெண்டு ஏறினாரே!”[5]

சயாமிற்கு (மரண) ரயில்பாதை அமைக்க மக்களை இழுத்துச் சென்ற கதையும், அங்கு நிகழ்ந்த அவலமும் பாட்டில் சொல்லப்பட்டுள்ளன. ‘சீயாம்’ (சயாம்), ‘காலரா’ போன்ற சில இட, நோய்ப் பெயர்களொடு ‘குரா கூரா’ என்ற சப்பானியச் சொல்லும், ரோடு (Road), ரெஜிமெண்டு (Regiment) ஆகிய ஆங்கிலச் சொற்களும் வந்துள்ளன. சாலைக்குச் சடக்கு என்ற சொல்லைப் பயன்படுத்தினர். அகர முதலியில் காணப்படாத சில சொற்களையும்

சிற்றூர் தோட்டப்புற மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அவற்றையெல்லாம் சேர்த்தால் மொழிக்குப் பெருஞ்செல்வம் சேரும்.

சப்பான்மொழி தமிழில் கலக்கவில்லை

இங்கு நடந்த சப்பானியர் ஆட்சியை (1941-45) முறையான ஆட்சி என்று சொல்ல முடியாது. போர்மேகம் சூழ்ந்திருந்த நிலையில், வெறி கொண்ட, மாந்த நேயமற்ற சப்பானியப் படையினர் விலங்கு மனத்தொடு நடத்திய ஒரு கொடிய ஆட்சி அது.

ஒரு நாட்டைக் கைப்பற்றுவோர் அந்த மண்ணுக்குரிய மக்களின் உடல்களை அடிமைப்படுத்துவதொடு, மனத்தை-மூளையை அடிமைப் படுத்துவதில் மிகுந்த கருத்துச் செலுத்துவர். அதற்கு எளிய வழி, அவர்கள் மொழியை அடிமை கொண்டோர் மூளையில் புகுத்துவதாகும். அதன்மூலம் ஆளவந்தோர் பண்பாடு முதலாய அனைத்தையும் அடிமைப்பட்டோர் வாழ்வில் கலந்துவிட முடியும்.

சப்பானியர் "ஆசியா ஆசியருக்கே" என்று தந்திரக்குரல் எழுப்பி வந்தாலும் இந்த மண்ணில் தங்களை வேரூன்றிக் கொள்ள வேண்டு மென்பதனைச் செயல்படுத்தும் வண்ணம் சப்பான் மொழியை அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டுமென்று கட்டளை இட்டனர். ஆங்காங்கே வகுப்புகள் தொடங்கப்பட்டன. அவர்கள் ஆட்சி நீளத் தொடரவில்லை யாதலால் இங்கு அந்த மொழி பரவவில்லை. மலாய், சீனமொழிகளிலும் அம் மொழி ஊடுருவவில்லை.

சயாம் தொடர்வண்டிப் பாதையில் (Death Railway) வேலை செய்தோர் பூத்தாய்(குடியிருப்பு), கெம்பித்தாய் (அதிகாரிகள் தங்குமிடம்), குருத்தோ (கண்காணி) போன்ற சில சொற்களைப் பயன்படுத்தினர் என்று அங்கிருந்து திரும்பியோர் மூலம் அறிய முடிகிறது. ஆனால், அங்கிருந்து திரும்பிய பின் அவர்களுள் யாரும் சப்பானிய மொழிச் சொற்களைப் பயன்படுத்தவில்லை. சப்பானிய ஆட்சி முடிந்தபின் சில காலம்வரை நகைச் சுவைக்காகக் 'குரா கூரா' என்பது போன்ற ஓரிரு சொற்களைச் சிலர் பயன்படுத்தினர். பின்னர் அம் மொழிச்சொல் எதுவுமே இங்கு ஊடுருவவில்லை.

காலம் மிக வேகமாக மாறிக்கொண்டிருந்தது. தமிழ்ப்பள்ளி களும் மாறுதல் கொள்ளத் தொடங்கின. போக்குவரத்து வசதிகள் முன்னேற்றம் காணத் தொடங்கின. ஊடகங்களும் வளர்ச்சி கண்டன. பல்லின ஒற்றுமை அரும்பத் தொடங்கியது. அதனால் 'கலப்பு' தலைகாட்டத் தொடங்கியது. மொழிக் கலப்பு, பண்பாட்டுக் கலப்பு, உணவுமுறைக் கலப்பு, உடையில் மாறுதல் எனப் பல மாறுதல்கள் ஏற்படத்தொடங்கின. சுழி (பூஜ்ஜியம்) கோசம் (Kosong) ஆனது. எளிது சின்னாங்கு (Senang) ஆனது.

கைகூடல் ஜாடி (Jadi) ஆனது. இங்ஙனம் சிற்சில சொற்கள் தமிழ் உரையாடல்களில் தலைகாட்டத் தொடங்கின எனினும், இஃது இயல்பான தமிழ்ப் பேச்சுமொழியைப் பேரளவு குலைவுறச் செய்யவில்லை, சாரி (Sorry), தேங்ஸ் (Thanks), சார் (Sir), ஸ்கூல் (School), டவுன் (Town), பாஸ் (Pass), பெயில் (Fail), புக் (Book) போன்ற சொற்கள் உரையாடலில் இடையிடையே தலைகாட்டத் தொடங்கின. எனினும், அது மொழியின் சிதைவுக்கு வழிவகுக்கவில்லை. அக் கால வானொலி, திரைப்படங்கள் தமிழைத் 'தமிங்கில'மாக்க முயலவில்லை, 1950களில் கோ.சாரங்கபாணி ஏற்படுத்திய தமிழ் உணர்வு, மொழிமானத்தை இழக்கவிடாமல் காத்த கவசங் களில் முதன்மையானது. அவர் நடத்திய 'தமிழ் முரசு' நாளிதழ், தமிழ் உணர்வலைகளை எழுப்பிக்கொண்டே இருந்தது. தொண்டூழிய இயக்கங் களும் தமிழ் உணர்வைப் பரப்பின. ஆக, இந்த இரண்டாங்கட்டக்காலத்திலும் தமிழ்ப் பேச்சுமொழி கலப்பு மிகாத நல்ல நிலையிலேயே தொடர்ந்தது.

விடுதலைக்குப் பிந்திய காலம் (1957-க்குப் பின்)

விடுதலை பெறுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே இனங் களுக்கிடையே ஒருமைப்பாட்டுணர்வு ஏற்படத் தொடங்கிவிட்டது. வெள்ளையரிடமிருந்து நாட்டை மீட்க ஒற்றுமை இன்றியமையாததாய் இருந்தது. அந்தக் கூட்டுணர்வு பல துறைகளிலும் விரிவு கண்டது. மலாய் மொழி தேசியமொழி என்னும் தகுதி பெற்றது; அயலகத் தொடர்புக்கு ஆங்கிலம் தேவைப்பட்டது. ஆக, தாய்மொழியோடு அவ்விரு மொழிகளையும் கற்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. பள்ளிக் கலைத்திட்டமும் (Syllabus) அதற்கேற்ப அமைந்தது. தமிழ், சீனப் பள்ளிகளிலும் மலாய், ஆங்கில மொழிகள் கற்பிக்கப்பட்டன. அதனால் புதிய தலைமுறையினர் மும்மொழி களும் கற்று வளர்ந்தனர். பன்மொழி அறிவு, பல்லினக் கூட்டுறவு போன்றவை தமிழர் பேச்சுமொழியில் இலேசாக மாறுதல்களை ஏற்படுத்தத் தொடங்கின.

ஆங்கிலம் இந்திய - குறிப்பாகத் தமிழக மக்களிடையே ஏற்படுத்திய தாக்கத்தை, அடிமை உணர்வை இங்கு மலாய்க்கார, சீன, தமிழ்ச் சமுதா யங்களில் ஏற்படுத்தவில்லை. இயல்பாய்க் கலந்த சில சொற்கள் மொழியின் மானம் போக்கும் அளவு சீர்கேட்டை ஏற்படுத்தவில்லை. மலாய்மொழியில் ஆங்கில அறிவியல் கலைச்சொற்கள் மலாய்மொழியின் தேவைக்கேற்ப - மலாய் ஒலிமுறைக்கேற்பக் கலக்கின்றனவேயன்றி, மொழியின் அமைப்பே வேறுபடுமளவில் இல்லை.

வானொலி, தொலைக்காட்சி, இதழ்கள் போன்ற ஊடகங்களிலும் நல்ல தமிழ் புழங்கியதாலும், இயக்கங்கள், தொண்டூழிய நிறுவனங்கள் போன்றவை இதனில் முனைப்புக் காட்டியதாலும் தமிழ்மக்கள் நாவில் தமிழ் தமிழாகவே ஒலித்தது. இந் நிலை அண்மைக் காலம்வரை நீடித்தது. தற்போது

சற்றுத் தடுமாறத் தொடங்கியுள்ளது. இதற்குக் காரணம் தமிழக வரவுகளேயாகும். பொருளையே நோக்கமாய்க் கொண்ட சில/பல கலை வணிகர்களின் திரைப்படங்கள், ஆண்டுக் கணக்கில் இழுத்தடிக்கப்படும் சின்னத்திரைத் தொடர்நாடகங்கள், நுனி நாக்கில் 'தமிங்கிலம்' பேசும் (தமிழக) தொலைக்காட்சி (TV) அறிவிப்பாளர்கள் மொழி ஆகியன, நல்ல தமிழில் பேசிவந்த இந் நாட்டில் பெருஞ்சீர்கேட்டை ஏற்படுத்தி வருகின்றன. கலைஞர் என்னும் பெயரில் திரையில் மின்னுகின்ற கலை இயந்திரங்கள்-ரோபோட்டுகள் (திரையில் அவர்கள் இயக்குநர் சொல்வதற்கேற்ப உடலை மட்டும்தானே அசைக்கிறார்கள். குரலுக்கு அவர்கள் சொந்தக்காரர் அல்லர்) இங்கு நேரில் வந்து கொட்டும் ஆலத்தை (நஞ்சு) அமுதமென மயங்குவோர், அதுவே உண்மையான தமிழ் என்று ஏமாறும் கொடுமையும் இங்குத் தமிழ்ப் பேச்சுமொழி சிதைந்து வருவதற்கு ஒரு முதன்மைக் காரணமாகும். இதற்கு ஒரு முடிவு காணாவிடில் மொழிமானம் மூன்று தமிழைச் சிதைக்கும். தமிழ்நாட்டார் (உணர்வுடையோர் இதனில் அடங்கார்) பேச்சுப் போலவே இங்கும் ஆகலாம். கலைஞர் சிவக்குமார் முதலாய சிலர் இதற்கு மாறான வர்கள் என்பதனையும், இங்கு வருங்கால் நல்ல தமிழ் உணர்வு நலன்களை ஊட்டிச் செல்கிறார்கள் என்பதனையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இப்போதைய தலைமுறையினர் பலருக்கு பட்(but), சோ(so) போன்ற ஆங்கில இடைச்சொற்களின்றி உரையாட, நேருரை (பேட்டி) தர இயல வில்லை. இது தமிழ்நாட்டுத் தாக்கமாகும்.

தமிழகப் புலவர் பெருமக்களே வியக்குமளவு சீர்மையோடு விளங்கிய மலேசியத் தமிழ்ப் பேச்சுமொழி, தமிழக ஊடகங்களால்- சில/பல இதழ்களால் `தமிங்கிலத்தில்` எழுதப்படும் சிறுகதை, புதினங்களால் விரைந்து மாற்றம் கண்டு வருவது கவலையளிக்கும் நிலையாகும். உணர்வுடையோர் இன்றும் நல்ல தமிழே பேசி வருகின்றனர். இனமானம் பற்றியோ, மொழிமானம் பற்றியோ எண்ணாதோர் பெரும்பான்மையைப் பின்பற்றுவது இயல்புதானே? வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் சிலர் தமிழக முறையைப் பின்பற்றுவதும் மனம் போனபடியெல்லாம் மொழியைப் பேசுவதும் இங்குப் பேச்சுத்தமிழில் பெரும் தீய விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

நாட்டின் தேசிய மொழியாகிய மலாய்மொழித் தாக்கம் இங்குப் பேச்சுத்தமிழில் ஓரளவே ஊடுருவியுள்ளது. அது மொழியைச் சிதைக்கும் அளவு இல்லை. எழுதப்படும் நாடகம், சிறுகதைகளிலும் அதன் தாக்கம் பெரிதும் இல்லை.

இங்குத் தமிழ் பேசுவோரை நான்கு பிரிவுகளில் அடக்கலாம். 1. வீட்டில் தமிழைச் சரளமாகப் பேசுவதோடு ஆறு ஆண்டுகள் தமிழ்ப்

பள்ளியில் கற்றும் உயர்நிலைப்பள்ளி / பல்கலை வரையில் தமிழையும் ஒரு விருப்பப் பாடமாகப் படித்தோர் பேசும் மொழி, 2. தமிழ்ப்பள்ளியில் பயிலாவிட்டாலும் வீட்டில் சரளமாகத் தமிழ் புழங்கும் சூழலோடு தேசியப் பள்ளியில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் பயில்வோர் பேசும் தமிழ், 3. வீட்டில் பெரிதும் ஆங்கிலமே புழங்க, பள்ளியில் தமிழை ஒரு விருப்பப் பாடமாகக்கூட எடுத்துப் பயிலாதோர் பேசும் தமிழ், 4. ஆங்கிலத்தைத் தாய்மொழிபோல் ஏற்று, வீட்டு மொழியாகப் பாவித்து, எப்போதாவது சில சொற்கள் கூறுவார் பேசும் தமிழ் எனப் பிரிக்கலாம். இவர்களுள் முந்திய இரு பிரிவினருக்கு ஓரளவும், கடைசி இரு பிரிவினருக்குப் பேரளவும் ஊடகங்களே வழிகாட்டிகளாய் உள்ளன. மூன்றாம் பிரிவினர் கலப்புத் தமிழாவது பேச ஊடகங்கள் ஓரளவு துணையும் புரிகின்றன என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் - குறிப்பாகத் திரைப்படங்களை, சின்னத்திரை நாடகங்களை மிகுதியாகப் பார்ப்பவர்களில் தமிழர்க்கிணை யாருமில்லை. 24 மணிநேர ஒலி, ஒளி பரப்புகள் தொடர்வதனால் அந்த ஈர்ப்புகள் நன்மை விளைவிப்பதற்கு மாறாகத் தீமைகளையே விளைவிக்கின்றன; மொழிச் சிதைவிற்கும், பண்பாட்டுத் தாழ்ச்சிக்கும் அவை வழிவகுக்கின்றன. முதாதையர் தாயகம் புலம்பெயர்ந்தோர்க்கு வழிகாட்டும் வாயிலாய் இருப்பதற்கு மாறாக, அவர்தம் நல்லியல்புகளையும் குன்றச்செய்வதாய் இருத்தல் அவப்பேறாகும்.

தற்காலத்தில் வாய்மொழித் தமிழ்

சமுதாயப் பெருந்தலைவர் கோ. சாரங்கபாணி தமிழர் திருநாள் மூலமும், தமிழ்முரசு நாளிதழ் மூலமும் ஏற்படுத்திய உணர்வுகள் இங்கு இன்னும் சிதைந்து விடவில்லை. தனித்தமிழ்க் கடல் மறைமலையடிகள், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் போன்ற பெருமக்கள் ஏற்படுத்திய தனித்தமிழ் உணர்வலைகள் கரைதொட்டுக் கலைந்து போகவில்லை. அதே நேரத்தில் இப்போதைய ஊடகங்களில் வழிவந்து குவியும் மொழிநலம் பேணா வணிகக் குப்பைகளிலிருந்து கிளம்பும் தூய்மைக் கேடும் தீய விளைவுகளை ஏற்படுத்தாமல் இல்லை. இவற்றையெல்லாம் கொண்டு நோக்கும்போது, இங்கு, இப்போதைய பேச்சுமொழி நான்கு வகைகளில் அடங்குவதை உணர முடிகிறது. இதனைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. பிறமொழிக் கலப்பில்லாத தனித்தமிழ் பேச விழைவோர்.
2. இயல்பாகக் கலந்துவிட்ட சொற்களைப் புறக்கணிக்காமல் கூடியவரை நல்ல தமிழில் பேச விழைவோர்.
3. கருத்தை வெளிப்படுத்தினால் சரி என்னும் நோக்கோடு மலாய், ஆங்கிலம், ஒருசில சீனமொழிச் சொற்களைக் கலந்து பேசுவோர்.

4. திரைப்படங்களில், சின்னத்திரைகளில் பேசும் மொழியே சரியான மொழி, திரைப்பட நடிகர்கள் இங்கு வந்து பேசும் மொழியே பொருத்தமான மொழி, தமிழகத் தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளர் (சிலரின்) நுனிநாக்கு மொழியே இனிமையானது என்று மயங்கி அந்த முறையைப் பின்பற்றிப் பேச முயல்வோர்.

மேற்படி, நான்கு வகைகளில் இங்கு வழங்கும் பேச்சுத்தமிழ் கீழே எடுத்துக் காட்டப்பெறுகிறது.

தனித்தமிழ் ஆர்வலர் இருவர் தொலைபேசி உரையாடல் இது.

வழுதி : வணக்கம் வளவன். நலம்தானே?

வளவன் : நலம்தான் வழுதி. நீங்கள் நலந்தானே?

வழுதி : நான், என் துணைவி பொற்கொடி, மகள் தேன்மொழி, மகன் அருள்மொழி எல்லாரும் நல்ல நலம்.

வளவன் : நல்ல வேளை, வீட்டில் வளரும் கால்நடைகளின் நலன்களையும் சொல்லாமல் விட்டீரே!

வழுதி : ம்.... சொல்லட்டுமா?

வளவன் : ஐயோ! வேண்டா, வேண்டா!. ஏன் விடியறதுக்குள்ள தொலை பேசற? அதைமட்டும் சொல்லு.

வழுதி : ஒரு முகாமையான செய்தியைச் சொல்லத்தான் தொலை பேசறேன்.

வளவன் : என்ன அப்படி முகாமையான செய்தி? சொல்லு.

வழுதி : வரும் சுறவத் திங்கள்(தை மாதம்) 5ஆம் பக்கல் (தேதி) காரிக்கிழமை (சனி) மாலை 5.00 மணிக்கு ஒரு பொழிவுக்கு ஏற்பாடாகியிருக்கிறது. நீ கண்டிப்பாகக் கலந்துகொள்ளணும்.

வளவன் : ம்.... அன்றைக்குக் காலையிலே என் மாமாவுக்கு மணிவிழா நடக்கப்போவுது. பொழிவு மாலையில்தானே? வந்துவிடுவேன்.

வழுதி : பேச்சாளர் மகிழ்வுந்திலே (Car) வந்துவிடுவார். நான் முன் கூட்டியே பேருந்தில்(Bus) சென்றுவிடுவேன். நீ எப்படி?

வளவன் : நான் தொடர்வண்டியில் (Train) வந்துவிடுவேன் இயங்கியில் (Car) வந்தால் அதனை நிறுத்த இடம்தேடி அலைய வேண்டும்.

வழுதி : ம்... அதுவும் நல்லதுதான். என்ன? நீ மட்டும் வர நினைக்கிறாயா?

வளவன் : நல்ல சொற்பொழிவாயிற்றே!. என் மனைவி, பிள்ளைகளையும் அழைத்துவருவேன்.

வழுதி : ஏற்பாடுகள் செய்ய நான் முன்கூட்டியே சென்றுவிடுவேன்; வீட்டார் பிறகு வருவார்கள்.

வளவன் : சரி. பொழிவைப் பதிவுசெய்ய ஏற்பாடு செய்துள்ளாயா?

வழுதி : ஒலி அமைப்பைச் செய்யும் மகிழ்நன் அதனைச் செய்து தருவார். ஒலிப் பேழையிலும் (கேசட்) குறுவட்டிலும் (CD) பதிவு செய்து தருவார்.

வளவன் : நல்ல ஏற்பாடு. தாளிகைகளில் செய்தி வருமல்லவா?

வழுதி : தாளிகைகளில் மட்டுமல்லாமல் வானொலியிலும் செய்தி வரும்.

வளவன் : நிகழ்ச்சி ஏற்பாடு செய்வதில் நீ மன்னன் அல்லவா?

வழுதி : புகழ்உரை இருக்கட்டும். நீயும் தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்லு.

வளவன் : சொல்வேன். கூட்டத்திற்கு வருவோர்க்குச் சுவைநீர் ஏதும்....?

வழுதி : சுவைநீர், பண்ணியம் (பலகாரம்) எல்லாம் உண்டு.

வளவன் : சரி, சரி. என் பங்கையும் தவறாமல் நிறைவேற்றுவேன்.

வழுதி : நன்றி.

இதே செய்தியையொட்டிய, தனித் தமிழில்தான் பேச வேண்டுமென்று தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளாத - அதே நேரம் நல்ல தமிழ் பேச விரும்பும் அன்பர்தம் உரையாடல் இங்ஙனம் அமையும்:

எழில் : வணக்கம் குமரன். சுகம்தானே?

குமரன் : சுகந்தான் எழில். நீங்க சுகமா இருக்கீங்களா?

எழில் : நான், என் மனைவி மங்கை, மகள் பூங்கொடி, மகன் வேலவன் எல்லாரும் சுகமாகவே இருக்கிறோம்.

குமரன் : நல்ல வேளை, வீட்டில் வளர்ற பிராணிகளும் சுகந்தான்னு சொல்லாம விட்டியே!

எழில் : ம்.... அதையும் சொல்லட்டுமா?

குமரன் : அம்மாடியோ! வேண்டாம்! வேண்டாம்!. சரி. சூரியன் புறப்படறதுக்கு முன்னாடியே டெலிபோன் பண்றியே ஏன்? அத மட்டும் சொல்லு.

எழில் : ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லத்தான் போன் பண்றேன்.

குமரன் : என்னது அப்பேர்ப்பட்ட செய்தி?

எழில் : வரப்போற தை மாதம் 5ஆம் தேதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஒரு சொற்பொழிவுக்கு ஏற்பாடு செஞ்சிருக்கிறோம். நீ கண்டிப்பா அதுல கலந்து கொள்ளணும்.

குமரன் : ம்.... அன்னைக்கு என் மாமாவுக்கு மணிவிழா நடக்கப் போவுது. சொற்பொழிவு மாலையில்தானே? அதுக்கு நான் வந்திடுவேன்.

எழில் : பேச்சாளர் கார்லே வந்துடுவார். நான் முன்கூட்டியே பஸ்ல போயிடுவேன். நீ எப்படி வர்றே?

குமரன் : நான் கம்ப்யூட்டர் ட்ரெயின்ல வந்துடுவேன். கார்ல வந்தா அதை பார்க் (park) பண்ண இடம்தேடி அலையணும்.

எழில் : ம்... அதுவும் நல்லதுதான். என்ன? நீ மட்டும் வரலாம்னு யோசிக்கிறாயா?

குமரன் : நல்ல சொற்பொழிவாச்சே!. என் மனைவி, பிள்ளைகளையும் அழைச்சிக்கிட்டுவருவேன்.

எழில் : ஏற்பாடுகளைக் கவனிக்க நான் முன்கூட்டியே போயிடுவேன்; வீட்டுக்காரங்களெல்லாம் பிறகு வருவாங்க.

குமரன் : சரி. பேச்ச ரெக்கார்டு பண்ண ஏற்பாடு செஞ்சிருக்கியா?

எழில் : மைக் ஏற்பாடு செய்யும் மகிழ்நன் பேச்ச ரெக்கார்டு பண்ணித் தருவார். கேசட்டிலும் சி.டி.யிலும் பதிவு பண்ணிக் கொடுப்பார்.

குமரன் : நல்ல ஏற்பாடு. பத்திரிகையிலே செய்தி வருமில்லையா?

எழில் : பத்திரிகையிலே மட்டுமா? ரேடியோவிலும் செய்தி வரும்.

குமரன் : நிகழ்ச்சி ஏற்பாடு செய்றதிலே நீ மன்னாதி மன்னனாச்சே!

எழில் : புகழ்வது இருக்கட்டும். நீயும் தெரிஞ்சவங்ககிட்ட எல்லாம் சொல்லு.

குமரன் : சொல்றேன்; சொல்றேன். கூட்டத்துக்கு வர்றவங்களுக்குத் தேநீர், பலகாரம் ஏதும் உண்டா?

எழில் : தேநீர், சிற்றுண்டி எல்லாம் உண்டு.

குமரன் : என்னென்ன பலகாரம் ஏற்பாடு பண்ணியிருக்கே?

எழில் : கரிபப், கூவே லப்பிஸ் (மலாய்க்காரர் அரிசி மாவில் செய்யும் பலகாரம்) என இரு பலகாரங்கள்.

குமரன் : சரி,சரி. நானும் உன்னோட ஒத்துழைப்பேன்.

எழில் : நன்றி.

முதல் வகையினர் பேச்சுக்கும் இரண்டாம் வகையினர் பேச்சுக்கும் நிரம்ப வேறுபாடில்லை. இயல்பான பேச்சு வழக்குச் சொற்களில் இன்றியமையாத சில மட்டுமே இரண்டாம் வகையினர் பேச்சிலே இடம் பெற்றுள்ளன. மற்றபடி, அவை மொழிச் சீர்கேட்டை ஏற்படுத்தவில்லை. மற்றொரு வகைப் பேச்சுக்குக் கீழ்க்காணும் உரையாடல் ஓர் எடுத்துக் காட்டாகும்.

கோபி : என்ன பாஞ்சான்(Panjang- உயரம்)

காளி : என்ன கோபி., என்ன `பாஞ்சான்`னே ஆக்கிட்டியா? நீ கட்டையா இருக்கே. உன்ன இனிமே `பேண்டே`ன்னு (Pendek - கட்டை) கூப்பிடலாமா?

கோபி : உன்ன காளின்னு கூப்பிட முடியாம இல்ல. பாஞ்சான்னு கூப்பிடறது ஒரு சாயாங்(அன்பு) தான்.

காளி : சரி. கோபின்னு கூப்பிடறதுக்குப் பதிலா பேண்டேன்னு சாயாங்கா (அன்பா) கூப்பிட்டா?

கோபி : சரி, சரி. விஷயத்துக்கு வருவோம்.

காளி : ம்.... தவுக்கே (சீன முதலாளி)கிட்ட வேலைக்குப் போனியே, என்ன சொன்னான்?

கோபி : வேல கோசம் (Kosong - காலி) இல்லேன்னுட்டான்.

காளி : ம்... அவன் அப்படித்தாம்பா. உந்தோங்(Untung-இலாபம்) எவ்வளவு வருதுன்னு பாப்பான். கை நிறைய உந்தோங் (இலாபம்) வராதுன்னு தெரிஞ்சா வேல குடுக்கமாட்டான்; வெரட்டிடுவான்.

கோபி : கித்தா (ரப்பர்)த் தோப்புல மூணு ஆளு செய்ய வேண்டிய வேலைய ஒரே ஆள செய்யச் சொல்வான். சம்பளம் ஒரு ஆள் சம்பளம்தான் குடுப்பான். சின்னாங்கான (senang) வேலைய எல்லாம் வேண்டியவங்களுக்குத்தான் கொடுப்பான்.

காளி : காஜிகுராங் (Kajikurang - சம்பளம் குறைவு); கிர்ஜா பாஞ்சாங் (kerja banyak- வேலை மிகுதி) சரி, அவன் கிடக்கிறான் நீ ஏங்கூட வா!

கோபி : எங்க கூப்பிடற பாஞ்சான்?

காளி : அட வாய மூடிக்கிட்டுப் பேசாம என்ன ஈக்கூட் பண்ணு (Ikut- பின்பற்றுதல்)

கோபி : என்ன பாஞ்சான், வெவரமா சொல்லேன்!

காளி : கோபி! பாடான் (Badan - உடம்பு) மட்டும் பேண்டே (கட்டை) இல்லை. ஒத்தாவும் (Otak - மூளை) பேண்டேதான் (கட்டைதான்).

கோபி : சரி, உனக்கு ஒத்தா (மூளை) ரொம்ப பாஞ்சாங் (நீளம்) தான். எங்க போலாம் அதையாவது சொல்லித் தொலை!

காளி : அப்துல்லா கெபுன்லே (kebun - தோட்டம்) சைவர் (காய்கறி) பயிர் செய்ய ஆள் தேவைன்னு கேள்விப்பட்டேன். போய்ப் பார்க்கலாம் வா.

கோபி : ஓ....! அப்படியா? சரி சரி, காஜி(Gaji - சம்பளம்) மாக்கான் (Makan- சாப்பாடு) ரெண்டும் கெடைக்குமில்ல.

காளி : சம்பளம் அப்துல்லா கொடுப்பாரு.

கோபி : சாப்பாடு.

காளி : மச்சி (Makcik - மதிப்பிற்குரிய பெண்மணி) இருக்காங்களே. அவங்க கெபுன்ல (தோட்டம்) வேல செய்யறவங்களைச் சும்மா அனுப்பமாட்டாங்க.

கோபி : ஆமாம். ஈக்கான் பிலாச (Ikanbilis - நெத்திலி கருவாடு) பொரிச்சி, ஒரு முட்டைய அவிச்சி, நாசி லெமாவுலே (Nasi lemak) தேங்காய்ப்பால் சோறு சேர்த்து வெச்சி குடுத்தாங் கன்னா...வாவ்... எவ்வளவு சிடாப்பா (Sedap - சுவை) இருக்கும் தெரியுமா?

காளி : ம்...! மொதல்ல வேல கெடைக்குதான்னு பாப்போம்.

கோபி : சரி. கெபுனுக்குப் (தோட்டத்துக்கு) போற ஜாலான் (Jalan - வழி) எது?

காளி : அதோ அந்த லோரோங்கிலே (Lorong - சந்து) போயி கீரியிலே (Kiri- இடப்பக்கம்) பொத்தோங் (Potong - திரும்புதல்) பண்ணி, துருசா (Terus - நேராக) போனா அங்கே ஒரு போண்டோங் (Pondok - குடிசை) தெரியும். அதுதான் அப்துல்லாவோட கெபுன் (தோட்டம்).

கோபி : சரி, என் சைக்கிள் கேரியரிலே உக்காந்துக்கோ. கொஞ்ச நேரத்திலே போயிடலாம்.

காளி : ம்... ஒரு தேதாரேக் (Teh tarik - தேநீர்) குடிச்சிட்டுப் போனா தெம்பா இருக்குமே!

கோபி : யா..யா.. (yah-yah ஆமாம் ஆமாம்) வா! அந்த ஸ்டால்ல போயி ஆளுக்கு ஒரு கப் தேதாரேயும், ரொட்டிச் சானாயும் (கோதுமை மாவு ரொட்டி - ஊத்தப்பம் போன்ற வடிவானது) அடிச்சிட்டுப் போலாம்.

காளி : சரி, வா!

இது மூன்றாம் வகையைச் சார்ந்தவர் (கல்வியறிவு குறைநதவர்) உரையாடலாகும். நான்காம் வகையினர் உரையாடலில் மலாய், ஆங்கிலச் சொற்கள் மிகுதியாய்க் கலக்கும். ஒரு மாதிரி உரையாடல் இது :

பிரகாஷ் : கூட்மோனிங் (Good morning) மிஸ்டர் பசு(பதி). ஹவ் வார் யூ?

பசுபதி : பைன், தேங்யூ (Fine, thank you).

பிரகாஷ் : மிஸ்டர் பசு, இன்னைக்கு ஈவினிங் (Evening) நீங்க பிரி (Free) தானே?

பசுபதி : எஸ். பிரிதான். என்ன விஷயம்?

பிரகாஷ் : பங்கோங் (படமேடை) கேப்பிட்டல்லே.....

பசுபதி : என்ன? நியூ சினிமா எதுவும் வந்திருக்கா?

பிரகாஷ் : எஸ் (Yes). நீயும் வந்தா போலாம்னு பாக்கறேன்.

பசுபதி : பிச்சர் பேர் என்ன?

பிரகாஷ் : பாய்ஸ் (Boys).

பசுபதி : ஓ...... அதுவா?

பிரகாஷ் : ஏன் என்னா?

பசுபதி : பிச்சரப்பத்தி ஒரு மாதிரியா பேசிக்கிறாங்களே!

பிரகாஷ் : அது எப்படியோ இருந்திட்டுப் போவட்டுமே! ஜஸ்ட் டைம்பாசிங் தானே!

பசுபதி : சரி, அதுல ஆக்ட் பன்ற ஹீரோ ஹீரோயின் யார் யார்?

பிரகாஷ் : எல்லாம் புதிய ஆக்டர்ஸ். அங்க போனா டீட்டேலா தெரிஞ்சுக்கலாம் பசு (பதி).

பசுபதி : ஓகே பிரகாஷ். ஐ ஆம் ரெடி.

பிரகாஷ் : சரி. ஈவினிங் சிக்ஸ் தேர்ட்டிக்கு ரெடியா இரு, நான் வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்.

பசுபதி : ம்... நீ ஹேண்ட் போன்ல (Cell phone) புது பிரிப்பெய்ட் கார்டு போட்டிருக்கேன்னு சொன்னியே! நம்பரைச் சொல்லு.

பிரகாஷ் : கோசம் ஒன்னு ரெண்டு நாலு கோசம் அஞ்சி ரெண்டு ஆறு கோசம் நாலு (012 - 4052604)

தமிழ்ப் புழக்கம் சரியாக இல்லாத குடும்பங்களில் உள்ளவர் உரையாடல் பெரும்பாலும் இப்படித்தான் இருக்கும். சில குடும்பங்களில் வீட்டு மொழியே ஆங்கிலமாகவும் உள்ள அவலத்தையும் இங்கே குறித்தே ஆக வேண்டும். இப்போதைய போக்கும், உச்சரிப்பு இலக்கண அமைதி போன்றவற்றைப் புறந்தள்ளி ஊடகங்களை ஆட்கொண்டிருக்கும் வணிக உருவாக்கங்களும், மொழியை, பண்பாட்டை, நல்லொழுக்கத்தைச் சீர்குலைத்துவிடுமோ என்று அஞ்சவேண்டிய நிலையிலேயே காலம் சென்று கொண்டிருக்கிறது.

சான்றெண் விளக்கம்

1. இரா. தண்டாயுதம், மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள், தமிழ்ப் புத்தகாலயம், 1998, ப. 25
2. மேலது, ப.26
3. மேலது, ப.23
4. மேலது, ப.27
5. மேலது, ப.29

2. கல்வித்துறையில் தமிழ்

தொடக்கப் பள்ளிகளில் தமிழ்

மலேசியாவில் தமிழ்க்கல்வி குறித்த ஒரு விரைவான பார்வையே இப் பகுதியாகும். இங்குத் தொடக்கத்திலிருந்த தமிழின் நிலையும், இடைக் காலத்தில் இடையூறுகளை வென்று அது படிப்படியாய் வளர்ந்த நிலையும், விடுதலைக்குப் பின் பெற்ற மாறுதல்களும், தற்கால நிலையும் எதிர்காலப் போக்கும் பொதுவாகக் கண்ணோட்டமிடப் பெறுகின்றன.

தொடக்ககால நிலை

கல்வித்துறையில் தமிழ் என்பதுபற்றி எண்ணிடுமுன், தொடக்க காலத்தில் இங்கிருந்த சமுதாயச் சூழலையும், மொழிச் சூழலையும் கருத்தில் கொள்வது முதன்மையாகும். இது முதற் பகுதியிலேயே சொல்லப்பெற்றது. மொழி மேம்பாட்டிற்குச் சமுதாயப் பின்புலம் முதன்மையாதலால், அது குறித்தும் சிறிது நினைவுகூரப்பெறுகிறது.

தென்னகத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்தோர் தகுதிநிலை குறித்து முன்பே விளக்கப்பெற்றது. அவர்களில் 85 விழுக்காட்டினர்க்குமேல் தோட்டப்புறங்களிலேயே அடைக்கப்பெற்றிருந்தனர். அவர்கள் வெளித் தொடர்பு கொள்ள வாய்ப்பே இல்லை; வீட்டுக் கைதிகள் நிலை என்று கூடக் கூறமுடியாது. சற்றேறக் குறையக் காலவரம்பற்ற வாழ்நாள் ஒறுப்புப் பெற்ற (ஆயுள் தண்டனை) சிறைக் கைதிகள் போன்ற நிலையிலேயே ஒடுக்கப்பட்டுக் கிடந்தனர். இதுகுறித்து இயுச் டிண்கர் (Hugh Tinker) கூறியதை எடுத்துக் காட்டும் பி. இராமசாமி, 'நீக்ரோ' அடிமைகளின் பிரதிநிதியாக இந்தப் புதிய அடிமைமுறை தோன்றுகிறது. இதில் ஆப்பிரிக்கச் சகோதரர்களின் அடிமைக் கூறுகள் இந்தியரிடம் தென் பட்டன. அடிமைத்தொழில் அழிந்து 40 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், வாழ்க்கைப் பின்னணியைக் காட்டுகிறது[1] என்கிறார்.

"ஒப்பந்தத்தில் வந்த நாம் கொத்தடிமைகள் அல்லர்; அடிப்படை உரிமைபெறத் தகுதியுடையவர். எம் எதிர்காலத் தலைமுறை கல்வி கற்கும் வாய்ப்பைத் தோட்ட முதலாளிகள் செய்து தர வேண்டும்" என்று உரிமை கோரிப் போராடும் துணிச்சல் அவர்களுக்கு ஏற்படவில்லை. "எல்லாம்

தலைவிதி; அவன் விட்ட வழி”யென்று கடவுளின்மேல் பாரத்தைப்போட்டு வாளாவிருக்கக் கோயில்களைக் கட்டிக் கொடுத்தனர்; குடித்துச் சீரழியக் கள்ளுக் கடைகளை ஏற்படுத்தித் தந்தனர் தோட்ட முதலாளிகள். ஆனால், கண்திறக்கும் கல்வி கற்கப் பள்ளிகளை நிறுவவில்லை. இங்கு அவர்கள் தங்கள் ஆங்கிலக் கல்வியை வளர்க்கவே (பட்டணங்களில்) முற்பட்டனர். சிற்றூர்ப் பகுதிகளில் (Kampung) இலவச மலாய்ப்பள்ளிகளை நிறுவினர். பழங்குடி மக்கள் கல்வியிலும் கருத்துச் செலுத்தினர். பழம் பெருமைகளும், இலக்கிய, இலக்கண வளங்களும் கொண்ட, புலம்பெயர்ந்தோர் மொழிகளான தமிழையும், சீனத்தையும் இழிசினர் மொழிகள் - தாழ்ந்த நிலையினர் பேசும் இழிமொழிகள் (Vernacular Languages) என்று இழித் துரைத்தனர். மேலும், “அம் மொழிகளின் வளர்ச்சிக்கு உதவுவது தம் கடமையன்று (In 1872 they decided that the education of the Indian and Chinese were not their responsibility) என்று முடிவெடுத்தனர் என்று அரசநாயகி கூறியதைத் த.மாரிமுத்து தமிழ்ப்பள்ளிகள் பற்றிய ஆய்வறிக் கையில் எடுத்துரைக்கிறார்.[2]

தொடக்கத்தில் ஆங்கிலேயர் இந்தியர்-தமிழர், சீனர் உழைப்பை மட்டுமே உறிஞ்சும் நோக்கத்தைக் கொண்டிருந்தனர். தங்கள் ஆளுகைக் குட்பட்ட அவர்கள் கல்வியறிவற்ற, கடுமையாக உழைக்க மட்டுமே தெரிந்த விலங்குகளாகவே இருத்தல் வேண்டுமென்று எண்ணினர். சீனரை ஆங்கிலேயர் தமிழரை ஆட்டிப் படைத்ததுபோல் நடத்த இயலவில்லை. சீனர் இயல்பாகவே விடுதலை உணர்வும், தாய்மொழிப் பற்றும் சொந்தத் தொழிலில் நாட்டமும் கொண்டவர்கள். அவர்கள் சொந்தமாகவே தங்கள் மொழியை வளர்த்துக்கொள்ளப் பள்ளிகளை அமைத்துக்கொண்டனர். கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மன்சு பேரரசு (Mancu Dynasty), மலாயாவுக்குப் புலம்பெயர்ந்த சீனர்களுக்குத் தாய்மொழிப் பள்ளிகள் நிறுவப் பொருள் உதவி வழங்கிற்று; பீக்கிங் பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களையும் அனுப்பிவைத்தது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

சீனர்கள்போல் தம் தாய்மொழி மேம்பாட்டிற்கு அடிப்படை போட்டுக் கொள்ளும் வலிமையைத் தமிழர் கொண்டிருக்கவில்லை. எனினும், தன்னார்வ நிலையில் இங்குத் தமிழ்மொழி பயிலப்பட்டு வந்துள்ளதற்கான சான்றுகள் உள. மலாய்மொழி வல்லுநரான (தமிழின இந்திய முஸ்லிம் வழிவந்த) முன்சி அப்துல்லா (1796-1854) மலாய்மொழியில் எழுதியுள்ள ஒரு குறிப்பில் தாம் தமிழ்க் கல்வியை மணல்மீது எழுதிப் பழகியதாகக் குறிப்பிட்டுள்ளார்.[3] ஆக, வரலாற்றுக் குறிப்புகளின் அடிப்படையில் பார்க்கும்போது, 1800 ஆம் ஆண்டளவிலேயே இங்குத் திண்ணைப்பள்ளி அமைப்புப்போன்று தமிழ்

மொழி வீடுகளிலும், சில பொது இடங்களிலும், தனிப்பட்ட முறையிலும் பயிலப்பட்டு வந்துள்ளது.

சமய இயக்கங்களின் முயற்சி

தொடக்க காலத்தில் இங்கு அரசோ, தோட்ட முதலாளிகளோ தமிழ்ப்பள்ளிகளை உருவாக்க எண்ணாத நிலையில், சமய இயக்கங்கள் அம் முயற்சியில் இறங்கின. சமய இயக்கங்கள் என்னும்போது கிறித்தவ அமைப்புகளே இதனில் முன்நின்றன. சமயம் பரப்பும் நோக்கில் செயல்பட்ட கிறித்தவ அமைப்புகள் பட்டணப்புறங்களில் தமிழ்ப்பள்ளிகளை அமைக்க முயன்றன.

தொடுவாய்க் குடியேற்றப் பகுதிகளில் (Straits Settlement) ஒன்றான பினாங்கில் 1816-ல் ரெவரண்டு ஹட்சிங்ஸ் (Rev. Hutcings) முயற்சியால் இலவசப்பள்ளி (Free School) என்ற ஆங்கிலப் பள்ளியின் ஒரு பிரிவாகத் தமிழ்வகுப்புத் தொடங்கப் பெற்றது. வரலாற்றாசிரியர் பலரின் கூற்றுப்படி இதுவே மலாயா (மலேசியா)வின் முதல் தமிழ்ப்பள்ளியாகும். இது தோன்றிய வேகத்தில் மறைந்தது.

முதல் தமிழ்ப்பள்ளி மூடுவிழாக் கண்டபின் 1834-ல் சிங்கப்பூர் இலவசப்பள்ளியில்(Free School) ஒரு பிரிவாக ஒரு தமிழ்ப்பள்ளி தோற்றுவிக்கப் பெற்றது; இதுவும் 1839-ல் மூடப்பட்டது. மலாக்காவில் 1850-ல் ஆங்கிலோ தமிழ்ப்பள்ளி ஒன்று தொடங்கப்பெற்றது. சிங்கப்பூரிலும் பினாங்கிலும் இது போன்ற பள்ளிகள் உருவாயின. சிங்கப்பூரில் 1859ஆம் ஆண்டு செயின்ட் பிரான்சிஸ் சேவியர் மலபார்பள்ளியில் தமிழ்வகுப்புகள் தொடங்கப்பெற்றன. 1870களில் மலாக்கா, பினாங்கு, ஜோகூர், சிங்கப்பூர், புரோவின் வெல்லஸ்லி (செபராங் பிறை) ஆகிய இடங்களில் தமிழ்ப் பள்ளிகள் நிறுவப்பெற்றன.[4] தமிழ்க் கிறித்தவப் பாதிரியார் தவத்திரு ஆப்ரகாம் அவர்களால் கோலாலம்பூர் செந்தூலில் 1895ஆம் ஆண்டு ஆங்கிலோ தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. இப் பள்ளி பின்னர் 1897-ல் மெதடிஸ்ட்டு ஆண்கள் பள்ளியாக மாறிற்று. இவை யாவும் தொடக்க காலத்தில் சமயச் சார்புடைய இயக்கங்களால் தமிழைக் கற்பிக்க மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளாகும். ஆங்கில அரசால் மிகக் குறைவான பள்ளிகளே தோற்றுவிக்கப்பட்டன. அவ் வகையில் ஆங்கிலேய அரசின் முதல் முயற்சியாகப் பாகான் செராஸ், பேராக்கில் 1900ஆம் ஆண்டில் அரசினர் தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. அதே ஆண்டில் சிரம்பான், மலாக்கா முதலிய இடங்களில் ஆங்கிலேய அரசால் தமிழ்ப்பள்ளிகள் நிறுவப்பட்டன.[5]

1800-1900 காலத் தமிழ்க்கல்வியின் நிலையை மேற்கண்ட செய்திகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. அக்காலத்தில் அமைந்த தமிழ்ப்

பள்ளிகள் பட்டணப் பகுதிகளில் ஆகும். தமிழரில் மிகப் பெரும்பான்மையர் தோட்டப்புறங்களில் வாழ்ந்தனர். தோட்டப்புறங்களில் அன்று தமிழ்ப் பள்ளிகள் உருவாகியிருந்தால் கண்டிப்பாக நிறைய மாணவர் கற்றிருப்பர். புலம் பெயர்ந்தோரின் அடுத்த தலைமுறையினரில் பெரும்பாலோர் கல்லாமாந்தரான நிலை உருவாகியிராது. அடுத்தடுத்த தலைமுறையினரில் ஓரளவு படித்தவர்கள் இருந்ததற்கான காரணம் தன்னார்வ முயற்சிகளும், திண்ணைப் பள்ளி, தனிப்பாட முறைகள் போன்ற அமைப்புகளுமே ஆகும்.

1900ஆம் ஆண்டிற்குப் பின் தமிழ்க்கல்வி

1900ஆம் ஆண்டிற்குப்பின் தமிழ்க்கல்வி இங்குச் சற்றே வேர் கொள்ளத் தொடங்கியது. எனினும், இரண்டாம் உலகப்போர்வரை அஃது அழுத்தமாய் - ஆழமாய் வேரூன்றவில்லை என்பதனை வரலாற்றுக் குறிப்புகள் காட்டுகின்றன. தாய்மொழிக் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற கட்டாயமோ, அதற்கு அழுத்தம் தரச் சமுதாயத் தலைமையோ, சீனர்க்கு இருந்ததைப் போன்ற மூலநாட்டு ஆதரவோ இல்லாத நிலையில், அன்று தமிழ்க்கல்வி கேட்பாரற்ற நிலையில் இருந்தது.

அச் சூழலில் தோட்டப்புறங்களில் தமிழ்ப்பள்ளிகள் தோன்றிய தற்கான காரணம், தொழிலாளர்களுக்கு மகிழ்வூட்டவும், தொடர்ந்து அவர்கள் அதே தோட்டத்தில் ஊக்கம் குன்றாமல் உழைக்கும் மனநிலையை ஏற்படுத்தவுமே முதலாளிகள் தமிழ்ப்பள்ளிகள் நிறுவ முன்வந்தனர். அரசு இதுகுறித்துக் கவலை கொள்ளவே இல்லை. எனினும், அது 1900-ல் பேரா. நெகிரி செம்பிலான் மாநிலங்களில் தமிழ்ப்பள்ளிகளை நிறுவியது. ஆனால், 1901-ல் டபியுள்யூ. எச். டிரீச்சர் (W.H. Trecher-சிலாங்கூர் ரெசிடென்டு) வேற்று இனத்தார்க்குக் கல்வி கற்பிக்க வேண்டுவது அரசின் பொறுப்பன்று என்று கூறிக் கடுமையாக எதிர்த்தார் (Opposed).

இந்த நிலை 1903-ல் மாற்றம் கண்டது; அரசே தமிழ்ப்பள்ளிகளை உருவாக்குவதில் முனைப்புக் காட்டிற்று. காரணம், திறன்வாய்ந்த தொழிலாளர் உருவாகத் தமிழ்க்கல்வி உதவும் என்ற நோக்கிலாகும். அதற்குச் சான்றாக விளங்கியது, புலம்பெயர்ந்து இலங்கையில் வாழும் தமிழர் நிலையாகும். அவர்கள் அங்குத் திறன்மிக்கவராக, நிலைத்தகுடியின ராக வாழத் தமிழ்க்கல்வி உறுதுணை புரிந்தது. அதே நிலை இங்கும் உருவாக வேண்டுமென்று அரசு எண்ணமிட்டது.[6]

அக் காலகட்டத்தில் தமிழ்ப்பள்ளிகள் நான்கு வகைகளில் அமைந் திருந்தன. 1. தோட்டப்புறப் பள்ளிகள், 2. அரசு பள்ளிகள், 3.சமய இயக்கப் பள்ளிகள், 4. தனியார் பள்ளிகள் என்பனவாகும். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மை கொண்டு இயங்கின.

தோட்டப்புறத் தமிழ்ப்பள்ளிகள்

தோட்ட முதலாளிகள், தங்கள் சொந்த நலனைக் கருத்தில் கொண்டு தோட்டங்களில் தமிழ்ப்பள்ளிகளைப் பெயருக்கு ஏற்படுத்தினர்; 1912ஆம் ஆண்டு தொழிலாளர் சட்டம் (Labour Ordinance) நடைமுறைக்கு வந்ததன்பின் நிலைமை மாற்றங் கண்டது. தமிழ்ப்பள்ளிகள் சலுகை அடிப் படையில் அல்லாமல் சட்ட அடிப்படையில் இயங்கத் தொடங்கின.

ஒரு தோட்டத்தில் ஆறு அகவைக்கும் இடைப்பட்ட பத்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் இருந்தால் தாய்மொழி கற்க வழிவகுப்பது கட்டாயம் என்று அன்றைய ஆங்கிலேய அரசு இயற்றியிருந்த சட்டப் பிரிவை (Federated Council Proceedings Malay States, 1923: pp.100-101) மாரிமுத்து எடுத்துக்காட்டுகிறார்.[7] இத் திட்டம் நடைமுறைக்கு வந்தபின் மிகுதியான பள்ளிகள் தோன்றத் தொடங்கின.

தோட்டப்புறங்களில் தோன்றிய பள்ளிகள் எல்லாம், பள்ளிகளுக் குரிய அமைப்பினைக் கொண்டவை என்றோ, வரையறுத்த கலைத் திட்டத்தை, தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டவை என்றோ கூற இயலாது. பள்ளிகளை அமைத்துத் தரவேண்டு மென்பதற்காகக் குழந்தைக் காப்பகங்கள், கோயில்கள், தொழிற்சாலைகளின் பகுதிகள், நாடக மேடைகள் போன்ற இடங்களில் பள்ளிகள் பெயருக்கு நடத்தப் பெற்றன. அங்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் யாரெனில் கோயில் பூசாரிகள். கண்காணிகள், கணக்கர்களான கிராணிகள் (Conductors), ஓரளவு படித்த தொழிலாளர் ஆகியோராவர்.[8]

இங்குத் தோட்டப்புறங்களில் ஆங்கிலேய முதலாளிகள் தமிழ்ப் பள்ளிகளை நிறுவியதன் நோக்கம், கற்க வரும் குழந்தைகளுக்குக் கல்விக் கண் கொடுத்து ஒளியேற்றுவதற்காக அன்று. தொழிலாளரைத் தம்பால் ஈர்க்கவும், தொழிலாளர் தலைமுறையினர் தங்களுக்கு வரும் கடிதங்களை ஓரளவு படிக்கவும், மறுமொழி எழுதவும் தெரிந்துகொண்டால் போது மென்ற அளவிற்கே ஆகும். கல்விக்கொள்கை, நோக்கம், கலைத் திட்டம், நூலகம், புறப்பாட நடவடிக்கை போன்றவை எல்லாம் கானல்நீர்தான்.

தோட்டப்புறப் பள்ளிகளெல்லாம் பெரும்பாலும் அரசு நல்கை யின்றித் தோட்ட நிருவாகங்களின் பொறுப்பிலேயே நடந்தன. சில தோட்டங் களில் கள்ளுக்கடை வருவாயிலிருந்து ஒரு பகுதி தமிழ்ப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

1920ஆம் ஆண்டில் ரப்பர் (Rubber) விலை உயர்ந்தது. விளைவைப் பெருக்கத் தொழிலாளர் நிரம்பத் தேவைப்பட்டனர். அவர்களைக் கவர முதலாளிகள் பரவலாகத் தோட்டப்புறங்களில் பள்ளிகளைப் பெருக்கினர்.

பள்ளிகள் பெருகின எனினும், மகிழத்தக்க விளைவு ஏதும் நிகழ்ந்து விடவில்லை. பள்ளிகளின் தரம் அதே நிலையில்தான் இருந்தது. 1920-ல் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை 122 ஆகும். 1925 ஆம் ஆண்டில் அவ் வெண்ணிக்கை 235 ஆனது. அவற்றில் 8153 மாணவர்கள் பயின்றனர். 1930-ல் பள்ளிகளின் எண்ணிக்கையும் 12,640 ஆனது.[9] (தொடர்ந்த வளர்ச்சி நிலையைப் பட்டியல் -1-ல் காண்க).

தமிழ்ப்பள்ளி எண்ணிக்கை			மாணவர் எண்ணிக்கை	
ஆண்டு	அரசாங்கப் பள்ளி	தனியார் பள்ளி	அரசாங்கப் பள்ளி	தனியார் பள்ளி
1938	547		22,820	3,451
1947	741		33,945	1,432
1956	877		47,407	805
1957	888		50,766	604
1958	874		53,098	738
1959	840		56,297	633
1960	815		60,726	495
1961	784		63,917	438
1962	745		66,504	361
1963	720		67,649	336
1964	704		69,362	306
1965	700		72,828	487
1966	695		76,350	341
1967	686		79,203	364
1968	666	9	81,428	444
1969	662		80,750	342
1970	657	4	79,278	171
1971	647	5	77,192	207
1972	635	4	78,758	156
1973	-	-		
1974	618	4	79,674	140
1975	612	5	80,404	138
1976	606		80,103	
1977	606		78,841	
1978	600		77,527	

1979	596		77,013	
1980	589		73,958	
1981	583		73,513	
1982	579		73,897	
1983	575		74,255	
1984	571		75,028	
1985	566		76,653	
1986	555		81,051	
1987	553		83,228	
1988	548		87,837	
1989	548		92,243	
1990	547		96,120	
1991	544		99,876	
1992	543		102,493	
1993	541		104,638	
1994	539		103,963	
1995	538		102,776	
1996	531		99,525	
1997	530		98,072	
1998	530		94,907	
1999	527		91,620	
2000	527		89,818	
2001	527		89,943	
2002	526		85,036	
2003	526		90,175	
2004	526		95,242	
2005	525		96,096	
2006	523		100,025	

(1920 முதல் 1937 வரை குறிப்புக் கிடைக்கப் பெறவில்லை)

பட்டியல் எண் - 1

Data சான்றுகள் : Perangkaan Pendidikan di Malaysia Penerbitan Kementerian Pendidikan Malaysia disediakan oleh Bahagian Perancangan Penyelidikan Pendidikan Kementerian Pendidikan Malaysia.

அரசு தமிழ்ப்பள்ளிகள்

தோட்ட முதலாளிகள் நடத்திய தமிழ்ப்பள்ளிகளின் நிலை மேலே குறிக்கப்பெற்றது. இக் காலகட்டத்தில் பள்ளிகள் பட்டணப் பகுதிகளிலும், அதனையொட்டிய பகுதிகளிலும் அமைந்தன. 1937வரை 13 அரசு தமிழ்ப் பள்ளிகள் மட்டுமே உருவாகியிருந்தன. அப் பள்ளிகள் தோட்டப்புறப் பள்ளிகளைவிடச் சற்றே உயர்ந்திருந்தன எனினும், ஆங்கிலப் பள்ளி களுக்கு நிகரான தரத்தில் அவை இயங்கவில்லை. கலைத்திட்டம், நூலகம் என்ற அளவில்கூட மேன்மையுறவில்லை.

சமயப் பள்ளிகளில் தமிழ்

சமயப் பள்ளிகள் என்னும் போது, கிறித்தவ சமயத்தார் தொடக்கம் முதலே தமிழ்ப்பள்ளிகளை நடத்துவதில் ஆர்வம் காட்டி வந்தனர் என்பதனைக் குறிப்பிட வேண்டும். பல பள்ளிகளை அவர்கள் உருவாக்கி நடத்தினர். இந்து சபாக்களும் (Hindu Sabha) இராமகிருஷ்ணர் தொண்டூழிய நிறுவனமும் தமிழ்ப்பள்ளிகளைத் தோற்றுவித்து நடத்தின. இப் பள்ளிகளில் பணிபுரியத் தமிழகத்திலிருந்தும் ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆனால், பல நெருக்கடிகளால் காரணமாக அவர்கள் இங்குப்பணிதொடர முடியாது போனது. சற்றுக் கூடுதல் கருத்துடனே நடத்தப்பெற்றன. காலச்சூழல் உயர்தகுதிக்கு அவை மேம்பட முடியாமற்போனது. இந்து. சமய இயக்கங்கள் நடத்திய தமிழ்ப்பள்ளிகளில், முஸ்லிம் மாணவர்களும் நிறைவாகச் சேர்ந்து கற்றனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

தனியார் பள்ளிகளில் தமிழ்

1938ஆம் ஆண்டுதொட்டு இன்றுவரையிலான தமிழ்ப் பள்ளிகளின் பட்டியலை நோக்கும்போது தனியார் பள்ளிகள் ஒருசில மட்டுமே தென்படுகின்றன. 1968ஆம் ஆண்டில்தான் ஒன்பது பள்ளிகள் இருந்துள்ளன. 1975வரை ஆண்டிற்கு நான்கு அல்லது ஐந்து பள்ளிகள் இயங்கியதாகக் குறிப்புகள் காட்டுகின்றன. 1975ஆம் ஆண்டிற்குப்பின் தனியார் பள்ளிகள் தோன்றவே இல்லை. கட்டணம் செலுத்திப் பயிலவேண்டிய அக் கல்விக் கூடங்களிலும் ஓரளவு மாணவர்கள் சேர்ந்து பயின்றுள்ளனர். 1968ஆம் ஆண்டு 9 தனியார் பள்ளிகளில் 444 மாணவர்கள் சேர்ந்து பயின்றுள்ளனர். 1975-ல் நடந்த 5 பள்ளிகளில் 138 மாணவர்கள் பயின்றுள்ளனர். இப் பள்ளி களைத் தனிப்பட்ட இயக்கங்களே முன்னின்று நடத்தியுள்ளன. கோலாலம்பூர் அப்பர் தமிழ்ப்பள்ளி தொடக்கத்தில் சைவ சித்தாந்த மன்றத்தால் நடத்தப் பெற்றதாகும்.

தனியார் நடத்திய பெரும்பாலான பள்ளிகள் ஆசிரியர் வீடு, மாணவர் வீடு போன்றவற்றில் நடந்தன. இப் பள்ளிகளில் கற்பித்த ஆசிரியர்களும்

உயர்ந்த கல்வித் தகுதியைப் பெற்றிருக்கவில்லை. கலைத்திட்டம் முதலிய வற்றிலும் மற்றப் பள்ளிகளைவிட இவை மேம்பட்டிருந்தன என்று கூற இயலாது. எனினும், ஒருசில பள்ளிகள் சிறப்பாக இயங்கியுள்ளன என்பதனைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

அக்காலத்துப் பள்ளிகளின் புறநிலையோடு அகநிலையும் இரங்கத் தக்கதாகவே இருந்துள்ளது. பெரும்பாலான பள்ளிகள் பொருத்தமான கட்டடங்களில் இயங்கவில்லை. ஓர் அறைக்குள் அனைத்தும் கொண்டு ஓர் ஆசிரியரே நடத்திய பள்ளிகள் பலவாகும். பன்மை வகுப்பு முறையில் ஒருவரே அனைத்தையும் கவனித்து வந்தார்.

தரமான இடம் முதலாய புறச்சூழல், பொருத்தமாகக் கற்றல் கற்பித்தல் முதலாய அகச்சூழல் ஆகியன வாய்க்காமையால் எவ்வகையிலும் தரமுடையனவாக அன்றைய பள்ளிகள் இயங்கவில்லை. மலாயாவில் மறக்கப்பட்ட மக்கள் (Malayas Forgotten People) என்னும் தம் நூலில் கோல்லேதா (Colleta) கூறியுள்ள கருத்தை த. மாரிமுத்து தம் அறிக்கையில் எடுத்துக் காட்டுவது அன்றைய நிலையைத் துல்லியமாக எடுத்துரைக்கிறது.

"அங்கு நூலகங்களோ வாசிப்பு அறைகளோ இல்லை. ஆசிரியர்கள் தனிப்பட்ட கையேடுகளையும் கரும்பலகைகளையுமே துணைப் பொருள் களாகக் கொண்டிருந்தனர். பெருவாரியான புத்தகங்கள் காலத்திற்கு ஒவ்வாதனவாகவும் குறைந்த அளவினதாகவும் இருந்தன."[10]

தரம் தாழ்ந்ததற்கான காரணங்கள்

மலாயாவில் தமிழ்ப்பள்ளிகள் தரமற்றிருந்தமைக்குக் காரணங்கள் பலவாகும். அவற்றுள் முதன்மையானவை பின்வருமாறு :

1. தமிழை (சீனத்திற்கும் இதே நிலைதான்) இழிசினர் மொழியாக (Vernacular Language) அரசும், தோட்ட நிருவாகங்களும் புறக் கணித்ததோடு, புலம்பெயர்ந்து வந்தோரின் தாய்மொழி வளர்ச்சிக்கு உதவுவது தம் கடமை அன்று என்று பொறுப்பைத் தட்டிக் கழித்தமை,
2. தோட்டங்களில் பள்ளிகளின் உருவாக்கத்தில் உயர்ந்த நோக்க மின்மை,
3. வரையறுத்த கலைத்திட்டமின்மை,
4. தேவையான-பொருத்தமான பாடநூல்கள், நூலக அமைப்பு இன்மை,
5. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இன்மை,

6. செம்மையான நிருவாகமின்மை,
7. கல்வி மேம்பாட்டிற்கு அமைய வேண்டிய அக, புறச்சூழல்களின்மை,
8. மாணவர் உடல், மன, அறிவு வளர்ச்சிக்குத் தக்க கல்வி முறையின்மை,
9. அரசு நல்கையோ, கண்காணிப்போ இன்மை.
10. சொந்தமாகப் பள்ளிகளை நிறுவி மேம்படுத்திக் கொள்ளச் சமுதாயத்திடம் பொருள்வளமோ தன்முனைப்போ இன்மை.

இவை, தலையாய அடிப்படைக் காரணங்களாகும். சீனப் பள்ளிகள் பொருள்வளத்தாலும், சமுதாய விழிப்புணர்வாலும், மூலத் தாயகத்தின் உதவியாலும் மேம்பட்டு வந்தன. தமிழ்ப்பள்ளிகளுக்கு அத்தகைய பின்புலம் எதுவுமில்லை. வெறுங்கையால் முழம் போடும் அவல நிலையிலேயே அவை குற்றுயிரும் குலையுயிருமாகத் தள்ளாடிக் கொண்டிருந்தன.

தொடக்ககாலம் முதல் 1930 வரை இதே நிலைதான். அதன்பின் இரண்டாம் உலகப்போர்க் காலம்வரை சூழல்கள் படிப்படியாக மாறத் தொடங்கின. இதற்குக் காரணம், புலம்பெயர்ந்து மலேசியாவில் குடியேறிய இந்திய-தமிழ்த் தொழிலாளர் சமுதாய நிலையை மேம்படுத்த இந்திய அரசு இந் நாட்டு அரசுக்குத் தந்த நெருக்குதலே ஆகும். இடையிடையே நிகழ்ந்த அந்த அழுத்தம் இங்குத் தமிழர் வாழ்வுரிமைக்கும் தமிழின் நிலைப்பாட்டிற்கும் உதவின என்பது ஒருதலை.

கண்காணிப்பாளர் அமர்த்தம்

மலாயாத் தமிழ்ப்பள்ளிகள் வரலாற்றில் கண்காணிப்பாளர் ஒருவரை அமர்த்தும் திட்டம் 1930-ல்தான் மேற்கொள்ளப் பெற்றது. தமிழ் அறிந்த ஆங்கிலேயர் ஒருவர் தமிழ்ப்பள்ளிகளின் ஆய்வுராக (Inspectorate of Tamil Schools) அமர்த்தப்பெற்றார்.[11] அவப்பேறாக அவர் ஈராண்டுகளில் உலக வாழ்வை நீத்தார். அவருக்குப்பின் 1937 வரை அப் பதவிக்கு எவரும் அமர்த்தப் பெறவில்லை. பின்னர் ஒருவர் அப் பதவிக்கு அமர்த்தப் பெற்றார். அதனால் ஏற்பட்ட விளைவுகள்பற்றி அறிய முடியவில்லை.

பள்ளிகளுக்கு நல்கை

பொருள்வள மின்றித் தத்தளித்துக் கொண்டிருந்த தமிழ்ப்பள்ளி களுக்கு உதவும் வண்ணம், தோட்ட நிருவாகம் 1932-ல் இந் நல்கை (மானியம்) வழங்க முன்வந்தது. மாணவர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ஆறு வெள்ளி வழங்கப்பெற்றது. இத் தொகை 1935ஆம் ஆண்டு எட்டு வெள்ளியாக உயர்ந்தது. இந் நல்கை ஆற்றுப் பெருக்கற்று வறண்டு

கிடந்த நிலையில், ஊற்றுப் பெருக்காகத் தமிழ்ப்பள்ளிகளுக்கு உதவிற்று எனலாம்.

1930ஆம் ஆண்டிற்குப் பின் தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை மிகுந்தது; பள்ளிகளின் எண்ணிக்கையும் பெருகிற்று. 1930-ல் 333 பள்ளிகளே இருந்தன; 1938-ல் பள்ளிகளின் எண்ணிக்கை 535 ஆக உயர்வு கண்டது. மாணவர் எண்ணிக்கையும் 10,754-லிருந்து 23,098 ஆயிற்று.

மாணவர் எண்ணிக்கை உயர்ந்தும், பள்ளிகள் மிகுதியாய்ப் பெருகியும் பொருள்வளம் பூக்கத் தொடங்கியும்கூட உயர்வான கல்வி வளத்திற்குரிய கால்கோள் தொடர்ந்து இடப்படாமலேயே இருந்துவந்தது. ஆம்! பயிற்சி பெற்ற தகுதியுடைய ஆசிரியர்கள் இல்லாமையால் உயிரோட்டமற்றவையாகவே தமிழ்ப்பள்ளிகள் வெறுமையுற்றுக் கிடந்தன.

கல்வி கேள்விகளில் சிறந்த ஓர் ஆற்றல்மிக்க ஆசிரியனுக்கு, ஓர் ஆலமரத்தடி போதும்; தன்னை நாடிவரும் மாணவர்களின் கண்களைத் திறந்து ஒளிவிளக்குகளாக்கிவிடுவான். அறுக்கமாட்டாதவன் வீட்டில் ஐம்பத்திரண்டு அரிவாள்கள் இருந்தும் பயனில்லை என்பதற்கொப்ப மாணவர் எண்ணிக்கை உயர்வாலோ, பள்ளிகளின் பெருக்கத்தாலோ கல்விக்குரிய உண்மையான பயன் விளையாததால் அரசு, ஆசிரியர்களுக்குப் பயிற்சித் திட்டத்தை வகுத்தது. 100 ஆண்டுகளுக்குமேல் இருள்மூடிக் கிடந்த மலாயாத் தமிழ்க்கல்வியுலகில் முதன்முதல் ஏற்றப்பெற்ற அகல் விளக்கு என்று இதனைச் சொல்லலாம். இங்கு உண்மையான தமிழ்க்கல்வி வரலாறு தொடங்கும் காலம் இஃதே (1938) எனினும் தப்பில்லை.

ஆசிரியர்களுக்குப் பயிற்சி

திட்டமிட்டபடி ஆசிரியர்களுக்குப் பயிற்றல்முறை வகுப்புகள் (Normal Training Classes) 1938-ல் தொடங்கப்பட்டன. சிங்கப்பூர் (அப்போது மலாயாவின் ஒரு பகுதியாக இருந்தது), மலாக்கா, பினாங்கு, சிலாங்கூர், பேரா, பகாங், நெகிரி செம்பிலான் ஆகிய மாநிலங்களில் ஆசிரியர்களுக்குப் பயிற்றல்முறை வகுப்புகள் நடந்தன. தொடர்ந்து ஆசிரியர்பணி புரிந்துவந்தோர் பயிற்சி வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். அவர்களுள் கோயில் பூசாரிகள் கண்காணிகளும்கூட இடம் பெற்றிருந்தனர்.

இரண்டாம் உலகப்போர்

இவ் வகுப்புகள் தொடங்கி நடந்துகொண்டிருந்த காலை, இரண்டாம் உலகப்போர் தொடங்கிவிட்டதால், வகுப்புகள் நின்றன. சப்பானியர் நாட்டைக் கைப்பற்றியபின் தமிழ்ப்பள்ளிகள் முடங்கின. பல பள்ளிகள் மூடப்பட்டன. இயங்கி வந்த பள்ளிகளில் சப்பான் மொழி

புகுத்தப்பட்டது. இஃது எழுந்து நடக்கத் தொடங்கிய தமிழ்ப்பள்ளிகள் இடறிவிழுந்த காலகட்டமாகும் (1942-45). சமுதாய நிலையிலும் பேரழிவை ஏற்படுத்திய இக்காலம், மிக நீளாமல் குறுகிய காலத்திலேயே ஒரு முடிவுக்கு வந்தது.

மீண்டும் ஆங்கிலேயர் ஆட்சி

1946-ல் மீண்டும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்தனர் (British Military Administration). ஆட்சியை இழந்து நின்ற நான்காண்டுகால இடை வெளியில் அவர்கள் பெரிதும் மாறுபட்டிருந்தனர்; பொங்கிய விடுதலை உணர்வுகளுக்கு மதிப்பளிக்கத் தொடங்கினர். மலாய்க்காரரிடையே பீறிட்ட விடுதலை வேட்கை, சீன, தமிழரிடையே கிளர்ந்த உரிமை உணர்வு தாய்மொழிகளின் வளர்ச்சிக்கு வித்திட்டன. பள்ளிகளின் வளர்ச்சியில் ஆங்கிலேயர் கருத்துச் செலுத்தினர்; மூடிக்கிடந்த பள்ளிகளைத் திறந்தனர்.

போருக்கு முன் நடந்த பயிற்றல் வகுப்புகளில் (Normal Training Classes) பங்குபெற்றிருந்தோர்க்குத் தொடர்பயிற்சியோ, தேர்வோ நடத்தாமல் சான்றிதழ் வழங்கிப் பணியை நிலைப்படுத்தி உறுதிசெய்தனர்.

அவர்கள் பிறப்பித்த 1946ஆம் ஆண்டுக் கல்விச் சட்டம் (Educational Bill) இலவசத் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்திற்று. அதனால் பல நன்மைகள் விளைந்தன. தமிழ்ப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நல்கை உயர்ந்தது. தகுதிமிக்க ஆசிரியர்களை உருவாக்கப் பயிற்றல் முறை வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டன. தமிழ்ப்பள்ளிகளின் நிலைபேற்றுக் கான நம்பிக்கை பிறந்தது.

ஏழாம் வகுப்புத் தொடக்கம்

போருக்குப்பின் ஏற்பட்ட நல்விளைவுகளில் இது குறிப்பிடத்தக்க ஒன்று. இது தமிழ் மாணவர்க்கு ஒரு புதிய வரவாகும். "கற்றல் கற்பித்தல் இந் நாட்டில் ஆரம்பித்தபொழுது, முதல் நான்கு வகுப்பு வரையும், 1920ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் வகுப்பு வரையும், 1930ஆம் ஆண்டுகளில் ஆறாம் வகுப்பு வரையும் தொடர்ந்தன."[12] இந் நிலை 1946ஆம் ஆண்டுவரை நீடித்தது. உயர்தரத் தமிழ்க்கல்வி என்னும் முறையிலும் தரமான ஆசிரியர் களை உருவாக்கும் நோக்கில் தமிழ் ஏழாம் வகுப்புத் தொடங்கப் பெற்றது. இஃது ஈராண்டுக் கல்வியாகும். இதனில் தமிழ்மொழி, நில நூல், வரலாறு, நலக்கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பெற்றன. பாடத்திட்டம் பாடநூல் யாவும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவையாகும். ஆசிரியர் ஆயத்தத் தேர்வு என அழைக்கப்பெற்ற இவ் வகுப்பு, தரமான ஆசிரியர்கள் உருவாக அடிப்படை போட்டது. இவ் வகுப்புப் புதிய கல்விக் கொள்கைக்

கேற்ப 1957-ல் நிறுத்தப்பெற்றது. வேண்டுகோள்களுக்குச் செவிசாய்த்து அரசு மேலும் ஈராண்டுகள் நீட்டித்தது.

ஏழாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு நடத்தப் பெற்ற பயிற்றல்முறை வகுப்புப் பாடத்திட்டம், பாடநூல்கள், அவ் வகுப்பின் தரம், பயன் போன்றவை குறித்துக் கருத்துரைக்கும் ஓர் ஆய்வாளர்,

"தமிழ்ப் போதனாமுறை வகுப்புகளில் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், கணிதம், கைவேலை, சித்திரம் போன்ற பாடங்கள், சீனியர் கேம்ரிட்ஜ், தமிழ்நாட்டு எஸ்.எஸ்.எல்.சி. பாடத்திட்டத்தின் பலகூறுகளைப் போதித்துத் தமிழாசிரியர்களைத் தமிழ் அறிந்தவர்களாகச் செய்த பெருமை அந்தப் போதனாமுறை வகுப்புகளுக்கு உரியதாகும் என்றால் மிகையாகாது. அந்தப் போதனாமுறை வகுப்புகளில், தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் மேற் பார்வையாளர்கள், தமிழ் வித்துவான்கள், ஆங்கிலப் பள்ளிகளின் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் விரிவுரையாளர்களாகப் பணியாற்றினர்[13] என்கிறார்.

போருக்கு முந்திய நிலைபோலன்றி இக் காலகட்டத்தில் தமிழ்ப் பள்ளிகள் நல்ல வளர்ச்சி கண்டன. 1938-ல் 547 பள்ளிகள் இருந்தன; 22,870 மாணவர்கள் (தனியார் பள்ளிகளில் 3451) பயின்றனர். 1947-ல் 741 பள்ளிகளில் 33,945 மாணவர்கள் (தனியார் பள்ளிகளில் 432) பயின்றனர். 1957-ல் 888 பள்ளிகள் இயங்கின. மாணவர்தொகை 50,766ஐ (தனியார் பள்ளிகளில் 604) எட்டிற்று. இந் நாட்டில் மிகுதியான தமிழ்ப்பள்ளிகளைக் கொண்டிருந்த ஆண்டு 1957(888) ஆகும். இது விடுதலைக் காலமும் அடிமைக் காலமும் சந்தித்த ஆண்டாகும்.

விடுதலைக்குப்பின் நிகழ்ந்த பல்வேறு வரலாற்று அதிர்வுகளால் பள்ளிகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது. அரசு சிறு சிறு பள்ளிகளை இணைத்துக் கூட்டுப்பள்ளிகளாக்கியமை, பெரிய தோட்டங்களை முதலாளிகள் துண்டுபோட்டு விற்றதால் பல பள்ளிகள் அழிந்தமை, மேம்பாட்டுத் திட்டங்களால் தோட்டங்களும் பள்ளிகளும் காணாமற்போயினமை ஆகியவையே பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தமைக்கு முதன்மைக் காரணங்களாகும். இன்றுள்ள தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை 525.

பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்தாலும் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுவிட்டதாகக் கூற இயலாது. இப்பொழுது தமிழ்ப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 96,096 ஆகும் (2005ஆம் ஆண்டின் இறுதி நிலவரப்படி). ஆண்டுதோறும் தமிழ்ப்பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர் தொகை பெருகியே வருகிறது. (2006ஆம் ஆண்டின் மாணவர் எண்ணிக்கை 100,025) பல பள்ளிகள் இடப் பற்றாக்குறையை எதிர்

நோக்குகின்றன. புதிய வீடமைப்புப் பகுதிகளில் வாழும் நடுத்தர மக்களின் ஒரு பகுதியினர் தம் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புகின்றனர். உயர்நிலையடைந்த குடும்பத்தினரில் சிலரும் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். அருகில் பள்ளிகள் இல்லாத நிலையில் தொலைவிலுள்ள பள்ளிகளுக்கும் அனுப்பத் தயங்குவதில்லை. ஆனால், சில புகழ்பெற்ற பள்ளிகளில் இடம் கிடைப்பதில்லை. தாய்மொழிப்பற்று, கலை, இலக்கியம், சமயப் பண்பாட்டு அடையாளங்கள் தொடர வேண்டு மென்ற வேட்கை ஒரு புதிய சூழலை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்ப்பள்ளிகள் இன அடையாளக் கூறுகளில் முதன்மையான ஒன்றாக விளங்குகின்றன. இப்போது புதிய தமிழ்ப்பள்ளிகள் எழ வாய்ப்புகள் உள்ளன எனினும், தற்போதைய சூழலில் புதிய தாய்மொழிப் பள்ளிகள் எழ இடமில்லை. முயன்றாலும் உரிமம் கிட்ட வாய்ப்பு அருகியே உள்ளது. இஃது இப்போதைய நிலையாகும். இருப்பினும் புதிய பள்ளிகள் கட்டவேண்டுமென்னும் குரல்கள் ஓங்கி ஒலித்தே வருகின்றன.

விடுதலைக்குப்பின் கல்விச் சூழல்

1957 ஆகஸ்டு 31ஆம் நாள் நாடு விடுதலையடைந்தது. அதற்கு முன்பே மாறுதல்களுக்கு வழிவகுக்கப் பெற்றது. விடுதலை வேட்கை மிகுந்த மலாய்க்காரர்கள் கல்வித்துறையில் காலூன்ற விழைந்தனர். தங்கள் மொழி முதன்மை பெற வேண்டுமென்ற துடிப்பு அவர்களிடையே மிகுந்தது. நடைமுறையிலிருந்த கல்விமுறையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று அரசை வலியுறுத்தினர். அந்தக் கோரிக்கையை ஏற்று 1950-ல் ஆங்கிலேய அரசு ஒரு திட்டத்தை வரைந்தது. அதனைத் தொடர்ந்து பல மாறுதல் ஏற்பட்டு 1956-ல் ரசாக் திட்டம் உருவானது. அதன்பின்னும் மாற்றங்கள் நிகழ்ந்தன. பல அறிக்கைகள் உருவாயின. 1950 தொட்டு 2000ஆம் ஆண்டு வரை இருபதுக்கு மேற்பட்ட அறிக்கைகள் வெளிவந்துள்ளன. (பட்டியல் 2-ல் காண்க).அவற்றை மேலோட்டமாகவாவது கண்ணோட்டமிட்டால் தான் பல்லினங்கள், பன்மொழிகள் கொண்ட ஒரு நாட்டில் எல்லாருக்கும் ஏற்புடைய கல்வித்திட்டம் வகுப்பது எத்துணைக் கடுமையான பணி என்பதும், எத்துணை உணர்ச்சிக் கொந்தளிப்பு மிக்க செயலென்பதும் விளங்கும். அதனால், அறிக்கைகளில் முதன்மையான சில மட்டும் ஈண்டு எடுத்துக் காட்டி விளக்கப் பெறுகின்றன.

பார்ன்ஸ் அறிக்கை 1950 (Barnes Report - 1950)

ஆங்கிலேயர் மீண்டும் மலாயாவைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய பின், பல்லினங் கொண்ட நாட்டின் கல்வித்திட்டம் குறித்து வெளிவந்த முதல் அறிக்கை இது. மலாய்க்காரர் தங்கள் கல்வி மேம்பாடு குறித்து ஆங்கிலேய அரசுக்கு நெருக்குதல் தந்தபோது உருவான அறிக்கை இதுவாகும்.

எண்	ஆண்டு	பெயர்
1	1950	பார்ன்ஸ் அறிக்கை (Barnes Report)
2	1951	பென் வூ அறிக்கை (Fenn Wu Report)
3	1952	கல்விச் சட்டம், 1952 (Education Ordinance, 1952)
4	1954	வெள்ளை அறிக்கை (The White Paper, 1954)
5	1956	இரசாக் அறிக்கை (The Razak Report, 1956)
6	1956	சீனக் கல்விச் சார்புடைய சிங்கப்பூர் அறிக்கை (The Singapoe Report on Chinese Education, 1956)
7	1956	ரீட் கமிஷன் (The Reid Commission)
8	1957	கல்விச் சட்டம், 1957 (The Education Act, 1961)
9	1960	ரஃமன் தாலிப் அறிக்கை (The Rahman Talib Report, 1960)
10	1961	கல்விச் சட்டம் 1961 (The Education Act, 1961
11	1967	தேசிய மொழிச் சட்டம், (The National Language Act, 1967)
12	1969	கல்வி அமைச்சர் அறிவிப்பு (Datuk Patinggi Haji Abdul Rahman Yaacab Announcement)
13	1971	மஜிட் இஸ்மாயில் அறிக்கை (Majid Ismail Report, 1979)
14	1971	பல்கலைக் கழகக் காலேஜ் சட்டம் (Universities and University Colleges Act, 1971).
15	1972	கல்விச் சட்டத் திருத்தம் (Education Amendment Act, 1972)
16	1979	மகாதீர் அறிக்கை (Mahathir Report, 1979)
17	1980	கல்வி அமைச்சின் 3-Rs திட்டம் (Reading, Writing & Arithmetic System)

18	1985	ஒருங்கிணைக்கப்பட்ட பள்ளித் திட்டம் (Integrated School Proposal)
19	1987	மெண்டரின் பயிலாதவர்களைத் தலைமை யாசிரியர்களாகச் சீனப்பள்ளிகளில் நியமித்தல். (Posting of non Mandarin Headmaster for Chinese Schools)
20	1996	கல்விச் சட்டம், 1996 (The Education Act, 1996)
21	2000	தொலைநோக்குப் பள்ளிக் கொள்கை (Vision School Concept)

பட்டியல் எண் - 2

தொகுத்தளித்தவர் கா. ஆறுமுகம்
(செம்பருத்தி மாத இதழ், பிப்ரவரி, 2001, ப.57)

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எல்.ஜே. பார்ன்ஸ் (L.J. Barnes) தலைமையில் நிறுவப்பெற்ற ஆய்வுக்குழு இவ் வறிக்கையை உருவாக்கிற்று (Report of the Committee on Malay Education of Malaya). இவ் வறிக்கை மலாய், ஆங்கிலம் ஆகிய இருமொழிகள் மட்டுமே பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது; சீன, தமிழ் மொழிகளைப் புறக்கணித்தது. பத்தாண்டுகளில் மலாய் ஆங்கிலத்தின் இடத்தை நிரப்ப வேண்டுமென்று பரிந்துரைத்தது. மலாய் தேசிய மொழி யாக்கப்பட சீன, தமிழ்ப்பள்ளிகள் படிப்படியாக மலாய்ப் பள்ளிகளாக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது.

பென் ஊ அறிக்கை 1951 (Fenn Wu Report -1951)

மேற்படி அறிக்கை சீனரிடையேயும், தமிழரிடையேயும் கொதிப்பை ஏற்படுத்திற்று. சீனர்கள் எதிர்ப்பைத் தவிர்க்க அமெரிக்கச் சீனரான டபிள்யூ. பி. பென் (Dr.W.P.Fenn), ஓர் அவையின் அதிகாரியான வூதேக் யாவ் (Dr.Wu Teck Yao) ஆகிய இருவரைக் கொண்ட ஆய்வுக்குழு ஒன்றனை ஆங்கிலேய அரசு நிறுவியது.

அக் குழு, சீனக்கல்வி நிலைக்க வேண்டுமென்றும் அதனுடன் ஆங்கிலமும் மலாயும் கற்பிக்க வேண்டுமென்றும் பரிந்துரைத்தது. ஆனால் தமிழைப்பற்றி அதனில் எதுவுமே கூறப்பெறவில்லை.

ஆங்கிலேய அரசு தமிழ்மொழி குறித்து ஆய்வுசெய்ய எந்தவொரு குழுவையும் நிறுவாத நிலையில், ம.இ.கா., தொழிற்சங்கம், ஆசிரியர்

சங்கம் போன்றவை ஒரு கல்விக் குழுவை அமைத்தன. (சைவப் பெரியார்) கா.இராமநாதன், (டான்ஸ்ரீ) ஆதி. நாகப்பன், (சுவாமி) சத்தியானந்தா, ம.இ.கா. தேசியத் தலைவர் கே.எல்.தேவாசர் போன்றோர் அக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். தமிழ் பயிற்றுமொழியாக இருக்கவேண்டு மென்றும் நான்காம் ஆண்டு முதல் ஆங்கிலமும் 5ஆம் ஆண்டு முதல் மலாயும் கற்பிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.[14]

கல்விச் சட்டம் - 1952 (Education Ordinance-1952)

ஒவ்வோர் அறிக்கையும் முரண்படவே ஆங்கிலேய அரசு அனை வருக்கும் இணக்கமுடைய கல்விக் கொள்கையை உருவாக்கச் சிறப்புத் தகவுரை(ஆலோசனை)க் குழுவினை ஏற்படுத்திற்று. அதன் பரிந்துரைகளே பின்னர்ச் சட்டமாயின (1952). அதன் ஒட்டுமொத்தக் கருத்துச் சீனப் பள்ளிகளும், தமிழ்ப்பள்ளிகளும் படிப்படியாக மலாய்மொழியைப் பயிற்று மொழிகளாகக் கொண்ட தேசியப் பள்ளிகளாக மாற வேண்டும் என்பதாகும். இதற்கும் எதிர்ப்பு வலுக்கவே அது நடைமுறைக்கு வரவில்லை.

கல்விச் சட்டம் 52-ன் சாரம்

* மலாய், ஆங்கில மொழிகள் முதன்மை பெற்றன. சீன, தமிழ் மொழிகள் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்டன.
* தேசியக் கல்விக்கொள்கையின்கீழ் சீன, தமிழ்ப்பள்ளிகள் ஏற்கப் பெறவில்லை.
* தேசியப் பள்ளிகளில் மாணவர்கள் கேட்டுக்கொண்டால் சீனம், தமிழ் ஆகிய தாய்மொழிகள் (Pupils Own languages) கற்பிக்கப்படும்.
* பல்லினத் தேசியப் பள்ளிகளாகச் சீன, தமிழ்ப்பள்ளிகள் உருவாக வேண்டும். முழு அரசு உதவி பெறவேண்டுமானால் இவை தேசிய விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.
* தேசியக் கல்விக் கொள்கைக்கு உட்பட்டிருந்தால், தாய்மொழிக் கல்விக்கான நிதி தேவையின்றி விரயமாக்கப்படாமல், பெற்றோ ரின் விருப்பத்திற்கேற்ற வகையில் மாணவர்க்குக் கல்வி வசதி அளிக்கப்படும்.

தாய்மொழிக் கல்விக்குச் சாவுமணி அடிக்கும் நோக்கம் கொண்ட இதனைச் சீனரும், தமிழரும் கடுமையாக எதிர்த்தனர். இச் சட்டம் நடைமுறைக்கு வராமலேயே போனது.

வெள்ளை அறிக்கை-1954 (The White Paper-1954)

இவ் வெள்ளை அறிக்கையும் தொல்லை அறிக்கையாகவே வெளி வந்தது. 1952ஆம் ஆண்டுக் கல்விச் சட்டம் சரியான முறையில் நடை முறைக்கு வராத நிலையில் 1954-ல் ஒரு வெள்ளை அறிக்கை வெளியிடப் பெற்றது. அதன் சாரம் வருமாறு:

* சீன, தமிழ்ப்பள்ளிகள் மறுசீரமைப்பைப் பெற வேண்டும்
* மலாய்ப் பள்ளிகளில், மலாய், ஆங்கில மொழிகளைப் பயிற்று மொழியாக்குதல்
* சீன, தமிழ்ப்பள்ளிகளில் மூன்று மொழிகள் கற்பித்தல்
* தேசியக் கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்துதல்
* தரம் குறைந்துள்ள சீன, தமிழ்ப்பள்ளிகளைத் தரம் மிக்கவை யாக்க அவற்றைத் தேசியப் பள்ளிகளாக்குவது ஒரு சிறந்த வழி.

இவ் வறிக்கை சீனப்பள்ளி ஆசிரியர்களை வெகுண்டெழச் செய்தது. சீனப்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவரின் அறிக்கை அவ் வினத்தின் உணர்வை அப்படியே வெளிப்படுத்துவதாக அமைந்தது. இதுவே அவ் வறிக்கை.

"..... பார்ன்ஸ் அறிக்கை சீனமொழிக் கல்வியை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. கல்விச் சட்டம் 1952 சீனப்பள்ளிகளுக்கு மரண தண்டனை அளித்தது. இப்பொழுது இந்த வெள்ளை அறிக்கை, சீனப் பள்ளிகளுக்கான புதைகுழியைத் தோண்டியுள்ளது."[15]

இரசாக் அறிக்கை -1956 (The Razak Report -1956)

1950ஆம் ஆண்டு தொடங்கி 54வரை உருவான நான்கு அறிக்கை களும் தாய்மொழிப் பள்ளிகளை அகற்றும் நோக்கையே முதன்மையாய்க் கொண்டிருந்தன. சீன, தமிழ்ச் சமுதாயங்கள் அவற்றைக் கடுமையாக எதிர்த்துவந்தன. அதனால் அனைத்து இனங்களுக்கும் ஏற்புடைய ஒரு பொருத்தமான தேசியக் கல்விமுறை தேவை என்று அரசு எண்ணமிட்டது. மூன்று இன நிகராளர் அடங்கிய பதினைந்து பேர் கொண்ட குழுவுக்கு அன்றைய கல்வியமைச்சராய் இருந்து துன் இரசாக் தலைமையேற்றார். இக் குழுவின் பணி எல்லா இனங்களையும் ஒன்றுபடுத்தும் வகையில், மலாய்மொழியை முதன்மைப் பயிற்றுமொழியாய்க் கொண்டு ஒரு தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்குவதாகும். அக் குழுவின் அறிக்கை 1956மே 6ஆம் நாள் வெளியிடப்பெற்றது. இதுவே 1957-ல் கல்விச் சட்டமாக உருப்பெற்றது. அதன் சாரம் பின் வருமாறு:

கல்விச் சட்டம் - 1957 (The Education Ordinance -1957)

* அனைத்துக் கலை, பண்பாட்டு, சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சியாக அமைவதால், அவற்றின் தேவைகளுக்கு ஏற்புடைய வகையில் கல்விக் கொள்கை அமையும்.
* கல்விக் கொள்கை அனைவர்க்கும் ஏற்ற வகையில் ஒரு தேசியக் கொள்கையாக அமையும்.
* மலாய்மொழி தேசிய மொழியாக ஆக்கப்பெறும் அதே வேளையில் மலாய்க்காரர் அல்லாதார் மொழி, பண்பாடு காக்கப் பெறுவதோடு வளர்க்கப்பெறும்.
* தேவையற்ற வகையில் நிதி விரயமாவதைக் கட்டுப்படுத்தும் அதே வேளையில் ஒரு மேலோட்டக் கொள்கையாகப் பெற்றோரின் விருப்பத்திற்கேற்ற வகையில் அவர்தம் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கப்பெறும்.
* மலாய் ஆங்கில மொழிகளைப் பயிற்றுமொழிகளாய்க் கொண்ட பள்ளிகளில் பதினைந்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் பெற்றோர் கேட்டுக்கொண்டால் சீனம் அல்லது தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப் பெறும்.

இவை, அவ் வறிக்கையில் காணப்பெறும் முதன்மைக் கூறுகளாகும்.

விடுதலை பெற்ற மலாயா நாட்டின் முதல் கல்விச் சட்டமான இது, சீனத்திற்கும் தமிழுக்கும் தேசிய ஒப்புதலும் பாதுகாப்பும் பயிற்றுமொழித் தகுதியும் (தொடக்கப் பள்ளிகளில்) அளித்த சட்டமாகும். தாய்மொழிகளுக்கும் தேசியக் கல்வித் திட்டத்தில் இடமளித்த வகையில் இவ் வறிக்கை இன்றுவரை தனித்தே விளங்குகிறது. ஆனால், இடைநிலைப் பள்ளிகளில் தாய்மொழிக்கு அழுத்தமான இடத்தை உறுதிப் படுத்தவில்லை. பதினைந்து மாணவர்களின் பெற்றோர் விரும்பிக்கேட்டு, அதற்கான வாய்ப்புப் பள்ளியிலிருந்தால் கற்பிக்கப்படும் என்ற அளவிலேயே இன்னும் இடைநிலைக் கல்வி அல்லாடிக் கொண்டிருக்கிறது.

கல்விச் சட்டம் உருவானபின் வெளிவந்த அறிக்கைகள்

1956-ல் வெளிவந்த இரசாக் கல்வி அறிக்கையை அடியொட்டி 1957-ல் உருவான கல்விச் சட்டத்திற்கும் சீனர் தரப்பிலும் தமிழர் தரப்பிலும்

எதிர்ப்புகள் எழுந்தன. சீனக் கல்விமான்கள் எதிர்ப்பைத் தொடர்ந்து, சிலாங்கூர் மாநில ம.இ.கா. குறிப்பாகக் கோலாலம்பூர்க் கிளை இப் புதிய சட்டத்தைச் சாடியது. மேலும் சூலை 1958-ல் கூடிய பன்னிரண்டாவது பேராளர் மாநாட்டில் பினாங்கு மாநில ம.இ.கா. தமிழ்மொழியையும் சீனமொழியையும் அரசுமொழிகளாகப் பிரகடனப்படுத்தவேண்டுமெனக் கோரியது. அதனொடு, தமிழ்மொழி இடைநிலைப் பள்ளிகள் வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது. ஆனால், ம.இ.கா. தலைமைத்துவம் அம்னோவின் கோபத்தைத் தணிக்க அமைதியாக இருந்தது. அதன் விளைவாக 1957, 1958ஆம் ஆண்டு முனிசிபல் தேர்தல்களில் ம.இ.கா.வின் வேட்பாளர்கள் தோல்வியடைந்தனர். இந்தச் சம்பவங்கள் இந்தியர்களிடையே நிலவிய மொழி ஆர்வத்தையும், கலாசாரத்தைக் காக்க இந்தியர்களும் போராடி யுள்ளனர் என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றன.[16]

இரகுமான் தாலிப் அறிக்கை - 1960
(The Rahman Talib Report - 1960)

1957ஆம் ஆண்டு கல்விச் சட்டத்தை மறு ஆய்வு செய்யும் நோக்கில் தரப்பெற்ற இவ் வறிக்கை, சீன இடைநிலைக் கல்விக்குப் பெரும் ஊறு செய்வதாய் அமைந்தது.

அரசின் முழு உதவிபெறும் மலாய்த் தொடக்கப்பள்ளிகள் தேசியப் பள்ளிகள் என்றும், மற்றத் தொடக்கப்பள்ளிகள் தேசிய மாதிரித் தொடக்கப் பள்ளிகள் என்றும் பாகுபடுத்திற்று. மேலும் அனைத்து மொழி, பண்பாட்டுக் கோரிக்கைகளையும் ஒத்துக்கொள்ளத் தேசியக் கல்விக்கொள்கையில் இடமில்லை என்ற கருத்தையும் வெளியிட்டது. இவ் வறிக்கை சீன இடை நிலைக் கல்விக்குப் பெரும் ஊறு விளைவித்தது. இதனைச் சீனர் மிகக் கடுமையாக எதிர்த்தனர். எதிர்த்த சிலர் பாதிப்புக்கும் உள்ளாயினர்.

எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் இரகுமான் தாலிப் அறிக்கையின் சாரங்கள் கல்விச் சட்டம் 1961ஆக உருவாயிற்று. அதனில் 1957-ல் வழங்கப் பட்டிருந்த சில வாய்ப்புகள் மீட்டுக்கொள்ளப்பட்டன. அஃதாவது மலாய் மொழி தேசிய மொழியாக ஆக்கப்படும் அதே வேளையில் மலாய்க்காரர் அல்லாதார் மொழி, பண்பாடு காக்கப்படுவதோடு வளர்க்கப்படும் என்ற உறுதிமொழி மீட்டுக்கொள்ளப்பட்டது. சீன இடைநிலைக் கல்வி பாதிக்கும் வண்ணம், இன அடிப்படையிலான இடைநிலைப் பள்ளி முறைகளைத் தடை செய்தது.

கல்விச் சட்டம் - 1961
(The Education Act - 1961)
தாய்மொழிப் பள்ளிகளின் தலைவிதியை மாற்ற.....

1961ஆம் ஆண்டு வகுக்கப்பெற்ற கல்விச் சட்டத்தில் தாய் மொழிகளின் கல்விக்கு மாபெரும் ஊறு நேரும் வண்ணம் ஒரு சரத்துச் சேர்க்கப்பெற்றது. அஃதாவது எந்த நேரத்திலும் ஒரு தேசிய மாதிரித் தொடக்கப் பள்ளியைத் (சீனம், தமிழ்) தேசியப் பள்ளியாக மாற்றும் வகையில் அமைச்சு மனநிறைவடைந்தால் அவ்வாறு செய்யக் கல்வி யமைச்சர் ஆணையிடலாம் என்பதாகும். இங்குத் தேசிய மாதிரித் தொடக்கப் பள்ளி எனக் குறிக்கப்பட்டுள்ளது சீன, தமிழ்த் தொடக்கப்பள்ளிகளேயாகும். தாய்மொழிப் பள்ளிகள் தேசியப் பள்ளிகளாக்கப்படும்போது, தாய்மொழிக் கல்வி கட்டாயமாக்கப்படவுமில்லை. பதினைந்து மாணவர்களின் பெற்றோர் கேட்டுக்கொண்டால், தாய்மொழி கற்பிக்கப்படும் அதே நேரத்தில் தேவையை நிறைவு செய்யக்கூடிய சூழலும் அமைந்திருக்க வேண்டும் என்ற குறிப்பு கருத்தில் கொள்ளத்தக்கதாகும். தாய்மொழிக்குத் தரப்பட்டுள்ள இடம் எத்தகையதென்பதனையும் உணர்த்துவதாகும்.

கூட்டரசு அரசாட்சிச் சட்டம் - 1957
(Federal Constitution - 1957)

பத்தாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட மேற்படி சட்டத்திற்கு 1966-ல் திருத்தம் கொண்டுவரப்பட்டது. மலாய்மொழி ஒன்றனை மட்டுமே தேசிய மொழியாக உருவாக்க வேண்டுமென வலியுறுத்தியது. அதனால் தாய் மொழிகளின் பயன்பாடு அழிந்துபடுமென அஞ்சிய சீனர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

மலாய்க்காரர்களோ தேசிய மொழிச் செயலாக்க முன்னணி (National Language Action Front) மூலம் துடித்தெழுந்து, சட்டத்தை எதிர்ப்ப வர்களின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டுமென முழக்கமிட்டனர்.

சூழலை உணர்ந்த அரசு அதனைத் தாக்கல் செய்தபோது, பிற மொழிகளின் நிலையைக் கருத்தில் கொள்ளும் என்பதொடு, தேவைப்படும் காலம்வரை ஆங்கிலமொழி பயன்படுத்தப்படுமென்று உறுதியளித்தது.

கல்விச் சட்டத் திருத்தம் - 1972
(Education Amendment Act - 1972)

இந்தச் சட்டத் திருத்தம் சீனப்பள்ளிகளைப் பெரிதும் தாக்குறச் செய்தது. அஃதாவது அரசின் முழு உதவியைப் பெறும் பள்ளிகளை

நிருவகித்த வாரியம் (Schools Board) தடைசெய்யப்பட்டது. சீனப் பள்ளி களின் மேம்பாட்டிற்கு அளப்பரிய துணையாய் விளங்கியவை பள்ளி வாரியங்க ளாகும். அவை கலைக்கப்பட்டால் பள்ளிகளின் வளர்ச்சி குன்றிவிடும்; அரசின் நேரடி நிருவாகம் காலப்போக்கில் சீனமொழி பின்தள்ளப்பட வழிவகுத்துவிடுமென்று சீனர் அஞ்சினர். அதனால் 13.12.1973-ல் கூடிய சீனக் கல்விக் காங்கிரசு மாநாட்டில் பள்ளி வாரியம் தொடர்ந்து செயல்படும்; அதனை இழக்கமாட்டோம் என்று தீர்மானம் நிறைவேற்றினர்.[17]

சீனர்கள் அரசு உதவியைப் பெரிதும் எதிர்பார்ப்பதில்லை;அரசு ஒப்புதலை மட்டுமே எதிர்பார்ப்பவர்கள். பள்ளிகளுக்குரிய தொண்ணூறு விழுக்காட்டிற்கு மேற்பட்ட செலவினங்களை அவர்களே பார்த்துக் கொள்கின்றனர். பகுதி உதவி பெறும் பள்ளிகளைச் சொந்தப் பொருள் கொண்டு மாபெரும் கல்லூரிகள்போல் அமைத்துச் செயல்படுகின்றனர். மாணவர்களுக்குத் தேவைப்படும் அனைத்தும் தந்து, ஆசிரியர்களுக்குச் சிறப்புச் சம்பளமும் கொடுத்து, மாணவர்களுக்குக் கல்வி புகட்டச் செய்கின்றனர். அதனால், தமிழ், தேசியமொழிப்பள்ளிகளின் மாணவர்களை விடச் சிறந்த தேர்ச்சியைச் சீனப்பள்ளி மாணவர்கள் பெறுகின்றனர்.

சொந்த ஆளுகையை அரசுக்கு விட்டுக்கொடுத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் குழு உதவிபெறும் பள்ளிகளைவிடப் பகுதி உதவிபெறும் பள்ளிகளையே விரும்புகின்றனர். சீனப் பள்ளிகளின் கல்வித் தர உயர்வை விரும்பியும், வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்டும் சீனப்பள்ளிகளில் சேர்ந்து பயிலும் மலாய்க்கார, தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் உயர்ந்து வருகிறதென்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும். பள்ளி வாரியங்களுக்கு அரசு தடைவிதித்தபின் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் பள்ளிகளின் வளர்ச்சிக்கும், மாணவர் கல்வி மேம் பாட்டிற்கும் பெரும்பங்கு வகித்து வருகின்றன என்பதனைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

அமைச்சரவை அறிக்கை - 1979 (Mahathir Report - 1979)

பள்ளி வாரிய ஒழிப்பால் சீனர் வருத்தமடைந்திருந்த நிலையில் அப்போதைய கல்வியமைச்சர் மகாதீர் (Dr. Mahathir) தலைமையில் அமைச்சரவை அறிக்கை வெளிவந்தது (1979). அரசு தேர்வுத்துறைத் தலைமை நிருவாகி, தனியார் கல்வி மையங்கள் நடத்தும் தேர்வுகளைத் தடைசெய்யலாம் என்பது போன்று, பதிவதிகாரிக்கு மிகுதியான

அதிகாரங்கள் வழங்க வழிவகுத்தது. இந்த அறிக்கையும் சீனர்களுக்கு வருத்தமளித்தது எனினும், அவர்களிடையே புதிய எழுச்சியையும் ஏற்படச் செய்தது.. தொடக்கப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை கூடியதாகவும் குறிப்புகள் காட்டுகின்றன.

கல்விச் சட்டம் - 1996 (The Education Act - 1996)

இச் சட்டத்திலும் தமிழ், சீனப் பள்ளிகளுக்கு அரசின் உறுதியான ஆதரவு மொழிகள் இல்லை. தேசியக் கல்விக் கொள்கையை ஆழப்படுத்த இச் சட்டத்தில் அரசு மேலும் வலுச் சேர்த்தது. அதன் சாரம் வருமாறு :

* மலேசியக் கல்விக் கொள்கை, முதன்மையான போதனா மொழி, தேசியப் பாடத்திட்டம், பொதுத் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டது.
* தமிழ், சீனப் பள்ளிகளின் நிலைமை உரிமை என்ற அடிப்படையில் இல்லை (Mother tongue education is longer a right of Non Malays). பிரிவு 17-ன் படி தேசிய மொழியே முதன்மைப் போதனா மொழியாக அமையும். ஆனால், பிரிவு 28-ன்கீழ் உள்ள தேசிய மாதிரிப் பள்ளிகள் இதற்கு உடன்படத் தேவையில்லை.
* பிரிவு 28-ன் கீழ், அமைச்சர் தேசியப்பள்ளிகளையும், தேசிய மாதிரிப் பள்ளிகளையும் நிறுவலாம். அப்படியென்றால் பிரிவு 28-ன்கீழ் நிறுவப்படாத பள்ளிகளாக உள்ள தற்போதைய தேசிய மாதிரிப்பள்ளிகளின் நிலை கேள்விக்குறியாக்கப்படுகிறது.
* அமைச்சருக்குப் பள்ளிகளைத் தடைசெய்யும் அதிகாரம் உண்டு. அது போன்ற நடவடிக்கையை யாரும் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல இயலாது.
* இந்தச் சட்டத்திற்குப் புறம்பாகக் குற்றம் புரிபவர்களுக்குத் தண்டனைகளும், கல்விச் சட்டம் 1961ஐவிட அதிகமாகக் காட்டப்பட்டன.[18]

வழக்கம்போல் மேற்படி உள்ளடக்கத்தைக் கொண்ட கல்விச் சட்டத்திற்கும் சீனர் எதிர்ப்புத் தெரிவித்து மாற்றங்கள் கோரித் தாக்கீது தந்தனர்.

இச் சட்டம் `K.B.S.R.` எனப்படும் புதிய கலைத்திட்டம் தோன்ற வழிவகுத்தது. கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என நான்கு கூறுகளும் கற்றல் கற்பித்தலில் இடம்பெற இது வலியுறுத்திற்று. அதற்கேற்பத் தமிழுக்கு ஓர் அரிய கலைத்திட்டம் உருவானது.

கல்வி அறிக்கைகள் - ஒரு பொதுப் பார்வை

1950 தொட்டு 1996ஆம் ஆண்டு முடிய (கடந்த நூற்றாண்டின் இறுதிவரை) இந் நாட்டில் கல்வித் தொடர்பான அறிக்கைகள் இருபதுக்குமேல் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஏழு அறிக்கைகள் விடுதலைக்கு முந்தியவை; மற்றவை பிந்தியவை. விடுதலைக்குப் பிந்திய அறிக்கைகள் முந்தைய அறிக்கைகளின் தொடர்ச்சியாகவே விளங்கு கின்றன. 1950 தொட்டு 1996 வரை வந்த அறிக்கைகளுள் ஓர் அறிக்கையில் மட்டுமே தாய்மொழிப் (தமிழ், சீன) பள்ளிகள் மதிக்கப் பெற்று அரசு ஏற்புடையனவாய்-அங்கீகாரம் பெற்றவையாய்க் குறிப்பிடப் பெற்றுள்ளன. இஃது ஆட்சிமொழிகளுள் ஒன்று என்னும் நிலையன்று. “மலாய் மொழியைத் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்வதோடு மற்றச் சமூகங்களின் மொழிகளையும் கலாசாரத்தையும் காப்பதும் பாது காப்பதுமாகும்” என்ற நிலைதான்.

மேற்படி அறிக்கை வழி சீன, இந்திய - தமிழ் இனங்களுக்கு அளிக்கப் பட்டிருந்த தாய்மொழி, பண்பாட்டுப் பாதுகாப்பு, அடுத்த ஆய்வறிக்கையில் மீட்கப்பட்டு, சீன, தமிழ்மொழிக் கல்வி வேலியற்ற பயிராக்கப்பட்டுவிட்டது. 1957ஆம் ஆண்டின் கல்விச் சட்டத்திற்கு அடிப்படையாய் விளங்கிய 1956ஆம் ஆண்டின் இரசாக் அறிக்கையில் அமைக்கப்பெற்ற குழு அளித்த அறிக்கையில், அனைவர்தம் கலாசார மொழிக் கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளத் தேசியக் கல்விக் கொள்கையில் இட மில்லை என்று வரையறுத்திருந்தது. 1956-07-ல் தரப்பெற்ற குறைந்த அளவிலான உரிமைகூட மீட்டுக்கொள்ளப்பட்டது, சீன, தமிழ் இனத் தார்க்குப் பேரிடியாய் ஆனது. மேலும், ஒரு தேசிய மாதிரித் தொடக்கப் பள்ளி, தேசியப் பள்ளியாக மாற்றம் காணவேண்டுமென்ற வகையில் கல்வியமைச்சு மனநிறைவடைந்தால் அவ்வாறு செய்யக் கல்வியமைச்சர் ஆணையிடலாம் என்பது மற்றொரு பேரிடியாகும்.

சட்டத்தில் சேர்க்கப் பெற்றுள்ள சரத்தால் இதுவரை எந்த வொரு தாய்மொழிப் பள்ளியும் வலிந்து அந் நிலைக்கு ஆளாகவில்லை எனினும், அச் சரத்துத் தாய்மொழிப் பள்ளிகளின் தலைக்குமேல்

தொங்கிக் கொண்டிருக்கும் சுருக்குக் கயிறாகவே எண்ணி அஞ்சப் படுகிறது. சுருக்குக் கயிறு எந்தச் சூழலிலும் இறுக்கமடையாது என்னும் நம்பிக்கையிலேயே தாய்மொழிப் பள்ளிகள் நாளும் வளர்ச்சியை நோக்கி நடைபோட்டு வருகின்றன. அரசு நல்கையும் தடையின்றித் தொடர்ந்து வருகின்றது.

சட்டம் இயற்றப்பெற்ற நாள்முதல் அண்மைக் காலம்வரை தாய் மொழிப் பள்ளிகள் நிலைத்திருக்குமென்றே நாட்டின் தலைமை அமைச்சர் முதல் அனைத்துத் தலைவர்களும் உறுதியளித்தே வருகின்றனர். அதே நேரத்தில் சீனர்கள் சீனப்பள்ளிக்கும், இந்தியர்கள் தமிழ்ப்பள்ளிக்கும் மலாய்க்காரர்களில் குறிப்பிட்ட தரப்பினர் தங்கள் பிள்ளைகளைச் சமயப் பள்ளிக்கும் அனுப்புகின்றனர். இவை யாவும் நாட்டின் கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பானவையாகும். அறிவியல் தொழில்நுட்பத்துறையில் அனைவரும் முன்னேற வேண்டும்; பல்லினங்களுக்கிடையே ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டும் என்பதுதான் தேசியக் கல்விக்கொள்கையின் அடிப்படை நோக்கம்[19] என்பதனையும் இடையிடையே சொல்ல மறப்பதில்லை.

தொடக்கக் கல்வி என்பது குழந்தைகள் மனத்தில் உயர் கல்விக்குப் போதும் அடிப்படையாகும். அது தாய்மொழியில் இருப்பதே சிறப்பு என்பது ஓருலக அவையின் பரிந்துரையாகும். இயற்கையான கல்விமுறையும் அஃதே ஆகும். இடைநிலைப் பள்ளியில் எல்லா இன மாணவரும் ஒன்றிணைந்து கற்கும் நிலையே உள்ளது. மேலும் அனைத்துத் தொடக்கப் பள்ளிகளுக்கும் ஒரே வகையான பாடத்திட்டம்தான்; மொழிகள் மட்டுமே வேறு. அனைத்துப் பள்ளிகளிலும் முதலாம் ஆண்டி லிருந்தே தேசிய மொழி (மலாய்) கட்டாயப் பாடமாகும். அண்மையில் பல எதிர்ப்புகளுக்கிடையே நேர்ந்த மாறுதலால் அனைத்துப் பள்ளிகளிலும் கணிதமும் அறிவியலும் ஆங்கிலத்தில் கற்பிக்கப்பெறுகின்றன. சீனர்கள் தொடர்ந்து கணித அறிவியல் பாடங் கற்பித்தலில் சீன மொழியையும் பயன்படுத்தி வருகின்றனர்; கணிதத்தில் உயர்ந்த தேர்ச்சியைப் பெறுகின்றனர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். அப்பாடங்களைத் தாய் மொழியிலேயே படிக்கலாம் என்றும் எண்ணமிடப்பட்டு வருகிறது.

இனித் தாய்மொழிப் பள்ளிகளின் 6ஆம் ஆண்டு அடைவுநிலைத் தேர்வுகளில் தமிழ்மொழித் தாள்கள் இரண்டுமட்டுமே தமிழில் இருக்கும். தேசிய மொழித் தாள்கள் இரண்டும், ஆங்கிலம், கணிதம், அறிவியல் ஆகிய மூன்று தாள்கள் ஆங்கிலத்தில் இருக்கும். ஆக, அடைவுநிலைத்

தேர்வுகளில் தாய்மொழிப் பள்ளி மாணவர்கள், தாய்மொழிகளைத் தவிர மற்ற அனைத்துப் பாடங்களையும் தேசியப் பள்ளி மாணவர்களைப் போலவே மலாயிலும் ஆங்கிலத்திலும் எழுதுகின்றனர். தேசியப் பள்ளி மாணவர்கள் சீனத்தையோ தமிழையோ தேர்வுப் பாடமாகத் தேர்வு செய்ய இயலாதாகையால் ஐந்து பாடங்களில் மட்டுமே தேர்வு எழுது கின்றனர். தாய்மொழிப் பள்ளி மாணவர்கள் கூடுதலாகத் தாய்மொழிப் பாடத்தை எடுக்கின்றனர். அவ்வளவே.

கல்விக்கொள்கைக்கு முரணான போக்கு இல்லை

மலேசியா உரிமைப்பேறுடைய விடுதலை நாடாகையால், கல்விக் கலைத்திட்டம் நாட்டுப்பற்று, இன ஒருமைப்பாடு போன்ற உணர்வுநலன் மிளிர வகுக்கப்பெற்றதாகும். தேசியமொழி, தாய்மொழி, நன்னெறிக் கல்வி, வட்டாரக் கல்வி போன்ற எப்பாடமாயினும் மேற்படி உணர்வு நலன்களை ஊக்கி மேம்படுத்தும் தன்மையினைக் கொண்டவையே. அதனால் எதிர்காலத் தலைமுறை நாட்டுப்பற்றுடனும், இன ஒருமைப்பாட்டுணர் வுடனும் வளர்ந்து, அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்து தேசியக் கல்விக்கொள்கை எதிர்நோக்கும் குறிக்கோளை அடையும் என்பது திண்ணம். இப்போதைய சூழலும் இதனை மெய்ப்பித்தே வருகின்றது.

தொலைநோக்குப் பள்ளிக்கொள்கை - 2000 (Vision School Concept - 2000)

புதிய நூற்றாண்டுத் தொடக்கத்தில் அரசு தொலைநோக்குப் பள்ளித் திட்டத்தைக் கொண்டுவந்தது. மலாய், சீன, தமிழ்ப் பள்ளிகளை ஒரே வளாகத்தில் அமைப்பதே இதன் முதன்மை நோக்கமாகும். இதன் மூலம் பல்லினங்களிடையே புரிந்துணர்வும், ஒருமைப்பாட்டு எண்ணங்களும் முகிழ்க்கும் என்பது எதிர்பார்ப்பாகும். அழுத்தமான தாய்மொழிப்பற்றும் இன உணர்வும் மிக்க சீனர் இத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். காலப்போக்கில் தாய்மொழிப் பள்ளிகளின் தனித்தன்மை அழிந்துவிடு மென்ற அச்சமே எதிர்ப்புக்குக் காரணமாகும்.

தேசிய முன்னணி அரசில் உறுப்பியம் பெற்றுள்ள சீன, இந்தியத் தலைவர்கள் இத் திட்டத்திற்கு வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை; ம.இ.கா. தேசியத் தலைவர் ச.சாமிவேலு வெளிப்படையாக முழுமையான ஆதரவைத் தெரிவித்தார். (தமிழ்நேசன், அக்டோபர் 20, 2000, ப. 4.) முக்கால்வாசித் தமிழ்ப்பள்ளிகள் முதலுதவி பெறாத பள்ளிகளாகவும் சொந்த நிலத்தில் அமையாத நிலையில் இருப்பதாலும் தொலைநோக்குப்

பள்ளிகள் அமைந்தால் நிலைமை சீர்படும் என்னும் நோக்கிலேயே அவர் இதனை அறிவித்திருக்கலாம். கல்விநலஞ் சார்ந்த அமைப்புகள், தாய் மொழியின் எதிர்கால நன்மையை எண்ணித் தயக்கம் காட்டின.

இத் திட்டத்தில் தேசியப் பள்ளிகளே தலைமை கொள்ளும். அனைத்தும் ஒரு பொதுவான தலைமையிலேயே நடைபெறும். காலப் போக்கில் ஒரே தலைமை என்னும் நிலை இயல்பாகவே அமைந்துவிடலாம். தமிழும் சீனமும் தாய்மொழிகள் என்னும் அளவில் சுருங்கிவிடலாம் என்ற ஐயம் பரவிற்று. சீனர்கள் இதுகுறித்து மிகமிக விரிவாக ஆராய்ந்து அறிக்கைகள் வெளியிட்டனர். டோங் ஜியாவ் சோங் (Dong Jao Zong) என்னும் சீனப் பள்ளிகளின் ஆசிரியர்களும் வாரிய அமைப்பும் வெளியிட்ட அறிக்கையிலிருந்து வினாவிடை முறையிலான சில கருத்துகள் ஈண்டுத் தரப்பெறுகின்றன.

தொலைநோக்குப் பள்ளித் தொடர்பாக டோங் ஜியாவ் சோங் கருத் தென்ன? என்ற வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடை இது:

* பல்வேறு மொழிவழி மாணவரிடையே தொடர்புறவுகளை ஊக்கப்படுத்துவதுதான் தொலைநோக்குப் பள்ளிகளின் நோக்கம் என்று சொல்லப்பட்டாலும், வெவ்வேறு மொழிப் பள்ளிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியே இப்பொழுது நடந்துகொண் டிருக்கிறது.

* ஒரே ஓய்வுநேரம், மாதத்திற்கு ஒருமுறை ஒரே பேரவை, பாடம் அல்லது புறப்பாடம் தொடர்பான போட்டிகளுக்கு ஒரே குழு அமைத்து அனுப்புதல், ஒரே போட்டி விளையாட்டு நடத்துதல், ஒரே சிற்றுண்டி நாள் நடத்துதல், மொத்தத்தில் இவ் வளாகத்தில் அமைந்த பள்ளிகளின் ஒருபகுதி நிருவாகம் ஒருங்கிணைக்கப்படும் என்பதே இதன் பொருளாகும்.

* ஒவ்வொரு தொலைநோக்குப் பள்ளியிலும் இணைக்கப் பட்டுள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களைக் கொண்ட தலைமைக் குழு ஒன்று அமைக்கப்படும். இதன்வழித் தமிழ், சீன மொழிப் பள்ளிகளின் அதிகாரங்கள் தடுக்கப்படும். முன்பு பள்ளியின் தலைமையாசிரியர் இசைவோடு நடத்தப்பெற்ற பல நடவடிக்கைகளுக்கு இப்பொழுது இந்த இயக்குநர் குழுவின் இசைவைப் பெறவேண்டும். இந்தக் குழுவே இறுதி முடிவெடுக்கும் குழுவாக அமையும்.

* இக் குழுவினால் தமிழ்ப்பள்ளிகளிலும் சீனப் பள்ளிகளிலும் இயங்கும் பள்ளி வாரியங்கள் செயலிழந்து போகும். சீனமக்களும் இயக்குநர் வாரியங்களும்தாம் சீனப்பள்ளிகளின் பாதுகாப்பு அரண்கள். இப் பாதுகாப்பு அரண்களை மெலிவடையச் செய்யும் எந்த முயற்சியும் சீனத் தொடக்கப் பள்ளிகளின் நிலைப்பாட்டிற்கு ஆபத்தாகவே போய் முடியும்.[20]

மாணவரிடையே ஒருமைப்பாடு குறித்து எழுப்பிய வினாவும் விடையும்

வினா:

டோங் ஜியாவ் சோங் பல்லின மாணவரிடையிலான தொடர்புகளை விரும்பவில்லையா?

* டோங் ஜியாவ் சோங் பல்லின மாணவரிடையிலான தொடர்புகளை உண்மையில் வரவேற்கிறது. ஆனால், இதனை உருவாக்க வேண்டுமென்ற போர்வையில், ஒரு பள்ளியின் நிருவாகத்தையோ, கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையோ சீரழித்துவிடுதல் கூடாது. மாணவரிடையே தொடர்புறவுகளை ஏற்படுத்த வேண்டுமென்னும் போர்வையில் பள்ளிகளை ஒருங்கிணைக்கும் எந்த முயற்சியையும் டோங் ஜியாவ் சோங் ஏற்றுக்கொள்ளாது.

* 1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒருமைப்பாட்டிற்கான மாணவர் தொடர்புறவுத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது போன்ற பல்லின மாணவர்களிடையே தொடர்புறவுகளையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் ஏற்படுத்தப் பல்வேறு புறப்பாட நடவடிக்கைகளையும் செயற்படுத்துவது சிறப்பாகும் என டோங் ஜியாங் சோங் கருதுகிறது. எனவே, கல்வியமைச்சர் தொலை நோக்குப் பள்ளித் திட்டத்தைக் கைவிட்டு அதற்குப் பதிலாக 1986ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட மாணவர்களிடையே ஆன தொடர்புறவுத் திட்டத்தை மீண்டும் உயிர்ப்பிக்குமாறு டோங் ஜியாங் சோங் கேட்டுக்கொள்கிறது.

குறிப்பு : 1986 மார்ச்சுத் திங்களில் கல்வி அமைச்சு அறிவித்த மாணவர் தொடர்புறவுத் திட்டத்திற்குப் பல்வேறு சீனப் பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி அத் திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பெற்றதாகவும் அதன் விளைவுகள்

ஆக்ககரமாய் இருந்தனவெனினும் கல்வியமைச்சு அத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது என்று டோங் ஜியாவ் சோங் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

தொலைநோக்குப் பள்ளிகுறித்துச் சமுதாயம் இதுபோன்று கருத்துரைத்த வேளையில், கல்வி அமைச்சர் மறுமொழி இங்ஙனம் அமைந்திருந்தது: வாவாசான் (தொலைநோக்குப்) பள்ளி உருவாக்கப் படுவதால் தேசிய மாதிரி சீன, தமிழ்ப்பள்ளிகள் தங்கள் தனித்தன்மைகளை இழந்துவிடக்கூடும் என யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. லாரா பிலோட் என்னும் இடத்தில் உருவாக்கப்பட்ட வாவாசான் பள்ளிமுறை சீன, தமிழ்ப்பள்ளிகளின் தனித் தோற்றத்திற்கு எந்தவிதமான பாதிப்பு களையும் ஏற்படுத்தவில்லை. வாவாசான் பள்ளி அமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்பதில் கல்வியமைச்சுத் தெளிவாக இருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பிரச்சினை இல்லாமல் அமல்படுத்தியுள்ளோம்... இனங் களுக்கிடையிலான ஒற்றுமை, புரிந்துணர்வுகளைப் பள்ளிப் பருவத்திலேயே உருவாக்கும் நோக்கில் வாவாசான் பள்ளித் திட்டம் அமல்படுத்தப்படுகிற தென்பதனை ஏற்கெனவே பிரதமர் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்." இவை போன்ற கருத்துப் பரிமாற்றங்கள் அறிவார்ந்த நிலையில் அரசுக்கும் சமுதாயங்களுக்குமிடையில் நடந்துவருகின்றன.

கல்வியமைச்சின் தொலைநோக்குப் பள்ளித்திட்டம் இன்னும் ஆய்வு நிலையிலேயே உள்ளது. அதனை உடனடியாக வலிந்து செயல்படுத்தும் முயற்சியிலும் அரசு தீவிரம் காட்டவில்லை.

3. உயர்நிலைகளில் தமிழ்

உயர்நிலைகளில் தமிழ் என்னும் இப் பகுதி தொடக்கத் தாய் மொழிப் பள்ளிகளையடுத்து, இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் தமிழின் நிலைப்பாட்டைப் பற்றியதாகும்.

மலேசியாவில் மாணவர் ஒருவர் பல்கலைக்கழகம் வரையில் தமிழ் பயின்று பட்டதாரியாகும் வாய்ப்பு உண்டு; கல்விச் சட்டத்திலும் இதற்கு இடம் உண்டு என்பது போன்ற ஒரு தோற்றம் தென்படுகிறது எனினும், இடையில் எத்தனையோ இடையூறுகளைக் தாண்ட வேண்டியுள்ளது.

தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட தொடக்கப் பள்ளிகளின் அமைப்புச் சிறப்பாகவே உள்ளது. நாட்டின் மூத்த பல்கலைக் கழகமான மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு ஒரு துறையே (இந்திய ஆய்வியல் துறை) அமைந்துள்ளது. எனினும், தொடக்கப் பள்ளியை முடித்துப் பல்கலைக்கழகம் வரையில் தமிழையும் ஏந்திச் செல்லச் சீரான (தமிழ்க்) கல்விப் பாதை அமையவில்லை. மேடுபள்ளங்கள் நிறைந்தும், கடப்பதற்கு முறையான ஏதுக்கள் இன்றியும் பெரும் பள்ளத்திற்குமேல் கட்டப்பட்ட கம்பிகளின்மேல் நடந்து செல்ல வேண்டுவது போன்ற அவல நிலையும், வலிவற்ற படகில் காட்டாற்றைக் கடக்க முயலும்படியான சூழலுமே உள.

ஓர் உடல் சீராக இயங்கத் தலையும் கால்களும் மட்டுமே போதுமா? அவற்றிற்கு இடைப்பட்ட பகுதியும் முதன்மையன்றோ? அவ் விடைப்பட்ட பகுதியின் இடையூறுகள் ஈண்டுக் கண்ணோட்டமிடப் பெறுகின்றன.

தேசிய இடைநிலைப் பள்ளிகளில் தமிழ்

தேசியப் பள்ளிகளில் பயிலும் சீன, இந்திய - தமிழ் மாணவர்களில் பதினைந்து பேரின் பெற்றோர் எழுத்துமூலம் தம் விருப்பத்தைத் தெரிவித்தால் தாய்மொழி (தமிழ், சீனம்) கற்பிக்க 1961ஆம் ஆண்டின் கல்விச் சட்டம் வழிவகுத்தது. இது மாணவர்களின் தாய்மொழிக் கல்வி (P.O.L.-Pupils Own Language) என்று அழைக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டுக் கல்விச் சட்டத்தின் இரண்டாம் பிரிவும்

(The Education Act, 1996) இதனையே வலியுறுத்துகிறது. தொடக்கப் பள்ளிகளில் மூன்றாம் ஆண்டு (வகுப்பு) முதல் ஆறாம் ஆண்டு வரையில் ஒரு வாரத்திற்கு 120 மணித்துளிகள் தாய்மொழி கற்பிக்க மேற்படி இரு சட்டங்களும் வழிவகுத்துள்ளன. பயிற்சி பெற்ற ஆசிரியர் இருப்பின் பாட நேரத்திலேயே தாய்மொழிகளைக் கற்பிக்கலாம். இவற்றை 16 நவம்பர் 2000 நாளிட்ட KP (BS) 8502/15/006/(22) என்ற கல்வியமைச்சின் சுற்றறிக்கை மறுஉறுதி செய்கிறது.[21] இது தொடக்கப்பள்ளியில் உள்ள நிலையாகும்.

தேசியத் தொடக்கப் பள்ளிகளிலும் தாய்மொழிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதெனினும், அவ் வாய்ப்பைப் பெறமுடியா வண்ணம் எத்தனையோ இடையூறுகள் இடையில் தடுத்துநிற்கின்றன.

இடையூறு-1

தேசியத் தொடக்கப் பள்ளிகளில் உள்ள நிலைபோலவே இடைநிலைப் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்கள் தாய்மொழியை ஒரு பாடமாகப் பயில விரும்பினால், பெற்றோர் எழுத்துமூலம் தம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். பெரும்பாலான பெற்றோர் இதனை உணர்வதில்லை, உணர்ந்தோரில் சிலர் அதனில் கருத்துச் செலுத்துவதில்லை. விழிப்புடைய பெற்றோர் விருப்புரிமையைத் தெரிவித்தாலும் பள்ளி அப் படிவங்களை ஆராய்ந்து வகுப்பு நடத்தலாமா? வேண்டாவா என முடிவெடுக்க ஒரு திங்கள் ஆகும். பள்ளியில் அதற்கான சூழல் இல்லையென்றால் நடத்தாமல் விட்டுவிடவும் தலைமையாசிரியருக்கு அதிகாரம் உண்டு என்பதும் ஈண்டுக் குறிக்கத்தக்கது. இடைநிலைப் பள்ளிகளில் தமிழ்வகுப்பு ஏற்படுத்துவது என்பது ஒரு போராட்ட நிலையிலேயே உள்ளது.

இடையூறு-2

பள்ளியில் தாய்மொழி-தமிழ்மொழி வகுப்பு நடத்தலாம் என நிருவாகம் முடிவெடுத்தபின் வகுப்பிற்கு நேரம் வகுப்பதில் பல சிக்கல்கள் உள. தாய்மொழிப் பாடம் வகுப்புக் கால அட்டவணையில் பெரும்பாலும் இடம் பெறாது. கால அட்டவணைக்கு அப்பாற்பட்ட நேரமாகவே அஃது அமையும். அதனால் போக்குவரத்து, பாதுகாப்புப்போன்ற காரணங்களால் மாணவர் பலருக்கு அவ் வகுப்புகளில் பங்குபெற இயலாமற் போகும். நாள் ஆக ஆக உள்ள மாணவர் தொகையும் குறைந்துகொண்டே போகும். பெரும்பாலான பள்ளிகளில் உயர்வான கற்றல் கற்பித்தலும் நடைபெறுவதில்லை.

இடையூறு-3

இடைநிலைப் பள்ளிகளில் நடக்கும் தமிழ்வகுப்புகளின் தரநிலை பற்றியும் இங்குக் குறிப்பிட வேண்டுவது இன்றியமையாததாகும். அவ் வகுப்புகளுக்கு மூன்று வகையான மாணவர்கள் வருகின்றனர்.[1]. தொடக்கத் தமிழ்ப்பள்ளிகளிலிருந்து வருவோர், 2. தேசியப் பள்ளிகளில் தமிழையும் ஒரு பாடமாக எடுத்துப் பயின்றோர் (மிகமிகக் குறைந்த எண்ணிக்கை யினர்) அல்லது வீட்டில் பெற்றோரிடமோ, தனிப்பாட வகுப்புகளிலோ பயின்றோர், 3. தமிழை அறவே கல்லாதவர். இம் மூன்று வகையினரும் கூடும் வகுப்பாக இடைநிலைப் பள்ளிகளின் தமிழ்வகுப்புகள் உள்ளன. அதனால் தேர்வெழுதும் மாணவர்க்கு உரிய நிறைவான கற்றல் கற்பித்தல் நடைபெறுவதில் இடையூறு உள்ளது. எனினும், ஈகமனம் கொண்ட ஆசிரியர்கள் தனிக் கருத்துச் செலுத்தித் தேர்வெழுதும் மாணவர்க்குக் கற்பிப்பதால் அப்பேர்ப்பட்ட பள்ளிகளில் தமிழின் தேர்ச்சி விழுக்காடு மற்றப் பாடங்களைவிட உயர்வதுண்டு. அந் நிலையில் தாய்மொழி ஆசிரியர் களின் மதிப்பும் உயர்வெய்தும்.

இடையூறு-4

தேசிய இடைநிலைப் பள்ளிகளில் கற்பிக்கத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் (புதிய தலைமுறையில்) உருவாக்கப்பட்டுள்ளனரா என்னும் வினாவிற்கு அழுத்தமாக விடைதர இயலாத சூழலே நிலவுகிறது. இடை நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்க மிகமிகக் குறைவான ஆசிரியர்களே உருவாக்கப் பெற்றுள்ளனர். அவர்களுள் பலரைப் பள்ளிகள் வேறுபாடங்கள் கற்பிக்கப் பயன்படுத்திக் கொள்கின்றன.

தேசியப் பள்ளிகளில், தமிழ்த் தொடக்கப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களே பகுதிநேரத் தமிழாசிரியர்களாகப் பணிபுரிகின்றனர். அவர்கள் பணி ஓய்வு பெற்றபின்னரும் (60 அகவைக்கு மேலும்கூட) அப் பணியில் ஈடுபடுத்தப் பெறுகின்றனர். பள்ளிகளின் பகுதிநேர வகுப்புகள் முறைப்படி கண்காணிக்கப்பெறுவதில்லை.

அண்மைக் காலமாகத் தொடக்கப் பள்ளித் தமிழாசிரியர்களுக்குத் தகுதி அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் இடம் வழங்கப்பெற்றுப் பட்டதாரிகளாகின்றனர். தமிழையும் ஒரு பாடமாக எடுத்துப் பயின்று வெளிவரும் இவர்களில் பலர் இடைநிலைப் பள்ளிகளில் வேறு பாடங்கள் கற்பிக்கப் பணிக்கப் பெறுவதால், பகுதிநேர ஆசிரியர்களே தமிழ் கற்பிக்கும் நிலை நீடித்து வருகிறது.

இடையூறு-5

இது, மாணவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் இடையூறாகும். பள்ளியில் எல்லாம் சரியாக அமைந்தும், உள்ளதைக் கொண்டு நல்லது செய்யும் ஆசிரியர்கள் வாய்த்தும் அந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாத மாணவர்களும் உளர். ஒழுங்காகப் பள்ளிக்கு வருகை தாராமை, தமிழ்வகுப்பு நடைபெறும் நேரத்தில் நண்பர்களுடன் பேரங்காடிகளில் சுற்றும் போக்கு, அரிதாகப் பள்ளி நேரத்தில் நடை பெறும் வகுப்புகளில்கூட மாணவர்களில் சிலர் பலர் வகுப்புகளில் கலந்து கொள்ளாமை, பாடம் நடைபெறாத வகுப்பறையில் புகுந்து அரட்டை அடித்தல் போன்றவை மாணவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளும் இடையூறுகளாகும். இதனில் கவலைப்படத்தக்கது என்ன வெனில், பள்ளி நிருவாகமோ, பெற்றோரோ இந்த அலங்கோலங்களை, ஒழுங்கீனங்களாகக் கண்டுகொள்ளாமலிருப்பதுதான். மற்றப் பாடங்களில் பங்குபெறத் தவறும் மாணவர்களைக் கண்டித்து நெறிப்படுத்த முயலும் ஆசிரியர்கள், தமிழ்மொழிப் பாடத்தில் கலந்துகொள்ளாத மாணவர்களை அவர்கள் போக்கில் விட்டுவிடுவது ஏனென்று தெரியவில்லை. பள்ளியில் நடக்கும் ஒழுங்கீனங்களைச் சரிப்படுத்துவதில் ஆசிரியர்களுக்கும் பள்ளி நிருவாகங்களுக்குமே மிகுதியாய்ப் பங்குண்டு என்பது, சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றன்று.

இடையூறு-6

3ஆம் (பி.எம்.ஆர்.) 5ஆம் (எஸ்.பி.எம்.) படிவங்களுக்கு இப்பொழுது உயரிய கலைத்திட்டம் கல்வி அமைச்சால் வகுக்கப் பெற்றுள்ளது. முறையாக உருவாக்கப் பெற்ற பாடநூல்களும் அரசு செலவில் வழங்கப் பெறுகின்றன. எனினும், பாடநூல் ஒன்றுமட்டும் மாணவரைத் தரம் மிகுந் தோராய் ஆக்கப் போதுமானதன்று. துணைப் பாடநூல்களை, பொது நூல்களை எந்த அளவு படிக்கின்றனரோ அந்த அளவே மாணவர் கல்வித்தரம் உயர்வெய்தும். இடைநிலைப் பள்ளி நூலகங்களில் மாணவர்க்குத் தேவையான தமிழ்நூல்கள் இடம் பெறுவதில்லை. மொழிப் பயிற்சிக்குரிய நூல்கள் சில பதிப்பகங்களில் வெளியிடப் பெறுகின்றன. மாதிரிக் கட்டுரைகள் போன்ற வழிகாட்டி நூல்கள் மாணவர்க்குக் கிட்டுவதில்லை. பதிப்பகங்களால் வெளியிடப்பெறும் நூல்களை மாணவர்கள் ஆர்வத்தொடு வாங்கிப் படிக்கும் ஆர்வம் பெருகாததால் பதிப்பகங்களும் அத்தகைய நூல்களை வெளியிடத் தயக்கம் காட்டுகின்றன. நூலகங்கள் மாணவர்க்குரிய நூல்களை வாங்கி நூலகங்களில் இடம்பெறச் செய்தால் பயன் விளையும்.

இடையூறு-7

இந்த இடையூறும் மாணவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்கின்ற இடையூறே ஆகும். இடைநிலைப் பள்ளிகளில் இப்பொழுது உள்ள வாய்ப்புகள் முன்பு இருந்ததில்லை. ஆனால் மாணவ ரிடையே முன்பிருந்த தமிழ் ஆர்வம் இப்பொழுது குறைந்து காணப் பெறுவது வருத்தத்திற் குரியதாகும்.

தமிழ்த் தொடக்கப்பள்ளிகளிலிருந்து இடைநிலைப் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களில் மிகப் பெரும்பாலோர் முன்பு தமிழைத் தேர்வுப் பாடங்களில் ஒன்றாகத் தெரிவு செய்தனர்; தமிழ் இலக்கியத்தையும் பலர் தேர்வில் ஒரு பாடமாக எடுத்தனர்; இரு பாடங்களிலும் பலர் நல்ல தேர்ச்சி பெற்றனர். ஆனால், அண்மைக் காலமாக மாணவர் போக்குப் பெரிதும் மாறுபட்டுள்ளது.

மாணவர்கள் தமிழ்த் தொடக்கப் பள்ளியை முடித்து இடை நிலைப் பள்ளியில் கால் வைத்ததும் (பலர்) தாங்கள் வேறோர் புதிய உலகத்திற்கு வந்துவிட்டதாக நினைக்கின்றனர்; தாய்மொழி தேவை யில்லை என்னும் எண்ணங்கொண்டுவிடுகின்றனர். மேயும் மாட்டை நிற்கும் மாடு கெடுப்பதைப்போல, தேசியப் பள்ளிகளிலிருந்து வரும் தமிழறியாத, தமிழ் உணர்வே இல்லாத மாணவர்கள் இவர்களைத் திசை திருப்பிவிடுகின்றனர்.

மாணவர்களின் இப் போக்குப்பற்றிப் பெற்றோர்களோ, சமுதாய, அரசியல் தலைவர்களோ கவலை கொள்வதில்லை. எல்லாம் சரியாகவே நடந்து வருகின்றன என்று வாளாவிருக்கும் போக்கே நிலவி வருகிறது. தேசியப் பள்ளிகளில் - குறிப்பாகத் தமிழ்த் தேர்வெழுதும் மாணவர்கள் பயிலும் பள்ளிகளில், தமிழ்மொழியின் தரம் நாளுக்குநாள் தாழ்வை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிந்துகொள்ளாமலேயே நடைபோட்டுக் கொண்டிருக்கிறது சமுதாயம்.[22]

மேற்கண்ட அத்தனை இடையூறுகளையும் கடந்து இடை நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆர்வம் நிறைந்த மாணவர்கள் நல்ல தேர்ச்சி பெற்றுவிடுகின்றனர். சிலர் ஆசிரியர்களை அணுகிக் கற்றும், தனிப்பாட வகுப்புகளில் பயின்றும், ஸ்ரீமுருகன் நிலையம் போன்ற அமைப்புகள் நடத்தும் வகுப்புகளில் சேர்ந்து பயின்றும் தொண்டூழிய நிறுவனங்கள் நடத்தும் வகுப்புகளில் கற்றும் சிறப்புத் தேர்ச்சி பெறுகின்றனர். இதே முறைகளில் முயன்று உயர்நிலைக் கல்விச் சான்றிதழ்த் தேர்விலும் தேர்ச்சி பெறுகின்றனர்.

தமிழ் இலக்கியம்

இடைநிலைப் பள்ளி இறுதியில் நடைபெறும் 5ஆம் படிவம் (SPM) மலேசியக் கல்விச் சான்றிதழ் (Malaysian Certificate of Education) என்னும் தேர்வில் தமிழுடன் தமிழ் இலக்கியத்தையும் ஒரு பாடமாகத் தெரிவு செய்யலாம். அத் தேர்வு கவிதை, புதினம், நாடகம் ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டதாகும். இத் தேர்வுக்குரிய பாடங்கள் தாய்மொழி வகுப்புகளில் நடத்தப் பெறுவதில்லை. மாணவர்கள் சொந்தமாகக் கற்றோ, தனிப்பாட முறையில் கற்றோ தேர்வெழுத வேண்டும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் தேர்வில் தமிழ் இலக்கியத்தை நிறையப் பேர் ஒரு பாடமாகத் தெரிவு செய்தனர். 2500க்க மேற்பட்டோர் இத் தேர்வை எழுதினர். அண்மைக் காலமாக மிகப் பலர் இதனில் நாட்டம் கொள்ள வில்லை. 1999ஆம் ஆண்டில் தேர்வெழுதிய மாணவர் எண்ணிக்கை 350 ஆகக் குறைந்தது. அதனால் இப் பாடம் மலேசியத் தேர்வு வாரியத்தால் பட்டியலிலிருந்து அகற்றப்படும் இடரை எதிர்நோக்கி யிருந்தது. ஒன்று தேர்வுப் பாடமாக இடம் பெற வேண்டுமானால், அப் பாடத்தைத் தெரிவு செய்வோர் எண்ணிக்கை 500ஐத் தாண்ட வேண்டுமென்பது விதி. இதனை நன்கு உணர்ந்த தேர்வு வாரியத்தின் தமிழ்ப் பிரிவு அதிகாரி ப.மூர்த்தி பெரும் முயற்சி மேற்கொண்டு இந்த எண்ணிக்கை உயரப் பாடுபட்டார். இதற்கு ஆசிரியர்களும், இந்து இளைஞர் இயக்கம் போன்ற பொது அமைப்புகளும் அயராது பாடுபட்டன. தமிழ் நெஞ்சரான உமா பதிப்பகத்தின் உரிமையாளர் ஆ. சோதிநாதன் இலக்கியப் பாடநூல்களை வரவழைத்து அடக்கவிலையினும் குறைவாக வழங்கி அருளினார். தேர்வு வாரியமும், மாநில அளவில் அமைந்திருந்த தமிழ்க்கல்விக் கலைத்திட்டக் குழுவினரும் வழிகாட்டி நூல்களை வெளியிட்டனர். இந்த அரிய கூட்டு முயற்சிகளால் 2004ஆம் ஆண்டில் தேர்வெழுதிய மாணவர் எண்ணிக்கை 3037 ஆக உயர்ந்தது;[23] 4000ஐ எட்டியது.

மாணவர்கள் தமிழ் இலக்கியப் பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெறத் தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களில் சிலர் உதவி வருகின்றனர். ஓய்வு பெற்ற ஆசிரியர் பெருமக்கள் சிலரும் கைம்மாறு கருதாது உதவிவருகின்றனர். தொண்டூழிய நிறுவனங்களில் சிலவும் வகுப்புகள் நடத்தி வருகின்றன. பொருள்வளங் கொண்ட மாணவர்கள் தனிப்பாட வகுப்புகளில் கற்றுத் தேர்வெழுதிச் சிறப்புத் தேர்ச்சி பெறுகின்றனர்.

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்

இடைநிலைக் கல்வியான 5ஆம் படிவம் முடித்த மாணவர்கள் உயர்நிலைத் தேர்வில் (STPM) தமிழையும் ஒரு பாடமாக எடுக்கலாம்.

ஆனால், பள்ளிகளில் இப் பாடம் கற்பிக்கப்படுவதில்லை. மாணவர்கள் சொந்த முயற்சியில் கற்றுத் தேர்வெழுத வேண்டும். பல்கலைக்கழக நுழைவுத் (Pre-University) தேர்வுத் தாள்களில் ஒன்றான இது சற்று ஆழமான கலைத்திட்டத்தைக் கொண்டதாகும். வளமான மொழி, இலக்கியத் திறன் கொண்டவரே இத் தேர்வில் வெற்றிபெற இயலும். பல்கலைக்கழக நுழைவுத் தகுதிக்கு இத் தமிழ்த் தேர்ச்சிப் புள்ளிகளும் கணக்கிடப்படுவதால் இத் தேர்வை எழுதும் மாணவர் தொகை கூடிக் கொண்டே வருகிறது. ஸ்ரீ முருகன் நிலையம், தனிப்பாட வகுப்புகள் நடத்தும் கல்வி மையங்கள், தனிப்பட்டோர் நடத்தும் வகுப்புகள் போன்றவற்றில் மாணவர்கள் சேர்ந்து பயின்று தேர்வெழுதுகின்றனர். மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையைச் சேர்ந்தோர் தேர்வு வழிகாட்டிக் கருத்தரங்குகள் நடத்தி மாணவர்களுக்கு உதவி வருகின்றனர்.

இத் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு மலாயாப் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்தால் அவர்கள் தமிழை ஒரு முதன்மைப் பாடமாக எடுத்துப் பயின்று பட்டம் பெறலாம். வேறு பல்கலைக்கழகங்களில் இடம்கிட்டினால் தமிழில் பட்டம் பெற வாய்ப்பில்லை. தமிழில் பட்டம் பெறவேண்டுமென்ற ஆர்வமும், அதற்குரிய தகுதியும் கொண்ட மாணவர் களுக்கு மலாயாப் பல்கலைக்கழகத்தில் இடம் கிட்டுவது அரிதாகவே உள்ளது என்பதும் ஈண்டுக் குறிக்கத்தக்கதாகும்.

மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ்

மலேசியாவின் மூத்த பல்கலைக் கழகமாக விளங்குவது மலாயாப் பல்கலைக்கழகம். இது 1948-ல் கார்சண்டர்ஸ் (Carrsanders) குழுவின் பரிந்துரைக்கொப்பச் சிங்கப்பூரில் ஏழாம் கிங் எட்வர்ட் (King Edward VII) மருத்துவக் கல்லூரியையும் ராபில்ஸ் கல்லூரியையும் (Raffles College) இணைத்து உருவாக்கப்பெற்றது. அக் காலத்தே மலாயாவில் வாழ்ந்த முக்கிய இனத்தவர் பண்பாடுகளைப்பற்றிய கல்வியையும் பல்கலைக் கழகத்தில் பேணி வளர்க்க வேண்டும் என்று அக் குழு வலியுறுத்தியது. அப்போதுதான் பல்கலைக்கழகம் பல்லின மக்களுக்குரிய பொதுச் சொத்தாய் அமைய முடியும்; பலர்க்கும் வழிகாட்டிப் பயன் நல்க முடியும் என்று அக் குழு கருதியது. இந் நிலையில் தமிழ்த்துறையை ஏற்படுத்த மலாயா மக்கள் விரும்பினர்; மனமுவந்து பெரும் நன்கொடை வழங்கினர். அரசாங்கமும் ஆதரவளித்தது. தனிநிதிக் கட்டளையொன்றும் உருவாயிற்று; நூலகத்திற்கு வேண்டிய வாய்ப்பும் வசதிகளும் கிடைத்தன. இதனால் 1956ஆம் ஆண்டில் சிங்கப்பூரிலிருந்த மலாயாப் பல்கலைக் கழகத்தில்

இந்திய ஆய்வியல் துறை நிறுவப்பட்டது. 1959ஆம் ஆண்டுமுதல் அது கோலாலம்பூரில் இயங்கி வருகிறது.[24]

தமிழுக்கு இடம்

மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வியல்துறை உருவாக்கத் திட்டமிட்டபோது, அது தொடர்பாகத் தகவுரை நல்க இந்திய நாட்டு அரசின் நிகராளியாய் வந்த நீலகண்ட சாஸ்திரியார் சமஸ்கிருதத்தைப் பயிற்றுமொழியாக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தார். இக் கருத்துக்குப் பெரும்பான்மையாக வாழும் தமிழரிடமிருந்து பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. சிங்கப்பூரிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தமிழ்முரசு நாளிதழின் ஆசிரியரான கோ. சாரங்கபாணி தலைமையில் நாடு தழுவிய நிலையில் எதிர்ப்புக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இறுதியில் தமிழ் பயிற்றுமொழி யாக அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.[25]

தமிழைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறச் செய்ததொடு கோ.சாரங்கபாணி நின்றுவிடவில்லை. அத் துறையில் தமிழ் நூலகம் அமைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டபோது, அதனை அமைக்க உறுதி கொண்டார். தமிழ்முரசு மூலம் 'தமிழ் எங்கள் உயிர்' நிதியைத் தோற்றுவித்தார் (1957). முன்னாள் தமிழக முதல்வர் கு. காமராசர் உதவி களையும் பெற்றார்; நூலகம் அமைப்பதில் வெற்றி கண்டார்.[26] இந் நாட்டிலுள்ள தமிழ்நூலகங்களுள் மலாயாப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள நூலகமே மிகப் பெரியதாகும்.

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையில் தற்காலத் தமிழ் இலக்கியம், பக்தி இலக்கியம், இலக்கணம் ஆகியவை கற்பிக்கப் படுவதொடு தேசிய மொழியிலும் தமிழ் இலக்கியத்தைப்பற்றியும் தமிழர் பண்பாடு நாகரிகம் பற்றியும் கற்பிக்கப்படுகின்றன.[27]

மலாயாப், பல்கலைக்கழகத்தின் மொழி, மொழியியற்புலத்தில் தமிழ் மொழியில் இளங்கலைப் பட்டப்படிப்பும் 1998ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.[28]

இதன் மூலம் தமிழாசிரியர் பலர் பட்டதாரிகள் ஆயினர். மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையில் முதுகலை, முனைவர் பட்டங்கள் பெறவும் வாய்ப்புள்ளது. ஆனால் ஆய்வேட்டை மலாய் அல்லது ஆங்கில மொழியில்தான் அளிக்க வேண்டும்.

இத் துறையின் முதல் பேராசிரியர் முத்து இராசாக்கண்ணனார். தமிழகத்திலிருந்து வந்த அவரே துறையின் தலைவராகவும் விளங்கினார்.

அடுத்து இலங்கையிலிருந்து வந்த சேவியர் தனிநாயக அடிகள் தலைமை யேற்றார். துறையில் தமிழக, இலங்கைத் தமிழறிஞர் பலர் தொண்டாற்றி இதனை மேம்படுத்தினர். அவர்களைத் தொடர்ந்து உள்ளூர்க் கல்வி யாளர்களான இராம. சுப்பையா, ச.சிங்காரவேலு, தேவபூபதி நடராசா, க. திலகவதி ஆகியோர் துறையின் தலைவர்களாய்ப் பணியாற்றினர். இப்போதைய தலைவர் வே. சபாபதி.

இந்திய ஆய்வியல் துறையின் தனிச்சிறப்பு

இன்று தமிழாய்வுகள் உலகளாவிய முறையில் பல்வேறு கோணங் களில் நடந்துவருகின்றன. இதற்கு உறுதியாய் அடிப்படை போட்டதில் மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறைக்குத் தனியிடமுண்டு. சேவியர் தனிநாயக அடிகள் இத் துறையின் தலைவராய் இருந்த காலை அச் சிறப்பை ஏற்படுத்தினார். அவர் பொறுப்பில் 1966 (ஏப்பிரல் 16-23) ஆம் ஆண்டு இப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடே நெறிப்படி தமிழாய்வு தழைத் தோங்க வழிகாட்டிற்று.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழாய்வை ஊக்கப்படுத்தும் வண்ணம் 7.1.1964-ல் புது தில்லியில் (New Delhi) இந் நிறுவனம் அமைந்தது. இஃது அமைவதற்கு முயற்சி மேற்கொண்ட முன்னோடிகளில் குறிப்பிடத்தக்கவர் சேவியர் தனிநாயக அடிகளாவார். இதன் முதல் தலைவர் ஜேன் பியோசாட்.

இந் நவீன காலகட்டத்தில் புதிய ஐரோப்பிய மொழிகளுக்கு ஈடாகத் தமிழ்மொழியும் வளர வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு வருடமும் அனைத்துலக நிலையில் பல்கலைக்காகத் தமிழ்த் துறைத் தலைவர்கள் ஒன்று கூடிப் பாடப் பிரச்சினைகள், போதனை முறைகள் ஆய்வுநெறித் திட்டங்கள் போன்றவற்றை விவாதிக்க வேண்டும் என்னும் நோக்கங்களைக் கொண்டதாகும்.

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைத் தலைவ ராய் விளங்கிய சேவியர் தனிநாயக அடிகள், அந் நிறுவனத்தை இங்கு அமைத்து முதலாம் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்க மாநாட்டைக் கூட்டினார்(1966,ஏப்பிரல் 16-23). உலகெங்கு மிருந்து ஆராய்ச்சி அறிஞர்கள் ஒன்றுகூடி உலகளாவிய தமிழாய்வுக்குழுவுக்கு உறுதியான அடிப்படை போட்டனர். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அப்போது பதிவு பெறாததால் அமைச்சர் வெ.மாணிக்கவாசகம் தலைமையில் செயற் பட்டுக் கொண்டிருந்த தேசிய இந்தியக் கல்வி வளர்ச்சி நிறுவனத்தின்

(National Education Development Board) ஆதரவோடு மூத்த அமைச்சரும் ம.இ.கா. தேசியத் தலைவராய் விளங்கியவருமான வீ.தி. சம்பந்தன் தலைமையில் மாநாடு வெற்றிகரமாக நடந்தேறியது. மாநாட்டை அப்போதைய தலைமை அமைச்சரும், விடுதலைத் தந்தையுமான துங்கு அப்துல் ரகுமான் தொடங்கி வைத்தார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று அவர் தமிழிலேயே கூறியது உலகெங்கும் எதிரொலித்தது. தமிழ்ப் பண்பாட்டின் அடிநாதமான அதுவே, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளின் கொள்கை மொழியாக நிலைத்தது.

முதல் மாநாட்டையடுத்து 6ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ம.இ.கா. தேசியத் தலைவர் ச.சாமிவேலு தலைமையில் மலாயாப் பல்கலைக் கழகத்தில் நடந்தது (1987). எட்டாம் மாநாட்டிற்குப் பின் (1981) அது தொடரவில்லை. சென்னைத் தரமணியில் (பேரறிஞர்) அண்ணாவின் ஆணைப் படி (கலைஞர்) மு. கருணாநிதி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைத்தார். அதற்கு அடியெடுத்துக் கொடுப்பதுபோல் அமைந்தது மலாயாப் பல்கலைக்கழகத்தில் 1966-ல் நடந்த முதலாம் உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்க மாநாடென்பதில் மிகையில்லை.

பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை
பிற பல்கலைக்கழகங்களில் தமிழ்

மலேசியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் மலாயாப் பல்கலைக் கழத்தில் மட்டுமே தமிழ்த்துறை (இந்திய ஆய்வியல் துறை - Indian Studies) உள்ளது. வேறு சில பல்கலைக்கழகங்களில் வேற்றுமொழித் துறைகளில் அடிப்படைத் தமிழ் கற்பிக்கப்பெற்று வருகிறது. இவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது புத்ரா பல்கலைக்கழகம் (University Putra Malaysia). இங்கு மொழியியல் தொடர்புத்துறையின் (Jabatan Bahasa Moden dan Komunikasi) அயன்மொழிப் பிரிவில் (Jabatan Bahasa Asing) 1996ஆம் ஆண்டுமுதல் தமிழ் வகுப்புகள் நடந்துவருகின்றன. அங்குக் கற்பிக்கப் பெறும் 12 மொழிகளுள் தமிழும் ஒன்றாகும். இவ் வகுப்புகள் பருவத்திற்கு (Semester) ஒரு நிலை (Level) என மூன்று பருவங்களுக்கு நடத்தப்பெறுகின்றன. மூன்றாம் நிலையில் (பிறமொழியினர்) ஓரளவு பேசவும், சிறு நூல்களை வாசிக்கவும், வினாக்களுக்கு விடை யளிக்கவும், சிறு கட்டுரை எழுதவும் திறன் பெறுகின்றனர். இம் மாணவர் களுக்குத் தமிழ் அறிஞர்களுடனான கலந்துரையாடல்கள், பயிலரங்குகள், சமுதாயப் பணிகள் கல்விச் சுற்றுலாக்கள் போன்ற நிகழ்வுகள் நடத்தப் பெறுகின்றன.

இவ் வகுப்புகளில் மலாய், சீன, கடசான், இபான் மாணவர்களுடன் திராவிட, சீக்கிய மாணவர்களும் அடங்குவர். பள்ளித் தேர்வுகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்திராத மாணவரே இவ் வகுப்பில் சேரமுடியும். இப் பல்கலையின் விரிவுரைஞர் மு.பரமசிவம் தலைமைப் பொறுப்பேற்று வகுப்புகளைப் பயன்மிக்க நடவடிக்கைகளுடன் உயிர்ப்புடன் நடத்தி வருகிறார். அண்மையில் இவ் வகுப்புகளுக்கு மற்றொரு விரிவுரையாளராக மு.வீ. வீரமோகன் அமர்த்தம் பெற்றுள்ளார்.

மலேசிய புத்ரா பல்கலைக்கழகத்தையடுத்துச் சபாப் பல்கலைக் கழகத்திலும் (University Sabah Malaysia), பினாங்கு அறிவியல் பல்கலைக் கழகத்திலும் (University Sains Malaysia) அடிப்படைத் தமிழ்வகுப்பு நடைபெற்று வருகிறது. சுல்தான் இட்ரி;! கல்விப் பல்கலைக் கழகத்திலும் (UPSI) தமிழை ஒரு பாடமாக நடத்த எண்ணமிடப்பட்டு வருகிறது.

மலேசியப் பல்கலையில் தமிழ்

மலேசியத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்வகுப்பு நடைபெறவில்லை எனினும் 'இந்தியப் பிரதி நிதித்துவ சபை' என்னும் ஓர் அமைப்பின்வழித் தமிழ் - இந்திய மாணவர்கள் ஒன்று கூடி இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆறாண்டுகளுக்கு மேலாக இம் முயற்சி தொடர்ந்து வருகிறது. இவ்வமைப்பு மாணவர்களுக்குச் சிறுகதை, கவிதைப் போட்டிகள் நடத்தித் தேர்வுபெறும் படைப்புகளை நூலாக்கி வெளியிட்டு வருகிறது.

4. கலைத் திட்டங்களில் தமிழ்

மலேசியாவில் 1800ஆம் ஆண்டளவிலேயே தமிழ் திண்ணைப்பள்ளி அமைப்புப் போன்ற நிலைகளிலும், தனிப்பாட முறையில் வீடுகளிலும் பயிலப்பெற்று வந்துள்ளது. எனினும் அதற்கு ஒரு முறையான பாடத் திட்டவரை இல்லாமலேயே இருந்துவந்தது. சமய இயக்கங்கள், தோட்ட நிருவாகங்கள் தமிழ்ப்பள்ளிகளை நிறுவிய காலங்களிலும், அரசே தமிழ்ப்பள்ளிகள் அமைக்க முன்வந்த காலங்களிலும் வரையறுக்கப்பட்ட ஒரு பாடத்திட்டம் இருந்ததில்லை. கிடைக்கும் குறிப்புகளின்படி 1926, 1928, 1936, 1956 ஆம் ஆண்டுகளில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டன. எனினும் அவை ஒரு மொழிப் பாடத்திற்குரிய உயிரோட்டமானதாய் அமைய வில்லை. தமிழ் எழுத்துகளை அறிதல், சொற்களை, சொற்றொடர்களை அறிதல், சிறு கட்டுரை எழுதப் பயில்தல் என்பன போன்று சில வரிகளில் எழுதப்பட்ட சிறு குறிப்புகள் என்ற அளவிலேயே கலைத்திட்டங்கள் அமைந்திருந்தன.

விடுதலைக்குப் பின் 1965-ல் கல்வியமைச்சுத் தமிழ்ப் பாடத்திட்டம் என்ற பெயரில் இரண்டு மூன்று பக்க அளவில் ஒரு திட்டத்தை (ஆங்கிலத்தில்) வரைந்திருந்தது. தெளிவோ, விரிவான விளக்கமோ, மொழித்திறன்களை மையப்படுத்தியோ அது வரையப் பெறவில்லை. கல்வித்துறையில் விரைவான மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்த வேளையில், மொழியை விரிவாகக் கற்பிக்க முறையான கலைத்திட்டம் இல்லாத நிலையில், தன்னார்வ நிலையில் சிலர் முயற்சியால் குறிப்பாக, ஆ. சோதிநாதன் பேருழைப்பால் ஒரு கலைத்திட்டம் வகுக்கப்பெற்றது (சிலாங்கூர் மாநிலத்துக்கு). இத் திட்டம் நாடு தழுவிய அளவில் எல்லாப் பள்ளிகளிலும் ஒரே அமைப்பாக இல்லாமல், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருந்தது.

தமிழ்மொழிக்கு முறையான ஒரு கலைத்திட்டம் அமைய மலேசியக் கல்வியமைச்சு 1977ஆம் ஆண்டில்தான் திட்டமிட்டது. அதனைச் செயல் படுத்தக் கலைத்திட்ட மேம்பாட்டு மையத்தில் (CDC - Curriculum Development Centre) தமிழ்ப்பகுதி அமைந்தது. கலைத்திட்டம் உருவாக்கும் பணி முறையாகத் தொடங்கியது. அப் பணிக்குக் கோ. கிருஷ்ணபகவான் தலைமையில் திரு. எ. சகாதேவன், கோ. குமாரசாமி, (பின்னர்ச் சேர்ந்த) துரை. இராமசாமி ஆகியோரைக் கொண்ட வலிமையான குழு அமைந்தது.

அக் குழு பல்வேறு ஆய்வுகளை, கலந்துரையாடல்களை, கருத்தரங்குகளை நடத்திச் சமுதாயச் சூழலையும் கண்ணோட்டமிட்டு, எதிர்பார்ப்புகளை உள்வாங்கி நாட்டுச் சூழலுக்கு ஏற்ப ஓர் உயரிய கலைத்திட்டத்தை உருவாக்கியது.

தேசிய அலை

மேலே குறிப்பிடப்பட்ட அத் திட்டம் தமிழ்மொழிக்கு மட்டும் உரிய தாகும். அஃது உருவாகிக் கொண்டிருந்த நேரத்தில் தேசிய அளவில் பழைய பாடத்திட்டங்களைப் புதுப்பிக்கும் முயற்சியும் நடந்து வந்தது. 'KBSR' (Kurikulum Baru Sekolah Rendah) என்ற பெயரில் தொடக்கப்பள்ளி களுக்காக உருவான புதிய கலைத் (பாடத்) திட்டமே அது. தமிழ் மொழிக்கான பாடத்திட்டம்-கலைத்திட்டம் உருவாகிவிட்ட நிலையில், தேசிய நீரோட்டத்தோடு உருவான புதிய முறைகளை ஏற்பதா இல்லையா என்ற குழப்பம் நேர்ந்தது. நாட்டில் உள்ள அனைத்து மொழிப் பள்ளிகளும் ஒரு பொது நோக்கிலான கலைத்திட்டத்தைக் கொண்டிருப்பதே எல்லா வகையிலும் பொருத்தமும் பயனும் மிக்கதென உணர்ந்து, சீன, தமிழ்ப் பள்ளிகளும் புதிய முறைக்கு ஏற்பக் கலைத்திட்டத்தை வகுக்க இசைந்தன. அப்படி உருவானதே தமிழ்மொழிக்கான புதிய கலைத்திட்டமாகும்.

தொடக்கப் பள்ளிகளுக்காக உருவாக்கப் பெற்ற மேற்படி கலைத் திட்டம் 1982-ல் ஆய்வு முறையில் சில பள்ளிகளில் நடத்தப்பெற்றது; 1983-ல் எல்லாப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப் பெற்றது. திறன்களின் அடிப்படையில் அமைந்த அக் கலைத்திட்டம் மிகச் சிறந்த ஒன்றாகும். அக் கலைத்திட்டம் உருவாக, அப்பழுக்கற்ற உணர்வோடும் ஈடுபாட்டோடும் உழைத்த பெருமக்கள் சமுதாயத்தின் நன்றிக்குரியவர்கள். அவர்களுள், கலைத்திட்டம் உருப்பெற மூளையாக விளங்கிய எ. சகாதேவன் குறிப்பிடத்தக்கவர்.

தொடக்கத் தமிழ்ப்பள்ளிகளுக்குரிய ஒன்றுபடுத்தப்பெற்ற புதிய கலைத்திட்டம் உருவான பின்னர் இடைநிலைப் பள்ளிகளுக்கும் ஒருமைப் படுத்தப்பெற்ற புதிய கலைத்திட்டம் உருவானது. மேற்படி திட்டங்களில் தேவைக்கேற்ற மாறுதல்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. தொடக்க, இடைநிலைப் பள்ளிகளுக்குக் கலைத்திட்டம் அமைந்ததைத் தொடர்ந்து பாடநூல்களும் வெளிவந்தன. பாடநூல்கள் மாணவர்களுக்கு இலவசமாகவே வழங்கப்பெறுகின்றன.

பாடநூல்கள்

பாடநூல்கள் என்று பார்க்கும்பொழுது, ஒரு காலத்தில் தமிழகத்தி லிருந்தும் இலங்கையிலிருந்தும் வரவழைக்கப்பெற்ற நூல்களே இங்குப்

பயன்படுத்தப்பெற்றன. விடுதலைக்குப் பின் மாறுதல்களுக்கேற்ப உள்நாட்டிலேயே பாடநூல்கள் உருவாயின. கல்வி அமைச்சில் பணிபுரிந்த தமிழகத்தைச் சேர்ந்த தமிழறிஞர்களான இராமாநுச ஆச்சாரியார் (அறிவு விளக்க வாசகம்), மலாயாப் பல்கலையின் (பேராசிரியர்) முத்து இராசாக் கண்ணனார், (புலவர்) பா. அருணாசலம் (பைந்தமிழ் வாசகம்) ஆகியோர் உயரிய பாடநூல்களை எழுதித் தமிழுக்கு அணி சேர்த்தனர். அப் பெரு மக்களையொட்டி உள்ளூர் ஆசிரியர்களான இராமநாதன், சி. வேலுசுவாமி போன்றோர் பாடநூல் வரிசைகளை எழுதினர்.

புதிய பாடக் கலைத்திட்டம் நடைமுறைக்கு வந்தபின், கால வளர்ச்சிக்கேற்ப முற்றிலும் புதிய முறையில் பாடநூல்கள் உருவாகி வெளிவந்தன. பயிற்சி நூல்கள், வாசிப்புத் துணைநூல்கள் என்ற வகையிலும் நிரம்ப நூல்கள் இங்கு வெளிவந்தன. உமா பதிப்பகம் முதலான சில பதிப்பகங்கள் வெளியீட்டுத் துறையில் முனைந்து செயல்பட்டு வருகின்றன.

ஆர்வ மேலீட்டால் சில பதிப்பகங்கள் வெளியிட்ட நூல்களில் குறைகள் தென்பட்டன எனினும், தமிழக அறிஞர்களே வியந்து பாராட்டிய பாடநூல்களும் இங்கு வெளிப்போந்தன.

பாடநூல், பயிற்சிநூல், வாசிப்புத் துணைநூல்கள் உருவாக்கு வதிலும் கலையழகொடு பிழையறப் பதிப்பிப்பதிலும் ஆ. சோதிநாதனுக்குத் தனியானதோர் இடமுண்டு. தமிழறிஞருமான அவர் சிறந்த பதிப்பாசிரிய ராகவும் விளங்குவதால் அவரால் இத் துறைக்குப் பெருமை சேர்க்க முடிகிறது. புதியவர் சிலர் இத் துறைக்கு வந்து கொண்டிருப்பது மகிழ்ச்சி யளிக்கிறது.

இலக்கியப் பாடக் கலைத்திட்டம்

மலேசியக் கல்விச் சான்றிதழ் (SPM) என்று அழைக்கப்பெறும் 5ஆம் படிவத் தேர்வில், தமிழ் இலக்கியத்தையும் மாணவர்கள் ஒரு பாடமாகத் தெரிவு செய்யலாம். 4ஆம் படிவத்திலேயே அதற்குரிய பாடங்களைப் படிக்கத் தொடங்க வேண்டும். பள்ளியில் இப் பாடம் கற்பிக்கப் படுவதில்லை எனினும், தேர்வுக்குரிய கலைத்திட்டத்தை வகுத்துத் தந்துள்ளது மலேசியத் தேர்வு வாரியம். முன்பெல்லாம் முழுக்க முழுக்கத் தமிழகப் படைப்புகளே தெரிவு செய்யப்பட்டன. கடந்த பல ஆண்டு களாகக் கவிதைப் பகுதிக்கு மலேசியக் கவிஞர்களின் படைப்புகளே ஏற்கப் பெற்று வருகின்றன.

இலக்கியப் பாடத்திற்குப் புதிய நூல்கள்

2006ஆம் ஆண்டிற்கு (4ஆம் படிவத்திலிருந்து) புதிய இலக்கிய நூல்கள் தேர்வு செய்யப்பெற்றன. அவை 2010 வரை பயன்பாட்டில்

இருக்கும். அவற்றுள் 'உங்கள் குரல்' ஆசிரியரான சீனி நைனா முகம்மது தொகுத்த கவிதைப் 'பூங்கொத்து'[29] என்ற கவிதை நூலும் ஒன்றாகும். இதனில் மலேசியா, சிங்கப்பூர், தமிழகப் பாவலர்தம் படைப்புகள் அடங்கியுள்ளன. இஃது ஒரு மாறுதலாகும். பன்னாட்டுப் பாவலர் படைப்புகளைக் கற்கும்போது, பரந்து விரிந்துள்ள தமிழ் இலக்கிய உலகைப்பற்றி மாணவர் எண்ணமிட வாய்ப்பமையும். மற்ற நாடுகளும் இம் முறையைப் பின்பற்றினால் இலக்கியப் பரிமாற்றத்திற்கு வழிபிறக்கும்.

இங்கு இலக்கியப் பாடத்திற்குப் 'புதினம்,[30] நாடகம்'[31] ஆகிய இருநூல்களும் தமிழக நூல்களே. மலேசியாவில் புதினத்துறை வளர்ந்து வருவதால் உள்நாட்டுப் புதினம் ஒன்றனைப் பாடநூலாக வைத்திருக்க லாமே என்னும் மனக்குறை மலேசிய எழுத்தாளர்களுக்கு உண்டு. மலேசிய உயர்பள்ளிக் கல்விச் சான்றிதழ் இலக்கியத் தேர்வில் இரு மலேசியக் கவிதைகளொடு, பத்துச் சிறுகதைகளும் கலைத்திட்டத்தில் சேர்க்கப் பெற்றுள்ளன.

தொடக்கப் பள்ளிமுதல் பள்ளி இறுதி வகுப்பு (5 ஆம் படிவம்) வரை யிலுமான கலைத்திட்டத்தைக் கல்வியமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டுக் கழகம் உருவாக்கியுள்ளது. உயர்நிலைப் பள்ளிக்குரிய கலைத்திட்டத்தை மலாய்ப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை வகுத்துள்ளது; பாட நூலும் உருவாக்கி வெளியிட்டுள்ளது.

ஈண்டு இன்னொரு முகாமையான செய்தியையும் கூறுதல் வேண்டும். தற்பொழுது தேசியப்பள்ளிகளில், கூடுதல் மொழி கற்றல் என்னும் அடிப் படையில் (Bahasa Tambahan) தமிழ் அறிமுகப்படுத்தப்பெற்றுள்ளது. 70 பள்ளிகளில் நடப்பாக்கம் பெற்றுள்ளது. இதன் நோக்கங்களில் முதன்மையான ஒன்று மலாய்க்காரர் அல்லாத மாணவர்களைத் தேசியப் பள்ளிக்கு ஈர்ப்பதாகும். இதற்கான கலைத்திட்டம் வரையப்பெற்றுப் பாட நூலும் உருவாகி வருகிறது.

5. ஆசிரியர் தகுதி

ஒரு காலத்தில் கோயில் பூசாரிகளும், கண்காணிகளும், தோட்டக் கணக்கர்களும் (Kerani - கிராணி), ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்த தொழிலாளர்களும் தமிழ் சொல்லித் தருவோராய் இருந்த நிலை முன்பே சுட்டப்பெற்றது. போருக்கு முன்பும் பின்பும் நடந்த பயிற்றல் முறை வகுப்புகள் (Normal Training Classes) பற்றிய நிலைமைகளும் எடுத்துரைக்கப் பெற்றன. கால மாறுதல்களுக்கு ஏற்ப ஆசிரியர் தகுதியும் மேம்பட வழிகள் பிறந்தன. 1946ஆம் ஆண்டு தமிழ் ஏழாம் வகுப்புத் தொடங்கப் பெற்றது. இஃது ஈராண்டுக் கல்வியாகும். பின்னர் இஃது ஆசிரியர் ஆயத்தத் தேர்வு என்றானது. இவ் வகுப்பில் தேர்ச்சி பெற்றோர் பயிற்றல் முறை வகுப்பில் (Normal Training Classes) சேரும் தகுதியைப் பெற்றனர்.

நாட்டில் கல்வித்துறை வளர்ச்சியை நோக்கிச் செல்லச் செல்ல ஆசிரியர் தகுதியை உயர்த்தும் வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தியது. அது மூன்றாண்டுக் கல்வியாகும். ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க வார இறுதி வகுப்புகளை அரசு ஏற்படுத்தியது. பின்னர், கிழமை இறுதியில் நடத்தப் பெற்று வந்த பயிற்றல் முறை வகுப்புகள் நிறுத்தப்பட்டு முதன்மையான நகரங்களில் நாள் பயிற்சி மையங்கள் (Day Training Centre) தொடங்கப் பெற்றன (1960). தமிழாசிரியர்கள் கோலாலம்பூர் குவந்தான் சாலையில் அமைந்திருந்த நாள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்றுவிக்கப் பெற்றனர்.[32] இதனில் சேர்வதற்குரிய கல்வித்தகுதி 3ஆம் படிவக் கல்வியான கீழ்நிலைக் கல்விச் சான்றிதழ் (Lower Certificate of Education) என உயர்ந்தது. இது மூன்றாண்டு முழுநேரப் பயிற்சியாகும்.

ஆசிரியர் பயிற்சியில் சேர்வதற்கான கல்வித்தகுதி 1967ஆம் ஆண்டிற்குப் பின் மலேசியக் கல்விச் சான்றிதழான (Malaysian Certificate of Education) 5ஆம் படிவமாக உயர்ந்தது. பயிற்சிக் காலமும் ஈராண்டு களானது. தமிழாசிரியர்களுக்குப் பயிற்சியளித்து வந்த இக் கல்லூரி 1968 வரை செயற்பட்டது. மேற்படி கல்லூரி செயற்பட்டு வந்த காலத்திலேயே விடுமுறைக் கால ஆசிரியர் பயிற்சி வகுப்புத் தொடங்கப் பெற்றது (1967). அவ் வகுப்பில் 1979 வரை பயிற்சி ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப் பெற்றனர். 1981ஆம் ஆண்டுடன் விடுமுறைக்கால ஆசிரியர்

பயிற்சி வகுப்பு நிறுத்தப் பெற்றது. இவ் வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப் பெற்றவர் எல்லாரும் தற்காலிக ஆசிரியர்களாய்ப் பணியாற்றி அனுபவம் பெற்றவராவர்.

தமிழாசிரியர்களுக்கு விடுமுறைக்கால ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் நடந்துகொண்டிருந்த நேரத்தில் முழுநேர ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி களிலும் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப் பெற்றனர். நாடெங்கும் (1979 முதல்) நடந்து வந்த எட்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தமிழாசிரியர்கள் பயிற்றுவிக்கப்பெற்று வந்தனர்.

புதிய நூற்றாண்டில்

மலேசியாவில் கல்வித்தரம் உயர உயர ஆசிரியர்கள் தரமும் மேலோங்கக் கல்வி அமைச்சு வழிவகுத்தது. சிறு சிறு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மூடப்பட்டன. புதிய நூற்றாண்டின் வளர்ச்சிக்கேற்ப ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் பல்கலைக்கழகத் தரத்திற்கு (College University) உயர்த்தப்பெற்றன.

இப்பொழுது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் சேர விழை வோர் மலேசிய உயர்கல்விச் சான்றிதழான 6ஆம் படிவத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் ஆசிரியர் பயிற்றல் முறையுடன் கூடிய இளங்கலைப் பட்டமும் பெறுவர். இப்பொழுது ஆறு கல்லூரிகளில் தமிழாசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப் பெற்று வருகிறது. இப் பயிற்சியை அரசு இலவசமாகவே வழங்குவதொடு படிச்செலவும் (allowance) வழங்கு கிறதென்பது சிறப்பாகச் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும்.

தொடக்கப் பள்ளிகளுக்கும் பட்டதாரி ஆசிரியர்கள்

வளரும் நாடுகளில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை எய்தியுள்ள மலேசியா, கல்வி தொழில்நுட்ப வளர்ச்சியில் பெரும் நாட்டம் செலுத்தி வருகிறது. ஆசிரியர்கள் தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ள வாய்ப் பளித்துவரும் அஃது இன்னும் பத்தாண்டுகளில் தொடக்கப்பள்ளி களில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களும் பட்டதாரிகளாக விளங்க வேண்டுமெனவும் திட்டம் வகுத்துள்ளது. பட்டம் பெறாத ஆசிரியர்கள் படிப்படியாக அந் நிலையை எய்தத் தொலைநிலைக் கல்வி போன்ற திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலம் (Teachers Graduate Programme) பணியிலுள்ள ஆசிரியர்களைப் பல்கலைக் கழகத்தில் சேர்த்துப் பட்டதாரிகளாக்கி வருகிறது. இத் திட்டத்தில் தமிழாசிரியர்களும் பயனடைந்து வருகின்றனர்.

குறுகியகால ஆசிரியர் பயிற்சி

பட்டம் பெற்றவர்கள் 6ஆம் படிவம் (STPM) சான்றிதழில் தமிழ் மொழித் தேர்ச்சியும் பெற்றிருந்தால் பட்டத்திற்குப் பிந்திய பயிற்சித் திட்டத்தில் (Post Graduate Teachers Training / Kursus Perguruan Lepasan Izazah) ஓராண்டு பயின்று ஆசிரியராகலாம். இவர்கள் இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கலாம்.

தரம் உயர்ந்தது

ஒரு காலத்தில், குறைந்த சம்பளம் பெறுவோர் என்றும், கல்வித் தகுதி குறைந்தவர் என்றும் தமிழாசிரியர் குறைத்து மதிப்பிடப்பெற்றனர். அந் நிலை இப்போது இல்லாது ஒழிந்துவிட்டது. விடுதலைக்குப்பின் தமிழாசிரியர் நிலை படிப்படியாக உயர்ந்தது. இன்று அனைத்து மொழி ஆசிரியர்களும் ஒரே நிலையினர் என்னும் நன்னிலை மலர்ந்துள்ளது. அதே நேரத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தமிழ் பயிற்றல் வகுப்பில் கற்றுத் தேர்ந்தார், தமிழ்மொழியொடு மலாய், ஆங்கிலம் ஆகிய மற்ற மொழிப் பாடங்களையும் கற்பிக்கும் தகுதியைப் பெற்றுள்ளனர்; எந்த மொழிப் பள்ளிக்கும் சென்று பணியாற்றும் திறனைக் கொண்டுள்ளனர்; தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களில் சிலர் பட்டம் பெற்று, இடைநிலைப் பள்ளி களில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று ஆசிரியர்களில் எவரும் ஒரு மொழியில்மட்டும் தேர்ச்சி பெற்றவர் என்ற நிலை இல்லை. தமிழாசிரியர் என்றால் அவர் மலாய், ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் கற்பிக்கும் திறன்கொண்டவ ராவர். சீனமொழி ஆசிரியர் என்றால் அவர் சீனத்துடன் மலாய், ஆங்கிலம் கற்பிக்கும் ஆற்றலைக் கொண்டவராவர். மலாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர், ஆங்கிலமும் கற்பிக்கும் திறன் உடையவராவார்.

இன்று கற்பித்தல் முறைகள் அனைத்தும் ஆசிரியர்களுக்கு மலாய் மொழியிலேயே வழங்கப்பெறுகின்றன. தாய்மொழிகளான தமிழ், சீன மொழி ஆசிரியர்களுக்குக் கற்பித்தல் முறை அவ்வவ்மொழிகளில் வழங்கப் பெறுகிறது. தமிழாசிரியர் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் பயிற்றல் முறை ஆகிய மூன்று பாடங்களைமட்டும் தமிழில் கற்பர். இம் முறை 1970ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது.

கல்வித்தகுதி உயர்வு

இதுவரை தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பட்டயக் கல்வித்தகுதி பெற்றவர்களாக இருந்து வந்தனர். இனித் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும் பட்டதாரிகளாய் விளங்க வேண்டுமென்று அரசு திட்டம் வகுத்துள்ளது; அதற்குரிய பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. 2010ஆம் ஆண்டிற்குள்

5020 ஆசிரியர்கள் பட்டதாரிகள் ஆகவேண்டுமென்பது அரசின் எதிர் பார்ப்பாகும்.

உயர்நிலை எய்திவரும் தமிழாசிரியர்கள்

தங்களைக் கல்வியில் மேம்படுத்திக்கொண்டு வரும் தமிழாசிரியர்கள் இன்று உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் விரிவுரையாளர்களாகப் பணியாற்றுகின்றனர்; பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும் உயர்ந்துள்ளனர்; தமிழ்ப்பள்ளிகளின் மாநில, தேசிய அமைப்பாளர்களாகவும் கூட்டரசு கண்காணிப்பாளர்களாகவும் பலர் பணியாற்றுகின்றனர். கற்பித்தல் தொடர்புடைய பணிகளில் மட்டுமல்லாது, கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டுக் கழகம், புத்தகத் தேர்வுக் கழகம், தேர்வு வாரியம் போன்ற அமைச்சின் வெவ்வேறு பிரிவுகளிலும் அலுவல் புரிகின்றனர்.

வேறு அமைச்சில் பொறுப்புமிக்க பதவி

தமிழ்ப்பள்ளிகளில் தமிழாசிரியராய்ப் பணிபுரிந்தோர், கல்வித் தொடர்புடைய பதவிகளில் மட்டுமல்லாது, வேறு உயர்பதவியிலும் கால் பதித்துள்ள நிலையும் உண்டு. மலேசியப் பொதுப்பணித்துறை அமைச்சர் ச.சாமிவேலுவின் அணுக்கச் செயலாளராய் அலுவலாற்றும் ந. செல்லத்துரை முன்னாள் தமிழ்ப்பள்ளியின் ஆசிரியராயும், கல்வி அமைச்சில் கூட்டரசு கண்காணிப்பாளராயும் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியலில் தமிழாசிரியர்கள்

தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் அரசியல் துறையிலும் தங்கள் அடையாளங்களைப் பொறித்துள்ளனர். பேரா மாநிலத்தில் ஒரு தமிழ்ப் பள்ளியின் தலைமையாசிரியராய்ப் பணிபுரிந்த க. குமரன், அரசியலில் ஈடுபட்டுத் துணையமைச்சர் பதவிவரை உயர்ந்தவர். இன்று பேரா மாநிலச் சட்டமன்ற ஆட்சிப் பேரவையில் இடம்பெற்றுள்ள கோ. இராஜு, கெடா மாநிலச் சட்டமன்ற ஆட்சிப் பேரவையில் இடம்பெற்றுள்ள வி. சரவணன், நெகிரி செம்பிலான் மாநிலச் சட்டமன்ற ஆட்சிக் குழு உறுப்பினரான டி. இராஜகோபாலு, ஜோகூர் மாநிலச் சட்டமன்ற ஆட்சிக்குழு உறுப்பினர் கே.எஸ்.பாலகிருஷ்ணன், மலாக்கா மாநிலச் சட்டமன்ற ஆட்சிக்குழு உறுப்பினர் ஆர். இராகவன் ஆகியோர் தமிழாசிரியர்களாய்ப் பணியைத் தொடங்கிய பெருமக்களே. மேலும் சட்டமன்ற உறுப்பினர்களாய் உள்ள கணேசன், எம். இராமச்சந்திரன் ஆகியோரும் முன்னாள் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களே. மலேசிய இந்தியர் காங்கிரசுக்குத் தேசிய முன்னணியால் வழங்கப்பெற்றுள்ள 13 சட்டமன்ற இடங்களில் ஏழு இடங்களை அலங்கரிப்போர் முன்னாள் தமிழாசிரியர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

ஊராட்சி மன்றங்களில்

சட்டமன்ற, நாடாளுமன்றப் பதவிகளில் மட்டுமன்றி, ஊராட்சி, நகராட்சி மன்றங்களிலும் தமிழாசிரியர்கள் அமர்த்தம் பெற்றுள்ளனர். பகுதிநேர வகுப்புகளில் சேர்ந்து கற்று வழக்கறிஞர், வழக்குரைஞர் ஆனவரும் உளர். முன்னாள் கூட்டரசு கண்காணிப்பாளரான (Federal Inspectrate) வழக்கறிஞர் வ. முனியன் முதலாயோர் இதற்குச் சான்றாவர். தமிழாசிரியர் மதிப்புக் குறைந்தவர் என்றிருந்த நிலை முற்றிலும் களையப் பெற்று இன்று பல்வேறு உயர்பதவிகளிலும் ஆளும் பொறுப்பிலும் அமர்ந்து நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் புகழீட்டி வருகின்றனர் என்பது பெருமைமிக்க மாறுதலாகும்.

தமிழாசிரியர்களில் சிலர், பள்ளிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொள்வதினும், தங்களை அரசியலிலும், பிற வகைகளிலும் மேம்படுத்திக் கொள்வதிலேயே மிகுந்த நாட்டங்கொண்டு செயல்படுகின்றனர் என்னும் அவப்பெயர் இருந்துவந்தது. அந் நிலை படிப்படியாக மாறிவருகிறது. ஆசிரியர்கள் பலரின் கடும் உழைப்பு பள்ளிகளின் மேம்பாட்டிற்கு உதவி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அடைவுநிலைத் தேர்வுகளில் (6ஆம் வகுப்பு) மாணவர்கள் தேர்ச்சிபெற ஆசிரியர்கள் கொட்டும் உழைப்பு மதித்துப் போற்றுதற்குரியதாகும்.

6. தடைகளைத் தாண்டி வந்த தமிழ்ப்பள்ளிகள்

எத்தனையோ இடர்ப்பாடுகளை உள்ளடக்கிக்கொண்டு தமிழ்ப் பள்ளிகள் இன்று தலைநிமிர்ந்து வருவதனைக் காணும் பொழுது மகிழ்ச்சி ஏற்படவே செய்கிறது. ஆனால், அவை கடந்துவந்துள்ள வரலாற்றுப் பாதையை உற்றுநோக்கினால் கண்ணீரே மிகும். தொடக்கத்தில் ஆங்கிலேயர் தமிழ் இழிசினர் மொழியென்று இகழ்ந்ததாலும் தமிழ்ப் பள்ளிகளை அமைத்துத் தருவது தம் பொறுப்பன்று என்று புறக்கணித்த தாலும் காலூன்ற இடமின்றித் தத்தளித்தது. பட்டணங்களில் சமய இயக்கங் கள் நடத்திய பள்ளிகளிலும், தோட்ட நிருவாகத்தினர் பள்ளியென்ற பெயரில் நடத்திய தரமற்ற வகுப்புகளிலும் அழுத்தமாக இடம்பெற முடியாமல் இடருற்றது.

இந்திய அரசு அவ்வப்போது மேற்கொண்ட நடவடிக்கைகளினால் குற்றுயிரும் குலையுயிருமாய் நொண்டி நொண்டி நடந்தது; இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் இயக்கமின்றி முடங்கிக் கிடந்தது. போருக்குப் பின் அரசமைத்த ஆங்கிலேயர் கொண்ட மனமாற்றத்தினால் ஓரளவு காலூன்றத் தொடங்கியது எனினும், உயரிய நோக்கோ, முறையான கலைத்திட்டமோ இல்லாமையால் தரத்தோடு தலைநிமிர முடியாமல் காலத்தை ஓட்டிவந்தது.

விடுதலைக்குப் பின் இரசாக் கல்வித் திட்டத்தால் தமிழ்ப்பள்ளிகள் ஓரளவு புத்துயிர் பெற்றன. மலாய் ஆங்கில மொழிகளும் கற்பிக்கும் கூடங்களாய்ச் சற்று வலிவுபெறத் தொடங்கின. 1950 தொடங்கி அவ்வப் போது உருவான கல்வித் திட்டங்களாலும், சட்டங்களாலும் உருமாறிப் போகாமல் சீன இனத்தவர் போராட்டக் குரல்களின் கவசப் பின்னணி யோடு நிலைத்து வந்தன.

பயிரை மேய முனைந்த வேலிகள்

தொடக்ககாலம் முதல் விழுந்துவந்த பேரிடிகளைத் தாங்கியும், கடுமையாக வீசிய புயலில் சிக்கிச் சிதையாமலும், அடையாளத்தையே

மாற்றும் வண்ணம் பெருக்கெடுத்து வந்த கல்வித்திட்டங்கள் என்னும் வெள்ளத்தில் எதிர்நீச்சல் போட்டும் நிலைத்தன தமிழ்ப்பள்ளிகள். இவை முன்பே குறிப்பிடப்பட்டன. இங்ஙனம் புற இடர்களை வென்ற தமிழ்ப் பள்ளிகளுக்கு, வேலியே பயிரை மேயும் தன்மைபோன்று அகத்தே ஏற்பட்ட இடர்களையும் எதிர்கொள்ள வேண்டிய அவலங்களும் நேர்ந்தன. இருப்பினும், ஏதோ ஒரு நோக்கில் இடற நினைத்தோரை இடறி, எழுச்சி பெற்றன. 2003ஆம் ஆண்டுவரை தொடர்ந்த சொந்த இனத்தாக்குதல்கள் குறித்து ஈண்டுச் சற்று விளக்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

நாம் செய்வது நல்லதென்று மனச்சான்று ஒப்பினாலும் ஒரு முறைக்குப் பலமுறை பின்விளைவுகளைத் தொலைநோக்கோடு எண்ணிப் பார்த்துச் செயலில் இறங்குவதே அறிவுடைமையாகும். "தமிழர்கள் தலைநிமிர வேண்டும்; கல்வி வளம்பெற வேண்டும்; பொருளாதாரத்தில் மேம்பாடு காண வேண்டும்" என்று, மலாயாப் பல்கலைக்கழகத்தில் பேராசிரிய ராய்ப் பணிபுரிந்த (முனைவர்) இராம. சுப்பையா தலைமையிலமைந்த ஒரு குழு எண்ணமிட்டது. அந்த நிலை வந்தெய்தத் தடையாக இருப்பவை தமிழ்ப்பள்ளிகளே என்ற முடிவுக்கு அது வந்தது; "தேசியப்பள்ளி களில் தமிழ் ஒரு (கட்டாயப்) பாடம் என்ற அளவில் இருந்தால் போது" மென்ற முடிவெடுத்தது."தமிழ்ப்பள்ளிகள் தேசிய மயமானால் அனைத்து வசதிகளும் கொண்ட கல்விக் கோயில்களாய் அவை விளங்கும்; தமிழ்க் குழந்தைகள் தலைநிமிர்ந்து நின்று மேம்பட்டு விடலாம்"என்று அது கருதியது. மாநாடு கூட்டித் திட்டத்தை அறிவித்தது (1968)[33].

தாய்மொழிப் பற்றிலும், தாய்வழிப் பண்பாட்டிலும் பிடிப்புக்கொண்ட நடுத்தர வர்க்கத் தமிழ்நெஞ்சர் அத் திட்டத்தை எதிர்த்தனர்; ஊடகங்களும் தமிழ்ப்பள்ளிகள் அழிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை எதிர்த்தன; அப்போதைய ம.இ.கா. தேசியத் தலைவரும் மூத்த அமைச்சருமான வீ.தி. சம்பந்தன், அறிஞர்கள் (Intellectuals) கருத்துக்குச் செவிசாய்க்க வில்லை; அரசுக்குப் பரிந்துரைத்துத் தமிழ்ப்பள்ளிகளை உருமாற்றும் எண்ணம் கொள்ளவில்லை.

தேசியப் பள்ளிகளில் தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமாக்கி விடலாம் என்று எண்ணிய அறிஞர்களுக்கு அஃது இயலாத செயலென்றும், அங்குத் தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய அனைத்து வளங்களும் கிட்டு மென்றும் எண்ணியது தப்பென்றும் காலம் உணர்த்திற்று. கண்ணை விற்றுச் சித்திரம் வாங்க முயன்ற அந்தத் தற்கொலை முயற்சியைத் தடுத்து நிறுத்திய தமிழுள்ளங்கள் சமுதாயத்தின் நன்றிக்குரியவையாகும்.

தென்றல்போல எழுந்த மற்றொரு புயல்

மேலே கண்ட தமிழ்ப்பள்ளி ஒழிப்புத் திட்டத்தைச் சமுதாய இயக்கங்கள் ஒன்றிணைந்து முறியடித்த ஆறு ஆண்டுகள் கழித்து மற்றொரு புயல் எழுந்தது. தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.பி. நாராயணன் கூட்டிய மாநாட்டில் (1974) எழுந்த அப் புயல் இனிய இதமான தென்றல்போல வெளிப்பட்டது. "தமிழ்ப்பள்ளிகளில் மூன்றாம் வகுப்புவரை தமிழ் முதல்மொழியாய்-பயிற்றுமொழியாய் இருந்தால்போதும். பின்னர், தமிழ், ஆங்கில (மொழிப்) பாடங்களைத் தவிர்த்து மற்ற அனைத்துப் பாடங்களையும் தேசிய மொழியிலே கற்பிக்கலாம்" என்பது கூடிய மாநாட்டின் தீர்மானமாகும்.[34] தமிழ்ப்பள்ளி களில் நிலவும் குறைகள் அனைத்தையும் அகற்றிப் புதிய பொலிவுக்கு வழிவகுக்கும் என்பது போன்ற தோற்றத்தைக் கொண்ட இத் திட்டத்தை மலேசியத் திராவிடர் கழகத்தின் அப்போதைய தலைவராய் இருந்த கே.ஆர். இராமசாமி போன்ற சிலர் வரவேற்றனர். ஆனால், தமிழ்ப்பள்ளிகளை இயல்பான முறையில் அழிக்கவே இத் திட்டம் வழிவகுக்கும் என உணர்ந்த ஆ. சோதிநாதன் முதலாய கல்வியாளர்களும் இர.ந. வீரப்பன் முதலாய சமுதாய நலவிரும்பிகளும், கலை, பண்பாட்டு இயக்கங்களும், ஊடகங்களும் இதற்குப் பேரெதிர்ப்புத் தெரிவித்ததால் திட்டம் முடங்கியது. தலைமையில் தமிழ் இலக்கியக் கழகம் தமிழ் ஆர்வலர்களைக்கொண்ட மாநாடு கூட்டி மிகப் பெரிய எதிப்பலையை உருவாக்கிற்று என்பதும், அப்போதைய ம.இ.கா. தேசியத் தலைவரும், மூத்த அமைச்சருமான வெ. மாணிக்கவாசகம், தமிழ்ப்பள்ளிகளை உருமாற்ற வரைந்த திட்டத்தை ஏற்கவில்லை என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கனவாகும். கூரைஅகன்று குட்டிச் சுவராகவிருந்த தமிழ்ப்பள்ளிகள் மேற்படி புயலிலிருந்தும் தப்பின.

கோடரிக்காம்புகள்

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதற்கொப்பத் தமிழ்ப் பள்ளிகளுக்கு இடையூறுகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. அவ் விடையூறுகளும் வெளியிலிருந்து வரவில்லை. மரத்தில் உருவான காம்பே கோடரிக்குத் துணையாகி மரத்தை வெட்டிச் சாய்க்க வருவது போன்ற தொரு கொடுமையே அவ் விடையூறுகள்.

தொழுத கையுள் படை

"*தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்*
அழுதகண் ணீரும் அனைத்து" (*குறள். 828*)

வணங்குதற்குக் கூப்பி நிற்கும் கைகளுள்ளும் கொலை புரியும் கருவி மறைந்திருக்கும்; பகைவர் அழுது வடிக்கும் கண்ணீரும் அத் தன்மை கொண்டதே என்பது திருவள்ளுவர் கூற்றாகும். சமுதாய மேம்பாட்டிற்குத் தம்மையே ஈகம் செய்பவர் போலவும், தமிழ் வளர்ச்சியை உயிர்மூச்சாய்க் கொண்டவர்போலவும் பேசி, மக்கள் வாக்குகளைப் பெற்று ஆட்சியில் உயர்பதவி பெற்றவர், சொன்னவற்றுக்கு மாறுபட்டு விடுவதும் உண்டு. அப்பேர்ப்பட்டவர்களால் தமிழ்ப்பள்ளிகளுக்கு இங்கு நேரவிருந்த இழிவுகளைக் கூறாவிட்டால், தமிழ்ப்பள்ளிகளின் வரலாறு நிறைவு பெற்றதாகாது. ஆகையால் ஈண்டுச் சில தொட்டுக்காட்டப் பெறுகின்றன.

தமிழ்ப்பள்ளிகளை இழுத்து மூடிவிட வேண்டுமென்ற கொடிய உணர்வுகொண்ட சிலரால் 1990 தொடங்கி 2003 வரை பல தீய விளைவுகள் ஏற்படவிருந்தன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று நாடாளுமன்றம் சென்று உயர்பதவி பெற்றபின் ஒருவர் பழைய பல்லவியைப் (தமிழ்ப்பள்ளி களை மூடிவிட வேண்டுமென்ற) பாடத் தொடங்கினார். முன்னிலும் விழிப்புணர்வு பெற்றிருந்த சமுதாயம் அதற்குச் சரியான சாட்டையடி கொடுத்தது. இதழ்கள் எழுச்சிக் குரல் எழுப்பின. குறிப்பாக ‘மயில்’ கிழமை இதழ் ஆசிரியர் உரை (Editorial) மூலம் கடுமையாகச் சாடியது. பழையபடியே அக் குரல் அடங்கிற்று.

உடன்பிறந்தே ஒடுக்க வந்த நோய்

மேலே சொல்லப்பட்ட அழிப்பு முயற்சி தோல்வி கண்ட ஓராண்டிற்குப் பின் (1991) மற்றோர் இழிமொழி பரவி, சமுதாயத்தில் அளவு கடந்த எரிச்சலையும் கடும் சினத்தையும் மூட்டியது. இதுவும் வெளியிலிருந்து வரவில்லை. உடன்பிறந்தே கொல்லும் நோய்போலச் சொந்த இனத்திலிருந்தே பரவிய தொற்றுநோயே ஆகும்.

முன்பு கருத்துரைத்த யாரும், இழிமொழிகளைப் பெய்யவில்லை. சமுதாயத்தின் விரைவான முன்னேற்றத்திற்குத் தமிழ்ப்பள்ளிகளைத் (தமிழைக் கட்டாயப் பாடமாகக் கொண்ட) தேசியப் பள்ளிகளாக மாற்றலாம் என்று சொன்னார்களேயல்லாது தமிழ்ப்பள்ளிகளை இகழ்ந்து அவற்றில் கற்போரைத் தரம் தாழ்த்திக் கீழ்மைப்படுத்தவில்லை. ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று நாடாளுமன்ற உறுப்பினராய்ப் பதவி வகித்த ஒருவர், “தமிழ்ப்பள்ளிக்குச் சென்றவர்கள் அற்றைக் கூலிக ளாகவும், சிறைச்சாலைகளில் இருப்பதாகவும், நாட்டிலுள்ள தமிழ்ப் பள்ளிகள் அற்றைக் கூலிகளையே உற்பத்தி செய்யும் கல்விக்கூடம்”[35]

என்றும், சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் ஓர் ஆங்கில நாளிதழ் நேர் காணலில் மான உணர்வற்ற தன்மையில் இழிமொழிகளைக் கொட்டி யிருந்தார். இதற்கு முன்பைவிடப் பேரெதிர்ப்புகள் எழுந்தன. இம் முறை ஆசிரியர் சங்கங்களும் மிகக் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தன.

"ஓர் இனத்தின் அடையாளச் சின்னமான தமிழ்ப்பள்ளிகளைத் தரக்குறைவாக - அதுவும் உண்மைக்குப் புறம்பான செய்திகளுடன் விமரிசித்திருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். குலசேகரன் செயல் ஏற்புடையது அன்று"[36] என்று (மலாய், சீன, தமிழ் ஆசிரியர்களை உறுப்பினராய்க் கொண்ட) தேசிய ஆசிரியர் பணியாளர் சங்கத்தின் அப்போதைய பொதுச் செயலாளர் சிவசுப்பிரமணியம் சாடினார். தொடர்ந்து கருத்துரைத்த அவர், "தமிழ்ப்பள்ளிக்குச் சென்றவர்கள் அற்றைக் கூலி களாக, சிறைச்சாலைக் கைதிகளாக இருப்பதாகவும், நாட்டிலுள்ள தமிழ்ப் பள்ளிகள் அற்றைக் கூலிகளையே உற்பத்தி செய்யும் கல்விக்கூட மென்றும் அவர் வெளிநாட்டில் வழங்கியிருக்கும் பேட்டி, ஓர் இனத்தை இழிவுபடுத்துவதோடு தமிழ்ப்பள்ளிகளுக்கு எதிராக அவர் வழங்கியிருக்கும் செய்தி அர்த்தமற்ற, உண்மைக்குப் புறம்பான ஒன்று" என்றும் கூறிய சிவசுப்பிரமணியம், தமிழ்ப்பள்ளியில் தங்கள் கல்வியைத் தொடங்கிய வர்கள் இன்று, நாட்டில் மிகச் சிறந்த மருத்துவர்களாக, வழக்கறிஞர்களாக, பொறியியல் வல்லுநர்களாக, கல்விமான்களாக, பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணத்துவ அறிஞர்களாக - ஏன் அமைச்சர்களாகக்கூடச் சிறந்து விளங்குவதைக் குலசேகரன் போன்றோர் தெரியாமல் இருப்பது வியப்பாக இருக்கிறது" என்றார். மேலும்,

"தேசிய ஆசிரியர் பணியாளர் (N.U.T.P) சங்கம் நாட்டிலுள்ள தமிழ்ப்பள்ளிகள்மீது மேற்கொண்ட ஓர் ஆய்வின் மூலம் அப் பள்ளிகளுக்குச் செல்லும் இந்திய மாணவர் எண்ணிக்கை முன்பைவிட இப்பொழுது அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டுள்ளதொடு, நன்னெறிமிக்க மாணவர் சமுதாயக் கூடங்களாக அவை விளங்குவது உணரப்பட்டது"[37] என்றார்.

சற்றேறக் குறைய மேற்படி கருத்தையே மையமாகக் கொண்டு மலாயாத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தேசிய சங்கத்தின் அப்போதைய தேசியத் தலைவர் சாகுல் அமீதும் சாடினார். "இந் நாட்டில் இயங்கும் 523 தமிழ்ப் பள்ளிகளின்வழி மொழி, கலை, கலாசாரம் பாதுகாக்கப்பட்டு வருவது அனைவரும் தெரிந்த ஒன்றே. தேசியப் பள்ளிகளில் பயிலும் அனைவரும் பட்டதாரிகளாகிவிடுவதில்லை; அதேபோலத் தமிழ்ப்பள்ளிகளில் பயிலும் அனைவரும் லாரி டிரைவராவதில்லை. தமிழ்ப்பள்ளிகள் தொழிலாளர்களை

உருவாக்கும் கூடமென அவர் கூறியது மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும். மேலும் தமிழ்ப்பள்ளிகளையும், ஆசிரியர்களையும் அவமதிப்பதாகவும். சிறுமைப்படுத்துவதாகவும், தமிழாசிரியர்களின் திறன்மீதும், அர்ப்பணிப்புச் சேவைமீதும் களங்கத்தை உண்டுபண்ணும் நோக்கத்தோடு கூறியதாகும்"[38] என்று அவர் அறிக்கை வெளியிட்டார்.

மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையிலேயே அரசியல் தலைவர்கள், பொதுநல இயக்கத்தினர், கல்வியாளர்கள், தமிழ்ப்பள்ளிகளில் கற்று இன்று உயர்நிலையில் இருப்போர் போன்ற பலரும் உணர்ச்சி மேலீட்டோடு எதிர்ப்புக்குரல் எழுப்பித் தமிழ்ப்பள்ளிகளை இகழ்ந்தவரை உட்கார வைத்தனர். இதழ்களும் தமிழ்ச் சமுதாயத்தின் குரல்களை எடுத்துரைத்தன.

போர்வைக்குள்ளேயே எதிரி

2001ஆம் ஆண்டில் நடந்த மேற்படி நிகழ்வையடுத்து, போர்வைக் குள்ளேயே எதிரி (Musuh dalam Selimut) என்னும் மலாய்ப் பழமொழிக் கேற்ப மற்றோர் இழிவான நிகழ்வும் நடந்தது. தமிழர்களை மிகுதியான உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் அரசியல் கட்சியின் தேசியத் தலைவரும் துணையமைச்சருமான ஒருவர் தமிழ்ப்பள்ளிகள் அனைத்தையும் இழுத்து மூடவேண்டும் என்ற கருத்துக்கொண்ட அறிக்கையை வெளியிட்டார். சமுதாயத்தில் இது மிகப் பெரிய சீற்றத்தை ஏற்படுத்தியது. ஆளும் மூத்த கட்சிகளில் ஒன்றும், மலேசிய இந்தியர்தம் தாய் கட்சியுமான ம.இ.கா. பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தது. சமுதாய, சமயக் கல்வி இயக்கங்கள் கடுமையாகச் சாடின. இதழ்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தன.

இந்திய சமுதாயத்தின் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய இது போன்ற அறிக்கை, நெருப்புடன் விளையாடுவதற்கு ஒப்பான செயலாகும். ஓர் அரசியல் கட்சியின் தலைவர் என்னும் முறையில் 'கேவியஸ்' இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கக்கூடாது. தமிழ்ப்பள்ளிகளை மூடச் சொல்வதென்பது கேவியஸ் நினைப்பதுபோல் விளையாட்டான விஷயமன்று. தங்கள் தாய்மொழி மீதே கைவைக்கும் செயலை இந்தியச் சமூகம் சகித்துக் கொள்ளாது. தேன்கூட்டில் கைவைத்தால் என்ன நேருமோ, அதே கதிதான் ஒரு சமூகத்தின்மீது கைவைக்க நினைப்போர்க்கு ஏற்படும் என்று தமிழ்நேசன் ஆசிரியர் உரையில் (Editorial) கடுமையாகச் சாடி இருந்தது.[39]

வீ.தி. சம்பந்தனும், வெ. மாணிக்கவாசகமும் அமைதியாகச் செயற் பட்டுத் தமிழ்ப்பள்ளிகளுக்கு அரணாக நின்றனர். "பிள்ளைகளைத் தமிழ்ப்

பள்ளிக்கு அனுப்புங்கள்" என்று மேடைகளில் முழங்கிய ச.சாமிவேலு, தம் இயல்புக்கேற்ப எதிர்ப்பாளர்களை எதிர்க்குரல் எழுப்பி உட்கார வைத்தார்; மருட்டிப் பின்வாங்கச் செய்தார். எடுத்த எடுப்பிலேயே, "தமிழ்ப் பள்ளிகளை மூடச்சொல்லி வற்புறுத்தி வரும் நபர்களுக்கு எதிராகப் போலீசில் புகார் செய்யப்படும்"[40] என்று இனத்தின் உரிமையை, மொழியின் உயிர்ப்பை எடுத்துரைத்தார்.

இந்த நாட்டில் வாழும் ஏழை, எளிய இந்திய சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் அவர்களின் ஜீவநாடியான தமிழ்க்கல்வியின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் துணைநிற்க முன்வராதவர்கட்கு இந் நாட்டில் உள்ள அனைத்துத் தமிழ்ப்பள்ளிகளையும் இழுத்து மூடும்படிச் சொல்வதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை[41] என்று கூறினார்.

சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் அவர்களின் ஜீவநாடியான தமிழ்க் கல்வியின் மேம்பாட்டிற்கும் எந்த வகையிலும் உதவாத இவர்கள், தங்களின் கலாசார மரபுகளை முற்றிலும் மறந்துவிட்ட இவர்கள், அனைத்துத் தமிழ்ப்பள்ளிகளையும் இழுத்து மூடும்படிக் கூறுவது கண்டிக்கத் தக்க ஒன்று. சமுதாயம், ஒன்றுக்கும் உதவாத படித்த இந்திய அறிவாளிகளின் கூற்றினையும் ஆலோசனைகளையும் முற்றிலும் புறக்கணிக்க வேண்டும்[42] என்று உணர்ச்சி மேலிடச் சாடினார்.

இந் நாட்டிலுள்ள இந்திய சமுதாயம் தற்போது எந்த நிலையில் உள்ளது? அவர்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் யாவை? தமிழ்ப்பள்ளிகளின் நிலை என்ன? அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை? பலவீனங்கள் எவை? என்பனவற்றை முறையாக ஆராயாமல் எடுத்த எடுப்பிலேயே இந் நாட்டிலுள்ள அனைத்துத் தமிழ்ப் பள்ளிகளையும் இழுத்து மூடச்சொல்வது நெருப்புடன் விளையாடுவதற்கு ஒப்பாகும். இதனை மெத்தப் படித்த அறிஞர்கள், அறிவாளிகள் உணர வேண்டும். அவர்களின் கண்மூடித்தனமான கருத்தினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தால் அவர்களுக்கு எதிராகப் போலீசில் புகார் செய்வதைத் த்விர வேறு வழியில்லை"[43] என்று கூறினார்.

நம் நாடு ஜனநாயக நாடு. இங்கு எல்லாருக்கும் தங்கள் கருத்தினைக் கூற உரிமையுண்டு. அதே நேரத்தில் ஒரு மொழி, கல்வி, சமயம் போன்ற விவகாரங்களைப்பற்றிக் கேள்வி எழுப்புவதோ, அவைபற்றி விமர்சித்து இழிவுபடுத்துவதோ கடுமையான குற்றங்களாகக் கருதப்படும். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே போன்ற அதிமேதாவிகள் இந்

நாட்டிலுள்ள அனைத்துத் தமிழ்ப்பள்ளிகளையும் இழுத்து மூடும்படி அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்தனர். அப்போது, அவர்கள் செயல் அடக்கப்பட்டது. தற்போது மீண்டும் இலேசாகத் தலைகாட்டியுள்ளனர். தற்போது ஆங்கிலப் பத்திரிகைகளின் வாயிலாகத் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர். இவர்களின் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது.[44] இங்ஙனம் ச.சாமிவேலு 1996ஆம் ஆண்டே தெளிவாகவும், உறுதியாகவும் அறிவித்துவிட்டார்.

இடையிடையே அரைவேக்காட்டுத் தன்மையில் சிலர் எழுப்பும் குரல்களைச் சமுதாயம் பொருட்படுத்தாது உதறித்தள்ளி வளர்ச்சிப் பணிகளில் கருத்துச் செலுத்துகின்றது; தமிழ்ப்பள்ளிகளும் தலைநிமிர்ந்து வருகின்றன; தரத்திலும், கல்வித் தேர்ச்சியிலும் உயர்ந்து அரசே பொறாமைப் படும்படியான சூழல் உருவாகி வருகிறது.

7. வாழ்வும் தாய்மொழியும்

கல்வித்துறையில் தமிழுக்கு உலகில் தமிழர் குடியேறிய எந்த நாட்டிலும் கிட்டாத வாய்ப்பு மலேசியாவில் கிட்டியுள்ளது. ஆம். இங்குத் தமிழ் தொடக்கப் பள்ளிகளில் முதல்மொழியாக விளங்குகிறது; பயிற்று மொழியாகக் - கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பெறுகிறது. இங்குக் கிட்டியுள்ள இந்த அரிய வாய்ப்பைச் சொந்தமாகவே இழந்துவிட முந்தும் அடிமை மனக் கற்றுக்குட்டிகளை எண்ணும்போது மனம் அடையும் துன்பத்திற்கு அளவில்லை.

கட்டாயமின்றி விருப்பப்பாடம் என்னும் அளவில் இரண்டாம் / மூன்றாம் மொழி என்னும் முறையில் எழுத்துகளையும் சில சொற்களையும் கற்பிப்பதன் மூலம் தாய்மொழியின் முழுப்பயனையும் பெற்றுவிடலாம் என்று எண்ணுவோர், அதன் உள்ளார்ந்த உண்மைத் தன்மையை அறியாதவராவர். இனமென்னும் ஒப்பாய பெட்டகத்தின் திறவுகோலே தாய்மொழிதான். (வரைபடம் 2 காண்க.) அம் மொழியே ஒருவனை நிறைவுடைய மாந்தனாக்கும்.

"ஒரு மொழிப்பாடத்தைப் பயிற்றுவது, அம் மொழிக்குரியவர் பண்பாட்டின் அடிப்படையில் அல்லாமல் வெறும் எழுத்துகளையும், இலக்கண விதிகளையும் மட்டும் சார்ந்ததாய் அமையுமானால் அஃது உண்மையான மொழிக்கல்வி ஆகாது" என்பார் க.ப. அறவாணன்.

வேறொரு மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்ட ஒரு பள்ளியில் விருப்பப்பாடம் என்ற நிலையிலோ, மூன்றாம் மொழி என்ற நிலையிலோ தாய்மொழியை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர் அம் மொழியில் பெறும் தகுதிபற்றி இங்கு அறியாதவர் இலர். அஃது ஏனோ தானோ வென்று நடத்தப்பெறும் வகுப்பாகும். மிகப் பெரும்பான்மையான பள்ளிகளில் அஃது ஒரு கண்துடைப்பு நாடகமாகவே நடந்துவருகிறது. அதுகுறித்து யாருமே கவலை கொள்வதில்லை. அது தொடர்பாக ஆய்வு செய்து மேம்பாடு காணும் முயற்சியும் மேற்கொள்ளப்பெறுவதில்லை.



மொழி, பண்பாடு, வரலாறு,
மூன்றும் பிரிக்க முடியாதவை

வரைபடம்-2

தேசியத் தொடக்கப் பள்ளிகளிலும் மூன்றாம் வகுப்பிலிருந்து தாய்மொழி கற்பிக்கச் சட்டத்தில் இடமுண்டு. ஆனால், எத்தனை பள்ளிகளில் வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன? வகுப்புகள் பள்ளிகளில் பொறுப்போடு நடத்தப்படாததாலும், முறையான கண்காணிப்பு இல்லாத தாலும் அவ் வகுப்பால் மாணவர்களுக்குத் தரமான கல்வி கிட்டுவதில்லை. தமிழ்ப்பள்ளிகள் அழிந்து தேசியப் பள்ளிகளில் தாய்மொழிப் பாடம் என்னும் அளவில் தமிழ் சுருங்கினால், மிக விரைவில் காலம் அதனை விழுங்கி ஏப்பம் விட்டுவிடும். 'தமிழ்ப்பள்ளிகள் வேண்டா' என்போர் இதனை ஏன் எண்ண மறுக்கின்றனர் என்று தெரியவில்லை. ஒரு வேளை மலாக்காச் செட்டிகள் போல (தாய்மொழியைப் பல தலைமுறைகளுக்கு முன்பே இழந்தவர்), மொரீசியஸ், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் உள்ள தமிழர்போலத் தாய்மொழி மறந்த தமிழராய் ஆகிவிட எண்ணுகின்றனரோ என்னவோ தெரியவில்லை.

தமிழ்ப்பள்ளிகளின் தேர்வு முடிவுகளை (UPSR) உருப்பெருக்கி மூலம் மிக நுட்பமாகக் கண்டறிந்து தரங்குறைந்த மாணவர் பட்டியலை நீட்டும் ஆய்வாளர்கள், தேசியப் பள்ளிகளில் பயிலும் ஏழை இந்திய - தமிழ் மாணவர் கல்வித்தகுதியை ஆராய்வதில்லை; தரங்குறைந்த மாணவர் பட்டியலை நோக்குவதில்லை.

வளமான பின்னணி இல்லாத, கல்விச் சூழலற்ற குடும்பப் பின்னணி கொண்ட, தனிப்பாட வகுப்புகளுக்கு அனுப்ப வசதியற்ற, வறுமை சூழ்ந்த குடும்பத்துப் பிள்ளைகள் எங்குக் கற்றாலும் தரத்தில் குறைந்தே காணப் படுவர். இவற்றுக்கு மாறுபட்ட செல்வவளம் கொண்ட கல்விச் சூழலுடைய குடும்பத்துப் பிள்ளைகள் எந்த மொழிப்பள்ளியில் கற்றாலும் பாடத்தேர்ச்சி களில் மேம்பட்டே காணப்படுவர். இக் கருத்து உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. தமிழ்-இந்திய சமுதாயத்தின் நிலை படிப்படியாக உயர்ந்து வருவதால் தமிழ்ப்பள்ளிகளில் பயிலும் மாணவர் தரமும் உயர்ந்து வருகிறது. இந்த முன்னேற்றத் தளிர்முகம் தோன்றுவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே சமுதாய உணர்வுகொண்ட நன்னெஞ்சரால் ஊன்றப்பெற்ற எழுச்சி வித்தே காரணமாகும் என்பதனை மறந்துவிட முடியாது.

தமிழ்க்கல்வித்துறையில் அண்மைக்கால வளர்ச்சி

மலேசியாவில் தொடக்கப் பள்ளிகளுக்கான புதிய (ஒன்றுபடுத்தப் பெற்ற) கலைத்திட்டம் (KBSR) உருவாக்கப் பெற்று நடைமுறைக்கு வந்த பின்னரே (1982-83) தமிழ்ப்பள்ளிகள் புதிய ஒளிச்சுடரை நோக்கி நடைபோடத் தொடங்கின. ஒரு மொழிப்பாடத்திற்குரிய கேட்டல், பேச்சு,

வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களை முழுமையாக உள்ளடக்கிய அக் கலைத்திட்டம், தமிழ்ப்பள்ளிகளின் கற்றல் கற்பித்தல் துறையில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்திற்று. இது மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் வரலாற்றில் முற்றிலும் ஒரு புதிய திருப்பமாய் அமைந்தது.

தொடக்கத்தில் இப் புதிய கலைத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாய்க் கொள்ளப்பெற்றது, மாணவர் தேர்வுச் சுமையையும், பாட நூல்களின் சுமையையும் குறைக்க வேண்டுமென்பதாகும். காலப் போக்கில் ஆறாம் ஆண்டில் நடத்தப்பெறும் அடைவுநிலை மதிப்பீடும் (UPSR) அதன் தொடர்நிகழ்வுகளும் தேர்வுச் சுமையை மிக மிகக் கடுமையாக்கிவிட்டன.

புதிய கலைத்திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் வெற்றிகாணப் புறச்சூழலும் பிற வாய்ப்புகளும் மிகுந்திருந்த சீன மலாய்ப் பள்ளிகள் விரைந்து மேம்பாடு கண்டன. அகப்புறச் சூழல்கள் சரியாக அமையாத தமிழ்ப்பள்ளிகளால் மதிப்பீட்டின் எல்லையைத் தொட இயலவில்லை. அதனால் குறைத்து மதிப்பிடப்பட்டன.

தேர்வில் எத்தனை விழுக்காட்டு மாணவர்கள் 7A பெற்றனர் (தேசியப் பள்ளிகளில் தமிழ், சீன மொழிப் பாடங்கள் சேராமையால் 5 பாடங்கள்) என்பதனைக் கொண்டே பள்ளிகளின் தரம் மதிக்கப் பெறுகிறது. இத் துறையில் வளமான பின்னணியோடு இயங்கும் சீனப்பள்ளிகளும் முழு அரசு உதவியோடு இயங்கும் தேசியப் (மலாய்) பள்ளிகளும் உயர்ந்த நிலையிலிருந்தன. தமிழ்ப்பள்ளிகளின் தேர்ச்சி விழுக்காடு மிகமிகத் தாழ்ந்தே இருந்தது. தமிழ்ப் பள்ளிகளின் தேர்ச்சித் தரம் உயராமைக்குக் காரணங்கள் பலவாகும்.

* கல்வி நாட்டம் குறைந்த சமுதாயச் சூழல்,
* பிள்ளைகள் தனிப்பாடம் கற்க வசதியில்லாத பொருளாதாரச் சூழல்,
* போதிய அளவு பயிற்சி நூல்கள் வாங்க இயலாத வறுமைச்சூழல்,
* தன்முனைப்பற்ற விழிப்புணர்வில்லாத திரைப்பட நாட்டம் மிகுந்த குடும்பச்சூழல்,
* அரசின் முழு உதவி பெறாத பள்ளிகளின் சுற்றுச்சூழல்
* முழு உதவி பெறும் பெரும்பாலான பள்ளிகளிலும் காலத்திற் கேற்ற பாடத் துணைப்பொருள்கள் போதிய அளவு இல்லா அகச்சூழல்,
* பிள்ளைகளின் கல்வியில் முழு நாட்டம் கொண்டு அவர்களுக்கு ஊக்கம் நல்காத பெற்றோர் மனப்போக்கு,

* தமிழ்ப்பள்ளிகளைத் தாழ்வாக எண்ணிக் குறைத்தே எழுதியும் பேசியும் வரும் பிற்போக்கு எண்ணங் கொண்டோரின் நடவடிக்கைககள்,

* தமிழ்ப்பள்ளிகள்மேல் துளி அளவும் நம்பிக்கை கொள்ளாத மேட்டுக்குடியினரின் புறக்கணிப்பும் இழிமொழிகளும்,

என்பன போன்ற அனைத்துக் கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு (அன்று) நடைபோட்ட தமிழ்ப்பள்ளிகள், அனைத்து வளங்களும் தேவைக்கு மேலேயே பெற்றுத் திகழும் சீன, தேசியப் பள்ளிகளின் தரத்தை எட்ட முடியாமல் தடுமாறின.

தொடக்கப்பள்ளிகளின் அடைவுநிலைத் தேர்ச்சி என்பது ஒரு சமுதாயத்தின் மானத்தை மதிப்பிடும் துலாக்கோல் என்ற அளவுக்கு மிகக் க(கொ)டுமையானதாய் உள்ளது.

சீனப்பள்ளிகளுக்குச் செல்வந்தர் அள்ளித்தந்தனர். ஆசிரியர்களும் கடுமையாக உழைத்தனர்; பள்ளி முடிந்து பின்னேரத்திலும், விடுமுறைக் காலங்களிலும் தக்காரைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கினர். பள்ளி நிருவாகம் அவர்களுக்கு உரிய மதிப்பூதியத்தை வழங்கிற்று. செல்வவளங் கொண்டோர் வீட்டிற்கே ஆசிரியர்களை வரவழைத்து (Home tuition) மாணவர்களுக்குப் பயிற்சியளித்தனர். சமுதாயம் கல்வி வளர்ச்சியில், தாய்மொழி மேம்பாட்டில் மிகுந்த கருத்துச் செலுத்தியது. அதனால் அனைத்து வளங்களும் கொண்ட தேசியப் பள்ளி மாணவர்களை விட உயர்ந்த தேர்ச்சியைச் சீன மாணவர்கள் பெற்றனர்.

தேசியப் பள்ளிகளில் பயிலும் மலாய் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்குரிய வழிமுறைகளைக் கண்டறிய, புத்ரா உலக வாணிக மையத்தில் நடந்த கல்விக் கருத்தரங்கில் (2001), சீனப்பள்ளி மாணவர்களின் தேர்வு முடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன[45] என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

மேற்படி கருத்தரங்கில் மலாய், சீன மாணவர்களின் கல்வித் தேர்ச்சிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்த பேராசிரியர் இஸாக்ஹருண், 'சீன மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு,

1. குடும்பப் பொருளாதாரச் சுற்றுச் சூழல் (Socio Economic Background of Parent),

2. பெற்றோரின் கல்வித் தகுதி (Educational Background of Parent) ஆகியன பெரிதும் உதவின[46] என்றார் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

வழிகாட்டும் சீனப்பள்ளிகள்

பல்லினங்கள் கொண்ட ஒரு நாட்டில், தாய்மொழிப்பற்றுக் காரணமாகத் தமிழ்ப்பள்ளிகளை வைத்துக்கொண்டு முன்னேற முடியாது என்போர் சீனப்பள்ளிகளின் செம்மாந்த நிலையைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். தேசியப் பள்ளிகளிலும் உயர்ந்த தேர்ச்சி பெற்றுவரும் சீனப் பள்ளிகளின் தரநிலை உயர்வை அரசே வியந்து நோக்குகிறது. தேசியப் பள்ளிகளைவிடக் கல்வித்தரத்தை உயர்த்த, சீனக் கல்விமான்கள் மேற் கொள்ளும் அணுகுமுறைகளை ஆராய்கிறது. மேலும், சீனப்பள்ளிகளில் இன்று மலாய் மாணவரும் - இந்திய - தமிழ் மாணவரும் பயில்கின்றனர் என்பதனையும் எண்ணிப் பார்த்துத் தெளிதல் வேண்டும்.

மலாய், சீனப் பள்ளிகளுக்குத் தமிழ்மாணவர் செல்வது குறித்து, 'தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க்கல்வி" (1986) என்னும் நூலில் முனைவர் முருகரத்தினம் கூறிய கீழ்க்காணும் கருத்தை, சு.இராசாராம் தம் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

"மலேசிய நாட்டில் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் தமிழ் இல்லை என்று சொல்லிவிடலாம். தமிழ் மாணவர்கள் மலாயும் சீனமும் படிக்க இப்போது சென்றுவிடுகின்றனர். மலேசியாவில் உள்ள தமிழர் களுக்கு இது ஒரு பெருங் கவலை தரும் போக்காக அமைந்திருக்கிறது."[47]

சீனப்பள்ளிகளுக்குச் செல்லும் மலாய் மாணவர் எண்ணிக்கையைக் கொண்டு, எங்ஙனம் மலாய் மாணவர்கள் எல்லாரும் சீனப்பள்ளிகளை நோக்கிப் படையெடுத்துவிட்டனர் என்று கூறமுடியாதோ, அங்ஙனமே தமிழ்மாணவர் எல்லாரும் சீனப் பள்ளிகளை நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டனர் என்று கூறமுடியாது. தொடர்ந்து தமிழ்ப்பள்ளி களுக்குச் செல்லும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டேதான் வருகிறது; நடுத்தரக் குடும்பத்துப் பிள்ளைகளும் இப் பொழுது தமிழ்ப்பள்ளிகளில் தொடக்கக் கல்விபெறச் செல்கின்றனர் என்பதும் இதற்குச் சான்றாகும்.

'மலேசியாவால் முடியும்' என்ற கொள்கை உறுதி எல்லா மலேசியருக்கும் சொந்தமான எழுச்சிமொழி. 'தமிழ்ப்பள்ளிகளால் முடியும்' என்னும் கொள்கை உறுதியொடு நடவடிக்கைகளை மேற்கொண்டால் சீனப்பள்ளிகளின் தரநிலையை எட்டமுடியும்.

சீனத்தைப்போல்-அதனினும் பழமையான, அதிலும் புத்துலகப் பயன்பாட்டிற்கேற்ற செம்மொழி தமிழ். எல்லா வளங்களையும் அதன்வழிப்

பெறமுடியும். மொழியால் ஒரு தடையும் இல்லை. தமிழர் இந் நாட்டு உருவாக்கத்திற்குக் கொட்டிய உழைப்பிற்குரிய ஊதியம்போல், தமிழ் மொழியில் தொடக்கக் கல்வி பெறும் வாய்ப்பு அமைந்துள்ளது. அதனை இழந்துவிடாமல் போற்றிக் காத்துவந்தால் உயர்நிலை எய்துதற்குரிய அடித்தளத்தைப் பெறமுடியும். இந்த நம்பிக்கையோடு ஐம்பது விழுக்காட்டுத் தமிழ் - இந்திய இன மக்கள் இப்பொழுது 52% தமிழ்ப் பள்ளிக்கே தங்கள் பிள்ளைகளை அனுப்பிவருகின்றனர். இவ் வெண்ணிக்கை தொடர்ந்து கூடிக்கொண்டே வருகிறது என்பதும், பள்ளிகள் விரிவுகண்டு வருகின்றன என்பதும் புதிய பள்ளிகள் கட்ட அரசு, சைவு தர வேண்டு மென்னும் குரல்கள் ஓங்கி ஒலித்து வருவதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

8. வளர்ச்சியை நோக்கித் தமிழ்ப்பள்ளிகள்

அரசியல், சமுதாய, கல்வி, சமய இயக்கங்களின் நடவடிக்கைகளும், ஊடகங்களின் இடைவிடாத பரப்பியங்களும் சமுதாயத்தில் விழிப்புணர்வு அரும்பத் துணைபுரிந்தன; தாய்மொழிப் பற்று ஓங்க வழி வகுத்தன; கல்வியில் நாட்டம் ஏற்பட ஊக்கம் நல்கின. இப் பின்னணி தமிழ்ப் பள்ளிகளிகள் வளர்ச்சியை நோக்கி நடைபோட உதவிற்று; உதவி வருகின்றது.

செல்வந்தர் தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்கு உதவ முன்வந்தனர்; பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் மேற்கொண்ட துடிப்புமிக்க நடவடிக்கைகள், தலைமையாசிரியர் மன்றச் செயற்பாடுகள் பள்ளிகளின் வளர்ச்சிக்கு உரமிட்டன. அனைத்திற்கும் மேலாக உணர்வு மிக்க ஆசிரியர் களின் தொண்டும், கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளும் இங்குச் சிறப் பாகக் குறிப்பிடத் தக்கனவாகும்.

ஸ்ரீமுருகன் நிலையம் தனிப்பாட நிறுவனங்கள் போன்ற தொண்டூழிய அமைப்புகளின் வழிகாட்டி வகுப்புகள், கல்வி ஆர்வலர்களால் நடத்தப் பெறும் பயிலரங்குகள், ஊடகங்கள் தரும் ஊக்கம் போன்றவையும் தமிழ்ப் பள்ளிகள் அடைவுநிலைத் தேர்வுகளில் மேம்பாடு காணப் பேருதவி புரிந்து வருகின்றன. சமுதாய மேம்பாட்டில் மிகுந்த நாட்டமுடைய கல்வி, சமூக நல ஆய்வு நிறுவனம் (EWRF), சைல்டு (Child) எனப்படும் குழந்தைகள் நல வளர்ச்சி நிறுவனம், தமிழ்க் கல்வி அறவாரியம் போன்ற அமைப்புகளின் உயிர்ப்பு மிக்க நடவடிக்கைகளும் வளர்ச்சிக்கு உதவிவருகின்றன. இவை மட்டுமல்லாது ம.இ.கா. தேசியத் தலைவர் அமைச்சர் ச. சாமிவேலுவின் திட்டங்களும் அவர் தலைமையில் இயங்கும் மாஜு கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் (MIED) பயன்மிக்க நடவடிக்கைகளும் தமிழ்ப்பள்ளிகள் மேம்பாடு காண, ஆண்டுக்கு ஆண்டு தேர்ச்சி விழுக்காடு உயரப் பேருதவி புரிந்து வருகின்றன (பட்டியல்கள் - 3,4,5 காண்க).

அவ்வமைப்பு அண்மைக் காலமாக வெளியிட்டுவரும் அனைத்துத் தேர்வுப் பாடங்களுக்குக்கான பயற்சித் தொகுதிகள் பெரும்பயன் நல்கி வருகின்றன. 7A பெறும் மாணவர்களுக்கு அவ் வமைப்பு அளித்துவரும்

ANALYSIS OF UPSR RESULTS

Subject	School	Year											
		1975	1994	1995	1996	1997	1998	1999	2000	2001	2002	2003	2004	2005
Bahasa Malaysia Comprehension	National	-	83.1	81.1	85.9	87	87	87.5	88.6	88.2	89	90.3	90.4	
	Chinese	-	54.3	56.3	59.7	63.9	61	64.3	64.5	65.5	70.8	71.3	72.9	
	Tamil	18	44.8	49.4	47.2	46.5	45	44.5	43.7	54.6	59.3	60	58	59.6
	National	-	79.2	78.7	80.4	81.6	79	78.9	81	83.6	85.6	86.1	87.1	
Bahasa Malaysia Writing	Chinese	-	39.7	40.2	41.7	43.5	43	44.2	56.2	56.7	68.7	70.3	69.9	
	Tamil	18	26.9	26.9	24.3	31.3	32	24.9	39.2	40.1	51.7	57.6	56.3	56.6
	Nasional	-	64	67.9	74.5	75	78	76.2	75.2	76	82	82.7	81.9	
Mathmatic	Chinese	-	86.3	87.8	90	90.2	91	90	91.2	89.9	92.6	93.7	93.8	
	Tamil	44	58.1	59	65.3	65.8	67	70.9	73.9	74.4	81.1	85.8	84.4	83.3
	Nasional						76	74.3	77.5	77.6	80.7	82.2	82.6	
Science	Chinese						80	82.6	83.8	85.1	85.9	88.2	87.8	
	Tamil						67.2	66.7	73.9	82.5	74.7	78.6	79.2	80.9
	Nasional	-	54.5	52.4	53.6	54	55	56.9	56.7	58	63.4	66.1	65.7	
English	Chinese	-	64.4	61.3	66.9	70.3	64	62.8	63.2	62.2	71.7	68.9	69.9	
	Tamil	40	54.8	46.9	51.8	46.8	45	47.7	45.6	52.4	59.3	61.2	61.1	62.1
Tamil language Comprehension	Tamil	62	76.3	81.2	80.2	82.8	83	80.2	81.5	81.5	84.1	85.6	84.9	87.9
Tamil language Writing	Tamil	62	54.6	63.1	63.6	64.7	65	65.3	65.9	70.2	79.1	78	79.1	79.5
Chinese language Comprehension	Chinese	-	81	82.1	84.4	85.5	86	86.2	87.5	88.2	86.2	87.5	86.2	
Chinese language Writing	Chinese	-	73.9	81.4	83	83.3	84	83.7	84.5	86	87.1	88.5	87	

பட்டியல் - 7

1999ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை ஏழு பாடங்களிலும் `ஏ` பெற்றவர்கள் எண்ணிக்கை	
1999	45
2000	101
2001	165
2002	202
2003	356
2004	378
2005	516
2006	568

சான்று : கல்வி அமைச்சின் அறிக்கை

பட்டியல் - 8

தங்கப் பதக்கங்கள் பெரும் உந்துதலை ஏற்படுத்திவருகின்றன. அதனால் 7A பெறும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு மிகுந்து வருகிறது. அண்மைக் காலமாகத் தமிழ்ப்பள்ளிகளில் சேரும் மாணவர் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே வருகிறது. (பட்டியல்-1 காண்க)

பின்னடைவு

மேலே காணப்பெறும் மேம்பாட்டு ஒளி, அனைத்துப் பள்ளிகளிலும் ஊடுருவியுள்ளது என்று கூற முடியாது. மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட மாணவர் பயிலும் (பன்மை வகுப்புகள்) பள்ளிகள், இன்னும் கூட விடுதலை ஒளி முழுமையாகப் புகாத தோட்டப்புறப் பள்ளிகள் பல உள என்பதனையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். மேலும் அவை நிலைத்து நிற்கத்தக்க சூழலும் அருகிவருவது கவலைக்குரியதாகும்.

ஒரு காலத்தில் 888ஆக இருந்த தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை இப்பொழுது 525 ஆகச் சரிவு கண்டுள்ள நிலையில் மேலும் பல பள்ளிகள் இடரை எதிர்நோக்கிக் கொண்டிருப்பது துன்பம் தரும் நிலையாகும். தொடர்ந்து மேம்பாட்டுத் திட்டங்களுக்காகத் தோட்டங்கள் அழிக்கப் படுவதொடு சொந்த விருப்பத்தின் பேரில் நகர்நோக்கிக் குடிபெயர்வோர் தொகை மிகுந்து வருவதும் இந் நிலைக்குக் காரணங்களாகும்.

இருவகைச் சிக்கல்கள்

நகரங்களில், நகரையொட்டிய புறம்போக்குப் பகுதிகளில் மாணவர் எண்ணிக்கை உயர்வு காண்பதில் இருவகைச் சிக்கல்கள் தோன்றுகின்றன. ஒரு பகுதியில் மாணவர்தொகை எவ்வளவு பெருகினாலும் அங்குப் புதிதாக ஒரு தாய்மொழிப் பள்ளியைக் கட்டித்தரும் திட்டம் அரசுக்கு இல்லாமை, நகரப் பள்ளிகள் பலவற்றிலும் பெருகும் மாணவர்களுக்கு இடப் பற்றாக் குறை ஆகியன அச் சிக்கல்களாகும். இவை பெரும் இடையூறுகளாக உருவெடுத்து வருகின்றன.

முன்நிற்கும் கடப்பாடுகள்

மேம்பாட்டுத் திட்டங்கள் காரணமாக மக்கள் இடம்பெயர்வதால் நிலைப்பாட்டை இழக்கும் பள்ளிகளை அழியாமல் காத்தல், நகரங்களை நோக்கிக் குடிபெயர்வோர் பிள்ளைகளுக்குத் தாய்மொழிப் பள்ளிகளில் கற்க இடம் ஏற்படுத்தித் தருதல்; புதிய குடியேற்றப் பகுதிகளில் தாய் மொழிப் பள்ளிகளை உருவாக்குதல் போன்ற மாபெரும் கடமைகள் சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

காக்கும் முயற்சி

குறைந்த மாணவர் எண்ணிக்கை கொண்ட பள்ளிகளைக் காப்பாற்றும் முயற்சி நடந்தே வருகிறது. மிகச் சிறிய பள்ளிகளையும் அரசு அழிக்க எண்ணவில்லை. மேம்பாட்டாளர்களில் நன்மனங்கொண்ட சிலரும் உடைபடும் பள்ளிகளுக்கு மாற்று இடத்தில் கட்டடம் எழுப்பித்தருகின்றனர். புதிய பள்ளிகள் எழுப்புவதில்தான் சிக்கல்கள் உள்ளன.

அரியனவாக உள்ள வாய்ப்புகள்

புதிய தாய்மொழிப் பள்ளி ஒன்றனை உருவாக்க அரசு உரிமம் வழங்காது எனினும், அழிந்துவிட்ட பழைய பள்ளியின் உரிமத்தைக் கொண்டு புதிய ஒன்றனை உருவாக்கும் வாய்ப்பு உள்ளது. மேலும் மிகப் பெரிய பள்ளியை இரண்டாகப் பிரித்து இரண்டு பள்ளிகளாய் நடத்தவும்

வாய்ப்புண்டு. அவ் வாய்ப்புகளைப் பெறுவதென்பது கல்லில் நாருரிக்க முயல்வது போன்ற பணிகளாகும்.

தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்கு எண்ணியவற்றை நிறைவேற்ற எதிர் கொள்ள வேண்டிய தடைகள் பலவாகும். ஏனெனில், தமிழ்ப்பள்ளிகளில் மிகப் பல அரசு நிலத்திலோ, சொந்த நிலத்திலோ இல்லாமை; பள்ளிகள் அமைந்துள்ள நிலத்தை வாங்க இயலாத சூழலும் உள்ளது. மேலும் அந் நிலப்பகுதிகளை வாங்கவோ, காலத்திற்கேற்றமுறையில் புதிய கட்டடங்களை எழுப்பவோ சமுதாயத்திடம் பொருள்வளம் இல்லாமை போன்ற இடையூறு களும் உள்ளன. எல்லாவற்றுக்கும் ஒட்டுமொத்தமான தீர்வு பிறக்க வேண்டு மானால் அனைத்துத் தமிழ்ப்பள்ளிகளும் அரசின் முழு உதவி பெறும் பள்ளிகளாக மாற்றம் காணவேண்டும். அதனால்தான் ம.இ.கா.வும், சமுதாய இயக்கங்களும் நீண்ட காலமாக அந்த நிலையை எய்தப் போராடி வருகின்றன.

தலைவர் உறுதிமொழி

ம.இ.கா.வின் சமூக வியூக அறவாரியம் மேற்கொண்ட ஆய்வின்படி, நாட்டில் மூடப்படும் அபாய நிலையை எதிர்நோக்கியுள்ள 200 தமிழ்ப் பள்ளிகளை ம.இ.கா. காப்பாற்றும்[48] என்று, அதன் தேசியத் தலைவரும் பொதுப்பணித்துறை அமைச்சருமான ச.சாமிவேலு உறுதியளித்துள்ளார். மேம்பாட்டுத் திட்டங்களால் பாதிக்கப்படும் தமிழ்ப்பள்ளிகளுக்குப் பதிலாகத் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் புதிய தமிழ்ப்பள்ளிகளைக் கட்டுவதற்கு லைசன்ஸ் (உரிமம்) தரும்படி ம.இ.கா. அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும்[49] என்றார். மேலும் தமிழ்ப்பள்ளிகள் நலனில் ம.இ.கா. எப்போதும் அதிக அக்கறை செலுத்திவரும் என்ற அவர், தமிழ்ப்பள்ளிகள் மூடப்படுவதை ம.இ.கா. சும்மா பார்த்துக் கொண்டிராது[50] என்றார். இது சமுதாயத்திற்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் உறுதிமொழியாகும்.

தமிழ்ப் பள்ளிகளை மேம்படுத்துவதில் குறுக்கிடும் இடையூறுகள் பல. எனினும், அனைத்தையும் புறங்காணச் செய்யும் நோக்கொடு சமுதாயம் அவற்றின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தி வருகின்றது. அவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றன.

அண்மைக் காலத்தில் அரும்பிய இவ் வளர்ச்சி, இடையில் பேரிடர் ஏதும் நிகழாதிருக்குமானால், சொந்த இனத் தாக்குதல் தலைகாட்டா திருக்குமானால், அகப் புறச் சூழல் மேலும் வலுப்பெறுமானால் தொடர்ந்து மேலோங்கும் என்பதில் ஐயமின்று.

தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிநிலை மேலும் விரைவு கொள்ளச் செல்வர் பார்வை இன்னும் கூடுதலாகப் பரவ வேண்டும்; இயக்கங்களின், ஊடகங்களின் ஆதரவு மேலும் பெருக வேண்டும்; பெற்றோர், ஆசிரியர், மாணவர் ஆகிய அனைத்துத் தரப்பினரும் பேருழைப்பைக் கொட்ட வேண்டும். இக் கூட்டுமுயற்சி தொடர்ந்தால் தமிழ்ப்பள்ளிகள் பயன்மிக்க தலைமுறையை உருவாக்கும் பணியில் ஓங்கி ஒளிருமென்பது உறுதி.

2020-ல் தமிழ்ப்பள்ளிகள்

புதிய ஆர்வத்தொடு புத்தொளி நோக்கி வளர்ச்சி கண்டுவரும் தாய்மொழிப் (தமிழ், சீனம்) பள்ளிகளின் நிலை 2020ஆம் ஆண்டளவில் என்னவாகும் என்னும் வினாவிற்கு இன்னும் துல்லியமான விடை கிட்ட வில்லை. தாய்மொழிப் பள்ளிகளை எந்த நேரத்திலும் தேசியப் பள்ளிகளாக மாற்றும் அதிகாரத்தை அரசு கையில் வைத்துக்கொண்டே, “தாய்மொழிப் பள்ளிகள் நிலைக்கும்; அஞ்சத் தேவையில்லை” என்று சொல்லி வருகிறது. சட்டமென்னும் கழுதை எந்த நேரத்தில் என்ன செய்யுமென்று சொல்ல முடியாது என்னும் ஐயம்-அச்சம் இருந்துகொண்டே இருக்கிறது.

தாய்மொழிப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருவதை அரசு விரும்புவதாகத் தெரியவில்லை என்பதும் அவ்வப்போது வெளிப்பட்டே வருகிறது. தேசியத் தொடக்கப் (மலாய்) பள்ளிகளில் தாய்மொழிகளையும் (தமிழ், சீனம்) ஒரு பாடமாக நடத்த அண்மைக் காலமாக அரசு பெரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இது முன்பு எப்பொழுதும் மேற்கொள்ளாத கூடுதல் முயற்சியாகும். “தேசியப் பள்ளிகளில் தாய்மொழியும் ஒரு பாடமாக இருக்கும்போது தாய்மொழிப் பள்ளிகள் ஏன்?” என்னும் கேள்வி இதனால் எழலாமென்னும் ஐயப்பாடு எழவே செய்கிறது.

நம்பிக்கை

சமுதாயங்களின் நிகராளிகளாய் `ஆட்சிப் பொறுப்பில் உள்ள (இந்திய, சீன) தலைவர்கள் தாய்மொழிகள் குறித்து நம்பிக்கையான உரைகளையே நிகழ்த்தி வருகின்றனர். “அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்ட அறிக்கை தயாரானபின்னர் நாட்டிலுள்ள அனைத்துத் தமிழ்ப் பள்ளிகளும் அரசாங்கத்தின் முழு உதவிபெறும் பள்ளிகளாக (Bantuan Penuh) அந்தஸ்து உயர்த்தப்படும்”[51] என்று இந்திய-தமிழ் இனத் தலைவரும் பொதுப்பணி அமைச்சருமான ச.சாமிவேலு கூறியுள்ளார்.

நாட்டின் கல்விமுறையில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென்று கோரி, ம.இ.கா., ம.சீ.ச., கெராக்கான் ஆகிய மூன்று கட்சிகளும் பரிந்துரை ஒன்றனை அரசுக்கு அளித்தன என்றும், "பரிந்துரையைக் கவனமாகப் பரிசீலனை செய்து நடப்புக் கல்வி முறையை மறுசீரமைப்புச் செய்வ தற்கும் அரசாங்கம் ஒப்புதல் அளித்தது"[52] என்றும் கூறியுள்ளார். இஃது ஆளும் அரசியல் கட்சிகள் பலவற்றின் கோரிக்கை ஆதலாலும், சமுதாய இயக்கங்களின் ஒட்டுமொத்த தவிப்பாதலாலும் அரசு நல்ல முடிவெடுக்கும் என்னும் நம்பிக்கை தோன்றுகிறது.

இடைநிலைப் பள்ளிகளிலும் தாய்மொழி மேம்பட

இப்பொழுது சமுதாயத்தின் ஒட்டுமொத்தப் பார்வையும் (தொடக்கத்) தமிழ்ப்பள்ளிகளின் மேலேயே பதிந்துள்ளது. இடைநிலைப் பள்ளிகளில் தமிழின் நிலைகுறித்துப் பெரிதும் கருத்துச் செலுத்தப்பெறுவ தில்லை. சமுதாயத்தின் அழுத்தமான பார்வை அங்கும் விழுந்தால், தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையில் தமிழ் தடையின்றி வளர வாய்ப்பமையும். அறிக்கை அளவில், கோரிக்கை அளவில் மட்டும் தொண்டு செய்து கொண்டிருந்தால், தொடக்கப் பள்ளிக்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடைப்பட்ட நிலையில் தத்தளித்துத் தடுமாறிக் கொண் டிருக்கும் தமிழுக்கு வளமான வாழ்வளிக்க இயலாது. சமுதாயம் விழித்துச் செயலாற்றினால் விடிவுக்குத் தடையில்லை.

மலேசியக் கல்விக்கொள்கையும் தத்துவமும்

மலேசியக் கல்வி, மொழிக்கொள்கைகளும், கல்வித் தத்துவமும் மிக உயர்ந்தவை. கல்விக்கொள்கையில் மிக முதன்மையானது கட்டாயக் கல்வியாகும்.[53] அகவை யெய்தியதும் பெற்றோர் பிள்ளைகளைக் கட்டாயம் பள்ளிக்கு அனுப்புதல் வேண்டும். ஏழைமை நிலையில் உள்ளோர்க்கு அரசு உதவும்; பாடநூல்களை இலவயமாய் வழங்கும்; சத்துணவும் வழங்கும். குறைந்தது தொடக்கக் கல்வியாவது ஒவ்வொரு குடிமகனும் பெற்றிருக்க வேண்டும். பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்க்கு அரசு தண்டனை வழங்கும். அதனால், அனைத்து மலேசியரும் கல்விகற்கும் நிலை உருவாகி வருகிறது.[53]

மொழிக்கொள்கை

கல்வி பெறும் வாயிலான மொழிவகையிலும் மலேசிய அரசுக்குப் பரந்த கொள்கையுண்டு. நாட்டின் தேசிய மொழியாக மலாய்மொழி அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பெற்றிருக்கிறது. ஆங்கிலம் இரண்டாம்

மொழி என்னும் நிலையில் உள்ளது. இவற்றையடுத்து மலேசியா பல்லினங்கள் கொண்ட நாடு என்பதால் முதன்மையான பல்லினங்களின் மொழிகளும் இங்குப் பயிற்றுமொழிகள் (தொடக்கப் பள்ளிகளில்) என்னும் முறையில் ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ளன. அதனால் சீனம், தமிழ், ஈபான், கடசான் ஆகிய மொழிகளைப் பயிற்றுமொழிகளாய்க் கொண்ட தொடக்கப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றின் வளர்ச்சிக்கு அரசு உதவி வருகிறது. இது வேறெந்த நாட்டிலும் இல்லாத ஓர் உயரிய மொழிக் கொள்கையாகும். அரசு அலுவலகங்கள், மாநிலச் சட்டமன்றங்கள், நாடாளுமன்றம் ஆகியவற்றில் தேசிய மொழியான மலாய்மொழியே ஆளும் மொழியாக உள்ளது என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வித் தத்துவம்

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி" (குறள். 391) என்றார் திருவள்ளுவர். எல்லாவற்றுக்கும் அடிப்படை கல்வியே என்பதாலும், எதனாலும் அதனைப் பறிக்க இயலாது என்பதனாலும் கல்வியைச் 'கேடு இல் விழுச்செல்வம்' என்றார். பொதுவாக எழுதவும் படிக்கவும் தெரிந்துகொள்வது கல்வி ஆகிவிட்டது. அஃது ஆழமானது; மிகமிக ஆழமானது.

கல்வி கற்பதென்பது கிளிப்பிள்ளைப் பாடம் போன்றதன்று. நுண் மாண் நுழைபுலம் மிக்கவனாய் ஒருவன் உருப்பெறத் துணைநிற்பது. வாழ்நாளெல்லாம் கற்றுக்கொண்டே இருக்க வேண்டுவது. அதனை ஐயந்திரிபற நிறைவுறக் கற்க வேண்டும். அப்பொழுதுதான் அது பயனுடைய ஒன்றாக அமைய முடியும். இதன் விரிவாக்கமாய் அமைந்துள்ளதுதான் கீழ்க்காணும் தேசியக் கல்வித் தத்துவம் (National Education Philosophy - Falsafah Pendidikan Negara).

"மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் என்னும் அடிப்படையில், அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனி மனிதனின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர்முயற்சியாகும். முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுச் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டுக்கும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டது".[53]

கல்வி குறித்த மேற்கண்ட விளக்கம், விவேகானந்தர் கருத்தை அடியொற்றியதாக அமைந்துள்ளது; அது வருமாறு:

கல்வி என்றால் என்ன? புத்தகங்களைப் படிப்பதா? பல்வேறு பொருள் களைப் பற்றிய பலவிதமான அறிவா? இல்லை. எத்தகு பயிற்சி மனவுறுதி யின் வேகமும் அதன் வெளிப்பாடும் இயல்பும் குறிப்பிட்ட கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அப் பயிற்சியே கல்வி யாகும். அஃதாவது ஒரு மாந்தனை முழுமையுடையவனாக்குவதே உண்மையான கல்வி என்பது இதன் திரண்ட பொருளாகும். ஒருவனை முழுநிறை மாந்தனாக்குவதில் தாய்மொழிக்கு அளப்பரிய பங்குண்டு என்பதனையும் இதன் உள்ளடக்கமாய்க் கொள்ளுதல் வேண்டும்.

மலேசியத் தமிழினமும் எத்தனையோ தடைகளை வென்று இன்னும் தொடரும் இடையூறுகளை எதிர்கொண்டு, உறுதியோடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. தாய்மொழியைக் கலை, பண்பாட்டுச் செல்வங் களைக் காத்துக் கொள்வதற்குரிய பயிற்சிக் களமாகத் தமிழ்ப்பள்ளிகளை மேம்படுத்துவதிலும் உயர்கல்வி பெற்று மற்ற இனத்தவருடன் உயர்வுநிலை காணக் கல்வியில் மேம்பாடடைந்து கொண்டிருக்கிறது.

அண்மைக் காலமாக 3,5,6ஆம் படிவத் தேர்வுகளிலும் வியக்கத்தக்க அளவு இந்திய-தமிழ் மாணவர்கள் வெற்றி கண்டு வருகின்றனர். தமிழ்ப்பள்ளிகளிலிருந்து மேற்கல்வி பெறச் செல்லும் மாணவர் தேர்ச்சி நிலையும் ஓங்கி வருகிறது. பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் இந்திய-தமிழ் மாணவர்களில் ஐம்பது விழுக்காட்டளவினர் தமிழ்ப்பள்ளிகளில் கல்வியைத் தொடங்கியவராவர். இப்போதைய நிலை, தகுதியுடைய மாணவர் அனைவருக்கும் பல்கலைக்கழகங்களில் இடம் கிட்டுவதில்லை என்பதே ஆகும்.

தாய்மொழிப் பள்ளிகளால் நாட்டிற்கு எவ்வகை இடையூறுகளும் இல்லை. தொடக்கக் கல்வியைத் தாய்மொழியில் பெறுவதே இயற்கை யானது; ஏற்புடையது என்று ஒருலக அவையே (United Nation) எடுத் துரைக்கிறது. ஒவ்வொருவருக்கும் தாய்மொழி முதன்மையானது என்று நாட்டின் தலைமையமைச்சர் அப்துல்லா படாவியும் கருத்துரைத்துள்ளார். இக் கூற்றுகளுக்கேற்ற முறையிலேயே இந் நாட்டுக் கல்வித்திட்டம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தெளிவும், கட்டொழுங்கும் நாட்டுப்பற்றும் ஒருமைப்பாட்டுணர்வும் மிக்க நற்குடி மக்களை உருவாக்குவதில், தாய்மொழிப் பள்ளிகள் எவ்வகை யிலும் பின்னடையவில்லை. பல்லினங் கொண்ட ஒரு நாட்டிற்கு ஏற்ற

கல்விமுறை இதுதான் என்று உலகிற்கு அறிவித்து மலேசியா வெற்றி நடைபோட வேண்டுமென்பதே பரந்த மனங்கொண்ட கல்விமான்களின் அவாவாகும்.

சான்றெண் விளக்கம்

1. பி. இராமசாமி, மலேசியத் தோட்டத் தொழிலாளர் வாழ்வும் போராட்டங்களும், செம்பருத்திப் பதிப்பகம், 1999, கோலாலம்பூர், ப. 21
2. T. Marimuthu, Tamil School Problems and Prospects, p.19
3. ம. மன்னர்மன்னன், சி. சந்திரசேகரன், செம்பருத்தி திங்களிதழ், செப்டம்பர் 1998, கோலாலம்பூர், ப. 6
4. Wong, F.H.K. & Gwee, Y.H., Perspectives, The Development of Education in Malaysia and Singapore, Heinemann, 1972 p. 10
5. கோ. சுப்பிரமணியம் கட்டுரை மலேசியாவில் தமிழ்க்கல்வி / பரிமாணமும் சவால்களும், ஆய்வுக்கட்டுரை ப.5. (Cheah Boon Kheng (2001), Early Modern History (1800 - 1940) The Encyclopaedia of Malaysia, Archplagea Press K.L. pp.118-119)
6. T. Marimuthu
7. மேலது, ப.6
8. பி.எஸ். வெங்கிடேசன், 6ஆம் உலகத் தமிழ் மாநாட்டு (மலேசியா) மலர், 1987, ப. 199
9. T. Marimuthu
10. மேலது, ப.8
11. சோ. சுப்பிரமணி, மலேசியாவில் தமிழ்க்கல்வி - பரிணாமமும் சவால்களும், (ஆய்வுக் கட்டுரை) ப.7
12. கோ. கிருஷ்ணபகவான், 6ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் (1987) படித்த கட்டுரை
13. பி.எஸ். வெங்கிடேசன், 6ஆம் உலகத் தமிழ் மாநாட்டு (மலேசியா) மலர், 1987, ப. 199
14. சோ. சுப்பிரமணி ப.915.
15. கா.ஆறுமுகம் ப. 3(56) செம்பருத்தி, மார்ச்சு 2001, ப.56

16. கா. ஆறுமுகம், செம்பருத்தி மாத இதழ், ஏப்ரல் 2001
17. கா. ஆறுமுகம், செம்பருத்தி, ஜுன் 2001
18. மேலது, ஜுன் 2001
19. (அம்னோ உதவித் தலைவர்) டான்ஸ்ரீ முஹியீன் யாசின், தமிழ்நேசன் பிப்பிரவரி 7, 2003, ப.5
20. டோங் ஜியாங் சோங் (Dong Jia Zong) வெளியிட்ட அறிக்கை (தமிழாக்கம் செய்தவர் திருமாவளவன்) நாள் குறிக்கப்பெறவில்லை.
21. சோ. சுப்பிரமணி, மலேசியாவில் தமிழ்க்கல்வி - பரிணாமமும் சவால்களும் (2004) கட்டுரை ப. 16
22. முரசு. நெடுமாறன், தமிழ் இலக்கியக் கழகம், தமிழ்க்கல்வி வளர்ச்சி 6ஆம் ஆய்வரங்க மலர்.
23. சோ. சுப்பிரமணி, மலேசியாவில் தமிழ்க்கல்வி - பரிணாமமும் சவால்களும், கட்டுரை (2004), ப.16
24. மலேசியாவில் தமிழ் என்னும் தலைப்பில் 24.4.1972-ல் மலாயாப் பல்கலைக் கழகத்தில் நடந்த கருத்தரங்கில், மலேசியத் தமிழ்க்கல்விச் சூழலில் இந்தியத் துறையின் பங்கு என்னும் தலைப்பில் முனைவர் ச.சிங்காரவேலு வழங்கிய கட்டுரை
25. சோ. சுப்பிரமணி, மலேசியாவில் தமிழ்க்கல்வி - பரிணாமமும் சவால் களும் - கட்டுரை (2004) ப.20
26. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், ப.97
27. சோ. சுப்பிரமணி, மலேசியாவில் தமிழ்க் கல்வி - பரிணாமமும் சவால் களும் கட்டுரை (2004) ப.20, 21
28. மேலது
29. உங்கள் குரல் வெளியீடு (2005), பினாங்கு
30. நா. பார்த்தசாரதி, 'பொன் விலங்கு' தமிழ்ப் புத்தகாலயம் (2002), சென்னை
31. இரா. பழனிசாமி, காவியநாயகி
32. சோ. சுப்பிரமணி
33. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள் மதியம் பதிப்பகம், கிள்ளான் 1997, ப.91
34. மேலது

35. தமிழ்நேசன் நாளிதழ், 7.4.2001
36. மேலது
37. மேலது
38. மேலது
39. மேலது, 7.4.2003
40. மலேசிய நண்பன் நாளிதழ், 11.3.1996
41. மேலது
42. மேலது
43. மேலது
44. மேலது
45. செம்பருத்தி, அக்டோபர் 2001, ப. 46
46. மேலது
47. சு. இராசாராம் (1991), மொரீசியஸ் தமிழுரும் தமிழும், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், ப.557
48. தமிழ்நேசன் 30.10.200
49. மேலது
50. மேலது
51. தமிழ்நேசன் 18.4.2001
52. மேலது
53. கல்வி அமைச்சு வெளியிட்ட கல்வித் தத்துவ விளக்கம்

9. ஊடகங்களில் தமிழ்

இதழ்களில் தமிழ்

பத்திரிகைப் பெண்ணே!

"காரிருள் அகத்தில் நல்ல
　　கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணில்
　　பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்டை இந்த
　　உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சில்
　　பிறந்தபத் திரிகைப் பெண்ணே!"

என்று இதழை ஒரு பெண்ணாக உருவகப்படுத்திப் பாடினார் பாரதிதாசன். காரிருள் அகத்தின் கதிரொளியாக விளங்குகிறது இதழ் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது. உலகம் நொடிதோறும் நொடிதோறும் தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது. அந்த மாற்றத்தினை அவ்வப்போது எடுத்துரைத்து அகத்தில் பழைய இருள் படிந்துவிடாமல் ஒளி கொடுத்துக் கொண்டே இருப்பது நாளிதழ்களும், கிழமை இதழ், முத்திங்கள் இதழ் என்பன போன்ற பருவ இதழ்களுமாகும். இலக்கியம், சமுதாயம், அறிவியல் போன்ற துறைகளின் அவ்வப்போதைய மாற்றங்களை எடுத்துரைக்கும் ஒளி விளக்குகளாக இதழ்கள் ஒளிர்கின்றன. நூல்களை ஓவியம் என்றால் இதழ்களைத் தொடர் இயங்குபடம் எனலாம்.

ஊடகங்களிலேயே மூத்தது இதழே ஆகும். பின்னரே வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்றவை பிறந்தன. எனினும் இன்றும் இதழ்த்துறை அழுத்தமான தனிச்சிறப்போடு திகழ்ந்து வருகிறது.

இதழ்களின் தோற்றம்

அச்சேறி வெளிவந்த முதல் தமிழ் இதழ் 1812ஆம் ஆண்டில் வெளி வந்த மாசத் தினச் சரிதை என்றும் அதனை நடத்தியவர் ஞானப்பிரகாசம் என்றும் கூறுகிறார் அ.ம. சாமி.[1] மேலும் அவர் கூறுகையில் `தமிழ்கூறு

நல்லுலகம்` என்று எடுத்துக்கொண்டால் 1802-லேயே தமிழ் இதழ் அச்சுக் கண்டுவிட்டது. அந்த ஆண்டில் இலங்கை அரசிதழ் வெளிவந்தது. அதில் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகள் இடம்பெற்றன. தமிழ்ப் பகுதிக்கு அரசாங்க வர்த்தமானி என்று பெயரிட்டு இருந்தார்கள். அதற்குப் பத்தாண்டு கழித்துத்தானே `மாதத் தினச் சரிதை` வெளிவந்திருக்கிறது[2] என்கிறார்.

சிங்கப்பூர் இணைந்த அன்றைய மலாயாவில் 1875ஆம் ஆண்டில் சிங்கை வர்த்தமானி (வர்த்தமானி - செய்தி) கிழமை இதழ் வெளிவந்தது. இதுவரையில் கிடைத்த சான்றுகளின்படி இதுவே இங்குத் தோன்றிய முதல் தமிழ் இதழாகும்[3]. இதன் ஆசிரியர் திரு. சிகு மகதூம் சாயபு (சிகு - Cikgu) என்பது மலாய்ச்சொல் - தமிழில் இதற்கு ஆசிரியர் என்று பொருள்.

இந்த முதல் இதழை அடுத்துத் தங்கைநேசன்(1878), சிங்கைநேசன் (1887), உலகநேசன்(1887), இந்துநேசன் (1888), தேஜோபிமானி (1896), பினாங்கு வர்த்தமானி (1897) போன்ற இதழ்கள் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வெளிவந்த தமிழ் இதழ்களாகும்[4].

இவை, பரவலாகத் தோட்டப்புற மக்களிடையே பரவி, சிந்தனையைத் தூண்டி, ஏழைத் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திவிடவில்லை. மிகுதியான படிகளும் அச்சிடப்படவில்லை. 150, 200 படிகள் என்ற அளவில் அச்சேறிக் குறிப்பிட்ட பகுதியினரிடையே உலவியவை ஆகும். ஆனால், இந் நாட்டில் தொடக்க காலத்தில் படைப்பிலக்கியங்கள் தோன்ற இவை தூண்டுகோலாய் விளங்கியுள்ளன. பட்டணப் பகுதியில் வாழ்ந்த கல்வியறிவு பெற்ற மக்களிடையே புரிதலுணர்வையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்து வதில் இவை பெரும் பங்காற்றியுள்ளன.

புலம்பெயர்ந்து வாழ்வு தேடவந்த இடத்தில் தொடக்க காலத்திலேயே தமிழ் உணர்வும், இலக்கிய வேட்கையும், பொதுநல எண்ணமும் கொண்டு ஏதுக்கள் குறைந்த நிலையிலும் இதழ் நடத்திய அப்பேருள்ளங்களின் பணி, போற்றத் தக்கதாகும்.

அடுத்த (கடந்த) நூற்றாண்டின் இதழ்களைக் கண்ணோட்ட மிடும்போது வியக்காமல் இருக்க முடியவில்லை. ஒருசில நாளிதழ்களைத் தவிர மற்றவையெல்லாம் சிற்றிதழ்களே.

கடந்த நூற்றாண்டின் முதல் இதழாக வெளிவந்த பெருமையைப் பேரா வர்த்தமானி (1905) பெறுகிறது. இராம. சுப்பையாவின் தமிழ் மலேசியானா (Tamil Malaysiana) நூலின் பட்டியல்படி பார்க்கும்போது 1905 முதல் 1940 வரை 55 இதழ்கள் வெளிவந்துள்ளன. 1941 முதல் 1945 வரை (இரண்டாம் உலகப் போர்க் காலம்) 20 இதழ்கள்வரை

வெளிவந்துள்ளன. 1946 தொடங்கி 1956 வரை வெளிவந்துள்ள இதழ்களின் எண்ணிக்கை 53. விடுதலைக்கு (1957-க்கு)ப்பின் 1967 வரை 117 இதழ்கள் வெளிவந்துள்ளன. (சில இதழ்கள் வெளிவந்த ஆண்டு குறிக்கப் பெறவில்லை.) இப்பொழுது (2005 இறுதிவரை) 20 இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள் பல புதிய இதழ்கள் ஆகும். 1967-க்குப் பின் 1999 வரையுள்ள 32 ஆண்டுகளில் குறைந்தது 30 இதழ்களுக்கு மேல் வந்திருக்கலாம் என்று கணக்கிட்டால் 20ஆம் நூற்றாண்டில் (சற்றேறக் குறைய) 300 இதழ்கள் வெளிப்போந்திருக்கலாம். புலம் பெயர்ந்த சிறுபான்மைத் தமிழர் வாழும் ஒரு நாட்டில் 100 ஆண்டுக் காலத்தில் 300 இதழ்கள் வெளிவந்திருப்பது வியப்புக்குரிய செய்தியே.

தமிழ்நேசன்

மலேசியத் தமிழ் இதழகளின் 130 ஆண்டுக்கால வரலாற்றில் வெளிவந்த இதழ்களின் பட்டியல் நீண்டதெனினும் தொண்டாற்றி மறைந்த, நீள நிலைத்துத் தொண்டாற்றிக்கொண்டிருக்கும் நிலைக்கும் சில இதழ்கள்பற்றிக் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவற்றுள் ஈரிதழ்கள் பெருஞ் சிறப்பிற்குரியன. அவ்விரு இதழ்களில் ஒன்று தமிழ்நேசன்.

1923-ல் கிழமை இதழாய்த் தொடங்கி மிக விரைந்து நாளிதழான இது, இன்று உலகத் தமிழ் நாளிதழ்களில் நீண்ட காலமாக (82 ஆண்டுகளாக) இடைவிடாது தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் மூத்த நாளிதழாகும். இதற்கு நீண்ட வரலாறுண்டு. இதன் முதல் ஆசிரியர் நரசிம்ம ஐயங்கார்[5]. முன்னோடி எழுத்தாளர் பெருமக்களான கே.சி. அருண், ஆதி. நாகப்பன், கு. அழகிரிசாமி, முருகு. சுப்பிரமணியன், விவேகானந்தன் போன்றோர் ஆசிரியர்களாய் இருந்து வழிநடத்தினர். இப்போதைய ஆசிரியர் எம்.எஸ். மலையாண்டி, ஞாயிற்றுப் பதிப்பாசிரியர் ப. சந்திரகாந்தம். தலைமை நிருவாக இயக்குநர் இந்திராணி சாமிவேலு.

இது சமுதாய, கலை, இலக்கிய வளர்ச்சிக்குத் தொடர்ந்து அருந் தொண்டாற்றி வருகிறது. சமய, ஆன்மிக வளர்ச்சிக்கும் உதவி வருகிறது. எழுத்துத்துறை வளர்ச்சிக்கு இஃது ஆற்றிய பணி குறிப்பிடத் தக்கதாகும். 1950ஆம் ஆண்டு கந்தசாமி வாத்தியாரும் (சுப. நாராயணன்), வானம்பாடியாரும் (பைரோஜி நாராயணன்) தொடங்கிய கதை வகுப்பு (ஞாயிற்றுப் பதிப்பில்) மிகப் பெரிய நல் விளைவுகளை ஏற்படுத்திற்று. பல புதிய எழுத்தாளர்கள் இதன் மூலம் உருவாயினர். கு. அழகிரிசாமி ஆசிரியர் பொறுப்பேற்றிருந்த காலத்தில் இலக்கிய வட்டத்தின் மூலம் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து இலக்கியப் பயிலரங்குகள் நடத்தினார். சிறுகதையின் உத்தி, நடை, கருத்து அமைப்புப் போன்றவை குறித்துப் பயிலரங்குகளில் - கருத்தரங்குகளில் ஆராயப் பெறும். ஆய்வுக்கு வந்த கவிதைகள் தேர்ந்

தெடுக்கப்பெற்று நேசன் ஞாயிற்றுப் பதிப்பில் வெளியிடப்பெறும். இஃது எழுதுவோர்க்கு ஊக்கம் சேர்த்த பணியாகும்.

தமிழகத்தில் 'பொன்னி' இதழை நடத்தியவரும் சிங்கப்பூரில் 'தமிழ்முரசி'ன் துணையாசிரியராகப் பணியாற்றியவருமான முருகு. சுப்பிரமணியன் 'தமிழ்நேசன்' ஆசிரியர் பொறுப்பேற்றதும் பல மாறுதல் களைச் செய்தார். சமுதாய வளர்ச்சிக்குப் பயனுடைய கருத்துகளை ஆசிரியர் உரையில் எழுதியதோடு, இலக்கிய வளர்ச்சிக்கு முதன்மை தந்தார். 1972-ல் தமிழ்நேசனில் பவுன் பரிசுத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. மாதம் ஒரு சிறு கதையைத் தேர்ந்தெடுத்துத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. பின்னர்க் கவிதைக்கும் வழங்கப்பட்டது. இது படைப் பிலக்கியத் துறைக்குப் பெரும் உந்துதலைத் தந்தது. சிறிது காலத்திற்குப் பின் இது நிறுத்தப்பட்டது.

இவ்விதழ் திங்கட்கிழமைதோறும் (1963 முதல்) சிறுவர் அரங்கம் பகுதியை வெளியிட்டு வருகிறது. முன்பு தனி இதழாகவே நேசனுடன் இணைந்து வெளிவந்தது; இப்பொழுது ஒரு பக்க அளவில் மட்டும் வந்து கொண்டிருக்கிறது. பெயரும் 'மாணவர் பூங்கா' என மாற்றம் கண்டது.

தொடக்ககாலம் முதல் ஒரு சீராக நடந்துவரும் இவ்வேடு புரட்சி கரமான கருத்துகளுக்கு இடமளிக்காவிட்டாலும் சமுதாய உணர்வு சார்ந்த கருத்துகளை வெளியிடத் தயங்குவதில்லை. சமுதாயத் தேவைகளைத், தோட்டத் தொழிலாளர் தொடர்பான சிக்கல்களை எழுதிக்காட்டத் தவறுவ தில்லை. தமிழுக்கு, தமிழ்ப்பள்ளிகளுக்கு ஊறுவிளையும் சூழல் ஏற்பட்டால் துணிந்து எதிர்க்கத் தயங்கியதில்லை. தமிழ்ப்பள்ளிகள் வேண்டா; தேசியப் பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாக இடம்பெற்றால் போதுமென்று சிலர் குரல் எழுப்பி மாநாடு கூட்டியபோது (1960கள்) அதனை எதிர்த்துத் தமிழ்ப்பள்ளிகள் நிலைக்க வேண்டுமென்று போராடியதில் இவ் விதழுக்குப் பெரும் பங்குண்டு. அப்பொழுது தமிழ்ப்பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கத் 'தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி' என்ற பெயரில் பொருளீட்டி ஓர் அறக்கட்டளை அமைத்தது. அதன்மூலம் முன்பு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன.

எழுத்தாளர்களை ஊக்குவிக்க இப்பொழுது மாதந்தோறும் சிறுகதைப் போட்டி நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குத் தங்கப் பதக்கம் பரிசு வழங்கி வருகிறது. இவ் விதழ் சிங்கப்பூர்க் குடியரசுக்கும் செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்முரசு

இந் நாட்டு இதழியல் துறையில் நீண்ட வாழ்வுபெற்று இன்றும் நடந்துவரும் மற்றோர் இதழ் தமிழ்முரசு. 1935-ல் கிழமை இதழாய்த்

தொடங்கி விரைந்து நாளிதழானது[6]. சிங்கப்பூர்த் தனிக்குடியரசாகும் வரை (1965) இரு நாடுகளிலும் வலம் வந்த இது, பின் சிங்கப்பூரில் மட்டும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இங்குத் தோன்றிய இதழ்களில் இது தனிச்சிறப்புப் பெற்ற இதழாகும். இஃது இங்குச் சீர்திருத்தச் சிந்தனைகளைத் தூண்டி மறுமலர்ச்சிக்கு வழிகோலி ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய நாளேடாகும். (தந்தை பெரியார்) ஈவெ.ரா.வின் கருத்துகள் இங்குள்ளவர்களை எட்டிக் குமுகாயத்தில் மாறுதல்கள் ஏற்படத் துணிவுடன் தொண்டாற்றிய நாளிதழ் இது. பேராற்றல் வாய்ந்த எழுத்தாளராகவும், சமுதாய நலன்களைக் குறிக்கோளாய்க் கொண்ட கொள்கை மறவராகவும் ஈவெ.ரா.வின் சீர்திருத்தக் கருத்துகளில் தோய்ந்தவ ராகவும் தமிழ் நெஞ்சராகவும் திகழ்ந்த கோ. சாரங்கபாணி இதன் ஆசிரியராய் அமர்ந்து தம் இறுதிக் காலம்வரை (16.3.1974) வழிநடத்தினார்.

85 விழுக்காடு வறுமை வாய்ப்பட்ட தோட்டத் தொழிலாளர்களாகவும், உரிமை உணர்வு அற்றவர்களாகவும், பட்டணப் பகுதியில் வாழ்ந்தோரிலும் மிகப் பலர் தன்முனைப்பற்று, எழுச்சி எண்ணமின்றிக் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்த நிலையில், இவ் விதழ் தமிழ்முரசு மூலம் புரட்சிக்கு வித் திட்டுப் புதிய சமுதாயம் காண முற்பட்டுப் பேரளவு வெற்றி கண்டார்.

கல்வியில் நாட்டமின்றி, தாய்மொழிப் பற்றின்றி, கலை, பண்பாட்டு உணர்வின்றித் தம் அடையாளத்தை மறந்து கிடந்த தமிழரைத் தட்டி எழுப்ப அவர் ஏற்படுத்திய `தமிழர் திருநாள்` உரிய பயனை நல்க, பட்டிதொட்டி எங்கும் தமிழர் திருநாள் கொண்டாடப்படத் தமிழ்முரசு களமாய் விளங்கியது. தமிழகத்திலிருந்தும், இலங்கையிலிருந்தும் தமிழர் திருநாளில் உரையாற்ற வந்த பேராசிரியர்கள் தனிநாயக அடிகள், அ.சிதம்பரநாதன், கா.அப்துல் கபூர், சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன், (தமிழறிஞர்) கி.ஆ.பெ.விசுவநாதம் போன்ற பெருமக்கள் தம் உரைமணிகளை எல்லாம் தமிழ்முரசு பக்கம் பக்கமாக வெளியிட்டதன் மூலம் இங்குத் தமிழ் உணர்வு நிறைந்து பரவ வழிவகுத்தது.

மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழை ஒழித்து வடமொழிக்கு அரியணை தரவேண்டுமென்று நீலகண்ட சாஸ்திரி இங்குவந்து மேற்கொண்ட முயற்சியை முறியடிக்க, கோ.சா. தமிழ்முரசு மூலம் நடத்திய போராட்டம் வரலாற்றில் அழுத்தமுடன் நிலைபெற்ற பதிவாகும். `தமிழ் எங்கள் உயிர்` நிதிமூலம் பொருள் திரட்டி இந்திய ஆய்வியல் துறையில் தமிழ் நிலைக் கவும், தமிழ் நூலகம் உருவாக்கவும் தமிழ்முரசு மூலம் கோ.சா. ஆற்றிய தொண்டே இன்றும் தமிழுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. சிங்கப்பூரில் இன்று தமிழ் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக விளங்கு வதற்குக் கோ.சா.வும், தமிழ்முரசுமே மூலகாரணம் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இங்குத் தமிழ் எழுத்தாளர் உருவாகவும், தமிழ் இலக்கியம் தழைக்கவும், தமிழ்முரசு ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும். 1952ஆம் ஆண்டு இவ் விதழ் தொடங்கிய எழுத்தாளர் பேரவை, இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தது; கதை, கவிதை, கட்டுரை, நாடகம் எழுதத் தூண்டியது.

1953-ல் இவ் விதழில் கந்தசாமி வாத்தியார் (சுப. நாராயணன்) தொடங்கிய `ரசனை வகுப்பு`; துய்க்கும் உணர்வைத் தூண்டித் திறனாய்வுத் திறன் பெருக வழிகாட்டியது. இவ் விதழ் நடத்திய வெண்பாப் போட்டி (1960) யாப்பிலக்கணம் பயின்றோர் தம் திறனை வெளிப்படுத்தவும், புதியவர்கள் யாப்பிலக்கணம் பயின்று புதியன படைக்கவும் வழிவகுத்தது.

மாணவர் எழுதும் திறன் பெற, எதிர்கால எழுத்தாளர் தலைமுறை உருவாக அடித்தளம் போடும் வண்ணம், தமிழ்முரசு தொடங்கிய `மாணவர் பகுதி` (1953) குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய பெருஞ்சிறப்புக்குரியதாகும். தமிழ்முரசின் ஒரு பக்கம் என்ற அளவில் மாணவர் எழுத்துகளைத் தாங்கி வந்த அப் பகுதி பின் 'மாணவர் மணிமன்ற மலர்` என்ற தலைப்பில் தமிழ்முரசுடன் இணைந்து திங்கட்கிழமை தோறும் தனி இதழாகவே வெளி வந்தது (இன்றும் வந்து கொண்டிருக்கிறது). இந் நாட்டில் எழுத்தாளர் வளர்ந்து வளம்பெற அஃது ஓர் அரிய நாற்றங்கால்போல் விளங்கியது என்பதில் மிகை இல்லை. இன்று எழுத்துலகில் ஏற்றம் பெற்றுத் திகழ்வோரில் மிகப் பெரும்பாலோர் அந்த நாற்றங்காலில் வளர்ந்தவர்களே.

தமிழ்முரசின் பணிகள் இவை மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ உள. உலகத் தமிழ் ஏடுகளிலேயே தனித்து நிற்கும் விளைவுகளை ஏற்படுத்தி இன்றும் பீடுநடை போடும் அது, வணிக நோக்கம் ஒன்றனையே குறிக் கோளாய்க் கொண்டு நடத்தப் பெற்ற இதழன்று. அது தமிழர் போர்வாளாக, கேடயமாக, எழுச்சிக் குரல் எக்காளமாக, கலை, இலக்கிய, பண்பாட்டுப் பாசறையாக மிளிர்ந்த இதழாகும்.

அது சங்க இலக்கியங்களை எளிமைப்படுத்தி இளந்தலைமுறையினர் பருகத் தந்தது (சாமி. சிதம்பரனார்); ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலம் பழந்தமிழர் பெருமைகளை எடுத்துரைத்தது (சாத்தன்குளம் அ.இராகவன்), எச்.ஜி.வெல்சின் உலக வரலாற்றைத் தமிழில் தந்தது (சி.வீ.குப்புசாமி).

இவ் விதழில் கோ.சா.வுடன், ஆற்றல் வாய்ந்த தமிழறிஞர்களான முருகு. சுப்பிரமணியன், எம். சிதம்பரம், அ.முருகையன், சையது இபுராகிம், செல்வகணபதி, எம்.எம். தாவூது, கா.அண்ணாமலை, (பண்டித) மு.இராமலிங்கம் போன்றோர் சிறக்கப் பணியாற்றித் தமிழ்முரசு தமிழர் முரசாக ஒலிக்கத் துணைபுரிந்தனர்; இதழியல் துறையில் மதிக்கத்தக்க வரலாறு படைத்தனர். உயர்ந்த குறிக்கோள் கொண்ட ஓரிதழால், சமுதாய

மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதற்குத் தமிழ்முரசு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்:

மலேசிய நாளிதழ் வரலாற்றில் பல ஏடுகள் இங்கு வெளிவந்து, செய்தி இதழாக மட்டுமன்றித் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் தொண்டாற்றியுள்ளன. அவ்வரிசையிலே 1960 களுக்குப்பின் தோன்றிய இதழ்கள்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

தமிழ் மலர் - தினமணி

1963-ல் சிங்கையில் தமிழ்முரசிலிருந்து பிரிந்து வந்த செல்வகணபதியை ஆசிரியராய்க்கொண்டு வெளிவந்த இதனை 1964 முதல் என்.டி.எஸ். ஆறுமுகம் (பிள்ளை) மலேசியாவில் நடத்தினார். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நிரம்பத் தொண்டாற்றிய இதழ் இது. இதன் ஆசிரியராய்ப் பணியாற்றியவர் மு.அப்துல் இலத்தீப். இவ் விதழ் 30.11.1980-ல் அரசால் தடைசெய்யப்பட்டது. பின்னர் அதற்கு மாற்றாய் 1981-ல் `தினமணி' என்ற பெயரில் வெளிவந்தது. ஒன்பது ஆண்டுகள் செய்தி இதழாகவும், இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் தந்த ஏடாகவும், வெளிவந்தது; 1990 நவம்பரில் நிறுத்தப்பட்டது.

மலை நாடு

(கூட்டுறவுத் தந்தை) வீ.தி. சம்பந்தனின் அண்ணன் (பெரியவர்) வீ.மீனாட்சிசுந்தரம் 14.1.1958-ல் தொடங்கிய கிழமை இதழ் இது. 1965ஆம் ஆண்டு நாளிதழ் ஆனது. இது சில ஆண்டுகளே சமுதாய, கலை, இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றி மறைந்தது.

தமிழ் ஓசை

முன்னாள் மேலவை உறுப்பினரும், இந் நாள் சட்டமன்ற ஆட்சிப் பேரவை உறுப்பினருமான க.சிவலிங்கத்தால் தொடங்கப்பட்ட இவ்வித முக்கு ஆதி.குமணன் ஆசிரியராய்ப் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தினார். மிகக் குறுகிய காலத்திற்குள் மக்கள் ஆதரவு பெற்று விற்பனையிலும் மேலோங்கியது. ஒன்பது ஆண்டுகள் சமுதாய உணர்வுகளைத் தாங்கியும், கலை, இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சிகளைத் தூண்டியும், சிக்கல்களைத் துணிச்சலோடு அலசியும் வெற்றியோடு நடைபோட்டது. ஆசிரியர் உரையாக எழுதப் பெற்ற பார்வை, சமுதாயத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றது. கவிதைத் துறையில் புதிய வடிவங்கள் வளரக் களமாய் விளங்கியது. ஆதி.குமணனிடம் மண்டிக்கிடந்த ஆற்றலை வெளிபடுத்திச் சமுதாயத் திற்கு அவரை அடையாளம் காட்டியது. அப்பால் நிருவாகத்திற்கும், ஆசிரியர் குழுவிற்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாய் முறைமன்றத்தால் 12.3.1990-ல் நிறுத்தப்பட்டது[7].

தினமுரசு

முரு.சொ.நாச்சியப்பனை ஆசிரியராய்க்கொண்டு நடத்தப்பட்ட இவ் விதழ் குறுகிய காலத்தில் நிறுத்தப்பட்டது. பின்னர், 1992ஆம் ஆண்டு பெரு.ஆ. தமிழ்மணி ஆசிரியர் பொறுப்பேற்று ஓராண்டு நடத்தினார். பின்னர் இது நல்லாவின் கைக்குச் சென்றது; அரு.சு.ஜீவானந்தன் ஆசிரியர் பொறுப்பேற்றுச் சிறிது காலம் நடத்தினார். பின்னர், 1997-ல் பெரு.ஆ.தமிழ்மணி ஆசிரியராகி 2001 வரை நடத்தினார். இந்நாட்டு நாளிதழ் மரபுப்படி இவ் விதழ் செய்திகளோடு இலக்கிய வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு வெளிவந்தது.

தேசதூதன்

இந்நாட்டில் மாலைப்பதிப்பு இல்லாத குறையைப் போக்கும் வண்ணம் 1962-ல் கோ.சாரங்கபாணியால் தொடங்கப்பட்ட இவ் விதழின் ஆசிரியராய்ப் பணியாற்றியவர் கா.அண்ணாமலை. இஃது ஓராண்டே நடந்தது.

மலேசிய நண்பன்

இந் நாளேடு,'மலேசிய நண்பன்' என்ற பெயர் கொண்டு 1986-ல் முரு.சொ. நாச்சியப்பனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது; பின் நிறுத்தப்பட்டது. 1990-ல் ஆதி. குமணன் ஆசிரியராகித் திறம்பட நடத்தினார்[8]. அவர் சமுதாயச் சிக்கல்களைத் துணிந்து எழுதியதால் இவ் விதழ் மிக விரைந்து மக்கள் செல்வாக்கைப் பெற்றது. ஞாயிற்றுப் பதிப்பில் இடம் பெற்ற ஞானபீடம் (வினா விடைப் பகுதி) வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தது. மறுமலர்ச்சிச் சிந்தனைகள் கொண்ட படைப்புகள் இதழில் இடம் பெற்றன. இலைமறை காயாய் மறைந்திருந்த பல உண்மைச் செய்திகளை இவ் விதழ் அஞ்சாமல் வெளியிட்டது.

இலக்கிய வளர்ச்சியில் இதன் ஈடுபாடு அளப்பரியதாகும். பழைய எழுத்தாளர்களுக்கு உரிய இடம் தந்ததுபோல், புதிய எழுத்தாளர் வளர்ச் சிக்கும் ஊக்கம் தந்தது. திங்கட்கிழமைதோறும் மாணவர் சோலை வெளியிட்டு அரும்புகள் எழுத்துத் துறையில் வளர உதவிவருகிறது.

சமுதாயத்தைச் சிதைத்துக் குலைக்கும் சாதி ஒழிப்பைக் குறிக் கோளாய்க் கொண்டு, பெயர்களில் ஒட்டியிருக்கும் சாதிப் பெயர்களை, அது செய்தியாக இருப்பினும் சரி, விளம்பரமாக இருப்பினும் சரி ஏற்ப தில்லை என்ற முடிவும் செயல்பாடும் இவ் விதழின் உறுதியான கொள்கையை நிலைநாட்டின.

தமிழர் ஆண்டுப் பிறப்பு சுறவத் திங்கள் (தை) முதல் நாளே என்பதை வலியுறுத்தி வந்ததும், தமிழர் ஒற்றுமையை, கலை, இலக்கிய, பண்பாட்டு

வளர்ச்சியை மேம்படுத்தும் தமிழர் திருநாளுக்கு முதன்மை தந்ததும் இதன் சமுதாய நல்லெண்ணத்தை வெளிப்படுத்திய செயல்களாகும்.

இவ் விதழின் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்புப் படைப்பாளருக்கு ஊதியம் தரும் செயலாகும். தொடர்கதைகளுக்கு மட்டுமல்லாது ஞாயிற்றுப்பதிப்பில் வெளிவரும் ஒவ்வொரு சிறுகதைக்கும் ஊதியம் தந்து ஊக்கி வருகிறது மலேசிய நண்பன். இது சில/பல வகைகளில் தமிழ் முரசை நினைவுபடுத்தும் வண்ணம் நடைபோட்டு வருகிறது. அதனால் இதன் ஆசிரியர் குழுவின் தகவுரைஞராய் (ஆலோசகர்) விளங்கிய ஆதி.குமணன் 'இளைய தமிழவேள்' எனச் சிறப்பிக்கப்படுகிறார். வள்ளன் மையும், மன உறுதியும், கொள்கைப்பிடிப்பும், சமுதாய உணர்வும், தமிழ் நெஞ்சமும் கொண்ட அவர் 28.3.2005-ல் புகழுடம் பெய்தினார். இராஜன் தொடர்ந்து ஆசிரியர் பொறுப்பிலிருந்து மலேசிய நண்பனை வழிநடத்தி வருகிறார்.

தமிழ் வளர்ச்சிக்கும், சமுதாய மலர்ச்சிக்கும் உதவிய நாளிதழ்கள் போலக் கிழமை இதழ்கள், கிழமை இருமுறை இதழ்கள் முத் திங்கள் இதழ்கள் போன்ற பருவ இதழ்களும் தொண்டாற்றியுள்ளன. அவ் வரலாற்றை முழுமையாக எழுதப் புகுந்தால் அஃது ஒரு தனி நூலாக விரியும். ஈண்டு இலக்கிய வளர்ச்சிக்கும் சமுதாய உயர்வுக்கும், ஒல்லும் வகை உதவிய- குறிப்புகள் கிட்டிய சில இதழ்கள் மட்டும் குறிக்கப்பெறுகின்றன.

தமிழ்க்கொடி (1939-41)

பழைய மாத இதழ்களில் குறிப்பிடத்தக்க ஓர் ஏடாக விளங்கியது 'தமிழ்க்கொடி'. இஃது இரண்டாம் உலகப்போருக்கு முந்திய காலத்தில் தொடங்கிப் (1939) போர் நடந்த காலத்தில் (1941) வெளிவந்த நல்ல தமிழிதழ். போர்க்காலத்தில் இவ் விதழ் நடைபோட்டபோது[9] இதனை வாழ்த்திய ஒரு பா அப்போதைய தமிழின் நிலையையும் தமிழ்க்கொடியின் சிறப்பையும் நன்கு எடுத்துரைக்கிறது.

"நீண்ட நாளாகத் தமிழ்மொழி வளர்க்க
நேரிய மாதசஞ் சிகையொன்று
ஈண்டிலா திருந்த நிலைமையை யுன்னிக்
கவலுறும் போழ்தெமை யெல்லாம்
பூண்டபே ரணிகள் கலைகளாய்ப் பொலிய
நாமகள் பிறந்தன ளெனவிவ்
ஆண்டுநீ தோன்றிக் களிப்புறச் செய்தாய்
அருங்கலைத் தமிழ்க்கொடி யணங்கே!"

வெ.இராமசாமி எழுதிய இப் பாடல், அவ் விதழில் 1941ஆம் ஆண்டு வெளிப்போந்துள்ளது. இவ் விதழின் ஆசிரியராய் அமர்ந்து சிறப்புற நடத்தியவர் உ.அருணாசலம் (செட்டியார்). இவ் விதழ் சிறுவர் இலக்கியத்திற்கும் இடம் தந்தது என்ற இனிய செய்தியைக் கீழ்க்காணும் தேவிதாசனின் பாடல்வழி அறியமுடிகிறது.

"வீறுகொண் டேயெழுவோம் - ஆண்மை
விளங்க நெஞ்சினிலே!
பேறுகள் பெற்றிடுவோம் - தம்பி
பெற்றோர் மனங்குளிர"

கடும்போர் நடந்துகொண்டிருந்த காலத்திலும் அஞ்சி மூலையில் பதுங்கிக் கிடக்காமல் தமிழ், சமுதாயம், எதிர்காலத் தலைமுறையின் நலன் எண்ணிச் செயல்பட்ட இதழாளர் பெருமக்களை எண்ணும் பொழுது மனம் விம்மிப் புடைக்கிறது.

சோலை (1952)

வளமான இலக்கிய ஏடு என்று பலராலும் மேற்கோள் காட்டப்படும் இவ்வேடு 1951ஆம் ஆண்டில் திங்கள் இதழாய்த் தொடங்கப்பட்டது. இது இராம. சுப்பையா தரும் குறிப்பு. மா. இராமையா தம் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1952-ல் தொடங்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறார் (ப.23). இதன் ஆசிரியராகக் கா.இராமநாதன் பொறுப்பேற்றிருந்தார். பின்னர்த் தி.சு.சண்முகம் ஆசிரியரானார்.

இவ் விதழ் சிறுவர் இலக்கிய வளர்ச்சியைத் தூண்டியது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். "இலக்கியத்தை வளர்ப்பதற்கு முதலில் ஆர்வம் வேண்டும். இந்த ஆர்வம் இருவகைப்பட்டது. ஒன்று, சிறு குழந்தைகளுக்கு ஆரம்பம் முதலே தமிழிலக்கிய வாசனையை நுகரும்படி வழிவகுத்துக் கொடுப்பது", என்றதன் மூலம் குழந்தைகளுக்கு இலக்கிய உணர்வை ஊட்டினால்தான் வருங்காலத்தில் இலக்கியம் நிலைக்கும் என்பதனை எடுத்துக் காட்டியது. மேலும் அது, "சிறுவர்களுக்கு ஊட்டும் இலக்கிய இன்பம் மிகவும் எளிமையுடன் இன்பமாய்ப் புகுத்த வேண்டும்" என்று வழியும் சொல்லியது. ஒரு நல்ல ஏடான 'சோலை' எட்டுத் திங்களே உலா வந்தது.

திருமுகம் (1955)

(தமிழ்ச்சீலர்) மா.செ.மாயதேவனை ஆசிரியராய்க்கொண்டு நடந்த திங்கள் ஏடு 'திருமுகம்'. தொடக்கத்தில் இஃது ஒரு கையெழுத்து இதழாய் வலம் வந்தது. ஒரு தரமான ஏடாய் நடைபோட்ட இது சிறுகதை,

கவிதை, கட்டுரை ஆகிய அனைத்து வடிவங்களும் வளர வழிவகுத்தது. கா.பெருமாள், கிருட்டினதாசன் போன்ற பெரும் பாவலர்கள் எழுதிய கவிதைப் படையல்களும், நாட்டின் முன்னணி எழுத்தாளர்கள் எழுதிய உரைநடைப் படைப்புகளும் இதனில் வெளிவந்தன. இவ் விதழில் மா.செ.மாயதேவன் எழுதிய தொடர்கட்டுரைகள் பின்னர் நூல் வடிவம் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வேடு சில ஆண்டுகளே தன் இலக்கியச் செலவைத் தொடர்ந்தது.

மலைமகள் (1956 - 64)

கரு.இராமநாதனை ஆசிரியராய்க்கொண்டு ஈப்போ நகரிலிருந்து 1956-ல் ‘மலைமகள்’ என்ற பெயரில் ஓர் ஏடு வெளிவந்ததாகவும், பின் 1964-ல் ஜி.சி.இளங்கோவனை ஆசிரியராய்க் கொண்டு ஓர் ஏடு வெளிவந்ததாகவும், இராம சுப்பையா குறிப்பிடுகிறார்; தம் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மா.இராமையா 1956ஆம் ஆண்டில் வெளிவந்த ‘மலைமகள்’ பற்றி மட்டும் குறிப்பிடுகிறார். 1959-ல் ‘மலைமகள்’ என்ற பெயரில் இதழ் ஒன்று வெளிவந்ததாக இதழ்கள் பட்டியலில் சேர்த்துள்ளார். ஆசிரியர் பெயர் வி.எஸ். முத்தையா என்றும் குறித்துள்ளார். 1956 தொடங்கி ஓராண்டே நடந்தபின் 1964-ல் மறுபிறவி பெற்றிருக்கலாம். இவ் விதழ் வளமான இலக்கிய வளர்ச்சிக்கு உதவியது. புலமைமிக்க பலர் இவ்விதழில் எழுதினர்.

நவரசம் (1958)

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரிலிருந்து 1958-ல் வெளிவந்த ‘நவரசம்’தரமான படைப்புகளைக் கொண்டு வெளிவந்தது. இவ்விதழ், பெரும்பாலான ஏடுகளைப்போல் சிலகாலமே நடைபோட்டது. நவரசம் என்ற வடமொழிப் பெயரை ஒன்பான் சுவை என்று மாற்ற முடியுமா? என்று அன்பர் ஒருவர் எழுப்பியிருந்த வினாவிற்குப் “பெயரை மாற்றும் உத்தேசம் இல்லை” என்று நவரசம் மறுமொழி தந்திருந்ததைப் படித்த நினைவு வருகிறது.

மாதவி (1959)

இவ் விதழ் ஐ. உலகநாதனை ஆசிரியராய்க் கொண்டு 1959-ல் சிங்கப்பூரில் தொடங்கியது. பொருள் வளமற்ற நிலையிலும் பெரும் நெருக்கடிகளுக்கிடையே 1963ஆம் ஆண்டுவரை நடைபோட்டது. இவ் வட்டாரத்தில் பாவலர் பலரை உருவாக்கிய பெருமை இவ்விதழைச் சேரும். உணர்வுகளையே முதலீடாகக் கொண்டு வலம் வந்த இந்த இதழில் விருத்தப்போட்டி முதலாயவற்றால் புதியதாகக் கவிதை எழுதத் தொடங்கியோர் நல்ல பயிற்சி பெற்றனர். பினாங்கில் (முதுபெரும் புலவர் சுவாமி)

இராமதாசர் வழிநடத்திய செந்தமிழ்க் கலாநிலையம் பல புலமை மிக்காரை உருவாக்கியது போல், ஐ. உலகநாதன், 'மாதவி' இதழ் சார்பில் தொடங்கிய மாதவி இலக்கிய மன்றத்தின் மூலம் உணர்ச்சிச் செறிவுமிக்க கவிதைகள் எழுதும் பாவலர் பலர் உருவாக வழி அமைத்தார். ஐ. உலகநாதனைத் தலைலராய்க்கொண்டு தொடங்கப்பட்ட மாதவி இலக்கிய மன்றத்திற்குப் பின்னர் முருகதாசன் தலைவரானார். அமலதாசன் முதலாய மிகப் பலர் இம் மன்ற வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றினர்.

பொன்னி (1965)

பொன்னித்துறைவன் என்ற புனைபெயர் கொண்ட ந.தியாகராசன் தொடங்கி நடத்திய 'பொன்னி' மாத இதழ், கோலாலம்பூரிலிருந்து 1965-ல் தன் இலக்கியச் செலவைத் தொடங்கிற்று. சராசரி இதழ்கள்போல் அல்லாமல் இது பல புதிய உத்திகளைக் கையாண்டது. கருத்துப் போர்கள் ஏற்படச்செய்து இருதரப்பு எழுத்துகளையும் வெளியிட்டுத் தெளிவுபெற வழிவகுத்தது. இர.ந. வீரப்பன், மா. இராமையா, பாவலர்கள் ப.மு. அன்வர், சீனி நைனாமுகம்மது, முரசு. நெடுமாறன், பெ.மு. இளம்வழுதி முதலாயோர் நிரம்ப எழுதினர். பாகுபாடின்றி இவ் விதழ் எல்லாத் தரப்பின ருக்கும் இடமளித்தது.

இவ் விதழ் திறனாய்வுக் கட்டுரைகளை நிரம்ப வெளியிட்டது. உருவகக் கதைகளையும், இடம்பெறச் செய்தது. இவற்றிற்கு இர. ந. வீரப்பன் முன்னோடியாய் விளங்கினார்.

தாமே அச்சுக்கோத்து, அவற்றை அச்சகத்திற்குச் சுமந்து சென்று அச்சேற்றிப் பெருந் துன்பத்திற்கிடையே நான்காண்டுக் காலம் அதனைத் தொடர்ந்து நடத்தித் தமிழும், இலக்கியமும் வளர அரும்பாடுபட்டார் ந.தியாகராசன். மலேசியாவில் சற்று நீள உலாவந்த இதழ்களில் இது குறிப்பிடத்தக்கதாகும்.

உதயம் (1962)

மலேசிய அரசன் ஊடகங்கள் மலாய், ஆங்கில மொழிகளுக்கு இடமளிப்பதுபோல், சீன, தமிழ் மொழிகளுக்கும் உரிய இடத்தை அளித்தே வருகின்றன. ஊடகங்களில் முதன்மை வாய்ந்த இதழ்த்துறையில் தமிழுக்கு உரிய இடம் கிடைத்தே வந்திருக்கிறது. அவ்வப்போதைய நிகழ்வுகளைக் குறித்த அறிவிப்புகள், விளக்கக் கையேடுகள், நூல்களோடு இதழ்களையும் அது தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

அது 1948-ல் 'ஜனோபகாரி' என்ற கிழமை இதழைக் கோலாலம்பூரி லிருந்து வெளியிட்டது. இதற்குப் பிச்சைப்பிள்ளை ஆசிரியராய் விளங்கினார். பின்னர் 1959-ல் அதன் பெயர் 'வளர்ச்சி' என மாறியது. அதன் ஆசிரியர்

சி.வீ.குப்புசாமி. இவர் பல ஏடுகளை நடத்திப் பட்டறிவு பெற்றவராவார். பின்னர் இது 1962-ல் ‘வெற்றி’ என்று பெயர் மாற்றம் கண்டது. அதற்கும் சி.வீ. குப்புசாமியே ஆசிரியர். பின்னர்த் தகவல் துறையின் மாத ஏடாய் `உதயம்` வெளிவரத் தொடங்கியது. தொடக்கத்தில் ச.பொன்முகத்தை ஆசிரியராய்க் கொண்டு வெளிப்போந்த இவ் விதழ், இவர் காலத்தில் முற்றிலும் மாற்றமடைந்து ஓர் இனிய இலக்கிய ஏடாய்ப் பொலிவுபெற்றது. பின்னர், ஊடகத்துறையில் பழுத்த பட்டறிவுபெற்ற மூத்த இதழாசிரியர் எம். துரைராஜ் ஆசிரியரானார். மலேசியத் தமிழ் ஏடுகளிலேயே கவர்ச்சி மிக்க ஓர் ஏடு என்னும் தகுதியோடு பல்வண்ண அமைப்பில் வெளிவந்தது. ‘உதயம்’தமிழ்கூறு நல்லுலகில் ஒரு பொலிவுமிக்க ஏடு என்ற பெயரையும் பெற்றது. அரசு ஏடு ஆகையால் விலையும் மிகமிக மலிவே. அதனால் அரசு குறி இலக்கையெல்லாம் தாண்டிப் பல்லாயிரக் கணக்கில் விற்பனையாகி, புதிய வரலாறு படைத்தது. அரசையே வியக்க வைத்தது. அதனில் இடம் பெற்ற எழுத்துகளுக்கு நிறைவான ஊதியம் கிடைத்ததால் எழுத்தாளர்களுக்குப் பேரூக்கத்தை நல்கியது. துரைராஜ் பணி ஓய்வு பெற்றதும் க.பாலகிருஷ்ணன், பின்னர் சுப.தேராஜ் ஆசிரியர் பொறுப்பேற்றனர். நீள நடைபோட்ட இவ் விதழ் சில ஆண்டுகளுக்கு முன் நிறுத்தப்பட்டது சமுதாயத்திற்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது.

புதிய சமுதாயம் (1980)

தமிழ்நேசன் ஆசிரியராய்ப் பணியாற்றிய முருகு. சுப்பிரமணியனை ஆசிரியராய்க் கொண்டு 1980-ல் கோலாலம்பூரிலிருந்து வெளிவந்த இதழ் ‘புதிய சமுதாயம்’. தொடக்கத்தில் இது திங்கள் இருமுறை ஏடாய் வெளி வந்தது. பின்னர்த் திங்கள் ஒருமுறையானது. இதழ்த் துறையில் முதிர்ந்த பட்டறிவுமிக்க தமிழறிஞரான அவர், இதழை மிகச் சிறந்த ஓர் இலக்கிய ஏடாக நடத்தினார். பண்பட்ட எழுத்தாளர் படைப்புகளோடு புதியவர் எழுத்துகளுக்கும் இடம் தந்தார். இவ் விதழும் நீடு நிலைத்துப் பணி செய்ய இயலாமற்போனது.

மயில் (1986)

1986ஆம் ஆண்டில் கோலாலம்பூரிலிருந்து வெளிவந்த `மயில்` தொடக்கத்தில் ஒரு கிழமை இதழாகும். கிருட்டினமூர்த்தி, தியாகு, பஞ்சாட்சரம் போன்றோர் ஆசிரியர் குழுவிலிருந்து இதனை நடத்தினர்.

ஆ.சோதிநாதன் இதன் உரிமையாளராகி நிருவாக ஆசிரியர் ஆனபின் இது புதிய வடிவம் பெற்றது. அதன் சமகாலத்தில் வெளி வந்த இதழ்களிலேயே தனிச்சிறப்புக்கொண்ட இதழாய் இது மிளிர்ந்தது. ஆசிரியர் தமிழறிஞராகவும், சிறந்த கல்விமானாகவும், சமுதாய உணர்வு

கொண்டவராகவும் இலக்கிய வேட்கை மிக்கவராகவும் விளங்கியதால், கல்வி, கலை இலக்கிய, சமுதாயச் சிந்தனைகள் கொண்ட படைப்புகள் மயிலில் மணம் பரப்பின. குறிப்பாகத் தமிழ்ப்பள்ளிகள் நலனில் பெருநாட்டம் கொண்ட ஆசிரியர் உரைகளும் (Editorial), தனிக்கட்டுரைகளும், நேர்காணல்களும், பயனுடைய கருத்துக்கோவைகளும், தகவுரைகளும் (Advice) வெளிப்போந்தன. இன்று கல்வியமைச்சின் நாடாளுமன்றச் செயலாளரான கோமளா கிருஷ்ணமூர்த்தி (ம.இ.கா.வழி) இந்திய சமுதாயத்தின் நிகராளியாவார். இப்படியொரு கோரிக்கையை - கல்வியமைச்சில் இந்தியப் பேராளர் ஒருவர் (நாடாளுமன்றச் செயலாள ராகவாவது) இடம்பெற வேண்டுமென்ற தவிப்பைச் சமுதாயத்தின் குரலாகப் பல ஆண்டுகளுக்கு முன்பே தொலைநோக்கொடு மயில் எடுத்தியம்பியது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழ்ப்பள்ளிகளுக்கு ஊறு விளைவிக்கும் கருத்துகளை எவர் வெளியிட்டாலும் துணிவுடன் எதிர்த்துப் போராடி உண்மைகளை உணர்த்தி அவர்களை உட்கார வைக்க மயில் தயங்கியதில்லை.

ஓர் இதழுக்குரிய பொறுப்புணர்ந்து தமிழ், தமிழ்ப்பள்ளிகளின் நலன்களோடு, சமுதாய நலன்களையும் கருத்தில் கொண்டு அது வெளியிட்ட ஆசிரியர் உரைகளும், கட்டுரைகளும் நூலாக்கம் பெறத் தக்க பதிவுகளாகும். மயில் மூத்த எழுத்தாளர்களுக்கு மதிப்பளித்தது; அவர்களிடம் வேண்டிப் பெற்றுப் படைப்புகளை வெளியிட்டது; உரிய அன்பளிப்பும் தந்தது; இளம் படைப்பாளர்களுக்கும் இடம் தந்தது; தரம் வாய்ந்த சிறப்பு மலர்களில் சிறுவர் படைப்புகளையும் வெளியிட்டது. இது திங்களிதழான சிறிது காலத்தில் தன் பயணத்தை நிறுத்திக்கொண்டது. இவ் விதழ் நிறுத்தப்பட்டது சமுதாயத்திற்குப் பேரிழப்பாகும்.

சக்தி (1987)

சமய வளர்ச்சி, ஆன்மிக மேம்பாடு, சமுதாய விழிப்புணர்ச்சி, தமிழ்க் கல்விச் சீர்மை போன்ற அழுத்தமான குறிக்கோள்களோடு 1987 திசம்பர்த் திங்களில் தொடங்கப்பெற்ற `சக்தி` இதழ், ஆறு. நாகப்பனை ஆசிரிய ராகவும், உரிமையாளராகவும் கொண்டு கோலாலம்பூரிலிருந்து வெளி வந்தது. இவ் விதழ் 2003 செப்டம்பர் வரை 16 ஆண்டுகள் தங்கு தடையின்றி அமைதியாகத் தொடர்ந்து நற்பணியாற்றியது.

ஆசிரியர் ஆறு. நாகப்பன் தமிழ் ஆசிரியராகவும், கல்லூரி விரிவுரை யாளராகவும், முதுகலை தேர்ந்தவராகவும், சமய இயக்கத் தலைவராகவும், சைவ சித்தாந்தத்தில் தெளிவுள்ளவராகவும் விளங்குவதால் இதழைச் சிறப்பாக நடத்தினார். இந்து சமய - குறிப்பாகச் சைவ சித்தாந்த மெய்ம் மைகள் கொண்ட கட்டுரைகள் அதனில் இடம்பெற்றன; ஆன்மிகச்

சிந்தனைகளைப் பரப்பும் எழுத்துகள் வெளிப்போந்தன. சமுதாயம் விழிப்புணர்வுபெற, தமிழ்க்கல்வி சீர்மைபெற ஆசிரியர் உரைகள் அதனில் எழுதப்பெற்றன. திரைச் செய்தி, துண்டு, துணுக்கு என்றில்லாமல் மேன்மைமிகு கருத்து வண்ணங்கள் கொண்ட ஓர் ஏடாக இவ் விதழ் வெளிவந்தது. இவ் விதழுடன் இதே பெயரில் ஆங்கிலத்திலும் ஓரிதழ் அவரால் நடத்தப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நம்குரல் (1980)

மலேசிய, இந்திய முஸ்லிம்களின் பேரவையான 'பெர்மிம்' (PERMIM) வெளியீடான 'நம் குரல்' திங்கள் ஏடு 1980ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் முதல் வெளிவந்தது. தொடக்கத்தில் ஆ.கு.முகம்மது இபுராகீம் ஆசிரியராய் அமர்ந்து நடத்தினார். பின்னர்ச் சீனி நைனா முகம்மது ஆசிரியரானார். நல்ல தமிழ் வளங்கொண்ட அவர் இலக்கணப் பிழையற்ற ஒரு செறிவுமிக்க இதழாக இதனை நடத்தினார். இசுலாமிய நெறி போற்றிய அதேவேளையில் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் நாட்டம் கொண்ட இதழாய் இது நடைபோட்டது. 1988 சூலைத் திங்களுடன் தன் இலக்கியச் செலவை நிறுத்திக்கொண்டது.

மேற்கண்ட இதழ்களுடன் வேறுசில இதழ்களும் சமுதாய நலன் கருதியும், தமிழ் வளர்ச்சியை நோக்கமாய்க் கொண்டும் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில ஈண்டுக் குறிப்பிடத்தக்கனவாகும்:

தூதன் (1984)

'தூதன்' என்ற பெயர்கொண்ட இம் மாத இதழ் 1984 -ல் இராமதாசு மனோகரனை ஆசிரியராய்க் கொண்டு கோலாலம்பூரிலிருந்து வெளிவந்தது. பின், பெரு.ஆ. தமிழ்மணி இதன் ஆசிரியரானார். இவ்விதழ் 1995-ல் அரசால் தடைசெய்யப்பட்டது.

தமிழ்க்குயில் (1956)

எழுத்தாளரும் கவிஞரும் தமிழாசிரியருமான கா. கலியபெருமாளை ஆசிரியராய்க் கொண்டு 1956-ல் ஈப்போவிலிருந்து வெளிவந்த திங்கள் ஏடு 'தமிழ்க்குயில்'. இலக்கிய வளர்ச்சியை நோக்கமாய்க் கொண்டு சில காலம் நடைபோட்டது.

கலாசாரம் (1971)

இராமசாமியை ஆசிரியராய்க் கொண்டு 1971-ல் கோலாலம்பூரி லிருந்து வெளிவந்த ஏடு இது. தந்தை பெரியாரின் இறைமறுப்புக் கொள்கையைப் பரப்பும் ஏடாய் இது வெளிவந்தது. இதனை நடத்தியதன் மூலம் இராமசாமி 'கலாசாரம்' இராமசாமியானார். கொள்கையில்

நெகிழ்ச்சியோ, முன்னுக்குப்பின் முரணோ இல்லாத இவர் தன்மைக் கேற்பக் கலாசாரம் இதழ், தமிழ் உணர்வுப் பரவலோடும், சீர்திருத்தம் பரப்பிய நோக்கத்தோடும் உறுதியோடும் நடைபோட்டு வந்தது. சிறிது காலமே இது நடந்ததெனினும், அது நெடிது பேசப்பட்ட பெயராய்ப் பதிந்தது.

மேலே குறிப்பிட்ட இதழ்களொடு வரலாற்றுக் குறிப்புகள் கிட்டாத ஆனால் செவிவழிச் செய்தியாகச் சில இதழ்களின் பெயர்களை அறிய முடிகிறது. இதனை எழுதிக்கொண்டிருந்தபோது ப.கு. சண்முகம் சில இதழ்களின் பெயர்களைக் குறிப்பிட்டுத் தவறாமல் சேர்த்துக்கொள்ளச் சொன்னார்.

இரா. இரத்தினவேல் 1968ஆம் ஆண்டு கோலாலம்பூரிலிருந்து நடத்திய 'தன்மானம்', 1969-ல் நடத்திய 'செங்கதிர்' (அரசால் தடை செய்யப்பட்டது) ஆகியவையே அவர் குறிப்பிட்ட இதழ்களாகும். அண்மைய ஆண்டுகளில் தோன்றி இடையில் நின்றுபோன சில இதழ்களும் நினைவுக்கு வருகின்றன. பழைய இதழான 'மனோகரன்', சிரம்பானி லிருந்து ஐ. இளவழகு ஆசிரியராக இருந்து நடத்திய 'அகரம்', (இப்பொழுது மீண்டும் தொடருகிறது) கோலாலம்பூரிலிருந்து பெரு.அ. தமிழ்மணி நடத்திய (ஆசிரியரும், உரிமையாளரும்) 'முகவரி', தனித்தமிழ் இதழான 'தமிழ்நெறி' போன்ற இதழ்களும் நினைவுக்கு வருகின்றன. 'விடிவெள்ளி', 'வெற்றி' என்பன போன்ற இதழ்களும் அவ்வப்போது முகம்காட்டின. 1967-ல் இராம. சுப்பையா வெளியிட்ட பட்டியலிலும் சில இதழ்கள் விடுபட்டுள்ளன. அதன்பின் இதழ்கள் பட்டியல் முறையாகத் தொகுக்கப் படவில்லை. 'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சிய'த்தில் (1997) அந் நூலில் இடம்பெற்ற கவிதைகள் தந்த இதழ்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. முயன்று இந்நாட்டில் வெளிப்போந்த தமிழ் இதழ் களின் பட்டியலைத் தொகுத்தால் அஃது எதிர்காலத் தலைமுறைக்குப் பெரிதும் பயன்படும்.

வாழும் இதழ்கள்

தமிழ் நாளிதழ்களிலேயே மூத்த ஏடாகவும் 1923 முதல் மக்களின் பேராதரவு பெற்ற இதழாகவும், வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழ் நேசனும்', 1986-ல் தொடங்கி 1990முதல் மக்களின் பெரு வரவேற்பைப் பெற்று வளத்தோடு நடைபோட்டுக் கொண்டிருக்கும் 'மலேசிய நண்பனு'ம், அன்றாடம் நாட்டு மக்களுக்குச் செய்திகளையும், பயனுடைய தகவல் களையும் தந்து வருகின்றன; ஞாயிறுதோறும் கலை, இலக்கிய விருந்து நல்கி இனிமை பரப்புகின்றன. நாள்தோறும் பல்லாயிரக் கணக்கில் விற்பனை

யாகும் இவ் விதழ்கள், ஞாயிற்றுக் கிழமைகளில் இலட்சக்கணக்கில் மக்களை எட்டுகின்றன.

இவ்விரு நாளிதழ்களோடு இலக்கிய மணம் பரப்பிச் சமுதாயத் திற்குப் பயன் சேர்க்கும் மற்ற இதழ்கள் குறித்தும் சொல்ல வேண்டுவது முதன்மையாகும்.

சங்கமணி (1951)

தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஏடாக 1951-ல் பெட்டாலிங் ஜெயாவிலிருந்து வெளிவந்த இவ் விதழான சங்கமணி, கிழமை இருமுறை இதழாய்த் தொடங்கப்பட்டது. இது தோட்டத் தொழிலாளர் குரலாக ஒலித்தது. தோட்டந்தோறும் சென்று தொழிலாளர் ஆவலோடு படிக்கும் ஓர் ஏடாக வலம்வந்தது. கா. பெருமாள் முதலாயோரின் எழுச்சிமிக்க கவிதைகள் இதனில் இடம்பெற்றன. தொழிலாளரைச் சிந்திக்கத் தூண்டும் கட்டுரைகளும், சிறுகதைகளும் வெளிவந்தன. தமிழ் வளங்கொண்ட எழுத்தாளர்களான திருவாளர்கள் தி.சு. சண்முகம், பைரோஜி நாராயணன், செ. குணசேகர், சங்கு சண்முகம் போன்றோர் ஆசிரியர் பொறுப்பி லிருந்து திறம்பட நடத்தினர். கிழமை இருமுறை வெளிவந்த இவ்விதழ் பின்னர்க் கிழமை இதழாயிற்று. இப்பொழுது திங்கள் இருமுறை இதழாய் வெளிவந்து கொண்டிருக்கிறது. சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் பி.பி. நாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டுவந்த இதனை, இந் நாள் பொதுச்செயலாளர் ஜி. சங்கரன் வெளியிட்டு வருகிறார். பொறுப்பாசிரியர் பெ. இராசேந்திரன்.

வானம்பாடி (1977)

'இளைய தமிழவேள்' என்று போற்றப்படும் ஆதி. குமணனை ஆசிரியராய்க் கொண்டு 1977ஆம் ஆண்டு கோலாலம்பூரிலிருந்து வெளி வரத் தொடங்கிய 'வானம்பாடி' என்னும் இக் கிழமை இதழுக்கு அன்று உரிமையாளராய் இருந்தவர் அப்துல் காதர். இந் நாட்டுத் தமிழ்இதழ் உலகில் மிக நீண்ட காலமாக உறுதியுடன் இடைவிடாமல் நின்று நடைபோட்டுக் கொண்டிருக்கும் (28ஆண்டுகள்) கிழமை இதழ் இதுவே என்னும் சிறப்பு இதற்குண்டு.

தொடக்கத்திலேயே வாசகர்களை நிரம்பப் பெற்றுவிட்ட இவ்விதழ், பொழுதுபோக்குப் படைப்புகளுக்குச் சற்றுக் கூடுதல் இடம் தந்து கவர்ச்சிப் படுத்தியதெனினும், தமிழ் உணர்வைப் பரப்புவதிலும், சமுதாயச் சிக்கல்களை அலசுவதிலும், பின்வாங்கவில்லை. ஆசிரியர் ஆதி. குமணன் இவ் விதழில் எழுதிய பார்வைகள் இன்றும் பேசப்படும் படையலாகும். பல்வேறு சிக்கல்கள்பற்றி அது பேசியது; இலைமறை காயாய் மறைந்து

கிடந்த உண்மைகளை வெளிக்கொணர்ந்தது; ஆதி.குமணன் எழுத் தாற்றலுக்குச் சான்று பகரும் பகுதியாய் அஃது அமைந்தது. இவ் விதழில் அதன் துணையாசிரியர் இராசகுமாரன் தொடர்ந்து எழுதிவந்த சாசனம் இன்றும் பேசப்படும் படையலாகும்.

வானம்பாடிக்கு வேறு சில சிறப்புகளும் உள. இந் நாட்டின் 'புதுக்கவிதை' வளர்ச்சிக்கு உறுதியான களமமைத்துத் தந்தது இவ்விதழ். 'மாதம் ஒரு குறுநாவல்' எனப் பல நூல்களை வெளியிட்ட பெருமையும் இதற்குண்டு.

ஆதி. குமணனுக்குப் பின் நீள ஆசிரியராய்ப் பணியாற்றியவர் பாலு. இவ் விதழின் இன்றைய உரிமையாளர் பழனியப்பன். இதன் இப்போதைய ஆசிரியர் தேவா. இவ் வேடு இன்றும் நிறைவான வாசகர் ஆதரவோடு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த ஏடாய் வலம்வந்து கொண்டிருக்கிறது. சிங்கப்பூரில் இது விற்பனையாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நயனம் (1998)

இப்பொழுது வெளிவந்துகொண்டிருக்கும் கிழமை இதழ்களுள் வானம்பாடியை அடுத்த மூத்த இதழ் 'நயனம்'. 1998 முதல் கோலாலம்பூரி லிருந்து வந்து கொண்டிருக்கும் இதன் உரிமைப் பங்காளர்கள் திருவாளர்கள் இராசகுமாரன் - இராசேந்திரன் ஆகியோர். தலைமை ஆசிரியர் இராசகுமாரன். தொடக்கத்தில் இலக்கியக் கூறுகளுடன் பொழுதுபோக்கு அம்சங்களைத் தாங்கி வந்த இது, பின்னர்ப் பொழுது போக்கு அம்சங்களுக்குச் சற்றுக் கூடுதல் இடம் தந்தது. திரைச் செய்திகள், கவர்ச்சி வண்ணப் படங்கள் இடம்பெற்றன. பின்னர்ப் படிப்படி யாக மாறுதல்களைப் பெற்றது. வெறும் பொழுதுபோக்குத் துணுக்குகள் குறைந்தன. நாகரிகத் தோற்றம் கொண்ட படங்கள் இடம்பெற லாயின. சிறுகதை, தொடர்கதைகள், கவிதை, புதுவடிவக் கவிதைகளோடு பயனுடைய கட்டுரைகளும், தொடர்கட்டுரைகளும் இதனில் இடம் பெறத் தொடங்கின.

மேல்நிலையடைந்த பெருமக்கள் கருத்துகளைத் தேடிப் பெற்று வெளியிடுவதாலும், தமிழ், சமுதாயம் தொடர்புடைய நிகழ்ச்சிகளின் வண்ணப் படங்களையும், நிகழ்வுக் குறிப்புகளையும் வெளியிடுவதாலும், இதன் உயரிய எண்ணம் வெளிப்படுகிறது. உயர்ந்த குறிக்கோளும், தமிழ் நெஞ்சமும், சமுதாய உயர்வில் நாட்டமும், தீமைகளை எதிர்க்கும் துணிச்சலும், நேரிய போக்கும், வளைந்து கொடுக்காத கொள்கைப் பிடிப்பும் கொண்டு, தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளாத அடக்கத் துடன் செயல்படும் ஆசிரியரைப் பெற்றிருப்பதால் நயனம் சமுதாயத்தில்

ஒரு தனித் தோற்றத்தோடும் உறுதியோடும் நீண்ட காலமாக உலாவந்து கொண்டிருக்கிறது.

மக்கள் ஓசை (1994)

இராசகுமாரனை உரிமைப் பங்காளராகவும், ஆசிரியராகவும் கொண்டு 1994 முதல் கோலாலம்பூரிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் கிழமை ஏடு 'மக்கள் ஓசை'. தொடக்கத்தில் இதன் பொறுப்பாசிரியராய்ப் பணியாற்றியவர் குருசாமி. பின்னர், அக்கினி இதன் பொறுப்பாசிரியர் ஆனார்.

இஃது ஒரு நாளிதழின் ஞாயிற்றுப் பதிப்புப்போன்ற தோற்றத் தோடு வெளிவந்தது. மிக முதன்மை வாய்ந்த சமுதாயச் சிக்கல்கள், வெளியுலகிற்குத் தெரியாமல் மறைந்து கிடக்கும் உண்மைகள், வியப்புக் குரிய நிகழ்வுகள் போன்றவை முதல் பக்கச் செய்தியாக இடம்பெற்றன. அக்கினி பதில்கள் தொடர்ந்து வெளிவந்தன. இதனில் அறிவியல் தொடர்புடைய கட்டுரைகள், அடிக்கடி இடம் பெறுகின்றன. திரைச் செய்திகளுக்குச் சற்றுக் கூடுதலாகவே இடம் வழங்கப்பட்டு வருகிறது. சிறுகதை, தொடர்கதை, கவிதைகள், புதுவடிவக்கவிதைகள் போன்றவையும் நிறைவாக இடம்பெற்று வருகின்றன. இடையிடையே கல்வித்தொடர்பான கட்டுரைகளையும், விளக்க உரைகளையும் இது வெளியிட்டு வந்தது. பின்னர் இது (11-12-2005) முதல் பல மாறுதல்களோடு நாளிதழானது.

தென்றல் (2003)

வித்தியாசாகரை ஆசிரியராய்க் கொண்டு 2003-ல் தொடங்கப் பட்ட தென்றல் கிழமை இதழ், கோலாலம்பூரிலிருந்து வந்து கொண் டிருக்கிறது. ஆழமான படைப்புகள் குறைவாகவும், திரையுலகையொட்டிய பொழுதுபோக்கான சுவைத்துணுக்குகள் மிகுந்தும், கவர்ச்சிமிகு வண்ணப் படங்கள் நிறைந்தும் இள மனங்களை ஈர்க்கும் உத்திகளோடும் வெளி வருகிறது. கருத்து மோதல் கட்டுரைகளும் வெளிவருகின்றன. கதை, கட்டுரை, புதுக்கவிதை, கவிதைகளோடு அவ் வப்போதைய நிகழ்வுகள் பற்றிய வண்ணப் படங்களும் செய்திகளும் வருகின்றன.

மாத இதழ்கள்

கூட்டுறவு (1977)

கோலாலம்பூரிலிருந்து 1977ஆம் ஆண்டு முதல் கடந்த 28 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் 'கூட்டுறவு' கிழமை இதழ் மற்ற இதழ்களுக்கு மாறுபட்ட ஓர் இதழாகும். இதனைத் தேசிய நில

நிதிக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை நிருவாகி பி. சகாதேவன் வெளியிட்டு வருகிறார். பொறுப்பாசிரியராகத் தோ. மாணிக்கம் பணியாற்றுகிறார்.

இவ் விதழ் மற்ற இதழ்களைப்போல் விற்பனை செய்யப்படுவதில்லை. உறுப்பினர்களுக்கு மட்டும் அஞ்சல்வழி அனுப்பப்பட்டு வருகிறது. இதனில், ஓர் இலக்கிய ஏட்டிற்குரிய பல தன்மைகள் உள்ளன. ஆண்டுதோறும் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் இலக்கியப் போட்டிகளில் வென்ற படைப்புகள் இதனில் தொடர்ந்து இடம்பெறுகின்றன. பயனுடைய பொதுக் கட்டுரைகளையும் இது தாங்கி வருகிறது.

கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் பற்றிய செய்திகள், அறிக்கைகள், படங்கள் அவ்வப்போது வெளிவருகின்றன. கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.ஆர். சோமசுந்தரம் உறுப்பினர்களின் வினாக்களுக்கு விடையளித்து வருகிறார். (கூட்டுறவுத் தந்தை) வீ.தி. சம்பந்தனார் தோட்டத் துண்டாடலால் வாழ்விழந்த மக்கள் மறுவாழ்வு காண அமைத்த தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளின் பதிவேடாகவும் இவ்விதழ் திகழ்கிறது.

சூரியன் (1988)

தொடக்கத்திலிருந்து தடைப்படாமல் தொடர்ந்து நீள வெளிவரும் மூத்த திங்கள் இதழ்களுள் சூரியன் குறிப்பிடத்தக்க ஓரிதழாகும். 1988-ல் கோலாலம்பூரில் இது தன் உலாவைத் தொடங்கியது. இதன் ஆசிரியர் திரு. இராமதாசு மனோகரன். இவர் முன்பு 'தூதன்' இதழுக்கு ஆசிரியராய் விளங்கியவராவார்.

மாத இதழ்களிலேயே அளவில் பெரியதாய் (A4 அளவு) முகம் காட்டும் இதழ் இது. 74 பக்கங்களில் (அட்டை நீங்கலாக) நிறைவான செய்திகளோடு வெளிவரும் இதனில் இடம்பெறுவனவற்றுள் திரை உலகம் தொடர்புடையவை சற்று மிகுதியாகவே உள்ளன. பல்வேறு தரப்பினரையும் கவரும் நோக்கில் சுவைச் செய்திகள், வாசகர் கருத்துகள் மிகுதியாக இடம்பெற்றாலும், உடல், மனநலம் பற்றிய மருத்துவக் கட்டுரைகளும் உடலை உறுதி செய்யும் இருக்கை (யோகாசனம்) செய்யும் முறை விளக்கங்களும் இதனில் இடம்பெறுகின்றன.

இதயம் (1991)

கடந்த பதினான்கு ஆண்டுகளாகக் கோலாலம்பூரிலிருந்து தொடர்ந்து வெளிவரும் ஒரு குடும்பப் பாங்கான இதழ் இதயம். இது 1991-ல் தன் இலக்கியச் செலவைத் தொடங்கிற்று. தம் வாழ்நாளை இதழ்ப் பணிக்கே ஒப்படைத்தவரும், அது குறித்து ஒரு வரலாற்று நூல் எழுதியவரும், இத் துறையின் மூத்தவருமான எம். துரைராஜ் இதன்

ஆசிரியர் ஆவார். அவரின் பட்டறிவு முத்திரை பளிச்சிடும் வண்ணம் இதயம் இனிய ஓர் ஏடாக வலம் வந்து கொண்டிருக்கிறது. மிகக் குறைந்த அளவே திரைச் செய்திகள் இடம்பெறுகின்றன. இலக்கிய நயம் சான்ற படைப்புகளும் சமுதாய உணர்வு வெளிப்பாட்டுக் கட்டுரைகளும், அவ்வப்போதைய சூழலுக் கேற்ற ஆசிரியர் உரைகளும் இதழுக்கு அழுத்தம் சேர்க்கின்றன. ஆசிரியர் எழுதிவரும் அவரின் ஊடகத் துறை பற்றிய தொடர்கட்டுரை பழைய நினைவுகளைக் கண்முன் கொண்டுவருகின்றது. குறிப்பு: தரம் மிக்க ஓர் ஏடாய் வந்துகொண்டிருந்த இது, அண்மையில் தன் இலக்கியச் செலவை முடித்துக்கொண்டது.

மன்னன் (1996)

பத்துமலையிலிருந்து 1996ஆம் ஆண்டு முதல் இடைவிடாது தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் மாத இதழ் 'மன்னன்'. இதன் ஆசிரியர் திரு. எஸ்.பி. அருண். இவ் விதழில் சமுதாய உணர்வு கொண்ட ஆசிரியர் உரைகள் (Editorial) இடம்பெறும் அதே நேரத்தில் 'என்றென்றும் ரொமென்ஸ்' என்பது போன்ற பாலியல் தொடர்பான தொடர்கட்டுரை களும் இடம்பெறுகின்றன. 'மாம்ஸ் கோனர்' என்ற தலைப்பில் ஒரு பகுதி இடம்பெற்றுள்ளது. அது திரையுலகு தொடர்பான வினா விடைப் பகுதி யாகும். பொழுதை ஓட்டத் துணுக்கு விருந்து மிகுதி. இந்த அமைப்பைக் கொண்ட இவ் விதழில் மாணவர்களை நேர்கண்டு எழுதும் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

செம்பருத்தி (1998)

கோலாலம்பூரிலிருந்து 1998 முதல் வெளிவரும் செம்பருத்தி ஒரு திங்கள் ஏடு ஆகும். இதன் ஆசிரியர் மணியம் சின்னப்பன், பொறுப் பாசிரியர் பூங்குழலி வீரன். தூயதமிழ் வளர்த்தல், சமுதாயச் சிக்கல்களைத் துணிவுடன் எடுத்துக்காட்டித் தீர்வுக்கு வழிகாணுதல், உரிமை நலம் பறிபோகாமல் விழிப்புடன் செயலாற்றுதல், தமிழ்ப்பள்ளிகளை நிலைக்கச் செய்தல், ஈழம் முதலாய அயலகத் தமிழர் நலனுக்கும் அறவழி நின்று குரல் கொடுத்தல் போன்ற உயர்ந்த குறிக்கோள்களோடு நடைபோடும் இதழ் இது. வருவாயை நோக்கமாய்க் கொண்டு வளைந்து கொடுக்காமல் தொண்டு மனத்தோடு உழைக்கும் தூய இதழ் இது. 'உன் உரிமையை இழக்காதே; பிறர் உரிமையைப் பறிக்காதே' என்பது இதன் மூச்சாகும்.

இது நலிந்தோர்க்கு ஒரு போர்வாள்; உரிமை நலம் பேணுவோர்க்கு ஒரு கலங்கரை விளக்கம்; கல்விச் செல்வம் தேடுவோர்க் கொரு கைவிளக்கு, கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல் எனப் பலதுறைப் பார்வையோடு உலா வரும் ஓர் உறுதிமிக்க ஏடு இது.

உங்கள் குரல் (1977)

பினாங்கு நகரிலிருந்து 1977 முதல் நடைபோட்டு வரும் திங்கள் இதழ் 'உங்கள் குரல்'. சீனி நைனா முகம்மது இதன் ஆசிரியராவார். தூயதமிழ் வளர்த்தல், இலக்கண நெறி பிறழாத படைப்புகளைத் தருதல், கல்வி ஒளியைப் பரப்புதல், வருங்காலத் தலைமுறைக்கு வழிகாட்டுதல், தமிழுக்குக் கேடு சூழுங்கால் எதிர்த்துப் போராடுதல், உண்மை எனப் பட்டதை ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்துச் சீர்மைக்கு வழிகாணுதல் போன்ற உயர்ந்த கொள்கைகளோடு வெளிவரும் ஓர் உயரிய இதழ் 'உங்கள் குரல்'.

திரைச் செய்திகளோ கவர்ச்சிப் படங்களோ இல்லாமல், பண்புக்குப் புறம்பான பயனற்ற நையாண்டித் துணுக்குகளைச் சேர்க்காமல், உயர்ந்த படைப்புகளையே வெளியிடுதல் இதன் குறிக்கோளாகும். எதிர்காலத் தலைமுறையின் கல்வி வளர்ச்சியை மனத்துள் கொண்டு இளநிலையி லிருந்து (PMR)இடைநிலை (SPM), உயர்நிலைக் கல்விச் சான்றிதழ் (STPM), ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இலக்கியம் வரையிலும் விளக்க மளித்து, தேர்வெழுதும் மாணவர்க்கு வழிகாட்டும் ஒரு கலங்கரை விளக்க மாக ஒளிவீசும் ஒரு கல்வி ஏடாகவும் இது மிளிர்கிறது. தேர் வெழுதும் மாணவர்களுக்கு வழிகாட்டி விளக்கங்கள் அளிக்கும் இவ் விதழ் ஒரு நல்லகல்வி ஏடாக மிளிர்கிறது.

இதனில், சங்க இலக்கியச் சாரம் உண்டு; இலக்கண விளக்கம் உண்டு; புத்திலக்கியப் பூங்காற்று உண்டு; கதை உண்டு; கட்டுரை உண்டு; கவிதை உண்டு. பல விழுப்பொருள்களின் கோவை எனத் தகும்படி இவ் வேடு உலா வந்துகொண்டிருக்கிறது. ஹாஜி தஸ்லிம் போன்ற புரவலர்கள், நன்மனங்கொண்ட ஆசிரியர் பெருமக்கள் இதன் நிலைப்பாட்டிற்கு உதவி வருகின்றனர்.

நம்பிக்கை (1997)

பெட்டாலிங் ஜெயாவிலிருந்து 1997ஆம் ஆண்டு முதல் வெளி வந்துகொண்டிருக்கும் இத் திங்களேடு ஓர் இசுலாம் சமய இதழாகும். சமுதாய நலன் கருதி மார்க்கக் கல்வி, உலகக் கல்வி, பொருளாதாரம், இன ஒற்றுமை ஆகியவற்றை உள்வாங்கிச் செயல்படுவது இதன் நோக்கமாகும். சமய நெறிசார்ந்த படைப்பிலக்கியங்களும், அரசியல், சமுதாயக் கட்டுரைகளும் இதனில் இடம்பெறுகின்றன. இதன் சிறப்பாசிரியர் ஹிஜ்ஜி முகம்மது இக்பால், நிருவாக ஆசிரியர் சைபுதீன் அப்துல் காதர், பொறுப்பாசிரியர் ஃபிதா வுல்லாஹ். இடையிடையே விடுபட்டாலும் நிலைப்பாடு குன்றாமல் வந்துகொண்டிருக்கும் இதழ் இது.

முத்தமிழ் (2000)

டி.வி. இராகவன் (பிள்ளை) ஆசிரியராய் இருந்து 1969 முதல் இவ் விதழை நடத்தினார். இது பல்வேறு நெருக்கடிகளுக்கிடையே 1974 வரை நடைபோட்டது. பின்னர் 2000ஆம் ஆண்டிலிருந்து அவரே ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தினார். அவர் புகழுடம்பெய்தியபின் (27.12.2002) சீராகி ஆசிரியராய்ப் பணியாற்றினார்.

கவிதை யாப்புநெறி தவறாமல் படைக்கப்பட வேண்டுமென்பதில் மிக அழுத்தமாக இருந்தார் டி.வி.ஆர். என்று சுருக்கமாக அழைக்கப் படுபவர் டி.வி. இராகவன் (பிள்ளை). அவர் நிறுவன ஏடான இது அக் கொள்கையை முன்னெடுத்து நடைபோட்டது. கொஞ்சம் திரைக் கவர்ச்சியும் சேர்ந்தாலும், நல்ல படைப்புகள் இதனில் இடம்பெற்றன. மலேசியாவில் இலக்கிய வளர்ச்சியைத் தூண்டும் ஓர் இதழாக வெளிவந்த இது, தன் பயணத்தை நிறுத்திக்கொண்டது.

மலர் (2000)

ப. மகேசுவரனை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் கொண்டு 2000ஆம் ஆண்டு முதல் கோலாலம்பூரிலிருந்து விடுபடாது தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. ஆசிரியர் ஒரு கலைஞர் ஆதலால், அத்துறைச் செய்திகளுக்குச் சற்றுக் கூடுதல் இடம் தரப்பட்டுள்ளது. வாசகர்களுக்குச் சுவையூட்டக் கோடம்பாக்கத் துணுக்குகளும் இடம் பெறுகின்றன. புதுக்கவிதைகள், மருத்துவக் குறிப்புகள் போன்றவையும் இடம்பெறுகின்றன.

புதிய திங்களிதழ்

சமூகம் (2004)

2004ஆம் ஆண்டு சூன் திங்கள் முதல் கோலாலம்பூரிலிருந்து காலாண்டு இதழான சமூகம் வெளிவருகிறது. மலேசிய இந்தியர் காங்கிரசு நிறுவியுள்ள சமூக வியூக அறவாரியம் (YSS-Yayasan Strategic Sosial - Social Strategic Foundation) இதனை வெளியிடுகிறது. இதன் ஆசிரியர் கே.ஏ. குணா. இது குறித்து முற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்மினி

வி.கு. சந்திரசேகரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் திங்கள் இதழ் ‘மின்மினி’. இந்த இதழ் 2005 ஆகஸ்டு முதல் வெளிவந்துகொண் டிருக்கிறது. இது திரைச் செய்தி, படங்கள், கலைஞர்பற்றிய குறிப்புகள் போன்றவற்றுக்கே முதன்மை தருகின்றது எனினும் சிறுகதை, கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

சிறுவர் இதழ்கள்

1939 தொடங்கி 40கள் வரை உலாவந்த 'தமிழ்க்கொடி' திங்கள் இதழே சிறுவர் இலக்கியம் பற்றிய எண்ணத்தை வெளியிட்டது;பாடல்களையும் வெளியிட்டது. அக் காலகட்டத்தில் ந.பழனிவேலு சிறுவர் பாடல்கள் எழுதியுள்ளார். அப் பாடல்கள் அவரின் படைப்புகள் அடங்கிய தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அப் பாடல்கள் பெரும்பாலும் 'தமிழ்முர'சில் இடம் பெற்றிருக்கலாம்.

இடைக்காலத்தில் குழந்தைப் பாடல்களை, கதை, கட்டுரைகளை எந்த இதழாவது வெளியிட்டதா என அறியக்கூடவில்லை. கோ.சாரங்கபாணி 'தமிழ்முர'சில் வெளியிட்ட (1953) மாணவர் மணிமன்ற மலரே இங்கு வெளிவந்த முதல் சிறுவர் இதழாகத் தெரிகிறது. பின்னர் 1963-ல் தமிழ்நேசன் சிறுவர் அரங்கம் (இப்போது மாணவர் பூங்கா) வெளியிட்டது; தொடர்ந்து வெளியிட்டும் வருகிறது. ஆனால், இப்போது தனி இதழாக வெளியிடவில்லை. திங்கட்கிழமைதோறும் ஒரு பக்கத்தை இதற்காக ஒதுக்குகிறது.

இந் நாட்டில் வெளிப்போந்த எல்லா நாளிதழ்களுமே சிறுவர் பகுதியை வெளியிட்டன. பருவ இதழ்கள் சிலவும் சிறுவர்களுக்கு ஓரிரு பக்கங்கள் ஒதுக்கின என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர் பூங்கா (1956)

சிறுவர்களுக்கென்றே தனி இதழை இங்கு முதன் முதல் வெளியிட்ட பெருமை மு. அப்துல் லத்தீப்பைச் சாரும். 'மாணவர் பூங்கா' என்ற பெயரில் 1956-ல் அவர் கோலாலம்பூரிலிருந்து வெளியிட்ட அவ் விதழே சிறுவர்களுக்கென்று தனித்து இங்கு வெளிவந்த முதல் இதழாய்த் திகழ்கிறது. தொடக்கத்தில் கையெழுத்துப் படியாக வந்த அது, பின்னர் அச்சேறி அழகுற வெளிவந்தது. சிறிது காலமே அது நடைபோட்டது.

மாணவன் (1961)

மாணவர் பூங்காவையடுத்து 1961-ல் 'மாணவன்'என்ற தலைப்பில் ஓர் இதழ் சிங்கப்பூரிலிருந்து வெளிவந்ததாக இராம. சுப்பையா தம் தமிழ் மலேசியானா நூலில் பட்டியலிட்டுள்ளார். அதனை நடத்தியவர் பசீர் அகம்மது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேற்கொண்டு வேறு விவரங்கள் கிடைத்தில.

அன்னை (1963)

மற்றொரு சிறுவர் இதழ் முத்திங்கள் வெளியீடாக (Fortnightly) கோலாலம்பூரிலிருந்து வெளிவந்துள்ளது. அதனை நடத்தியவர் கு.ஏழுமலை. அவ் விதழும் நீள வரவில்லை.

மாணவர் உலகம் (1965)

அன்னையை அடுத்து மாணவர் உலகம் என்ற ஓரிதழ் கோலாலம்பூரி லிருந்து 1965-ல் வெளிவந்தது. இதன் ஆசிரியர் திருமதி சானகி வெங்கடேசன். இதுவும் குறுகிய காலமே நடைபோட்டது.

திருமகள் (1969)

மலேசியச் சிறுவர் இதழ்களிலேயே நீண்டகாலம் வெளிவந்த இதழ் 'திருமகள்'. மாணவர் எழுதிய படைப்புகளோடு, மாணவர்க்கு உரிய படைப்புகளும் இதனில் இடம்பெற்றன.

கதை, கட்டுரை, கவிதை என எல்லா வடிவங்களும் இடம்பெற்றன. மொழிப்பயிற்சிகளும், இலக்கண விளக்கங்களும் மாணவர்க்குப் பயன் சேர்த்தன. மாணவரிடையே பள்ளிதோறும் மிகுதியாகப் பரவிய இதழும் இதுவே. இதன் ஆசிரியராய்ப் பணியாற்றியவர் சி.வே. கிருஷ்ணன்.

குயில்

சிறுவர் இதழ் என்னும்போது வண்ணப் பதிப்பாக இங்கு வந்த முதல் இதழ், கு.செல்வராசை ஆசிரியராய்க் கொண்டு ஜெயபக்தி நிறுவனம் (கோலாலம்பூர்) வெளியிட்டும் 'குயில்' ஆகும். இது தமிழ், ஆங்கிலம், மலாய் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆன படைப்புகளை வெளியிட்டு வருகிறது. பள்ளிகள் இவ் விதழை வாங்குவதால் இது தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

இளந்தளிர்

வண்ண அமைப்பில் தமிழ், மலாய், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் வெளிவந்த மற்றொரு சிறுவர் இதழ் `இளந்தளிரி. இது கோலாலம்பூரிலிருந்து உலாவந்தது தமிழர் அறவாரியம் வெளியீட்டது. (தற்பொழுது இதன் வெளியீடு நிறுத்தப்பட்டுள்ளது).

மேற்கண்ட சில இதழ்களில் மூன்று மொழிகளின் படைப்புகளும் பள்ளிப் பாடத் தொடர்புடைய பயிற்சிகளும் இடம்பெறுவதால், சிறுவர் விருப்பத்துடன் படித்து மகிழும் தமிழ்ப் படைப்புகள் குறைவாகவே உள. பாடநூலை நினைவுபடுத்துவதுபோலும் உள்ளன. குழந்தைகள் மனத்தை ஈர்க்கும் உத்திகளோடு புத்தாக்கங்கள் இவற்றில் இடம்பெற்றால், மாணவர்கள் தங்கள் வாசிக்கும் திறனை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாகும்.

புதிய இதழ்கள்

இப் பகுதியை எழுதி அச்சுக்கு அனுப்பிய பின்னர் இரண்டு புதிய நாளிதழ்கள் தோன்றின என்பது வியப்புக்குரிய செய்தியாகும். யானையைக்

கட்டித் தீனி போடுவதுபோன்றது இதழ் நடத்தும் பணி. நாளிதழ்கள் நடத்தும் பணி அதனினும் பன்மடங்கு கடுமையானதாகும். நிலை இங்ஙனமிருக்க ஒரே நேரத்தில் இரு நாளிதழ்கள் அடுத்தடுத்து முகம் காட்ட வந்தது பெரிதும் வியப்புக்குரியதாகும்.

இதழ்த்துறையில் பேராற்றல் பெற்று விளங்கிய ஆதி. குமணன் புகழுடம்பெய்தியபின் அவர் ஆளுகையின்கீழ்ப் பணியாற்றியவர்கள் பல்குழுவாகிப் பிரிந்தனர். அவர் நடத்திய மலேசிய நண்பனை ஒரு குழு நடத்தி வருகிறது. மற்ற ஈரிதழ்கள் வருமாறு:

தமிழ்க்குரல்

புதிய நாளிதழான தமிழ்க்குரல் ஆதி. குமணன் துணைவியார் இந்திரா தேவி பொறுப்பில், அக்கினி சுகுமாரை ஆசிரியராய்க் கொண்டு 28.11.2005 முதல் வெளிவரத் தொடங்கியது.

மக்கள் ஓசை

ஆதி. குமணன் காலத்தில் கிழமை இதழாய் நடைபயின்று வந்த 'மக்கள் ஓசை' 15.12.2005 முதல் நாளிதழாய் வெளிவந்துகொண் டிருக்கிறது. இதன் ஆசிரியர் பெ. இராசேந்திரன்.

சிறுபான்மை இனமான தமிழினத்திற்கு இன்று மூத்த நாளிதழான 'தமிழ்நேசன்', பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் 'மலேசிய நண்பன்' கடந்த பதினோராண்டுகளாகக் கிழமை இதழாய் வெளிவந்து இப்போது நாளிதழாய் ஆகியுள்ள ' மக்கள் ஓசை', புதிதாகத் தோன்றியுள்ள 'தமிழ்க்குரல்' ஆகிய நான்கு இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த நான்கு இதழ்களையும் சமுதாயம் காத்து வாழ வைத்து வருமா? என்பதைக் காலந்தான் உணர்த்த வேண்டும். குறிப்பு : தமிழ்க்குரல் மிக விரைவில் நின்றுவிட்டது.

நிறைவுரை

மிகுதியான இதழ்கள் வெளிவருகின்றன என்பதனைக் கொண்டோ, நீள நடைபோடும் இதழ்கள் பல உள்ளன என்பதனை வைத்தோ, ஒரு சமுதாயம் இதழ்த்துறையில் முதிர்ச்சிபெற்று மிகுந்த பயனை எய்திவிட்டது என்று சொல்ல முடியாது. குறைவான இதழ்களே வெளிவருகின்றன என்பதனைக் கொண்டும், சமுதாயம் அத் துறையில் பயனை ஈட்டவில்லை என்றும் குறைத்துக் கூறமுடியாது. இதழ்களால் சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களை, உண்டான மறுமலர்ச்சிகளைக் கொண்டே இதழ் வரலாற்றுப் பெருமை அமையும்.

போருக்கு முந்தித் தமிழில் பல இதழ்கள் வெளிவந்தன. அவை இலக்கியம் வளர ஓரளவு துணை நின்றனவேயன்றித் தோட்டப்புறங்களில் ஊடுருவி அங்குத் தமிழர் வாழ்வுரிமைக்குப் போராடிப் புதியது புனைய முனையவில்லை; அவ் வாய்ப்பை அவை பெறவில்லை.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் தமிழில் இருபதுக்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்தன.

பெருங்கட்டுப்பாடுகளோடு சீனமொழியில் ஓரிதழ் மட்டுமே வெளி வந்தது. மலாய்இதழ்கள் சிலவே வெளிவந்தன. அவையும், விடுதலை உணர்வைப் பரப்ப இயலா வண்ணம் கண்காணிக்கப்பட்டன. ஆனால், சீனர் பெற்ற பெருவாழ்வை, மலாய்க்காரர் பெற்ற உரிமை வாழ்வைத் தமிழர் பெறவில்லை.

இங்குத் தமிழில் இதுவரை 300 இதழ்கள் வரை வெளிவந்துள்ளன. ஆனால், பல நீடித்த வாழ்வைப் பெறவில்லை. நீள நடைபோட்டவற்றுள் சில சமுதாய உயர்வுக்குப் பலவகைகளிலும் துணைநின்றன. அவற்றுள் ஒருசில மட்டும் ஈண்டு எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

மூத்த தமிழ் நாளிதழ்

இங்கு வெளிவந்துகொண்டிருக்கும் ‘தமிழ்நேசன்’, மலேசியாவின் மூத்த நாளிதழாகும். இவ் விதழ் சமுதாய உயர்வுக்கு வழிகாட்டியதை மறுக்க இயலாது. கல்வி, கலை, இலக்கிய வளர்ச்சிக்கும், சமய, ஆன்மிக மேம்பாட்டிற்கும், இவ் விதழ் ஆற்றிய பங்கு மிகுதி. ஒரு நாளிதழ் 80 ஆண்டுகளுக்குமேல் இடைவிடாமல் உலா வருவதென்பது, எளிதான செயலன்று. பொருளற்ற வெற்றுரைகளைப் பரப்பும் எவ்விதழும் நிலைக்க முடியாது. வளைந்து கொடுக்கும் தன்மையோடு சூழ்நிலைக் கேற்பச் செய்யவேண்டுவனவற்றை அது செய்தே வந்துள்ளது.

1923ஆம் ஆண்டுதொட்டு இன்றுவரை எத்தனையோ மேடு பள்ளங்களை எதிர்கொண்ட தமிழினத்திற்குப் பல்வகைகளில் துணை நின்றுள்ளது. தொழிலாளர் போராட்டங்கள், சமுதாயச் சிக்கல்கள், பொருளாதார வளர்ச்சி, மாணவர் மேம்பாடு, கல்வி வளர்ச்சிப் பணிகள், எழுத்துத் துறை வளர்ச்சி, அரசியல் நடவடிக்கைகள் போன்ற பலவற்றுக்குத் தமிழ்நேசன் துணைபுரிந்துள்ளது.

தோட்டப்புறங்களில் அடிமை இருள் சூழ்ந்து ஆங்கிலேயர் மக்களை ஆட்டிப்படைத்த காலத்தில் தோன்றி, நெருக்கடி மிக்க இரண்டாம் போர்க்காலத்திலும்; கொடுமையான சப்பானியர் (படை) ஆட்சிக்காலத் திலும் நின்று நிலைத்துச் செய்திகளை மக்களுக்குத் தந்துள்ளது;

விடுதலைக்குப்பின் சமுதாயம் எதிர்கொண்ட போராட்டங்களுக்குத் துணை நின்றுள்ளது; இப்போதைய எழுச்சிக்கும் கைகொடுத்து வருகிறது.

மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இதழ்

'எல்லாம் தலைவிதி' என்று ஏங்கி இளைத்துக்கொண்டிருந்த தமிழர் சமுதாயத்தைத் 'தமிழ்முரசு' நாளிதழ் சிந்திக்க வைத்தது; தட்டி எழுப்பியது; மூடநம்பிக்கைகளிலிருந்து பேரளவு மீட்டது; மறுமலர்ச்சிச் சிந்தனையை ஊட்டியது; தாய்மொழிப் பற்றை மனத்துள் பதித்தது; கலை, இலக்கியப் பண்பாட்டுச் செல்வங்களை நிலைப்படுத்திக் கொள்ளும் உறுதியைச் சேர்த்தது; தமிழர் 'திருநாள்' மூலம் புதியதோர் சமுதாயம் தோன்ற வழிவகுத்தது; மாணவர் மணி மன்றத்தின் மூலம் சிறுவர்களுக்கு வழிகாட்டி அவர்களைத் தமிழுணர்வுள்ளவர்களாக வளர்த்தது; அதன் மூலம் 'தமிழ் இளைஞர் மணிமன்றங்கள்' உருவாக வழிவகுத்தது; பல்கலைக் கழகத்தில் தமிழ் அரியணை ஏறத் 'தமிழ் எங்கள் உயிர்' என முழங்கி இனம் எழுச்சிபெற்று வெற்றிகாண அடித்தளம் போட்டது. இவ் வருஞ் செயல்களை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. சிங்கப்பூரில் தமிழ் ஆட்சிமொழிகளில் ஒன்றாக அவ் விதழ் அளித்த பங்கை உலகத் தமிழினம் மறந்துவிட முடியாது.

அவ் விதழ் தற்போது சிங்கப்பூர் ஏடு எனினும் 1965 வரை இங்குத் தமிழர்தம் தங்க ஏடாக வலம் வந்ததாகும். இவை வெற்றுரைகளல்ல; விளைவுகளின் தொகுப்புரை.

உறுதியான அடிப்படையோடும், நிலைப்பாட்டை மெய்ப்பிக்கும் பின்புலத்தோடும், ஆதாயமே நோக்கமென்றெண்ணாத கொள்கைப் பிடிப்போடும், எவ்விடர் வரினும், எதிர்த்துப் போராடும் துணிவோடும், உண்மையை எடுத்துரைக்க அஞ்சாத மறநெஞ்சத்தோடும், தகுதியான வர்களைத் தம்முடன் இணைத்து வேலை வாங்கிய ஆளுமையோடும் ஆசிரியர் கோ.சாரங்கபாணி செயல்பட்டதால் இப்படி ஒரு நிலை மலர்ந்தது.

மேற்கண்ட இவ்விரு மூத்த இதழ்களோடு இளைய இதழ் களில் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் நாளிதழ் மலேசிய நண்பன். குறுகிய காலத்தில் அது மக்களிடையே செல்வாக்குப் பெற்ற இதழாக வளர்ந்தது. சமுதாயத்தில் தோன்றிய சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் அது துணிச்சலோடு கருத்துகளை எடுத்துரைத்தது; எங்குத் தவறு கண்டாலும் சான்றோடு எடுத்துரைக்கத் தயங்கவில்லை. அரசியல், சமுதாயம், கல்வி, கலை, இலக்கியம், பொருளாதாரம் போன்ற எல்லாத் துறைகளையும், கண்ணோட்டமிட்டு எழுதியது; அஞ்சா நெஞ்சமும், சொல்ல வேண்டி

யதைச் சொல்லியே ஆகவேண்டுமென்ற வேட்கையும், துணிவும், சமுதாய நலனும், சீர்திருத்தச் சிந்தனையும் கொண்டு செயல்பட்டது. படைப்பாளருக்கும் ஊதியம் கொடுத்து ஊக்கப்படுத்தும் செயலால் இது இதழ்த்துறையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திற்று என்பது குறிப்பிடத்தக்கது.

சிற்றிதழ்கள் என்று பார்க்கும்போது எண்ணற்ற இதழ்கள் கண்ணில் படுகின்றன. பழைய இதழ்களில் `தமிழ்க்கொடி', மலேசியத் தமிழ்இதழ் வரலாற்றில் அழுத்தமான ஓரிடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. 'சோலை' என்ற ஓரிதழ் குறுகியகாலமே நடந்தாலும் ஆய்வாளர் பலரும் எடுத்துக்காட்டும் அருமையான ஓரிதழாகப் பெயரைப் பதிவுசெய்து கொண்டிருக்கிறது.

1950ஆம் ஆண்டிற்குப் பின் மலைமகள், மாதவி, பொன்னி, உதயம், புதிய சமுதாயம், திருமுகம், நம்குரல், மயில் போன்ற சில இதழ்கள் பல நல்ல விளைவுகள் ஏற்படத் துணைபுரிந்துள்ளன.

இப்பொழுது சற்றேறக் குறைய 20 சிற்றிதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றுள் சில சிறப்பாகக் குறிக்கத்தக்கனவாகும். சமுதாய நலன் நாடி உரிமைக் குரலெழுப்பி உறுதியோடு நடைபோடும் இதழ் `செம்பருத்தி'. இது திரைப்படக் காற்று நுழையாத பூஞ்சோலை யாகும். `இதயம்' என்ற இதழ் குடும்பப் பாங்கான ஓர் உயரிய இதழாகும். `உங்கள் குரல்' கல்விப் பேரொளியோடு மாணவர்க்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு கைவிளக்காக நடைபயில்கிறது.

`நயனம்' போன்று பொழுதுபோக்கு அம்சங்களோடு ஆழமான கருத்துப் படையல்களும் தரும் வண்ணம் சில இதழ்கள் வருகின்றன. `வானம்பாடி' போன்று சுவைத் துணுக்குகள் நிறைந்து நிரம்ப வாசகர் களைக் கவரும் நோக்கொடும் சில இதழ்கள் வெளிவருகின்றன.

புற்றீசல்கள்போல்...

கணினி வந்தபின் இதழை உருவாக்கி வெளியிடும் பணி எளிதாகி விட்டது. அதனால் எண்ணற்ற இதழ்கள் தோன்றுகின்றன; உறுதியான அடிப்படை இல்லாததால் தோன்றிய வேகத்தில் மறைவெய்துகின்றன.

தமக்குரிய மொழி ஆற்றல், பொருள் வளம், இதழ்த்துறைப் பட்டறிவு, விளைவுகளை எதிர்கொள்ளும் மனவுறுதி, ஆளுமைத்திறன், சமுதாயப் பின்புலம்போன்ற திறன்களொடு இதழ் விலைபோகக்கூடிய வாய்ப்பு, வாசகர் எண்ணிக்கை போன்றவற்றைப்பற்றி யெல்லாம் எண்ணிப் பார்க்காமல் நினைத்த மறுநொடியே இதழை அச்சிட்டு வெளியிடும்

போக்கால்தான், புதிது புதிதாய்த் தோன்றும் இதழ்களில் மிகப் பெரும்பாலானவை முளைவிட்டுத் தளிராகுமுன்பே மடிந்துவிடுகின்றன. வாழும் இதழ்களுக்கும் இதனால் ஊறு நேர்கின்றது. ஏனெனில், இதழ் வாசிப்போர் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவே உள்ளது. சிலர், புதிதாய் ஒன்று வரும்போது பழையதை மறந்துவிடுகின்றனர். அதனால், சில நல்ல இதழ்கள் வலுவிழக்கின்றன. புதிய வாசகர்கள் உருவாகும், உருவாக்கும் சூழல் ஏற்படாத நிலையில் தோன்றும் புதிய இதழ்கள் வாழ்விழக்கும்; அல்லது வளமான நல்ல இதழ்களில் வலிமை ஒடுக்கும்.

'ஆனந்த விகடன்', 'குமுதம்' போன்ற தமிழக இதழ்களை நாடு வோர் எண்ணிக்கை இங்கு மிகுதியாக உள்ளது. அவர்கள் மலேசிய இதழ்கள் பக்கம் பார்வையைத் திருப்புவதில்லை. அவர்களை ஈர்க்கும் உத்திகளைக் கையாண்டு, மலேசியத் தமிழ் இதழ்களையும் வாங்க வேண்டுமென்று அவர்கள் மனமாற்றம் கொள்ளும் சூழலை மலரச்செய்தால் இங்கு இத் துறை மேம்பாடு காணும்; அதனால் தமிழுணர்வு மேலோங்கும்; வளர்ச்சிபெருகும்; சமுதாயத்தில் கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்து புதியன பூக்கும்; தமிழ்மொழியும் பண்பாடும் தழைத்து வாழும்.

10. வானொலியில் தமிழ்

தொலைக்காட்சி, கணினி போன்றவை வருவதற்கு முன், வானொலி ஓர் ஆற்றல் வாய்ந்த தொடர்பு கருவியாய் விளங்கிற்று; மக்கள் மனங்களை ஆளும் வாய்ப்பைப் பெற்றிருந்தது. அன்றாட வாழ்வில் அதன் தொடர்பு மிகவும் நெருங்கியதாய் இருந்தது. பொழுதுபோக்கொடு பயனுடைய செய்திகளை, கலைப் படையல்களை அளிக்கும் கருவூலமாய் மிளிர்ந்தது; நாளிதழ் அச்சேறி வருவதற்குமுன் உலக நடப்புகளை அவ்வப்போதே மக்கள் அறியச் செய்தது. மலேசியாவில் தமிழ், தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் வானொலியின் பங்கு அளப்பரியதாகும்.

இந் நாட்டில் வானொலியின் தோற்றம்பற்றி முதலாம் பகுதியிலேயே சுருக்கமாகக் கூறப்பட்டது. இங்குச் சற்று விரித்துக் கூறப்படுகிறது. சப்பானியர் மலாயாவில் - மலேசியாவில் 'JMBK' என்ற பெயரால் ஒலிபரப்பு நடத்தினர் என்றும், அவர்கள் தோல்வி கண்டபின் ஆங்கிலேய அரசு தகவல் துறையுடன் இணைந்து ஒலிபரப்பை விரிவுபடுத்தியது என்றும் முன்பு கிடைத்த குறிப்புகள் கூறுகின்றன. ஆனால், 1921ஆம் ஆண்டிலேயே இங்கு அதற்கான வித்து இடப்பட்ட செய்தியை குமரன் தம் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

1921-ல் மலேசியாவின் தெற்கு மாநிலமான ஜோகூரில் ஏ.எல். பெர்ச் (A.L. Pirch) என்பவர், பிரிட்டனிலிருந்து ஒரு வானொலிப் பெட்டியை எடுத்து வந்தார். கப்பலில் உள்ள ஒலிபரப்புக் கருவியின் மூலமாக ஒலிபரப்பப்பட்டது. 1923-ல் ஜெனிகர் வயர்லெஸ் சங்கத்தின் ('Jober Wireless Society') உறுப்பினர்கள் தங்கள் சக உறுப்பினர்களுக்காக மகிழ்ச்சியூட்டும் பாடல்களையும் உள்நாட்டுத் தகவல்களையும் ஒலிபரப்ப வானொலியைப் பயன்படுத்தினர். 1940கள் வரையில் பினாங்கு, கோலாலம்பூர் மற்றும் பிற மாநிலங்களிலும் இச் சங்கத்தை விரிவுபடுத்தியதன் மூலம் வானொலி ஒலிபரப்புப் பரவியது[10] என்பது அவர் கூறும் செய்தியாகும். தொடர்ந்து அவர் கூறும்பொழுது 1925-ல் -L.B. Birch சிங்கப்பூரில் முதல் வானொலி நிலையத்தை நிறுவினார். அதன் பிறகு 1935-ல் (Caldecott Hill) சிங்கப்பூரில் பிரிட்டிஷ் மலேசியன் ஒலிபரப்புக் கூட்டுத் தலைமை (The British Malayan Broadcasting Corporation) (BMBL) நிறுவப்பட்டது. 1940-ல் மலாயா

அரசாங்கம் இதனை ஏற்று நடத்தியது. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இரண்டாம் உலகப்போர் மூளும் அறிகுறி தென்படவே மக்களின் பாது காப்புக்கும், போர் சம்பந்தப்பட்ட தகவல்களைத் தரவும் இந் நிலையத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது[11] என்கிறார்.

இவ் வட்டாரத்தில் 1925ஆம் ஆண்டிலேயே (சிங்கப்பூர்) வனொலி நிலையம் ஏற்பட்டதெனினும் சப்பானியர் இந் நாட்டைக் கைப்பற்றும் வரை செய்தி என்ற அளவிலேயே தமிழ் இடம் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. தமிழுக்கென்று ஒரு தனி அதிகாரி அமர்த்தம் பெற்றதாகத் தெரியவில்லை. சப்பானியர் JMBK என்ற பெயரில் ஒலிபரப்பு நடத்திய போதுதான் அதன் இந்தியப் பகுதிப் பொறுப்பாளராகத் தி. சு. சண்முகம் அமர்த்தம் பெற்றுள்ளார்.[12] ஆனால், தமிழில் நடத்தப் பெற்ற நிகழ்ச்சிகள் பற்றி எதுவும் தெரியவில்லை. செய்தி கண்டிப்பாக இடம்பெற்றிருக்கு மென்பது மட்டும் உறுதி. சப்பானியர் தோல்விக்குப்பின் நாட்டை மீண்டும் கைப்பற்றிய ஆங்கிலேய அரசு, தகவல் துறையுடன் இணைத்து வானொலி ஒலிபரப்பை விரிவுபடுத்திற்று. அதன்பிறகே 1946-ல் முறையான வானொலி ஒலிபரப்புத் தொடங்கிற்று. அப்போது தமிழ்ப்பகுதிப் பொறுப்பாளராய் அமர்த்தம் பெற்றவர் தஞ்சை எஸ்.தாமஸ்.[13] அவருக்குப் பின் பலர் தலைமைப் பொறுப்புக்கு வந்தனர். அண்மையில் ப. பார்த்தசாரதி வேறு பகுதிக்கு மாற்ற லானதன் பின் இராஜசேகரன் தலைவராய் அமர்த்தம் பெற்றுள்ளார். இவர் ஆளுகையில் நிகழவிருக்கும் மாற்றங்கள், விளைவுகள் இனிமேல்தான் தெரியவரும்.

மக்களொடு நெருங்கிய தொடர்புடைய வானொலி, இங்குத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு காலத்தில் ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். சமுதாயத்தில் அஃது ஏற்படுத்திய நல்லுணர்வுகளும் அதன் விளைவுகளும் பதிவு செய்து வைக்கத் தக்கவை. இதழ்களின் புழக்கம் பரவலாக இல்லாத 1950களிலும் உள்நாட்டு எழுத்தாளர் எழுச்சி பெற்றிருந்த 1960களிலும் வானொலியின் பங்கு அளப்பரியதாகும்.

வானொலி என்பது படித்தவர் முதல் பாமரர் வரை நாடும் கருவி - சாதனமாகும். அனைத்துத் தரப்பினரையும் நிறைவு செய்யும் வண்ணம், அதே நேரத்தில் தரம் தாழ்ந்து போகாமலும் ஒலிபரப்பு அமைய வேண்டும். இவ்வகையில் அக்கால ஒலிபரப்புச் சிறப்புப் பெற்றிருந்தது குறிப்பிடத் தக்கது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் மக்களிடையே எழுச்சி பிறக்கத் தொடங்கிற்று. தோட்டப்புறங்களில் வாழ்ந்த 85% தமிழரிடையே யும் மாறுதல்கள் இலேசாகத் தலைகாட்டத் தொடங்கின. தொழிற்

சங்கங்கள் வலிமை பெற்றன. தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கவசமாய் அவை விளங்கின. மாலை நேரங்களை ஓய்வாகக் கழிக்கும் வேலைமுறை அமைந்தது. சிலர் அந் நேரங்களில் காய்கறித் தோட்டம் போடுதல், கால்நடை வளர்த்தல் போன்றவற்றில் ஈடுபட்டு உதிரி வருமானம் தேடிக்கொண்டனர். சிலர் பொன்னான பொழுதைச் சீட்டாடுவதிலும், வெட்டிக் கதைகள் பேசுவதிலும் கழித்தனர்; குடித்துக் கெட்டோரும் உண்டு.

வெளித்தொடர்புடைய ஒரு சிலருக்கு இதழ்கள் கிட்டும்; நூலும் படிக்கக் கிடைக்கும். பலருக்கு அவ் வாய்ப்போ, திறனோ இல்லை. அக் காலகட்டத்தில் பொழுதைப் பயனுடைய வகையில் கழிக்க வானொலி நிகழ்ச்சிகளே பெருந்துணை புரிந்தன.

அன்று வானொலியில் தரமான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நாட்டு நடப்பு, திரைப்பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், செய்திகள், நாடகங்கள், திரைப்படங்கள், வினா விடை போன்ற பல நிகழ்ச்சிகள் ஒலியேறின. மக்கள் மாலை நேரங்களில் இவை போன்ற நிகழ்ச்சிகளைக் கேட்டுச் சுவைப்பர். அப்போதெல்லாம் வானொலி பெரும்பாலான மக்களைத் தன்பால் ஈர்க்கும் கவர்ச்சி மிக்கதாய்த் திகழ்ந்தது. மாலைப் பொழுதுகள் பயனற்றுப் போகாமல் பலவற்றைத் தொடர்ந்து சுவைத்து மகிழ அது அரிய துணையாய் விளங்கிற்று.

இப்பொழுது தொலைக்காட்சி, இணையம் போன்ற கருவிகள் உலகைச் சிறிய அறைக்குள் கொண்டுவந்துவிடுகின்றன. அவை நன்மை களொடு தீமைகளையும் விளைவிக்கின்றன. ஆனால், அன்று வானொலி மட்டுமே ஊடகங்களில் தலைமையிடத்தில் இருந்தது. அக் காலத்தில் இன்று நிலவுவது போன்று ஒழுக்கக் கேடுகள் நிகழவில்லை; வன்முறை முகங்காட்டவில்லை. அன்பு, ஒற்றுமை உணர்வு, சமுதாய நலன் நாடும் பண்பு, மாந்த நேயம், உதவும் மனப்பான்மை போன்ற உயர்குணங்கள் மக்களிடையே மிக்கிருந்தன. இன்று பல கருவிகள் ஏற்படுத்த முடியாத சமுதாயச் சீர்மையை அன்று ஒரு கருவி ஏற்படுத்திற்று.

வானொலி நிகழ்ச்சிகள் பொழுதுபோக்கை முதன்மை நோக்க மாகக் கொண்டவை எனினும், அவை தமிழ்வளர்ச்சிக்கும் பேருதவி புரிந்துள்ளன என்பதனை மறந்துவிடக் கூடாது. தமிழ் என்னும்போது பேச்சு மொழி, எழுத்துமொழி, அவை சார்ந்த கலை, பண்பாட்டு வளர்ச்சிகளும் உள்ளடங்கியவையாகும்.

வானொலி ஒலிப்பரப்பிய நாடகங்கள்வழி நாடகக்கலை வளர்ந்தது; இசையரங்குகள்வழி இசைக்கலை வளர்ந்தது; ஒலியேறிய சான்றோர் உரை, நேர்காணல்கள்வழிப் பண்பாடு பரவியது; உள்நாட்டுப் பாடல்கள்

வழிப் படைப்பாற்றல் வளர்ந்தது; வினா-விடை நிகழ்ச்சிகளின்வழித் தெளிவு ஏற்பட்டது. நாட்டில், பரவலாக மேடை நாடகங்கள், இசை யரங்குகள், இலக்கிய உரைகள் நடைபெறாத அக் காலத்தில் ஒலிவழியே அக் கலைகளை வானொலி வளர்த்தது. சிறுகதை, நாடகங்கள், இசைப் பாடல்கள், இசை சொல்லும் கதை போன்ற படைப்புகளை எழுதத் தூண்டி உரிய ஊதியம் வழங்கியதன் மூலம் எழுத்து வளர்ச்சிக்கும் துணைபுரிந்தது.

தமிழ்வளர்ச்சிக்கு வானொலியின் பங்கு என்பதை ஆழ்ந்து எண்ணமிடும்போது 1960களின் படைப்புகள் நினைவுக்கு வருகின்றன. ஆம்! மலேசிய வானொலித் தமிழ்ப்பகுதி (சிவப்பு ஒலியலை, வானொலி-6, மின்னல் F.M) வரலாற்றில் 1960கள் ஒரு பொற்காலம் என்பதில் இரு கருத்திருக்க முடியாது. அக் காலகட்டத்தில் தமிழ்ப் பகுதியின் தலைவராய் விளங்கியவர், அண்மையில் வாழ்நாள் சாதனையாளர் விருதுபெற்ற இரா.பாலகிருஷ்ணன். இவர் 1960 தொடங்கிப் பன்னிரண்டு ஆண்டுகள் இப் பகுதியின் தலைவராய்ப் பணியாற்றினார்.

அவருடைய ஆளுகைத் திறன், பல அருஞ்செயல்களை நிகழ்த்திற்று. நாட்டின் மிக உயரிய பதவிகளில் ஒன்றான ஆசிய ஒலிபரப்புக் கழகத்தின் இயக்குநராய் அமர்த்தம் பெற்று 5 ஆண்டுகள் அதனை மிகச் சிறப்பாக வழிநடத்தியது இவரின் நிருவாக ஆற்றலுக்கு ஒரு சான்றாகும்.

சிறந்த நிருவாகியான திரு.பாலகிருஷ்ணன் நிகழ்ச்சிகள் உருவாக்கத்தில் மிகுந்த கருத்துடையவர்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்." (குறள்.517)

என்னும் திருவள்ளுவர் கருத்துப்படி திறமைமிக்கவர்களிடம் பொறுப்பு களை ஒப்படைத்து உருவாக்கங்கள் உயிர்பெறச் செய்வார். அவரின் வெற்றிகளுக்கான பின்னணியைப்பற்றிக் கேட்டபோது (நேர்கண்ட நாள் 17-4-2001) "திறமைகொண்டவர்கள் பணியில் இருந்தனர்; மொழிப்பற்றும் தெளிவும் கொண்டவர்களாகவும் அவர்கள் விளங்கினர். அதனால் நல்ல நிகழ்ச்சிகள் உருவாயின. அவர்கள் தனிப்பட்ட பெயரோ, குரலோ பெரி தெனச் செயற்படவில்லை. அவர்கள் எடுத்துக்கொண்ட கருவைச் சொல்ல வேண்டிய தகவலை, வழங்க வேண்டிய முறையில் கலையம்சம் குறையாமல் வழங்கினர். ஆனால் இன்றைய நிலை வேறு" என்றார்.

"அன்றைய அறிவிப்பாளர்கள், செய்தி வாசிப்பாளர்கள், வானொலி நிகழ்வுகளில் பங்கேற்ற கலைஞர்கள் முறையான உச்சரிப்பொடு நல்ல

தமிழ்ச்சொற்களைக் கையாண்டனர். இந்த நிலைக்கு உங்கள் பங்கு என்ன?" என்று கேட்டதற்கு,

"மொழித்திறன் மிக முக்கியம். தமிழ் ஒலிபரப்பில் பணிபுரிவோர் தமிழ்மொழி உச்சரிப்போடு ஆங்கிலம், மலாய்மொழி உச்சரிப்புகளையும் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் அம் மொழிப்பெயர்களைப் பயன் படுத்தும்போது பிழையற உச்சரிக்க வேண்டும். அதற்காகப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களை அழைத்துப் பயிற்சி அளிக்கப்பட்டது" என்றார். மேலும், "கூடியவரை அனைத்து நிகழ்ச்சிகளையும் கேட்பேன். குறை தென்பட்டால் உடனே உரியவர்களை அழைத்துச் சுட்டிக்காட்டுவேன். அடுத்துப் பிழைவராமல் பார்த்துக்கொள்ளச் சொல்வேன்" என்றார்.

தொடர்ந்து வானொலியில் ஒலிபரப்பான படைப்புகள்பற்றி வினவியபோது, மிக உயரிய படைப்புகள் அக் காலத்தில் உருவாக்கப் பட்டன. உள்நாட்டுப் படைப்புகளோடு, தமிழகத்திலிருந்து வந்த தரம் மிக்க கலைஞர் அனைவர் படைப்புகளும் பதிவு செய்யப்பட்டன. இசைக் கலைஞர்கள், நாடகநடிகர்கள், இலக்கிய வாணர்கள் போன்றோர் அரும்படைப்புகள் பதிவு செய்யப்பட்டு ஒலியேற்றப்பட்டன. உதாரணத்திற்கு இசைக் கலைஞர் பால முரளிகிருஷ்ணா இசை நிகழ்வு 40 மணிநேரத் திற்குப் பதிவாயிற்று. ரெ. சண்முகம்தாம் உடனிருந்து செய்தார் என்றார். உடனிருந்த ரெ.ச.வும் அதனை வழிமொழிந்ததோடு, மரபுவழியிலான செவ்விசையில் வல்லவர்களாகக் கே.பி. சுந்தராம்பாள், சீர்காழி கோவிந்தராசன், அய்யலூர்க் கிருஷ்ணன், குருவாயூர் சகோதரர்கள், ஜெய விஜயா, சகோதரர்கள் திருவெண்காடு சுப்பிரமணியப் பிள்ளை, நாமகிரிப்பேட்டைக் கிருஷ்ணன் போன்றோர் அரிய படைப்புகளும் பதிவு செய்யப்பட்டு ஒலியேற்றப்பட்டன என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்த ரெ.ச., 'இலக்கிய, புராண, இதிகாச நாடகங்கள், உள்ளூர்ப் பாடல்கள் எண்ணற்றவை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பி, அவை ஆவணம்போல் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. ஆனால் பின்வந்தோர் எல்லாவற்றையும் அழித்துவிட்டனர்' என்று வருத்தம் தோயக் கூறினார். தொடர்ந்து கருத்துரைத்த அவர் "திரு.பாலா அப்பழுக்கற்ற தமிழ் நெஞ்சர், புத்துலக இசை வளர்ச்சியோடு செவ்விசை (கருநாடக சங்கீதம்) வளர்ச்சியிலே நாட்டம் உடையவர். அது எதற்கு? என்று கேட்ட சிலரின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது ஒலிபரப்பில் அதற்கு உரிய இடத்தை வழங்கி யிருந்தார். மிக அதிகமான செவ்விசைக் கலைஞர்களின் படைப்புகளைப் பதிவு செய்து பெரும் கருவூலமாக ஒலிபரப்புத் துறைக்குத் தந்து சென்றார். அந்த வழியெல்லாம் பின்னர் அடைபட்டுப் போயின" என்றார். அண்மையில் சாதனையாளர் விருது பெற்றவர்களான நாகசாமி பாகவதர், (செவ்விசைச்

சித்தர்) ரெ.சண்முகம் வானொலியில் பகுதிநேரக் கலைஞராய் நிகழ்வு களைப் படைத்த நா.மாரியப்பன் போன்றோர் பாலகிருஷ்ணனின் முயற்சிக்குக் கைகொடுத்தனர்; செவ்விசைக் கலவையிலான மெல்லிசை (Semi Classic) வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய நிகழ்வுகள்பற்றித் தொடர்ந்து கூறிய பாலகிருஷ்ணன் "கா.பெருமாளின் வில்லுப்பாட்டு நிகழ்வுகளை வானொலி ஒலிபரப்பியது. குருகுல முறையில் பயின்ற கலைஞரான அவரின் பல நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாயின" என்றார். அவரைத் தொடர்ந்து ரெ.ச. சொன்னபோது, 'பெருமாள் அண்ணனின் கட்டைவிரல் கவிதை நாடகத்துடன் ரெ.இராமசாமி, மு.சேதுராமன், ப.மு. அன்வர், தை. சே. பெ. பொன்னம்பலம், ஐ. உலகநாதன் ஆகியோரின் கவிதை நாடகங்கள் ஒலிபரப்பாயின' என்றும் குறிப்பிட்டார்.

வானொலி மொழிநடைபற்றி பாலகிருஷ்ணனிடம் வினவியபோது, 'நான் தனித்தமிழ் இயக்கத்துக்கு எதிரானவன் அல்லன். அதே நேரத்தில் புரியாத சொற்களை வலிந்து புகுத்தி இரசிகர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்துபவனும் அல்லன். அதே நேரத்தில் மொழித்தூய்மையிலே என் கருத்து இருந்தது. மொழியின் இயல்பு குன்றுமாறு பிறமொழிச் சொற்களை அளவுக்கதிமாகக் கலப்பதும் எனக்குப் பிடிக்காது. அன்று பணியாற்றிய பெரும்பாலோர் இக் கருத்துக் கிசையப் பணியாற்றினர். நான் வேறு துறைக்கு மாற்றலான பின், வேண்டா என ஒதுக்கப்பட்ட 'நமஸ்காரம்', 'சந்தோஸம்' போன்ற சொற்கள் தலையெடுத்தன. அவற்றைக் கேட்டு வருந்தினேன். பொறுப்பிலில்லாத நான் அதனில் தலையிடவில்லை' என்றார்.

பாலகிருஷ்ணன் கூறுவதுபோல் அன்று வானொலியிலும், வானொலியில் பணியாற்றிக்கொண்டே தொலைக்காட்சியில் செய்தி படித்தோரும் நல்ல தமிழைப் பயன்படுத்தினர். தமிழகத்து வானொலி, தொலைக்காட்சி உரைநடை எல்லாரும் அறிந்ததே. உலகிலேயே நல்ல தமிழ் உரைநடையைப் பயன்படுத்திய வானொலி நிலையம் மலேசிய வானொலி நிலையமாகும். சிங்கப்பூருக்கும் இச் சிறப்புண்டு. அந்த நிலை படிப்படியாக மாறி வருவது வருத்தத்திற்குரியதாகும்.

"பாலகிருஷ்ணன் காலத்து வானொலி நிகழ்ச்சித் தரம் மேம் பட்டிருந்ததற்கு அன்று அவர்க்கிருந்த அதிகாரம், உரிமை ஒரு காரணம். மேலும் அன்று வர்த்தக ஒலிபரப்புத் திட்டம் இல்லை" என்று கருத்துரைத்தார் மலேசிய சிங்கை வானொலிக் கலைஞராய் நீளப் பணியாற்றிய ரெ. சண்முகம் அவர்களுக்குப் பதிலளித்த பாலகிருஷ்ணன்:

"உரிமைபற்றிப் பேசும்போது கடமைபற்றியும் எண்ண வேண்டும். வர்த்தக ஒலிபரப்பு எனினும் மனமிருந்தால் நல்லன படைக்க முடியும்" என்றார். தொடர்ந்து அவர் அறிவிப்பாளர் திறம்பற்றிக் கூறியபோது, "அறிவிப்பாளர் ஒரு நடிகர் அல்லர். நாடகத்தில் பல பாத்திரங்கள் உண்டு. அந்தந்தப் பாத்திரத்திற்கேற்ற முறையில் நடிப்போர் பேசி நடிக்க வேண்டும். ஆனால், அறிவிப்பாளர் நிலை வேறு. அவர் அறிவிப்பாளருக்குரிய இலக்கணத்தோடு பேச வேண்டுமே அல்லாது நினைத்தபடி யெல்லாம் நடந்துகொள்ளக் கூடாது. இன்று எல்லாமே மாறி வருகிறது. ஒருவரை நேர்காணும்போது, அவர் கருத்தைச் சொல்ல விடவேண்டும். அறிவிப்பாளர் குறுக்கே வெட்டி, அவருக்கு விளக்கம் தருவது போன்றோ குறைவு ஏற்படுவது போன்றோ (அதிகப் பிரசங்கித்தனமாக) நடந்துகொள்ளக் கூடாது" என்றார்.

அக் காலத்தில் பாலகிருஷ்ணன் தலைமையில் பணியாற்றிய வானொலி அறிவிப்பாளர்களும், பகுதிநேரக் கலைஞர்களும் அவர் கூறும் இலக்கணத்தைப் பின்பற்றிச் சிறப்பாகப் பணியாற்றினர். தேவையில்லாத உளறல்களெல்லாம் அக் காலத்தில் இல்லை; மொழிச்சிதைவும் இல்லை. மை. அசன்கனி, ரெ. சண்முகம், எஸ். ஆரோக்கியசாமி, எஸ்.ஆர். எம். பழனியப்பன், நா. பாஸ்கரன், பைரோஜி நாராயணன், ரெ. கார்த்திகேசு, மை. சுல்தான், துளசி கிருஷ்ணன், கமலா தேசிகன், புவனேஸ்வரி, சரஸ்வதி சியாமாகிருஷ்ணன் போன்றோர் வானொலித் தமிழ்ப்பகுதியைத் தமிழ் கொஞ்சும் பூஞ்சோலையாக ஒளிரச் செய்தனர். செய்தி வாசிப்பிலும் பலர் முத்திரை பதித்தனர். அவர்களுள் தனிமுத்திரை பதித்து ஒலிபரப்பு வரலாற்றில், தம் வெண்கலக் குரலாலும் பைந்தமிழ்த்தேன் பிலிற்றிய நாவாலும் அழுத்தமாகப் பதிந்திருப்பவர் மை. தீ. அசன்கனி.

புதிய தலைமுறையினரும் அந் நிலையை அடைந்து சிறக்கப் பழுத்த பட்டறிவு வாய்ந்த இரா. பாலகிருஷ்ணன் முதலாயோர் கருத்துகளைப் பெற்றுச் சீர்மைக்கு வழிதேடிக் கொண்டு புதியன படைத்துப் புகழீட்ட முடியும்; தாய்மொழி வளர்ச்சிக்கும் அரணாகத் திகழ முடியும்.

இன்றைய நிலை

வானொலியின் பங்கு இன்றும் மக்களுக்குப் பயனுடையதாகவே விளங்குகிறது. நாட்டின், உலகின் அவ் வப்போதைய நிகழ்வுகளை உடனுக் குடன் அறிந்துகொள்ள அது துணைபுரிகிறது. நேர்காணல்கள், நாடகங்கள், உரைகள் போன்றவை பேச்சுத்தமிழ் வளர்ச்சிக்கு உதவுகின்றன. ஆனால், இவை மிகக் குறைந்த அளவே ஒலியேறுகின்றன. வாணிக நோக்கில் வருவாய் ஈட்டலே இன்று முதன்மை நோக்கமாய்விட்டது.

துண்டு துணுக்குகளையும், திரைக்கூத்துகளையும், கலகலப்பூட்டப் பயனற்ற செய்திகளையும் வெளியிட்டுப் பொருளீட்டுதலே நோக்க மாய்க்கொண்டு மூன்றாம் தர இதழ்களின் நிலைக்கு, அரசு பொறுப்பில் நடக்கும் வானொலியும் இறங்கிவிடக் கூடாது.

ஊடகங்களில் உயர்தரமான படைப்புகள் வெளிவர வேண்டுமென்று அரசு நினைவூட்டிக் கொண்டுதான் வருகிறது. ஆனால், பொருளையே குறியாய்க்கொண்ட போக்கு மாறவில்லை; நோக்குச் சிறக்கவில்லை. பயன் சேர்க்கும் படைப்புகள் அரிதாகவே இடம்பெறுகின்றன. மிளகாய்ப் பொடிக்குத் தரப்படும் முதன்மை மேன்மை மிகுந்த கருத்துப் படையல் களுக்குத் தரப்படுவதில்லை.

அரசு சொல்வதனை ஏற்றுச் செயல்படுத்த முடியாத இடையூறுகள் நீங்க வழிகாண வேண்டும். இலக்கிய நிகழ்வுகளுக்கு உரிய இடம் தரப்பட வேண்டும். தொலைக்காட்சி, இணையத் தாக்கம் மிகுந்துவிட்டாலும் வானொலியின் பங்கு இன்றும் முதன்மையுடையதாகவே விளங்குகிறது. இயங்கியில் செல்லும்பொழுதும் சமையல்போன்ற பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுதும் வானொலியே துணைபுரிய முடியும். ஊடகங் களில் ஒதுக்க முடியாத கருவியாக-சாதனமாக விளங்கும் வானொலி, வணிக விளம்பரங்கள் மூலம் வருவாய் தேடுவதையே நோக்கமாய்க் கொள்ளாமல் உயரிய படைப்புகளை அளித்தால்தான் சமுதாயத்தில் சீர்மை ஓங்கும்; ஓங்க வேண்டும்!

கல்வி ஒலிபரப்பு

கல்வி அறிவென்பது புத்தகங்களிலிருந்து மட்டும் பெறுவதன்று. கால மாறுதல்களுக்கேற்ற கருவிகள், பயன்பாட்டுக்கு வருதல் இயல்பாகும். அம் முறையில் கல்வித் துறையில் அறிமுகமானதுதான் கல்வி ஒலிபரப்பு.

கல்வி வளர்ச்சிக்குக் கேட்டல் திறன் மிக முதன்மையானதாகும். கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன் பெற்றாலன்றிப் பேசும், எழுதும் திறன்கள் வாய்க்கா. ஆகக் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய நான்கு திறன்களும் நிறைவாக அமைவதே முறையான கல்வி வளர்ச்சியாகும்.

மேற்கண்ட நான்கு திறன்களுக்கும் மூலமான திறன் கேட்டல் திறன் எனலாம். ஒரு குழந்தை கேட்கும் திறனையே முதலில் பெறுகிறது கேட்டுக் கேட்டுத்தான் பேசப் பழகுகிறது. திருவள்ளுவரும்,

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை" (குறள். 411)

என்று கேட்டல் திறனுக்கு முதன்மை தருகிறார். மாணவர்கள் அத் திறனைப் பெற்று, அதன்வழி மற்றத் திறன்களை எளிதில் பெறத் துணைபுரியும் நோக்கொடு கல்வி அமைச்சு, கல்வி ஒலிபரப்பைத் தொடங்கியது (1966). தொடக்கத்தில் அதன் தமிழ்ப்பகுதித் தலைவராய் அமர்த்தம் பெற்றவர், சியாம கிருஷ்ணன். அவரைத் தொடர்ந்து நாராயணன், கே.மாமுண்டி, கு. பவித்திரன், ஆரோக்கியசாமி ஆகியோர் தலைமைப் பொறுப்பிற்கு அமர்த்தம் பெற்றனர்.

கல்வி ஒலிபரப்பு என்பது மாணவர்தம் கற்றல் கற்பித்தலுக்கு உதவும் ஒரு துணைக்கருவியாகும். கரும்பலகையின் முன் அமர்ந்து ஆசிரியர் சொல்வதைக் கேட்டுக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்கும் மாணவர்களுக்கு ஒரு மாறுதல் தரும் ஏற்பாடாக இஃது அமைந்தது; ஆர்வத்தைத் தூண்டும் ஒன்றாகவும் வாய்த்தது.

வரலாறு போன்ற கடுமையான பாடத்தைக்கூட ஒலிவழி அளிக்கும் போது மாணவர் சோர்வின்றிக் கேட்டு உணர்ந்துகொள்வர். அதனை இசைப் பின்னணியுடன் கூடிய நாடகப் பாங்கில் வழங்கும்போது அவர்கள் மனக்கண்முன் வரலாற்றுக் காட்சிகள் நடப்பதுபோன்று உணர்வர்.

கதை கூறலின் போதும், பாடல்களைக் கற்பிக்கும் போதும், ஆசிரியர் வெறுமனே குரல் கொடுப்பதைவிடக் கதையை நாடக உத்தி யோடும், பாடலை இசைப் பின்னணியுடனும் வழங்கினால் மாணவர் மனத்தில் எளிதில் சென்று பதிந்து நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்; பாடநோக்கமும் நிறைவேறும்.

மலேசியக் கல்வி ஒலிபரப்புத் தொடங்கிய காலத்திலிருந்து அது நிறுத்தப்பட்ட காலம் வரை (1994) கல்வி ஒலிபரப்பின் தமிழ்த்துறை நன்கு இயங்கியது. அதனில் ஆயிரக்கணக்கான பாடல்கள் இசைப் பின்னணி யோடு ஒலியேறியுள்ளன. அவற்றை உள்நாட்டுக் கல்வியாளரொடு தமிழக அறிஞரும் பாராட்டியுள்ளனர். குறிப்பாகத் (சிறந்த குழந்தைக் கவிஞர் களான) அழ. வள்ளியப்பா, தணிகை உலக நாதன், (பேராசிரியர்களான) தமிழண்ணல், சாம்பசிவனார் போன்றோரும் பாராட்டித் தங்கள் நாட்டில்கூட இப்படியொரு முயற்சி நடந்ததில்லை என்றனர்.

புதிய பாடத்திட்டம் (KBSR) நடைமுறைக்கு வந்த காலத்தில் (1982-83) அதன் கற்றல் கற்பித்தலுக்கு மலேசியக் கல்வி ஒலிபரப்பின் தமிழ்ப்பிரிவு பெருந்துணை புரிந்துள்ளது. மலேசியத் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கும் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கும் அத் துறை ஆற்றிய தொண்டு மலேசியத் தமிழ்க் கல்வி வரலாற்றில் ஒரு தொலைக்கல்லாகும்.

புதிய தொழில்நுட்பம் பரவலான காலத்தில் பால்லூடக முறையில் பாடங்கள் உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் கல்வி ஒலிபரப்பு நிறுத்தப்பட்டது; அது நிறுத்தப்பட்டது, கற்றல் கற்பித்தலுக்குப் பேரிழப்பாகும். பாடல், நாடகங்களை ஒலிவழியே கேட்கும்போது, அருமை யான கற்பனைகள் பிறக்கும்; சிந்தனைத் தூண்டலுக்கும் அது வழி வகுக்கும். அவ் வொலிபரப்பு நிறுத்தப்பட்டது. கற்றல் கற்பித்தல் துறையில் ஒரு வெறுமையை ஏற்படுத்திற்று. அதன்பின் கற்றல் கற்பித்தலுக்கான தொழில்நுட்பப் படைப்புகள் உருவாகவில்லை என்பது ஒரு பெருங் குறையாகும். இத் துறை மேம்பாட்டிற்குப் பொறுப்புடன் பணியாற்றியோரான (இசை, நடனக்கலைகள் வல்ல) சரசுவதி சியாம கிருஷ்ணன், பி.கே. சாமி, நல்லமுத்து, பெரியசாமி, பத்துமலை போன்றோர் நினைவுகூரத்தக்கவ ராவர். பகுதிநேரக் கலைஞர்களும் பாராட்டிற்குரியவர்.

தனியார் வானொலி

அரசு வானொலியை அடுத்து இங்குச் செயல்படும் தனியார் வானொலி ஒலிபரப்பு டி.எச்.ஆர். ராகா (T.H.R.Raha) என்று அழைக்கப் படுகிறது. இஃது 2001 ஏப்பிரல் 2 ஆம் நாள் தொடங்கியது. இது முழுக்க முழுக்க வணிக நோக்கினைக் கொண்டதாகும். உயர்தரமான படைப்புகளை மக்களுக்கு வழங்க வேண்டுமென்பதனைப்பற்றி இது கவலைப்படுவதில்லை. மக்களுக்குக் கலகலப்பூட்டும் நிகழ்வுகளுக்கு முதன்மை தந்து கவர்ச்சி யூட்டி ஈர்க்க வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

நிகழ்ச்சிகளின் தரம் ஒருபுறமிருக்க அதனில் கையாளப்படும் தமிழ், மொழி உணர்வு மிக்காரின் உள்ளங்களில் ஈட்டி பாய்ச்சும் தன்மையில் உள்ளது. அதன் அறிவிப்பாளர்களில் சிலர் பேசும் தமிழ், அதன் சீர்மைக்கே உலை வைக்கும் தன்மையில் உள்ளது.

இச் சீர்கேடு குறித்து இதழ்களில் நிரம்ப எழுதப்பெற்றன; இயக்கங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பின. அவற்றை யெல்லாம் அந் நிறுவனம் காதில் வாங்கிக்கொள்ளாமை தமிழ் நெஞ்சங்களைத் துன்புறுத்துகிறது. ஊடகங்களில் ஒரு மொழி, இலக்கண வரம்புக் குட்பட்டே எழுதப்பட வேண்டும்; பேசப்பட வேண்டும். அங்குப் பணியேற் போர் நிரம்பப் பயிற்சி பெற வேண்டும்; அம் முயற்சியை மேற்கொள்ள விழையாதோர் வேறு பணிகளுக்கு மாற்றலாகிச் சென்றுவிட வேண்டும். அஃதே அறமாகும்.

விளம்பரங்கள்பற்றி

டி.எச்.ஆர். ராகா என்னும் தனியார் வானொலி அறிவிப்பாளர் செய்யும் மொழிக்கொலைகளொடு விளம்பரங்களில் நடக்கும் மொழிக்

கொலைகளுக்கும் பஞ்சமில்லை. இலக்கணம் அறியாதோரை எழுத வைத்தும் அரைகுறையாகத் தமிழ் பேசுவோரைப் பேச வைத்தும், தமிழ் உச்சரிப்பு முறை அறியாதோரைப் பாடவைத்தும் செய்யப்படும் விளம்பரங்கள் தமிழின் உயிரையே வாங்கிவிடுகின்றன. விளம்பரம் செய்வோர் தம் பொருள்பற்றி மிகையாகப் பல்வேறு அலங்காரங்களொடு குறிப்பிட, உரிமை பெற்றவராக இருக்கலாம். ஆனால், ஓர் இனத்தின் உயிர்போன்ற மொழியைச் சிதைக்க யாருக்கும் உரிமையில்லை. வணிக நிறுவனங்க ளாயினும் சரி, பொதுவான விளம்பரங்களாயினும் சரி தமிழ் வளர்ச்சிக்கு உதவாவிட்டாலும், அதன் சீர்மை கெடும்வண்ணம் செயல்படாமலிருந்தால் அதுவே பெருந்தொண்டாகும்.

இங்கே சொல்லப்பட்டவையெல்லாம் வேண்டுமென்றே சொல்லப் பட்ட வெற்றுரைகள் அல்ல. மேற்படி ஒலிபரப்பைக் கேட்டும், அதுகுறித்து ஏடுகள் எழுதிய கருத்துகளைப் படித்தும், கூட்டங்களில், கருத்தரங்கு களில், மாநாடுகளில் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை ஆய்ந்தும் எழுதப்பெற்ற உண்மைநிலை இஃதாகும். இரு எடுத்துக்காட்டுகள் ஈண்டுத் தரப்படுகின்றன :

T.H.R. RAHA என்னும் புதிய வானொலி (தமிள் ?!) ஒலிபரப் பாளர்கள் விழித்துக்கொண்டே தமிழைப் படுத்தும்பாடு இருக்கிறதே... பொறுக்க முடியவில்லை.

“எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதனை இவர்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்று தெரிய வில்லை. உச்சரிப்பை உதறித்தள்ளிவிட்டுத் தமிழைப் பேசுவதாய் இருந்தால் தயவுசெய்து மறந்துவிடுங்கள்; தாய்மொழியான தமிழ்மொழியைத் தறுதலைகள் மொழியாய் ஆக்காதீர்கள்” என்று தம் மனக்குமுறலைக் கொட்டியுள்ளார் சி. ம. இளந்தமிழ். நிலையத்தாருக்கு அன்பான வேண்டு கோளாக 2-7-2002 -ல் அனுப்பப்பட்டுப் புறந்தள்ளப்பட்ட ஒரு வேண்டு கோள் அடுத்த சான்றாகத் தரப்பெறுகிறது:

டி.எச்.ஆர். ராகா வானொலித் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு வேண்டுகோள்

“தமிழ்மொழியானது செவ்விய மொழியாகக் கொள்ளப்படுகின்றது. இது பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியது. இம் மொழியில் எழுந்த எண்ணற்ற இலக்கியங்கள் உலக அறிஞர் பெருமக்களால் போற்றப்படுபவை. தமிழகத்தை அடுத்து மலேசியாவில் அதிகமானோர் பன்னெடுங்கால மாகவே பேசிவருகின்ற மொழியாக இம் மொழி இருக்கின்றது.

இதன் பெருமையை உணர்ந்தே உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவில் 1966-ல் கூட்டப்பட்டது. இம் மாநாட்டின் திறப்பு விழாவிற்குத் தலைமை யேற்ற அன்றைய தலைமையமைச்சரும் மலேசியத் தந்தையுமான மறைந்த துங்கு அப்துல் ரகுமான் அவர்கள் தமிழ்மொழியில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கூறியது நினைவிற்கொள்ள வேண்டிய செய்தியாகும்.

இங்கு நடைபெற்ற 6ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் தொடக்க விழாவிற்குத் தலைமையேற்ற இன்றைய தலைமை அமைச்சர் டாக்டர் மகாதீர் முகம்மது அவர்கள் தமது உரையில், "தமிழ்மொழி இனிமையும் பேசுவதற்கு எளிமையும் கொண்ட மொழி" என்று குறிப்பிட் டுள்ளது கவனிக்கத்தக்கது.

எனவே, டி.எச்.ஆர். ராகா வானொலி நிலையத்தார், இந் நாட்டில் நல்ல தமிழ்வளர்ச்சியைக் கருதிப் பண்பாட்டு நிகழ்ச்சிகளைப் படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தாலும் மலேசியாவில் மட்டுமே தூயதமிழ் பேசப்பட்டு வருவதும் இலக்கியப் படைப்புகள் செம்மையானதாக அமைந்திருப்பதும் மலேசியத் தமிழர்கள் மொழித் தூய்மையில் எடுத்துக்காட்டாக விளங்கி வருவதும் உலக நாடுகளின் போற்றுதலுக்குரியதாக அமைந்திருப்பதால் அதே வேளையில் மலேசிய அரசும் தமிழ்வளர்ச்சிக்கு ஆக்ககரமான செயற்பாடுகளில் ஒப்புரவு நல்குவதாலும் டி.எச்.ஆர். ராகா வானொலித் துறையினர் இவற்றை யெல்லாம் கவனத்திற் கொண்டு நல்ல தமிழைக் கொச்சைப்படுத்தாது அதன் ஆக்கஞ் சார்ந்த பண்பாட்டு வளர்ச்சிக்கு எப்போதும் உறுதுணையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்."[14]

மலேசியாவில் செயல்படும் தனியார் வானொலி தமிழ் வளர்ச்சிக்கு உதவுகிறது என்னும் நற்பெயர் அதற்கு ஏற்பட வேண்டுமென்பதே சமுதா யத்தின் தவிப்பாகும்.

11. தொலைக்காட்சியில் தமிழ்

அறிவியல் வளர்ச்சியால் உருவான ஓர் அரிய கருவி தொலைக் காட்சி. வானொலியில் செவிவழியாகவே செய்திகளைக் கேட்டுவந்த மக்கள், உலக நிகழ்வுகளைக் கண்களாலும் காணும் பேற்றினை அளித்தது தொலைக்காட்சி. மலேசிய மக்களுக்கு அவ் வாய்ப்பு 1963ஆம் ஆண்டு கிட்டியது. தொடக்கத்தில் செய்தி என்ற அளவில் தொலைக்காட்சியில் தமிழ் இடம்பெற்றது. தமிழ்மக்கள் எதிர்பார்த்த அளவு நேரம் கிட்டவில்லை என்றாலும், குறைந்த நேரத்தில் நிறைவான நிகழ்ச்சிகள் ஒளியேறின. செய்தி, திரைப்படம் என்ற அளவில் மட்டுமன்றித் தரமான உள்ளூர்ப் படைப்புகளும் இடம்பெற்றன.

தொலைக்காட்சியின் தொடக்ககால நிகழ்ச்சிகள் குறித்து மூத்த இதழாளர் எம்.துரைராஜ், நேர்காணலில் (19.3.2001) பல முதன்மைத் தகவல்களைக் கூறினார். "தொலைக்காட்சியில் தொடக்ககாலத்தில் தரமான தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சமுதாய நாடகங்களுடன் இலக்கிய நாடகங்களும் ஒளியேறின. முதன்முதலில் ஒளியேறிய நாடகம் நா.ஆ.செங்குட்டுவன் எழுதிய 'புறப்படு மகனே' என்ற நாடகமாகும். மலேசியாவின்மேல் இந்தோனேசியா பகைமை கொண்டிருந்த அந் நேரத்தில், மக்களுக்கு நாட்டுப்பற்றை வலியுறுத்தும் வண்ணம் அந் நாடகம் அமைந்தது. அதனில் இன்றைய பொதுப்பணி அமைச்சரும், ம.இ.கா.தேசியத் தலைவருமான ச. சாமிவேலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.கோவிந்தராசும் பங்கேற்றனர்" என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கிய நாடகம் என்னும்போது, கே.ஏ. முருகேசன் எழுதிய 'அறங்காத்த புலவர்' என்ற நாடகம் குறிப்பிடத்தக்கது.

அன்று உச்சரிப்புச் சிதைவின்றித் தமிழ்ச்செய்தி வாசித்து முத்திரை பதித்தோரில், இன்றைய அமைச்சர் ச.சாமிவேலு, நினைவில் வாழும் ஆதி. குமணன், அரங்கநாதன், அசன்கனி, பேரா.அழ.இராமையா போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

அன்று தொலைக்காட்சியில் சமுதாய நலன் குறித்த கருத்தரங்கு களும் நடந்தன. எஸ்.ஓ.கே. உபைதுல்லா, ஆதி. நாகப்பன், பி.பி.நாராயணன், என்.டி.எஸ். ஆறுமுகம் பிள்ளை, மேலவை உறுப்பினர் அருணாசலம்

போன்றோர் குறிப்பிடத்தக்கோராவர். நேர்காணலில் "தமிழகத்திலிருந்து வந்த எழுத்தாளர்களும் பங்குகொண்டுள்ளனர். அன்றைய நிகழ்ச்சிகள் தரம் வாய்ந்தவையாய் அமைந்ததற்கான காரணம் குறித்துக் கருத்துரைத்த திரு.எம்.துரைராஜ்,"அன்றைய தயாரிப்பாளர்களில் இரட்டையர் என்று சிறப்பித்துச் சொல்லப்பெற்ற ரிச்சர்ட் ஜோப், தோமஸ் மேத்யூஸ் ஆகியோரின் ஆற்றலும், தமிழ் உணர்வும் நிகழ்ச்சிகளுக்கு உயிரூட்டித் தரம்மிக்கவையாக்கின. அவர்களுடன் பணிபுரிந்த எஸ்.கே.குலசிங்கம், ஐசென்லியூ ஆகியோரும் அர்ப்பண உணர்வுடன் பணிபுரிந்தனர்" என்றார். தொலைக்காட்சியில் அன்று எழுத்தாளர் சங்கத்தின் கவியரங்கும் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒரே ஓர் ஒளி அலையில் மட்டுமே ஒளிபரப்பாயின. இன்று இரண்டு, மூன்று அலைவரிசைகள் உள. தமிழுக்கும் அவற்றில் இடமளிக்கப் பெற்றுள்ளது. செய்திகள், உள்ளூர்ச் சின்னத்திரை நாடகங்கள், திரைப்படங்கள், விழாக்காலச் சிறப்பு நிகழ்ச்சிகள் எனப் பல படைப்புகள் ஒளியேறி வருகின்றன. சின்னத்திரை நாடகங்கள் போன்ற சில உள்ளூர்ப் படைப்புகள் பொருத்தமில்லாத நேரத்தில் ஒளியேறுவது பலருக்கு நிறைவளிக்கவில்லை.

முன்பு 'தும்புவான் மிங்கு' என்ற நேர்காணல் நிகழ்வு மிகப் பயனுடையதாய் விளங்கியது. இப்போது 'இன்போ போக்கஸ்' என்ற நிகழ்வாய் அது பெயர் மாற்றம் கண்டுள்ளது. தொடர்ந்து செய்திகள் இடம்பெற்று வருகின்றன. மொழிநலம் சிதைந்துவரும் இந் நாளில் சீ. பாண்டித்துரை, க. அரிகிருஷ்ணன், யோகேஸ்வரன் ப. பாலகிருஷ்ணன், பாமா போன்றோர் இனிய தமிழில் சிறப்பாகச் செய்திகளை வாசித்து வருகின்றனர். தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்புத் தொடங்குமுன் இவை மக்களால் பெரிதும் விரும்பிப் பார்க்கப்பட்ட நிகழ்ச்சிகளாகும்.

ஆஸ்ட்ரோ வானவில்

தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பான அஸ்ட்ரோ வானவில் 1966 ஆம் ஆண்டு தொடங்கியது. அரசு ஒளிபரப்புகளில் தமிழுக்கு நிறைவான நேரம் வாய்க்கவில்லை என்றிருந்த ஏக்கத்தை இது போக்கிற்று. இப்பொழுது தமிழ்நிகழ்ச்சிகள் இதனில் 24 மணி நேரமும் ஒளிபரப்பாகின்றன. இதன் தலைமைப் பொறுப்பை வகிப்பவர் (டாக்டர்) இராஜாமணி.

இவ் வொளிபரப்பு உள்ளூர்ப் படைப்புகளுக்கு ஓரளவே இடம்தருகிறது. செய்திகள், மிக முதன்மையான நிகழ்ச்சித் தொகுப்புகள், நலமுடன் வாழ்வோம், இராகம் அறிவோம் போன்ற பயனுடைய நிகழ்வுகளை இது தருகிறது. உள்ளூர் இலக்கிய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு அவ்வப்போது

இலக்கிய மேடையில் படைப்பாளர்களை நேர்காணும் நிகழ்ச்சி இடம் பெறுகிறது. திரையுலகில் பெயர் பொறித்த எம்.ஜி.இராமச்சந்திரன், சிவாஜி கணேசன் ஆகியோர் பெயரில் கவிதைப் போட்டி நடத்திப் பெருந்தொகை பரிசளித்துள்ளது; கண்ணதாசன் விழாவையும் சிறப்பாக நடத்தியுள்ளது.

அண்மையில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து நாவல் போட்டி ஒன்றனை நடத்திப் பெருந்தொகை பரிசளித்தது. இவை படைப்பிலக்கிய வளர்ச்சியைத் தூண்டும் ஊக்குவிப்புகள் ஆகும்.

வானவில் ஆண்டுதோறும் நடத்திவரும் ‘பாடல்திறன் போட்டி’ குறிப் பிட்டுச் சொல்லத்தக்கதாகும். கலைத்துறை வளர்ச்சிக்கு இஃது ஊக்கம் தரும் நிகழ்வாகும். விழாக்காலங்களில் உள்ளூர்க் கலைப்படைப்புகளை இது ஒளியேற்றுகிறது.

தமிழக நிகழ்ச்சிகளின் தாக்கம்

இவ் வொளிபரப்பு வணிக நோக்கினை அடிப்படையாய்க்கொண்ட தாதலால், வணிக நிறுவனங்கள் விரும்பும் நிகழ்ச்சிகளுக்கே முதன்மை தருகிறது. இவ் வகையில் இந்தியத் துணைக் கண்டத்தில் உருவாகும் படைப்புகள் - குறிப்பாகத் தமிழகத் திரைப்படங்கள், சின்னத்திரை நாடகங்கள், ஈர்ப்புத் தன்மைகொண்ட நிகழ்ச்சிகள் ஒளியேறுகின்றன.

பயன்மிகு நேரம் முழுவதும் சின்னத்திரை நாடகங்களுக்கே போய் விடுகின்றன. வாழ்வின் இன்றியமையாக் கூறுகளில் திரைப்படங்கள் முதன்மை என்றும், திரைக்கலைஞர்கள் வணங்கிப் போற்றத்தக்க மேன்மைக்கும், பின்பற்றத்தக்க வழிகாட்டுதலுக்கும் உரியவர்கள் என்றும் கருதும் தமிழகமக்களின் மனப்போக்கு இங்கும் பரவ இவை வழிவகுக்கின்றன. ஆண்டுக்கணக்கில் பொருளற்று வழவழ வென்று நீளும் சின்னத்திரைப் படங்கள்-பல படங்கள், போட்டி மனப்பான்மை மிக்க - போராடி உயர வேண்டிய சூழலில் உள்ள மலேசிய மக்களைப் பின்னடைய வழிகோலுகின்றன என்பது ஒருதலை.

தமிழகத் திரைப்படங்களில் பேசப்படும் மொழி, இங்குத் தமிழ் கல்லா - குடும்ப மொழியாகத் தமிழைக் கொள்ளாத மக்களிடையே பேச்சுத்தமிழ் பரவத் துணைபுரிகின்றது எனினும், நல்ல தமிழ் வழங்கும் மலேசியாவில், தமிழகத்தில் குறிப்பாகச் சென்னை போன்ற நகரங்களில் வழங்கும் கலப்புத் தமிழைப் பரவச் செய்து, மொழிவளத்தைச் சிதைக்கின்றன என்பதும் குறிப் பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும். இது முதற்பகுதியிலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

தமிழகத்தில் - குறிப்பாகச் சென்னையில் 'தமிங்கிலம்' என்ற ஒரு புதுமொழி உருவாகி வருகிறது என்று தமிழகத்தில் தமிழ் நெஞ்சர் வருந்தும் ஒரு நிலை, மலேசியாவிலும் ஏற்பட்டுவிடுமோ என்று தமிழ் ஆர்வலர் வருந்துகின்றனர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

இஃதல்லாமல் கொடுமை மிக்க வன்முறை, அருவருப்புக் காட்சிகள் நிறைந்த திரைப்படங்கள் சமூதாயத்தில் வன்முறையைத் தூண்டுவதிலும் பங்கு வகிக்கின்றன என்பது ஒருதலை. இந்தித் திரைப்படங்களில் இடம் பெறாத கொடுமைக் காட்சிகள் தமிழ்த் திரைப்படங்களில் இடம் பெறுகின்றன என்பது பிற இனத்தவர் மதிப்பீடாகும்.

வானவில்லின் அறிவிப்பாளர்களில், செய்திவாசிப்போரில் பலர் நல்ல தமிழ் உச்சரிப்பை வழங்குகின்றனர். மொழியைச் சிதைக்கும் சிலருக்குப் பயிற்சியளித்துத் திறன் உயரச் செய்தால் சிறப்பாக அமையும்.

மலேசியாவில் இயங்கும் தொலைக்காட்சி, மலேசியப் படைப்பு களுக்குக் கூடுதல் முதன்மையளித்தால், தமிழ், தமிழ் இலக்கியம், கலை, பண்பாட்டு வளர்ச்சிக்குத் துணை புரிவதாக அமையும்.

12. கணினியில் தமிழ்

அறிவியல் கண்டுபிடிப்புகளிலேயே இன்று முதன்மைபெற்று விளங்குவது கணினி. எந்த நிலைக்கும் தன்னை அணியமாக்கிக் கொள்ளும் கன்னித்தமிழ், கணினி ஊழியையும் வென்று பீடுநடை போடுகிறது. இந்த வெற்றிக்கு உழைத்த முன்னோடிகளுள் அயலகக் கணினி வல்லுநர்க்கும் நிறைவான இடம் உண்டு.

1980களின் தொடக்கத்திலேயே மலேசியத் தமிழ் இளைஞர்கள் ஒருசிலர் இதனில் ஈடுபட்டனர். 1987ஆம் ஆண்டு இங்கு நடந்த ஆறாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் மு.நெ. முத்தெழிலன், இரவீந்திரன், மா. அங்கையன் ஆகியோர் தங்கள் கண்டுபிடிப்புகளை அரங்கேற்றினர். அந் நேரத்தில் மு.நெ. முத்தெழிலன் உருவாக்கிய கணினி (Personal Computer) மென்பொருளில் அச்சேறிய 'நன்னெறிப் பாட்டு' என்னும் சிறுவர் கவிதை நூல் (ஆசிரியர் முரசு. நெடுமாறன், உமா பதிப்பகம், (1987), கோலாலம்பூரில்) வெளியிடப் பெற்றிருந்தது. இது கணினியில் (Personal Computer) அச்சேறிய முதல் நூலாகக் கருதப் பெறுகிறது.

ஓர் உலக மாநாட்டில் அரங்கேற்றம் கண்ட மலேசிய இளைஞர் களின் கண்டுபிடிப்புகள் உலகத் தமிழறிஞர்தம் கவனத்தை ஈர்த்து வாழ்த்தையும் பாராட்டையும் பெற்றன. இவ்வரிய முயற்சிபற்றித் (தமிழக அறிஞர்) மணவை முஸ்தபா, தம் 'காலம்தேடும் தமிழ்' என்னும் நூலில், இங்ஙனம் பாராட்டுகிறார். "இந்தியாவில் உள்ள ஐ.பி.எம். (IBM) நிறுவனம் பாரதி என்னும் தமிழ்ச்சொல் தொகுப்புச் சாதனத்தைக் கண்டறிந்து வடிவமைத்துள்ளது. அதேபோன்று மலேசியாவிலுள்ள இரவீந்திரன் என்னும் தமிழ் இளைஞர் 'துணைவன்' என்னும் சொற்றொகுப்புச் சாதனத்தைக் கண்டறிந்துள்ளார். மலேசியாவைச் சேர்ந்த முத்தெழிலன் (முத்து நெடுமாறன்) என்னும் தமிழ் இளைஞர் 'முரசு' என்னும் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனத்தை வடிவமைத்துள்ளார். இவையனைத்தும் ஆங்கிலத்தொடு தமிழும் இயங்கும் வண்ணம் அமைந்துள்ளனவாகும். இத் தமிழ்ச் சொற்றொகுப்புச் சாதனங்களில் சிறுசிறு வேறுபாடுகள் இருந்தபோதிலும் கணிப்பொறியில் தமிழைப் பயன்படுத்தும் முயற்சியில் மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது என்பது மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாகும்."[15]

இது தொடக்ககால நிலையாகும். அதன்பின் கணினியில் தமிழ்ப் பயன்பாடு வியக்கத்தக்க அளவு மேம்பட்டது. தொடக்கத்தில் ஆர்வத்தோடு இத் துறையில் கால்வைத்த மா. அங்கையன் தம் முயற்சியை முற்றாகக் கைவிட்டுவிட்டார். மு.நெ.முத்தெழிலன் 'முரசு' என்னும் பெயரிலும், இரவீந்திரன் 'துணைவன்' என்னும் பெயரிலும் தம் உருவாக்கங்களை மேம்படுத்தினர். 1990களின் தொடக்கத்தில் இத் துறைக்கு வந்த சி. சிவகுருநாதன் 'நளினம்' என்னும் பெயரில் ஒரு மென்பொருளை உருவாக்கினார். அதனை வணிக நோக்கில் அல்லாமல் இலவயமாகவே வழங்கினார். அச் செயலியும் இப்பொழுது பயன்பாட்டில் உள்ளது. உலகளாவிய நிலையில் இடைவிடாமல் தொடர் முன்னேற்றம் கண்டு வரும் 'முரசு' பற்றிக் கூறுமுன், துணைவன், நளினம் ஆகியன குறித்து ஈண்டு எடுத்துரைக்கப்பெறுகிறது.

முரசு செயலியின் சமகால உருவாக்கமான துணைவன் பல மேம்பாடு களைக் கண்டது. தனியார் பயன்பாட்டிற்கும், நிறுவனங்களின் பயன் பாட்டிற்கும் உதவியதோடு ஒருசில இதழ்களும் இதனைப் பயன்படுத்தின; பயன்படுத்தியும் வருகின்றன. இது குறித்துத் தம் ஆய்வுக் கட்டுரையில் எஸ்.குமரன் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"1985-ல் தொடங்கியது முதல் பல மேம்பாடுகளை அடைந்த வண்ணம் இருப்பது துணைவன் மென்பொருள் ஆகும். தற்போது அதன் வளர்ச்சியில் துணைவன் 4.0 திகழ்கிறது. 18 வகையான எழுத்து வடிவங் களை இது உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் சில:

Throman Bold, The Sherif, Thsuiss, Th Eflex, Th Vertica, Th Flex Angle, Th Flex Block, Th Flex-Round, Th Roman, Th Roman-H, Th Roman-N, Th Roman-S, Th Unibold, Th Unilight, Th Bharath.

"துணைவன் மென்பொருளைத் தயாரித்த இரவீந்திரன் பயன்மிக்க சில காந்தத் தகடுகளையும் உருவாக்கி வருவதாக அறிகிறோம்.[16] துணைவன் குறித்து இங்ஙனம் கருத்துரைத்த எஸ்.குமரன் 'நளினம்'பற்றி விரிவாக விளக்கினார்.

"சிவகுருநாதன் தமது அயரா உழைப்பினால் நளினம் தமிழ் மென் பொருளை உருவாக்கியுள்ளார். 1992-ல் உருப்பெற்ற, இந் நளினம் மென் பொருள், எளிமையாகக் கையாளும் முறை, கண்ணைக் கவரும் வண்ணம் கருத்தைக் கவரும் இசை, பத்து வகையான எழுத்து வடிவங்கள் மற்றும் கரைவேலைப்பாடுகள் போன்ற பல்வேறு சிறப்பு அம்சங்களை உள்ளடக்கி யுள்ளது. இதில் நளினம் தமிழ் எழுத்து உருவாக்கி (Nali font) ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

நளினம் மென்பொருள் முற்றிலும் தமிழ்மொழியிலேயே இயங்கவல்ல தமிழ்ச் சொல் செயலாக்கியாகத் திகழ்கிறது. எல்லா ஆணைகளும் (Commands) தமிழிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. மிக எளிதில் பயன் படுத்த வல்லதாக இது அமைந்துள்ளது. 1994-ல் மலாயாப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற உலகத் தமிழாசிரியர் மாநாட்டின்போது நளினம் அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பெற்றது."[17] 'நளினம்' உருவாக்கிய சிவகுருநாதன் 'ஆர்த்தியின் கதை நேரம்', ஆர்த்தியின் 'குதூகலக் கணிதம்' போன்ற குறு வட்டுகளையும் வெளியிட்டுள்ளார். இவை மாணவர்க்கு நற்படையல்களாய் விளங்கி வருகின்றன. மேலும் இவரின் 'பரிபூரணா லிங்கோ' (Lingo) என்னும் தமிழ்ச்சொற் களஞ்சிய விளையாட்டு, 1995-ல் வெளியீடு செய்யப்பட்டது. நளினம் விண்டோஸ் 3.1. மற்றும் நளினம் யுக்தியோடு உருவாக்கப்பட்ட இணையத்தில் அமைந்த மின் அஞ்சல் வசதியோடு 1996-ல் வெளியிடப்பட்டு இலவயமாக வழங்கி வருகிறார்.[18] நளினம் பல்வேறு மேம்பாடுகளைக் கண்டு (நளினம் 8) அனிதா, மெய், சுபா, விசாலி, வேலு, நளி 101 ஆகிய எழுத்து வடிவங்களைக் கொண்டுள்ளது.

முரசு செயலியின் வியத்தகு மேம்பாடுகள்

முத்து நெடுமாறன் உருவாக்கிய மென்பொருளில் முதன்முதல் 'மயில்' கிழமை இதழ் வெளிவந்ததைத் தொடர்ந்து (1989) பல வார மாத இதழ்கள் வெளிவரத் தொடங்கின. சிற்றிதழ்கள் மட்டுமல்லாது நாட்டின் முதன்மையான தமிழ் நாளிதழ்களும் 'முரசு' செயலியில் அச்சேறின. இங்கு வெளியீட்டுத் துறையில் ஒரு புரட்சியையே முரசு செயலி ஏற்படுத்திற்று. குறைந்த செலவில் சிற்றிதழ்கள் பல அச்சேறி வெளிவர இத் துணைப் பொருள் பெருந்துணை புரிந்தது; துணைபுரிந்து வருகிறது.

முரசு செயலியின் வளர்ச்சி புதிய புதிய அச்சு வடிவங்களைக் கண்டு பிடித்ததோடு, உலகக் கணினி வளர்ச்சியைப் பின்தொடர்ந்து தமிழில் பலவகையான மேம்பாடுகளை விளைவித்தது. 1993ஆம் ஆண்டில் முரசு மென்பொருள் சாளர (விண்டோஸ்) முறையை அறிமுகப்படுத்திப் பலரை வியப்பில் ஆழ்த்தியது. இதன் தொடர் மேம்பாடு குறித்து எஸ். குமரன் இவ்வாறு கருத்துரைக்கிறார்.

"'முரசு' மென்பொருள் பல படிநிலைகளைக் கடந்து இப்போது முரசு-8 உதயமாகியுள்ளது. எழுத்துப் படிவங்களை மேம்படுத்த வேண்டிப் பல புதிய எழுத்துப் படிவங்களை அறிமுகப்படுத்தினர். அதனொடு சிலசில சித்திர வடிவங்களையும் அறிமுகப்படுத்தினர். மேலும், விண்டோசில் (Windows) உள்ள வேர்ட் (Word) செயலியில் எழுத்துப் பிழைகளைத் திருத்த

இயலும் வகையில் முரசு 8ஐ உருவாக்கியுள்ளதானது மிகவும் பாராட்டு தலுக்குரியதாகும். நிகண்டு என்னும் புதிய முறையை அறிமுகப்படுத்தித் தமிழில் அச்சடிக்கப்பட்ட எழுத்துப் படிவங்களைப் பிழைதிருத்தம் செய்ய இதனால் முடிந்தது. லகர, ளகர, ழகர மற்றும் ரகர, றகர எழுத்துப் பிழைகள் மற்றும் அதே பொருளுள்ள வேறு சொற்களும் இதன் மூலமாகப் பயன்பாட்டிற்குக் கொள்ள இயலும். முரசு மென்பொருளில் இணைக்கப்பட்ட எழுத்து வடிவங்களாவன: 'அல்லி', 'அல்லி-S','அரும்பு', 'அமுது', 'அருவி', 'அருவி-S', 'செல்வம்', 'முனிவர்', 'கயல்', 'கோதை', 'மாதவி', 'முல்லை', 'முல்லை-S', 'மலர்', 'தாமரை', 'இணைக்கதிர்' மற்றும் 'இணைமதி' ஆகும்."[19]

பல்லூடகக் குறுவட்டு

இன்று கல்வி, கலை, இலக்கியம் போன்ற துறைகளின் வளர்ச்சிக்குப் பல்லூடகக் குறுவட்டுகளின் உருவாக்கம் மிகுபயன் சேர்த்து வருகின்றது. இவ் வகையில் முரசு செயலிவழிப் 'பாடிப் பழகுவோம் 1, 2 ', நால்வர் ஆகிய குறுவட்டுகள் வெளிப்போந்துள்ளன. மேலைக் கணினி உலகொடும் கணினி வழித் தமிழ் பரப்பும் வல்லுநரொடும் முத்து நெடுமாறன் மிக நெருங்கிய நட்பும், இடைவிடாத தொடர்பும் கொண்டிருப்பதனால் இந்நாட்டில் கணினி வழித் தமிழையும் வளர்ச்சிநோக்கி நடைபோட வைக்க முடிகிறது.

மின்னஞ்சல்

இன்று தமிழில் மின்னஞ்சல் (E-mail) உலகெங்கும் சிறப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. தமிழுக்கும் இவ் வாய்ப்பு வேண்டு மென்று அரிதின் முயன்று உருவாக்கினார் முத்து நெடுமாறன். அதனை 1995-ல் முரசு நிறுவனம் கோலாலம்பூரில் துன் சம்பந்தனார் மாளிகையில் அமைந்துள்ள சோமா அரங்கில் வெளியிட்டது. இவ் வெளியீட்டு நிகழ்வில் தமிழ்க் கணினி மாநாட்டிற்கு (1997) அடித்தளமிட்ட சிங்கப்பூர் கோவிந்தசாமியும் கலந்து மின்னஞ்சல் உருவாக்கத்தை வியந்து பாராட்டினார்.

மின்னஞ்சலை அடுத்துக் கணினிப் பயன்பாட்டின் மிக முதன்மைக் கூறான இன்டர்நெட்டை (Internet) 'இணையம்' என்னும் பெயரில் 1996-ல் முரசு நிறுவனம் வெளியிட்டுக் கணினி உலகில் தமிழுக்கும் முடிசூட்டிற்று. முத்து நெடுமாறனின் அப்போதைய கணினித்துறைக் கண்டுபிடிப்புகளில் இஃது உச்சமெனத் தமிழ்கூறு நல்லுலகம் பாராட்டிற்று.

தமிழில் இணையம் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து அதன் மூலம் காணொளி மாநாடு (Video Conference) நடத்த முரசு நிறுவனம் (Murasu Systems) திட்டமிட்டது. முரசு 8ஆம் செயலி வெளியீட்டுடன் சேர்த்து அம் மாநாடும் பெரிய அளவில் நடத்தப்பெற்றது. அது மலேசிய சீனர் சங்க மண்டபத்தில் (M.C.A. Hall, Kuala Lumpur) கூட்டப்பெற்றது. அக் காணொளி மாநாட்டில் கலிபோர்னியாவிலிருந்து (பேராசிரியர்) ஜார்ஜ் ஹார்ட், மணி மணிவண்ணன், குமார் குமரப்பன் ஆகியோரும், தமிழ் நாட்டிலிருந்து அப்போதைய அமைச்சர் தமிழ்க்குடிமகன், எழுத்தாளர் சுஜாதா ஆகியோரும் பங்குபெற்று மலேசியத் தமிழன்பர்களுடன் கலந்துரையாடி மகிழ்ந்தனர். மலேசியக் கவிஞர், கலைஞர், தமிழ் ஆர்வலர் பேரார்வத்துடன் கலந்துகொண்ட அந் நிகழ்வின் கலந்துரையாடல் கலை இலக்கியச் சுவையுடன் அமைந்தது. அயலகத் தமிழ்நெஞ்சங்களுடன் மலேசியத் தமிழ் அன்பர் நேரடியாக (அவர் முகம் கண்டு) கலந்துரை யாடும் வாய்ப்பை ஏற்படுத்திய இம் மாநாடே, தமிழ்கூறு நல்லுலகில் - தமிழில் நடந்த முதல் காணொளி மாநாடு (Video Conference) என்பது குறிப்பிடத்தக்கது.(13-9-1998)

மலேசியத் தமிழ்க்கல்வித் துறைக்கு முரசின் பங்கு

மலேசியக் கல்வி அமைச்சின் அதிகாரப்பூர்வச் செயலியாக- மென்பொருளாக (Official Software) முரசு அஞ்சல் ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளது. தமிழ்ப்பள்ளிகளிலும் தமிழும் கற்பிக்கும் இடைநிலைப் பள்ளிகளிலும் இம் மென்பொருள் பரவலாகப் பயன்படுத்தப்பெற்று வருகிறது. கல்வி அமைச்சின் தமிழ்க் கலைத்திட்டக் கழகமும் (Curriculam Development Centre), தேர்வுக்கழகமும் (Examination Syndicate) முரசு செயலியையே பயன்படுத்துகின்றன.

ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பள்ளிகளில் கணினியைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள் அதன்வழித் தமிழ் கற்றல் கற்பித்தலை மேம்படுத்திக் கொள்ளும் திறன்பெறும் வண்ணம், கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் முரசு நிறுவனர் முத்து நெடுமாறன் பயிற்சிப் பட்டறைகள் நடத்தியுள்ளார். பினாங்கு, பேராக், சிலாங்கூர், நெகிரிசெம்பி லான் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 12 முறைகளுக்கு மேலாகப் பயிற்சி வகுப்புகள் - பட்டறைகள் நடத்தப்பெற்றுள்ளன. இதன் மூலம் தமிழ் கற்றல் கற்பித்தலுக்குக் கணினியின் பங்குமிகும் வாய்ப்புகள் ஏற்பட்டன.

கைத்தொலைபேசியில் தமிழ்

இன்று உலகின் பெரும்பாலான மக்களைத் தன்பால் ஈர்த்து வைத்துக்கொண்டிருக்கும் தொடர்புக் கருவி கைத்தொலைபேசி (Mobile Phone) ஆகும். குரல்வழித் தொடர்போடு எழுத்துவழித் தொடர்பும் இதனால் இயலுவதனால் இதற்கு வரவேற்பு மிகுதியாய் உள்ளது. எழுத்துவழிக் குறுஞ்செய்திகள் அனுப்ப ஆங்கிலமே பயன்பட்டு வந்த நிலையில், அங்கும் தமிழைப் பதிக்கத் திட்டமிட்டு வெற்றி கண்டார் முரசு நிறுவனர். அதற்குச் 'செல்லினம்' என்னும் தமிழ்ப்பெயரைச் சூட்டியுள்ளார். 'கைப்பேசி' (Mobile phone) 'செல்பேசி' என்னும் வழக்கு இப்பொழுது நடைமுறையில் உள்ளது. செல்லினம், ஆங்கிலத்தில் Anjal Mobile என்று வழங்குகிறது.

உலகின் முதல் தமிழ்க் குறுஞ்செய்திக்(SMS)கருவியான இதன் அறிமுக நிகழ்ச்சி 15-8-2003 அன்று கோலாலம்பூர் நிக்கோ விடுதியில் (Niko Hotel) நடந்தது. அப்பொழுது மெக்சீஸ் (Maxis) நிறுவனம் முரசு சிஸ்டத்தைச் (Murasusystemsdn.Bhd) சரியான சொல் காணப்படும் முன்னோடி செயலாக்கத் திறனராக ஏற்றுக் கொண்டது. மெக்சிஸ் நிறுவனம் மலேசியாவின் முதன்மையான கைத் தொலைபேசி நிறுவனமாகும்.

மெக்சிஸ் டிவலெப்பர் புரோகிராம் (Maxis Developer Programme) உடன் முரசு சிஸ்டம், செல்லினம் (Anjal Mobile) தயாரித்து வழங்கியது.

தமிழ்ச் செல்லினத்தின் வெளியீட்டு நிகழ்ச்சி 15-1-2005-ல் சிங்கப்பூரில் மெடிலாகோர்ப் வானொலி ஒளி 96.8-ன் ஆதரவுடன் நடந்தது. வெளியீட்டு நிகழ்வில் திரைப்படப் பாடலாசிரியர் வைரமுத்து நேரில் வந்து கலந்து செல்லினத்தை வெளியிட்டுச் சிறப்புச் செய்தார்; உருவாக்கத்தையும் தமிழுக்கு அதனால் கிடைத்துள்ள சிறப்பையும் வியந்து பாராட்டினார்.

செல்லின உருவாக்கத்திற்கு விருது

குறுஞ்செய்திவழிக் கைப்பேசியிலும் தமிழை ஊடாடவிட்ட கண்டுபிடிப்பான செல்லினம் தேசிய ஐ.சி.டி. அமைப்பின் விருதை (National ICT Excellence Award for the most Innovative Application) விருதைப் பெற்றது என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க செய்தியாகும். இந்த விருது வழங்கும் விழா, செப்டம்பர் 2005-ல் நடைபெற்றது (விருது வழங்கிய அமைப்புப்பற்றிய மேல் விவரங்களை http:// www.mnc.com.my/ ictawards/winners2005html-ல் பெறலாம்)

உலகளாவிய தமிழ்வளர்ச்சிக்கு முரசின் பங்கு

தமிழ், நாட்டளவில் மட்டுமல்லாமல் உலகளாவிப் பரவவும் 'முரசு' தன் பங்களிப்பைச் செய்துள்ளது. தமிழ் இணையத் தளங்களை

உருவாக்குவதில் முரசு அஞ்சல் முன்னோடியாய்ச் செயல்பட்டுள்ளது. ஆனந்தவிகடன், ஆறாம் திணை, அம்பலம் போன்ற தமிழ்த் தளங்கள் முரசு அஞ்சலின் துணையுடனேயே மலர்ந்தன. இதுகுறித்துத் தமிழகத்துப் பேராசிரியர் சி. மறைமலை கீழ்க்காணுமாறு கருத்துரைத்தார்.

"கணினி பழக்கத்திற்கு வரத் தொடங்கியதும் இணையத் தளங்களைத் துருவிடும் அறிவுத் தேடல் தமிழகத்தில் தோன்றியது. இணையத் தளங்கள் எல்லா நிலையிலும் ஆங்கிலமயமாக இருந்த அந்தக் காலத்தில் தமிழிலும் இணையத் தளம் என்பதனை வெற்றியுடன் எண்பித்தவர் முரசு.நெ.முத்தெழிலன் (முத்து நெடுமாறன்) அவர்களே. தமிழில் மின்னஞ்சல் அனுப்பவும் இணையத் தளம் அமைக்கவும் 'முரசு' மென்பொருள் மிகச் சிறப்பாகப் பயன்பட்டது. இதனை இலவயமாகவே இணையத்தளம் மூலம் வழங்கித் தேமதுரத் தமிழ் உலகெலாம் பரவும்வகை செய்த பெருமை முத்தெழிலனையே சாரும். கோடிக்கணக்கான தமிழர்கள் விரும்பிப் படிக்கும் 'ஆனந்தவிகடன்', 'முரசு' அச்சுருவங்கள் மற்றும் இணையத்தளப் பணி யாலேயே இணையத்தளத்தில் உலா வந்தது. இதனுடன் போட்டிபோடும் விற்பனையுடைய மற்ற இதழ்கள் இணையத் தளத்தில் கெந்திக் கெந்தி நடை போட்டதையும் 'விகடன்' பீடுநடை போட்டதையும் (1998-ல்) இப்போதும் பெருமிதத்துடன் நினைவுகூர்கிறேன்" (நேர்கண்ட நாள் 23-12-2005)

மின்னிதழ்கள் வளர்ச்சிக்கு முரசின் பங்கு

இன்று பல மின்னிதழ்கள் வெளிவந்து புத்துலகத் தமிழுக்குப் புதுப் பொலிவையும் வலிவையும் சேர்த்துக்கொண்டுள்ளன. இதற்கு முன்னோடி யாய்'முரசு' விளங்கியுள்ளது. யூனிகோட் தரத்தில் வெளிவந்த முதல் தமிழ் இதழான 'திசைகள்' முரசு அஞ்சலின் அடிப்படையிலேயே வெளிவந்தது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

மெக்கிண்டாஷ் கணினியில் முரசு

இப்பொழுது வெளிவரும் மெக்கிண்டாஷ் கணினியில் இயல்பாகவே முரசு அஞ்சல் இணைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் இவ்வகைக் கணினியே பயன்பாட்டில் உள்ளது. 'முரசு' நிறுவனத்திடமிருந்து அமெரிக்காவிலுள்ள ஆப்பிள் (Apple) கணினி நிறுவனம் 'முரசு அஞ்சல்' செயலியையும் 'இணைமதி' (இணைக்கதிர்) எழுத்துருவையும் உரிமம்வழி (License) பெற்றுள்ளது என்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க செய்தியாகும்.

முரசு செயலி, முரசு மின்னஞ்சல் செயலி

முரசு செயலியை இன்று உலகளவில் எண்ணற்றோர் பயன்படுத்தி வருகின்றனர். முரசு இணைய மையத்திலிருந்து அதனைப் பதிவிறக்கம்

(இணைமதி, இணைக்கதிர்) செய்தோர் எண்ணிக்கை 1,000,000 ஐ எட்டியுள்ளது என்ற எண்ணிக்கையே இதன் உலகளாவிய பரவலுக்குத் தக்க சான்றாகும்.

கணினி ஊழியின் தமிழ்வளர்ச்சிக்கு அயலகத் தமிழர் பங்கு

கணினியில் தமிழ் புழங்கத் தொடங்கிய நாள் முதல் அஃது இணையத்தின்வழி உலகளாவிப் பரவி மேலோங்க அயலகத் தமிழர் பங்கு அளப்பரியதாகும். இதனைத் தமிழக அறிஞர்களே குறிப்பிட்டுப் பாராட்டி வருகின்றனர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொகுத்து வெளியிட்ட 'உலகத் தமிழிலக்கிய வரலாறு'(கி.பி.1851-2000) என்ற நூலில் இராம. குருநாதன் கணினித் துறையில் அயலகத் தமிழர் பங்கு குறித்துக் கூறும்பொழுது, "கணினியின் மொழிப் பயன்பாடு புதிய புதிய திசைகளைக் காட்ட வல்லது. ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக மிகுதியான அளவில் இணையத்தளத்தில் பயன்படுத்தும் மொழியாகத் தமிழ் விளங்கி வருகிறது. இதற்கு அடிப்படையான காரணம், புலம்பெயர்ந்த தமிழர்களின் பெருமுயற்சியே. உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் இணையத்தளம் இன்று ஊடக அளவில் வெற்றிபெற்று வருகிறது. மொழியைக் காக்கவும் கற்பிக்கவும் இலக்கிய அறிவு பெறவும் பெருந்துணை செய்வதாய் இணையத்தின் பங்களிப்பு உள்ளது[20] என்கிறார் கட்டுரையாளர். மேலும் தொடர்ந்து, இணையத்தின் மின் நூலகத்தால் தமிழ்நூல் பற்றிய விவரக் குறிப்புகள் கிடைக்கின்றன. தமிழர், தமிழ் வரலாறு, பண்பாட்டுச் செய்திகள் அனைத்தும் அடங்கிய தகவல் கருவூலமாக இணையத்தளம் உள்ளது. இஃது ஒரு வகையில் ஆவணக் காப்பகமாகச் செயற்படுகிறது.[21] என்னும் கட்டுரையாசிரியர், "இணையத்தளத்தின் தொகுப்பாளர்கள் இணையங்களைத் தமிழின் பயன்கருதித் தொகுத்துள்ளனர். க. கல்யாணசுந்தரம், சரவணன், பசுபதி, மகேந்திரன், தாஜுதீன், ப. திருநாவுக்கரசு முதலியோர் தமிழ் இணையத்தளத்தின் தொகுப்பாளர்களாக உள்ளனர். தமிழ் இணையத்தின் முன்னோடியாக இருந்து பெரும்பங்கை ஆற்றியவர்களாக நா.கோவிந்த சாமி, குப்புசாமி, கல்யாணசுந்தரம், முத்து நெடுமாறன், ஜெயகிருஷ்ணன், இன்தாம் சௌரிராஜன் முதலியோர் விளங்குகின்றனர். அடுத்த காலகட்ட வளர்ச்சியை நோக்கித் தமிழ் நடைபோடுகிறது. இதனை உலகத் தமிழர்கள் உணர்ந்த அளவுக்கு உள்ளூர்த் தமிழர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை"[22] என்கிறார்.

தமிழ் இணைய மாநாடுகள்

தமிழகத்தொடு மலேசியா முதலாய உலக நாடுகளிலும் தமிழ் மென்பொருள் மேம்பாடு கண்டுவந்த வேளையில், சிங்கப்பூர்க் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் முதலாம் தமிழ் இணைய மாநாடு 1997-ல் நடந்தது. தமிழுக்கு

ஆட்சிமொழித் தகுதியைக் கொடுத்த சிங்கப்பூர்க் குடியரசு கற்றல், கற்பித்தலில் கணினிக்கும் பங்களிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. அதனால் கணினிக் கலைப் படைப்புகள் உருவாக இடமேற்பட்டது. இச் சூழலில் சிங்கப்பூர்க் கல்வியமைச்சில் பணிபுரிந்த கோவிந்தசாமி இத் துறையில் பெரும்பங்கு வகித்தார். அவர் தமிழில் கணினி விசைப்பலகை ஒன்றனையும் உருவாக்கினார்.

சிங்கப்பூரில் 1997-ல் நடந்த மேற்படி மாநாடு, உலகில் நடந்த முதல் தமிழ் இணைய மாநாடாகும். உலகின் பல பாகங்களிலிருந்து கணினி வல்லுநர்கள் இம் மாநாட்டில் பங்கு கொண்டனர். தொடர்ந்து இணைய மாநாட்டைக் கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு விரிவான முறையில் நடத்தியது (1999). உலகின் பல்வேறு நாடுகளில் கணினிவழித் தமிழ் வளர்க்கும் வல்லுநர் பலர் மாநாட்டில் கலந்துகொண்டு, புதியன பூக்கப் பெரும் பங்காற்றினர். அம் மாநாட்டில் கணினி ஊழியிலும் தமிழ் நிமிர்ந்து நின்று நிலைக்கப் பல பயனுடைய முடிவுகள் எடுக்கப் பெற்றன. தகுதரமுடைய கணினித் தமிழ் விசைப் பலகை அமைப்புப் போன்ற சீர்மைக்கு இம் மாநாடு வழிகோலியது. தொழில்நுட்பக் கட்டுரைகளொடு கற்றல் கற்பித்தலில் கணினியின் பங்கு பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் படைக்கப்பட்டன; தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (Tamil Virtual University) அமைய அடிப்படை அமைந்தது. அம் மாநாட்டின் வெற்றிக்கு இந்திய நாட்டின் நடுவணரசு அமைச்சராயிருந்த (புகழுடம்பெய்திய) மாறனின் பங்கு அளப்பரியதாகும். மலேசியா, சிங்கப்பூர் போன்ற அயலகங்களின் வல்லுநர் பங்கும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

தமிழ் இணைய மூன்றாம் மாநாடு மீண்டும் தமிழை ஆட்சிமொழி களில் ஒன்றாய்க் கொண்ட சிங்கப்பூரில் நடந்தது (2000). அரசு ஆதர வொடு அருண் மகிழ்நன் அதனை முன்னின்று நடத்தினார். அம் மாநாட்டின் இறுதியில் ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) என்னும் அமைப்பு உருவானது; அடுத்தடுத்த மாநாடுகள் அதன் பொறுப்பிலேயே நடந்தன.

தமிழ் இணைய 4ஆம் உலக மாநாடு தமிழர் தாய்மொழி வளத் தொடு சிறப்பாக வாழும் மலேசியாவில் நடந்தது (2001). மலேசிய இந்தியர் காங்கிரசு துணையோடு அதன் தேசியத் தலைவரும் மலேசியப் பொதுப்பணி அமைச்சருமான ச. சாமிவேலு பேராதரவோடும் உலகக் கணினி வல்லுநர் களின் ஒத்துழைப்போடும் 'உத்தமம்' அமைப்பின் பொறுப்பாண்மையில் முத்து நெடுமாறன் அதனை முன்னின்று நடத்தினார். நாட்டின் தலைமை அமைச்சர் (துன்) மகாதீர் முகம்மது மாநாட்டைத் தொடங்கி வைத்தார். இது மாநாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய ஏற்பு-அங்கீகாரமாகும்.

மாநாட்டுக் கருத்தரங்குகளில் வெளிநாட்டு உள்நாட்டுப் பேராளர் களால் கட்டுரைகள் படைக்கப்பெற்றன. பள்ளி மாணவர்களுக்குக் கணினித்தமிழ் தொடர்பான போட்டிகள் நடத்தப்பெற்றன. கற்றல் கற்பித்தலில் இலக்கிய வளர்ச்சியில் கணினி மென்பொருள்களின் பங்கையும் பயனையும் மாநாடு மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டிற்று. இம் மாநாடு நாட்டின் தமிழ் உணர்வலைகளை ஏற்படுத்துவதிலும் சமுதாயத்தில் கணினித் தொழில்நுட்பத் துறை ஆர்வத்தைப் பரவச் செய்வதிலும் பெருவெற்றி கண்டது. இம் மாநாட்டிற்குப் பின் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு புத்தூக்கம் பிறந்தது. தமிழ்ப்பள்ளிகளில் கணினிப் பயன்பாட்டில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. அடுத்தடுத்த ஆண்டுகளில் தமிழ்ப் பள்ளி மாணவர் தொகை பேரளவு உயர்வு கண்டது இவற்றிற்குச் சான்றாகும்.

மேற்கண்ட மாநாடுகள் ஏற்படுத்திய தாக்கம் உலகத் தமிழர்க்குத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைய வழிவகுத்தது. (கலைஞர்) மு. கருணாநிதி தமிழக முதல்வராய்க் கோலோச்சிய காலை இவ் வரும்பணி செயல்வடிவம் பெற்று 2001-ல் திறப்புவிழாக் கண்டது. கணினி ஊழியில் தமிழுக்கு இங்ஙனம் ஒரு கலைக்கோயில் இணையத்தில் அமைந்தது தமிழ்மொழி, இலக்கிய வரலாற்றில் பெருமைப்படத்தக்க ஒரு புதிய தொலைக்கல்லாகும். (அறிவியல் அறிஞரான) வா.செ. குழந்தைசாமி இதனை வடிவமைத்ததுடன் தொடர்ந்து தலைமையேற்று நடத்திவருகிறார். அயலகத் தமிழர் தமிழ் கற்கவும் புலமை பெறவும் பட்டங்கள் பெறவும் இஃது இடமளித்து வருகிறது. இப் பல்கலையின் நோக்கங்களில் முதன்மை யானவை அயலகத் தமிழர் நலன்களுக்கு இடமளிக்கும் செயல்திட்டங் களாகும். அதன் நோக்கங்களுள் - குறிக்கோள்களுள் சில வருமாறு:

* உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தினர்க்கும் தமிழியலில் ஈடுபட்டுள்ள மற்றையோர்க்கும் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடுபற்றிய கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்.

* பார்தழுவி வாழும் தமிழர்க்கு அவர்கள் தேவைக்கேற்பப் பாடத் திட்டங்களை உருவாக்கி அளித்தல். அவர்கள் தங்கள் பாரம்பரியத்தோடு தொடர்பு கொண்டு வாழத் துணை புரிதல்.

* உலகில் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவுச் சாதனங்களைத் தொகுத்து, அவற்றைப் பரவலாகத் தமிழ் மக்களுக்கு வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

* தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான பாடத்திட்டங் களை வகுத்தல். கேள்வியறிவுக்காகவோ, சான்றிதழ், பட்டயம், பட்டம் பெறுவதற்காகவோ கற்போருக்கு இப் பாடங்களைக் கற்க வாய்ப்பளித்தல். உரிய நியமனங்களை நிறைவு செய்தோருக்கு அவர்கள் கற்ற பாடங்களின் தகுதிக்கேற்பத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாகச் சான்றிதழ், பட்டயம், பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

* உலகு தழுவி வாழும் தமிழ்மக்களின் கல்வித் தேவை, தொடக்க நிலையிலிருந்து ஆய்வுநிலை வரை பல்வேறு நிலைகளில் உள்ளது. இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தமிழ்இணையப் பல்கலைக்கழகத்தின் முதன்மைப் பணியாகக் கல்வி வழங்கும் திட்டமும் மின்நூலகம் அமைக்கும் திட்டமும் உள்ளன.

* உலகத் தமிழர் பயன்கருதி நிறுவப்பெற்ற தமிழ் இணையப் பல்கலைக்கழகம் கல்வி உலகின் ஏற்பினை - அங்கீகாரத்தைப் பெற்ற ஓர் உயரிய மதிப்புமிக்க அமைப்பாகும்.

கனடாவில் தலைமைச் செயலகத்தைக் கொண்டுள்ள 'Common wealth of Learning' நிறுவனம் தமிழ்இணையப் பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களை ஏற்று மலேசிய நாட்டில் 40 பள்ளி ஆசிரியர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்பில் பயில வழிசெய்யும் வகையில் ஒரு முன்னோடித் திட்டத்திற்கு இசைவு தந்து மூன்று ஆண்டு களுக்கான மொத்த உதவித் தொகையாக Canadian Dollar 75,000/- வழங்க இசைவு தந்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள பெர்களி பல்கலைக்கழகமும் பென்சில் வேனியாவில் உள்ள பென்சில்வேனியாப் பல்கலைக்கழகமும் தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களைப் பெரிதும் பாராட்டி அப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு இப் பாடத்தைப் பயன் படுத்திக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.[23]

அயலகத் தமிழர் சிந்தனைகளில் முகிழ்த்த கணினித் தொழில் நுட்பத் திறனும், தாய்மொழியை, கலையை, பண்பாட்டை மறவாத உலகு தழுவிய தமிழ் மேம்பாட்டு எண்ணங்களும் தமிழகத்தில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உருவாகப் பெருந்துணை புரிந்துள்ளன என்பது புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழும் தமிழர்க்குப் பெருமை தரும் செய்தி யாகும்.

கணினி ஊழியில் தமிழ்வளர்ச்சிக்கு அளப்பரிய மேம்பாடுகளை ஏற்படுத்திவரும் தமிழ்க் கணினி மாநாடு, 5ஆம் முறையாகக் கலிபோர்னி யாவில் கூடியது. இன்பிட் (International Forum for Information Technology in Tamil - INFITT) அமைப்பின்வழி மணி. மு. மணிவண்ணன் தலைமையேற்று நடத்தினார். குறைந்த எண்ணிக்கையை உடைய தமிழர் வாழும் அயலகத்தில் தமிழ் இணைய மாநாடு கூட்டுவது ஓர் அரிய செயலே. ஒரு செயலை மேற்கொள்ள ஆள்பலத்தையும் பணபலத்தையும் விட ஆற்றல்மிகு எண்ண வலிமையும் உறுதிமிக்க மனவலிமையும் முதன்மை என்பதற்கு இம் மாநாடு தக்க சான்றாகும். மாநாட்டை ஒட்டி வழக்கம்போல் 350 பக்கங்கள் கொண்ட கட்டுரைத் தொகுப்பு ஒன்றும் (Conference papers) வெளியிடப்பெற்றது. அம்மலரில் இடம்பெற்றுள்ள மலேசியப் பொதுப்பணி அமைச்சர் ச.சாமிவேலுவின் வாழ்த்துச் செய்தியில்,

"தமிழ் மரபுடைமைக் காப்பகம் என்னும் அறவாரியம் அமைவதற்கு மலேசியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற மாநாடு அடிப்படை அமைத்தது. அமைக்கப்பட்ட ஓராண்டில் இக் காப்பகம் பல கூடங்களை அமைத்துச் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது என்பதனை அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன்"[24] என்று கூறியுள்ளார்.

மலேசியாவில் நான்காம் தமிழ் இணைய மாநாடு நடந்தபோது ஜெர்மனியைச் சேர்ந்த நா. கண்ணன் மேற்படி திட்டத்தை அறிவித்து உதவி கோரினார். மாநாட்டு நிறைவு நிகழ்ச்சியில் மலேசியப் பொதுப்பணி அமைச்சர் ச.சாமிவேலு மரபுடைமைக் காப்பகம் அமைக்கப் பத்தாயிரம் அமெரிக்க டாலர் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரிய கலைப் படைப்புகளை ஆவணமாகக்கொண்டு பாது காக்கும் மனம் தமிழரிடம் மிகமிகக் குறைவு. அதனால் அழிந்த செல்வங் களுக்குக் கணக்கில்லை. வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதனைப்போன்று அளப்பரிய கலைச் செல்வங்களை அரங்கேற்றாமல் மூட்டை கட்டி வைத்துக்கொண்டிருக்கும் போக்கு மாற வேண்டும். அரசு சார்பு நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் தனிப் பட்டவர்களிடமும் குவிந்து கிடக்கும் ஓலைச் சுவடிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், கோயில்களில், மலைக்குகைகளில் உள்ள ஓவியங்கள், அரிய செய்திகள், மறுபதிப்புக் காண வழியின்றிக் கிடக்கும் உயரிய கருவூலங்கள் போன்றவற்றை யெல்லாம் கணினியரங்கில் ஏற்றிக் காப்பாற்ற வேண்டும். இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள கண்ணன் கூறுவதனையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் சார்ந்த 'முதுசெம்' என்பது, தமிழ் பேசும் நாடுகளில்மட்டும் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. எத்தனையோ ஏடுகள், நூல்கள், செப்பேடுகள் ஐரோப்பிய நூலகங்களில் தனியார் கைவசம் இருக்கின்றன. இவை ஒப்பீட்டளவில் பாதுகாப்புடன் இருந்தாலும் இவையும் தமிழ்மக்கள் பார்வைக்கு வரவேண்டியவையே. இவற்றை வெவ்வேறு ஐரோப்பிய அரசாங்கங்களுடன் இணக்கமாகப் பேசி இலக்கப் பதிவாக்க வேண்டும். பல்வேறு இடங்களில் ஏற்கெனவே இலக்கப் பதிவாக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அவ்வாறெனில் அவற்றை அவர்கள் சொல்லும் விலைக்கு வாங்கிக்கொண்டு தமிழ்க் காப்பகத்தில் வைத்தல் வேண்டும்.[25] மேலும்,

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் மலேசியா முதலாய நாடுகளில் அழிந்துகொண்டிருக்கும் பழைய வரலாற்றுச் சுவடிகளைத் தேடி எடுத்து நிரல்படுத்த வேண்டும். இது மிகச் சிறந்த விளைபயன்மிக்க பணி. திட்டமிட்டபடி செயல் நடந்தால் புத்தொளி பரவும் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்திற்கு வெளியே சிங்கப்பூரில் தொடங்கி மலேசியா, சான்பிரான்சிஸ்கோ ஆகிய வெளிநாடுகளிலும் நடந்து பல நல்ல விளைவு களை ஏற்படுத்திய தமிழ் இணைய மாநாடு, இரண்டாம் முறையாகத் (ஆறாம் மாநாடு) தமிழகத்தின் சென்னையில் நடைபெற்றது (2003). தமிழக அரசின் ஆதரவொடு தமிழ் இணையப் பல்கலைக்கழகம், உத்தமம், (ப. செல்லப்பன் தலைமையில் இயங்கும்) கணினித் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இம் மாநாடு 'தமிழ்க் கல்விக்குத் தகவல் தொழில்நுட்பம்' என்ற மிகுபயன்மிக்க கருப்பொருளில் நடந்தது. மலேசியா உட்படப் பல நாடுகளிலிருந்து பேராளர்கள் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர். பலர் கட்டுரைகளும் படைத்தனர்.

கணினி ஊழியில் உலகின் பல்வேறு இடங்களில் தனித்தனி எழுத்துக் குறியீடுகளும் விசைப்பலகைகளும் மென்பொருள்களும் உருவாயின. அவற்றைத் தரப்படுத்தும் வாயிலாகத் தமிழ் இணைய மாநாடுகள் அமைந்தன.

முதலிரு மாநாடுகளில் தமிழ் எழுத்துக் குறியீட்டுத் தரப்பாடு போன்ற அடிப்படைத் தேவைகள் ஆய்வு செய்யப்பட்டுத் தரங்கள் உருவமைக்கப் பட்டன. அடுத்து நடைபெற்ற மாநாடுகளில் கணிப்பொறியிலும் இணையத் தளத்திலும் கணிப்பொறியின் பயன்பாட்டை மிகுதிப்படுத்தத் தேவையான சொற்செயலிகள், தேடுபொறிகள் மொழியாக்கப் பொறிமொழிகள், இணையத்தள உலவிகள், ஒளிவழி எழுத்துரு அறியும் மென்பொருள்

பற்றிய முறைகள், சிக்கல்கள் முதலியன ஆய்வு செய்யப்பட்டன.[26] ஆறாம் மாநாடு கல்வித் துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் தமிழை மேம் படுத்த முழுக்க முழுக்கத் 'தமிழ்க் கல்விக்குத் தகவல் தொழில்நுட்பம்' என்னும் கருப்பொருளில் நடந்தது. மாநாட்டுக் கட்டுரைகளும் தொழில் நுட்ப ஊழியில் தமிழ் தலைநிமிர்ந்து வளர வழிகாட்டும் வண்ணம் அமைந்தன.

பல்லாயிரம் ஆண்டுகளாகக் கன்னித்தன்மை மாறாமல் வளர்ந்து வரும் தமிழ், கணினி ஊழியிலும் கால் ஊன்றிப் புதிய திசைநோக்கிப் பீடு நடைபோடத் தமிழ் இணைய மாநாடுகள் பெருந்துணை புரிந்து வருகின்றன. அதன் வெற்றிக்கு மலேசியாவின் பங்கும் அளப்பரியதாகும். அம் மாநாடு தன் உயரிய நோக்கிலிருந்து மாறுபடாமல் தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். அவ்வப்போது ஏற்பட்டு வரும் மாறுதல்களுக்கேற்பத் தமிழ் தடையற்ற வளர்ச்சிபெற வழிகாட்ட வேண்டுமென்பது உலகத் தமிழ்நெஞ்சங்களின் தவிப்பாகும்.

சான்றெண் விளக்கம்

1. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், ப.98
2. மேலது
3. ஒரு நூற்றாண்டு மலேசியத் தமிழ்க் கவிதை, மலேசியத் தமிழ் எழுத்தாளர் இரண்டாவது தேசிய மாநாட்டு மலர் (1984) பக்கக் குறிப்பில்லை
4. இராம. சுப்பையா, தமிழ் மலேசியானா, மலாயா பல்கலைக் கழகம் (1969) கோலாலம்பூர்
5. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள் மதியம் பதிப்பகம் (1997), கிள்ளான், ப.904
6. மேலது, ப. 904, 905
7. மேலது, ப. 904
8. மேலது, ப. 907
9. மேலது, ப. 904
10. எஸ்.குமரன், மலேசிய உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், முதலாவது மலேசியத் தமிழ் இலக்கிய மாநாடு
11. மேலது

12. முரசு. நெடுமாறன், `மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்`, அருள்மதியம் பதிப்பகம், 1997, கிள்ளான். ப. 913

13. மேலது, ப. 913

14. தமிழ் நெறிக்கழகம் தொடர்புடைய நிறுவனத்திற்கு அனுப்பப்பெற்ற கழகம்

15. மணவை முஸ்தபா, காலம் தேடும் தமிழ், மீரா பப்ளிகேசன், 1993, சென்னை, ப.201, 211

16. எஸ். குமரன், முதலாவது மலேசியத் தமிழ் இலக்கிய மாநாட்டு மலர் 2005, கோலாலம்பூர், ப.5

17. மேலது, ப. 6

18. மேலது, ப. 6

19. மேலது, ப. 6

20. இராம. குருநாதன், உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி. 1851 - 2000), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப. 516

21. மேலது

22. மேலது, ப. 529

23. மு.பொன்னவைக்கோ, தமிழ் இணையம் 2003, மாநாட்டுக் கட்டுரைகள், சென்னை, ப.154

24. ச.சாமிவேலு, தமிழ் இணையம் 2002, மாநாட்டுக் கட்டுரைகள், சான்பிரான்சிஸ்கோ,(San Francisco Bay Area), ப.219

25. தமிழ் இணையம் 2002, மாநாட்டுக் கட்டுரைகள்

26. மு.பொன்னவைக்கோ, தமிழ் இணையம் 2003, மாநாட்டுக் கட்டுரைகள், சென்னை, முன்னுரை

13. பொது இயக்கங்களில் தமிழ்

மலேசியாவில் தமிழ் வளர்ச்சிக்கும், இலக்கிய மேம்பாட்டிற்கும், கலைப் பரவலுக்கும், சமய நிலைப்பாட்டிற்கும், இன்னபிற தழைப்பதற்கும் இயக்கங்களின் பங்கு அளப்பரியதாகும். இயக்கங்கள் எந்த நோக்கத் திற்காகத் தொடங்கினாலும், அவ்வ ஏதாவது ஒரு வகையில் தமிழ் வளர்ச்சிக்கும் துணை நிற்பது இயல்பாகும். அவற்றின் செயற்பாடுகள், ஆளுகைகள் தமிழ்வழியில் / தமிழ்வழியிலும் நடைபெறுகின்றன. தமிழர் நலனை முன்வைத்து இயங்கும் எந்த இயக்கமும் தமிழைப் புறக்கணித்து விட்டுச் செயற்படுதல் இயலாதன்றோ? இங்குத் தோன்றிய இயக்கங்கள் தமிழ் வளர்ச்சிக்கு எவ்வெவ் வகைகளில் துணை நிற்கின்றன என்பதனை விளக்குவதே இப் பகுதியின் நோக்கமாகும். மேலும், இப் பகுதியில் தமிழ்மொழி வாயிலாய் வளர்ந்த கலை முதலாயவை பற்றியும், சமயம் முதலாயவற்றின் வாயிலாய்த் தமிழ்வளர்ந்த நிலைகுறித்தும் எடுத்துரைக்கப் பெறுகின்றது.

இந் நாட்டில் இயக்கங்களின் தோற்ற வளர்ச்சியை நோக்கும் போது உலகப் போருக்குப் பின்னரே (1941- 45) அதிலும் குறிப்பாக விடுதலைக்குப் (1957) பின்னரே இயக்கங்கள் பரவலாக உருவெடுத்தன. அடிமையிருள் பரவியிருந்த முன்னைய காலத்தில் செயலூக்கம் நிரம்பிய புரட்சிகரமான இயக்கங்கள் முகங்காட்டவில்லை. ஆளவந்தாரிடம் போரிடும் நோக்கமில்லாத, அரசியல் கலவாத இயக்கங்கள் ஒன்றிரண்டு தலை யெடுத்தன. அவை, கல்வி வளர்ச்சியிலும், சமுதாய நலனிலும், சமய வளர்ச்சியிலும் ஓரளவு நாட்டம் செலுத்தின. கீழ்க்காண்பவை அன்று தோன்றியவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

போருக்குமுன் தோன்றிய இயக்கங்கள்

1. இந்து மகாஜன சங்கம்

போருக்கு முன் தோன்றிய இயக்கங்களில் ஒன்று 1926-ல் தோன்றிய இந்து மகாஜன சங்கம் ஆகும். இது விரைவில் மறைந்துவிட்ட தெனினும் அகில மலாயாத் தமிழர் சங்கம் (முதலாவது) தோனற அது

வழிவகுத்தது (1929). ஈ.வெ.ரா. பெரியார் இங்கு வருகை புரிந்தபோது அதனைத் தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வியக்கம் செயலிழந்தபின், கோ.சாரங்கபாணி முயற்சியால் சிங்கப்பூரில் மறுசீரமைப்புப் பெற்று அமைந்தது (1941). இரண்டாவதாக அமைந்த அதுவும் மறைய, சி.சுப்பையா முயற்சியால் 1954-ல் அவ் வியக்கம் மூன்றாம் முறையாக உயிர் பெற்று, வலிமையான அமைப்பானது. நாடெங்கும் 74 கிளைகளைக் கொண்டு, தமிழின மீட்டுருவாக்க எண்ணங்கொண்ட பேரியக்கமாய்ச் செயற்பட்டது.

திருந்திய திருமணங்களை அவ் வியக்கம் முன்னின்று நடத்திற்று; மாநிலங்கள் அளவிலும், தேசிய அளவிலும் மாநாடுகளைக் கூட்டித் தமிழ் முழக்கம் செய்தது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழர் வாழ்வில் எல்லா வகைகளிலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய தமிழர்திருநாள் ஆண்டுதோறும் எழுச்சியோடு நாடெங்கும் கொண்டாடப்பட முன்னின்று துணைபுரிந்தது. தமிழ்இன, மொழி, கலை, இலக்கிய, பண்பாட்டு உணர்வுகளைக் காப்பதில் இவ் வியக்கம் முனைப்பொடு செயற்பட்டது. இனத்தின் மேன்மைக்குக் குரல் கொடுத்துப் பேராற்றலோடு வளர்ந்து வந்த இவ்வியக்கம், நிருவாகச் சிக்கல்களால் செயலிழந்து போனது. பொறுப்பிலிருந்த சிலரின் ஒத்துழைப்புக் கிட்டியிருந்தால் வாழ்வு பெற்றிருக்கும் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.[1] தேசிய நிலையில் நாடெங்கும் கிளைகளைக் கொண்டிருந்த மேற்படி சங்கம் மறைந்தபின், வட்டார அளவில் ஆங்காங்கே தமிழர் சங்கங்கள் தோன்றின. அவை ஒன்றுகூடிப் பேரவையும் அமைத்தன; மாநாடும் கூட்டின; காலப்போக்கில் வலிமை குன்றின.

2. தமிழர் சீர்திருத்தச் சங்கம்

போருக்குமுன் இங்கு (சிங்கப்பூரில்) அமைந்த மற்றொரு பேரியக்கம் தமிழர் சீர்திருத்தச் சங்கமாகும். பெருவணிகரான உ. இராமசாமி (நாடார்) (இதழ்த் துறையின் பெரும் சாதனையாளர் சி.பா. ஆதித்தனார் மாமனார்) தலைவராகவும் கோ. சாரங்கபாணி செயலாளராகவும் தெரிவு செய்யப்பெற்றனர். தமிழ், தமிழின உணர்வை விதைத்ததில் இவ் வியக்கத் திற்குத் தனியிடமுண்டு.

3. செந்தமிழ்க் கலாநிலையம்

(முதுபெரும் தமிழ்ப் புலவர் சுவாமி) இராமதாசர் 1929-ல் நிறுவிய செந்தமிழ்ப் பாடசாலையே 1945-ல் செந்தமிழ்க் கலாநிலையமானது. இந் நிலையம் இந் நாட்டில் முறையாகத் தமிழ்வளர்த்த பேரியக்கமாகும். இவ் வியக்கத்தின் வழி, இராமதாசர் நடத்திய தமிழ் இலக்கிய இலக்கண

வகுப்புகள் தமிழ்ப் புலவர்களையும், பாவலர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியது. வீ.கே. சுப்பிரமணியம், இரா.பாண்டியன் போன்ற புலமைமிக்க பாவலர்கள் இந் நிறுவனத்தில் உருவானவர்கள். இந் நிறுவனத்தின் வழி, பல நூல்கள் வெளிப்போந்துள்ளன; அரிய சிறப்பு மலர்கள் சில வெளிவந்துள்ளன. மலேசியாவின் தமிழ், தமிழிலக்கிய வளர்ச்சியை ஊக்கியதில் இதற்கு நிலையான ஓரிடம் உண்டு.[2]

4. கவிதாமண்டலம்

இந் நாட்டில் போர் நடந்துகொண்டிருந்தபோது உருவான ஒரு முன்னோடி அமைப்பு கவிதாமண்டலம் (1943). இது முழுக்க முழுக்கத் தமிழிலக்கிய வளர்ச்சியை நோக்கமாய்க் கொண்டதாகும். 'கவிதா மண்டலம்' எனப் பெயரைக் கொண்டிருந்ததெனினும் கதை, கட்டுரைகள் எழுதுவதற்கும் பயிற்சியளித்து வளர்த்துள்ளது என்பது சிறப்பிற்குரியதாகும்.

போருக்குப்பின் தோன்றிய இயக்கங்கள்

1. மலேசிய இந்தியர் காங்கிரசு

இரண்டாம் உலகப் போருக்குப்பின் தேசிய உணர்வு, விடுதலை வேட்கை போன்ற நோக்கங்களின் அடிப்படையில் முகிழ்த்த மூத்த அரசியல் கட்சிகளுள் ஒன்றான மலேசிய இந்தியர் காங்கிரசின் அரசியல் சமுதாய நடவடிக்கைகள்பற்றி இந்நூலின் முதலாம் பகுதியிலேயே எடுத்துரைக்கப் பெற்றது. அதன் இன, மொழி, கலை, இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சியை நோக்கமாய்க்கொண்ட செயல்கள் இங்கு எடுத்துரைக்கப்பெறுகின்றன. வீ.தி. சம்பந்தன் தலைவரான பின்னரே ம.இ.கா.வில் தமிழ் உணர்வு மேலோங்கத் தொடங்கிற்று. கல்வி, கலை, இலக்கிய, பண்பாட்டுணர்வுகள் தழைக்கத் தொடங்கின. நூலில் பல நிலைகளில் அவை சுட்டப்பெறு கின்றன. ஈண்டு முகாமையான சில எடுத்துரைக்கப்பெறுகின்றன.

உலகளாவிய முறையில் தமிழாய்வு ஓங்க வேண்டுமென்னும் நோக்கத் துடன் நடத்தப் பெற்ற முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குப் பேராதரவு தந்தது (1966). கட்சியின் தலைவராயும் அமைச்சராயும் விளங்கிய வீ.தி. சம்பந்தன் மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடந்த மாநாட் டிற்குத் தலைமை வகித்தார். சென்னையில் (பேரறிஞர்) அண்ணா துரை தலைமையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு (டான்ஸ்ரீ) ஆதி. நாகப்பன் தலைமையில் பேராளர் குழுவொன்றை ம.இ.கா. அனுப்பி வைத்தது (1968). (கட்சித் தலைவர் ச.சாமிவேலு தலைமையில்) 6ஆம் உ.த.ஆ. மாநாட்டை இங்குச் சிறப்பாக நடத்திற்று. கணினி

ஊழியில் தமிழுக்கு ஆக்கம் சேர்க்க நடந்துவரும் தமிழ்க்கணினி மாநாடுகளின் 4ஆம் மாநாட்டை 'உத்தமம்' அமைப்போடு இணைந்து நடத்திற்று (2001). வீ.தி. சம்பந்தன் காலத்துச் சாதனை இன்றும் நீடித்து நிலைத்து வருவது கட்சியின்வழி அவர் கண்ட பொருளாதார நிறுவனமான தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கமாகும்.

வெ.மாணிக்கவாசகம் தலைமையேற்றிருந்த காலத்தில் (1973-1979) ம.இ.கா. கல்வியில் பெருநாட்டம் செலுத்திற்று. சிரம்பானில் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றனை நிறுவியது; மாணவர்களுக்குக் கல்விக்கடன் வசதியை ஏற்படுத்தியது; ஓர் உறுதிமிக்க நிறுவன அமைப்பைப்பெற்றுத் தேசிய நிலையிலும், மாநிலங்கள் அளவிலும் தலைமையகக் கட்டடங் களைப்பெற்று நிமிர்ந்தது. இயக்கங்களுக்கெல்லாம் தாய் என்னும் முறையில் மற்றத் தொண்டூழிய அமைப்புகளை ஒன்று கூட்டிக் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்த்திற்று; சிக்கல்களைக் களைய முற்பட்டது.

கலை மணமும் இலக்கிய வேட்கையும் மிக்க ச. சாமிவேலு தலைமை யேற்றபின் தமிழ், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பேருக்கம் நல்கியது; நூல்வெளியீட்டு முயற்சிகளுக்கு உந்துதலைத் தந்தது. தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டிற்குத் தனிக் கருத்துச் செலுத்திற்று; கல்விக் கடன் திட்டத்தைப் பேரளவு விரிவுபடுத்திற்று.

சிரம்பான் நகரில் தொழில் நுட்பக்கல்லூரி (Tafe College) ஒன்றனை நிறுவியிருப்பதும், கெடா மாநிலத்தில் பல்கலைக்கழகம் ஒன்றனை (AIMST) அமைத்து வருவதும் பெரும் சாதனைகள் ஆகும்.

கட்சியின் துணை அமைப்பான 'சமூக வியூக அறவாரிய'த்தின்வழி (YSS) சமூகச் சீர்கேடுகளை ஆய்வு மூலம் கண்டறிந்து, சீர்ப்படுத்துதற்கான பணிகளிலும் ஈடுபட்டு வருகிறது. இதற்குரிய பொருளை (Fund) அரசு வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

2. மலேசியத் திராவிடர் கழகம்

ம.இ.க. அமைந்த அதே ஆண்டில் உருவான நீண்ட வரலாறு கொண்ட சமுதாயச் சீர்திருத்த இயக்கம் மலேசியத் திராவிடர் கழகம். இவ் வியக்கத்தின் சமுதாயத் தொண்டுகள் குறித்து இந்நூலின் முதலாம் பகுதியிலேயே எடுத்துரைக்கப்பெற்றது. அதன் பண்பாட்டு நடவடிக்கைகள், மொழி, இலக்கிய வளர்ச்சிப் பணிகள் ஈண்டுக் குறிக்கப்பெறுகின்றன.

இவ் வியக்கம் இடையில் வந்த ஆரிய நெறிகளை ஒதுக்கித் தமிழ்ப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டுமென்பதில் உறுதி

யுடையது. தொடக்ககாலம் முதல் தமிழ்ப்புத்தாண்டுப் பொங்கல் விழாவை ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. அதுவே தமிழர்க்கு முதன்மைத் திருநாள் என்று வலியுறுத்தி வருகிறது. தமிழ் வளர்ச்சியை நோக்கமாய்க் கொண்டு கருத்தரங்குகள் நடத்துதல், சிறப்புமலர்கள், நூல்கள் வெளியிடல், சொற்பொழிவுகள், ஆய்வரங்குகள்வழித் தமிழ், தமிழ்க் கலை, இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சிக்குத் துணைநின்று வருகிறது. பல போராட்டங்களையும் இடையூறுகளையும் கடந்துவந்த இவ் வியக்கம் 1946-ல் அமைந்ததெனினும், 1929-ல், (தந்தை பெரியார்) ஈ.வெ.ரா.இங்கு வருகைதந்த காலை முகிழ்த்த பகுத்தறிவுச் சிந்தனை மலர்ச்சியின் விளைவே இவ் வியக்கம் தோன்றக் காரணமாகும்.

நா. பள்ளிகொண்டான் தலைமையில் உருவான இவ் வியக்கத்தின் தலைமைப் பொறுப்பை நீண்ட காலம் வகித்தவர் கே.ஆர்.இராமசாமி (10.4.1997-ல் மறைவு). இப்போதைய தலைவர் ரெ.சு.முத்தையா.

3. தமிழ்ப் பண்ணை

1950ஆம் ஆண்டு தொடங்கி 1956ஆம் ஆண்டுவரை மலாக்காவில் செயற்பட்ட 'தமிழ்ப்பண்ணை', தமிழ்ப்புலமை மிக்கவர்களை உருவாக்கும் நோக்கத்தொடு செயற்பட்ட இயக்கமாகும். இது மதுரைத் தமிழ்ச்சங்கப் பாலபண்டிதர் வகுப்பை இங்கு நடத்திற்று; தேர்வுகளும் நடந்தன. இவ் வியக்கத்தை நடத்தியவர்களுள் உ.அரு. அருணாசலம் (செட்டியார்), எஸ்.ஓ.கே. உபைதுல்லா, கா.அண்ணாமலை போன்றோர் குறிப்பிடத் தக்கோராவர்.

4. தமிழர் பிரதிநிதித்துவ சபை

சிங்கப்பூரில் இயங்கிவந்த தமிழர் அமைப்புகளின் நிகராளிகளைக் கொண்ட அவையான தமிழர் பிரதிநிதித்துவ சபை, 1951-ல் அமைய வழி சமைத்தது, 1930-ல் உருவான தமிழர் சீர்திருத்தச் சங்கமாகும். கோ.சாரங்கபாணி தலைமையில் இயங்கிய தமிழர் பிரதிநிதித்துவ சபை, சிங்கை, மலேசியத் தமிழர் வாழ்வில் அனைத்து வகைகளிலும் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திற்று. அவ் வமைப்பு அறிமுகப்படுத்திய தமிழர் திருநாள், ஆண்டுதொறும் பட்டணங்கள்முதல் பட்டி தொட்டி எங்கும் பரவலாகக் கொண்டாடப்பட்டது. சாதி, சமய, கட்சி வேறுபாடுகளை மறந்து, தாய்மொழியான தமிழ்மூலம் ஒன்றிணையத் தமிழர் திருநாள் வழிகாட்டிற்று. 1952ஆம் ஆண்டு முதல் பேரெழுச்சியொடு கொண் டாடப்பெற்ற இதனில் தமிழக, இலங்கைப் பேராசிரியர்கள் (ஆண்டிற்கு

இருவர்) பங்கு கொண்டு ஆற்றிய உரைகள் இங்குப் புத்தெழுச்சியை ஏற்படுத்தின. தாய்மொழியின் இன்றியமையாமை, தமிழின் தனிச்சிறப்பு, கலை, பண்பாட்டுப் பெருமைகள் பேரறிஞர்களால் உணர்த்தப் பெற்றன. இன மொழிப் பற்றுகளொடு நாட்டுப்பற்றும் கொண்டு தமிழர், மலேசியாவில் நிலைத்து வாழவேண்டுமென்று நாடு விடுதலை பெறுமுன்னரே அறைகூவல் விடுத்தார் தமிழர் திருநாளை அறிமுகப்படுத்திய கோ. சாரங்கபாணி. சிங்கை, மலேசிய நாடுகளில் அமைந்த தொண்டூழிய அமைப்புகளில், பல் வேறு வரலாற்றுச் சாதனைகள் புரிந்த ஈடு இணையற்ற பேரமைப்புத் தமிழர் பிரதிநிதித்துவ சபை என்பது மிகையன்று.

விடுதலைக்குப்பின் தோன்றிய இயக்கங்கள்

விடுதலைக்குமுன் தோன்றிய இயக்கங்கள் நாட்டுப் பற்றையும் விடுதலை வேட்கையையும் ஏற்படுத்தின; மாற்றார் ஆட்சியை அகற்றும் உணர்வை ஊட்டி இனங்களிடையே ஒருமைப்பாடு பரவச் செயல்புரிந்தன; ஆளும் உரிமைபெறவும் அதற்குரிய ஆற்றலைப் பெறவும் பாடுபட்டன. விடுதலைக்குப்பின் தோன்றிய தொண்டூழிய இயக்கங்கள் அயலார் ஆட்சியால் மாறுபட்டுக் கிடந்த- நலிவுற்றிருந்த சொந்த அடையாளங்களை மீட்டெடுக்கவும், நிலைப்படுத்திக் கொள்ளவும் முயற்சி மேற்கொண்டன; கல்வி, கலை, இலக்கிய, பண்பாட்டுத் துறைகளில் மறுமலர்ச்சிகளையும் ஏற்படுத்த முனைந்தன. குறிப்பாகப் படைப்பாற்றல் மேலோங்கப் புதுப்புது இயக்கங்கள் சிறுசிறு அளவிலும் பெரியஅளவிலும் அமைந்தன. அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க இயக்கங்கள் சில ஈண்டுக் குறிப்பிடப் பெறுகின்றன.

1. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

விடுதலைக்குப்பின் தோன்றித் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்ட அமைப்பு, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் குறிப்பிடத்தக்க இயக்கமாகும். இஃது 1962ஆம் ஆண்டு முறைப்படி பதிவு பெற்றது; தமிழ் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திற்று. 1964-ல் மிகச் சிறப்பாக நடத்தப் பெற்ற ஒன்பான்சுவைக் கவியரங்கத்தைத் தொடர்ந்து, பல ஆண்டுகள் நாடெங்கும் நடத்திய பாட்டரங்கங்கள் பாவலர்களுக்குப் பேருக்கத்தை நல்கின. சிறுகதை வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு 1980ஆம் ஆண்டு முதல் நீண்ட காலம் நடத்தி வந்த சிறுகதைக் கருத்தரங்குகளும் சிறந்த கதைகளுக்கு வழங்கப் பெற்ற தங்கப் பதக்கப் பரிசுகளும் சிறுகதை வளர்ச்சிக்குப் பேருக்க மூட்டின.

தங்கப் பதக்கங்கள்

மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்பாளர்களுக்கு ஊக்கம் நல்கி வரும் பரிசுத் திட்டங்களுள் இச் சங்கத்தின் தங்கப் பதக்கங்கள் வழங்கும் திட்டம் குறிப்பிடத்தக்கது. இந் நாட்டு எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியருள் பலர் இப் பதக்கங்களைப் பெற்றவராவர். இச் சங்கம் 1982-ல் தன் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவில் 20 எழுத்தாளர்களுக்குப் பொற்கிழி வழங்கிற்று. 1983-ல் மூன்று எழுத்தாளர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கிற்று. தொடர்ந்து எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசுகள் வழங்கத் தன் அறக்கட்டளையை வலுப்படுத்திற்று. அதற்கு ம.இ.கா., தே.நி.நி.கூ.ச., தே.தோ.தொ.ச. ஆகிய ஒவ்வோரியக்கமும் 10,000 வெள்ளி கொடையளித்தது. அதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு அஃது ஆண்டுதோறும் எழுத்தாளர்களுக்குத் தங்கப் பதக்கங்களை வழங்கிவருகிறது. 1984ஆம் ஆண்டிலிருந்து (தமிழவேள்) கோ.சாரங்கபாணி, (முத்தமிழ் வித்தகர்)முருகு. சுப்பிரமணியம், (செந்தமிழ்ச் செல்வர்) சி.வீ. குப்புசாமி ஆகியோர் பெயர்களால் மூவர்க்குப் பதக்கங்களை வழங்கி வந்த சங்கம், 1985ஆம் ஆண்டு முதல் (டாக்டர்) சேவியர் தனிநாயக அடிகளார் பதக்கமும், 1995 முதல் (சமூகக் கலைமணி) சா.ஆ.அன்பானந்தன் பதக்கமும் ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.[3]

டான்ஸ்ரீ ஆதி. நாகப்பன் இலக்கியப் பரிசு

இச் சங்கம் ஈராண்டிற்கு ஒரு முறை (டான்ஸ்ரீ) ஆதி. நாகப்பன் இலக்கியப் பரிசும் (1983 முதல்) வழங்கி வருகிறது. இதற்கு வித்திட்டவர் முன்னாள் நாடாளுமன்றச் செயலாளர் வி.கோவிந்தராசு. கவிதை, கட்டுரை, நாடகம் ஆகிய துறைகளைச் சார்ந்த நால்வருக்கு இப் பரிசுகள் வழங்கப் பெற்று வருகின்றன. இதற்குரிய செலவை ஆதி. நாகப்பன் மகன் ஈஸ்வர் ஆதி. நாகப்பன் ஏற்றுக் கொள்கிறார்.

டான்ஸ்ரீ வெ. மாணிக்கவாசகர் புத்தகப் பரிசு

இப் பரிசுத் திட்டம், நூல் வெளியீட்டை ஊக்கப்படுத்தும் மிகப் பெரிய திட்டமாகும். 1998ஆம் ஆண்டில் இத் திட்டம் செயற்படத் தொடங்கிற்று. ஆண்டுதொறும் சிறந்த நூலுக்கு / நூல்களுக்குப் பரிசளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த நூல் ஒன்றனுக்கு 5000 மலேசிய வெள்ளி பரிசாக வழங்கப்பட்டு வந்தது. (இப்பொழுது இத் தொகை 7000 வெள்ளியாக உயர்ந்துள்ளது.) தேர்ந்தெடுக்கப்பெறும் நூலொடு, பாராட்டிற்குரிய மற்றொரு நூலும் தேர்வு பெறுமானால்

அதற்கும் பரிசளித்து ஊக்கம் நல்கப் பெறுகிறது. இதற்கான கொடையை மாணிக்கவாசகத்தின் இளவல் வி.எல்.காந்தன் வழங்கி வருகிறார்.

சங்கம் மேற்கொண்டு வரும் பிற நடவடிக்கைகள்

ம.த.எ.ச. சிறந்த படைப்புகளுக்குப் பரிசளித்து ஊக்கப்படுத்துவதுடன் நின்றுவிடவில்லை. படைப்புத்திறன் பெருகவும், படைப்புகள் அயலகங் களுக்குப் பரவவும் முயன்று நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

அப்துல் ரகுமான், மேத்தா, இன்குலாப், வைரமுத்து, ஈரோடு தமிழன்பன், சிற்பி, அறிவுமதி போன்ற தமிழகப் படைப்பாளர்களை வர வழைத்துச் சிறுகதை, புதுவடிவக் கவிதைகளுக்குக் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் நடத்தியுள்ளது. மரபுவழி நின்று எழுதப்பெறும் கவிதைப் படைப்பு மேம்படச் சங்கம் கருத்துச் செலுத்தவில்லை என்னும் குறையிருந்து வருகிறது. அக் குறை நீங்கவும் முயற்சி மேற்கொள்ளப்பெற்று வருகிறது.

இலக்கியச் சுற்றுலா

மலேசியத் தமிழ் இலக்கியத்தைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தும் நோக்குடன் ம.த.எ.ச. 2004ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொண்ட தமிழகச் சுற்றுலா குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மலேசிய இலக்கிய வகைகளை அறிமுகப்படுத்தும் நூல் ஒன்றனை வைரமுத்து தலைமையில் இயங்கும் வெற்றித் தமிழ்ப் பேரவையின் ஏற்பாட்டில் சென்னையில் வெளியிட்டுத் (2004) தமிழகமெங்கும் அது குறித்த உணர்வுகளைப் பரப்பும் வண்ணம் கலந்துரையாடல்களும் நடந்தேற வழிவகுத்த இலக்கியச் சுற்றுலா ஒரு பயனுடைய ஏற்பாடாகும்.

வானவில்லுடன் பங்கு

மேற்கண்ட நடவடிக்கைகளோடு, ஆஸ்ட்ரோ வானவில் ஒளி பரப்புடன் இணைந்து பெரிய அளவிலான இலக்கியப் போட்டிகள் நடத்தச் சங்கம் திட்டமிட்டு வருவதும் இந் நடவடிக்கைகளுக்கு அதன் தலைவர் (முனைவர்) இராஜாமணி ஆதரவளித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னோடிகள்

நல்ல நோக்கோடு அமைக்கப்பெற்ற இவ் வியக்கம், தன் குறிக்கோளில் மாறாமல் தொடர்ந்து நடைபோட உழைத்தவர் பலர். முருகு. சுப்பிரமணியன், சி.வீ. குப்புசாமி, சி.வடிவேலு, சி.வேலுசுவாமி, எம்.துரைராஜ் போன்றோர் அதன் வளர்ச்சிக்குக் கைம்மாறு கருதாது

பாடுபட்டனர். ஆதி. குமணன் தலைமையில் சங்கம் இயங்கியபோது மூன்று மாடிகளைக் கொண்ட சொந்தக் கட்டடத்தைப் பெற்றது. இது, சங்க வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையாகும். ஆதி. குமணனுக்குப் பின் அவருடன் இணைந்து பணியாற்றிப் பட்டறிவு பெற்ற பெ.இராசேந்திரன் தலைமையேற்று வழிநடத்தி வருகிறார்.

2. மாநில எழுத்தாளர் சங்கங்கள்

தேசிய அளவிலான மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தையடுத்து, மாநில அளவிலான எழுத்தாளர் சங்கங்களையும் குறிப்பிட்டுச் சொல்லுதல் வேண்டும். மாநில எழுத்தாளர் சங்கங்களில் முதலில் தோன்றியது வட மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கம் (1960). பின்னர் இது பினாங்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆனது (1988). தொடர்ந்து கெடா மாநிலத் தமிழ் எழுத்தாளர் வாசகர் இயக்கம் (1971), பேரா மாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கம் (1975), கூட்டரசு வளாகத் தமிழ் எழுத்தாளர் வாசகர் இயக்கம் (1977) (பின்னர் இது 'வாசகர்' நீங்க எழுத்தாளர் இயக்க மானது), நெகிரி செம்பிலான் தமிழ் எழுத்தாளர் சங்கம் (1979), ஜோகூர் மாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கம் (1979), பகாங் மாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கம் (1985) ஆகியன தோன்றின. இவை அந்தந்த மாநில எழுத்தாளர்களுக்கு ஊக்கம் நல்கி வருகின்றன.[4]

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கங்களின் பேரவை

மாநில அளவில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கங்களை ஒன்றிணைத்துப் பேரவை அமைக்கும் முயற்சி 1981-ல் அரும்பியது. அதன் தொடர்ச்சியாகப் பேரா மாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கம் முன்னின்று ஒரு மாநாட்டைச் கூட்டிற்று (1982). 1984-ல் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கங்களின் பேரவை பதிவுபெற்றது. ஈராண்டிற் கொருமுறை மாநாடு கூட்டி எழுத்துத்துறைக்கு ஆக்கமும், எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் சேர்ப்பதென முடிவெடுக்கப்பெற்றது. இவ் வமைப்பின் முதல் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பெற்றவர் கா.கலியபெருமாள். பேரவையால் இருமுறை மாநாடு கூட்டப்பெற்றது. இப்பொழுது பேரவையின் நடவடிக்கைகள் முடக்கம் கண்டுள்ளன. இப் பேரவையில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இணையவில்லை.

வாசகர் வட்டங்கள்

இலக்கியப் பரவலுக்கு அடிப்படையாக விளங்கும் வாசகர்கள் ஒன்றுகூடி அமைத்துள்ள இயக்கங்கள் இன்று நாட்டில் முப்பதுக்கு மேல்

உள்ளன. வாசகர்கள் ஒன்றிணைந்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும், இதழ்கள், நூல்கள் பரவுவதற்கு உதவவும் அமைப்பு அடிப்படையில் 1971-ல் கெடா மாநிலத்தில் ஓர் இயக்கம் உருவானது. அது, எழுத்தாளர் அமைப்புடன் சேர்ந்து அமைந்த 'கெடா மாநிலத் தமிழ் எழுத்தாளர் வாசகர் இயக்கம்' ஆகும். வாசகர்கள் ஒன்றுகூட வாய்ப்பளித்த முதல் இயக்கமாக அது கருதப் பெறுகிறது. அடுத்துச் சிலாங்கூர்க் கூட்டரசு வளாகத் தமிழ் எழுத்தாளர் வாசகர் இயக்கம் 1977-ல் அமைந்தது. பின்னர் அது எழுத்தாளர் இயக்கமானது.

வாசகர்கள் தங்களுக்குள் தனி இயக்கம் காணும் முயற்சி 1983ஆம் ஆண்டிற்குப் பின்னரே செயலுருப்பெற்றது. பத்துமலையில் சந்திரன் என்பவர் முயற்சியால் ஒரு வாசகர் வட்டம் தோன்றியது. ஆனால், அது வலிமை யோடு பணிகளைத் தொடரவில்லை. 1984-ல் மலர்விழி ஆறுமுகம், ஆர்.என். சந்திரன் போன்றோர் முயற்சியால் ஒரு வாசகர் வட்டம் அமைந்தது. 1986-ல் எம்.கே. சுந்தரம், ஜி.குணசேகரன், அப்பாசாமி போன்றோரால் பூச்சோங்கில் உருவான வாசகர் வட்டம் ஒரு வலிமை மிக்க அமைப்பாகி நன்கு செயற்பட்டது; தொடர்ந்து செயற்பட்டு வருகிறது; கிள்ளானில் 1996ஆம் ஆண்டு பாலகோபாலன், சைபுதீன் போன்றோர் முயற்சியால் ஒரு வாசகர் வட்டம் அமைந்தது. இதுவும் அவ்வப்போது நிகழ்வுகளை நடத்தித் துடிப்புடன் செயற்பட்டு வருகிறது.

வாசகர் வட்டங்கள் பல பயனுடைய நிகழ்வுகளை ஏற்பாடு செய்து தமிழ் வளர்ச்சிக்கு உதவி வருகின்றன. நூல் வெளியீடுகள், இலக்கியச் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், கலை இலக்கிய விழாக்கள் போன்ற நிகழ்வுகளை நடத்தி வருகின்றன. நாட்டிலுள்ள வாசகர் இயக்கங்களுள் பூச்சோங், கிள்ளான் நகரங்களில் இயங்கும் வாசகர் வட்டங்கள் மற்ற வட்டங்களுக்கு முன்னோடிகளாய் விளங்கி வருகின்றன. வாசகர் வட்டங்கள் உயிர்ப்புடன் செயற்படத் 'தூதன்' இதழாசிரியர் இராமதாஸ் மனோகரன் பேருக்கம் நல்கி வருகிறார்.

தமிழ் இளைஞர் மணிமன்றங்களின் பேரவை

மலேசிய, சிங்கப்பூர்த் தமிழ்க் குழந்தை இலக்கியத்தின் தந்தை என்னும் பெருமைக்குரியவர் கோ.சாரங்கபாணி. அவர்தம் நாளிதழான தமிழ் முரசில் 1953-ல் மாணவர் மணிமன்றப் பகுதியைத் தொடங்கினார்; அதனில் எழுதும்படி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்; அவர்கள் எழுதும் எழுத்துகளைத் திருத்தி வெளியிட்டு வளர்த்து வந்தார்; ஆசிரியர் உரையில் மாணவர்களுக்கு அரிய கருத்துகளை எழுதிவந்தார்.

குழந்தை இலக்கியம் இருவகைப்படும். மாணவர்கள் தங்களுக்குத் தாங்களே சொந்தமாக எழுதுவது ஒரு வகை; பெரியவர்கள் இறங்கி வந்து குழந்தைகளுக்கு எழுதுவது இரண்டாம் வகை. 'மாணவர் மணி மன்றம்' இரண்டாம் வகையைப் பெரிதும் ஊக்குவித்தது. அது மிகப் பெரிய இயக்கமாய் உருவெடுத்தது.

மாணவர் மணிமன்ற மலரில் எழுதி வளர்ந்து கொண்டிருந்த விடலைப் பருவத்தினர், 1956ஆம் ஆண்டு பினாங்கு நகரில் 'மாணவர் மணிமன்றம்' என்ற பெயரில் ஓர் இயக்கத்தை அமைத்தனர். பின்னர் அது மாணவர் வளர்ந்ததற்கேற்பத் தமிழ் இளைஞர் மணிமன்றமாகியது. அதனைத் தொடர்ந்து நாடெங்கும் தமிழ் இளைஞர் மணிமன்றங்கள் தோன்றின.

மாநிலந்தோறும் தனித்தனியே இயங்கிவந்த மன்றங்கள், தாய் மன்றமாகிய பினாங்கு மணிமன்றத்தின் ஏற்பாட்டில் ஒன்றுகூடித் தமிழ் இளைஞர் மணிமன்றங்களின் பேரவையை அமைத்தன (1964). பேரவை ஆண்டுதோறும் ஒவ்வொரு மாநிலப் பேரவையின் ஏற்பாட்டில் மாநாடு கூட்டிற்று. அம் மாநாடுகள் இளைஞர்களிடையே ஒரு பேரெழுச்சியை ஏற்படுத்தின. கலை, இலக்கியப் போட்டிகள் நடந்தன; செஞ்சொற்கள் ஆட்சிபுரிந்த பட்டிமன்றங்கள் நடந்தன; இலக்கியநயம் செறிந்த நாடகங்கள் அரங்கேறின. இந் நடவடிக்கைகளால் தமிழுணர்வு பீரிட்டது. நல்ல எழுத்தாளர், பேச்சாளர் உருவாயினர். ஓர் அருமையான ஆற்றல்மிகு இளைஞர் படை தலையெடுத்தது.

பேரவையின் முதல் தலைவர் சா.ஆ.அன்பானந்தன் (26.05.1980-ல் மறைவு). க.கிருஷ்ணசாமி செயலாளராய்த் தேர்வு பெற்றார். பேரவையின் உறுதிமிக்க நடவடிக்கைகளாலும் நாடெங்கும் இயங்கிய மன்றங்களின் துடிப்பு மிக்க பணிகளாலும், அரசின் கவனத்தை ஈர்த்தது; ஒப்புதலைப் பெற்றது. அரசு வகுத்த இளைஞர் திட்டங்களில் மணிமன்றத்திற்கு வாய்ப்புகள் கிட்டின. காலப்போக்கில் மன்றத்தில் அரசியல் உணர்வு கலக்கத் தொடங்கிற்று. அதனால் சில பின்னடைவுகள் ஏற்பட்டன. இன, மொழி, கலை, இலக்கிய உணர்வுகளும் சற்று மங்குவது போன்ற தோற்றம் வெளிப்பட்டது. ஆனால், மன்றம் நிலைகுத்தும் அளவு நிலைமை ஆகி விடவில்லை. மன்றத்தின் ஆணிவேர் உறுதியாகவே இருந்து வருகிறது. அடுத்தடுத்துத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவர்கள் வழிநடத்தி வந்தனர். இன்றும் தமிழ் இளைஞர்களுக்கு வலிவுள்ள மதிப்பிற்குரிய அமைப்பாகவே தமிழ் இளைஞர் மணிமன்றம் விளங்கிவருகிறது. தற்பொழுது பேரவைத்

தலைவராய் அமர்ந்து மன்றங்களின் பணிகளை ஒருங்கிணைத்து வருபவர் பொன்னையா பிரம்மன்.

மாதவி இலக்கிய மன்றம்

சிங்கப்பூர் மலேசியாவொடு சேர்ந்திருந்த காலத்தில் (1965 வரை) ஐ. உலகநாதனால் மாதவி இதழ் தொடங்கப்பெற்றது (1959). அவ் விதழ் சிங்கப்பூர், மலேசியக் கவிதையுலகில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்திற்று; கவிதை ஆர்வலர் உருவாகி வளரத் துணைபுரிந்தது. அதன் அடிப்படையில் அமைந்ததே மாதவி இலக்கிய மன்றம் (1960). இம் மன்றம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பேருக்கம் தந்தது; பல நிகழ்வுகளை நடத்திற்று. மலேசியா, சிங்கப்பூர்க் கவிதை வளர்ச்சிபற்றி எழுதும் பொழுது, இம் மன்றத்தின் பணிகளை மறந்துவிடுதல் இயலாது. மலேசியா, சிங்கப்பூர்க் கவிதைத் துறைக்கு வளம் சேர்த்த ஐ.உலகநாதனை நிறுவனராய்க்கொண்ட இதன் வளர்ச்சிக்கு முருகதாசன், அமலதாசன் போன்ற தொண்டு மனங்கள் ஈகமனத்துடன் உழைத்தன. முருகதாசன் தலைமையில் ஒரு பெரும் படையினர் இம் மன்றத்தில் இணைந்து இலக்கியத்துறையில் தங்களை வளர்த்துக் கொண்டனர். இதன் மூலம் உணர்வு நலங்கொண்ட பாவலர் பலர் உருவாயினர். இலக்கியத்தின் அனைத்துப் படைப்புத் துறைகளும் வளர மாதவி இதழ் துணைபுரிந்தது. பல நிகழ்வுகளை நடத்திப் படைப்பாளர்களை ஊக்கப்படுத்திற்று. சமுதாயத்தில் கலை, இலக்கிய உணர்வுகளைப் பரப்பிற்று.

3. மலேசியத் தமிழ் இலக்கியக் கழகம்

மலேசியத் தமிழ் இலக்கியக் கழகம் 1970ஆம் ஆண்டில் பதிவு பெற்றது. இர.ந. வீரப்பன், பொன்னி, ந.தியாகராசன் போன்றோர் இதன் முன்னோடிகளாவர். இர.ந. வீரப்பன் தம் இறுதிக் காலம் வரை செயலர், தலைவர் பொறுப்புகள் வகித்துச் சிறக்கப் பணியாற்றினார். கொண்ட நோக்கமும், ஏற்ற குறிக்கோள்களும் சிதைவுறா வண்ணம் பல்வேறு திட்டங்களை இக் கழகம் உறுதியொடு செயற்படுத்தியுள்ளது. இதன் அடிப்படைக் கொள்கையும் குறிக்கோளும் 'தமிழ்ப்பள்ளி எங்கள் உடல்; தமிழ்மொழி எங்கள் உயிர்'[5] என்பதாகும்.

கல்விப் பணி

தமிழ்க்கல்வி வளர்ச்சியிலும் தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டிலும் கழகம் தனிக் கருத்துச் செலுத்திச் செயல்பட்டது; தமிழ்ப்பள்ளிகளுக்கு ஊறு வருவதாகத் தெரிந்தால் துடித்தெழுந்து குரல் கொடுத்தது. 1972-ல் நாடு

தழுவிய அளவில் பல இயக்கங்களை ஒன்றிணைத்தும் கல்வியாளர்களை ஆய்வுக் கட்டுரைகள் படைக்க வைத்தும் அக் கழகம் நடத்திய முதலாம் தமிழ்க்கல்வி வளர்ச்சி மாநாடு, நாட்டில் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்திற்று. 1980, 1985, 1990, 1995, 2005ஆம் ஆண்டுகளில் தமிழ்க் கல்வி வளர்ச்சி மாநாடுகள் தொடர்ந்து நடந்தன. தமிழ்க்கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்தின.

உயர்கல்வித் திட்டம்

இடைநிலைக் கல்விக்குப்பின் தமிழை ஆழக் கற்க இங்குப் போதிய வாய்ப்பிலாத நிலையிருந்தது; மலாயாப் பல்கலைக்கழகத்திலும் அவ் வாய்ப்பு அரிதாகவே - பெரும்பாலோருக்குக் கிட்டாததாகவே இருந்தது. அதனால் ஆர்வமுள்ளோர் தமிழில் உயர்தேர்ச்சி பெறும் வாய்ப்பைத் தமிழ் இலக்கியக் கழகம் ஏற்படுத்திற்று. சென்னை மாணவர் மன்றம் நடத்தும் தமிழ் மணித் தேர்வை இங்கும் நடத்த ஏற்பாடு செய்தது (1965). அத் தேர்வு அண்மைக் காலம் வரை நடந்து வந்தது.

இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கம்

இந் நாட்டில் தமிழ் இலக்கியம் செழித்து வளர, நூல் வெளியீட்டு முயற்சிகள் மேலோங்க, அயல்நாடுகளில் மலேசியத் தமிழ் இலக்கியம் அறிமுகமாகத் தமிழ் இலக்கியக் கழகம் அளப்பரிய முயற்சிகளை மேற்கொண்டது. உள்நாட்டுப் படைப்பாளர்களான சி.வீ.குப்புசாமி, ஐ.உலகநாதன், சி.வடிவேலு, மா.செ.மாயதேவன், மா.இராமையா ஆகியோர் படைப்பிலக்கியங்கள்பற்றிய கருத்தரங்குகள் நடத்திப் படைப்பாளர்களை ஊக்கப்படுத்தினர்.

'மலாயாவில் தமிழ்க் கவிதைகள்' என்பது போன்ற நூல்களுக்குத் திறனாய்வுக் கருத்தரங்குகள் நடத்தித் திறனாய்வுத்திறன் பெருக வழிகாட்டிற்று; மலேசிய எழுத்தாளர் படைப்புகள் தமிழக, இலங்கை ஏடுகளில் இடம்பெறத் துணைபுரிந்தது; சென்னை மாணவர் மன்றத்தில் மலேசியத் தமிழ் இலக்கிய அறிமுக அரங்கை நடத்திற்று (1977); மலேசிய நூல் கண்காட்சியையும் நடத்திற்று. தஞ்சையில் இயங்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் மலேசியத் தமிழ் நூல்களைத் திரட்டி வழங்கிற்று.

பொதுநலத் தொண்டர்கள் பற்றிய தொகுப்பு நூல்

தமிழ், தமிழின வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய மலேசியப் பெருமக்கள்பற்றி நூலெழுத முன்வந்த, தமிழகச் சேலம் (சங்கொலி)

சோலை இருசனுக்குப் பேராதரவு வழங்கிற்று. 'கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது' (1977), 'மலேசியத் தமிழ்ப் புரவலர்கள்' (1984) ஆகிய இருநூல்கள் தொகுக்க விவரங்கள் திரட்டும் முயற்சிக்குக் கைகொடுத்து உதவியது. நீண்ட நெடுங்காலம் தனியொரு மாந்தராய் நின்று அரியன செய்ய இடைவிடாது தூண்டி நற்பணிகளுக்கு வழி வகுத்த பெருமகன் இர.ந. வீரப்பன் புகழுடம்பெய்தியபின் (3.9.1999). ப.கு.சண்முகம் கழகத்தின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 2004ஆம் ஆண்டு முதல் மணிவெள்ளையன் ம.த.இ.கழகத்தின் தலைமைப் பொறுப்பேற்றுச் செயற்பட்டுவருகிறார்.

மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கம்

உலகளவிலான இப் பேரியக்கம் இங்கு 'மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கம்' என்ற பெயரில் பதிவுபெற்றுச் செயலாற்றி வருகிறது (1974). நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் கூடியபோது (1974) கருக்கொண்டு உருவானதுதான் 'உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்'. மொழி ஆய்வை முதன்மையாய்க் கொண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கட்டுரை வடிவில் நின்றுவிடுகிறது. வேறு செய லாக்கம் அதற்கொன்றுமில்லை. ஆனால், உலகத் தமிழரிடையே மொழி, இன-கலை-பண்பாட்டுத் தொடர்பினை ஏற்படுத்த ஓர் அமைப்புத் தேவை என்பதனைத் தொலைநோக்கொடு சிந்தித்ததன் விளைவே இவ் வியக்கமாகும். இதற்கு மூலமாக விளங்கியோரில் முதன்மையானவர் கரும்பசிட்டி இரா. கனகரத்தினம். இதற்குப் பொருத்தமான பெயர் சூட்டிய சாலைஇளந்திரையனே முதல் தலைவராய்த் தெரிவு செய்யப்பெற்றார். இரா. கனகரத்தினம் பொதுச் செயலாளரானார்.

இவ் வியக்கத்தின் நோக்கம் மிக விரிந்ததாகும். "வீழ்ந்துவிட்ட தமிழினம் மீண்டும் வீறு கொண்டு எழச் செய்யப் பல நாடுகளில் வாழும் தமிழர்களை ஒன்றுபடுத்தி, அவர்தம் மனத்தைப் பண்படுத்தித் தமிழ்மொழி, தமிழிலக்கியம் வளரவும், அவர்கள் வாழுகின்ற நாடுகளில் உரிய பெருமையோடும் பொறுப்புணர்ச்சியோடும் செயற்படத் தேவையான சிந்தனைகளைப் பரப்பவும், சிறுபான்மையினர் என்பதால் அவ்வந் நாட்டில் தமிழர்களுக்கு ஏதேனும் தடைமுடைகள் ஏற்படுமானால் அவற்றைச் சிறுபான்மையர் சிக்கல் என்ற அடிப்படையில் உலக அரங்கில் ஒலிக்கச் செய்தலும், தமிழ் பயிலத் தேவையான நூல்கள் வழங்குதலும், உலக நாடுகளில் பண்பாட்டு விழாக்களைப் படைத்து இனவுணர்வூட்டுதலும், தமிழரல்லாதோர் தமிழ் படிக்க ஊக்க மூட்டுதலும், உலகிலுள்ள

பிறமொழிகளின் உயர் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்தலும் தமிழின் இனிமை, தமிழரின் அரிய சிந்தனைகள் ஆகியவற்றைப் பிறரிடம் பரப்பியும் உலக மாந்தரிடையே ஒருமைப்பாட்டுணர்ச்சி ஏற்படச் செய்தலும் தலையாய நோக்கங்களாக அமைந்தன."[6]

இவ் வியக்கத்திற்குத் தொடக்கத்தில் இலங்கை, தமிழ்நாடு, இலண்டன், மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, பீஜி, தென்னாப்பிரிக்கா, மொரீசியஸ், ரியூனியன் போன்ற நாடுகளில் கிளைகள் அமைந்தன. இவ் வியக்கத்தின் முதல் மாநாடு தமிழகத் தலைநகர் சென்னையில் நடந்தது (1977). பத்து நாடுகளைச் சேர்ந்த பேராளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

"வெளிநாட்டுத் தமிழர்கள் தமிழ் பயிலத்தக்க திட்டத்தைத் தமிழகப் பல்கலைக்கழகங்கள் மூலம் நிறைவேற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு தமிழக அரசை இம் மாநாடு கனிவுடன் கோருகிறது; அஞ்சல் வழிக் கல்விப் பணியைச் செய்ய இதனால் முடியும் என இம் மாநாடு நம்புகிறது."

"கல்விச் சுற்றுலா, கலை, இலக்கிய முயற்சிகள், விளையாட்டுப் போன்றவற்றுக்காகத் தமிழகத்திற்கு வரும் வெளிநாட்டுத் தமிழர்கள் தங்கிட வசதியாகத் தமிழகத் தலைநகர் சென்னையில் பெரியதொரு விடுதியினைக் கட்டுவித்தல் வேண்டும்"[7] என்பன போன்ற உலகத் தமிழர் நலன்களை நோக்கமாய்க் கொண்ட தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப் பெற்றன. தொடர்ந்து மாநாடுகள் மொரீசியஸ் (1987), ஆஸ்திரேலியா (1992), கனடா (1996), தமிழகம் சென்னை (1999), தென்னாப்பிரிக்கா (2001), இந்தியா, புதுச்சேரி (2004) ஆகிய இடங்களில் நடைபெற்றன. பல நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் சில ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது மொழி, கலை, இலக்கிய, பண்பாட்டு அடிப்படையில் ஒன்றுகூடுதல், புதிய தலைமுறையினருக்குப் புத்துணர்வையும் பழந்தலைமுறையினர் வழியை மறவாது போற்றும் ஆர்வத்தையும் ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் இயக்கம் செயல்பட்டு வருகின்றது.

நீண்ட நெடுங்காலம் தலைவராய் விளங்கி உலகின் பல நாடுகளில் அமைந்த கிளைகளையெல்லாம் தம் கடும் உழைப்பால் ஊக்கப்படுத்தியும், பாரெங்கும் அலைந்து செயல்களை முடுக்கியும் தம் இறுதி மூச்சுவரை தொண்டிலேயே தம்மைக் கரைத்துக்கொண்ட இர.ந.வீரப்பன் 7ஆம் மாநாட்டைச் சென்னையில் கூட்டியபோது, தம் ஆற்றலுக்கு மீறி உழைத்த

தாலும், எதிர்கொண்ட சிக்கல்களின் கடுமையாலும், உடல் நலிந்ததாலும், தொண்டு களத்திலேயே உலக வாழ்வு நீத்தார். அவருக்குப்பின் கனடா நாட்டுச் சி.செல்லையா தலைவரானார். 9ஆம் மாநாடு இந்தியாவின் புதுச்சேரியில் கூடியபோது மலேசியக் கிளையின் தலைவரான ப.கு. சண்முகம் உலகத் தலைவராகவும் தெரிவு செய்யப்பெற்றார்.

மலேசியக் கிளையின் பணிகள்

1974ஆம் ஆண்டு தொடங்கி உலகின் பல பாகங்களில் நடைபெற்ற மாநாடுகளுக்கெல்லாம் மலேசியப் பேராளர்களை அனுப்பிவைப்பதிலும், அங்கு மலேசியத் தமிழ் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுவதிலும் உலகளாவிய தமிழ்ப் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதிலும் மலேசியக் கிளை அயராமல் செயற்பட்டுவந்தது. 4ஆம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டை முன்னின்று நடத்திற்று.

சிலப்பதிகார மாநாடு

இங்கு அவ் வியக்கம் திட்டமிட்ட பணிகளுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பெரும்பணி உலகளாவிய சிலப்பதிகார மாநாட்டுப் பணியாகும். புகழுடம்பெய்திய இர.ந.வீரப்பன் பலரைக் கூட்டி விரிவான செயல்திட்டங்கள் தீட்டிப் பல்லாற்றானும் சிறப்புமிக்க மாநாடு காணக் கனவு கண்டுவந்தார். பல தடைமுடைகளால் காலம் நீண்டு வந்தது. "தமிழிலக்கியக் கழகத்தால் (தொடக்கத்தில் அக் கழகமே இதற்குத் திட்டமிட்டது) 18 ஆண்டுகளுக்கு முன் சிலப்பதிகார விழாக் கால்கோள் விழாவாக நடத்தப்பட்டது"[8] என்னும் அவர் மொழியே கால நீட்சியைக் காட்டும். தமிழலக்கியக் கழகத்தால் திட்டமிடப்பட்ட விழாவினை உ.த.ப. இயக்க வாயிலாய் நடத்த முடிவு செய்யப்பெற்றது. விழாக் குழுவின் தலைமைப் பொறுப்பு மணிவெள்ளையனிடம் வழங்கப்பெற்றது.

வல்லுநரைக் கொண்டு வகுத்த நெறிப்படி, மிக விரிந்த அளவில் இல்லாவிட்டாலும்,

(அ) தமிழிலக்கியங்களுள் சிலப்பதிகாரம் முதன்மை வாய்ந்தது. அவ் விலக்கியத்துள் காணப்பெறும் தமிழியல் கோட்பாடுகளையும் தமிழர் வரலாற்றையும் உலகளாவிய தமிழ் மக்களுக்கு உணரச் செய்வது.

ஆ) வளரும் தலைமுறையினர் நவீன வாழ்க்கைப் போக்கில் சிக்குண்டிருந்தாலும் அவர்கள் தமிழிலக்கியப் பயிற்சி பெறுவதன் வழியே நல்ல மனநலஞ் சார்ந்த பண்பாட்டு வளர்ச்சியினைப் பெறுதல் இயலும் என்பது.

இ) நீண்ட காலத்திற்கு முன் கடலில் மூழ்கிப்போன வரலாற்றுச் சிறப்புமிக்க கடற்கரைப் பட்டினத்தின் அழகிய நகர் அமைப்பு முறைகளையும், தமிழர் அறிவுக் கோட்பாட்டில் முகிழ்த்த கட்டடக்கலைப் பெருமையினையும், கலை, பண்பாட்டுச் சிற்ப ஓவிய வெளிப்பாடுகளையும் அகழ்வாராய்ச்சி செய்வதற்குத் தமிழக அரசினையும் இந்திய நடுவணரசினையும் யுனேஸ்கோ அமைப்பினையும் தூண்டுதல்[9] என்னும் நோக்கங்களொடு சிலப்பதிகார மாநாடு நடந்தேறியது (1999).

இம் மாநாடு ஒரு தொடக்க முயற்சியே ஆகும். இஃது இன்னும் எத்தனையோ வகைகளில் விரிவுபட வேண்டும். காரணம், "வேற்றுக் குல வரவைத் தரம் பிரித்து வடிகட்டி நல்லனவற்றை ஏற்கும் மனப்போக்கு பொதுவாகத் தமிழர்களிடத்தில் இருந்ததே இல்லை. எனவே, தம் பண்பாட்டிற்கு மறுதலையான இராமாயணக் கதையையும், பாரதக் கதையையும் அவற்றின் உள்ளே அடங்கியிருந்த கிளைக் கதைகளையும் தமிழர்கள் அன்றைய அரசியல், சமயச் செல்வாக்கால் ஏற்றுக்கொண்டனர். இந்த இரண்டு இதிகாசங்களும் தமிழகத்தில் பரவாமலேயே இருந்திருக்க வேண்டும்"[10] என்பார் க.ப.அறவாணன். ஆனால், அவை இன்றும் போற்றப் படும் அளவில் துளிகூட, தமிழர் இசை நடனம் போன்ற நுண்கலைகளின் வரலாற்றுச் சிறப்பிற்குச் சான்றாய் விளங்கும் சிலப்பதிகாரத்திற்கு இல்லை. கற்றறிந்த சிலரால் படித்துப் பாராட்டப் பெறலாம்; கருத்தரங்குகளில் கட்டுரைகள் படைக்கப் பெறலாமே அல்லாது, மக்கள் அவைக்கு அது வருவதில்லை. உ.த.ப.இயக்கம் அதற்கு ஒரு மாற்றாக உலகளாவிய சிலப்பதிகார மாநாட்டைக் கூட்டிற்று. இம் முயற்சி தொடர வேண்டும். தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் உ.த.ப. இயக்கம் அம் மாநாட்டை அடுத்தடுத்துக் கூட்ட வேண்டும். தமிழின மீட்சிக்கு இஃதும் ஒருதலை முயற்சியாகும்.

கல்வி வளர்ச்சிக்கு முதன்மை தரும் இயக்கங்கள்

பொது இயக்கங்களின் நடவடிக்கைகள் தமிழ், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்து வருகின்றன. அவை தமிழ் வளர்ச்சியிலும் நாட்டம் உடையவை எனினும், அப்பணியில் நேரடியாக ஈடுபடுவதில்லை. சமுதாய நிலையை முறைப்படி ஆய்ந்து கல்வி வளர்ச்சியில் நேரும் தடுமாற்றங்களை உணர்ந்து சீர்படுத்த வழிகாணும் முயற்சியில் சில இயக்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. அவற்றுள் சில ஈண்டு எடுத்துரைக்கப்பெறுகின்றன:

கல்வி நல ஆய்வு நிறுவனம் (E.W.R.F.)

கற்ற, பொருள்வளம் மிக்க சமுதாய ஆர்வலர்களால் நிறுவப்பெற்ற ஒரு தொணடு நிறுவனம் இ.டபிள்யு.ஆர்.எப். எனப்படும் கல்வி நல ஆய்வு நிறுவனம் ஆகும். தமிழர் கல்வித் துறையில் உயர வேண்டுமென்னும் ஆர்வம்கொண்டு இந்நிறுவனம் பணியாற்றி வருகிறது. விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு சீர்மைக்கான வழிவகைகள் பற்றிச் சிந்திக்கத் தூண்டவைத்த ஒரு முன்னோடி இயக்கம் இது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் 948)

என்னும் வாய்மைக்கொப்பத் தமிழ்ப்பள்ளிகளின் உண்மையான சிக்கல்களைக் கண்டறிய விரிவான ஆய்வொன்றனை மேற்கொண்டது இவ் வியக்கம். சமுகவியலறிந்த ஒரு கல்வியாளரான முனைவர் த. மாரிமுத்து அப்பணியில் ஈடுபட்டு ஆழமாக ஆய்ந்து விரிவான அறிக்கை ஒன்றனை ஆங்கிலத்தில் (Tamil Schools problems and prospects) அளித்த இவ்வறிக்கை, தமிழ்ப் பள்ளிகளின் சீர்மைபற்றிச் சிந்தித்துத் திட்டமிட ஒரு தூண்டுதலை ஏற்படுத்திற்று. மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் வரலாற்றில் இஃது ஒரு திருப்புமுனையாகும்.

க.ந.ஆ. நிறுவனம் (E.W.R.F.) மேற்கொண்ட பணிகளில் மற்றொரு குறிப்பிடத்தக்க பணி தமிழ் மாணவர்களுக்கு மழலையர் கல்வியை அறிமுகப் படுத்தியதாகும். மழலையர் பள்ளிகளை ஏற்படுத்திய இவ்வியக்கம் வழிகாட்டிய பின்னரே அம் முயற்சி பலரால் மேற்கொள்ளப்பெற்று இன்று நல்ல முறையில் பல்கிப் பெருகி வருகிறது.

தொடக்கத்தில் வெளியிட்ட கருத்துகள் பல எதிர்ப்புகளை ஏற்படுத்தினாலும் காலப்போக்கில் அவை மேம்பாட்டுக்கு வழிவகுத்தன. தமிழ்க்கல்வி வளர்ச்சியில் உணர்ச்சி முழக்கமின்றிச் செயலூக்கமிக்கத் தொண்டுகளால் எதிர்ப்புகளுக்கிடையே இவ் வியக்கம் போட்ட அடிப்படை, வரலாற்றில் நிலைத்து நிற்கக்கூடியதாகும்.

தமிழ்க் கல்வி வளர்ச்சியை நோக்கமாகக்கொண்டு கற்ற, வளமிக்கப் பெருமக்களை இத் துறைக்குத் திருப்புவதிலும், இயக்கங்கள் நிறுவி, தொண்டு புரியும் முனைப்பை ஏற்படுத்துவதிலும் இது முன்னோடியாய் விளங்கிய இயக்கமாகும். இப்போதைய இதன் தலைவர் (வழக்கறிஞர்) பசுபதி, தமிழ்ப்பள்ளி வளர்ச்சியிலும் தமிழர் முன்னேற்றத்திலும் கருத்துச் செலுத்தி ஈக உணர்வுடன் தொண்டாற்றிவருகிறார்.

சைல்டு (CHILD)

டாக்டர் ஐங்கரனைத் தலைவராகக்கொண்டு அமைந்த ஒரு தொண்டூழிய நிறுவனம் `சைல்டு`. இவ் வியக்கமும் தமிழ்ப்பள்ளி மாணவர் வளர்ச்சியிலும் தமிழ்ச் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியிலும் பெருநாட்டங் கொண்டு செயலாற்றி வருகிறது.

பொருள் வளங்குறைந்த தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு இலவய மாகத் தனிப்பாடங்கள் நடத்தித் தேர்வுகளில் சிறந்த மதிப்பெண்கள் பெறப் பேரூக்கம் நல்கிவருகிறது. பல வழிகளில் முயன்று பொருள் திரட்டி இஃது ஆற்றிவரும் பணி, தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்கும் தமிழ் மாணவர் உயர்வுக்கும் ஓர் உந்துதலாய் விளங்கி வருகிறது.

தமிழ் அறவாரியம்

மலேசியக் கல்வி ஆய்வு மேம்பாட்டு அறவாரியம் (Malaysian Tamil Educational Research and Development Foundation) என்னும் நீண்ட பெயரின் சுருக்கமே தமிழ் அறவாரியம் (Tamil Foundation Malaysia) தமிழ் வளர்ச்சியை நோக்கமாய்க்கொண்டு அண்மையில் உருவான (2003) ஓர் அமைப்பு இது.[11] தமிழ்ப்பள்ளி மாணவர்கள் சிறந்த கல்வியைப்பெறத் தேவையான அணுகுமுறைகளை ஆக்கபூர்வமாகவும் ஆய்வு பூர்வமாகவும் கண்டறிதல், வட்டாரச் சூழலுக்கேற்ற முறையில் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் முறையில் செயல் திட்டங்களை மேம்படுத்துதல் வாரியத்தின் நோக்கங்களாகும்.

மலேசியாவில் 525 தமிழ்ப்பள்ளிகள் உள்ளன. இனத்தின் பண்பாடு, மொழி, கலை, அடையாளம் ஆகியவற்றைக் காக்கும் மையங்களாக இவை விளங்குகின்றன. ஒரு இலட்சம் தமிழ்க் குழந்தைகள் இப் பள்ளிகளில் பயில்கின்றனர். ஏழைகளான இவர்களுக்கு, நல்ல கல்வி மிக முக்கியம். இருப்பினும் பல வகைகளில் தமிழ்ப் பள்ளிகள் பின்தங்கியே உள்ளன. இவை எதிர்நோக்கும் சவால்கள் ஏராளம்.

அகநிலையினின்று செயற்படும் இயக்கங்கள்

தமிழ்க்கல்வி வளர்ச்சி, தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாடு, தமிழ் மாணவர் களின் முன்னேற்றம் ஆகிய நோக்கங்களின் வெற்றிக்குப்புறத்தே நின்று ஆதரவு தரும் இயக்கங்கள் அந் நோக்கங்களை உயிர் மூச்சாய்க் கொண்டு செயற்படும் இயக்கங்கள் ஆகியன மேலே எடுத்துக்காட்டப் பெற்றன. இனி, அந் நோக்கங்களை மட்டுமே கொண்டு தொழில் அடிப்படையில் இயங்கும் இயக்கங்கள் கீழே குறிக்கப்பெறுகின்றன.

மலாயத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தேசிய சங்கம்

இஃது ஒரு தொழிற்சங்கமாகும். (Union) இஃது 1964ல் பதிவு பெற்றது. தொழில்சார்ந்த சிக்கல்கள், சம்பள உயர்வு போன்றவையே இவற்றின் மூல நோக்கங்களாகும் இவற்றுடன் தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி வளர்ச்சியிலும், பள்ளி மேம்பாட்டிலும் இது கருத்துச் செலுத்தி வருகிறது. தமிழ்ப்பள்ளிகளுக்கு ஊறு நேரும்நிலை ஏற்படும்போது இவ்வியக்கம் அதனை முறியடிக்கக் குரல் கொடுக்கத் தயங்குவதில்லை. ஆண்டுக் கூட்டங்களில் இது நிறைவேற்றும் தீர்மானங்கள் அரசின் பார்வைக்குச் சென்று நல்ல விளைவுகளை ஏற்படுத்தத் துணை புரிகின்றன. தமிழ் ஆசிரியர்களுக்கும், தமிழ்ப்பள்ளிகளுக்கும், தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கும் இச் சங்கம் ஒரு காவல் அரணாக விளங்கி வருகிறது. இதன் இப்போதைய தலைவர் தருமலிங்கம்.

தேசிய ஆசிரியர் பணியாளர் சங்கம்

தேசிய ஆசிரியர் பணியாளர் சங்கம் (NUTP) என்னும் பெயரிய இது மலாய், சீன, தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் உறுப்பியம் பெற்றுள்ள ஓர் அமைப்பாகும். அனைத்து மொழி ஆசிரியர் நலன், பள்ளிகளின் மேம்பாடு. கல்வி வளர்ச்சி போன்றவற்றை முதன்மை நோக்கங்களாகக்கொண்டு இது செயற்பட்டு வருகிறது. தமிழ்ப்பள்ளி களுக்கு இடர் நேரும் நிலை வரும்போது இச்சங்கம் எதிர்த்துக் குரல் கொடுக்கத் தயங்குவதில்லை. இந் நூலின் கல்வி குறித்த பகுதியில் (தமிழ்ப்பள்ளிகள் தாண்டி வந்த தடைகள்) இது மேற்கொண்ட செய லொன்று எடுத்துரைக்கப்பெற்றுள்ளது. இதன் பொதுச் செயலாளராயிருந்து வழிநடத்திய (டத்தோ) சிவசுப்பிரமணியம், இப்பொழுது மனித உரிமைக் கழகத்தின் ஆணையராய் அமர்த்தம்பெற்றிருப்பது இச் சங்கத்திற்குப் பெருமையாகும். இதன் இப்போதைய தமிழ்ப்பகுதித் தலைவர் எம். கிருஷ்ணன்.

உலகத் தமிழாசிரியர் மாநாடு

இன்று பல நோக்கங்களுக்காகப் பல மாநாடுகள் உலக அளவில் நடக்கின்றன. தமிழரும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு, சிலப்பதிகார மாநாடு என உலக அளவில் தொடர்ச்சியாகப் பல மாநாடுகளை நடத்தி வருகின்றனர். ஆனால் தமிழ் கற்றல் கற்பித்தலை அடிப்படையாகக்கொண்ட மாநாடு ஒன்றனை நடத்த யாரும் எண்ணமிடாத நிலையில், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் இதற்கு வழிவகுத்தது.

வி. ஆர்.பி. மாணிக்கம், சாமி வீராசாமி போன்ற முன்னோடிகள் எண்ணத்தில் கருக்கொண்ட இச் சிந்தனை முதிர்ந்து, வடிவம் பெற்றது. 15-18.6.1992 ஆம் நாள்களில் சிங்கப்பூரில் அரசு ஆதரவோடு உலகத் தமிழர் மாநாடு நடந்தது. அம் மாநாடு தமிழ்க் கல்வியுலகில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திற்று. மாநாட்டை ஈராண்டிற்கொரு முறை வெவ்வேறு நாடுகளில் நடத்த முடிவெடுக்கப்பெற்றது. இரண்டாம் மாநாடு மலேசியாவில் நடத்த முடிவு செய்யப்பெற்றது. அதற்கிணங்க தேசிய ஆசிரியர் பணியாளர் சங்கமும், மலாயாத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தேசிய சங்கமும் இணைந்து மலாயாப் பல்கலைக் கழகத்தில் மாநாட்டைப் பயன்மிக்கதாய் நடத்தின. (9-12.6.1994). நாட்டின் கல்வியமைச்சர் மாநாட்டினைத் தொடக்கி வைத்து அரசின் ஒப்புதலை வழங்கினார். மலேசியத் தமிழர்-இந்தியர் தலைவர் அமைச்சர் (டத்தோஸ்ரீ) ச. சாமிவேலு சிறப்புரையாற்றினார்.

தெரிவு செய்யப்பெற்ற இரு ஆசிரியர் சங்கங்களின் நிகராளிகளான கோ.இராதாகிருஷ்ணன், நாகரத்தினம் ஆகியோர் இணைத் தலைவர் களாகவும் தமிழ்ப்பள்ளிகளின் முதன்மை அமைப்பாளர் ஏ. சகாதேவன் செயலராகவும் பொறுப்பேற்று மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தினர். தமிழ்க்கல்வி, கலைத் திட்டம், காலத்திற்கேற்ற கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் போன்றவற்றை ஆய்ந்து ஒப்பீடு செய்து புதியன புக வழிகாண்பது இம் மாநாட்டின் நோக்கங்களில் முதன்மையானதாகும். அச் சிந்தனை உலகளாவிய நிலையில் தமிழுக்கு வளம் சேர்க்க வேண்டு மென்பது கல்வியாளர் தவிப்பாகும்.

தமிழ்ப்பள்ளிகளின் தலைமையாசிரியர் கழகம்

தமிழாசிரியர் உயர்வு, தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாடு தமிழ் மாணவர் முன்னேற்றம் போன்ற நோக்கங்களை அடிப்படையாய்க்கொண்டு 1985-ல் தமிழ்ப்பள்ளிகளின் தலைமையாசிரியர் மன்றம் உருவாகிப் பதிவும் பெற்றது.[12] சிலாங்கூர் மாநிலக் கல்வித்துறையில் தமிழ்ப்பள்ளிகளின் அமைப்பாளராய் (1982-86) இருந்த ஆ. சோதிநாதனின் முயற்சியால் சிலாங்கூர் மாநிலத்தில் படிப்படியாய் வேரூன்றி மற்ற மாநிலங்களிலும் பரவி வலுப்பெற்ற அமைப்பு இது, கொண்ட நோக்கத்திற்கேற்ப பல திட்டங்களை நிறைவேற்றி ஓர் எழுச்சியை ஏற்படுத்திற்று. இப்பொழுது மலேசியத் தமிழ்ப்பள்ளித் தலைமையாசிரியர் கழகம் என்னும் பெயரில் ஓர் அமைப்பு செயற்படுகிறது. இது 1992-ல் உருப்பெற்றது. இவ் வமைப்பு கல்வியமைச்சுடன் ஒத்துழைத்து, அதன் செயல் திட்டங்களை

நடைமுறைப்படுத்துவதில் முனைப்புக் காட்டி வருகிறது. தமிழ்ப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தலை மேம்படுத்துதல் மற்ற அரசு ஊழியர்களுடன் ஒத்துழைத்து மேம்பாட்டிற்கு வழி காணுதல் போன்ற நோக்கங்களையும் கொண்டு செயற்பட்டு வருகிறது. தமிழ்த் தொடக்கப்பள்ளி மாணவர்கள் (6ஆம் ஆண்டு) அடைவுநிலைத் தேர்வுகளில் (UPSR) உயரிய தேர்ச்சி பெற நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அன்றாட வாழ்வில் ஆசிரியர் மாணவர் எழுச்சிபெறப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்ற செயல் களிலும் மன்றம் கருத்துச்செலுத்தி வருகிறது.[13]

பெற்றோர் ஆசிரியர் சங்கம்

சீனப்பள்ளிகளின் மேம்பாட்டிற்கு அங்கு அமைந்துள்ள பள்ளி வாரியங்கள் (School Board) மிகப்பெரிய பங்காற்றுகின்றன. நிறைந்த வளத்தோடு பள்ளிகள் இயங்க உயிர்நாடியாய்ச் செயற்படுகின்றன. அதனால்தான் பள்ளி வாரியங்களைக் கலைத்திவிட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தபோது (Education Amendment 1972), சீனக் கல்வியாளர்கள் அதனை ஏற்க மறுத்துவிட்டனர். இச் செய்தி இந் நூலின் கல்விப் பகுதியிலும் (தொடக்கப்பள்ளிகளில் தமிழ்) சொல்லப் பெற்றுள்ளது. தமிழ்ப்பள்ளிகளிலும் அமைந்திருந்த பள்ளி வாரியங்கள் அத்துணை வலிமை கொண்டவையாய் இருந்ததில்லை. சடங்கு முறையிலான சில செயல்களை மேற்கொள்வதாகவே இருந்தன.

பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள்

பள்ளிகளில் வாரியத்தை அகற்ற எண்ணிய கல்வியமைச்சு, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை (PTA) அமைக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. பெற்றோரும் ஆசிரியரும் இணைந்த சங்கங்கள் நல்ல பயன்கள் விளைய வழிவகுத்தன. மாணவர் முன்னேற்றம், பள்ளி மேம்பாடு போன்றவற்றில் ஆசிரியருடன் பெற்றோரும் கலந்து செயலாற்ற இவ் வமைப்பு வாய்ப்பை ஏற்படுத்திற்று. சில இடங்களில் தலைமையாசிரியர்களுக்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைமைக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதும் அதனால் விரும்பத் தகாத விளைவுகள் ஏற்படுவதும் உண்டு. எனினும், பொதுவாக நோக்குமிடத்துப் பெ.ஆ.ச. நடவடிக்கைகள் பள்ளியின் மேம்பாட்டிற்கு வலிமைமிக்கப் பின்புலமாக விளங்கி வருகின்றன. புதிய கட்டடங்கள் எழுப்புதல், மாணவர் நலத் திட்டங்களைச் செயற்படுத்துதல், பள்ளி விழாக்கள் நடக்க உதவுதல் போன்ற நற்செயல்களில் பெ.ஆ.ச. பெரும்பங்காற்றி வருகின்றன.

கல்வியாளர் அமைப்பு

மலேசியாவில் தமிழ்க்கல்வி என்பது தொடக்கத் தாய்மொழிப் பள்ளிகளில் காலூன்றியிருப்பதுபோல் இடைநிலைப் பள்ளிகளில் அழுத்தம் பெறவில்லை. 3,5,6ஆம் படிவங்களின் அரசு தேர்வுகளில் நிரம்ப மாணவர்கள் தமிழைத் தேர்வுப் பாடங்களில் ஒன்றாகத் தெரிவுசெய்யத் தயங்கங்காட்டி வருகின்றனர். அதிலும் 5ஆம் படிவத் தமிழ் இலக்கி யத்தைத் தெரிவு செய்வோர் தொகை மூவாயிரத்திலிருந்து முந்நூறாகச் சரிவு கண்டதால் அப் பாடம் அகற்றப்படும் இடரை எதிர்நோக்கியிருந்தது. அந் நேரத்தில் அதனைக் காத்து நிலைநிறுத்தும் முயற்சிகள் நடந்தன. கல்வியமைச்சின் தேர்வு வாரியத் தலைவராயிருந்த மூர்த்தி, தமிழார்வம் கொண்ட கல்வியாளர் துணையுடன் பெருமுயற்சிகள் மேற்கொண்டார். இச் செய்தி இந் நூலின் கல்விப் பகுதியில் (உயர்நிலைகளில் தமிழ்) குறிப்பிடப்பெற்றுள்ளது. அவர் தெரிவுசெய்த குழுவினரின் பயன்மிக்க நடவடிக்கைகளால் தமிழிலக்கியத் தேர்வெழுதுவோர் எண்ணிக்கை 2005ஆம் ஆண்டில் மூவாயிரத்திற்கு உயர்ந்தது.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்" (குறள் 484)

என்னும் பொய்யாமொழிப் புலவரின் மெய்மொழிக்கு ஓர் எடுத்துக் காட்டானது.

சமுதாயம் தளரா முயற்சிகளை மேற்கொண்டு மெய்வருந்த உழைத்தால் எத்தனையோ சாதனை நிகழ்த்தலாம் என்பதற்குக் கல்வியாளர் அமைப்பு ஒரு சான்றாகத் திகழ்கிறது. இடைநிலைப் பள்ளிகளில் தொடக்கத்திலிருந்தே தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமையை பெற்றோர் வழி மாணவர்க்குத் தக்கமுறையில் உணர்த்தினால் விரும்பத்தக்க நல்விளைவுகள் மலரும் என்பதில் ஐயமில்லை. கல்வியாளர் அமைப்புடன் மற்ற இயக்கங்களும் கைகோத்துச் செயற்பட்டால் இடைநிலைப் பள்ளிகளில் தமிழை அழுத்தமாக நிலைப்படுத்தலாம். குறைசொல்லித் திரிவதை நிறுத்துவிட்டு நிறைகாணும் வழிகளை நாடிச் செயற்பட்டுவரும் கல்வியாளர் அமைப்புச் சோர்வு கண்டுவிடாமல் தொடர்ந்து முயன்று சுடர் பரப்ப வேண்டுமென்பது தமிழ் நெஞ்சர் விழைவாகும்.

தமிழ்நெறிக் கழகம்

பல்திற ஆற்றல்களோடு எழுத்தாலும், பேச்சாலும், நற்றொண்டுகள் புரிந்து வந்த செயல் மறவர் அ.பு.திருமாலன் எண்ணத்தில் கருக்கொண்டு

வளர்ந்து வடிவம் பெற்று 1983-ல் பதிவு பெற்ற ஒரு தேசிய இயக்கம் 'மலேசியத் தமிழ்நெறிக் கழகம்' இதற்கு நாடு தழுவிய அளவில் பல கிளைகள் உள்ளன என்பது இதன் தனிச் சிறப்பாகும். மொழி, இனம், சமயம் என முக்கூறுகளின் அடிப்படையில், விரிந்த வாழ்வியல் நெறிகளைக் குமுகாயம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதும், இடையில் சிதைந்துபோன தமிழர் நெறிகளை உயிர்ப்பித்து மீட்டுருவாக்கத்திற்கு வழிகாண வேண்டுமென்பதும் இதன் உயிர்மூச்சான கொள்கையாகும்.

தனித்தமிழ் பேணுதல், இன அடையாளத்தைக் காத்தல், கலப்பற்ற தமிழர் சமய நெறிகளை மேம்படச்செய்தல், பழந்தமிழ் இசையினைப் பின்பற்றி அக் கலையை வளர்த்தல் என்பன போன்ற இன மேன்மைகளைக் கடைப்பிடிப்பதொடு, வாழும் நாட்டின்பால் பற்றுக்கொண்டு கடமை யாற்றுதல் ஆகிய உயர்ந்த கொள்கைகளோடு நடைபோடும் இயக்கம் இது. இதனை நிறுவி, தலைமையேற்றுத் தேசிய அளவில் பரவச் செய்த அ.பு.திருமாலன் புகழுடம்பெய்தியபின் (29.4.1995), இதன் தேசியத் தலைவராகி வழிநடத்தி வருபவர் இரா.திருமாவளவன்.

டாக்டர் தண்டாயுதம் நினைவிலக்கியப் பேரவை

மலாயாப் பல்கலைக்கழகத்தில் 17 ஆண்டுகள் பணியாற்றியவர் முனைவர் இரா. தண்டாயுதம். மலேசியப் புத்திலக்கிய வளர்ச்சிக்கு அவர் வழிகாட்டல்கள் துணைபுரிந்துள்ளன. அவர் ஒப்பந்தம் முடிந்து தாயகம் திரும்பி அங்கு உலகவாழ்வு நீத்தபின் (5.6.1987), அவர் நினைவாக, அவருடன் நட்புக்கொண்டிருந்த வி.செல்வராசு நிறுவிய அமைப்பே டாக்டர் தண்டாயுதம் நினைவிலக்கியப் பேரவை (1989).

இதன் நோக்கம், ஒவ்வோராண்டும் மலேசிய இதழ்களில் வெளிவரும் எல்லாப் படைப்புகளையும் ஆராய்ந்து சிறந்தனவற்றைத் தெரிவுசெய்து தொகுத்து நூலாக வெளியிடுவதாகும். ஒரு தனி மாந்தரின் இம் முயற்சி அரிய முயற்சியாகும். ஆண்டுதொறும் நல்ல படைப்புகள் கொண்ட ஒரு பதிவாக இஃது அமைந்தது. பொருட்செலவைப் பெரிதுபடுத்தாமல் பல தொகுப்புகளை அவர் வெளியிட்டார். அவர் மறைவுக்குப்பின் (30.5.2000) அம் முயற்சி தேக்கமடைந்துள்ளது.

மலேசியத் தமிழ்ப் பாவலர் மன்றம்

மலேசியத் தமிழ்ப் பாவலர் மன்றம் 1990-ல் பதிவு பெற்றது. இதற்கு முன்னோடியாய் விளங்கியது 'கவிதைப் பண்ணை' என்ற அமைப்பாகும். இதன் நிறுவனர் டி.வி. இராகவன் பிள்ளை. இது மரபுமுறை

யாப்புச் செப்பம் மாறாத பா வளர்ச்சியையே நோக்கமாய்க்கொண்ட அமைப்பாகும். யாப்பிலக்கண வகுப்புகளை மன்றம் தொடர்ந்து நடத்தி வந்தது. உறுப்பினர்தம் பாக்களைத் தொகுத்து நூலாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டது; அச்சிட்டும் வெளியிட்டது. மன்றப் படைப்பாளர்களை ஊக்கப் படுத்த ஆண்டுதொறும் தகுதி அடிப்படையில் தங்கப் பதக்கங்கள் அணிவித்தும் பாராட்டி வந்தது.

யாப்பு முறையைக் கைவிட்டு, புதுக்கவிதை என்று எழுதப்பெறும் வரவுகளை இது புறக்கணித்தது; கடுமையான எதிர்ப்புக்குரல் கொடுத்தது. அப்துல் ரகுமான் முதலாய தமிழகப் படைப்பாளர்களை மன்றம் வல்லடி யாகத் தாக்கியது. இவ் வகையில் மன்றத் தலைவர் மிகக் கடுமையாகச் செயற்பட்டார்.

கவிதை வளர்ச்சி ஒன்றனையே நோக்கமாய்க் கொண்டிருந்த இம் மன்றம், முன்பு வெளிவந்து நின்றுபோயிருந்த 'முத்தமிழ்' மாத இதழை உயிர்ப்பித்து நடத்தி வந்தது. பல நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வலிமை குன்றாமல் இயக்கத்தை நடத்திவந்த டி.வி. இராகவன் பிள்ளை மறைவுக்குப்பின் (27.12.2002) சீ.இராதாகிருஷ்ணன் தலைமையேற்றார். மலேசியத் தமிழ்க் கவிதைத்துறை வளர்ச்சியில் இம் மன்றத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்குண்டு.

மலேசியத் தமிழிலக்கியப் படைப்பாளர் சங்கம்

தமிழிலக்கியப் படைப்புத்துறை தரத்தோடும், தேவை. தேவை ஊக்கும் நோக்கில் மலேசியப் படைப்பாளர் சங்கம் உருவானது; 1993-ல் பதிவு பெற்றது. கைம்மாறு கருதாமல் எழுதிவரும் படைப்பாளர்களை குறிப்பாக தமிழிலக்கியப் படைப்புத்துறை தரத்தோடும் வளத்தோடும் ஓங்கிவரை ஊக்கப்படுத்தும் நோக்கில் 'மலேசியப் படைப்பாளர் சங்கம்' உருவானது. இலைமறை காயாய் இருக்கும் இளம் படைப்பாளர்களைச் சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்திப் பாராட்டுவதில் சங்கம் முனைப்புக்காட்டி வருகிறது; தொடக்ககாலம் முதல், 'டத்தோ பத்மநாபன் இலக்கிய விருது' என்னும் பெயரில் ஆண்டுதொறும் தேர்ந்தெடுக்கப்பெறும் படைப்பாளர் களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கி ஊக்க மூட்டிவருகிறது. இதுவரை அறுபதிற்கு மேற்பட்டோர் இவ் விருதினைப் பெற்றுள்ளனர்.

இச் சங்கம் நடத்திவரும் மற்றொரு நிகழ்வு குறிப்பிடத்தக்கது. 'இலக்கியப் பந்தல்' என்ற பெயரில் படைப்பாளர்கள் தம் படைப்புகள் பற்றி உரை நிகழ்த்தச் செய்தும், கலந்துரையாடல்கள் நடத்தியும் பொற்

பதக்கம் அணிவித்துப் பாராட்டுதல் இந் நிகழ்வின் நோக்கமாகும். இவ் வியக்கம் அண்மைக் காலமாக 'வாழ்நாள் சாதனையாளர்' என்னும் விருதினையும் வழங்கி வருகிறது. எழுத்துத் துறையைச் சேர்ந்தவர்க்கு மட்டுமன்றிப் பிற துறைகளைச் சேர்ந்த தகுதி மிக்காரையும் இச் சங்கம் பாராட்டி விருதளித்து வருகிறது.

மலேசியப் பாரதிதாசன் இயக்கம்

மலேசியத் தமிழ் இலக்கியத்துறையை ஊக்கப்படுத்தும் நோக்கில் அமைந்த மற்றோர் அமைப்பு, 'மலேசியப் பாரதிதாசன் இயக்கம்'. இவ் வியக்கத்தின் தலைவர் (டத்தின்ஸ்ரீ) இந்திராணி சாமிவேலு. இவ் வியக்கம் 1994-ல் அமைந்தது. ஆண்டுதோறும் இவ் வியக்கம் நடத்தும் கதை, கட்டுரை, கவிதைப் போட்டிகளுக்குப் பெருந்தொகை பரிசளிக்கிறது. மிகச் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பெறும் படைப்புகளுக்குச் 'சங்கிலிமுத்து அங்கம்மாள்' (அமைச்சர் டத்தோஸ்ரீ ச.சாமிவேலு பெற்றோர்) இலக்கிய விருது மலேசிய வெள்ளி 5000 அளித்து வருகிறது; திட்டமிட்டுப் பெரும் பொருள் செலவில் புத்ரா உலக வாணிகப் பேரரங்கில் விழாவெடுக்கிறது. அவ் விழாவில் தமிழகத்திலிருந்து அழைக்கப் பெறும் இலக்கிய வாணர் உரையும், பட்டிமண்டபமும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். ஆயிரக்கணக்கானோர் கூடும் விழாவாக இது நடந்து வருகிறது.

பதிவு பெறாத இயக்கங்கள்

மேற்கண்ட பதிவு பெற்ற இயக்கங்களுடன் பதிவு பெறாமலேயே நற்பணிகள் புரிந்த சில வட்டார அமைப்புகள்பற்றியும் குறிப்பிடவேண்டும். நாட்டில் பல வட்டார அமைப்புகள் உள. அவை இலக்கிய வளர்ச்சிக்கும், கலை மேம்பாட்டிற்கும் தொண்டாற்றி வருகின்றன. அவற்றுள் இரு இயக்கங்கள் மட்டும் ஈண்டுக் குறிப்பிடப்பெறுகின்றன.

கவிதைக்களம்

மலேசியாவில் கவிதைத் துறை வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு செயல்படத் தொடங்கிய மூத்த அமைப்பு 'கவிதைக்களம்' இஃது. இடையீடின்றி நீண்ட காலமாக இயங்கிக் (மரபு) கவிதை வளர்ச்சிக்குத் துணை நின்றது. சா.ஆ. அன்பானந்தன், காரைக்கிழார், பாதாசன், மைதீ. சுல்தான் போன்றோர் இதன் முன்னோடிகள் ஆவர். திங்களுக்கு ஒருமுறை (ஞாயிற்றுக் கிழமை) கூடிக் கவிதை வளர்ச்சிக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வது இதன் நோக்கமாகும்.

அகம்

'அகம்' என்ற அமைப்பு, மற்ற அமைப்புகளுக்கெல்லாம் மாறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டது. 'நவீனத்துவ, பின்நவீனத்துவ நோக்கில் இலக்கியத்தை அணுகுவது இதன் முதன்மை நோக்கமாகும். படைப் பாளரை அழைத்து அவர்தம் வாழ்க்கைப் பின்னணி, படைப்புகள் குறித்து மனந்திறந்து பேசவைப்பதும், அவற்றையொட்டிக் கலந்துரையாடல் நடத்துவதும் இதன் நிகழ்வுகளில் ஒன்றாகும். தமிழ்கூறு நல்லுலகின் புதிய வரவுகள் குறித்தும் ஆழமாக - அழுத்தமாக ஆய்ந்து பார்ப்பதும் இதன் நடவடிக்கைகளில் ஒன்றாகும். எவ்வகைச் சடங்குகளுக்கும் இடம் தராமல் எளிய முறையில் இயங்கி வந்த இது புதிய முறைகளில் திறனாய்வுக் கலை வளரத் துணைபுரிந்தது. அரு. சு. ஜீவானந்தன், டாக்டா சண்முக சிவா, சாமி மூர்த்தி ஆகியோர் இதன் முன்னோடிகளாவர்.

இயக்கங்களும் பயனும்

இந் நூலின் முதலாம் படலத்தில், இயக்கங்கள் தோன்றுதற்கு முன்னிருந்த நிலையும் அவை தோன்றியபின் சமுதாயம் உணரத் தொடங்கிய மாறுதல்களும் சுட்டப்பெற்றன. இப் படலத்தில் குறிப்பிடத்தக்க இயக்கங்களின் பணிகள் எடுத்துக்காட்டப்பெற்றன. இயக்கங்கள் குறித்து ஒட்டுமொத்தமாக ஒரு பார்வையைச் செலுத்தும்போது அவற்றில் சமுதாயம் அடைந்துள்ள நன்மைகளை உணர முடிகிறது. விழிப்புணர்ச்சியைத் தூண்ட சில இயக்கங்கள் பாடுபட்டுள்ளன. சீர்திருத்தச் சிந்தனைகளை ஊட்டச் சில அமைப்புகள் தொண்டாற்றியுள்ளன. தமிழ் உணர்வை, தாய்மொழிப் பற்றை ஏற்படுத்தச் சில கழகங்கள் பாடுபட்டுள்ளன. பள்ளிக் குழந்தைகளைக் கல்வியில் நாட்டமுறச் செய்ய, பெற்றோர்க்கு ஊக்கமூட்டச் சில அற வாரியங்கள் முயன்றுள்ளன. கிணற்றுத் தவளைகள்போல் தோட்டப் புறங்களிலேயே அடைபட்டுக் கிடந்தோ வெளியுலகை எட்டிப் பார்க்கச் சில சங்கங்கள் பணிபுரிந்துள்ளன. பழைமைப் பிடியிலிருந்து சமுதாயத்தை மீட்டுப் புதுப்பாதையில் காலடி எடுத்துவைக்கச் சில நிறுவனங்கள் பாடுபட்டுள்ளன.

வழுக்குப் பாறையில் நடக்க ஓர் ஊன்றுகோல்போல், பார்வை யற்றோர் படிக்க பிரெய்லி எழுத்துப்போல, திக்குத் தெரியாமல் கிடந்த சமுதாயத்திற்குத் தொடக்க காலத்தில் தொண்டூழிய இயக்கங்கள் நம்பிக்கை ஊட்டின; விடுதலைக்குப்பின் புது வாழ்வு காண வழிகாட்டி உதவியுள்ளன.

அண்மைக் காலமாக அறவாரியங்கள் முன்னிலும் மேலாகக் கல்வி வளர்ச்சியில் கருத்துச் செலுத்தி ஊக்கப்படுத்தி உதவி வருகின்றன. எதிர்காலத்திலும் சூழலுக்குகேற்பத் திட்டங்கள் வகுத்துப் பொது இயக் கங்கள் வழிகாட்டும் என்னும் நம்பிக்கை பிறக்கிறது.

தற்கால நிலையில் தத்தம் வளர்ச்சியில் ஒவ்வொருவரும் மிகுந்த கருத்துச் செலுத்திப் பொருளீட்டுவதில் தொண்டு மனத்தவர் தொகை குறைந்து வருகிறது என்பதனை மறுக்க இயலாது. இயக்கங்களில் ஈடுபட்டுப் பயன் எதிர்பாராது பணி செய்வோர் எண்ணிக்கை குறைந்தாலும் முற்றாக அற்றுப்போகவில்லை. எதிர்காலத்திலும் இயக்கங்கள் சமுதாயத் திற்குப் பயன் சேர்க்கும் பணிகளில் ஈடுபடும் என்பதில் ஐயமில்லை. உயர்நிலைபெற்ற பெருமக்களில் சிலரும் சமுதாயம், கல்வியிலும் பொருளா தாரத்திலும் வளம்பெற வேண்டும் என்னும் உயரிய எண்ணத்தில் தங்கள் பங்கை ஆற்ற முன்வருகின்றனர். தாய்மொழிப் பற்றிலும், கலை, இலக்கிய, பண்பாட்டு உணர்வுகளிலும் சமுதாயம் பின்னடையக்கூடாது என்று எண்ணுகின்றனர்; தமிழர் அடையாளமான மொழியும் பண்பாடும் நிலைக்க வேண்டுமென்று உளமார எண்ணி உழைப்பைச் சிந்தி வருகின்றனர்.

"சங்கங்களால் - நல்ல
சங்கங்களால் - மக்கள்
சாதித்தல் கூடும்
பெரும்பெரும் காரியம்"

என்ற பாவேந்தர் கருத்துக்கேற்பப் பொது இயக்கங்களால் சமுதாயம் துளிர்விட்டுத் தழைத்துப் பூக்கும் வாய்ப்புகளைப் பெற்றது; தொடர்ந்து பெற்றுவரும்.

14. சமயங்களில் தமிழ்

மலேசியா, இசுலாம் சமயத்தைத் தேசிய சமயமாகக் கொண்ட நாடு. எனினும், பௌத்தம், இந்து, கிறித்தவம் போன்ற பல சமய நடவடிக்கைகள் தடையின்றித் தொடர இடமளித்துள்ளது. இங்கே சமயத் திருவிழாக்கள் தேசிய ஒருமைப்பாட்டு விழாக்களாகக் கொண்டாடப்பெற்று வருகின்றன. ஒரு சமயத்தவர் திருவிழாவில் மற்றச் சமயத்தவரும் பங்கேற்று வாழ்த்தும் மரபு இங்கு மேலோங்கி வருகிறது.

தமிழரும் சமயமும்

இங்குள்ள தமிழர் இந்து , இசுலாம், கிறித்தவம் போன்ற பல சமயங்களைச் சார்ந்தவர் எனினும் மிகப் பெரும்பான்மையினர் இந்து சமயத்தவரே. இந்து சமயம் என்பது ஒரு குறிப்பிட்ட கோட்பாடுகளைக் கொண்ட ஒரு சமயம் அன்று. எனினும், சைவம் வைணவம் போன்ற பல சமயங்களை உள்ளடக்கிய ஒரு குறியீட்டுப் பெயராக அது வடிவம் பெற்றுள்ளது. 'இந்தியா' என்ற ஒரு தனிநாடு முன்பு இருந்ததில்லை. இந்தியத் துணைக்கண்டத்தைத் தங்கள் ஆளுகையின்கீழ்க் கொண்டுவந்த ஆங்கிலேயர் அங்கிருந்த பல நாடுகளை ஒன்றாக்கி 'இந்தியா' என்று பெயர் கொடுத்துவிட்டுப்போனதுபோல், பல்வேறு இனத்தவரை 'இந்தியர்' ஆக்கியதுபோல் பல சமயங்கள் 'இந்து' என்ற பெயரில் ஒரு குடையின் கீழ்க் கொண்டுவரப்பெற்றன.

இந்து சமயத்துள் பல உட்பிரிவுகள் உண்டென்பது பலரும் அறிந்ததே. சிலர் சைவசமயக் கோட்பாடுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவ ராய் உள்ளனர்; சிலர் வைணவக் கோட்பாடுகளில் மிகுந்த நாட்டம் கொண்டுள்ளனர். எனினும் அனைவரும் இந்து சமயத்தவர் என்றே பெயர் குறிக்கப்பெறுகின்றனர்.

தமிழர் இறை உணர்வு

இங்கு வாழும் தமிழர் தொடக்கத்திலிருந்தே இறை உணர்வு மிக்கவராய் விளங்கி வருகின்றனர். குடியேறி வாழ்ந்த தோட்டப்புறங்கள் பட்டணங்கள், புறம்போக்குப் பகுதிகள் ஆகிய அனைத்து இடங்களிலும் அம்மன், பிள்ளையார், முருகன், சிவன், பெருமாள் கோயில்களை அமைத்துக் கொண்டனர். மரபுநெறிச் சமயங்களான சிறுதெய்வ, குல தெய்வ வழிபாடு களும் அச்சு மாறாமல் தொடர்கின்றன.

மாரியம்மன் திருவிழா (தோட்டப் புறங்களில் மிகுதி), தீபாவளி, தைப்பூசம், சித்திரா பௌர்ணமி, ஆடிப்பூரம், நவராத்திரி, கார்த்திகை போன்ற சமய விழாக்களை நடத்திவருகின்றனர்.

'தீபாவளி' முன்பு ஒரு குறிப்பிட்ட சமயத்தினர் விழாவாகக் கொண்டாடப்பெற்று வந்தது. திராவிட இயக்க உணர்வாளர்கள் அதனை வெறுத்தொதுக்கியே வந்தனர். "தீபாவளி தமிழர் விழா அன்று; ஆரியரால் புகுத்தப்பெற்றது. அதனைக் கொண்டாடக் கூடாது" என்று பரப்பியம் செய்து வந்தனர். ஆனால் இப்பொழுது நிலை வேறாகிவிட்டது. நாட்டில் ஒப்புக்கொள்ளப்பெற்ற சமயங்களின் முதன்மை விழாக்களான நோன்புப் பெருநாள், சீனப் புத்தாண்டு, தீபாவளி, கிறித்துமஸ், விசாக தினம் ஆகிய அனைத்தையும் தேசிய விழாக்களாகக் கொண்டாட அரசு வழிவகுத்துள்ளது. அதனால் ஒரு சமயத்தவர் கொண்டாடும் விழாவில் மற்றச் சமயத்தவரும் கலந்து வாழ்த்தும் ஒரு மரபு ஓங்கி வருகிறது. சமயக் காழ்ப்புகள் நீங்க இன இணக்கம் மலர, ஒருவரை ஒருவர் மதிக்கும் மனப்பான்மை ஓங்க, இவ் வுணர்வு துணைபுரியுமென்று அரசு நம்புகிறது.

இறை கோட்பாடு

பல் இனங்கள் கொண்ட மலேசியத் திருநாட்டின் இறையாண்மை நிலைபெறத் தீவிரவாதமற்ற அமைதிப் போக்கு, நாட்டுப்பற்று, கட்டொழுங்கு, ஒற்றுமை உணர்வு போன்ற பண்புகளைக் குடிமக்கள் பெற்றுயர வேண்டுமென்ற நோக்கில் வரையறை செய்யப்பெற்ற ஐந்து கோட்பாடுகளுள் முதற்கோட்பாடு இறைவன்மேல் நம்பிக்கை வைத்தல்[14] (believe in God) என்பதாகும். இவ் வகையில் இஃது ஒரு சமயம் சார்ந்த நாடு என அரசியல் அமைப்பு குறிப்பிடுகிறது.

ஒரு குடிமகன் எச் சமயத்தைச் சார்ந்தவனாகவும் இருக்கலாம்; சமயக்கோட்பாடுகளைப் பின்பற்றாதவனாகவும் இருக்கலாம். ஆனால் இறை நம்பிக்கை கொண்டவனாக இருத்தல் வேண்டும் என்பது நாடு வகுத்துள்ள கோட்பாடாகும். அதனால்தான் மலேசியத் திராவிடர் கழகம் இங்கு இறைமறுப்புக் கொள்கையை வலியுறுத்துவதில்லை. இங்குத் தமிழரிடையே பல சமயக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் இறை குறித்த பல எண்ணப்போக்குகள் உலவினும் சமயச் சீர்திருத்தக் கருத்து மோதல்கள் இங்கு ஏற்படுவதில்லை. சமுதாயநலஞ் சார்ந்த முடிவுகள் எடுப்பதில் ஓர் இணக்கப்போக்கு நிலவி வருகிறது.

கோயில்கள்

மேலே குறிப்பிட்டுள்ளபடி இங்குப் பல நிலைகளில் கோயில்கள் அமைந்துள்ளன. மலேசியாவில் இந்து சமயக் கோயில்களின் எண்ணிக்கை

17 ஆயிரம் என்று ஒரு கணக்கு கூறுகிறது. இதுகுறித்து மலேசிய இந்து சங்கத் தலைவர் (டத்தோ) அ. வைத்திலிங்கத்தை நேர்கண்டபோது (28.3.2001), அந்தக் கணக்கு தப்பானது என்றார். "ஒருமுறை இசுலாமிய மையம் இசுலாமியப் பல்கலைக்கழக மாணவர்களைக்கொண்டு ஓர் ஆய்வு நடத்தி 17 ஆயிரம் இந்துக்கோயில்கள் உள என்று அறிவித்தது. ஆய்வு செய்தவர்கள் மரத்தடியில் ஒரு சூலாயுதம் நடப்பட்டிருந்தாலும் அதனையும் ஒரு கோயில் என்று கணக்கிட்டுவிட்டனர். சரியாகக் கணக்கிட்டால் 3000 கோயில்களே முறைப்படி அமைந்த கோயில்கள் என்று கொள்ளமுடியும்"[15] என்றார்.

தாய்க் கோயில்

மலேசியாவிலுள்ள கோயில்களுக்கெல்லாம் தாய்க் கோயிலாய் விளங்குவது தலைநகரில் அமைந்துள்ள அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயிலாகும். இது சமயநலம் பேணுவதோடு தமிழ் வளர்ச்சிக்கு உதவுவதிலும் சமுதாய நலன் நாடுவதிலும் மற்றக் கோயில்களுக்கு ஒரு வழிகாட்டியாய் விளங்கி வருகிறது. இது நூறாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்டது. அந் நாளில் தென்னிந்தியத் தொழிலாளர் தலைவராய் விளங்கிய காயாரோகணம் பிள்ளையின் முயற்சியால் உருவானது (1873). இக் கோயிலுடன் பத்துமலை முருகன் கோயிலும் கோட்டுமலைப் பிள்ளையார் கோயிலும் இணைந்துள்ளன. மலேசிய இந்துக்களின் சமயம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் அருள்மிகு மகாமாரியம்மன் கோயிலும் பெரும் பங்கு வகிக்கின்றது.[16]

வரலாற்றுச் சிறப்புகள்

இங்கு இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த காலத்தில், இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலையை நோக்கமாய்க் கொண்டு அமைக்கப்பெற்ற இந்திய சுதந்திரச் சங்கக் கிளையின்(I.I.L.) பணி மனையாயும் இந்தியத் தேசிய இராணுவத்திற்கு(I.N.A.) உதவும் நிலையமாகவும் இக் கோயில் செயற்பட்டது. இன்று நாட்டையாளும் கட்சிகளுள் ஒன்றாக விளங்கும் மலேசிய இந்தியர்களின் தாய் அரசியல் அமைப்பான மலேசிய இந்தியர் காங்கிரசு. இக் கோயிலில்தான் அமைந்தது(1946) என்பது குறிப்பிடத்தக்கது.[17]

தமிழ் வளர்ச்சியில் தாய்க் கோயில்களின் பங்கு

சமய அன்பர்தம் வழிபாட்டுத் தலமாய் விளங்குவதே திருக்

கோயில்களின் அடிப்படை நோக்கமாகும். அங்கு நடைபெறும் நிகழ்வுகளெல்லாம் தமிழிலே நடைபெறுகின்றன என்பது ஈண்டுக் குறிக்கத் தக்கதாகும். இங்குப் பக்தி மணங்கமழும் தமிழிசைச் செல்வங்களான திருமுறைகள் ஓதுதல் முதலாய நடவடிக்கைகள் தமிழ் வளர்ச்சிக்குத் துணைபுரியும் செயல்களாகும். இங்கு இந்துக்கள் என்போரில் தெலுங்கர், மலையாளிகள், கன்னடியர் எனப் பலரும் உள்ளனர். எனினும் தமிழரே மிகப் பெரும்பான்மையினர் ஆவர். அதனால் பொதுவான நடவடிக்கைகள் யாவும் தமிழிலேயே நடைபெற்று வருகின்றன. முதன்மையான வழிபாடு மட்டும் வடமொழியில் நடைபெறுகிறது. கோலாலம்பூர் மகாமாரியம்மன் கோயிலிலும் அதன் இணைப்பாக உள்ள பத்துமலை முருகன் கோயில், கோட்டுமலைப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றிலும் தமிழில் வழிபாடு நடைபெறுகிறது. வடமொழியிலும் வழிபாடு உண்டு. மரபுவழியிலான குல தெய்வ, சிறுதெய்வ வழிபாடுகளில் வடமொழி தலைகாட்டுவதில்லை.

கல்வி வளர்ச்சியில் தாய்க்கோயில்

அருள்மிகு மகாமாரியம்மன் கோயில் மேற்கண்ட வரலாற்றுச் சிறப்புகளைப்பெற்ற ஒரு தலம் என்பதொடு, கல்விப் பணியிலும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒன்றாக விளங்கிவருகிறது. இக் கோயில் தலைநகரில் அமைந்துள்ள அப்பர் தமிழ்ப்பள்ளியையும் பத்துமலைச் சாரலில் அமைந்துள்ள தமிழ்ப்பள்ளியையும் அரசு துணையுடன் நடத்திவருகிறது. முன்பு மாணவர் உயர்கல்வி பெறக் கல்விக் கடனுதவியையும் இக் கோயில் வழங்கியுள்ளது. தமிழ்ப்பள்ளிகளை நடத்திவரும் மற்றோர் அமைப்பு, தலைநகரில் அமைந்துள்ள விவேகாநந்தா ஆசிரமம். இது பிரிக் பீல்ட்ஸ் (Brickfields), கோலாலம்பூர் ஆகிய இடங்களில் விவேகாநந்தா பள்ளிகளையும் செந்தூல் (Sentul) தம்புசாமிப் பிள்ளைத் தமிழ்ப்பள்ளியையும் நடத்திவருகிறது.

சமயப்பணி

சமயப் பணி என்னும் பொழுது, தமிழில் பக்தி இலக்கியங்களாய்த் திகழும் திருமுறைகளைப் பரப்புவதில் இக் கோயில் மிகுந்த நாட்டம் செலுத்தி வருகின்றது. திருமுறை மாநாடுகள் நடத்தி வருவதன் மூலம் பக்தி இலக்கியங்கள் பரவ வழிவகுக்கிறது. இடையிடையே ஆன்மிக, இலக்கியச் சொற்பொழிவுகளுக்கும் தமிழிசை அரங்குகளுக்கும் ஏற்பாடு செய்து வருகிறது. நடன அரங்கேற்றங்களும் இங்கு நடப்பதுண்டு. கிருபானந்த வாரியார் (சாமிகள்), குன்றக்குடி அடிகளார், (புலவர்) கீரன் போன்றோரின் பொழிவுகளும் இங்கு நடந்துள்ளன.

தைப்பூசம்

தைப்பூசத் திருவிழா என்பது இக் கோயில் ஏற்று நடத்தும் நிகழ்வுகளில் குறிப்பிடத்தக்க மிகப் பெரிய நிகழ்வாகும். ஆண்டுதொறும் தைப்பூசத் திருவிழாவில் பல இலக்கம் மக்கள் கூடுவர்; வேறு இனமக்களும், வெளிநாட்டினரும்கூட இவ் விழாவில் பங்கு கொள்வர். இவ் விழாவிற்குச் சில மாநிலங்களில் அரசு விடுமுறையும் விடப்படுகிறது. தைப்பூச விழா நாட்டின் மற்றப் பாகங்களிலும் நடைபெறுகின்றது. அவற்றுள் பினாங்குத் தண்ணீர்மலை முருகன் கோயில், ஈப்போ கல்மலை முருகன் கோயில், மாரான் மரத்தாண்டவர் ஆலயம் போன்றவற்றில் நடைபெறும் விழாக்கள் குறிப்பிடத்தக்கன.

தைப்பூச விழாவும் சமயநெறியும்

மிகப் பெரிய அளவில் நடைபெறும் தைப்பூச விழாவில், உயர்சமய நெறிகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளும் இடம்பெறுவது சுட்டிக் காட்ட வேண்டிய ஒன்றாகும்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'[18]

என்பது திருமூலர் திருமொழி. எத்துணைப் பக்திப் பெருக்கென்றாலும் நெறிகளைப் புறந்தள்ளுதல் கூடாது. அலகுகாவடி என்னும் பெயரில் உடலை வீணே புண்படுத்திக்கொள்வது ஏற்புடையதன்று. எத்தனையோ முறை சான்றோர் இதனை எடுத்துக் கூறியும் தொடர்புடையோர் காதில் போட்டுக்கொள்வதில்லை. விழா நடத்தும் தேவத்தானம், அலகுகளின் நீளத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதேயன்றி முற்றாக நீக்கும் முயற்சியில் இறங்கவில்லை. இதனில் மாறுதல் ஏற்பட்டுத் தூய சமயநெறி பரவ வேண்டுமென்பது ஆன்றோர் எண்ணமாகும். இக் கோயிலின் இப்போதைய தலைவராய் இருப்பவர் ஆர். நடராஜா.

மற்றக் கோயில்கள்

நாட்டிலுள்ள மற்றக் கோயில்கள் அனைத்தும் தாய்க்கோவில் அளவுக்குப் பணிசெய்ய வாய்ப்பில்லை எனினும், அவற்றின் ஆற்றலுக் கேற்பச் சமயப் பணியும் தமிழ்ப் பணியும் புரிந்து வருகின்றன. இந் நாட்டில் தமிழின் நிலைப்பாட்டிற்கும் இன அடையாள வெளிப்பாட்டிற்கும் தமிழ்ப் பள்ளிகளும் கோயில்களும் இரு கண்களாக விளங்கி வருகின்றன என்று தமிழ் நெஞ்சர் கருதுவது சரியே ஆகும். தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டிலும், தமிழ்க்கல்வி வளர்ச்சியிலும் கோயில்கள் இன்னும் கூடுதல் கருத்துச் செலுத்த வேண்டுமென்பது தமிழ் ஆர்வலர் எண்ணமாகும்.

15. சமய இயக்கங்கள்

மலேசிய இந்து சங்கம்

மலேசியாவில் இயங்கும் கோயில்களுக்கெல்லாம் தாய்க் கோயிலாய்த் தலைநகர் மகாமாரியம்மன் கோயில் விளங்குவதுபோல், சமய இயக்கங்களுக்கெல்லாம் தாய் இயக்கமாக மலேசிய இந்து சங்கம் விளங்கி வருகிறது. சமயத் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் இவ்வியக்கத்தின் கருத்து முதன்மை வகிக்கிறது.

இந்து சங்கத்தில் இந்திய, இலங்கைத் தமிழரொடு, மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளைத் தாய்மொழிகளாய்க் கொண்டோரும், சில வட இந்தியரும் உறுப்பியம் பெற்றுள்ளனர். ஒரு காலத்தில் இதன் நடவடிக்கைகள் 50 விழுக்காட்டிற்குமேல் ஆங்கிலத்திலேயே இருந்தன. இப்பொழுது 90 விழுக்காட்டிற்குமேல் தமிழ்மொழியே ஆளுகை கொண்டிருக்கிறது.[19]

சங்கப் பணிகள்

நாட்டில் தமிழர் - இந்தியர் சமயம் தொடர்பான சிக்கல்களுக்குத் தீரவுகாணும் தலைமைப் பொறுப்பை இச் சங்கம் கொண்டிருக்கிறது. பொருத்தமான காரணங்களின்றிக் கோயில்களை உடைப்பதைத் தடுத்து நிறுத்துதல், புதிய கோயில் நிறுவல், குருக்கள், அர்ச்சகர்கள், பண்டாரங் களைத் தமிழகத்திலிருந்து வரவழைத்தல், நாகசுர, தவில் கலைஞர்களைத் தமிழகத்திலிருந்து தருவித்தல் போன்ற அனைத்துச் செயல்களுக்கும் சங்கம் முன்னின்று உரியன செய்து வருகிறது.

திருமுறைவிழா

ம.இ.ச. ஆற்றிவரும் பணிகளுள் தலையாயது கடந்த கால் நூற்றாண்டாக இது நடத்திவரும் திருமுறை விழாவாகும். வட்டாரங்கள், மாநிலங்கள் அளவில் திருமுறை ஓதும் போட்டிகள் நடத்தி, தேசிய அளவில் வெற்றி பெறுவோர்க்கு மதிப்புமிக்க பரிசுகளையும், தங்கப் பதக்கங்களையும் வழங்கி இது தந்து வரும் ஊக்கம், மதித்துப் பாராட்டத்தக்கதாகும். தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதோரும் ரோமன் எழுத்தில் அச்சிடப்

பெற்ற திருமுறைகளைப் பாடி மனனம் செய்து போட்டிகளில் பங்கு பெறுகின்றனர். அவர் தமிழை எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள இம் முயற்சி உதவும் என்பது ஒருதலை. ம.இ.சங்கத்தின் இத் திருமுறைவிழா நிகழ்வு களால் நாட்டில் ஓர் இலக்கத்திற்கு (100,000) மேற்பட்டோர் திருமுறை ஓதும் திறன் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.[20] இவ்வியக்கத்தின் இப்போதைய தலைவர் (டத்தோ) அ. வைத்திலிங்கம்.

அருள்நெறித் திருக்கூட்டம்

அரை நூற்றாண்டிற்குமுன் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் தொடங்கி வைக்கப்பெற்ற இயக்கம் இது. இதன் நிறுவனர் கா.இராமநாதன். (சைவ பூசனம்) கந்தையா, (டான்ஸ்ரீ) சோமசுந்தரம் போன்றோர் இதன் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பெருமக்களாவர். சைவ சமய வகுப்புகள் நடத்துவதில் முனைப்புக் காட்டும் இயக்கம் இது. நீண்ட நெடிய தொண்டால் இது சமயத்தையும் தமிழையும் வளர்த்த ஓர் அமைப்பாகும். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தத்திற்கு ஓர் இருக்கையை ஏற்படுத்தியது இவ் வியக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் இப்போதைய தலைவர் முனைவர் தேவபூபதி நடராஜா.

திருவருள் தவநெறி மன்றம்

திருமுருக கிருபானந்த வாரியாரால் 40 ஆண்டுகளுக்கு முன்பு இவ் வியக்கம் தொடங்கி வைக்கப்பெற்றது. திருமுறை வகுப்புகள் நடத்துதல் இதன் சிறப்பு நோக்கங்களுள் ஒன்றாகும். தோட்டப்புறங்களில் சமயநெறி பரப்பும் நோக்கோடு அங்குத் திருமுறைகளை ஒலிக்கச் செய்யும் பணியில் இது முன்னின்று செயற்படுகிறது. இதன் இப்போதைய தலைவர் காந்திநாதன்.

இந்து இளைஞர் இயக்கம்

இது தொடக்கத்தில் ஒரு சமய இயக்கமாய்ப் பதிவுபெற்ற தெனினும், விளையாட்டுத்துறையில் சிறப்புக் கவனம் செலுத்திற்று; 1980-ல் சமயச் சார்புடைய இயக்கமாய்த் தன்னை வடிவமைத்துக் கொண்டது; இளைஞர்களுக்கு எழுச்சியூட்டித் தன்முனைப்போடு அவர்கள் வளரப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நாடெங்கும் கிளைகளைக் கொண்டுள்ள இது, இன சமய நலன்களுக்குக் கேடு செய்யும் எனக் கருதும் திட்டங்கள் நடைமுறைக்கு வராமல் தடுப்பதிலும், சமய உரிமைகளை நிலைநாட்டுவதிலும் முன்னின்று பாடுபட்டு வருகிறது. இதன் இப்போதைய தலைவர் எம்.இராசசெல்வம்.

தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

இஃது ஓர் உலகு தழுவிய பேரியக்கமாகும். பல நாடுகளில் கிளை களைக் கொண்டுள்ள இதன் தலைமையகம், இமயமலையிலுள்ள ரிசிகேசத்தில் அமைந்துள்ளது. இதனை நிறுவிய சான்றோர் சுவாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் (டாக்டர் குப்புசாமி). 1932-ல் இங்குச் சிவானந்த ஆசிரமமாக உருவான இது, 1936-ல் தெய்வீக வாழ்க்கைச் சங்கம் எனப் பெயர் மாற்றம் கண்டது. தலைநகரை ஒட்டியுள்ள பத்துமலையில் தலைமையகத்தைக் கொண்டுள்ள இது, சமயத் தொண்டுகளொடு சமுதாயத் தொண்டுகளிலும் முனைப்புக் கொண்ட இயக்கமாகும். இவ் வியக்கம் அனைத்து நடவடிக்கைகளையும் இலவயமாகவே செய்து வருகிறது; தேவார, பஜனை வகுப்புகள், இராமாயண, மகாபாரத வகுப்புகள், இசை வகுப்புகள், யோகாசன வகுப்புகள் நடத்துதல்போன்ற தொண்டு களில் ஈடுபட்டு வருகிறது; இலவய மருத்துவ முகாம்கள் நடத்துதல், குருதிக் கொடை வழங்குதல், பொருள்வளம் இல்லாத மாணவர்களின் கல்விக்கு உதவுதல், வசதியற்ற குடும்பங்களுக்கு ஆதரவளித்தல் போன்ற அறப்பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இமயமலை ரிசிகேசத்தில் உள்ள இதன் தலைமை மையத்தின் தலைவர் சுவாமி சதானந்த சரஸ்வதி மகராஜ். மலேசிய அமைப்புக்குத் தலைவர் சுவாமி குரு பக்தானந்த சரஸ்வதி மகராஜ்.

மலேசியச் சைவ சித்தாந்த மன்றம்

அமெரிக்க நாட்டின் ஹவாயில் வாழ்ந்த தவத்திரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் தொடர்பு ஏற்பட்டு அன்னாருடைய சித்தாந் தங்களில் ஈடுபாடு கொண்டதால், தம் நண்பர்களின் துணையுடன் ஒ.திருவாசகம் இம் மலேசியச் சைவசித்தாந்த மன்றத்தை நிறுவினார். 1976-ல் கருவாகி உருவான இது, மிக உயரிய நோக்கங்களையும் செயல் திட்டங்களையும் கொண்டு செயற்பட்டு வருகிறது.[21]

'இந்து சமயத்தைப் பெருமளவில் பரப்புதல், பாதுகாத்து நிலைப் படுத்துதல் - குறிப்பாக மலேசியாவில் சைவசமயத்தை வளர்த்துச் சைவ மகா சன்னிதானம் அல்லது சைவ குருகுலம் என்னும் அமைப்பினை ஏற்படுத்துவது இதன் தொலைநோக்குத் திட்டமாகும். இந்த இலக்கினை எட்ட மன்றம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.[22]

இம் மன்றத்தின் நோக்கம், சமயத்தை மேம்படுத்துதல், கலை வளர்த்தல், பண்பாட்டைப் பேணுதல் மட்டுமல்லாது, சமுதாய மேம் பாட்டிற்குரிய பல பல செயல்திட்டங்களை வகுத்துச் செயல் வடிவம்

கொடுக்க முயல்வதாகும். தமிழ்வகுப்பு, சமயவகுப்பு, தேவாரவகுப்பு, இசை வகுப்பு, நடனவகுப்பு போன்ற பல வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

ஏதிலிச் சிறுவர், முதியோர் காப்பகங்கள்

மன்றம் தன் பன்முக நோக்கத்திற்கிணங்க ஆதரவற்ற, ஒதுக்கப் பட்ட சிறுவர்களுக்கும் முதியோர்க்கும் காப்பகங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறது. அன்பு இல்லம், கருணை இல்லம், அன்புக் கரங்கள் ஆகியவற்றில் சிறுவர்கள் வாழ்வு பெற்று வருகிறார்கள். அவர்கள் சமுதாயத்தின் பயன் மிக்க குடிமக்களாக அனைத்தும் அளிக்கப்பெற்று வருகின்றனர். அருள் இல்லத்தில் ஆதரவற்ற, பிள்ளைகளால் கைவிடப்பெற்ற முதியோர் பாது காக்கப்பெற்று வருகின்றனர். மன்ற நிறுவனர் ஒ.திருவாசகத்தின் நேரடி மேற்பார்வையில் மேற்படி இல்லங்கள் நிருவகிக்கப் பெற்று வருகின்றன. மன்றத்தின் சமுதாயத் தொண்டில் உள்ள நாட்டத்தைப் புக்கிட் பிரந்தோங்கில் (சொந்தக் கட்டடத்தில்) அமைந்துள்ள சேவை மையம் எடுத்துக் காட்டுகிறது. இச் சேவை மையத்தில் மக்கள் எதிர் நோக்கும் பல சிக்கல்களுக்குத் தீர்வுகாணப் பெறுகிறது; தகவுரைகளும் வழங்கப் பெறுகின்றன.

மேலே குறிப்பிட்ட செயல்கள் மட்டுமன்றிச் சமுதாய முன்னேற் றத்தை நோக்கமாய்க் கொண்டு காய்கறிப் பண்ணைகள், பழத்தோட் டங்கள் ஏற்படுத்துதல், மின்சாரப்பொருள் விற்பனைக் கூடங்கள் அமைத்தல், குடிசைத் தொழில்களில் மக்களை ஈடுபடுத்துதல் போன்ற பல முன்னோடிச் செயல்களை மேற்கொள்வதும் மன்றத்தின் நோக்கங் களாகும்.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் திருவள்ளுவரின் பொய்யாமொழிக்கிணங்க, இந்து சமயப் பல்கலைக்கழகம்/ கல்லூரி நிறுவுதல், தேசிய இந்து சமய நூலகம் அமைத்தல், பல்பயன் நோக்கில் திருக்கோயில் வளாகம் ஒன்றனை ஏற்படுத்துதல், இந்து தியான முறையிலான சித்த மூலிகை மருத்துவமனை உருவாக்குதல், இந்து சமய அருங்காட்சியகம் காணுதல்[23] போன்ற தொலைநோக்குப் பெருந் திட்டங்களொடு மன்றம் உயிர்ப்புடன் இயங்கிவருகிறது. இதன் இப்போதைய தலைவர் கே.அருணாசலம்.

இந்து தர்ம மாமன்றம்

(கர்னல்) கரு. சாத்தையா நிறுவிய இம் மன்றம், 1981-ல் கருவாகி உருப்பெற்று 1982-ல் பதிவு பெற்றது. 1. அன்பைப் போற்றுதல், 2. அழகைப்

பெறுதல், 3. அறம் காத்தல், 4. அறிவை வளர்த்தல், 5. அருளைப் பெறுதல் ஆகிய ஐந்து படிகளின் மூலம் மாந்தப் பிறவியின் முழுமையை அடைய முயல்வதே இதன் குறிக்கோளாகும். இம் மன்றம் ஒன்பது நோக்கங்களைக் கொண்டு உயிர்ப்பொடு செயல்பட்டு வருகிறது. அவையாவன: 1. ஆன்மிக வளர்ச்சி, 2. சமயக் கல்வி, 3. சமூக நலன், 4. திருக்கோயில் திருப்பணி, 5. தோத்திரப் பாராயணம், 6. புத்தக வெளியீடு, 7. கலை கலாசாரம், 8. யோகாசனம், 9. சமயச் சஞ்சிகை. இந்த ஒன்பது நோக்கங்களைக் கொண்டு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன். அன்பே தெய்வம். நாம் கடவுளின் குழந்தைகள். ஆக, குலம் ஒன்று. முழுமுதற் கடவுள் ஒருவர். ஆக, நாதன் ஒருவனே. அன்பாகிய திருவருளே இறைவனின் திருமேனி. ஆக, தாயே அன்பு-அன்பே தெய்வம்'[24] என்னும் அழுத்தமான கொள்கைவழித் தொண்டில், முனைந்து நிற்கிறது. இந்தத் தேசிய இயக்கம் நாடெங்கும் கிளைகளைக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

உயர்ந்த நோக்கங்களையும், பரந்த செயல்திட்டங்களையும் கொண்டுள்ள இந்து தர்ம மாமன்றம், அர்ச்சகர் பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது. ஓதுவார் பயிற்சி வகுப்புகள், போதனாசிரியப் பயிற்சி வகுப்புகள், சமயச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதிலும் கருத்துச் செலுத்தி வருகிறது. மழலையர்பள்ளி நடத்துதல் இதன் திட்டங்களில் ஒன்றாகும். இதனொடு சமூக நலத்திலும் இது நாட்டம் செலுத்தி வருகிறது. உறுப்பினர்தம் குடும்ப நலன், கல்வி நலன்களைக் கருத்தில் கொள்வதுடன் முதியோர் மறுவாழ்வு மையம் ஏற்படுத்துதல், சிறைச் சாலைக்குச் சென்று உரிய தொண்டு செய்தல் போன்ற திட்டங்களும் இதனிடம் உண்டு. இது, பன்னிரு திருமுறைப் பாராயணப் பெருவிழா மூலம் பக்தி இலக்கியம் வளரவும், கலைவிழாக்கள் நடத்துவதன் மூலம் கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கும், மகளிர் தொடர்பான நிகழ்வுகள் மூலம் பெண்களின் மேம்பாட்டிற்கும் துணைநிற்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பொழுது தேசியத் தலைவராய் விளங்கி இதனை வழிநடத்தி வருபவர் முனைவர் என்.எஸ். இராஜேந்திரன்.

சிவநெறி வாழ்க்கை மன்றம்

1992ஆம் ஆண்டில் உருவான இம் மன்றம், 2001-ல் பதிவு பெற்றது. இதன் நிறுவனர் ஆறு.நாகப்பன். தமிழ் வழிபாட்டுமுறை கொண்டு திருமணம், புதுமனை புகுவிழா போன்ற சடங்குகளை நிகழ்த்துதல், திருமுறைப் பதிகப் பாராயணம் செய்தல், திருமுறை விளக்கங்களை ஒலிப்பேழைகள்வழி

வெளியிடுதல், தமிழ் வழிபாடு தொடர்பான நூல்கள் வெளியிடுதல், ஆரிய பிராமணியம் கலவாத சமயச் சடங்குகளை நிகழ்த்துதல் போன்ற கொள்கைகளையும், உயர்ந்த நோக்கங்களையும் கொண்டது இம் மன்றம். இது வகுத்துக்கொண்ட கொள்கைகளுக்கேற்பச் செயற்பட்டு வருகிறது. திருமுறை சைவ சித்தாந்தம் தொடர்பான உரைகளை, விளக்கங்களை ஒலிப்பேழைகளாக வெளியிட்டுள்ளது. 'மது அருந்தாமை, புலால் உண்ணாமை போன்ற நன்னெறிகளைக் கடைப்பிடித்து நிற்போரே இம் மன்றத்தில் உறுப்பியம் பெற இயலும்' என்று இவ் வியக்கம் வரையறை செய்துள்ளது.[25]

வேறு இயக்கங்கள்

இத் துறையில் 'பன்னிரு திருமுறை வளர்ச்சி மையம், வள்ளலார் மன்றங்கள், (மேல் மருவத்தூர்) ஆதிபராசக்தி இயக்கம் போன்ற பல அமைப்புகள் உள்ளன. அவற்றின் நடவடிக்கைகளால் கல்வி, ஆன்மிகம், இலக்கியம், சமயம், வளர்ச்சி பெற்று வருகின்றன. அவை அவ்வப்போது நடத்தும் சான்றோர் சொற்பொழிவுகள், மாநாடுகள், சமயக் கலை விழாக்கள், நடன அரங்கேற்றங்கள் போன்றவை தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவி வருகின்றன. நேரடியாகத் தமிழ் வளர்ச்சியில் ஈடுபடாதோர்க்குத் தமிழையும், கலை, இலக்கியங்களையும் நினைவூட்ட மேற்கண்ட நடவடிக்கைகள் துணைபுரிந்து வருகின்றன.

இசுலாம் சமய நடவடிக்கைகளில் தமிழ்

இசுலாம் சமயத்தவர் வழிபாட்டுமொழி அரபு எனினும், அவர்தம் மற்ற நடவடிக்கைகள் அனைத்தும் தமிழிலேயே நடைபெறுகின்றன. அவர்கள் ஏற்பாடு செய்யும் சமயச் சொற்பொழிவுகளில் நல்ல தமிழ் நடமிட்டு நயம் சேர்க்கிறது. பாட்டரங்குகளில் வளமான தமிழ் ஆட்சி புரிகிறது. மலேசியத் தமிழ் எழுத்துத் துறையில் அவர்களுக்குச் சிறப்பான இடம் உண்டு. இதழ்த் துறையிலும் தொடக்ககாலம் முதல் இவர்களுக்குத் தனியிடமுண்டு. 'எங்கள் வழி இசுலாம்; மொழி தமிழ்' என்னும் உணர்வு குன்றாமல் செயல்படும் அவர்தம் தொண்டு, தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி வருகிறது.

கிறித்தவ சமய நடவடிக்கைகளில் தமிழ்

கிறித்தவ சமயத்தார் தமிழில் இதழ் நடத்துகின்றனர்; நூல்கள் வெளியிடுகின்றனர். கிறித்தவ எழுத்தாளர் சங்கமமும் செயல்பட்டு வருகிறது. இறைவழிபாட்டுமுறை சடங்குகள் மாறுபடினும் தமிழ், தமிழ்க்கலை,

இலக்கியம் பேணுவதில் மாறுபாடிருத்தல் இயலாது. அவரவர் வழியில் இவற்றைப் பேணி வருகின்றனர். கிறித்தவ ஆலயங்களில் பாடப்படும் இசை, நிகழ்த்தப்பெறும் உரை போன்றவை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

கிறித்தவ சமயத்தைப் பின்பற்றும் தமிழரில் ஒருசாரார், வழி பாட்டினைக்கூடத் தமிழிலேயே நடத்துகின்றனர். கிறித்தவ நெறிகளைக் கொண்ட கையேடுகளைத் தமிழிலேயே வெளியிடுகின்றனர்; இதழ்களும் நடத்துகின்றனர். சொற்பொழிவுகளிலும் இசையரங்குகளிலும் தமிழ் ஆட்சிபுரிகிறது. எழுத்துத் துறையிலும் நூல் வெளியீட்டுத்துறையிலும் ஈடுபட்டுத் தமிழ் வளர்ச்சிக்கு உதவி வருகின்றனர். இதழ்த்துறையிலும் தொடக்ககாலம் முதல் இவர்களுக்குத் தனியிடம் உண்டு.

நிறைவுரை

தமிழ் வளர்ச்சியில் சமயங்களின் பங்கு என்று பார்க்கும்பொழுது, நேரடியாக இல்லாவிட்டாலும் அவற்றின் நடவடிக்கைகள் தமிழ், தமிழ் இலக்கியப் பரவலுக்கு உதவியே வருகின்றன என்பதனை மறுக்க முடியாது. ஆழமான சமுதாய உணர்வும் காலத்திற்கேற்ற மாறுதல்களும் வேண்டுமென்று எண்ணுகின்ற மனத்தினர், கோயில்களாலும் சமய இயக்கங்களாலும் இன்னும் பல நன்மைகளைச் சமுதாயம் பெற வேண்டுமென்று துடிக் கின்றனர். இது குறித்து எழுத்தாளர் ஒருவர் மனம் இப்படிச் சிந்திக்கிறது:

"தமிழ்நாட்டில் கோயில்கள் இந்து சமய அறநிலையத் துறை எனப்படும் அரசு அமைச்சகத்தின்கீழ் வருகின்றன. மேலும் காணிக்கைகள் கோயில்களைப் பராமரிக்கவும் அரசின் நலத்திட்டங்களுக்கும் பயன் படுகின்றன. இதுபோன்று இலங்கையிலும் அரசின் நேரடிக் கட்டுப் பாட்டிற்குள்தான் கோயில்கள் இயங்கி வருகின்றன."

"நம் நாட்டிலும் அனைத்து இந்துக் கோயில்களும் கோயிலுக்குரிய சொத்துகளும் இந்து சமய அறநிலையத் துறை என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பெற்று அதன்கீழ் இயங்க வேண்டும். கோயில்களின் மூலம் கிடைக்கும் வருமானம் கோயில்களைப் பராமரிக்க மட்டுமல்லாமல் ஏழைத் தமிழ்மாணவர் கல்வி கற்கவும் அடிமட்ட மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பயன்பட வேண்டும். மலேசியாவின் இந்து சமய அறநிலையத் துறையை அரசின் அங்கமாக மாற்றும்போது அதனை நிருவகிக்கும் பணியில் தமிழ் இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும். அதன்மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும்."[26]

இசுலாமிய சமயத்தைத் தேசிய சமயமாகக் கொண்ட ஒரு நாட்டின் நடைமுறைக்கு இது பொருந்தும் என்று கூற இயலாது. அப்படி

ஒரு நிலையை எதிர்பார்க்கவும் முடியாது.

கோயில் நிருவாகங்களைக் குறிப்பிட்ட ஒரு சிலரே கால மெல்லாம் உடும்புப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பதும் குழுச் சண்டைகள் மூலம் குழப்பங்கள் விளைவிப்பதும் போட்டி போட்டுக்கொண்டு பதவியையே நோக்கமாகக் கொண்டு நெறிகளைமீறி விருப்பம்போல் கோயில்களை அமைத்துக்கொள்வதும் திரளும் நன்கொடைகளை உரிய முறையில் நிருவகிக்காமை போன்றவையே இதுபோன்ற உணர்ச்சி முழக்கங் களுக்குக் காரணம் எனலாம். சிலர் செய்யும் தவறுகள் ஒட்டுமொத்தமாக எல்லாருக்கும் தலைகுனிவை ஏற்படுத்துகின்றன.

காலத்திற்கேற்ற வண்ணம் மாறுதல்கள் ஏற்படுவதில் குறை வந்துவிடாது. சமயச் சடங்குகளை நிறைவேற்ற மட்டுமே கோயில்கள் என்றில்லாமல் சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலன்களையும் கருத்தில் கொண்டு செயற்படும், பலன் விளைக்கும் அறநிலையங்களாகக் கோயில்கள் திகழ வேண்டுமென்பதே அறவழிச் சிந்திப்போர் எண்ணமாகும்.

கோயில்களில் மட்டுமன்றிச் சமய இயக்கங்களும் சடங்குமுறைச் சிந்தனைகளுக்கே முதன்மை தராமல் சமுதாய நலனிலும் கருத்துச் செலுத்த வேண்டுமென்பது தெளிந்தோர் எண்ணமாகும். ஏதிலி - அநாதைக் குழந்தைகளை, கைவிடப்பட்ட நிலையில் உள்ள முதியோரை வாழவைக்கும் காப்பகங்கள் அமைத்துச் செயற்பட்டால், சமய இயக்கங்கள் சமுதாயச் சீர்கேடுகளில் சிலவற்றையாவது சரிப்படுத்தலாம். மலேசியச் சைவ சித்தாந்த மன்றம் இவ் வறப்பணியைச் செவ்வனே செய்துவருகிறது. வலிமையும் விருப்பமும் உள்ள சமய இயக்கங்கள், இதனில் கருத்துச் செலுத்துவது சமுதாய நலன்விளைக்கும் அறச் செயல்களாகும்.

சான்றெண் விளக்கம்

1. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள் மதியம் பதிப்பகம், (1997) ப.88
2. செந்தமிழ்க்கலா நிலையம், முதுதமிழ்ப் பெரும்புலவர் தவத்திரு சுவாமி இராமதாசர் மணிவிழா மலர், 1977
3. முரசு. நெடுமாறன் மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997) ப. 178
4. மேலது, ப.179

5. தமிழ்க்கல்வி வளர்ச்சி 6ஆம் ஆய்வரங்க மலர் (2005) தமிழ் இலக்கியக் கழகம், கோலாலம்பூர், ப.69
6. உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க வரலாறு, ப.7
7. மேலது, ப.89
8. செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாட்டு மலர் (1999), மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கம், கோலாலம்பூர், ப.4
9. மேலது, ப.3
10. மேலது, ப.71
11. தமிழ் அறவாரியம் வெளியிட்ட விளக்க ஏடு - (காலக் குறிப்பு இல்லை.)
12. முரசு.நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997) கிள்ளான், ப.888
13. மலாயாத் தமிழ்ப்பள்ளிகளின் தலைமையாசிரியர் கழக விளக்க அறிக்கை
14. தேசியக் கோட்பாடுகள் (Rukun Negaral)
15. நேர்காணலில் (28.3.2001) அ. வைத்திலிங்கம்
16. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் 1997, அருள் மதியம் பதிப்பகம், கிள்ளான், ப. 884
17. மேலது
18. திருமூலர் திருமந்திரம்
19. நேர்காணலில் (28.3.2001) அ. வைத்திலிங்கம்
20. மேலது
21. நேர்காணலில் (முனைவர்) ஆறு. நாகப்பன் வழங்கிய செய்தி (10.5.2001)
22. சைவ சித்தாந்த மன்றம் 2003, 9ஆம் உலகச் சைவ மாநாட்டுச் சிறப்பு மலர், கோலாலம்பூர்
23. மேலது
24. இந்து தரும மாமன்றம் விளக்கக் கையேடு - காலக்குறிப்பில்லை.
25. நேர்காணலில் (5.11.2001) ஆறு. நாகப்பன்
26. மு. வரதராசு, எரிந்துகொண்டிருக்கும் தமிழினம், 2004, அறிவாலயம், சா. ஆலம், ப.176.

16. கலைத்துறையில் தமிழ்

கலையை நுண்கலை, பருக்கலை என இரண்டாகப் பகுப்பர். தச்சு முதலாய உணர்வு நலன் படியாத பருக்கலை எளிதில் கவரக்கூடியது; நுண்கலையோ உயர்ந்தது; விழுமிய உணர்வுகளை உள்ளடக்கியது; பெருமுயற்சி மேற்கொள்ளும் மிகச் சிலருக்கே கைவரக்கூடியது. இசை, நடனம், கவிதை, நாடகம், ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகளில் கற்றாரே வல்லமை பெற இயலுமெனினும், கல்லாத நாட்டுப்புறத்தார்க்கும், பாடல், இசை, நாடகம் போன்ற கலைத்திறன்கள் வாய்ப்பதுண்டு. கல்லாதார் வழங்கும் இப் படையல்கள் நாட்டுப்புறக் கலைகள் எனப் போற்றப் பெறுகின்றன.

தமிழர், நாட்டுப்புறக் கலைகளிலும் மிக உயர்ந்து நிற்பவராவர். கல்லா மாந்தர்தம் பாடல்கள், இசை, தெருக்கூத்து, கரகாட்டம் போன்ற கலைகள், பழமொழி, விடுகதை போன்ற மொழிச்செல்வங்கள், தமிழுக்கு வளம் சேர்க்கும் படைப்புகள் ஆகும். தற்கால ஆய்வுத்துறையில் குறிப்பிடத் தக்க ஒரு கூறாகவும் நாட்டுப்புறப் படைப்புகள் விளங்கி வருகின்றன.

மலாய்க்காரரர் கலை, பண்பாடுகளில் தமிழின் கூறுகள்

நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே தமிழர் இங்குவந்து கலை, இலக்கிய, பண்பாட்டுக் கொடைகளை மலாய்க்காரரர்களுக்கு வழங்கியமையை எடுத்துக்காட்டும் வரலாற்றுக் குறிப்புகள், முதலாம் பகுதியில் தரப்பெற்றன. பழைய வரலாற்றுச் சான்றுகள் ஒருபுறமிருக்க, இன்றும் மலாய்க்காரரர்தம் வாழ்வோடும், மொழி, கலை, பண்பாடுகளொடும் தமிழரிடமிருந்து பெற்ற கொடையின் கூறுகள் வாழ்வு பெற்றிருக்கின்றன. மேலும்,

சோழர் கடாரத்தொடும் (Kedah), தென்கிழக்காசிய நாடுகளொடும் கொண்டிருந்த அரசியல், கலை, பண்பாட்டுத் தொடர்புகள் முற்றாக அழிந்துவிடவில்லை. அரசு குடும்பத்துடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு இன்றும் தொடர்கிறது எனலாம். ஆம்! மலேசியாவின் விடுதலைத் தந்தை துங்கு அப்துல் ரகுமான் புத்ரா அல்ஹஜ், சோழ மரபினர் என்று, மலேசிய இந்தியர்களின் முன்னாள் தலைவரும், விடுதலைக்கு முன்னின்று

உழைத்த தலைவர்களில் ஒருவரும், மூத்த அமைச்சராய் விளங்கிய வீ.தி. சம்பந்தன் அடிக்கடி கூறுவார்.

இஃது ஒருபுறமிருக்க, மலாய்க்காரர் கலைகளில் - குறிப்பாக நடனங்களில் தென்னகக் கூறுகள் மிகுந்திருப்பதனைக் காணலாம். பினாங்கு வட்டாரத்தில் புகழ்பெற்று விளங்கும் 'டொண்டாங் சாயாங்', கோத்தாபாரு பகுதியில் சிறப்புற்று விளங்கும் 'டிக்ரிபாராட்' ஆகிய பாரம்பரிய இசைவடிவங்கள் தமிழகம் வழங்கிய கொடையாகும். இந்திய இசைக் கருவிகளில் சிலவற்றையும் இன்றளவும் அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பொம்மலாட்டம், தோற்பாவைக் கூத்து (Wayang kulit) போன்றவை, இந்தியச் சார்புடையனவாகும்".[1]

பண்பாட்டுக் கூறுகள்

பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், திருமணம் போன்ற குடும்ப நிகழ்வுகளிலும் தமிழர் கொடையின் கூறுகளைக் காணலாம்.[2] இவை மட்டுமன்றி, "அரச முடிசூட்டு விழாச் சடங்குகள் முழுக்க முழுக்கத் தென்னகப் பண்பாட்டை ஒட்டியனவாகவே அமைந்துள்ளன; அக் கூறுகள் இன்றும் தொடர்கின்றன. அன்றாட வாழ்வில் பின்பற்றப்படும் பழக்க வழக்கங்களும் தொடர்ந்து வாழ்வுபெற்று வருகின்றன. திருமணம் முதலாய சடங்குகளில் பன்னீர்தெளித்தல், அரிசி, மலர்தூவி வாழ்த்துதல் போன்ற மரபுகள் இன்றளவும் அவர்களோடு ஒன்றிக் கலந்துள்ளன."[3]

தமிழர் எதனையும் மற்றவர்களிடம் புகுத்த எண்ணுவதில்லை; அடக்கியாள முயல்வதில்லை. பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே தென்கிழக்காசிய நாடுகளுடன் தொடர்புகொண்டிருந்தனர்; பல்லவரும், பிற்காலச் சோழரும் இங்குப் பெரும்புகழுடன் விளங்கினர். கடாரம் (Kedah) தென்னகத்தின் காலனியாய் - குடியேற்ற நாடாய் இல்லாமல் தென்னவர் நாகரிகத்தையும் பண்பாட்டையும் ஏற்றுக்கொண்ட இடமாய் - மையமாய் விளங்கியது.

தென்கிழக்காசிய நாடுகளின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் வரலாற்றைக் கூறும் நூல்களில் 'Indianization, Indian Colonization' போன்ற சொற்கள் வழங்குகின்றன. இச் சொற்களின் பொருள்குறித்துச் முனைவர் ச.சிங்காரவேலு இங்ஙனம் விளக்குகிறார்.

"இந்திய நாட்டு அரசுகள் தென்கிழக்காசிய நாடுகளில் அரசியல் அல்லது காலனித்துவ ஆதிக்கம் செலுத்தின என்னும் பொருளை

'Indianization' என்னும் சொல்லாட்சி குறிப்பிடவில்லை. பின்னர் இச் சொல் எதனைக் குறிப்பிடுகிறது? இந்தியப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் கூறுகளில் பலவற்றைத் தென்கிழக்காசிய நாடுகளின் அரசரும், அரசவையினரும், ஏனையோரும் விரும்பியேற்றுத் தம் பண்பாட்டுக் கூறுகளுடன் கலந்து தமக்கே உரிய பாண்பாட்டையும், நாகரிகத்தையும் உருவாக்கிக் கொண்டனர். இம் முயற்சியில், இந்தியாவின் சமயக் கோட்பாடுகளும், வழிபாட்டு முறைகளும், அரசரை முக்கிய அம்சமாகக் கொண்டிருந்த இந்திய அரசியல் முறையும், சமற்கிருத மொழியும் இலக்கியமும் அடிப்படைக் கூறுகளாய் அமைந்தன என்பதனைத்தான் 'Indianization' எனும் சொல், அல்லது இந்தியமயமாதல் என்னும் சொற்றொடர் குறிப்பிடுகின்றது."[4]

ஒரு காலத்தில் தென்கிழக்காசிய நாடுகளின் கலை, பண்பாட்டுச் செம்மைக்கே அடிப்படை போட்ட தமிழர் தொடர்ச்சி, விசய நகர ஆட்சிக் காலத்திற்குப்பின் (17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை) நீடிக்கவில்லை. அதனால், வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களாய் (சஞ்சிக் கூலி) இங்குக் குடியேறிய தமிழர், அத் தொடர்ச்சியினர் அல்லர் எனினும் அக் கால்வழியினரே ஆவர். வரலாறு அறியாதோர்க்குத் தமிழர் இங்கு நேற்றுவந்த புதிய குடியினர் என்றே கருதத் தோன்றும்.

பழந்தொடர்பு அறுந்து, முன்னோர்போல் மதிப்புமிக்க குடியினராய் அல்லாமல் வாழ்வு தேடிக் குடிபுகுந்த இப்போதைய தலைமுறையினர், தொடக்க காலத்தில் தங்கள் தரத்திற்கேற்ப (தரநிலை முன்பே குறிப்பிடப் பட்டது) நாட்டுப்புறக் கலைகளிலேயே கருத்துச் செலுத்திவந்தனர். பணிச்சுமை, அடக்குமுறை, ஓய்வின்மை போன்ற அழுத்தங்கள் கலையைப்பற்றி எண்ணவே அவர்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை எனினும், நிலவுக் காலங்களிலும், திருவிழாக் காலங்களிலும் கும்மி, கோலாட்டம், ஒயில்கும்மி, கரகாட்டம், வில்லுப்பாட்டு, தெருக்கூத்துப் போன்ற கலைப் படைப்புகளை வெளிப்படுத்தத் தவறவில்லை. ஒப்பந்தத் தொழிலாளராய் வந்தோரில் அக் கலைகளில் வல்லார் இடம் பெற்றிருந்தனர்; அவற்றை வளர்த்தும் வந்தனர்.

தோட்டங்கள்தோறும் இக் கலைகள் வளர்ந்தே வந்தன. அக் காலத்தில் தமிழகத்தின் சிற்றூர்கள்போலவே தோட்டப்புறங்கள் விளங்கின. அங்குக் கலைத்திறன் கொண்டோரின் ஈக நடவடிக்கைகளால் கலை குன்றாமல் மேற்கொள்ளப்பெற்றே வந்த முயற்சிகள், மரபு மாறாமல், தமிழ்மொழி வளர்ந்துவரவும் உதவின.

கற்றோரும், கலைவல்லாரும் பட்டணப் பகுதிகளில் இருந்த தால் அங்கு இசை, நடனம், நாடகம்போன்ற உயர்நிலையிலான கலை களும் மறக்கப்படாமல் வளர்க்கப் பெற்றன.

இங்கு நாடகத் தோற்றம் என்பது, "1870ஆம் ஆண்டிற்குப் பின்னரே காலூன்றி இருக்க வேண்டும்" மென்று இத் துறை ஆய்வாளர் அ.மணிசேகரன் கூறுகிறார். மேலும் அவர், "1910ஆம் ஆண்டிற்குப் பின்னரே இந் நாட்டில் முறையாக நாடகங்கள் நடைபெறத் தொடங்கியதை அதிகாரப்பூர்வமாக அறிய முடிகிறது"[5] என்கிறார்.

"1910-ல் இந்தியாவிலிருந்து வந்து இந் நாட்டில் தங்கி விட்டவரான கலியபெருமாள் தேவர் வாத்தியார் மலாயாவின் வடபகுதியான சுங்குரம்பையில் (புக்கிட் மெர்த்தாஜாம்) புராண இதிகாச நாடகங்களைப் போட்டுள்ளார்; இதுவே மலேசிய மேடைநாடகத் தொடக்கத்திற்கான மூல ஆதாரமாய் நமக்குக் கிடைத்துள்ளது"[6] என மற்றொரு நாடகத்துறை ஆய்வாளரான ஆர்.பி.எஸ். மணியம் கூறுகிறார்.

இந் நாட்டில் முறையான நாடகத்துறை வளர்ச்சிக்குத் தமிழகத்தி லிருந்து வந்த நாடகக் குழுக்களே உறுதியான அடித்தளமிட்டன. "புராண, இதிகாச நாடகங்களை இங்குக் கொணடுவந்த குழுக்களில் அரங்கசாமி நாடகக் குழு (கம்பெனி) குறிப்பிடத்தக்கது (1928). அக் குழுவினர் 25 ஆண்டுகள் இங்கேயே தங்கிச் சிங்கை (சிங்கப்பூர்) மலாயாவில் நாடகக் கலையை வளர்த்தனர்"[7] என்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வரலாற்றுச் செய்தியாகும்.

இங்கு நாடகக்கலை 1930-ல் வேரூன்றி 1950-ல் நல்ல வளர்ச்சி நிலையை எய்திற்று. எத்தனையோ நாடகக் குழுக்கள் தோன்றின. 1957-ல் தி.க.ச. உடன் பிறந்தோர் (டி.கே.எஸ். பிரதர்ஸ்) இங்கு வந்து 'இராஜராஜ சோழன்' முதலாய பல நாடகங்களை நடத்திய பின்னரே இங்கே நாடகத் துறையில் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

1960-ல் தோன்றிய மலாயாக் கூட்டரசு தமிழர் கலைமன்றம் (1971-ல்) இது 'மலேசியத் தமிழர் கலைமன்றம்' எனப் பெயர் மாற்றம் கண்டது. இது மலேசியத் தமிழ் நாடகத்துறைக்கு ஆற்றிய தொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். ஆண்டிற்கு ஒரு நாடகம் எனச் சமுதாய, வரலாற்று நாடகங்களை புதிய நாடக நெறிமுறைகளோடு அரங்கேற்றி வெற்றிகண்ட குழு இது. இக் குழு, 'கடாரம்' என்ற வரலாற்று நாடகத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு சென்று மேடையேற்றி மூலத் தாயகத்தாரை

வியப்பில் ஆழ்த்திய குழுவாகும். இக் குழுவை வழிநடத்தியவர், நாடகக் காவலர் என்ற புகழுக்குரியவராய் விளங்கிய ஆழி. அருள்தாசன்.

தமிழகத்தில் பெயர்பதித்த வேறு சில கலைஞர்களும் இங்கு நினைவு கூரத்தக்கவராவர் அவர்களுள், திரைப்படப் பின்னணிப் பாடகர் மலேசிய வாசுதேவன், 'தேவைகள்' படத்தில் நடித்துத் தமிழக அரசின் பரிசில் பெற்ற மனு இராமலிங்கம், திரைப்பட நடிகர் ரவிச்சந்திரன், நடனக் கலைஞர் மகாலிங்கம் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

தொழில் கலைஞர்கள்

இங்கு நாடகத்தைத் தொழிலாய்க் கொண்டிருந்தவர்கள் ஒருசிலரே. தமிழகத்திலிருந்து நாடகக் குழுவோடு இங்கு வந்து தங்கி விட்ட சிலர் நாடகத்தைத் தொழிலாய்க் கொண்டு வாழ்ந்தனர். இங்குப் பிறந்து வளர்ந்து கலைப்பயிற்சி பெற்ற சிலரும் நாடகத்தைத் தொழிலாய்க் கொண்டிருந்தனர். தொடக்க காலத்தில் அத் தொழிலுக்கு இருந்த வரவேற்பு, திரைப்பட வருகையால் குறைந்து போனது; நாளடைவில் அத் துறையினரை நலிவடையச் செய்தது; நாடகத்துறையை வெறுத்து ஒதுங்கச் செய்தது. இன்று இசைத்துறையில் புகழ்பெற்று விளங்கும் ரெ.சண்முகம், நா.மாரியப்பன் போன்ற கலைஞர்கள் ஒரு காலத்தில் நாடகத்தைத் தொழிலாய்க் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகத் தொழிலால் வாழ்க்கை நடத்த முடியாத சூழலிலும், கலை ஆர்வத்தால் அதனில் ஈடுபட்டவர்களை மறக்க இயலாது. பல கலை மன்றங்களில் பலர் இதனில் ஈடுபட்டிருந்தனர். காலமாறுதல்களுக்கேற்ப நாடகக் கருப்பொருள்கள் மாறுபட்டன. புராண இதிகாச நாடகங்களை யடுத்து, சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்ற கலைவல்லார் நாடகங்கள் இங்கு அரங்கேறியுள்ளனர். (பேரறிஞர்) அண்ணா, (கலைஞர்) மு. கருணாநிதி, (பாவேந்தர்) பாரதிதாசன் போன்றோர் நாடகங் களும் மேடையேறியுள்ளன.

'வளரும் கலைஞர்கள்' முதலாய கலைக் குழுக்களின் மூலம் மலேசிய நாடக ஆசிரியர்கள் எழுதிய பல சமூக, வரலாற்று நாடகங்களும் அரங் கேறியுள்ளன. இன்று நாட்டின் மூத்த அமைச்சராய் விளங்கும் ச.சாமிவேலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.கோவிந்தராஜ் போன்றோர் முன்னின்று வளர்த்த நாடகக் கலையின் தொடர்ச்சி இடையில் முடக்கம் கண்டது. அண்மையில் மனு இராமலிங்கத்தின் வழித் தோன்றல்களால் நடத்தப்பெற்ற 'வள்ளலார்' நாடகம், ஜி.எஸ்.மணியம் எழுதி, இயக்கி, உருவாக்கி மேடையேற்றிய 'திருவள்ளுவர்' நாடகம் போன்றவை, பழைய நினைவுகளை அசைபோட வைத்தன.

அரசு தகவல்துறையின் பரப்பிய நாடகங்கள்

அரசு தகவல் துறையினர் பரப்பிய (பிரச்சார) நாடகங்களும் மலேசியத் தமிழ் நாடகத்துறை வளர்ச்சிக்கு உதவியுள்ளன எனலாம். தோட்டங்கள்தொறும் சென்று தகவல் துறையினர் நடத்திய அரசின் கொள்கைகளைப் பரப்பிய நாடகங்கள் மக்களுக்கு விழிப்புணர்வைத் தூண்டத் துணைபுரிந்துள்ளன.

வானொலி நாடகங்கள்

மலேசிய நாடகத்துறை வரலாற்றில் வானொலி நாடகங்கள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிறப்புடையனவாகும். ஒலி வழியாகவே உயிரோட்டமான காட்சிகளை மனக்கண்முன் நிறுத்தி இன்பமூட்டு பவை அவை. இங்கே அத்துறை மிகவும் மதித்துப் போற்றத்தக்க துறையாய் விளங்கியது. தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் இடம்பெற்ற அமைப்புகள் நாடெங்கும் நற்றமிழைப் பரப்பின; கலை உணர்வைத் தூண்டின. இடையிலே சற்று நலிவுகண்ட இத் துறையை மலேசிய வானொலி மீண்டும் உயிர்ப்பித்து வருகிறது. மேடை நாடகங்கள் இப்பொழுது உரு வாகத் தொடங்கியுள்ளன. இத் துறைக்கு வரும் புதியவர்கள் மொழி உச்சரிப்பில் சற்றுக் கூடுதல் கருத்துச் செலுத்தினால் புது முயற்சிகள் புத்தொளி சேர்க்கும்.

தொலைக்காட்சி நாடகங்கள்

தொடக்கத்தில் தொலைக்காட்சியில் மிக மிகக் குறைந்த நேரமே தமிழ் நாடகங்களுக்கு ஒதுக்கப்பட்டது; தனியார் தொலைக்காட்சி வந்தபின் வாய்த்த கூடுதல் இடத்தைத் தமிழகச் சின்னத்திரை நாடகங்கள் பிடித்துக் கொண்டன. அவை பெரும்பாலும் மலேசியத் தமிழர் வாழ்விய லுக்குப் பொருந்தாத படைப்புகளாகவே உள. மலேசியக் கலைஞர்கள் உருவாக்கும் நாடகங்களுக்கு நிலையத்தார் உரிய - பொருத்தமான நேரத்தை ஒதுக்குவதில்லை என்னும் குறை தொடர்ந்து வருகிறது.

பிற துறைகளில் நாடகங்கள்

நாடகங்கள் மேடை, வானொலி, தொலைக்காட்சி என்னும் அளவி லன்றி வேறு வகைகளிலும் நடத்தப் பெறுகின்றன. பள்ளிகளின் பரிசளிப்பு விழாக்கள், வகுப்பறைகள், மாநாடுகள் போன்ற நிகழ்வுகளிலும் நாடகங்கள், இடம்பெற்று வருகின்றன.

கலப்படம்

மலேசியாவில் கலைவளர்ச்சி என்பது நாடகத்துடன் நின்று விடவில்லை. பாடல், நடனம், நகைச்சுவை, ஓரங்க நாடகம் என்பன

போன்ற பலவும் அடங்கிய மூன்று மணி நேர நிகழ்ச்சிகள் இங்கு அறிமுகமாகிப் பெரும் வரவேற்பைப் பெற்றன. இது 'கதம்ப நிகழ்ச்சி' என்றும், 'கலப்படம்' என்றும் அழைக்கப்பெற்றன. கலப்படத்தைப் பரவச் செய்ததில் மலேசிய வானொலிக்கும் பெரும்பங்குண்டு.

இசை நடனத்துறைகள்

முத்தமிழும் அடங்கிய நாடகக் கலையொடு, தனித்த கூறுகளாய் உள்ள இசை, நடன வளர்ச்சி குறித்தும் ஈண்டுச் சில சொல்லுதல் வேண்டும். நாடகக் கலைத்திறனைக் கொண்டு இங்கே வாழ்வு நடத்த இயலாது. இசை நடனக் கலைகளுக்கும் அதே நிலைதான். அதனால், கலை ஆர்வத்தால் அவற்றை ஓரளவு மேலோட்டமாகக் கற்றால் போது மென்ற மனநிலையிலேயே சிலர் அத் துறைகளை அணுகுகின்றனர்.

'கர்நாடக இசை' இசை என்னும் பெயரால் வழங்கும் பழந்தமிழிசை, மிக மிக நுட்பமானது; ஆழமானது. நீண்ட காலப் பயிற்சியாலேயே அது கைவரப் பெறும். வாழ்வு நடத்தத் தொழிலாகக் கொள்ள முடியாத ஒன்றிற்கு நீண்ட காலத்தைச் செலவிட இயலாதெனினும், ஆர்வலர்கள் ஓரளவாவது அதனைக் கற்றுக்கொள்ள முன்வரவே செய்கின்றனர். ஆனால், மிகக் குறுகிய காலத்தில் மேடையேறிப் பாட வேண்டுமென்னும் ஆர்வத் தால் - ஆசையால் உந்தப்பட்டுக் குறுகிய காலத்தில் பயிற்சியை நிறுத்தி விடுகின்றனர். முழுநேர இசையரங்கு நடத்தும் அளவு திறமை கொண்டோரைக் காண்பது அரிதாகவே உள்ளது. தண்ணுமை (மிருதங்கம்), புல்லாங்குழல், வயலின் இசைப்போரின் நிலையும் இதுவே. திரைப்படப் பாடல்களை இசைக்கத் தெரிந்தால் போதுமென்னும் நிலையே உள்ளது. இத் துறையில் பயிற்சியளிக்கும் வல்லுநரும் அருகிவிட்டனர். எஸ்.சி.நாகசாமி (பாகவதர்), நா. மாரியப்பன் போன்ற சிலரே மரபுவழிச் செவ்விசைப் பயிற்சியை, அகவை முதிர்ந்த காலத்திலும் வழங்கி வருகின்றனர்.

இசைத் துறையில் பயிற்சி மேற்கொள்வோரைவிட நடனத் துறையில் பயிற்சி மேற்கொள்வோர் தொகை மிகுதியாக உள்ளது. எனினும், தொழில்முறை வாய்ப்பில்லாத காரணத்தால் இத் துறையிலும் ஆழ்ந்து பயிற்சி பெற்றுச் சிறப்போர் தொகை விரல்விட்டு எண்ணத் தக்கதாகவே உள்ளது. இக் கலை பயில வருவோரில் சலங்கை பூசையுடன் முடித்துக் கொள்வோர் மிகுதி. அரங்கேற்றத்தை வெற்றிகரமாய் முடிப்போர் குறைவே. அவர்களுள்ளும் பலர் அவ்வப்போது சில நிகழ்வுகளில் ஆடினால் போதுமென்று எண்ணுகின்றனர். நுண்கலைக் கோயில் (Temple of Fine Arts) முதலாய சில நிறுவனத்தினரும், தனியார் சிலரும் இக் கலை

வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்து வருகின்றனர் என்பதனை ஈண்டுக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இன அடையாளம்

ஓர் இனத்தின் முதன்மையான அடையாளம் தாய்மொழியும், அம் மொழி சார்ந்த கலைகளுமாகும். கலைகள் பண்பாட்டின் வெளிப்பாடு களாய் ஒளிர்கின்றன. அதனால், பொருள் முதலாய வளங்களைத் தேடிக் கொள்வதொடு கலைகளையும் பாதுகாத்து வளர்த்துக் கொள்ள வேண்டுவதும் இன்றியமையாததாகும்.

மலேசியத் தமிழினம் கலைகளை இழந்துவிடவில்லை யெனினும், ஆழப்படுத்திக்கொள்ள முயல வேண்டுமென்பது மேலோர் அவாவாகும். பொருள் வளங்கொண்ட சிலர், தமிழகம் சென்று கலைத்திறனை வளர்த்துக் கொள்ளவும் செய்கின்றனர்.

பி.கே. சாமி தலைமையில் இயங்கிவரும் மலேசியத் தமிழ்க் கலைஞர் இயக்கம், கலை வளர்ச்சிக்குப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. புதிய கலைஞர்களுக்கு ஊக்கம் நல்குவதொடு, பழம் பெரும் கலைஞர்களுக்கு விருதளித்துப் பாராட்டி வருகிறது.

தமிழகக் கலைஞர் படைப்புகள்

பழங்காலந்தொட்டு இன்றுவரை தமிழகக் கலைஞர்களின் படைப்புகள் இங்கு இடம்பெற்றே வருகின்றன. பொருள் ஒன்றனை மட்டுமே நோக்கமாய்க் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தவரும் திரைப்படக் கலைஞர்களின் படையல்கள் தாய்மொழி, கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவும் வகையில் இல்லை. ஒரு காலத்தில் இங்கு வந்து நாடகங்கள் படைத்த கே.ஆர்.இராமசாமி, டி.கே.எஸ். சகோதரர்கள், எம்.ஆர். ராதா, மனோகர் போன்ற கலைக்குழுவினர் இதற்கு மாறுபட்டவர்கள். புகழ் பெற்ற பாடகர்கள், நடனக் கலைஞர்கள், கருவி இசைக் கலைஞர் பலர் இங்கு உயர்ந்த படையல்களை அளித்து வழிகாட்டியுள்ளனர். அப் பேர்ப்பட்ட நல்ல கலைஞர்கள் இப்பொழுதும் இடையிடையே வந்து கலைவிருந்து படைத்து வருகின்றனர். தமிழகத்திலிருந்து இங்குவரும் கலைஞர்கள், தரமான கலைவிருந்து படைத்து வழிகாட்டினால் இங்குள்ள கலைஞர்கள் அவர்களைப் பின்பற்றி உயர வழியேற்படும்.

சான்றெண் விளக்கம்

1. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம் (1997), கிள்ளான், ப.35
2. மேலது
3. மேலது
4. சிங்காரவேலு, ச., தென்கிழக்காசியாவில் இந்து சமயச் செல்வாக்கு, சென்னைப் பல்கலைக்கழகம், 1961 (தமிழ்த்துறை) வெளியிடும் 'தமிழாய்வு' 12ஆம் தொகுதி
5. மணிசேகரன், அ., மலேசியாவில் மேடை நாடகங்கள், அன்பன் அச்சகம் (1987), கோலாலம்பூர், ப.16
6. மணியம், ஆர். பி.எஸ். மலேசியாவில் மேடை நாடகங்கள், திருமுகம் பதிப்பகம் (1994), தைப்பிங்
7. மேலது, ப.107

17. இலக்கியத்துறையில் தமிழ்

மக்கள் உறும் விழுமிய அழகுணர்வுகளின் கலைவடிவ வெளிப்பாடே இலக்கியம். மகிழ்ச்சியில் திளைக்கும் பொழுது இன்ப உணர்வு வடிவம் பெறும்; துன்பத்தில் துவளும்பொழுது துயரம் பதிவு பெறும். அமெரிக்கக் கறுப்பர் அடிமைப்பட்டுக் கொடுமைகளுக்கு ஆளானபோது துன்ப உணர்வு செந்நீராக அவர்கள் பாக்களில் தேங்கியது.

வாழ்வு தேடிப் புலம்பெயர்ந்தவர் எனினும், கொடுமைகளுக்கு ஆளாகாமல் வணிகத் தொழில்துறைகளில் முனைப்புக்காட்டிப் பொருளீட்டிய சீனர் பாடல்களில் தன்னம்பிக்கைச் சுடர் ஒளிர்கிறது. தாயகத்தை மாற்றானிடம் (பிரிட்டிசாரிடம்) பறிகொடுத்திருந்த மலாய்க்காரர்களின் பாடல்களில் ஏக்கமும், தாயகத்தை மீட்கவேண்டுமென்ற வேட்கையும் பளிச்சிடுகின்றன. ஒப்பந்தக் கூலிகளாய் வந்த தமிழர், இங்கு வெள்ளைக் காரர் கெடுபிடிகளுக்கு ஆளான காலை வடித்த அவலக் கண்ணீர், அவர்கள் வாய்மொழியாகக் கொட்டிய பாடல்களில் ததும்பியுள்ளது.

இலக்கியம் மாந்தர் வாழ்வுப் பாதையின் மேடுபள்ளங்களை விளக்கி நிற்கும் படைப்புகளாகும். அது வரலாற்றைப்போலச் செய்திகளை மட்டும் கொண்டு வறட்சியான மணல் நடையில் வருவதன்று. காலந்தொறும் மக்கள் உற்ற உணர்வுகளைப் படம்பிடித்து மருக்கொழுந்து நடையில் மணக்கத் தருவதாகும். இலக்கியம் இதனொடு மட்டும் நின்று விடுவதில்லை. அஃது ஓர் இனத்தின் பண்பாட்டு அடையாளமாகவும் மொழிக்கு மாண்பு சேர்க்கும் களஞ்சியமாகவும் விளங்குவதாகவும், மலேசியத் தமிழின் மலர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டின் மேன்மைக்கும், இன அடையாளத் திற்கும் அஃது எங்ஙனம் துணை நிற்கிறது என்பதனை இப் பகுதி ஒருசிறிது கண்ணோட்டமிடுகிறது. இந் நூலின் முதலாம் பகுதியிலும் இவ் விரண்டாம் பகுதியின் முதற் பகுதிகளிலும் இலக்கியத் தோற்றம் வளர்ச்சிகளுக்குத் துணைநின்ற இதழ்கள், ஊடகங்கள், இயக்கங்கள், நிறுவனங்கள், தனிமாந்தர் செயற்பாடுகள் குறித்துக் கூறப்பெற்றன. இங்கு இலக்கியம் குறித்த பொதுவான செய்திகள், அதன் வகைப்பாடுகள், பாடுபொருள் போன்றவை சுருக்கமாக எடுத்துரைக்கப் பெறுகின்றன.

முன்பகுதிகளில் கண்ட சுற்றுச் சூழல், வாழ்க்கை முறை, பணிச் சுமை, நெருக்கடிகள், அடக்குமுறை, ஓய்வின்மை போன்றவை இலக்கியத் தோற்றத்திற்கு வாய்ப்பற்ற ஒரு நிலையையே காட்டும். ஒப்பந்தக் கூலிகளாய் இங்குக் கொண்டுவரப்பட்டவர்களும் கல்வியறிவற்ற, நாட்டு வளப்பம்பற்றி ஒன்றுமே தெரியாத பாமரர்கள். இந் நிலையில் இலக்கியம் தோன்றுவது எங்ஙனம்?

நாட்டுப்புறப் பாடல்கள்

புலம்பெயர்ந்து வாழ்வு தேடி வந்த அம் மக்கள் மூலத் தாயகத்தில் இயல்பாகப் பெற்றிருந்த நாட்டுப்புறக் கலைத்திறனே இங்கு இலக்கியம் தோன்ற வழிவகுத்தது. தம் உணர்வுகளைப் பாட்டாக வெளியிடும் திறன் பெற்றிருந்த மக்கள், தாயகத்தில் பாடிய அப் பாடல்களை இங்கும் பாடினர்; சூழலுக்கேற்ப அப் பாடல்களில் சிற்சில சொற்களைச் சேர்த்துப் பாடினர்.

"குளத்திலே தண்ணிவரும் என்னப் பெத்த ஐயாவே
நீ பெத்த பொண்ணுக்குக் குண்டா சுழண்டுவரும்
கோட்டா தண்ணியின்னு நான் குடிக்கத்தான் அஞ்சினனே!"

இப் பாடலில் `கோட்டாத் தண்ணி' என்பது புதிய சேர்ப்பு. `கோட்டா தண்ணி' யென்றால் ரப்பர்ப் பால் உறைவதற்கு மருந்து கலக்கப்பட்டு நச்சுத் தன்மை கொண்ட நீர்.

எதிர்பார்த்து வந்த எண்ணங்களுக்கு நேர் எதிரான சூழலால் உற்ற உணர்வுகளைப் புதிய பாடல்கள்வழி இங்ஙனம் தெரிவித்தனர்:

"ஒருதட்டு அப்பத்துக்கு ஒருதட்டு வெள்ளின்னு சொன்ன
கறுப்புச்சட்டை கதிர்வேலு கங்காணி
லாலான்முள்ளு டிங்குன்னுதே - இங்கு
லப்பர்கொட்டை டப்புன்னுதே!"

பாடலில்வரும் 'லாலான்' என்பது ஒருவகைப்புல். மூன்றடி உயரம் வரை வளரும். அதன் வேரில் நச்சுத்தன்மை கொண்ட முட்கள் இருக்கும். காலில்பட்டால் புண்ஏற்பட்டுத் துன்பம் தரும். அப் புல்லை அத்துணை எளிதில் ஒழிக்க முடியாது. அடிவேரோடு கல்லி எறிந்தால்தான் ஒழியும். 'லாலான் முள்ளு டிங்குன்னுதே' என்ற அடி, வளமான நாடென்று நம்பி வந்தோம். இது முட்புதர்கள் அடர்ந்த காடாக அல்லவா இருக்கிறது என்ற பொருளை உள்ளடக்கியுள்ளது.

லப்பர்கொட்டை என்பது இரப்பர் மரத்தில் காய்த்துத் தொங்கும் வித்துகள் அடங்கிய கொத்து. வித்துகள் மூடப்பட்டுக் கொத்தின் உள்ளே இருக்கும். முற்றியதும் கொத்து வெடித்து வித்துகள் சிதறும். அப்பொழுது ஒருவகை ஒலி எழும். லப்பர் கொட்டை டப்புன்னுதே என்ற அடி ஆழ்ந்த பொருள் கொண்ட அடியாகும்.

'ரப்பர் மரத்தில் பணம் காய்க்கும் என்றார்களே. இங்கு வெடித்துச் சிதறுவன வெறும் கொட்டைகளாக (வித்து) அல்லவா உள்ளன?' என்ற ஏக்கப் பெருமூச்சு இப்படிப் பாட்டாக வெளிப்படுகிறது.

1965 வரை சிங்கப்பூரை உள்ளடக்கிய மலாயாவில்/ மலேசியாவில் தமிழ் இலக்கியம் இவ் வகையில் தான் தொடக்கத்தில் வேர்விட்டது. கட்டுரை, சிறுகதை, புதினம் போன்ற இலக்கிய வடிவங்கள் தோன்றுவதற்கு முன்பு, நாட்டுப்புறப் பாடல்களே இங்கு இலக்கியமாக வடிவெடுத்தன. நாடக இலக்கியம்கூடக் கல்லா மாந்தர்தம் தெருக்கூத்திலிருந்தே தோன்றியது. இது தோட்டப்புறங்களின் நிலையாகும்.

வாய்மொழி இலக்கியம் எப்பொழுது தோன்றியதென்று துல்லியமாய் வரையறுத்துக் கூற இயலவில்லை. இங்கு வந்த ஒப்பந்தத் தொழிலாளர்தம் முதல் தொகுதியினரே தொடக்க கால மலேசியத் தமிழிலக்கியத்தை (நாட்டுப்புறம்) உருவாக்கியவராவர்.

கவிதை

உழைக்க மட்டுமே இங்குக் கொண்டு வரப்பட்ட பாமர மக்களை யடுத்துப் படித்தவர்களும் இங்கு வரத்தொடங்கிய பின்னரே, அவர்கள் நிலைத்து வாழத் தொடங்கிய பின்னரே எழுத்துவடிவ இலக்கியம் தோன்றத் தொடங்கியது. எழுத்து வடிவில் முதலில் தோன்றிய இலக்கியமும் கவிதையே. 1887-ல் வெளிவந்த வண்ணை அந்தாதி, வண்ணை நகர் ஊஞ்சல், சிங்கைநகர் அந்தாதி, சித்திர கவிகள் ஆகிய சிற்றிலக்கிய நூல்கள் அடங்கிய தொகுதியே இங்குவந்த முதல் கவிதை இலக்கியம் என்று பலரும் குறிப்பிடுகின்றனர். இலங்கையிலிருந்து வந்து சிங்கப்பூர் முறை மன்றத்தில் மொழிபெயர்ப்பாளராய்ப் பணியாற்றிய சதாசிவ பண்டிதரே அந் நூல்களை இயற்றிய ஆசிரியர். அதற்கு முன்பே ஆறுமுகப் பதிகம் என ஒரு நூல் வெளிவந்திருப்பதாக ந.வீ. செயராமன் குறிப்பிடுகிறார்.[1] ஆனால், காலத்தினைக் குறிப்பிடவில்லை.

இங்ஙனம் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிதொட்டு, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இங்குக் கவிதையே ஆட்சிபுரிந்தது. இக் காலத்திய நாட்டுப்புற வாய்மொழி இலக்கியமும், எழுத்து மொழி

இலக்கியமும் இரு தண்டவாளங்களைப்போல இருவேறு கோணங்களில் வளர்ந்தன. நாட்டுப்புறப் பாடல்களில் தொழிலாளர் அவலம், வறுமைத் துயர், ஏமாற்றம், விரக்தி, மேலதிகாரிகளின் ஆணவப் போக்கு, ஓய்வின்றி உழைக்க வேண்டிய கட்டாயத்தால் ஏற்பட்ட நலிவு போன்ற உணர்வுகள் பாட்டாகியுள்ளன, பாலியல் கொடுமைகளைப் பற்றியும், பெண்ணிய உணர்வு பற்றியும் ஆங்காங்கே சில காணப்படுகின்றன. காதல் வெளிப் பாடும் கேளிக்கை நிகழ்வுகளும் சிறிதே இடம்பெற்றுள்ளன.

கல்வி கற்ற படைப்பாளர் பாடல்களில் தொழிலாளர்பற்றிய செய்தி களைக் காண இயலவில்லை; இறை உணர்வே முதலிடம் வகிக்கிறது. அவ்வப்போதைய கொலை முதலிய நிகழ்வுகளைப்பற்றியும் குதிரைப் பந்தயம் போன்ற கேளிக்கை நிகழ்வுபற்றியும் பாடல்கள் உள. காதல் உணர்வுகள் மிகமிகக் குறைந்தே காணப்பெறுகின்றன.

அப்பொழுது சமுதாயத்தின் முக்கால் பகுதிக்குமேல் தோட்டப் புறத்தில் வாழ்ந்தது. பட்டணத்தில் வாழ்ந்தவர்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பு அருகியே இருந்தது. சில தோட்டங்களுக்கு மற்றவர்கள் வரத் தடையும் போடப்பட்டிருந்தது. அதனால், இலக்கியப் போக்குகளும் அங்ஙனமே தனித்தனிப் போக்குகளாக அமைந்திருந்தன.

19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இங்கு நிலவிய இலக்கியப் போக்குகள் மேலே எடுத்துரைக்கப் பெற்றன. இரண்டாம் பகுதியிலும் கவிதை இலக்கியமே தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது என்பதனை அக் காலகட்டத்தில் வெளிவந்த நூல்கள் எடுத்துரைக்கின்றன. 1887 தொட்டு 1899 வரை சற்றேறக் குறைய பத்துக் கவிதை நூல்களும், 1900 தொடங்கி 1945 வரை 25 கவிதை நூல்களும் வெளிவந்துள்ளன. கவிதைகளின் போக்கில் மாறுதல் என்று பார்க்கும்போது, இந்திய விடுதலை உணர்வுக் கவிதைகள், சப்பானியரை வாழ்த்தும், தூற்றும் கவிதைகள் ஆங்கிலேயரைத் தூற்றும் கவிதைகள் தென்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்களில்,

"தலயவெட்டி வெச்சாண்டி!
தறுதலையா ஆடுனாண்டி
ஏழைங்க வவுறெரிஞ்சா
எவனுமே உருப்படாண்டி"

என்று சப்பானியரைத் தூற்றும் பாடல்களைக் காண முடிகிறது.

1946 தொடங்கி 1956 வரையிலான காலகட்டம் மலேசியாவில் பிறந்து கல்வி கற்றுப் புதியவர்களும் எழுத்துலகிற்கு வந்த காலகட்டமாகும். இக் காலகட்டம்கூட 100 விழுக்காடு மலேசிய உணர்வுகளைக்

கொண்ட இலக்கியங்கள் உருவான காலமன்று. இதன் முதல் பகுதியில் பழைய சிந்தனைகளிலிருந்து முற்றாக விடுபடாமை தோன்றும். 1950ஆம் ஆண்டிற்குப் பின்னரே இந்த மண்ணின் மணங்கமழும் படைப்புகள் தோன்றத் தொடங்கின. இதற்குக் கோ.சாரங்கபாணி தம் தமிழ்முரசு நாளிதழ் மூலமும் தமிழர் திருநாள் மூலமும் எழுப்பிய சிந்தனைகளே அடித்தளமிட்டன; இந்த நாட்டில் நிலைத்து வாழவேண்டுமென்ற உறுதியைச் சேர்த்தன; அந்த உணர்வுகள் இலக்கியமாய் வடிவெடுத்தன. பண்பட்ட எழுத்துலகப் பெருமக்கள் புதியவர்களுக்கு வழிகாட்டி வளர்த்தனர். கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை ஆகிய துறைகளில் புதியவர்கள் வளர்ந்தனர். இக் காலகட்டத்தின் இரண்டாம் பகுதியே முன்பு எப்பொழுதும் இல்லாத அளவு புத்தார்வம் கொண்ட எழுத்தாளர் படை பெருகிய காலமாகும். தமிழ்ப்பற்று, சமுதாய அவலம், எழுச்சி, பகுத்தறிவுச் சிந்தனை, இறைநலம், விடுதலை வேட்கை போன்ற உணர்வுகள் கொண்ட படைப்புகள் மலர்ந்தன. ஏடுகள் தந்த இடமும், இயக்கங்கள் தந்த ஊக்கமும் எழுத்துத்துறை மேம்படத் துணைபுரிந்தன. இக்காலப் பகுதியில் கவிதையும், சிறுகதையும் நன்கு வளர்ந்தன. புதினம், கட்டுரை வளர்ச்சி அடுத்த நிலையிலேயே இருந்தன.

கவிதைத் துறையை வளமாக்கியோர்

எழுத்துத் துறையில்-குறிப்பாகக் கவிதைத் துறையில் வழிகாட்டிய பெருமக்கள் சிலர் இங்கு நினைவுகூரத்தக்கவராவர். வடபுலமான பினாங்குப் பகுதியில் (சுவாமி) இராமதாசர், புலமைமிக்க பலரை உருவாக்கினார்; தென்புலமான சிங்கப்பூரில் ஐ.உலகநாதன் ஓர் இலக்கிய அணியை வளர்த்துவிட்டார்; நாட்டின் மையப் பகுதியான ஈப்போ வட்டாரத்தில் குறிஞ்சிக் குமரன் பலருக்கு வழிகாட்டி வளர்த்தார். தலைநகரில் சுப.நாராயணன், பைரோஜி நாராயணன், டி.வி.இராகவன் பிள்ளை போன்றோர் கவிதை வளர்ச்சிக்கும், கவிஞர் உருவாக்கத்திற்கும் வழிகாட்டினர். கா.பெருமாள், பனைக்குளம் மு.அ.ப்துல் மஜீது, அ. முத்தையன் போன்ற பெருமக்கள் பலருக்குக் கவிதை உணர்வூட்டி வளர்ச்சிக்குத் துணைநின்றனர்.

முன்னோர் வழிகாட்டலில் ...

பேரார்வத்துடன் கற்றுக் கவிதை வயலில் புதிய விளைவுகளை ஏற்படுத்திய சிலரையும் நினைவுகூர்தல் வேண்டும். ஈர்ப்புத் தன்மை மிக்க தன்னுணர்ச்சிப் பாக்கள் வடிப்பதில் ஐ.உலகநாதன், கரு.வேலுச்சாமி, சங்கு சண்முகம், நகைச்சுவைப்பித்தன், வீரமான், காரைக்கிழார், சீனி. நைனா முகம்மது, கே. முகம்மது யூசுப், தி.சி.பொன்னுசாமி, எல்லோன் போன்றோர் முன்னிலை வகித்தனர். இனிமை கொஞ்சும் இசைப் பாக்களை வடிப்பதில்

கரு.திருவரசு, ரெ.சண்முகம், அ.பு. திருமாலன், காசிநாகன் போன்றோர் சிறந்து விளங்கினர். வானொலிக்குக் கவிதை நாடகம் எழுதுவதில் கா.பெருமாள் ப.மு.அன்வர், தை.சே.பெ. பொன்னம்பலம் போன்றோர் திறன்பெற்று விளங்கினர். காப்பியம் இயற்றுவதில் பனைக்குளம் அப்துல் மஜீது, சி.அன்பானந்தம், இரா.பாண்டியன் போன்றோர் புகழ் பெற்றனர். சிற்றிலக்கியங்கள் படைப்பதில் வீ.கே.சுப்பிரமணியம், நாச்சி குளத்தார் இரா. பெருமாள் போன்றோர் சிறந்து விளங்கினர். வில்லுப்பாட்டுத் துறையில் கா.பெருமாள் தனிச்சிறப்புப் பெற்ற பெருங்கவிஞராய், கலைஞராய் ஒளிவீசினார். பின்னர் இத்துறைக்கு ரெ.சண்முகம் வந்தார். சிறுவர் பாடல் துறையில் சோமசன்மா, சி.வேலுசுவாமி, பொன்முடி, முரசு. நெடுமாறன் போன்றோர் பெரும்பங்களிப்பைச் செய்தனர். தொடக்க காலம் முதல் இத் துறையில் ஈடுபாடு கொண்டோர் தொகை 300ஐத் தொடுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விடுதலைக்குபின் இலக்கியத் துறையில் குறிப்பாகக் கவிதைத் துறையில் ஏற்பட்ட எழுச்சி அதற்கு நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்ட எழுச்சியின் தொடர்ச்சியாகும். இந்த எழுச்சி 1970களின் இறுதிவரை ஓங்கி நின்றது. இது இந் நாட்டுக் கவிதைத் துறையின் பொற்காலமாகும். மூத்த தலைமுறையினர், வருவாயற்ற எழுத்துத் துறையில் தொடர்ந்து பேரார்வத்துடன் ஈடுபடுவதினின்று ஒதுங்கத் தலைப்பட்டனர்; எப்போதாவது எழுதினர். அடுத்த தலைமுறையும் சற்று நம்பிக்கை தந்தது எனினும் பழைய வளம் தென்படவில்லை. காலப்போக்கில் கவிதைத்துறையில் சோர்வு தலைகாட்டத் தொடங்கியது. தொடர்ந்து புதியவர்கள் வந்துகொண்டுதான் இருக்கின்றனர் எனினும் பழைய பொற்காலத்தை மீட்க முடியவில்லை.

கவிதைத்துறை இப்பொழுது வளரவேண்டிய நிலையில் உள்ளது. புறத் தூண்டுதல்கள் இல்லாமலில்லை. அவரவர்தம் அகத்தூண்டுதலே, இதற்கு முதன்மைத் தேவையாய் உள்ளது.

கவிதைத் துறையில் புதுவடிங்கள்

புதிய வடிவங்கள்பற்றியும் இங்குக் குறிப்பிட வேண்டுவது முதன்மையாகும். வசனகவி, கவிவசனம், புதுக்கவிதை என இப் புது வரவைப் பலவாறாக வகைப்படுத்தவார் அப்துல் ரகுமான். இவற்றை உரைவீச்சு என்றும் ஒருதரப்பார் கூறுவர். ஆய்வுலகச் சொல்லாட்சிக்கேற்பப் 'புதுக்கவிதை' என்றே அவை இங்குக் குறிக்கப் பெறுகின்றன.

1964ஆம் ஆண்டிற்குப் பின் தோன்றிய இத் துறை, ஏடுகளின் துணையோடும் இயக்கங்களின் ஆதரவொடும் வளர்ந்துவருகிறது. எனினும்

அது எட்டிப் பிடிக்க வேண்டிய எல்லை இன்னும் மிகுந்த தொலையில் உள்ளது. ரெ.கார்த்திகேசு முதலாய ஆய்வாளர்களும் இதனைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

இத் துறையின் முன்னோடியாய் விளங்கியவர் சி.கமலநாதன். இத் துறை வளர்ச்சிக்குப் பெருந்துணை நின்றவர் எம்.ஏ.இளஞ்செல்வன். இதழ்கள்வழி இதன் வளர்ச்சியை ஊக்கியவர்களில் ஆதி. குமணன், எம்.துரைராஜ், பைரோஜி நாராயணன், இராஜகுமாரன். அக்கினி போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர். சீ.முத்துசாமி, கு.கிருஷ்ணன் போன்றோரும் குறிப்பிடத்தக்கவராவர்.

புதுக்கவிதை வடிவத்தால் கவர்ந்திழுக்கப்பெற்ற முதல் தலைமுறைக் கவிஞர்களைத் தொடர்ந்து துரை.முனியாண்டி, ஸ்ரீரஜினி, ஏ.எஸ். பிரான்சிஸ், மனோஹரன், கோ.முனியாண்டி, கலைஞன், கு.திருநாவுக்கரசு போன்ற இளங்கவிஞர்கள் இத் துறையில் கற்பனைப் பிம்பங்களுக்கு வார்த்தை வடிவம்தர இணைந்துகொண்டனர்.

இத் துறையைப் பரவலாக்க, (டாக்டர்) சண்முக சிவா அளித்து வரும் மருத்துவ மறுமொழிகளில் நிரம்பப் புதுக்கவிதை வரிகளை எடுத்துக் காட்டி வருகிறார். துளிப்பாவான ஐக்கூ வடிவ வளர்ச்சிக்கு ந.பச்சைபாலன் உயிரூட்டி வருகிறார். இத் துறை வளர்ச்சிக்கு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் அளப்பரிய பங்காற்றி வருகிறது. தொடக்க காலத்தில் இதன் வளர்ச்சியில் தனிநாட்டங் கொண்டு கருத்தரங்குகள் கூட்டிப் பேருக்கம் நல்கிய இயக்கம் 'நவீன இலக்கியச் சிந்தனை'யாகும்.

18. உரைநடை இலக்கியம்

இந் நாட்டில் உரைநடை இலக்கியம் 1910ஆம் ஆண்டிற்குப் பின்னரே தலைகாட்டத் தொடங்கியது. உரைநடை பெரிதும் இதழ் களிலேயே வளர்ந்துள்ளது. புதிய உரைநடை (புனைகதை) இலக்கியம் தொடர்கதைகளாகவே இதழ்களில் இடம்பெற்றுள்ளது.

1912ஆம் ஆண்டில் பினாங்கில் வெளிவந்த ஞானசூரியன் பத்திரிகையில் எஸ்.எல்.மாதவராவ் ஒரு தொடர்கதை எழுதியுள்ளார். 'இரத்தினமாலை அல்லது காணாமற்போன குமாரத்தி' என்பது அத் தொடர்கதையின் பெயர். எனினும், அத் தொடர்கதை பத்திரிகையின் உரிமை கைமாறியதால் முழுமை பெறாமல் போய்விட்டது.[2] இருப்பினும் இதுவே மலேசியாவின் முதல் உரைநடை (புனை கதை) இலக்கியப் படைப்பு முயற்சியாகும்.

இந் நாட்டில் சிறுகதை, புதின முயற்சிபற்றி இரா.தண்டாயுதம் கூறும்பொழுது "நாவல் இலக்கியம் தோன்றியபோதே (1917) தமிழில் சிறுகதையும் தோன்றத் தொடங்கிவிட்டது"[3] என்கிறார். புனைகதை இலக்கியம் இங்கு 1910களிலேயே வளரத் தொடங்கிவிட்டதெனினும் தொடக்ககாலக் கதைகளை எழுதியவர்கள் தமிழகத்திலிருந்தும் இலங்கையிலிருந்தும் இங்குப் புலம்பெயர்ந்து வந்தவர்கள். அதனால் அந்தந்த நாட்டுச் சூழல்களுக்கேற்ப அவர்கள் எழுத்துகள் அமைந்திருந்தன. (1946 வரை)

சிறுகதை

கவிதைத் துறையைப் போலவே இங்கு நன்கு வளர்ந்த துறை சிறுகதைத்துறையாகும். விடுதலைக்கு முன்பே தொடங்கி அது தடையின்றி வளர்ந்து வருகிறது.

கருப்பொருள்

மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் காலந்தோறும் அவ்வக் காலத்தையொட்டிய கருப்பொருள் வெளிப்பட்டே வந்துள்ளது. இது குறித்து ரெ.கார்த்திகேசு இங்ஙனம் குறிப்பிடுகிறார்:

"1950களில் எழுதிய எவரும் திராவிடக் கழகங்களின் தமிழுணர்வு, சமுதாயச் சீர்திருத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்படாமல் (தாக்குறாமல்) இருந்திருக்க முடியாது. மேலும், மலேசியாவில் தமிழுணர்வின் ஊற்றுக் கண்ணாக இருந்த கோ.சாரங்கபாணி கழகச் சார்புடையவராக, அதே கொள்கை கொண்டவராகவே இருந்தார். பார்க்கப் போனால் மலேசியத் தமிழ் எழுத்தாளரிடையே இயக்கம் சார்ந்த கோட்பாட்டுப் பிடிப்பு என்ற ஒன்று இந்தக் காலத்தில் மட்டுமே இருந்திருக்கிறது. இதன் பின்னர் எழுத்தாளர் அவரவர் ஆளுகைக்குட்பட்டதைச் சுயமாக எழுத ஆரம்பித்தனர்."[4]

இஃது ஒரு பொதுவான கண்ணோட்டம். இன்னும் விரிவாகப் பார்த்தால் சிறுகதைகளில் சமுதாய அவலங்கள், குடும்பச் சிக்கல்கள், மூவின வாழ்வுச் சூழல்கள், நவீனப் போக்குகள் போன்ற பல கருப்பொருள்களும் உள்ளடங்கியுள்ளன.

சப்பானியர்கால அவலப் பதிவுகளைச் சி.வடிவேலு, சா.ஆ.அன்பானந்தன் போன்றோர் தம் கதைகளில் சுட்டிக் காட்டியுள்ளனர். இந் நாட்டிற்குத் தொடக்க காலத்தில் புலம்பெயர்ந்து வந்தோர் பற்றிய கதைகளைச் சீ.கமலநாதன் முதலாயோர் வடித்துள்ளனர். பெண்ணியச் சிந்தனைகள் கொண்ட கதைகளைப் பாவை, சு.கமலம். எஸ்.பி.பாமா, கோமகள், நிர்மலா இராகவன் போன்றோர் வரைந்துள்ளனர்.

பொதுவான சமுதாயச் சிந்தனைகளைக் கருப்பொருளாய்க் கொண்டு வடித்தோரில் வே.இராஜேசுவரி, கல்யாணி மணியம், ந.மகேசுவரி, நிர்மலா பெருமாள் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

குடும்பச் சிக்கல்கள் கருவாய் அமைந்த கதைகளைப் பின்னியவர்களில் ந.வரதராசன், சி.சொக்கலிங்கம் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

மூடநம்பிக்கைளைச் சாடி, சீர்திருத்த உணர்வுகளைக் கதைகளில் பரவ விட்டோரில் ஆலிவர் குணசேகரன், மா.செ. மாயதேவன் நா.ஆ.செங்குட்டுவன் போன்றோரைச் சொல்லலாம்.

நவீனத்துவப் போக்கில் வலுவான கதைப்பின்னல்களுடன் எழுதியும், பலரை எழுதுவித்தும் புதுவழி காட்டியவர்களில் அரு.சு.ஜீவானந்தன், சாமிமூர்த்தி, சண்முக சிவா ஆகியோருக்கு முதன்மையான இடமுண்டு.

மூவினச் சமூகச் சூழலைக் கதைகளில் பதியச் செய்தவர்களுள் மா.இராமையா, ஆர்.சண்முகம், சை.பீர்முகம்மது, ஐ.இளவழகு, மு.அன்புச் செல்வன், மைதீ.சுல்தான் போன்றவர்களுக்குச் சிறப்பான இடமுண்டு.

சிறந்த சிறுகதைகளைப் படைப்பதோடு ஆய்வுகளும் நடத்தித் தமிழகத்திலும் பெயர் பதித்துள்ள ரெ.கார்த்திகேசு, சை.பீர்முகம்மது ஆகியோர் இன்று சிறுகதை உலகின் முன்னோடிகளில் குறிப்பிடத் தக்கோராய் விளங்குகின்றனர்.

இவர்களைப் போல் எம்.ஏ.இளஞ்செல்வன், பூ.அருணாசலம், க.கிருட்ஷ்ணசாமி, சீ.முத்துசாமி, ஜனகா சுந்தரம், ஆரியமாலா, கமலாட்சி ஆறுமுகம், பத்மாதேவி, சரஸ்வதி அரிகிருஷ்ணன், உம்மு சால்மா, இக்பால், சு.கமலா போன்ற நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் மலேசியச் சிறுகதைத் துறையை வளப்படுத்தியோராவர். மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகளைத் தொகுத்துச் சை. பீர் முகம்மது வெளியிட்டுள்ள `வேரும் விழுதுகளும்` என்னும் தலைப்புக் கொண்ட இரு தொகுதிகள், சிறுகதை உலகின் உண்மைத் தன்மையை எடுத்துரைக்கும் ஆவணங்களாகும்.

எதிர்காலம்

மலேசியத் தமிழ்ச் சிறுகதையின் எதிர்காலம் குறித்து ரெ.கார்த்திகேசு கூறியுள்ள கருத்து ஈண்டு எடுத்துக் காட்டத்தக்கதாகும்.

“ஊக்குவிப்புகள் பல இருந்தும் மலேசியத் தமிழ்ப் படைப்புலகத்தில் இளைஞர்களான புதியவர்களின் ஈடுபாடு மிகக் குறைவாக இருப்பது கவலையளிக்கக் கூடிய செய்தி. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் அக்கறை கொண்ட சில தனிப்பட்டவர்களும், புத்திலக்கிய முன்னேற் றத்திற்கு உதவவும் வழிகாட்டவும் தயாராக இருந்தாலும் அந்த வழிகளைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் எழுத்துத் திறனை வளர்த்துக் கொள்வோர் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. மலேசியத் தமிழ் உலகம் சுரத்தோடு இருப்பதுபோல் ஒரு தோற்றம் இருப்பதற்கு முக்கியக் காரணம் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் அதை ஒரு வெறியோடு பற்றிக் கொண்டவர்கள் இன்னும் அந்த வெறிதணியாமல் இருக்கிறார்கள் என்பதுதான்.”[4]

இங்ஙனம் கருத்துரைக்கும் கார்த்திகேசு பல்கலைக்கழக, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் இத் துறைக்கு வந்து எழுத்துத் துறையின் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்று விழைகிறார்.

19. புதின வளர்ச்சி

ஆங்கிலேயர் தொடர்பால் தமிழுக்குக் கிடைத்த மற்றோர் இலக்கிய வடிவம் புதினம் (நாவல்). பா வளர்ச்சி செழித்திருந்த காலத்தில் அந் நடையிலான பாவியங்கள் மலர்ந்தன. உரைநடை செழித்து வளர்ந்துள்ள இக் காலத்தில் அவ் விடத்தைப் புதினங்கள் பிடித்துக்கொண்டன. நீண்ட பாவியங்கள் எழுத புலமைமிக்கோர் இன்றும் உளர் எனினும், அவற்றை நாடுவோர் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகவே உள்ளது. புதினங்களைப் படிப்போர் தொகையோ மிகுந்துள்ளது.

மலேசியாவில் 1887ஆம் ஆண்டு கவிதை இலக்கியம் தோன்றி 30 ஆண்டுகள் கடந்த பின்னரே புதின இலக்கியம் வேர்விடத் தொடங் கியது. அத் தொடக்கமும் தமிழகத்திலிருந்தும் இலங்கையிலிருந்தும் புலம்பெயர்ந்து இங்கு வந்தோராலேயே ஏற்பட்டது.

இந் நாட்டில் மற்ற இலக்கியங்கள் தோன்றிய சூழலிலேயே புதின இலக்கியமும் தோன்றியது. "மலேசியத் தமிழ்ச் சமுதாய அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகளின் இலக்கியப்பணி, தமிழகம் விளைவித்த தாக்கங்கள்"[5] ஆகியவையே இப் புதின இலக்கியம் வளர்ந்தமைக்குக் காரணங்களாகும் என்பர் ஆய்வாளர்.

மற்ற இலக்கிய வடிவங்களைக் கால வகைப்படுத்திப் பார்ப்பது போலவே இதன் வளர்ச்சிப்படிகளும் கண்ணோட்டமிடப்பெறுகின்றன. போருக்கு முந்திய புதின வளர்ச்சியைப் பார்க்கும்பொழுது படைப்பில் அழுத்தமான ஒரு நிலையைக் காண முடியவில்லை. அது தொடக்கநிலை ஆதலாலும் புலம்பெயர்ந்து வந்த மூலத் தாயகச் சூழலையே பெரிதும் எண்ணி இங்கு இலக்கியம் படைத்ததாலும் மலேசிய இலச்சினைகளை அவற்றில் துல்லியமாய்க் காண முடியாதது வியப்பில்லை.

நெருக்கடிகள் பல கொண்ட அச் சூழலிலும் இருபதுக்கு மேற்பட்ட புதினங்கள் வரை வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். தொடக்க காலத்தில் க.வெங்கடரத்தினம், புலோலி க. சுப்பிரமணியம் போன்றோர் இங்குப் புதின இலக்கிய வளர்ச்சிக்கு அடித்தளமிட்டனர்.

போருக்குப் பிந்திய நிலை

போருக்குப் பிந்திய காலத்தின் முதல் ஐந்தாண்டுகள்வரை மலர்ந்த புதினங்களில்கூட நூறு விழுக்காடு மலேசியச் சூழல் ஆழமாகப் பதிய வில்லை. தோட்டப்புறச் சமுதாயச் சூழலின் முகம் தெரியவில்லை. 1950ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் முழுமையான மலேசியப் பின்னணியைப் புதினங் களில் காணமுடிகிறது.[6] விடுதலை உணர்வு பெருகப் பெருகப் புதினங் களிலும் முழுமையான மண்ணின் மணம் பரவத் தொடங்கியது. இக் கால கட்டத்தில் எழுதியவர்களில் மா.இராமையா, மா.செ. மாயதேவன், மெ. அறிவானந்தன் போன்றோர் புதின வளர்ச்சி தளர்ந்து போகாமல் வளர்ச்சி தொடர உதவினர்.

விடுதலைக்குப்பின்

நாட்டு விடுதலைக்குப்பின் மற்றைய இலக்கிய வகைகள் மறுமலர்ச்சி பெற்றதுபோல் புதின இலக்கியம் புதிய திசை நோக்கி வளரத்தொடங்கிற்று. மலேசிய வாழ்க்கை முறைகள் புதினங்களில் படியத் தொடங்கின. இதழ்கள் முதலாயன ஊட்டிய ஊக்கங்கள் வளர்ச்சிக்கு உதவின. இந் நாட்டில் பிறந்து வளர்ந்து கல்விகற்று எழுத்துலகிற்கு வந்த எழுத்தாளர்களால் உண்மை நிலைகளை உணர்ந்து எழுத முடிந்தது.

தமிழ் இலக்கியம் விடுதலை உணர்வொடு வளரத்தொடங்கிய இக் காலகட்டத்தில் எழுதியவர்களில், மா. இராமையா, எம். குமாரன், ஐ.இளவழகு, காரைக்கிழார், நா.ஆ. செங்குட்டுவன், சா.ஆ. அன்பானந்தன், கொம்பன், மு.சு. குருசாமி, எம்.ஏ. இளஞ்செல்வன், எம். துரைராஜ், ப. சந்திரகாந்தம், சை. பீர்முகம்மது, ரெ. கார்த்திகேசு, மு. அன்புச்செல்வன், அ.மு. அன்னமேரி, அ. கந்தன், சி. சொக்கலிங்கம், ந. மகேசுவரி, எல். முத்து, ஆதி.குமணன், இராசகுமாரன், அருண் அப்பாதுரை, சீ. முத்துசாமி, நிர்மலா பெருமாள் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

மலேசியாவில் 1917 தொடங்கி 2002 வரை 120-க்கு மேற்பட்ட புதினங்கள் அச்சேறி வெளிப்போந்துள்ளன. இங்கு வெளிவந்துள்ள இலக்கிய வகைகளில் கவிதை, சிறுகதை ஆகியன வளர்ந்த அளவு புதின இலக்கியம் வளரவில்லை.

புதினங்களின் தன்மைகள்

மலேசியத் தமிழ்ப் புதினங்களை விரிவாக ஆய்வுசெய்த கிருஷ்ணன் மணியம் கூறியுள்ள கருத்து ஈண்டு எண்ணிப் பார்க்கத் தக்கது. "மலேசியத்

தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் சம்பவக் கோவைகளைக்கொண்ட ஒரு நேர்கோட்டு வாழ்க்கையைக் காட்டும் சம்பவங்களாகத்தான் பெரும்பாலும் அமைகின்றன. அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களை மையமாகக் கொண்டு வடிக்கப்பட்ட நாவல்களாகத்தான் அமைகின்றன. தோட்டப்புற வாழ்வு, நகர்ப்புற வாழ்வு இந் நாவல்களில் மையக் கருக்களாக உருக்கொண்டு அதன் மூலம் போராட்டங்களை உருவாக்கிக் கதையை வளர்த்துச் செல்லும் பாங்கினைத்தான் பெரும்பாலான நாவல்கள் கொண்டுள்ளன."[7]

கவிதையைப்போல, சிறுகதையைப்போல விரைந்து எழுதி முடிக்கும் தன்மை கொண்டதன்று புதினம். அது அகன்ற, ஆழ்ந்த பரப்புடையது. எடுத்துக்கொண்ட கருச் சிதையாமல் அது முழுமையான வடிவம் பெற்று வாழ்வுபெறக் கடுமையாக உழைத்தல் வேண்டும். அதற்குக் காலமும் சூழலும் கைகொடுக்க வேண்டும். பரபரப்புமிக்க மிக விரைந்து நடைபோடும் காலச்சூழல் இங்குப் பலர் அதில் ஈடுபடத் தடையாகவுள.

மேலும், எழுத்துக்கு ஊதியம் என்பது இங்குக் கானல் நீரே. நூலாக வெளியிட்டாலும் விற்றுத் தீர்க்கமுடியாத ஒரு நிலை. இதழ்களில் வரும் தொடர்கதைகளுக்கு உழக்குப்பால் அளவு ஊதியம் வருமெனினும் எல்லாருக்கும் அவ் வாய்ப்பு அமைவதில்லை. சிந்தும் உழைப்பு, காட்டில் காயும் நிலவாய், விழலுக்கு இறைக்கும் நீராய்ப் பயனற்றுப்போகும் நிலையில் அத் துறையில் ஈடுபடுவோர் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணத்தக்க நிலையிலேயே உள்ளது.

20. கட்டுரை

எழுத்து வடிவங்களிலேயே இன்று மிக முதன்மையும் பயனும்மிக்க வடிவமாய்த் திகழ்வது கட்டுரையாகும். கருத்துகளைப் பளிச்சென வெளிபடுத்தவும் அறிவியல் உண்மைகளைத் தெள்ளத்தெளிவாக விளக்கவும் ஆய்வு முடிவுகளை வரையறுத்துத் துல்லியமாக எடுத்துரைக்கவும் கட்டுரை ஓர் அருமையான வடிவமாய் விளங்குகிறது. சங்க காலத்தைக் கவிதைக் காலம் என்பதுபோல் இக் காலத்தை உரைநடைக் காலம் எனலாம்.

மலேசிய இலக்கியத்துள் அவ் வடிவம் இதழ்கள் தோன்றிய காலத்திலேயே அரும்பியிருக்க வேண்டுமெனினும் நூலுருப்பெற்று வெளிவந்ததற்கான சான்று எதுவுமில்லை. 1920-க்குப் பின்னரே கட்டுரை நூல் வெளிவந்துள்ளது. மா.இராமையா தம் தமிழ்இலக்கிய வரலாற்றில் தொகுத்தளித்துள்ள கட்டுரை நூற்பட்டியலில், டி.கே. கந்தையாவின் 'தமிழின் பெருமை' (1920) தொடங்கி, தி.சு. சண்முகத்தின் 'வீரகவி பாரதியார்' (1945)வரை 33 கட்டுரை நூல்கள் வந்ததாய்க் குறிப்பிட்டுள்ளார். இக் கட்டுரை நூல்களில் சி.வீ. குப்புசாமி முதலாய சிலரின் நூல்கள் மலாயா / மலேசியாபற்றிய கருத்துகளையும் சீர்திருத்தச் சிந்தனை களையும் கொண்டதாய் விளங்குகின்றன. இங்குப் போர் நடந்த காலத்தில் தமிழில் பல ஏடுகள் வெளிவந்தன. தமிழ்க்கொடி முதலாய சில ஏடுகள் தரத்தில் உயர்ந்த ஏடுகளாய் விளங்கின. அவற்றில் நல்ல கட்டுரைகள் வெளிவந்திருக்கலாம். ஆனால், அவை நூலுருப்பெறும் வாய்ப்பை இழந்தன. இக் காலகட்டத்திலும் இதற்கடுத்த காலகட்டத்திலும் தமிழில் புலமைமிக்க ஆசிரியர் சிலர் இதழாசிரியர்களாய் அமர்ந்து கட்டுரைத் துறைக்கு உயிர் கொடுத்துள்ளனர்.

போர்க்காலம் முடிந்து மீண்டும் ஏற்பட்ட வெள்ளையர் ஆட்சியில் நாடு விடுதலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இக் கால கட்டத்தில் முதல் ஐந்தாண்டுகள் பழைய (மூலத் தாயகச்) சிந்தனைகளொடு வாழ்வளிக்கும் நாட்டில் காலூன்றி நிலைத்துவிட வேண்டுமென்ற எண்ணங்களும் கலந்து ஒரு குழப்பநிலையை ஏற்படுத்திய காலமாகும்.

இந்த நிலைமைகளைப் புரிந்துகொள்ளத்தக்க கட்டுரைகள் வெளி வந்திருக்கலாம். கோ. சாரங்கபாணி, சி. வீ. குப்புசாமி போன்றோர் இக் காலகட்டத்தில் குறிப்பிடத்தக்கோராவர். இதழ் ஆசிரியர்களாய் விளங்கிய அவர்தம் எழுத்துகள் கட்டுரைவடிவில் வெளிவந்தன. தமிழ் மக்கள் இந்த மண்ணைத் தாயகமாய் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கைப்பெற இவர்களைப் போன்றோர் எழுத்துகளும் பேச்சுகளும் பெரும்பங்காற்றின. ஆனால், அக் கட்டுரைச் செல்வங்கள் நூலாகிப் பின்தலைமுறையினருக்கு எட்டாமல் போயின.

1950ஆம் ஆண்டிற்குப்பின் ஏற்பட்ட புத்தெழுச்சிக்குக் கவிதைகளாடு கட்டுரைகளும் பெரும்பங்காற்றியுள்ளன. தமிழ்முரசு, தமிழ்நேசன் போன்ற நாளிதழ்களும், சங்கமணி முதலாய கிழமையிதழ்களும் தகுதி வாய்ந்த எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளை வெளியிட்டன. ஆனால் அவை நூலாக்கம் பெறாமல் இதழ்களிலேயே முடங்கிவிட்டதால் கட்டுரை வளர்ச்சிபற்றித் துல்லியமாக மதிப்பிடமுடியவில்லை. "மலேசியத் தமிழ் ஏடுகள் வாரந்தோறும் ஞாயிற்றுப் பதிப்பில் வெளியிட்டுக்கொண்டிருக்கும் பலவகை இலக்கிய வகைகளுள் 1956-1966 வரை ஐயாயிரம் கட்டுரைகளையாவது வெளியிட்டிருக்கும்"[8] என்னும் முல்லை இராமையாவின் ஆய்வுக்குறிப்பு ஈண்டு நினைவுகூரத்தக்கது.

ஏடுகள் நடத்திய கட்டுரைப் போட்டிகளால், தமிழர் திருநாள் விழாக்களில் நாடெங்கும் நடந்த கட்டுரைப் போட்டிகள், மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றால் கட்டுரை வளர்ந்தே வந்தது. ஆனால், அவை தொகுக்கப்பெற்று நூலாக்கம் பெறவில்லை. வளமான கட்டுரைகள் எழுதிய முன்னோர் பலரின் கல்வித் தகுதியைவிட இப்போதைய இளைஞர் பெற்றுள்ள கல்வித்தகுதி உயர்ந்ததாகவே உள்ளது.

முன்பெல்லாம் பள்ளிகளில் தமிழ்ப்பாடம் வரையறுக்கப்பெற்று உயரிய பாடத்திட்ட அடிப்படையில் கற்பிக்கப்பெறவில்லை. அதுவும் தொடக்கப்பள்ளியொடு தமிழ்க்கல்வி தொடராத ஒரு முடக்கம் இருந்தது. இன்று (1983 முதல்) உலகத் தரம் வாய்ந்த ஒரு தமிழ்க் கலைத்திட்டம் அமைந்து, மாணவர்கள் முறையான ஆழமான கல்வி பெற வாய்ப்புள்ளது.[9] பல்கலை வரையில் தமிழைத் தொடர்ந்து பயில இடமுள்ளது. அடைவு நிலைத் தேர்வுக்காகவும் 5,6ஆம் படிவத் தேர்வுகளுக்காகவும் மாணவர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பெறுகின்றனர். ஆனால், முன்பு எழுதியோரின் கட்டுரை களோடு இப்பொழுது எழுதுபவர்களின் கட்டுரைகளை ஒப்பிடும்போது

மகிழ்ச்சியடைய முடியவில்லை. இளையோர் பள்ளிப் படிப்பொடு புள்ளி வைத்துவிடுகின்றனரோ என்று எண்ணவேண்டியுள்ளது.

கட்டுரைத் துறையில் நாட்டம்கொண்டு ஆழக்கற்று நெறி முறைகளைத் தெரிந்து எழுதுவோர் சிலர் இன்று நல்ல கட்டுரை களைப் படைத்து வருகின்றனர். பட்டம் பெறாவிடினும் பழக்கம், தொடர் பயிற்சியின் காரணமாக ஆய்வரங்குகளில் நல்ல உயர்ந்த கட்டுரைகளைச் சிலர் படைக்கின்றனர். ஆனால் அவற்றைத் தொகுத்து நூலாக்குவதில்லை. அதனால் கட்டுரைத்துறை வளம்பெறாத ஒரு துறையாகவே தோற்றம்தந்து வருகிறது. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிறுகதைகள்குறித்து இங்கு மாதந்தொறும் நடத்திவந்த ஆய்வரங்கக் கட்டுரைகள் தொகுக்கப் பெற்று நூல்களாக்கப்பெற்றிருந்தால் இன்று எத்தனையோ நூல்களைப் பெற்றிருக்கலாம். இதழ்களில் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகள், வானொலியில் தொடர்ச்சியாக நிகழ்த்திய உரைகள் எல்லாம் நூலாக்கம் பெற்றிருந்தால் சிறுகதைத் துறையைப்போல கட்டுரைத் துறையிலும் நிரம்ப நூல்கள் வெளிவந்திருக்கும். முருகு. சுப்பிரமணியன், வே. விவேகானந்தன் போன்ற சிலரே தம் கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து நூலாக்கியுள்ளனர்.

கட்டுரை நூல்கள் மிகுதியாய் வெளிவராமைக்கு அவற்றிற்கு விற்பனை வாய்ப்பு மிகக் குறைவாக இருப்பதும் ஒரு காரணமாகும். சிறுகதை, கவிதை, புதினம்போல் கட்டுரை நூல்கள் விற்பனையாவதில்லை. இதழ்களில் வரும் கட்டுரைகளை ஆர்வத்தொடு படிக்க முந்துவோர் கூடக் கட்டுரை நூல்களை நாடிப்போய் வாங்குவதில் முனைப்புக் காட்டுவதில்லை.

பயிற்சியின்மை

இன்று பள்ளிகளில் கட்டுரை எழுத நன்கு பயிற்றுவிக்கப்பெறு கின்றது எனினும், அதற்கு அடுத்தகட்டப் பயிற்சிபெற வாய்ப்பில்லாததும் இங்கு எண்ணிப்பார்க்கத் தக்கதாகும். கவிதை எழுதுவதற்கான பயிற்சி வழங்கப்படுவதுபோல், சிறுகதைப் பட்டறைகள் நடத்தப்படுவதைப்போல் கட்டுரை எழுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. முன்பு கந்தசாமி வாத்தியார் (சுப. நாராயணன்) முதலாய சிலர் கட்டுரைப் பயிற்சியும் வழங்கினர். இப்பொழுது எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புகள் பிற வடிவங்கள் எழுதப் பயிற்சியளிப்பதுபோல் கட்டுரை எழுதவும் பயிற்சி யளித்தால் புதிய தலைமுறையினர் நல்ல கட்டுரை எழுதும் ஆற்றலைப் பெறுவர். இப்பொழுது இலக்கிய ஆய்வுகள் நிரம்ப நடைபெறுகின்றன.

கருத்தரங்குகள் வட்டார அளவிலும் தேசிய அளவிலும் நடைபெறுகின்றன; உலக அளவில் மாநாடுகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அங்கு முறையான ஆய்வுக் கட்டுரைகளே வரவேற்கப்பெறுகின்றன. அதனால் ஆய்வு முறைப்படி கட்டுரை எழுதுவோர் எண்ணிக்கை உயர வேண்டும்.

கட்டுரைத் துறையை வளர்க்கப் பலவழிகள் உள. பல்கலைக் கழகத்தில், அமைப்புகளின் ஏற்பாட்டில் முறையான பட்டறைகள் நடத்தலாம். இதழ்கள் தரமான கட்டுரைகளைத் தொகுத்து அவ்வப்போது வெளியிடலாம். போட்டிகள் நடத்தி விலையுயர்ந்த பரிசுகள் தருவோர் அப் பரிசு பெறும் கட்டுரைகளை நூலாக்கி வெளியிடலாம். கருத்தரங்கு கூட்டுவோர் அங்குப் படிக்கப்பெறும் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கலாம் (சில அங்ஙனம் வந்துள்ளன).

கவிதை, சிறுகதை, புதினம் போன்ற துறைகளைவிட வளர்ச்சி குறைந்ததாகக் கட்டுரைத் துறை தோன்றுகிறது. காரணம் அரும் மணி களாய் இதழ்களில் முடங்கிக் கிடக்கும் கட்டுரைகள் நூலாக்கம் பெறவில்லை. கட்டுரைத்துறை போருக்கு முந்தியகாலத்தில் அரும்பி, போருக்குப் பிந்திய (விடுதலைக்கு முந்திய) காலத்தில் வளரத் தொடங்கி, விடுதலைக்குப்பின் மேம்படத் தொடங்கியது.

பழைய கட்டுரைகளைத் தொகுத்து வழங்குவதிலும், புதிய கட்டுரை நூல்களை உருவாக்குவதிலும் கருத்துச் செலுத்தினால் அத் துறை மற்றத் துறைகளுக்கிணையாக ஓங்கி உயரும் என்பதில் ஐயமில்லை. பல்வேறு நெருக்கடிகளுக்கிடையேயும் அத் துறையிலும் சமயம், சமுதாயம், ஆன்மிகம், வாழ்க்கை வரலாறு, இனம், மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல், தொழில், பொருளாதாரம் சுற்றுலா போன்ற துறைகள் குறித்த கட்டுரைகள் அடங்கிய நூல்கள் இதுவரை 210-க்கு மேல் வெளிவந்துள்ளன.

வளர்ச்சிக்குத் துணை நின்றோர்

கட்டுரைத்துறையை முன்னின்று வளர்த்தோர் பட்டியல் நீளமானது. தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்த மூத்த தலைமுறையினர், பல்கலையில் பணிமேற்கொண்டு வந்தோர், இங்கேயே பிறந்து வளர்ந்து கல்வி கற்று எழுத்துத் துறைக்கு வந்தோர் எனப் பலர் சேர்ந்து இத் துறையை வளர்த்தனர். அவர்களுள் சிலர் பெயர்கள் மட்டும் ஈண்டுக் குறிக்கப்பெறுகின்றன:

மலேசியத் தமிழ்க் கட்டுரைத் துறையை வளப்படுத்தியோர்

1. (சுவாமி) இராமதாசர்
2. கா. இராமநாதன்
3. (சுவாமி) சத்தியானந்தா
4. சுப. நாராயணன்
5. சி.வீ. குப்புசாமி
6. கா.ப. சாமி
7. மா.செ. மாயதேவன்
8. முத்து இராசாக்கண்ணனார்
9. கா.பொ. இரத்தினம்
10. ப. அருணாசலம்
11. ச. சிங்காரவேலு
12. ஆ. சோதிநாதன்
13. இரா. தண்டாயுதபாணி
14. இலக்கு மீனாட்சி சுந்தரம்
15. முரு.பழ. இரத்தினம்
16. எஸ்.ஓ.கே. உபைதுல்லா
17. கா. அண்ணாமலை
18. எம். துரைராஜ்
19. இர.ந. வீரப்பன்
20. மா. இராமையா
21. அ. இராமநாதன்
22. ரெ. இராமசாமி
23. கா. கலியபெருமாள்
24. டி.வி.ஆர். இராகவன் (பிள்ளை)
25. க. சோனைமுத்து
26. கு.சா. பெருமாள்
27. வீ.கே. சுப்பிரமணியம்
28. ஐ. இளவரசு
29. செ. குணசேகர்
30. சி. இராமசாமி
31. சா.ஆ. அன்பானந்தன்
32. பூ. அருணாசலம்
33. சை. பீர்முகம்மது
34. பெரு.ஆ. தமிழ்மணி
35. மு. அப்துல்லத்தீன்
36. மு. மணியன்பு
37. அ.பு. திருமாலன்
38. வி. செல்வராஜ்
39. வில்வமலர்
40. ப. சந்திரகாந்தம்
41. அ. மணிசேகரன்
42. ஆர்.பி.எஸ். மணியம்
43. ரெ. சண்முகம்
44. ஜி.பி. லாரன்ஸ்
45. ஆதி. குமணன்
46. கு. வரதராசு
47. எஸ்.எஸ். முகம்மது இத்ரிஸ்
48. ஆறு. நாகப்பன்
49. கா. இராசகிள்ளி
50. கே.ஏ. குணா
51. ரெ. கார்த்திகேசு
52. இராஜகுமாரன்
53. முல்லை இராமையா
54. வி.கு. சந்திர சேகரன்
55. மு.இராசசேகரன்
56. வே. சபாபதி
57. கிருஷ்ணன் மணியன்
58. எஸ். குமரன்
59. பரதன்
60. முரசு. நெடுமாறன்

இவர்களைப்போல் இன்னும் பலர் இத் துறையை வளர்த்தனர்.

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அரும்பிப் பல நெருக்கடிகளைக் கடந்து வளர்ந்துவரும் கட்டுரைகளின் போக்கு, கடந்த இருபதாண்டுகளில் எங்ஙனம் உள்ளதென்பதனை முல்லை இராமையா இங்ஙனம் கூறுகிறார்.

“முந்தைய காலகட்டங்களைக் காட்டிலும் கடந்த இருபதாண்டு களில் கட்டுரைத் துறை அதிக வளர்ச்சி கண்டுள்ளது. மக்களைப்போய்ச் சேரக்கூடிய பலதரப்பட்ட விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன. இலக்கிய

உலகில் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாவிட்டாலும் அவை ஆரவாரமின்றி அழுத்தமான ஓர் இடத்தைப் பெற்றிருக்கின்றன"[10]. இங்ஙனம் கூறும் அவர், கணினித் தொழில்நுட்ப மேம்பாடு, படிக்கும் பழக்கத்தை மேலும் குறைத்து வளர்ச்சிக்குத் தடையாகிவிடுமோ என்றும் ஐயுறுகிறார்.

தொழில் நுட்ப வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சிபற்றிச் சொல்ல, வழிகாட்ட நூல்கள் தேவையே. தாள்களில் நூல் அச்சிடும் போக்கு மாறினாலும் மின்நூல்கள் வரவே செய்யும். படிக்கும் பழக்கத்தைச் சமுதாயத்தில் மேம்படச் செய்தால் இலக்கிய வளர்ச்சி தடைபடாது என்று நம்பலாம்.

சான்றெண் விளக்கம்

1. மலாயாப் பல்கலைக்கழகம், மலேசியாவில் மரபு கவிதைகள், மலேசியத் தமிழ்க் கவிதைக் கருத்தரங்க மலர், ப.31
2. சபாபதி, வே.மலேசியத் தமிழ் இலக்கியம் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், செல்வம் பதிப்பகம்,(2004) சென்னை
3. 80, 9-4-1978-ல் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை நடத்திய சிறுகதைக் கருத்தரங்கில், மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் சமுதாயம் என்ற தலைப்பில் படிக்கப் பெற்ற கட்டுரை
4. கார்த்திகேசு, ரெ. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மலேசியத் தமிழர் இலக்கியம் 2004 செல்வம் பதிப்பகம் (2004) சென்னை, ப.35
5. மேலது, ப.47
6. வே. சபாபதி, மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்க மலர், மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல்துறை (1992) கோலாலம்பூர்
7. கிருஷ்ணன் மணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முதலாவது தமிழ் இலக்கிய மாநாடு (2005), ஆய்வுக்கட்டுரை. மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர்
8. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், மலேசியத் தமிழ் இலக்கியம், 2004 (முல்லை ராமையாவின் கட்டுரை), மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 2005. ப. 68
9. மேலது, ப.74
10. மேலது, ப.74

21. எதிர்காலத்தை நோக்கி...

மலேசியத் தமிழரும் தமிழும் என்னும் இந் நூலின் முதல் பகுதியில், தமிழர் புலப்பெயர்ச்சி, அது தொடர்பான துன்பங்கள், தோட்டப்புற வாழ்வின் அவலம் போன்றவை கண்ணோட்டமிடப்பட்டன. இரண்டாம் பகுதியில் தாய்மொழி, கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு போன்றவை ஆராயப்பெற்றன. மேற்படி இரு பகுதிகளிலும் கண்ட தரவுகளின் அடிப் படையில் எதிர்காலம் எப்படி அமையலாம் என்பது குறித்து இப் பகுதியில் சொல்லப்பெறுகிறது.

முன்னைய நிலை

காடழித்து நாடு கண்ட இந்தியர் - தமிழர் இந் நாட்டு உருவாக்கத் திற்குக் கொட்டிய உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறவில்லை. சில முதன்மையான நிகழ்வுகளின்போது தமிழர் ஈகம் தலைவர்களால் நினைவுகூரத் தவறுவதில்லை. மற்ற இனத்தவரோடு தமிழரும் முன்னேற வேண்டுமென்று அரசு தன் விழைவை வெளிப்படுத்தாமலும் இருப்பதில்லை. ஆனால், பின்தங்கிவிட்ட இனமென்னும் வகையில் சலுகை ஏதும் காட்டுவதில்லை.

“எவரும் முன்னேறத் தடையில்லை. அஃது அவரவர் முயற்சியைப் பொறுத்தது” என்று அரசுஇடையிடையே அறிவித்தே வருகிறது. நீண்ட கோரிக்கைகளுக்குப்பின் வகுக்கப்படும் திட்டங்களும் சமுதாயத்துக்கு எட்டாமல் போய்விடுகின்றன. போராட்ட மனமின்மையும், காட்டப்படும் ஒன்று ஊட்டப்படுமென்று வாளாவிருப்பதும், விழிப்புணர்வின்மையும் வாய்ப்புகள் கைநழுவிப்போக ஒரு காரணமாய் இருக்கலாம். முடவனிடம் கொம்புத்தேன் கூட்டைக் காட்டி, “வேண்டும் வரை உறிஞ்சிக் குடித்துக் கொள்” என்றால் முடியுமா என்பதனையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். வகுக்கப்படும் திட்டங்கள். அளிக்கப்படும் சலுகைகள் முழுமையாய்ச் சமுதாயத்தை எட்டாமைக்குச் சாதாரண மக்களே முழுக்காரணமென்று அடித்துக் கூறிவிட முடியாது. மக்களை வழிநடத்துவோர்க்கும் அதனில் பெரும் பொறுப்புண்டு.

முதலாம் பகுதியில் கண்டதுபோல், மலாய்க்காரர்களுக்கு மண்ணின் மைந்தர் (Bumiputra) என்னும் வகையில் அரசு எல்லா வகைகளிலும் சலுகையளித்து வருகிறது. சீனர் செல்வச் சிறப்புக் கொண்டவர்கள்; நாட்டின் பொருளாதாரத்தில் பெரும்பகுதியைக் கையில் வைத்திருப்ப வர்கள். இவ்விரு உயர்ந்த கோபுரங்களுக்கிடையே சிறு குடில் எழுப்பும் தன்மை போன்றதாகத் தமிழர் பொருளாதார முயற்சிகள் உள்ளன.

இடைக்கால நிலை

1960ஆம் ஆண்டிற்குப்பின் தொடங்கிய கூட்டுறவு நடவடிக்கை களும், முதலீட்டு முயற்சிகளும் திட்டமிட்ட எல்லைக் கோட்டைத் தொடவில்லை. ஒரு சிலவற்றைத் தவிர மற்றவை தமிழரின் பொருளாதார வளர்ச்சிக்கு, தனிமனித முன்னேற்றத்திற்கு உறுதியான அடித்தளம் அமைத்துத்தரவில்லை; எதிரிடையான விளைவுகளை ஏற்படுத்தியவையும் உள. தோட்டத்துண்டாடல் காலத்தில் உருவாக்கப்பெற்ற தேசிய நில நிதிக் கூட்டுறவு சங்கம், துண்டுபடவிருந்த பல தோட்டங்களை வாங்கி, ஆயிரக்கணக்கான தொழிலாளர் வாழ்வு தரைமட்டமாகாமல் காத்து, பல தமிழ்ப்பள்ளிகள் முகவரியற்றுப் போகாமல் நிலைப்படுத்தியது; தலைநகரில் வானளாவிய ஒரு மாளிகையை எழுப்பிக்கொண்டு தொடர்ந்து பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. சொந்த மனையைக்கொண்டுள்ள நேசா பலநோக்குக் கூட்டுறவு சங்கம், தொழிலாளர் நாணயக் கூட்டுறவு சங்கம் போன்ற ஒரு சில அமைப்புகள் வளர்ச்சியை நோக்கி முன்னேறி வருகின்றன.

தற்போதைய நிலை

இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் மூத்த தலைமுறை, பழைய போக்கிலிருந்து பெரிதும் மாறவில்லை. நம்பிக்கையற்று, விரக்தியடைந்த நிலைக்கு அது தள்ளப்பட்டிருக்கிறது. முன்னேற்றத்தை நோக்கிப் போராடும் துணிவின்றித் தங்களை மற்றவர் கைதூக்கிவிடுவர் என்னும் மூட நம்பிக்கையைவிட்டு, உழைத்துப் பொருளீட்டி, சிக்கனத்தைக் கடைப் பிடித்துச் சேமித்து உயர வேண்டுமென்னும் பொறுப்புணர்வின்றி உழன்று கொண்டிருக்கிறது. நேர்வழி பயன்தராது என்னும் முடிவிற்கு வந்துவிட்ட ஒரு சிறு கூட்டம் வன்முறையில் ஈடுபட்டு அழிந்துகொண்டிருக்கிறது. இன்றைய போக்கினைக் கணித்து ஆய்வுரை கூறும் வல்லுநர்கள், இப்போதைய (மூத்த) தலைமுறை உருப்பட்டு உயரும் என்று நம்பவில்லை. அடுத்த தலைமுறை மேம்பாட்டை நோக்கிக் காலடிகளைப் பதிக்கும் என்று கருதுகின்றனர்.

எதிர்காலம்

நாட்டில் கட்டாயக் கல்விச் சட்டம் நடைமுறையில் உள்ளது. அதனால் எதிர்காலத்தில் அனைவரும் கற்றவர் என்னும் நிலை உருவாகி வருகிறது. இளைய தலைமுறை இப்பொழுது நாட்டளவில் மட்டுமன்றி உலகளவில் பரந்த பார்வையைச் செலுத்திவருகிறது. அற்றைக் கூலி வேலையில் நாட்டத்தைச் செலுத்தாமல் தொழில்நுட்பத்தில் நாட்டங் கொண்டு வளர்ந்து வருகிறது. வாணிக முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது. உயர்கல்வி கற்ற பட்டதாரி இளைஞர்கள் பெருகிவருகிறார்கள்; மேன்மை மிக்க தொழில் துறையில் கால்பதிக்க வேண்டுமென்று உழைத்து வருகிறார்கள். பழைய நிலையிலிருந்து நோக்கும்போது இஃது ஒரு புதிய திருப்பமாகும்.

வாய்ப்புகள்

காலவளர்ச்சிக்கேற்ற திறன்கள் (Skills) பெற்று, நம்பிக்கை யோடு எதிர்காலத்தை நோக்கி நடைபோடும் இளந்தலைமுறைக்கு உரிய வாய்ப்புகள் கிட்டினால் ஓர் உயர்ந்த சமுதாயம் உருவாகுமென்பதில் ஐயமில்லை.

வன்முறைச் சமுதாயமென்று முத்திரை குத்தும் தரப்பினர், வல்லுநர்கள் கூறும் உண்மைக் காரணங்களை ஆராய்ந்து, நம்பிக்கையோடு வளர எண்ணும் இளந் தலைமுறைக்கு உரிய வாய்ப்புகளை நல்கினால் புதிய சமுதாயம் மலருமென்பது உறுதி. எத்துணை வல்லவரானாலும் வெறுங்கையால் முழம்போட முடியாது. வாய்ப்புகள் பெருகினால் வளம்வந்து சேர்ந்துவிடும்.

ஒரு காலத்தில் தோட்டப்புறத்தார் (தமிழர் சமுதாயத்தின் பெரும்பகுதி வாழ்ந்த இடம் தோட்டப்புறம்), "உலகம் அறியாதவர், கல்வியறிவு இல்லாதவர், உழைக்க மட்டுமே தெரிந்தவர், ஏமாளிகள்" என்று தாழ்வாகக் கருதப்பட்ட நிலை இருந்தது. ஆனால், இன்று கற்ற, அறிவுச் செல்வம் நிரம்பிய, தொழில்நுட்ப அறிவுமிக்க வல்லுநர்கள் உள்ள சமுதாயமாக இந்திய - தமிழர் சமுதாயம் மாறிவருகிறது; காலை வலுவாக ஊன்றி ஒளிமிக்க எதிர்காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அரசு, தனியார் துறைகளில் உரிய வாய்ப்புகள் கிட்ட வேண்டும். சமுதாயங் களுக்கிடையே சமநிலையான வளர்ச்சிப் போக்கை எதிர்பார்க்கும் மலேசிய அரசு, உயரத் துடிப்பவர்க்கு உதவ வேண்டும். பல்லினங்கள் கொண்ட நாட்டில், ஓர் இனம் பின்தங்கிப் போனாலும் அது நாட்டு

வளர்ச்சியில் ஒரு பின்னடைவே என்று அரசு உணர்ந்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். செயல்முறையில் அம் மகிழ்ச்சி வடிவம் பெற்றால் எல்லாச் சமூகங்களும் சமவளர்ச்சி பெற்ற ஓர் உயர்ந்த நாடு என்னும் பெருமை மலேசியாவிற்குக் கிட்டும்.

அடிப்படை போட்ட நல்லோர்

பீடைகள் நீங்கப் பீடுபெறும் முனைப்போடு செயல்படத் தொடங்கும் புதிய தலைமுறை உருவாக, ஈகமனத்தொடு நீளத் தொண்டுபுரிந்த கோ.சாரங்கபாணி முதலாய சமுதாயத் தலைவர்கள் அடிப்படைபோட்டு உதவினர் என்பதனை மறந்துவிட முடியாது. தோட்டப்புறங்கள் துண்டாடலால் சிதைந்து வாழ்விழந்த மக்களுக்குப் புது வழிகாட்டி வாழ்வளித்த வீ.தி. சம்பந்தனை, அந்த இக்கட்டான காலத்தில் சமுதாயத்தை நிலைப்படுத்த உழைத்த பெருமக்களைப் புதிய தலைமுறை நன்றியொடு நினைவுகூர்தல் வேண்டும். தமிழ்ப்பள்ளிகள் நிலைக்க, கல்வியில் இளந்தலைமுறை உயர வழிகாட்டி, அத் துறையில் மாறுதல்களை ஏற்படுத்திய நல்லாரையும் நன்றியொடு நினைவுகூர்வது கடமையாகும்.

பொருள்வளங்கொண்ட புதுவாழ்வை நோக்கி நடைபோடும் போது, சொந்த அடையாளங்களான தாய்மொழி, கலை, இலக்கியம், பண்பாடுகளை மறத்தல் கூடாது. ஓர் இனத்திற்குத் தாய்மொழியும் அஃது உணர்த்தும் பண்பாடும் இன்றியமையாதன. இவற்றையெல்லாம் எதிர்காலத் தலைமுறைக்கு உணர்த்தி வழிகாட்டுதல் வேண்டும்.

இப்பொழுது தமிழ்ப் பள்ளிகளுக்கு மதிப்பு உயர்ந்து வருகிறது. பள்ளிகள்பற்றி எதிர்மறையான கருத்துகளை இப்பொழுது எவரும் கூறுவதில்லை. நடுத்தர மக்கள் தங்கள் பிள்ளைகளை நம்பிக்கையோடு தமிழ்ப்பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். மேட்டுக் குடியினர் சிலரின் பார்வையும் அவற்றை நோக்கித் திரும்புகிறது. தமிழ்ப்பள்ளிகளின் தரத்தை மேலும் உயர்த்த அறவாரியங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தமிழ்ப்பள்ளிகளின் தரமும் படிப்படியாக உயர்ந்தே வருகிறது. மாணவர் எண்ணிக்கையும் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்துகொண்டே வருகிறது. பொதுவாக எல்லாத் துறைகளிலும் ஒரு பெரிய மாறுதலைச் சமுதாயம் பெற்று வருகிறது.

22. புதிய அடையாளங்கள்

உலகமயம் என்னும் புதிய நோக்கில் வையகம் கால்பதிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் தீய விளைவுகளும் உண்டென்பது வேறுகதை. எதனையும் ஆராய நேரமின்றி உலகம் பறந்துகொண்டிருக்கும் சூழலில், இனங்களின் அடையாளம் அழிந்துபடக் கூடாதென்பது உணர்வாளர் கவலையாகும். இவ் வகையில் பல்லினங்கள் கொண்ட நாட்டில், பொது வான சில பண்பாடுகள் காலப்போக்கில் தாமே உருவாகலாமெனினும் இனங்களுக்குரிய சிறப்புத் தன்மைகளை யாரும் இழக்கும் நிலை ஏற்பட்டுவிடுதல் கூடாது என்பதில் கவனமாக இருத்தல் முதன்மையாகும்.

தமிழர் ஒரு சிறந்த நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் உரியவர் எனினும், வரலாறு அவர்களை வீழ்த்தியதால் பல சிறப்புகளை இழந்தனர். வறுமையாலும், மேட்டுக்குடியினர் இழைத்த பல்வேறு கொடுமைகளாலும் பெரும் பகுதியினர் வாழ்வின் அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டனர். காலம் அவர்களில் ஒரு பகுதியினரைப் புலம்பெயர வைத்தது; அவர்களுள் ஒரு பகுதியினரை இங்குக் கொண்டு வந்து சேர்த்தது; முன்னிலும் மேலாக அமுத்தியது; கல்வி, பொருள், நல்வாழ்வுபோன்ற அனைத்திலும் பின் தங்க வைத்தது. அதனால் தாழ்ந்தவர் என்ற அடைமொழி அவர்களைத் தழுவிக் கொண்டது. அந்தக் கறை படிப்படியாகத் துடைக்கப்பட்டு வருகிறது. ஒரு புதிய அடையாளத்தொடு தலைநிமிரச் சமுதாயம் விரைந்து நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இனத் தலைமையும் இம் முயற்சியை ஊக்குவிக்கும் வண்ணம் திட்டங்கள் வகுத்துள்ளது.

2003ஆம்ஆண்டு மேமாதம் பத்தாம் நாள் புத்ரா உலக வாணிக மையத்தில் நடந்த 57ஆவது ம.இ.கா. பொதுப் பேரவைக்குத் தலைமையேற்ற கட்சித்தலைவரும், மலேசியப் பொதுப்பணி அமைச்சருமான ச.சாமிவேலு, நாட்டின் தலைமையமைச்சர் (டாக்டர் மகாதீர்) முன்னிலையில் சமுதாயத்திற்கான புதிய அடையாளங்களைக் (A New Identity of Malaysian Indians in Globalised Society) குறிப்பிட்டார். அவர் நிலைப்படுத்த விழைந்த புதிய அடையாளங்களாவன: 1. சுய அடையாளம், 2. அரசியல்

அடையாளம், 3. கல்வி அடையாளம், 4. பொருளாதார அடையாளம், 5. சமூக அடையாளம்.

1. சுய அடையாளம்

மலேசிய இந்தியர் - தமிழர் ஆழ்ந்த நாட்டுப்பற்றும், பல்லினங்களுடன் கூடிவாழும் இணக்கப் போக்கும் கொண்டவர் என்பது ஐயம் திரிபற்ற உண்மை. அதே வேளையில், மரவுவழிச் செல்வங்களைக் காத்து, நவீன மலேசியாவில் இந்திய சமூகம் தொடர்ந்து நிலைத்து வருவதற்குப் புதிய சுய அடையாளத்தைப் பெற்றிருக்க வேண்டுவது அவசியமாகும். இப் புதிய அடையாளமானது, சொந்தமாக வளங்கூட்டக்கூடியவர்களாக, சுய நம்பிக்கை கொண்டவர்களாக, சுய கவுரவம் கொண்டவர்களாக, தங்களின் மனப்போக்கையும் வாழ்க்கைப் பாணியையும் மாற்றிக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இப் புதிய அடையாளத்தின் மையமாக விளங்கவேண்டியது உடலுழைப்புத் தொழிலாளர்கள் என்னும் தோற்றத்தை மாற்றக் கூடிய வல்லமையைப் பெற்றிருப்பதாகும். சுயமதிப்பைத் தூண்டிவிட்டுச், சாதித்தது என்ன? எதிர்காலத்தில் சாதிக்க வேண்டியது என்ன என்பதனை ஆராய்வதன் மூலம் இந் நிலையை எய்தமுடியும்.

2. அரசியல் அடையாளம்

தலைமைத்துவ ஆற்றலும், நிருவாகத்திறனும், கடமையைத் திறமையாகவும், நேர்த்தியாகவும் செய்யக்கூடிய வல்லமையும் கொண்டவர்கள் அனைத்து மட்டங்களிலும் தேவை. அவ்வமைப்புகள் நிபுணத்துவ நிலையிலான சேவையை வழங்க வேண்டுமெனச் சமுதாயம் எதிர்பார்க்கிறது. அச் சமுதாயத்திற்கு நிபுணத்துவ நிலையிலான சேவை நிறைவாகக் கிடைப்பதை அரசியல் தலைமை உறுதிப்படுத்த வேண்டும்.

3. கல்வி அடையாளம்

ஒரு சமுதாயத்தின் விரைவான முன்னேற்றத்திற்கு ஓர் உந்து சக்தியாக விளங்குவது கல்வி. ஆனால், இந்திய -1 தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பகுதியினர் கடந்த 150 ஆண்டுகளுக்கு மேலாக வெறும் உடல் உழைப்புத் தொழிலாளர்களாகவும், போதிய உயர்கல்வி பெறாத, குறைந்த ஊதியத்தைப் பெறுகின்ற தொழிலாளர்களாகவும், எதிர்காலமே இல்லாத ஒரு சமூகமாகவும் அடையாளங் காணப்பட்டு வந்துள்ளனர். இந்த நிலை கடந்த 20 ஆண்டுக்கால முயற்சியில் பேரளவு மாற்றங் கண்டுள்ளது. இந்த வளர்ச்சியைத் தொடர்ந்து மேம்படுத்த பல்முனைகளில் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இங்கே கல்வி வாய்ப்பு என்பது இருநிலைகளில் நோக்கப் படுவதாகும். முதலாவது சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளை நிலை நிறுத்திவரும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் இரண்டாவது உயர்கல்விக் கூடங்கள்.

மலேசிய சமுகத்தில் தமிழ்மொழியும் தமிழ்ப்பள்ளிகளும் பிரிக்க முடியாத ஒருங்கிணைந்த அங்கமாகும். இது வரலாற்று ரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும் மலேசிய மக்கள் அனைவருக்கும் உயரிய பொதுச் சொத்தாகும். ஆகவே, அதனைப் பேணிக் காத்துவர வேண்டியது அவசியமாகிறது. தமிழ்ப்பள்ளிகளின் அவசியம் குறித்துக் கேள்வி எழுப்பும் நமது சமுதாயத்தைச் சேர்ந்த சில தரப்பினர் மலேசியத் தமிழ்ச்சமுதா யத்தின் உண்மையான உள்ளுணர்வை அறியாதவர்கள்.

சமுதாயத்தின் இந்த அடையாளச் சின்னங்களை நிலைநிறுத்த முயன்றுவரும் அதே வேளையில், இந்திய சமுதாயத்தினர் காலத்தின் மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மலாய்மொழியில் ஆற்றல் பெற்ற குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும். உலகப் போட்டித் தன்மையை எதிர்கொள்ள ஆங்கிலத்தில் திறமைபெறத் தூண்ட வேண்டும். நவீன உலகில் வாழ்வதற்கு ஆரோக்கியமான சமநிலைக் கல்வி பெறுவது மிக முக்கியமாகும்.

உயர்கல்வி வாய்ப்புகளைப் பெற்று நல்ல வளர்ச்சி காண்பதொடு, நற்பண்புகள் கொண்டவர்களாகவும் மாணவர்கள் விளங்கும்போது, சமுதாயத்தின் பழைய தோற்றம் மாறி ஒரு புதிய தோற்றம் வடிவமைந்து விடும்.

4. பொருளாதார அடையாளம்

பொருளாதார அடையாளம் என்பது, நாட்டின் சொத்துடை மையில் இந்திய சமுதாயம் 1.5 விழுக்காடே பெற்றுள்ளனர். அது மூன்று விழுக்காட்டை எட்ட வேண்டுமென்று அரசு விழைகிறது. ஆனால், இதுநாள் வரை எந்த அரசாங்க நிறுவனமும் நடவடிக்கை எடுக்கவில்லை. பொருளாதாரத் திட்டப் பிரிவு ஆய்வு நடத்திக் குறிப்பிட்ட திட்டங்களை வகுத்திருக்க வேண்டுமெனினும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இனத்தலைமை ஏற்றுள்ள ச.சாமிவேலு கூறுகிறார்.

பொருளாதார அடையாளம் என்பது இன்னும் ஒரு மங்கலான தோற்றம் கொண்டதாகவே தெரிகிறது. அது ஒளிமயமான வடிவம்

பெறப் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாய்க்கொண்டு அமைக்கப்பட்ட நிறுவனங்கள் ஆற்றல் மிக்க வல்லுநர்களைக் கொண்டு திறமையோடு நிருவகிக்கப்பட வேண்டும். தொழில்துறையில் கால் பதிக்க எண்ணும் இளம் ஆர்வலருக்கு அரசும், வங்கி முதலிய தனியார் நிறுவனங்களும் உதவிகள் வழங்க வேண்டும். இளைஞர்களும் தன்னம்பிக்கையோடும் உறுதிமிக்க துணிச்சலோடும் கடுமையாக உழைக்க வேண்டும். காலப்போக்கை, நாட்டுச் சூழலை, உலக நிலவரங்களைப் புரிந்து ஒவ்வொருவரும் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சேமிப்பில் கருத்துச் செலுத்தினால் மதிப்புமிக்க பொருளாதார அடையாளத்தைப் பெற்றுவிட இயலும்.

5. சமூக அடையாளம்

சமுதாயத்தின் ஒரு பகுதி கருத்தோடு உழைத்துச் சேமித்து, முதலீடுசெய்து விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது; பெரும் பகுதி வறுமைக்கோட்டிற்குக்கீழ் என்னும் நிலையைத் தாண்டிக் கொண்டிருக்கிறது. ஒரு சிறுபகுதி வாய்ப்பின்மையாலும், உழைப்பில் நாட்டமின்மையாலும், விரக்தியாலும் கீழ்மை நாடும் கூட்டங்களின் வலையில் வீழ்ந்து அழிந்துகொண்டிருக்கிறது; பிறரையும் அழித்துக் கொண்டிருக்கிறது. இவ் விழிவைப் போக்க ம.இ.கா.வின் சமூகவியூக அறவாரியம் அரசின் உதவியோடு பல திட்டங்களை வகுத்துச் செயல்பட்டு வருகிறது. அது மேலும் விளைபயன்மிக்க வழிகளை நாடிச் செயல்பட்டால் இவ் விழிநிலையைப் போக்கலாம்.

புரையோடிய புண்ணுக்குப் புனுகு பூசும் முயற்சி நிலைத்த பயன்தராது. புரை ஏற்படாமல் தடுக்கும் முயற்சியை மேற்கொண்டு செயல்பட்டால் வழிமாறிப் போய்க்கொண்டிருக்கும் அச் சிறு கூட்டமும் நற்பாதைக்குத் திரும்பும்; சமுதாயத்திற்கு மதிப்புமிக்க ஒரு புதிய அடையாளம் ஏற்படும். அனைத்து இனங்களும் சம வளர்ச்சிபெற்ற ஒரு நாடு என்ற பெருமையும் மலேசியாவிற்கு வந்தமையும்.

“ஞாலம் கருதினும் கைகூடும், காலம்
கருதி இடத்தால் செயின்” (குறள் 484)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்	40.00
தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு	50.00
தமிழ் ஆய்வு இதழ்கள்	50.00
வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்	130.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 3	150.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 2	115.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 1	130.00
மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண்	40.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
இதழாளர் பெரியார்	160.00
காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்	65.00
திருவாவடுதுறைப் புராணம்	250.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	30.00
திருக்குறளில் பொதுநிலை உத்திகள்	30.00
தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம்	30.00
தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப் பின்	40.00
பாவாணரின் ஞாலமுதன்மொழிக் கொள்கை	45.00
பெண்ணியப் படைப்பிலக்கியம்	75.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
பள்ளு இலக்கியம் மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே	75.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை	80.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு	90.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	150.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்	40.00
தமிழக எல்லைப் போராட்டங்கள்	60.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	275.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	250.00

586 மலேசியத் தமிழரும் தமிழும் 100.00